உ

14396

கடவுள் துணை.

தமிழ் வேதமாகிய

திருக்குறள் வசனம்.

இது

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்

மு. ரா. அருணாசலக் கவிராயரால்

எழுதப்பெற்று

MA... MAH... DR U.V. SWAMINA... IRUVANMIYUR

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிடப்பெற்றது.

1913

காப்பிரைட்.

விலை ரூபா] [1-4-0]

S. ... Pillai
BOOK DEPOT.

உ

பொருளடக்கம்.

1. முகவுரை.
2. திருவள்ளுவர் பெயர்கள்.
3. திருக்குறட் பெயர்கள்.
4. அபிப்பிராயங்கள்.
5. உரிமையுரை.
6. திருவள்ளுவர் பெருமையும்,
   திருக்குறட் பெருமையும்.
7. திருக்குறள் வசனம்.
8. அதிகார அகராதி.
9. விஷய அகராதி.
10. பிழை திருத்தம்.

விளம்பரம்.

யான் எழுதிய இக்குறள் வசனத்தையேனும், இதனை வேறு பாஷையில் மொழிபெயர்த்து அம்மொழி பெயர்ப்பையேனும், என் அநுமதியின்றி யாராவது வெளிப்படுத்தினால் அதனால் எனக்கு நேரிடும் சகல நஷ்டங்களும் அவரிடம் வசூலிக்கப்படும் என்பதை இதன் மூலம் எல்லாருக்கும் தெரிவிக்கலாயிற்று.

இங்ஙனம்,

மு. ரா. அருணாசலக்கவிராயர்.

உ

கடவுள் துணை.

திருக்குறள் வசன

முகவுரை

தமிழ் வேதமாகிய திருக்குறளிலுள்ள ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களும், சிறிய,கண்ணாடியானது பெரிய மலை முதலிய பொருள்களைத் தன்னுள் ளடக்கிக் காட்டுதல்போல, உலகத்திலுள்ள எல்லா நூற்பெரும்பொருள்களையும் தம்முள் அடக்கிக் காட்டிக்கொண்டிருத்தலை அறிந்து முற்றக் கற்ற கூரிய மதிநுட்பமுள்ள உரையாசிரியர்கள் பலரும் பதவுரை கருத்துரை விசேடவுரைகளெழுதிவைத்தனர். ஆயினும், அவ்வுரைகளெல்லாம் இலக்கிய இலக்கணவரம்பு கண்டவரே அன்றி ஏனையோர் எளிதி லுணர்ந்து தருமார்த்த காமமோக்ஷம் அடைதற்கு மார்க்கமில்லாம லிருக்கின்றனவென்பது அறிஞர்கள் பலரும் அறிந்தவிஷயமே.

ஆதலால், இந்நூற் பொருளைத் தமிழ்ப்பாஷையை யெழுதப் படிக்கத் தெரிந்த சிறுவரும் பெண்களும் பிறரும் இலேசாகத் தெரிந்து அவற்றின் பயன்களை அடையும் பொருட்டுச் சாதாரண வசன நடையிலெழுதி உலகோபகாரமாக வெளிப்படுத்த வேண்டு மென்று நீண்ட நாளாக நினைத்துக் கொண்டிருந்தேன். என்னைப் போலவே யெண்ணியிருந்த எனது நண்பர்கள் பலரும் இந்த வேலையை விரைந்துசெய்து முடிக்க வேண்டுமென்று பலமுறை யென்னை ஏவுவித்தனர். அவரது ஏவலையும் என்னுடைய நினைப் பையும் மறுக்கமுடியாமல் நூற்கருத்தையும் ஆசிரியர் பரிமேலழகர் உரைக் கருத்தையும் தழுவிக்கொண்டே என் கருத்துக்கு எட்டிய மட்டும் எளிய வசன நடையிலெழுதி முடித்தேன். இதை எழுதி வரும்போது மதுரைக் கீழ ஆவணிமூலவீதியில் வைத்தியசாலை வைத்திருக்கும் யாழ்ப்பாணம் மகா-ள-ள-ஸ்ரீ ஆறுமுகம்பிள்ளை யவர்கள் இடையிடையே என்னைச் சந்தித்து வசன நடையை வாசித்

துப் பார்த்து இவ்வசனம் எல்லார்க்கும் மிக்க பிரயோசனமுள்ளதா மென்று மிகவும் ஊக்கமூட்டி வந்தார்கள். அவர்கள் அங்ஙனம் செய்தற்குக் காரணம் தமிழில் வைத்திருக்கும் அபிமானமும் சகல ஜனங்களிடத்தும் வைத்திருக்கும் தண்ணளியுமே ஆம்.

அரிய நூல்களைக் கற்றுக் குற்றமற்றவரிடத்திலும் அறியாமை யில்லாதிருக்க முடியாதாகலால் யானெழுதிய இவ்வசனத்தில் எத் தனையோ பிழைகளிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. தன்பிழை தனக்குத் தோன்றுதல் யாவருக்குமில்லை. ஆதலால் இவ்வசன முழு வதும் வாசித்துப் பிழைகளின்னவையென்று கண்டெடுத்துச் சீர் திருத்தஞ்செய்து அறிஞர்க ளெனக்குக் காட்டுவார்களானால் அவர்க ளிடத்து நன்றி பாராட்டி அவற்றை இரண்டாம் பதிப்பிலே பதிப் பிக்கும் எண்ணமுடையவனாக இருக்கின்றேன்.

இங்ஙனம்,

மு. ரா. அருணசலக்கவிராயர்.

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்.

திருவள்ளுவர் பெயர்கள்.	திருக்குறட் பெயர்கள்.
தேவர்.	முப்பால்.
முதற்பாவலர்.	பொய்யா மொழி.
பொய்யில் புலவர்.	திருவள்ளுவப் பயன்.
மாதாநு பங்கி.	வாயுறை வாழ்த்து.
தெய்வப்புலவர்.	உத்தர வேதம்.
செந்நாப்போதார்.	தெய்வ நூல்.
பெருநாவலர்.	பொருளுரை.
நான் முகர்.	வள்ளுவனார் வைப்பு.
புலவர்.	திருவள்ளுவர் தமிழ்மறை.
நாயனார்.	பொதுமறை.
	முதுமொழி.

அபிப்பிராயங்கள்.

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர்
மகாமகோபாத்தியாயர் பிரஹ்மஸ்ரீ
உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதியது.

மகாா-ா-ஸ்ரீ மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் எழுதிய திருக்குறள் வசனம் மிகப் பாராட்டற்பாலது. திருக்குறளையும் அதனுரையையும் ஊன்றிப் படித்துச் சிரமப் படாதபடி இக்காலத்திற்கு ஏற்ப அவற்றைத் தழுவி யாவர்க்கும் பயன்படும்படி எளிய நடையில் இயற்றி வெளிப்படுத்திய இவர்களுடைய உழைப்பு மறக்கற்பாலதன்று. தமிழ்ப்பாஷையில் நல்ல பயிற்சியும் ஊக்கமும் உள்ள இவர்களுடைய ஆராய்ச்சியைப்பற்றி நான் ஏதேனும் எழுதுதல் மிகையென்று எண்ணி இதனை இம்மட்டோடே நிறுத்துகின்றேன்.

இங்ஙனம்
வே. சாமிநாதையன்.

சென்னை பேன்ஷன் ஐக்கோர்ட் ஜட்ஜும், பிரஹ்மக்ஞான சபையின் உப அக்கிராசநாதிபதியுமாகிய ஆனரபில் டாகடர் ஸர். எஸ். சுப்பிரமணியஐயரவர்கள்

B. L., L. L. D., K. C. I. E. எழுதியது.

தாங்களனுப்பிய திருக்குறள்வசன நடைப்புத்தகங் கிடைத்தது. நாயனுருடைய ஒப்பற்ற நீதி அபிப்பிராயங்களை எல்லோரும் எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய விதமாய் தங்களுடைய கிரந்தம் எழுதப்பட்டிருக்கிறது. யாவரும் அதைப் படித்து நன்மையடைவார்களென்று நம்புகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
சுப்பிரமணியன்.
பீச்சவுஸ், மைலாப்பூர்.
6—6—13.

இராமநாதபுரம்.
சேதுசம்ஸ்தான வித்துவான். ஸ்ரீமத்
ரா. இராகவையங்காரவர்கள் எழுதியது.

என் அன்புள்ள ஸ்ரீமான் கவிராயரவர்கட்கு மங்களாசீர் வாத பூர்வக விஞ்ஞாபனம். உபயத்ர க்ஷேமோபரி.

தாங்களெழுதிய திருக்குறள் வசனத்தைச் சிற்சில இடங்களிற்படித்துப்பார்த்தேன். பரிமேலழகர் உரைநடையையே பெரும்பாலும் தழுவிச் செல்வது கண்டு மகிழ்கூர்ந்தேன். அரிய பெரிய நீதிநூற் கருத்தைச் சிறிது கற்றாரும் எளிதிலுணருமாறு புரிந்தது தமிழ் மக்களாற் பாராட்டுந் தகைத்தென்று நம்புகின்றேன். ஆங்கிலக் கல்விச் சாலைகளில் தமிழ் பயிலும் மாணுக்கருக்கு இவ்வசன நூல் பெரும்பயன் விளைக்குமென் றெண்ணுகின்றேன்.

இங்ஙனம் தங்களன்புள்ள,
ரா. இராகவையங்கார்.
ஸேதுஸம்ஸ்தான வித்துவான்.

தமிழகராதிக் கமிட்டிப் பண்டிதர் ஸ்ரீ
மு. இராகவையங்காரவர்கள் எழுதியது.

தமிழ்ப்பாஷையின் அருமை பெருமைகளை நம்நாடுமட்டுமன்றி அந்நிய நாடுகளும் அறிந்து பாராட்டுதற்குரிய தமிழ்ப் பெருநூலாகச்சிறந்து விளங்குவது தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் அருளிச்செய்த திருக்குறள் என்பது பலரு மறிவர். முற்காலத்தே நாகரீகச் சிறப்பு வாய்ந்திருந்த தேசங்களில் தமிழ்நாடும் ஒன்றென்பதையும், பழைய தமிழ்மக்களது மனோபாவங்களின் மாட்சி இத்தகையதென்பதையும் விளக்குதற்கு இத்திருக்குறளினுஞ் சிறந்த கருவி தமிழில் வேறில்லை யென்னலாம். இந்நூலுக்கு ஒருரையன்றி ஒன்பதுரை முன்னோரால் செய்யப்பட்டிருந்தன என்பதொன்றே இதனருமை பெருமைகளை நன்கு விளக்கவல்லது.

இவ்வொன்ப துரைகளினும், இறுதியிலெழுந்ததும் திருவள்ளுவரது உள்ளக்கிடக்கைகளை வெள்ளிடைமலைபோல விளக்கி நிற்பதுமாய் இன்றுவரை நின்று நிலவுவது ஆசிரியர் பரிமேலழகர் அருளிய உரையேயென்பது அறிஞர்க்கெல்லாம் ஒத்தது. திருவள்ளுவர்க்கு ஆசிரியர்பரிமேலழகர் இயற்றியவுரையானது தமிழ்ப்பாஷையையே அலங்கரிக்கின்ற அற்புதம் வாய்ந்ததாயினும், தமிழ்மொழியிற் சீரிய பயிற்சியும் கூரியஅறிவும் உடையார்க்கன்றி ஏனையோர்க்கு அத்துணைப் பயன்றருவது அருமையாம். அதனால் திருக்குறட் பொருள் நுட்பங்களைக் கற்றோரே அன்றி மற்றோரும் அறிந்துகொள்ளக்கூடாமற் போகின்றது.

இக்காலத்து அறிஞர்கள் சிலர் பரிமேலழகர் உரைக்கு விளக்கமாக எழுதி வெளியிட்டுள்ள புத்தகங்களால் ஒருவித நன்மையே உண்டாயிருப்பினும் தமிழறிவு மிகவும் சுருங்கிவரும் இக்காலத்தே தமிழினருமை பெருமைகளை எளிதின் உணர்த்துதற்குரிய சிறந்த வழியாவது தமிழ்நூல்களிற் பொதிந்த பொருணுட்பங்களை இனிய எளிய வசனநடையில் விரித்தெழுதிப் பிரசுரிப்பதேயாகும். அதினும் திருக்குறள்போன்ற அரும்பெறனூல்களை அங்ஙனம் எளிதாக்கி வெளியிடுதல் இன்றியமையாததன்றோ?

இதனை யுள்ளபடியுணர்ந்த சேற்றூர்ச் சமஸ்தான வித்துவானும் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரு ளொருவருமாகிய ஸ்ரீமத் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் திருவள்ளுவர் பரிமேலழகர் உரைக் கருத்துக்களை வசனநடையிலெழுதிப் பிரசுரித்த நூலின் பிரதியொன்று அவர்களால் சமீபத்திற் கிடைக்கப்பெற்று மகிழ்வுற்றேன். இவர்கள் திருவள்ளுவர் குறள்களைப் பரிமேலழகருரையோடும் தெளிய ஆராய்ந்து அவற்றிற்கண்ட பொருணுட்பங்களை இனிய தமிழ் நடையில் யாவருமறிந்துகொள்ளுமாறு விளக்கியிருக்கின்றார்கள். இவர்கள் வசனநூல் திருக்குறள் அதிகாரப்படியே அமைந்து பரிமேலழகர் கொண்ட முறையே பாடல்களை அவதாரிகைகளுடன் விளக்கிச் செல்கின்றது. நுணுகி ஆராய்ச்சி செய்யத்தக்க பரிமேலழகர் உரைநுட்பங்களைக் கவிராயரவர்கள் பேராராய்ச்சி காட்டி உரைக்குரைபோலவே விளக்கிக் காட்டுதலால் திருக்

குறளை உரையுடன் கற்க விரும்பும் தமிழ்மக்கட்கும் இவ்வசனநூல் சிறந்த உதவியாகும் என்பதில் ஐயமில்லை. திருக்குறளின் காமப் பகுதியையும் முற்கூறிய முறையே இவர்கள் வசன நடைப்படுத்தியிருப்பதான து, பெரும்பாலும் படிக்கப்பெறுததும் ஆனால்பெரிதும் இன்பமளிக்கக்கூடியதுமான அப்பகுதியில் பலர்க்கும் ஒருவகை ருசியை ஊட்டவல்லதாம்.

இவ்வாறு தெய்வப்புலவர் திருவாய்மலர்ந்த திருக்குறள் முப்பால்களையும் தெள்ளிய வசன நடையில் அமைத்து யாவரும் எளிதிற் படித்தறியுமாறு செய்து உதவிய கவிராயரவர்கட்கு, தமிழ்மக்களாயுள்ளார் பெரிதும் நன்றியறிதற் கடப்பாடுடையர். தமிழில் வசனநூல்கள் கிடையா என்று குறை கூறப்படும் இக்காலநிலைக்கு இத்திருக்குறள் வசனநூல் ஒரு நல்விருந்தாமென்றே எண்ணுகின்றேன். இத்தகைய புத்தகங்கள் ஆங்கிலகலாசாலை மாணவரது தற்காலக கல்விமுறைக்கும் ஒழுங்கநிலைக்கும் ஊன்றுகோல் போலப் பெரிதும் உபகாரமாகக் கூடியனவாதலால், கனந்தங்கிய நம் சர்வகலா சங்கத்தாரும் இதனைக் கவனித்துக் கௌரவிப்பார்களென்பது திண்ணம். தமிழ்நாட்டார்க்கு இவ்வித உபகாரத்தைச் செய்து உதவிய கவிராயரவர்களது பெருந்தன்மையை நான் மிகவும் பாராட்டுதலுடன் அன்போடு என்பார்வைக்கும் அதன் பிரதியனுப்பிய அவர்கள் அபிமானத்திற்கு நான் மிகவும் நன்றி கூறுகின்றேன்.

இங்ஙனம்,

ழு. இராகவையங்கார்.

1—4—13. மதுரை.

சென்னை தோட்டக்காடு ராவ் சாஹிப். ஸ்ரீமத்.

T. இராமகிருஷ்ணபிள்ளை யவர்கள்

B. A., F. M. U ,

எழுதியது.

ஐயா!

தாங்களன்புடன் என்பார்வைக்கு அனுப்பிய திருக்குறள் வசனப் பிரதி கிடைக்கப்பெற்று மகிழ்ந்தேன். தங்கள் நூலில் முக்கியமான இடங்களைக் கவனித்த அளவில் திருக்குறளைப் பரிமேலழகர் உரைக் கருத்துக்களுடன் கற்றவரேயன்றி மாணாக்கரும் எளிதின் அறிந்துகொள்வதற்கு இந்நூல் ஏற்றதொரு கருவியாகவே தோற்றுகின்றது.

ஆழ்ந்த கருத்துக்கள் நிரம்பிய திருக்குறளை யாவர்க்கும் பயன்படும்படி எளிதாக்கி வெளியிட்ட தங்கள் முயற்சித் திறத்தை மிகவும் பாராட்டுகின்றேன். இத்தகைய வசன கிரந்தங்களே இக்காலத்தார்க்கு மிகவும் உபயோகம் அளிக்கக்கூடியன. தாங்களன்புடன் என் பார்வைக்குப் பிரதியனுப்பியதற்கு நன்றி கூறுகின்றேன்.

இங்ஙனம் தங்கள்,

தோ. இராமகிருஷ்ணபிள்ளை.

13—6—13. கோடைக்கானல்.

அபிப்பிராயங்கள்.

சென்னை ஸ்ரீமாந்.

எஸ். அநவரதவிநாயகம் பிள்ளையவர்கள் எம். ஏ,

எழுதியது.

Coonoor,
9—6—13.

Dear Sir,

Many thanks to you for sending me an advance copy of your Tamil *Tirukkural in Prose*. I have seen another prose version of the same great work but this is decidedly an improvement on that. Your arrangement of the Kurals under several headings is quite good. In this as well as your prose-rendering you have closely followed Parimelalakar, the well-known Commentator. Occasionally I find you have appended explanatory notes from the same source. As you have thus put in simple prose whatever is worth learning in Parimelalakar's commentary, you have obviated for the less cultured the necessity of plodding over the classical prose of that commentator, and those who wish to acquaint themselves with the commentary itself will benefit greatly if they approach it after a study of your book. I would gladly recommend it to students of Tamil composition as they will find therein not only model prose but abundant matter for essays that they may have to write.

Yours sincerely,
S. ANAVARATAVINAYAKAM.

சென்னை ஸ்ரீமான் எஸ். அநவரதவிநாயகம்பிள்ளையவர்கள் எம். ஏ. எழுதிய ஆங்கிலத்தின் மொழி பெயர்ப்பு.

குன்னூர் (முகாம்)
9—6—13

அன்புள்ள ஐயா!

தாங்கள் வசன நடையிலியற்றிய தமிழ்த் திருக்குறள் புஸ்தகத்தின் காப்பி ஒன்று எனக்கனுப்பியதற்கு அநேக வந்தனம். இப் பெரிய நூலுக்கு இன்னொரு வசனநடையும்நான்பார்த்திருக்கிறேன். ஆனால் அதைப் பார்க்கிலும் இது மேன்மையானது. குறள்களைப் பல பிரிவுகளாகத் தாங்கள் ஒழுங்குபடுத்தி யிருப்பது அதிக நன்றாயிருக்கிறது. இவ்வொழுங்கும் நீங்கள் செய்திருக்கும் வசன நடையும் அந்நூலுக்குச் சிறந்த உரையெழுதிய பரிமேலழகர் கருத்தையே முற்றிலும் அனுசரித்திருக்கின்றன. ஆங்காங்கு முக்கியமான விஷயங்களுக்கு அதிலிருந்தே விவரக் குறிப்புக்களும் எழுதியிருக்கின்றீர்கள். பரிமேலழகர் உரையில் அறியவேண்டிய பெரிய விஷயங்களைத் தாங்கள் இவ்வாறு எளிய நடையில் எழுதியிருப்பதால் சாதாரண ஜனங்களும் அவ்வுரையாசிரியரின் கடினமான உரையை வாசித்துத்தானாகவேண்டுமென்ற அவசிய மில்லாமலும் பரிமேலழகர் உரையையே வாசிக்க ஆசைப்படுவோர்களுக்குத் தாங்களியற்றிய இப்புத்தகம் வாசிப்பது அதிக உபகாரமாகவும் தாங்கள் செய்திருக்கிறீர்கள். இப்புத்தகத்தில் தமிழ்நடைக்குச சிறந்த மாதிரிகளும் வியாசம் எழுதுவதற்கு வேண்டிய மேற்கோள்களும் அடங்கியிருப்பதால் தமிழ் வியாசம் எழுதவேண்டிய மாணாக்கர்களுக்கு இப்புத்தகம் இன்றியமையாததென்று எடுத்துக்காட்ட நான் சித்தமாய் இருக்கின்றேன்.

எஸ். அநவரதவிநாயகம்பிள்ளை, எம். ஏ.

சோழவந்தான் வித்துவான் ஸ்ரீமத்.

அ. சண்முகம்பிள்ளையவர்கள் எழுதியது.

உ

கணபதிதுணை.

எனது நண்பராகிய ஸ்ரீமத் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள், எல்லாப் பொருளும் இதன்பாலுள, இதன்பால், இல்லாத எப்பொருளும் இல்லை, என்றபடி அற முதலிய நாற்பொருளும் குறைவின்றி நிரம்பித் தினைத்துணைச்சொல்லிற் பனைத்துணைப் பொருளைக் காட்டி முருகக்கடவுள் அமிசாவதாரமாகிய உருத்திர சன்மர் முதலாய பல நல்லிசைப்புலவரால் பெரிதும் வியந்து பாராட்டிக்கொண்டாடப்பெற்ற தமிழ்வேதமாகிய திருக்குறட்குப் பரிமேலழகர் உரைக்கருத்தைத் தழுவிப் பொழிப்புத் திரட்டிக் கற்பார்க்கே அன்றிக் கற்றார்க்கும் இனிது பயன்படுமாறு வசன நடையாக்கி அச்சிட்டு வெளிப்படுத்தி எனக்கொரு பிரதியனுப்பினார்கள்.

அதனைப்பார்த்து அளவற்ற மகிழ்ச்சியுற்று என்னுள்ளத்தே தோன்றிய உண்மைக் கருத்தை யீண்டு வெளியிடுகின்றேன்.

திருக்குறளியற்றிய திருவள்ளுவதேவர் பிரமதேவர் அமிசமென்பதும், திருக்குறள் வடமொழி வேதத்தினும் மாண்புடைத்தென்று பெரியோர் பலராலும் பாராட்டப்பட்ட தென்மொழிவேதமென்பதும், இந்நூற் பெருமை நோக்கியே தமிழ்மக்களே யன்றிப் பிறமொழி மக்களும் நூற்றுக்கணக்காகிய பிறமொழிகளில் மொழிபெயர்த்துக் கொண்டாடுகின்றன ரென்பதும் எல்லாரும் அறிந்தனவே.

இத்தகைய பெருமைவாய்ந்த இத்திருக்குறள் தருமர் முதலிய பதின்மருள்ளுஞ்சிறந்த பரிமேலழகர் உரையுடன் பயின்று வழங்

கப்படினும் அதிமதிநுட்ப நூலோடுடைய கற்றார் சிலர்க்கேயன்றி மற்றார்க்குப் பயன்படாமையால் இதுவரை மலைச்சிகரத்து விடரகத் துற்ற*சாவாமருந்தாகிய கருநெல்லிக்கனியென விளங்கிற்று. இது பொழுது பாடசாலை மாணக்கருக்கும் பெண்களுக்கும் விளங்கத் தக்க எளிய நடையில் வசன வடிவாகி இந்நூல் வெளிவந்தமையால் இனி, பயன்மரம் ஊர் நடுவே பழுத்தாற்போலுமென நான் உறுதியாக நம்புகின்றேன்.

இத்திருக்குறளை இலக்கிய இலக்கணம் கற்றுத் தாமே ஆராய்வார்க்கும் உரைவகைகொண்டு கற்றும், கேட்டும் செல்வார்க்கும் கல்விஆற்றலிற் பேதங்காணப்படினும் பயன்வகையிற் பேதமின்மை தேற்றமாதலின், இவ்வசனநூல் திருக்குறள் மூலமும் உரையும் கற்றார்க்குத் தாமறிந்தபொருளோ டொப்புநோக்கற்கும், பாடசாலை மாணாக்கர் கற்றுப் பொருளறிதற்கும், இல்லத்துள்ள பெண்கள் தாமாகப் படித்தோ தங்கள் கணவர் படிக்கக் கேட்டோ பயனடைதற்கும், நூலிற்பயில அவகாசமில்லாத பிறரும் சிறுபொழுதிற் பேருணர்ச்சிகொள்ளற்கும் ஏற்ற சிறப்பினதென்பது என் துணிபு.

இங்ஙனம்,

அ, சண்முகன்.

---

* சாவாமருந்து கருநெல்லிக்கனி யென்பதை அதிகனென்ற வள்ளலிடம் ஔவைப்பிராட்டியார் பெற்றுண்டு சிரஞ்சீவியாயிருந்த வரலாற்றால் அறிக. (புறநானூறு-க.)

யாழ்ப்பாணம், சுன்னாகம் வித்துவான் ஸ்ரீமத்.

அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்

சாட்சி வாக்கியம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான்களுள் ஒருவரும் நமது நண்பருமாகிய ஸ்ரீமான் மு. ரா. அருணசலக்கவிராயரவர்களால் எழுதப்பட்ட "திருக்குறள் வசனம்" என்னும் புத்தகம் எம்மால் ஆராய்ந்து வாசிக்கப்பட்டது. வாக்கியங்களெல்லாம் அண்மையும், தகுதியும், அவாய் நிலையும்பெற்றுச்சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை முதலிய அழகுடையனவாய் விளங்குகின்றன. கவிகளின் கருத்தும், பொருளும் இலகுவிற் புலப்படும் வண்ணம் எழுதப்பட்டிருக்கின்றன. பரிமேலழகருரையையும் இது நன்கு விளக்கும். இதனைத் தமிழ்நாட்டிலேயுள்ள பாடசாலைகளிலெல்லாம் ஒரு பாடமாக நியமித்துக் கற்பித்து வருதல் பெரிதும் நன்மை பயக்கும்.

இது, மாணவர்க்கன்றி உபாத்தியாயர்களுக்கும் இலகுவிற் பயன் கொடுக்கும். மற்றுத் திருக்குறள் படிப்போர்க்கும் இலகுவிற் பயன்கொடுக்கும். ஆதலால் தமிழ்க் கல்வியில் விருப்புடையார் யாவரும் இதனை விரும்பிப் வாங்கிக் கற்றுணர்வாரென்பது எமது கருத்து.

இங்ஙனம்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை,

சுன்னாகம்.

மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத் மு. கதிரேசச்செட்டியாரவர்களெழுதியது.

உ
கணபதிதுணை.

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் ஸ்ரீ மு. ரா. அருணாசலக் கவிராயரவர்கள் எழுதிய "திருக்குறள் வசனம்" என்னும் நூலை அவ்வாக்கியோராற் பெற்றுப் படித்து மகிழ்ந்தேன். தமிழ்ப்பெரு நாவலராகிய திருவள்ளுவதேவர் திருவாய்மலர்ந் தருளிய திருக்குறளென்னுந் தெய்வத் தமிழ்மறையானது, சொற்சுருக்கமும் பொருட் பெருக்கமும் தன் பாற்செறியத் தான்றோற்றிப் பல்லாயிரம் யாண்டு செல்லினும் உலகியல் மறையியல்களைப் பற்றி நினைப்பார் கருத்து வகைகளனைத்தும் அவ்வப்பொழுது அநுபவத்திற் கண்டு கூறுவதுபோலப் பொருள்களை அறிவுறுத்தும் ஆற்றல் பெரிதுடையதென்பது யாவரு முணர்வர். இம்மாட்சி நோக்கியன்றே, மேனாட்டுப் பெரும்புலவர்களும் பிறதேயத்துப் பண்டிதர்களும், நிலவுலகத்து வழங்கும் பல பாஷைகளினும் இதுபோல் உறுதிப் பொருள்களை நடுநிலை பிறழாதெடுத்துத் திட்பமுறப் போதிக்குஞ் சிறந்த நூல் ஒன்றுமின்றெனத் துணிந்து தத்தம்பாஷைகளிற் செய்யுளுருவமாகவும் வசனவுருவமாகவும் மொழிபெயர்த்துப் படித்தின்புறுவராயினர். கிடைத்தற்கரிய திருமணிபோன்ற இப்பெருநூல், தமிழிலக்கண இலக்கியங்களைச் செவ்வனே கற்று அறிவு முதிரப்பெற்ற புலவர்களாலே பொருளுணர்தற்குரிய தென்பதும், இதற்குப்பலரியற்றிய உரைகளெல்லாவற்றினுஞ்சிறந்து மூலத்தைப்போற் சொற்சுருக்கமும் பொருட் பெருக்கமும் பெற்றுத் திகழ்வது பரிமேலழகருரையேயென்பதும், அவ்வுரையும் இலக்கணஇலக்கிய வல்லுநராற் படித்துணர்தற்குரியதா மென்பதும் யாவரும் அறிந்தனவாம்.

மிகவும் மேலான அரும்பொருள்களைப் பண்டிதரேயன்றிச்சிறிதுகற்றாரும் உணர்ந்தின்புறுவராயின், அது நந்நாட்டின் நாகரிகவளர்ச்சிக்கு மிகச் சிறந்த சாதனமாகுமென்பதி லையமின்று. சிறப்பக் கற்றார் சிலரும் சிறிது கற்றார் பலருமாதலின் அப்பலரும் உணர்ந்து மகிழ நுண் பொருள்களை விளக்கியீதல் சிறந்தவுபகாரமாகுமன்றோ? இவ்வுபகாரச் செயலால் வரும் பெரும் புண்ணியத்தை ஸ்ரீ கவிராயரவர்கள் பிறர்க்கின்றித் தாமே கவர்ந்தனரென்னலாம்.

அபிப்பிராயங்கள்.

அரிய பெரிய விஷயங்களெல்லாம் வசன வுருவ நூலாக அமைய யப்பெற்ற ஆங்கில மொழி யாண்டும் பரவிய இக்காலத்தில் உள்ளார் பெரும்பாலாரும் நம் தேய மொழியிலும் அங்ஙனமே வசன நூல்களை க்கற்க விரும்புகின்றனரென்ப துண்மையாதலால் இது, காலங்கரு திய அறச்செய்கையும் ஆயிற்று.

இனி, ஸ்ரீ கவிராயரவர்கள், ஒவ்வொரு திருக்குறளையும் பரி மேலழகருரையை நன்றுதழீஇ, அவதாரிகை, அதிகார இயைபு, ஒவ்வோரதிகாரத்தினும் ஓரினப்பட்ட ஒன்று முதற் பல குறள்க ளின் திரண்ட கருத்துப் பொருள் இவைகளை நன்குவிளக்கியும்,இன் றியமையா இடங்கடோறும் விசேடவுரையில் வேண்டுவனதந்தும், இலக்கணநெறி தழீஇய மிக அழகிய எளிய சொற்களால் வசனவுரு வாக்கிச் சிறிதுகற்ற ஆண் பெண் இருபாலாரும் அறிந்துகொள்ளும் வண்ணம், இருப்புக்கருவூலத்துள்ள இரத்தினக் குவியல்களைத் திற வுகோல் கொண்டு திறந்து பெற அறியார்க்கு மெல்லிய ஆடையின் முடிந்து ஈந்தாங்குத் தந்திருக்கின்றனர். கற்றுணர்ந்த புலவரும் இதனைப் படிப்பாராயின், சிலவிடத்துள்ள ஐயமொழியு மென்பதி லையமின்று. இதற்குமுன் பலர் இவ்வருநூலை இலகுப்படுத்தப் பல வாறு முயன்று செய்துளாரெனினும் அவையெல்லாவற்றுள்ளும் இதுவே சிறந்ததென்று கூறுதல் மிகையாகாது.

ஸ்ரீ கவிராயரவர்கள் நல்ல தமிழாராய்ச்சியும், கவித்துவசக்தி யும், வசனம் எழுதும் ஆற்றலும், ஒழுக்கமும் நிரம்பப் பெற்றவர்க ளென்பது யாவருமுணர்வர். இன்னும் இவர்களெழுதிய "திருக் குற்றாலத் தலபுராண வசனம்" முதலிய வசன நூல்களும் நம்மவர் க்கு மிகவும் உபயோகமானவை.

நந்நாட்டுப்புலவரொவ்வொருவரும் இதுபோற், காலவியல்பறிந்து கல்வி பரவுதற்குரிய வுபகாரச் செயலை மேற்கொள்ளுவராயின் நம் மக்கள் விரைவிற் பேரறிவுடையராய் விளங்குவரென்ப தொருதலை.

இப்பேருபகாரத்தைச் செய்த ஸ்ரீ கவிராயரவர்களுக்கு நாம் செய்யக்கிடப்பதாகிய கைம்மாறு வேறொன்றுமின்றெனினும்,நம்மவ ரொவ்வொருவரும் "திருக்குறள் வசன" புத்தகத்தில் ஒவ்வொரு பிரதி வாங்கிப் படித்தின்புறுதலோடு, இன்னும் பல நன்னூல்களை யிதுபோல், தமிழ்மக்கள் எளிதிற் கற்குமாறுள்ள பெருமுயற்சியை இவர்கள் மேற்கொண்டு முடிக்கும் வண்ணம் இறைவன் றிருவருள் பாலிக்கவென வாழ்த்துதலே நாம் செயற்பாலதாம்.

21—6—13
மகிபாலன்பட்டி.

இங்ஙனம்,
மு. கதிரேசன்.

உரிமை உரை.

திருவள்ளுவ நாயனா ரருளிச்செய்த தமிழ் வேதமாகிய திருக்குறள் மூலத்தையும் பரிமேலழக ரெழுதிய உரையையுந் தழுவி யானெழுதிய திருக்குறள் வசனத்தை, பாண்டி நாட்டிலுள்ள இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த நயினார் கோயிலை அடுத்த மும்முடி காத்தான் கிராம வாசிகளாகிய கார்காத்த வேளாளர் மரபில் "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னுந் திருக்குறட்கு இலக்கியமாகத் தோன்றித் தமிழ்க் கல்வியை நிரம்பக்கற்றதோடு உத்தியோகத்தினிமித்தம் ஆங்கில பாஷையையுங்கற்றுத்தெளிந்து சிவநேசப் பெருஞ் செல்வம் வாய்ந்து அகவிருளை யோட்டுதற்காகுங் கருவியாகிய வித்தியா தானத்தை மேற்கொண்டொழுகுதல் போலப் புறவிருளை யோட்டுங் கருவியெனச் சில சிவ க்ஷேத்திரங்களிலே திருவிளக்குப் பணிவிடையும் பிறதருமங்களும் நாடோறுஞ் செய்து கொழும்புப் பட்டணத்தை யடுத்த குருநாகல்லில் இஞ்சினீர் உத்தியோகத்தி லமர்ந்திருக்கும் ஸ்ரீமாந் வ. சிதம்பரப் பிள்ளையவர்களது நற்குண நற்செய்கை களுக்கு அறிகுறியாக உரிமை யாக்குகின்றேன். அவர்களிதையங்கீகரித்துக் கொண்டு நித்தியானந்த செல்வச் சிரஞ்சீவியாக நீடூழிகாலம் வாழ்வார்களாக. சுபம், சுபம், சுபம்.

276—13 }
மதுரை }

இங்ஙனம்.

மு. ரா. அருணாசலக் கவிராயர்.

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்.

THIS BOOK,

as a token of highest esteem, is most respectfully dedicated

To

M. R. Ry. V. Sithampara Pillai Avergal, Engineer, Kurunegala, Ceylon, who belongs to an illustrious and highly respectable Karkatha Vellala family of Naiynar Covil, in Mummudi Kathan in the Ramnad District of Pandy Nadu, South India,

By

M. R. Arunahcala Kavirayar,
Avergal
Pundit
Tamil Sangam (Council of Learning)
Madura.

கடவுள் துணை.

திருவள்ளுவர் பெருமையும், திருக்குறட் பெருமையும்.

திருவள்ளுவரென்பவர் செந்தமிழ்நாடு செய்தவப் பயனால் * யாளிதத்தரென்னும் பிராமண முனிவரது அருமைப் புத்திரராய் † ஆறு சகோதரருடன் அவதரித்தவர். இல்லற ஒழுக்கத்துக்கு ஏற்ற நற்குண நற்செய்கைகளெல்லாம் இயைந்த வாசுகி யென்னும் மனைவியாருடன் அவ்வில்லற நிலையிலே வழுவாது நின்றவர்; இவர் இருக்கு முதலிய நான்கு வேதங்களிலும் இலைமறை காய்போலப் பல இடங்களிலும் சிதறிக்கிடந்த உண்மைப் பொருள்களெல்லாவற்றையும் திரட்டி வெள்ளிடை மலைபோல விளங்கும்படி திருக்குறளென்னும் தமிழ் வேதத்தைச் செய்து கடைச்சங்கத்தில் அரங்கேற்றும்போது வந்திருந்து கேட்ட நாமகள் திருவள்ளுவமாலை (2) ஆவது கவியில், படைப்புக்காலத்தில் பிரமதேவரது நாவிலிருந்து இருக்கு முதலிய நான்கு வேதங்களையுஞ் சொல்லி மத்திய காலத்தில் பாரதமாகிய வேதத்தைச் சொல்லி அதற்குப் பிற்காலத்தில் திருக்குறளாகிய வேதத்தைச் சொல்லி என்வாக்குத் திருவள்ளுவர் வாயினிடத்து உள்ளதென்று கூறினள்.

நாமகள் வாக்குத் திருவள்ளுவர் வாயினிடத்துள்ளதால் அவர் திரிமூர்த்திகளி லொருவராகிய பிரமதேவரது அம்சமாகத் திருவவதாரஞ் செய்தனரென்பதும், திருக்குறள் அரங்கேற்றத் தொடங்கியபோது அவரோடு சங்கப்பலகையில் ஒப்ப இருந்துகேட்டற்குத் தகுதியுடையார் எவரென்று பலரும் எண்ணமுற்று நின்ற இடத்து எங்கு நிறைந்த அசரீரியாகிய முதற்றெய்வம் முருகக்கடவுள் அம்சமாகிய உருத்திரசன்மரே என்று அருளிச்செய்ததுடன் வள்ளுவரைத் தெய்வத் திருவள்ளுவரென்று அருளிச்செய்ததால்

---

* யாளிதத்தர் புத்திர ரென்பதை ஞானமிர்த நூலில் 33 ஆவது அகவலிற் காண்க. † ஆறு சகோதரராவார்-கபிலர், அதிகமான், வள்ளி, உறுவை, ஔவை, உப்பையென்பவர். இதை மேற்கூறிய 33 ஆவது அகவலுரையிற் காண்க.

திருவள்ளுவர் ஒரு தெய்வமே என்பதுந் தெளிவாக விளங்குகின்றன. இவ்வுண்மையுணர்ந்தன்றே (8) ஆவது கவியில் மாமூலனார் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அவ்வேதப் பொருள்களாகிய நான்கினது கூறுபாட்டையுந் தெரிந்து உலகத்தார்க்குச் சொல்லியருளிய தெய்வத்தை மறந்தாலும் மனிதனென்றாவது இழிந்த சாதியானென்றாவது உட்கொண்டு வள்ளுவனென்று சொல்லுதற்கு ஒருவனிருந்தால் அவன் அறிவில்லாதவனாவன்; அவன் வாயிற் பிறந்த சொல்லை அறிவுடையார் கொள்ளாரென்றுங் கூறினர். மறந்து சொன்னாலும் அறிவில்லாதவனென்றால் நினைப்புடன் சொல்லுவான் அறிவில்லாதவனினும் அறிவில்லானென்பதாயிற்று. (முழுமூடனென்றபடி.) அசரீரிவாககை முதலாவது கவியிற் காண்க.

இனி, உக்கிரப்பெருவழுதியார் (4) ஆவது கவியில் நான்கு வேதங்களின் மெய்ப்பொருளை அறம்பொருள் இன்பமென்னும் முப்பொருளாக நான்கு முகத்தையுடைய பிரமதேவர் தமது திருவுருவத்தை மறைத்துத் திருவள்ளுவரா யவதரித்துச் சொல்லிய திருக்குறள் நூலெனக் கூறுதலாலும் (28)ஆவது கவியில் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் தாமரைப்பூ மேலிருக்கின்ற பிரமதேவர் திருவள்ளுவராகி எனக் கூறுதலாலும் பிரமதேவரே திருவள்ளுவரென்பதும் திருக்குறள் வேதப்பொருளடங்கிய நூலென்பதும் யாவராலும் மறுக்கப்படாதனவாம். இன்னும் தன்னிகரில்லா மன்னர் பெருமானாகிய அவ்வுக்கிரப் பெருவழுதியார் ஒன்றற்கொன்று மாறுகொளக் கூறலாகிய ஏனை நூற்பொருள்கள் போல்வதன்றெனத் தோன்ற நான்கு வேதங்களின் மெய்ப் பொருளாக கூறிய திருக்குறளெழுதிய புத்தகத்தை வந்தித்து வாழ்த்திச் சிந்தித்துக் கேட்கவேண்டுமென்று ஆணைதந்தமையால் "மன்னனெப்படியோ மன்னுயிரப்படி" என்னும் பழமொழிப்படி நாமெல்லாரும் அங்ஙனஞ்செய்து வரல்வேண்டுவது நியதியாயிற்றென்பது காண்க.

மேற்கூறிய அசரீரி, நாமகள், உக்கிரப்பெருவழுதியார் ஆகிய மூவர் திருவாக்கினின்றும் வந்த வாக்கியங்களால் எல்லாராலும் திருக்குறள் தமிழ்வேதமென்று தெளிதற்பாலதாயிற்று. இனி, வேதம் அநாதியாதலின், ஒருகாலத்துங் கெடாதென்பது தோன்ற இறைய

னாராகிய சோமசுந்தரக்கடவுள் (3) ஆவது கவியில் புலவர்க்கரசனா கிய திருவள்ளுவன் வாயிற் பிறந்த திருக்குறளானது எக்காலத்துந் தனது அழகுகெடாமல் நீடூழி சென்றாலும் நிலைநின்று இம்மைமறு மைப் பயன்களை விளைவிக்குங் குணமுடையதாய் விளங்கு மாதலால் குறைவுபடாத செய்யதளிர்களையுடைய கற்பகத்தின் தெய்வத்தன் மைபொருந்திய மலர்போலுமென ஆசீர்வதித்தருளினர்.

இனி, திருக்குறளரங் கேற்றும்போது கேட்டுத்தெளிந்த சங் கப்புலவர்களொவ்வொருவரும் ஒவ்வொரு வெண்பாவாற் கூறிய அபி ப்பிராயங்கள் வருமாறு:—

(5) ஆவது கவியில் கபிலர் - வீடுதோறும் வளர்க்கப்படுகின்ற கிளி முதலிய பெண்பறவைகள் பெண்கள் பொற்சுண்ணப்பொடி யிடிக்கும்போது பாடும் உலக்கைப் பாட்டால் நித்திரை செய்கின்ற வளந்தங்கிய நாட்டையுடைய பாண்டியனே! திருவள்ளுவரால் அருளிச் செய்யப்பட்ட மிகச்சிறிய இக் குறள்வெண்பா மிகப் பெரியபொருளைத் தன்னுள்ளடக்கிக்காட்டுதலானது தினையரிசியின் ளவுக்கும் ஒவ்வாத சிறிய புல்லினது நுனியிடத்துள்ள பனிநீர் உய ர்ந்த பனைமரத்தினது நிழலைத் தன்னுளடக்கிக் காட்டுங்குணம்போ லும் எனக்கூறினர். இதனால், சுருங்கச் சொல்லல் விளங்கவைத்த லென்னும் அழகுடையது திருக்குறளென்பதும், அரங்கேற்றுஞ் சபையில் தலைவனாயிருந்தவன் பாண்டியனென்பதுந் தெரிகின்றன. பாண்டியன் தலைவனாயிருந்தானென்பது இதனாலன்றியும் (2) ஆவ து கவியில் நாமகளும் (14) ஆவது கவியில் பொன்முடியாரும் (19) ஆவது கவியில் கீரந்தையாரும் (32) ஆவது கவியில் பெருஞ் சித்திரனாரும் (50) ஆவது கவியில் கொடிஞாழல்மாணி பூதனாரும் கூறியதனாலுங் காண்க.

(6) ஆவது கவியில் பரணர்-திருமாலும் குறளாய் (சிறுவடிவ மாய்)ப் பிறந்து வளர்ந்து தன்னிரண்டுபெரிய அடிகளால்உலகமுழு வதையும் விரும்பி அளந்தான். மெய்யறிவினையுடைய திருவள்ளு வரும் தம்மிடத்திலுண்டாகிய நிலையிலே நிற்கின்ற குறள்வெண்பா வின் இரண்டு சிறிய அடிகளால் உலகமெல்லாவற்றிலும் உள்ளோ ரால் நினைக்கப்பட்ட எல்லாப் பொருள்களையும் ஆராய்ந்து அளந்

தார் என்றனர். திருமால்போலத் தாமே குறளாதலும், ஆகிய அந்நிலை நில்லாது வளர்தலும, பெரிய 2அடிகளால் உலகத்தை அளத்தலும் இல்லாமல்தம்மிடத்தி லுண்டாக்கப்பட்ட அந்நிலையிலேநிற்கும் குறளின் சிறிய $1\frac{3}{4}$ அடிகளால் உலகத்தாரது அளவுபடாத நினைப்பின் விஷயங்களெல்லாவற்றையும் அளந்தறிதலால் திருவள்ளுவர் பெருமை இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லமுடியுமோ? முடியாது.

(7) ஆவது கவியில் நக்கீரனார்-தாமே வேதப்பொருள் முழுவதையும் அறிந்து குளிர்ந்த தமிழ்ப்பாஷையின் குறள் வெண்பாக்களால் ஒருவரும் விட்டு நீங்கப்படாத அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பொருள்களையும் அவற்றை அறியாதவர்களுக்கு இலேசாகத் தெரிந்துகொள்ளும் விதம் கிரமமாகச் சொல்லி அருளிய திருவள்ளுவருக்கும், மதுரமிக்க நீரைசசொரிந்து உதவிய மேகத்துக்கும் இவ்வுலகத்தார் பிரதியுபகாரமாகச் செய்யும்படி யிருந்தது ஒன்றுமில்லை. திருவள்ளுவரும் மேகமும் வாழ்கவென்று வேண்டிக் கோடற்பொருளாக வாழ்த்தினர். தாமேமுழுதும் அறிதல் எவ்வாறெனில், ஒருவர் உபாத்தியாயராயிருந்து அறிவிக்க அறியும் நம்போன்ற மனிதவுருப் பெற்றிருந்தாலும் திருவள்ளுவர் தெய்வமாதலாலென்க.

(8) ஆவது கவியில் மாமூலனார்—கூறிய அபிப்பிராயம் (3) ஆவது கவியின் அபிப்பிராயத்துக்கு ஒருசான்றாக அதன்பின்னர் எழுதப்பட்டது கண்டுகொள்க.

(9) ஆவது கவியில் கல்லாடனார் - ஆறுவகை மதத்தாருள் ஒரு மதத்தார் தமது நூலில் உலகமும் உயிரும் கடவுளுமாகிய பொருள்கள் ஒன்றேயென்று நிலைநிறுத்துவாராயின், மற்றொரு மதத்தார் அதை மறுத்துத் தமது நூலிலே வேறுமென்று நிலைநிறுத்துவர். அவர் கூறியபடியே வேறென்று ஒரு மதத்தார் நிலைநிறுத்துவாராயின், பின்னொரு மதத்தார் அதனை இல்லையென்று மறுப்பர். ஆதலால், சமயநூல்களெல்லாம் இவ்விதம் மறுக்கப்படுகின்றன; அவைபோலாது திருவள்ளுவராலே அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என மூன்றுவகுப்பாகச்சொல்லப்பட்ட திருக்குறள் நூலைப் பலவகைப்பட்ட சமயத்தாரும் சாதியாரும் தேசத்தாரும் காலத்தா

ரும் ஒரு விரோதமுமில்லாமல் அங்கீகரிப்பார் என்றனர். இதற்குச் சாட்சியாக இக்காலத்தில் எல்லா மதத்தாரும் எல்லாச் சாதியாரும் அவரவர் பாஷைகளிலே யெழுதிவைத்துப் படித்து வருதலைக் கண்டறிக. இதனால், வேதம் பொதுவெனக் கூறுதல் திருக்குறள் நூலுக்கே சேருமென்பதாயிற்று. இவ்வுண்மையை (23) ஆவது கவியில் வெள்ளிவீதியார் இந்த நூலுக்கு உரியவரல்லாதாரில்லையெனவெளிப்படையாக விளக்கினார். ஆறுவகை மதமாவன: வியாசமதம், சைமினிமதம், பதஞ்சலிமதம், கபிலமதம், கணாதமதம், அக்ஷபாதமதமாம். இவையன்றிச் சைவம் வைணவம் முதலியனவுமாம்.

(10) ஆவது கவியில் சீத்தலைச் சாத்தனார் - திருவள்ளுவரது பாட்டுக்களின் முன்பின் முறைதெரிதற்கிடனாகிய திருக்குறளானது தமிழ்நாட்டு மூவேந்தராகிய சேரசோழபாண்டியர்கள் தங்கள் தங்கள் பெரிய முடிகளின்மேலுங் கொள்ளப்பட்ட மாலையல்லவா? என்றனர். இதனால், திருக்குறள் அரங்கேற்றிய காலம் சேரசோழபாண்டியர் ஒருங்குகூடித் தமிழ்நாட்டை அரசாண்டுவந்த காலமென்பது விளங்குகின்றது. சீத்தலைச்சாத்தனார் இதுவரை சங்கத்தில் அரங்கேற்றப்பட்ட நூல்களுள் திருக்குறளொன்றே பிழையில்லாத நூலென மதித்தனர். இதனைமருத்துவன்றாமோதரனார் (11) ஆவது கவியிலே கூறியுள்ளார். தமிழரசர் மூவர் முடிமேலுங் கொள்ளப்பட்டது என்றதனால், திருக்குறள் தமிழ்நூல்களிலெல்லாம் உயர்ந்ததென்பது ஒருவர் சொல்லித் தெரியவேண்டுவதில்லை.

(11) ஆவது கவியில் மருத்துவன்றாமோதரனார் - சீந்தி நீர்ச் சருக்கரையும் சுக்குப்பொடியும் தேனோடு கலந்து பிசைந்து மோந்தபின் தலைக்குத்து உடைய எல்லாருக்கும் அத்தலைக்குத்து நீங்கிவிடும். திருவள்ளுவரருளிச்செய்த அறமுதலிய முப்பாலினால் சீத்தலைச்சாத்தனாருக்குத் தலைக்குத்து இல்லையாயிற்று என்றனர். அஃதாவது: மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் திருக்குறளுக்கு முன் கேட்கப்பட்ட நூல்களிலெல்லாம் பல சொற்பிழைகளும் பொருட்பிழைகளும் கண்டு இப்பிழைகளைக் கேட்கலாயிற்றே யென்று மனம் வருந்தித் தலையிலே அறைந்துகொள்வர். அதனாலே அவர் தலையிலே சீ ஒடிக்கொண்டே யிருத்தலுடன் புண்பட்டு மண்டைக்குத்துஉண்டாயிருந்தது. அக்குத்து. திருக்குறள் கேட்கும்போது ஒருபிழை

யும் காணப்படாமையால் அது கேட்டவுடன் நீங்கிற்றென்பதாம். இயற்கையாயுண்டாகிய தலைக்குத்துக்குச்சிந்தி நீர்ச சருக்கரை முதலிய மூன்றும் மருந்தானாற்போலச் செயற்கையாகிய சீத்தலைச்சாத்தனார் தலைக்குத்துக்கு அறத்துப்பால் முதலிய மூன்றுபாலும் மருந்தாயின. குற்றமற்று விளங்குதல் தெய்வமாதலின், அதுபோலக் குற்றமற்று விளங்குந் திருக்குறளும் தெய்வத்தன்மையுடையதென்றறிக. பிழை - குற்றம்.

(12) ஆவது கவியில் நாகன்றேவனார் - குளிர்ச்சி, இன்சுவை, நல்ல மண முதலியவற்றால் சிறந்த ஒரு தாமரைக்குளத்தினிடத்தே மூழ்குவோர் மேற்கூறியவாறு சிறத்தலில்லாத வேறு தண்ணீரை விரும்பார். அதுபோல, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளடங்கிய முப்பால்களுடைய திருக்குறளில் மூழ்குவோர் (கருத்து அழுந்திப் படிப்பவர்) மேற்கூறியவாறு பொருளடக்கம் பெறாத வேறு நூல்களை வீணாகப் படிக்க விரும்புவாரோ? ஆதலால், இவ்விரண்டும் ஆச்சரியமன்று என்றனர்.

(13) ஆவது கவியில் அரிசில்கிழார் - வேதத்தில் ஒன்றோடொன்று மயங்கி நின்ற அற முதலிய நால்வகைப் பொருள்களையும் இப்பூமியிலுள்ளார் அறியும்பொருட்டு வேறாகப்பிரித்து அந்தந்தப் பொருள் அந்தந்த வகையோடு சேரும்படிககுச் சுருங்கிய சொல்லால் பொருள்விளங்க விரியும்படி சொல்லுதல்வல்லவர் திருவள்ளுவரல்லது வேறில்லை என்றனர். இதனால், சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் முதலிய அழகுகள் எப்படி இவரால் அமைக்கப்பட்டனவோ? அப்படிப் பிறரால் அமைக்கப்படுதல் கூடாதென்பதோடு நூலுக்கும் நூலாசிரியருக்கும் உள்ள தகுதி (உயர்ச்சி)யுங் காணப்பட்டது.

(14) ஆவது கவியில் பொன்முடியார் - முற்காலத்துக் காசிப முனிவராலே தரப்பட்ட திருமாலவதாரமாகி வந்து மாபலிச்சக்கிரவர்த்தியினிடத்து யாசித்த குறளை மண்ணிடத்தே நின்று உலகத்தை அளந்த குறளென்று சொல்லுவர். தாம் இங்கே எழுந்தருளித் திருவள்ளுவராலே தரப்பட்ட குறள், நூலின் ஒழுங்கோடு கூடி விண்ணிடத்தேநின்றும் மண்ணிடத்தே நின்றும் உலகத்துப் பொரு

ளெல்லாவற்றையும் அளந்தது என்றனர். விண்ணிடத்தே நிற்றல் ஒலிவடிவாலென்றும் மண்ணிடத்தே நிற்றல் வரிவடிவாலென்றுங் கொள்க. இந்தக் குறளுக்கு நூலின் ஒழுங்கோடு கூடலும் விண்ணிடத்து நிற்றலும் அதிகமாம். (6) ஆவது கவியில் திருமாலுக்கும் திருவள்ளுவருக்கும் ஒப்புமை குறித்துச் சொன்னதுபோல இங்கே திருமாலவதாரத்துக்கும் திருக்குறளுக்கும் ஒப்புமை குறித்துசசொல்லிய வேறுபாடு கண்டுகொள்க.

(15) ஆவது கவியில் கோதமனார்- அந்தணர்கள் நான்கு வேதங்களையும் ஏட்டில் எழுதிப்படித்தால் உதாத்தம் அநுதாத்தம் சுவரிதம் என்னும் ஓசை வழுப்பட எல்லாராலும் ஓதப்பட்டு வலிமை குறையுமென்று நினைத்து வாய்ப்பாடமாகப் படித்துக் காப்பாற்றி ஏட்டினிடத்து எழுதாராயினர். திருவள்ளுவரது திருககுறளாகிய வேதத்தை ஏட்டினிடத்தெழுதிவைத்து வலிமையுடையவரும் வலிமையில்லாதவரும் ஓதினும் வலிமை குறைதலில்லை என்றனர். எதனாலெனின், மேற்கூறிய சுரபேதங்கள் இதற்கில்லாமையாலென்க. எனவே, சொல்லாற்சிறந்தது நான்கு வேதம். பொருளாற்சிறந்தது திருக்குறள் வேதமென்றதாயிற்று.

(16) ஆவது கவியில் நத்தத்தனார் - பாயிரமாகிய நாற்பது குறளோடுசேர்ந்து ஆயிரத்து முந்நூற்று முப்பதாகிய அரிய குறள் வெண்பாக்களையும் ஓதியுணர்ந்த பின்னர் வேறிடத்துச் சென்று ஒருவர் வாயாலே சொல்லக்கேட்டறிதற்கு நூல்களிருக்கின்றனவோ? இல்லை. நிலைபெற்ற தமிழிலே தாம் புலமை நிறைந்தவராகிப் பிறர் தம்மிடத்தில் வந்து எல்லாப் பொருள்களையுங் கேட்டறியும்படி உயர்வாகிய ஆசனத்திலிருக்கலாகும் என்றனர். எனவே, புலமை நிரம்புதற்கு இந்நூலொன்றே போதுமென்பதும் இதனுள் எல்லா நூற்பொருள்களும் அடங்கியுள்ளன வென்பதுங் காண்க.

(17) ஆவது கவியில் முகையலூர்ச்சிறுகருந்தும்பியார்-திருவள்ளுவரது திருக்குறளின் மேற்பட்ட நூலொன்று இருக்கிறதென்று சொல்லவல்லவர் எவ்வகைப்பட்ட புலவருள்ளும் இல்லை. ஆதலால், நாம் திருக்குறளைக் குறித்துச்செய்யக்கடவன யாவையெ

னில், இதன் பொருளைச் சிந்தித்தலும், சிந்தித்ததைப் பிறருக்குச் சொல்லுதலும், பிறராலே சொல்லப்பட்டதனைத் தெளிதலும் அல்லவா? என்றனர். எனவே, இந்நூற்பயிற்சிசெய்து நடக்குமாறு இவையென்பதாயிற்று.

(18) ஆவது கவியில் ஆசிரியர் நல்லந்துவனார் - உயர்ந்தோரால் சொல்லப்பட்ட பல நூல்களாலும், தவறுதலில்லாத அரிய வேதத்தினாலும் காப்பாற்றிவைத்திருந்து உலகத்தாருக்குச் சொல்லப்பட்ட பொருள்களெல்லாம் தம்மிடத்தே காட்டும்படி திருக்குறளை அருளிச்செய்த திருவள்ளுவருக்குச் சமானமானவர் எவ்வகைப்பட்ட வித்துவான்களுள்ளும் இல்லை என்றனர்.

(19) ஆவது கவியில் கீரந்தையார் - திருவள்ளுவர் தமக்கு ஆட்சியாகிய பாடற்றொழிலால் முதற்பாவாகிய குறள் வெண்பாவால் அறமுதலிய மூன்றுபாலிலும் தருமார்த்த காமமோக்ஷமென்ற நான்கு பொருளையுங் கூறினர் என்றனர். இங்கே திருவள்ளுவருக்குப் பாடற்றொழில் ஆட்சி யென்றதனால், திருக்குறளன்றி வேறு பல நூல்களுஞ் செய்திருப்பாரென்பது ஆராயத்தக்கதாம்.

(20) ஆவது கவியில் சிறுமேதாவியார் - திருக்குறள் (கஙக) அதிகாரத்துள் பிற்காலத்தில் முறை பிறழ்ந்து வழங்காதிருக்கும்படி திருவள்ளுவர் கூறிய முறையறிந்து பாயிரம் நான்கு அறம் முப்பத்து மூன்று ஊழ் ஒன்று பொருள் எழுபது இன்பம் இருபத்தைந்து என்று கூறினர்.

(21) ஆவது கவியில் நல்கூர்வேள்வியார் - அறிஞர் வடபக்கத்தை நோக்கி வடமதுரைக்கு உபகேசியாகிய பின்னைப்பிராட்டியை மணந்த கண்ணபிரானை ஆதாரமென்று சொல்லுவர். இந்தப் பக்கமாகிய நீர்வளந்தங்கிய தென்மதுரைக்கு, தாய் பிள்ளைபினிடத்தன்புசெய்வது போல உலகத்தாருக்கு அருள் செய்யும், குற்றமற்ற புலமையாகிய தேனைச் சொரிகின்ற நாவையுடைய திருவள்ளுவரை ஆதாரமென்று சொல்லுவர் என்றனர். ஆதாரம்: தாங்குதல்; அஃதாவது: அடுத்தவரை நல்வழி நடக்கச்செய்து உய்வித்தல்.

(22) ஆவது கவியில் தொடித்தலை விழுத்தண்டினார் - அறப்பாவின், உட்பிரிவுகள் நான்கு. பொருட்பாவின், உட்பிரிவுகள் ஏழு.

காமப்பாலின், உட்பிரிவுகள் மூன்று எனப்பகுப்புச்செய்து தருமார்த்த காமமோக்ஷங்களைக் கூறிய பெருநாவலராகிய திருவள்ளுவரே திருக்குறளில் இல்லாத பொருள் உளதாயின் அறிவர் என்றனர். உளதாயின் எனவே, இல்லை என்பதே உறுதியாயிற்று. நான்காவன : பாயிரம், இல்லறம், துறவறம், ஊழ் என்பன. ஏழாவன : அரசு அமைச்சு, அரண், கூழ், படை நட்பு, ஒழிபு என்பன. மூன்றாவன : ஆண்பாற்கூற்று, பெண்பாற்கூற்று, அவ்விருபாற் கூற்று என்பன.

(23) ஆவது கவியில் வெள்ளிவீதியார் - ஒருவராலே செய்யப்படாமல் அநாதியேயுள்ள வேதத்துக்கும், தன்வழிநடப்பார்க்குப் பயன் உண்டாதல் பொய்யாத திருவள்ளுவராலருளிச்செய்யப்பட்ட திருக்குறளுக்கும் பாஷை முதலிய வேறு பாடுகள் உடையனவாயினும், நுட்ப அறிவால் நோக்குவார்க்குப் பொருள் வேறுபாடில்லை. அவ்வேதம் ஓதுதற்கு உரியவர் அந்தணரே திருக்குறள் ஓதுதற்கு உரியவர் எல்லாச் சாதியாருமே என்றனர். இவ்விரண்டுமே வேறுபாடாம்.

(24) ஆவது கவியில் மாங்குடி மருதனார் திருவள்ளுவராலருளிச்செய்யப்பட்ட திருக்குறளின் குணம் ஓதப்படுதற்கு எளிய சொற்களை யுடையதாகியும் அறியப்படுதற்கு அரிய பொருள்களை உடையதாகியும் வேதமெனப்படுகின்ற பொருளாகியும் அந்த வேதத்தைப் பார்க்கினும் மிகப்பிரகாசித்து நுண்ணறிவுடையோர் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் முன் காணப்பட்டதற்குப் பின் காணப்பட்டது சிறந்ததாகத் தோன்றி, நினைப்பவர் மனத்தை உருகச்செய்யும் என்றனர். எனவே, வேதம் ஓதுவார் மனத்தை உருகச் செய்யாதென்பதாயிற்று. "வேதமோதில் விழிநீர் பெருக்கி நெஞ்ச நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்" என்றார் பிறரும்.

(25) ஆவது கவியில் எறிச்சலூர்மலாடனார் - திருவள்ளுவநாயனார் வேதத்தின் பலவகைப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து தம்மாலே செய்யப்பட்ட திருக்குறளில் இவையே உரியவை யென்று பாயிரத்துக்கு அதிகாரம் நான்கும் இல்லறத்துக்கு இருபத்துமூன்றும் துறவறத்துக்குப் பதின்மூன்றும் ஊழுக்கு ஒன்றுமாக

வரையறைப்படுத்தி நான்கு பகுப்புச் செய்து கூறினர் என்றனர். இவர் கூறிய அதிகாரத்தொகை அறத்துப் பாலுக்கு மட்டுமேயாம். இவர் கூறியது போலவே,

(26) ஆவது கவியில் போக்கியாரும் (27) ஆவது கவியில் மோசிகீரனாரும் (28) ஆவது கவியில் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனாரும் (37) ஆவது கவியில் மதுரைப் பெருமருதனாரும் திருக்குறளில் வகுத்திருக்கிற பால் இயல் அதிகாரத் தொகைகளை இத்தனை இத்தனை யென்று கணக்கிட்டுக் கூறினர். ஒருவரோடமையாது பலரும் இங்ஙனம் கூறுதல் முறை பிறழாதிருத்தலை வற்புறுத்துதற் கென்க.

(29) ஆவது கவியில் மதுரைத் தமிழ்நாகனார் - முதல் வழி சார்பு என மூன்று பிரிவுடைய அறநூல் பொருள் நூல் இன்பநூல் வீட்டு நூல் என்னும் நான்கனுள் அடங்கியிருக்கின்ற செம்பொருள் ஆக்கப்பொருள் குறிப்புப்பொருள் என்னப்பட்ட காட்சிப் பொருள் கருத்துப் பொருள்களாகிய எல்லாப் பொருள்களும் இதனிடத்தில் அடங்கியிருக்கின்றன. இதனிடத்திலில்லாத யாதொரு பொருளும் வேறெந்த நூல்களிடத்தும் இல்லை. ஆதலால், பதினாயிரம் நூறாயிரக்கணக்காகச் சொல்விரிந்த கிரந்தங்களுள்ள நூல்களால் பிரயோசனம் யாது? திருவள்ளுவநாயனாரால் அருளிச் செய்யப்பட்ட திருக்குறளாகிய இந்நூலொன்றே சில்வாழ்நாட் சிற்றறிவுடைய மனிதருக்கு விதி விலக்குகளை மாறுபாடின்றி உள்ளங்கை நெல்லிக் கனிபோலத் தெரிந்து உய்வதற்குத் துணையா மென்றனர்.

(30) ஆவது கவியில் பாரதம் பாடிய பெருந்தேவனார்-கதாரூபமாயிருக்கும் பாரதம் சீராம கதையினையும் விதி ரூபமாயிருக்கும் மனுமிருதி பழைய வேதத்தையும் ஒப்பாயிருக்கும். அறிதற்கரிய வேதாந்தப் பொருளையும் உயர்குலத்தவரன்றித் தாழ்ந்த குலத்தவரும் ஐயம் திரிபில்லாமல் அறியும்படி திருவள்ளுவர் வாக்காலுண்டாகிய திருக்குறளுக்கு உவமானமாகிய நூலொன்று இல்லை என்று கூறினர்.

(31) ஆவது கவியில் உருத்திரசன்மகண்ணர் - மணலைத்தோண்டுந்தோறும் நீர் பெருகுதல் போலவும் பிள்ளைகள் வாய்வைத்து

உண்ணுந்தோறும் தாயினது முலையிடத்துப் பால்பெருகுதல்போல வும் சாதிசமயம்பற்றி ஒருவரும் எந்த விதத்திலும் கலகஞ் செய்த ற்கு இடமில்லாத உண்மை மொழியையுடைய திருவள்ளுவரது திருக்குறளை ஆராயுந்தோறும் அறிவுடைய வித்வான்களுக்கு மேன் மேலும் அறிவு வளரும் என்றனர்.

(32) ஆவது கவியில் பெருஞ்சித்திரனர்-எதிரிகளால் மறுக்கப் படுங் குற்றமில்லாத திருவள்ளுவர் நான்கு வேதங்களாலுஞ் சொல் லப்பட்ட பொருள்களெல்லாவற்றையும் படிப்பார்க்கு வருத்தமில்லா திருக்க இனிய குறள் வெண்பாக்களால் சொல்லியதனால் பாண்டிய னே! இக்குறள் வெண்பாக்களோ? முதனூலாய் நின்று அப்பொரு ள்களைச் சொல்லிய வேதங்களோ? மேம்பாட்டுக்குரியன. நீ சொல் வாயாக என்றனர். மேம்பாடு-மேன்மை. சிறிதாயிருந்து படிப்பா ர்க்கு வருத்தம் விளையாதென்று திருக்குறளைச் சொன்னதால், பெரி தாயிருந்து படிப்பார்க்கு வருத்தம் விளைக்கும் வேத மென்றதாயி ற்று.

(33) ஆவது கவியில் நரிவெரூஉத்தலையார்-அற முதலிய நான் கு பொருள்களும் அக்காலத்திலுள்ள மனிதர்களுக்குத் தெரியும் படி கூறிய பழைய வேதமானது இக்காலத்திலுள்ள மனிதர்களுக் குப்படித்தற்கு அரிதென்று அப்பொருள்களை எளிதிலறியும்படி திருக்குறளைத் திருவள்ளுவர் அருளிச்செய்தனர் என்றனர். இத னல், அக்காலத்திலுள்ளவர் ஆயுள் வளர்ச்சியும் அறிவு நீட்சியும் உடையாரென்பதும் இக்காலத்தார் அவ்விரண்டுஞ் சுருங்குதலுடை யாரென்பதும் விளங்குகின்றன.

(34) ஆவது கவியில் மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்க்கி ழார்-இப்பூமியினிடத்துப் பலவேறு வகைப்பட்ட நூலுணர்ச்சிகளை யெல்லாம் ஒருங்கே கொண்ட திருவள்ளுவரை அன்றி, அவ்வுணர்ச் சியில்லாத வேறு சிலரையும் புலவரென்று சொல்லுதல் நிலவாற் பிரகாசிக்கும் அந்தி நேரத்துக்கன்றி, இருளாற் சூழப்பட்ட அந்தி நேரத்துக்கும் மாலை யென்று சொல்லுதல் போலும் என்றனர். ஆதலால், திருவள்ளுவர் மெய்ஞ்ஞான ஒளியுடையாரென்பதும் வேறு சிலர் அஃதில்லாரென்பதும் குறிப்பித்தவாறுகாண்க.

(35) வது கவியில் மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார்-பின்வரக் கடவனவாகிய இன்பத்தின் காரணங்களை இன்னது செய்யெனக் கூறப்பட்ட விதிக்குறளாலும், துன்பத்தின் காரணங்களை இன்னது செய்யாதே யெனக்கூறும் விலக்குக்குறளாலும் முன்னே ஆராய்ந்தறியவும், தம்மிடத்தில் அன்பு நீங்காமல் மனங்களிக்கவும் மக்கட்கூட்டத்துக்கெல்லாம் யாரும் புகழப்படும் சீர்த்தியுடைய திருவள்ளுவர் வாயுறைவாழ்த்தாகத் திருக்குறளை அருளிச் செய்தனர் என்றனர். முன்னே அறிதலின் பயன் நல்லதைச் செய்தலும் தீயதைச் செய்யாதிருத்தலுமேயாம்.

(36) ஆவது கவியில் கவிசாகரப்பெருந்தேவனார்-மலர்களுக்குள் தாமரை மலரும் பொன்களுக்குள்ளே சாம்புனதப் பொன்னும் பசுக்களுக்குள்ளே காமதேனுவும் யானைகளுக்குள்ளே அயிராவதமும் தேவர்களுக்குள்ளே திருமாலும்போல, பாட்டுகளுக்குள்ளே திருவள்ளுவரது திருக்குறள் வெண்பா சிறந்ததென்று அறிவுடையோர் சொல்லுவர் என்றனர். சாம்புனதம்: நால்வகைப் பொன்களிலொன்று. நால்வகையாவன: ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்புனதம் என்பன. காமதேனு: வசிட்ட முனிவரிடத்துள்ள பசு. அயிராவதம்: இந்திரனுடைய வெள்ளையானை.

(37) ஆவது கவிப்பொருள் (26) ஆவது கவிப்பொருளோடு சேர்க்கப்பட்டது.

(38) ஆவது கவியில் கோவூர் கிழார் - தருமமுதலிய நான்கு பொருள்களையும் மண்ணுலகத்தார் வகைப்பட ஆராய்ந்து தெளியும்படி குறள்வெண்பாக்களாலே பாடிய திருவள்ளுவநாயனாரது முப்பால்களையுடைய புத்தகத்துக்கு வடமொழி தென்மொழி பிறமொழிகளிலே வல்ல முனிவரும் புலவருமாகிய பெரியோர் சொல்லப்பட்ட அறநூல் முதலிய நூல்கள் சமானமாகமாட்டா என்றனர்.

(39) ஆவது கவியில் உறையூர் முதுகூற்றனார் - தெய்வத்தன்மையிற் சிறந்த திருவள்ளுவரது குறள் வெண்பாவோடு சேர்ந்து சிறந்து விளங்கும் அறத்துப்பால் முதலிய மூன்று பால்களையும் படியாதவருடைய நாவிற்கு இனிய வார்த்தைகள் பேசி வாழ்தல் உண்டாகாது. மனத்திற்கு இனிய சொற்சுவை உண்டாகாது. காயத்

தாக்கு நல்ல செய்கை உண்டாகாது என்று நினைப்பாளாகிய இலக்குமி அவரைச் சேரமாட்டாள் என்றனர். இலக்குமி படியாதாரைச் சேரமாட்டாளெனவே, படித்தவரைச் சேர்ந்திருப்பாளென்பதாம். சேர்ந்திருத்தலாவது: மனம் வாக்கு காயங்கள் முறையே தீயவை நினைத்தலும் சொல்லலும் செய்தலுமாகிய முக்குற்றங்கள் நீங்கச் செல்வம் பெருகி யிருத்தலாம். தீயவையாவன: வாக்கின் குற்றமாகிய கடுஞ்சொல், பொய், கோள், பயனில கூறுதலும் மனத்தின் குற்றமாகிய பிறன் மனைவியை விரும்புதல், பிறர் பொருளை விரும்புதல், பிறன் பொருட்குக் கேடெண்ணல், பிறவுயிருக்குக் கேடெண்ணலும் காயத்தின் குற்றமாகிய பிறன் மனைவியைச் சேருதல், பிறர் பொருளை அபகரித்தல், உயிர்க் கொலை செய்தல், ஊனுண்ணுதலும் முதலியனவாம்.

(40) ஆவது கவியில் இதிகட்பெருங்கண்ணனார் - இம்மைப் பயன் மறுமைப்பயனாகிய இரண்டையும் வினைப்பயன் தொடர்தற்குரிய எழுபிறப்புக்கும் ஆகும்படி ஒழுங்கான வழியால் யாவருந் தெரிந்துகொள்ளவும் அறம் பொருள் இன்பம் என்னு முப்பால்களுள் அம்முப்பாற் பொருள்களோடு வீடுமாகிய நாற்பாற் பொருள்களது விதிகளும் நடைபெறவும் திருவள்ளுவநாயனார் இனிய திருக்குறள் வெண்பாவைப் பாடி அருளிச் செய்தனர் என்றனர். வீட்டுவிதி துறவறத்திற் காண்க.

(41) ஆவது கவியில் செயிர்க்காவிரியார்மகனார் சாத்தனார் - இன்பத்தைத் தருவனவாகிய ஆவனவும், துன்பத்தைத் தருவனவாகிய ஆகாதனவும் மனிதர்களுக்கு இனி, திருக்குறளிலிருந்து எடுத்துச் சொல்ல யாவரும் வல்லவராவார். தேவராகிய திருவள்ளுவர் இதிற் சொல்லியவற்றையே ஒப்பில்லாத ஒழுக்கம் பூண்டவர் செய்வார் என்றனர். திருக்குறளில் எடுத்துச் சொல்ல யாவரும் வல்லவராவரெனவே, வேதத்தினின் றெடுத்துச் சொல்ல அறிவுடையவரும் வல்லவராகாரென்றதாயிற்று. ஏனெனில், வேதத்தில் அற முதலிய நான்கையும் வகைபடுத்தி ஒழுங்குபடக் கூறாமையா லென்க.

(42) ஆவது கவியில் செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார் - வேதப்பொருளை உலகத்தார் ஓதி யறியும்படி தந்திரத்தால் விரித்

துத் தமிழ்ச் சொல்லாற் சொன்னார். ஆதலால், நினைப்பார் நினைக்கும் பொருள்களெல்லாம் திருவள்ளுவரது திருக்குறளினிடத்து உண்டென்று அறிவுடையோர் சொல்லுவர். தந்திரமாவது: சுருங்கிய சொல்லால் கற்பார் அறிவினளவுக்குத் தக்கவாறு பொருள் விரியும்படி சொல்லுதல்.

(43) ஆவது கவியில் வணக்கஞ் சாத்தனார் - வடமொழியும் தென்மொழியும் ஆராய்ந்து இதைக்காட்டிலும் இது சிறந்ததென்று ஒன்றை இனி, சொல்லமுடியாது. வடமொழி வேதமுடையது. தென்மொழி திருவள்ளுவரது திருக்குறளுடையது என்றனர். இதனால், தென்மொழியாகிய தமிழுக்கு வேதமில்லை யென்று சொல்லும் பழைய குறைபைத் திருவள்ளுவநாயனார் திருக்குறளாகிய வேதத்தைச் செய்துவைத்து நீக்கினாரென்பது புலப்படுகின்றது.

(44) ஆவது கவியில் களத்தூர் கிழார் - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், பாரதமென்னும் ஐந்து வேதங்களும் அவ்வேதத்தின் வழிப்பட்ட ஆறுவகைச் சமய நூல்களும் நம்முடைய திருவள்ளுவரால் உலகத்திலுள்ள ஆண்பாலார் பெண்பாலார்க்குப் புத்தியாகச் சொல்லப்பட்ட திருக்குறளில் அடங்கும். ஆதலால், ஒருவர் ஒரு விகற்பமும் இருவிகற்பமும் ஆகிய இருவகைக் குறள்களையுமே அறமுதலிய முப்பால்களில் ஓதி அறியப்படுகின்ற தருமார்த்த காமமோக்ஷங்களே அவருக்குப்போதும் என்றனர். எனவே, தருமமுதலிய நான்கினுஞ் சிறந்த பொருளில்லை யென்பதாயிற்று. நம்முடைய திருவள்ளுவ ரென்றது, நம்மை நல்வழிப் படுத்த வந்த பரமாசாரிய ரென்றபடி.

(45) ஆவது கவியில் நச்சுமனார் - பாட்டுகளுக்கு அங்கமாகிய எழுத்து, அசை, சீர், அடி, சொல், பொருள், யாப்பு, அழகு, அலங்காரம், வண்ணம் என்பனவற்றில் குறைபாடில்லாமல் எக்காலத்து எவரால் எவை செய்யப்பட்டனவோ? அவையெல்லாம் இக்காலத்துத் திருவள்ளுவராலே செய்யப்பட்ட திருக்குறள் வெண்பாக்களிலே சொல்லப்பட்டன என்றனர். இதனால், ஒவ்வொரு காலத்து ஒவ்வொரு பாவலர் சிற்சில சிறந்து விளங்கச் செய்த நூல்கள் போலாது இக்காலத்தில் திருவள்ளுவரால் செய்யப்பட்ட திருக்குறளில் எல்லாஞ் சிறந்து விளங்குகின்றன என்றதாயிற்று.

(46) ஆவது கவியில் அக்காரக்கனி நச்சுமனார் - சந்திரனும் திருக்குறளும் கலை நிரம்புதலால் காண்டற்கு இனியதாகிக் கண்ணினிலையில் நிரம்புகின்ற நீர்மையுடையன என்றாலும், ஆகாயத்தில் அலைந்து திரிகின்ற சந்திரனிடத்து, திருக்குறள் நயத்தால் விளையும் இம்மை மறுமை வீட்டின்பங்கள் உண்டோ? இல்லை யென்றனர். சந்திரனுக்குச் சொல்லுங்கால், கலை - தன் உடற்கூறாகிய பதினாறு கலை. காண்டல் - பார்த்தல். கண்ணினிலை - முகக்கண்ணினிலை. நீர்மை - குளிர்ச்சி. திருக்குறளுக்குச் சொல்லுங்கால், கலை - அறுபத்துநான்கு நூல். காண்டல் - ஆராய்ச்சிசெய்தல். கண்ணினிலை - அகக்கண்ணினிலை. நீர்மை - குணம் எனப்பொருள் கொள்க.

(47) ஆவது கவியில் நப்பாலத்தனார் - தருமம் அகலும், பொருள் திரியும், காமம் நெய்யும், சொல் நெருப்பும், குறட்பா விளக்குத்தண்டும் ஆக, திருவள்ளுவநாயனார் உலகத்தில் வாழ்வாரது உள்ளிருளைக் கெடுப்பதாகிய விளக்கேற்றினர் என்றனர். வீட்டினிடத்து ஏற்றப்படும் விளக்கினும் நாயனாரா லேற்றப்படும் விளக்கே சிறந்தது. எப்படியெனில், வீட்டினிடத்து ஏற்றப்படும் விளக்கு கட்புலப்பட்ட புற இருளையோட்டி அவ்வீட்டிலுள்ளார்க்கே பயன்படும். நாயனாரால் ஏற்றப்பட்ட விளக்கு கட்புலப்படாத உள்ளிருளையோட்டி உலகத்திலுள்ளார்க் கெல்லாம் பயன்படுதலா லென்க.

(48) ஆவது கவியில் குலபதி நாயனார் - மனமாகிய தாமரை மலரச்செய்து, அம்மனத்தில் வேறொன்றால் போக்கப்படாத அஞ்ஞான இருளைப் போக்குதலால் திருவள்ளுவநாயனாரது திருக்குறளும் புறத்துத்தாமரைமலரச் செய்து புறஇருளைப் போக்குகின்ற சூரியனும் அச்செய்கைகளால் சமானமாகுமென்று அங்கீகரிக்கத் தக்கதாம் என்றனர். உலகுக்கெல்லாம் பேரொளியாகிய சூரியனும் செய்கைகளால் சமானமாமெனவே, மற்றவைகளால் ஆகாதென்பதறிந்து கொள்க.

(49) ஆவது கவியில் தேனீக்குடிக்கீரனார் - தெய்வத்தன்மையுடைய திருவள்ளுவ நாயனார் அறத்துப்பால் முதலிய மூன்று பாலிற் சொல்லிய குறள் வெண்பாக்களைக் கேட்டறிதலால் உலகத்தில் வாழ்வாரது மனத்தில் பொய்யின் பகுப்பிலுண்டாகியவைக

னெல்லாம் பொய்யாகிக்கழிந்தன. மெய்யின் பகுப்பில் உண்டாகிய வைகளெல்லாம் மெய்யாகி விளங்கின என்றார். இதனால், திருக்குற ளுக்கு முன்னுள்ள நூல்களால் பொய் மெய்யாகக்கொள்ளப்பட்டும் மெய் பொய்யாகத் தள்ளப்பட்டும் மாறுபட்டுக் கிடந்தனவென்பதும் அம்மாறுபாட்டை நீக்கி உண்மை அறியப்படு நூல் திருக்குறளென்பது தும் பெற்றாம்.

(50) ஆவது கவியில் கொடிஞாழன்மாணிபூதனார் — திருவள் ளுவரது திருவாக்கால் பிறரொருவர் வேறு நூல்களிலிருந்தெடுத் துச் சொல்லக் கேளாதவைகளெல்லாங்கேட்டு, அறம்பொருளின்பம் வீடு என்னும் நான்கின்வகைகளெல்லாம் தெளிந்தே மென்று சொல் லினர். ஆதலால், யாதொன்றானும் இனி, குறைபாடில்லை யென்ப தும், திருக்குறளிலிருக்கின்ற பல விஷயம் வேறு நூல்களிலில்லை யென்பதும் கிடைத்தன.

(51) ஆவது கவியில் கவுணியனார் - பலவகைச் சமயத்தாரது கற்பனை வழக்கால் மறைக்கப்பட்டுக்கிடந்த அநாதியாயுள்ள நல்வழி களை நாமறியும்படி திருவள்ளுவர் தமது புலமை நிறைந்த நாவால் சொல்லப்பட்ட இனிய குறள் வெண்பாக்கள் நினைத்தால் மனத்துக் கும் கேட்டால் காதுக்கும் ஓதினால் வாய்க்கும் இனிமையுடையன. அன்றி, விடாது தொடர்ந்து வந்த நல்வினை தீவினை யென்னும் வியாதிகளுக்கு மருந்துகளும்ஆம் என்றார். நல்வினையும் பிறப்புக்குக் காரணமாதலால், அதையும் வியாதி என்றார். நல்வினை தீவினை யொழிந்தால் பிறவி அடையாமல் வீடுகூடுதல் நிச்சயமாம். ஆகவே, வீடுபெறுதற்கு இந்நூல் சாதனமாதலறிக. வீடு - மோக்ஷம்.

(52) ஆவது கவியில் மதுரைப் பாலாசிரியனார்—சுக்கிரன் வியாழன் சூரியன் சந்திரன் புறத்திருள்களை விரைவிலே போக்கும் ஒளிகளாம். எல்லாங்கற்ற திருவள்ளுவ நாயனாரது இனிய குறள் வெண்பா உலகத்தாரது அகவிருளைப் போக்கும் ஒளியாம் என்றார். எனவே, புறத்திருளைப் போக்குதற்கு அவைகள் பல உள்ளன. அக த்திருளைப் போக்குதற்கு இஃதொன்றே உளதென்றதாயிற்று. புறத் திருளைப்போக்கும் அவைகள் பலவற்றானும் நீக்கப்படாத அகத்திரு ளைப்போக்குதலால், திருக்குறளொன்றேபேரொளியென்பது கண்டு கொள்க.

(53) வது கவியில் ஆலங்குடி வங்கனார்- திருவள்ளுவரது திருக்குறளின் தித்திப்பான சுவையைச் சொல்லுமிடத்து உண்ணப்படுகின்ற தெளிந்த அமுதத்தின் இனிய சுவையும் ஒப்பாகாது. அந்தத் தெளிந்த அமுதத்தை உண்டு சுவை அறிபவர் தேவர்கள். வளந்தங்கிய தமிழினிடத்தாகிய முப்பாலென்னும் மூன்று பங்கு அவ்வமுதத்தினுஞ் சிறந்த பாலை எல்லா உலகத்தாரும் உண்டு சுவையறிந்து மகிழ்ச்சியடைவர் என்றார். இதனால், ஒரு உலகத்தார்க்கு மட்டும் பயன்படுவதன்றி எல்லா உலகத்தார்க்கும் பயன்படுவதே சிறந்ததென்பதாம். எல்லா உலகத்தார்க்கும் பயன்படுவது எவ்வாறெனில், எல்லா உலகத்தாரும் கருமபூமியாகிய இவ்வுலகத்துட்பிறந்து மெய்ப்பொருளுணர்ந்து வீட்டின்பம் பெறுகவென்க. எனவே, அம்மெய்ப் பொருளுணர்த்து நூல்களில் இந்நூல் சிறந்த தொன்றாதல் காண்க.

இவ்வளவையும் கூறியவாற்றால் திருவள்ளுவரைப் போலொரு புலவரும் திருக்குறளைப் போலொரு நூலும் தேடித் தேடிப்பார்க்கினுங் கிடைத்தல் அரிதெனக் கற்றவர்க்குங் கல்லாதவர்க்குந் தெளிவாக விளங்குமென்பதிற் சிறிதுஞ் சந்தேகம் இல்லை. கடைச்சங்கத்திற் றோன்றிய பல நூல்களுள் இந்த நூலைப்போல, வேறெந்த நூலையாவது வியந்து சங்கப்புலவரொருவரேனும் சொல்லினாரல்லர். அதற்குக் காரணம் ஒவ்வொரு நூலும் சிற்சில குறைபாடு உடையதேயாம். இதற்குச் சான்று சீத்தலைச் சாத்தனார் சரிதமொன்றேபோதும். பல தேசங்களிலுமிருந்து இப்போது மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குக் கிடைத்த திருக்குறள் ஏட்டுச் சுவடிகளை ஆராயும் போது மகா வித்துவான் சரவணப பெருமாளையரால் உரைவரையப் பெறாத சிற்சில பாடல்கள் திருவள்ளுவ மாலையிற் காணப்படுகின்றன. அப்பாடல்களும் மிகவும் அருமையுடையனவாயினும், இரண்டு பாடல்களைத் தவிர ஏனைய பாடல்கள் பாடினார் பெயரொடுவரையப்படவில்லை. அப்பாடல்களின் பொருள்களை யெழுதப்புகின் விரியுமென்று விட்டுவிட்டேன்.

இனி, பிற்காலத்தில் உமாபதி சிவாசாரியர் தமிழ் மொழியில் வழங்கும் உயர்ந்த நூலைக் கணக்கிட்டு ஆறென்று கண்ட இடத்து அவ்

வாறனுள்ளுந் தலைமையாயது வள்ளுவர்(திருவள்ளுவர்)என்று அருளிச் செய்தனர். இதை, "வள்ளுவர்சீ ரன்பர்மொழி" என்னும் அவர் திருவாக்காற் கூறிய பாடலால் அறியலாம். இவருக்குப் பிற்பட்ட திருவாவடுதுறை ஆதீனத்துச் சுவாமிநாததேசிகர் எந்த நூலைப்பார்த்துந் தெரியாதவை உண்டானால் தொல்காப்பியத்திலும் திருவள்ளுவரிலு மிகத் தெளிவாக விளங்குமென அருளிச்செய்தனர். இதை அவர்பாடிய இலக்கணக் கொத்தென்னு நூலிற் பாயிரத்தில் "பல்காற் பழகினுந் தெரியா வுளவேற், றொல்காப் பியந்திருவள்ளுவர் கோவையார், மூன்றினு முழங்கும் என்ற சூத்திரத்தாலறிக. இதனால், திருக்குறளுண்டாகிய காலத்தில் இலக்கணம் தொல்காப்பியமென்பதும் அதைத் தழுவிய இலக்கியம் திருக்குறளென்பதும் நன்கு விளங்கும். இதற்குச் சான்றாகத் திருவள்ளுவநாயனார்தொல் காப்பியப்பொருளதிகாரத்திற் கூறபபட்ட(88ஆவது) "கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற, வடுநீங்கு சிறபபின் முதலன மூன்றும், கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" என்ற சூத்திரவிதிபபடி திருக்குறட்பாயிரத்தில் கடவுள் வாழ்த்தொடு சேர்த்து, கொடிநிலை, கந்தழி வள்ளி என்பனவாகிய வான்சிறப்பும், நீத்தார் பெருமையும், அறன்வலியுறுத்தலும் கூறப்பட்டிருத்தல் காண்க. கொடிநிலை, கந்தழி, வள்ளி என்பதே வான்சிறப்பும், நீத்தார் பெருமையும், அறன் வலியுறுத்தலும் என்பதெங்ஙன மெனில்? மதுரை வித்தியாபாநுப் பத்திரிகை (4) ஆவது தொகுதி (11) ஆவது பகுதியில் (350) ஆவது பக்கத்தில் திருக்குறட்பாயிர ஆராய்ச்சியில மு. ராகவையங் ரவர்கள் நன்கு விளக்கி யெழுதியுள்ளார்கள். ஆங்குக் காண்க. திருவள்ளுவர் பெருமையும் திருக்குறட்பெருமையும் இன்னும் எத்தனை புலவர்கள் எத்தனை விதமாகச் சொன்னாலும் சொல்வதற்கெல்லாம் இடங்கொடுத்துக்கொண்டே ஒரு முடிவு பெறாமலிருத்தலால் இவ்விரண்டையும் பற்றி எழுதலை இம்மட்டில் நிறுத்துகின்றேன். இவ்விரண்டும் நீடூழி வாழ்க. சுபம்!சுபம்!சுபம்!

இங்ஙனம்,

மு. ரா. அருணாசலக்கவிராயர்.

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்.

கடவுள் துணை.

தமிழ் வேதமாகிய
திருக்குறள் வசனம்.

முதலாவது *அறத்துப்பால்.

பாயிரம்.

முதல் அதிகாரம்.

கடவுள் வாழ்த்து.

அஃதாவது:—தெய்வத்தை வாழ்த்துதல்.

க. முதற்கடவுளது உண்மை.

(1) *எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதலா யிருப்பது போல உலகங்களுக்கெல்லாம் கடவுள் முதலாயிருக்கின்றார்.*

உ. கடவுளது திருவடிகளைத் தொழாதவர் படித்ததனாலே பயனில்லை.

(2) *கடவுளுடைய திருவடிகளை வணங்காராகில் அவர் சாஸ்திரங்களைப் படித்ததனாலே யொரு பிரயோசனமு மில்லை.*

ங. கடவுளை நினைத்தலும், வாழ்த்தலும், அவர்வழி நிற்றலுஞ் செய்தார் மோக்ஷம் பெறுவர்.

(3) *அன்பரது இருதய தாமரை மலரிலே சென்ற கடவுளுடைய பெருமை பொருந்திய பாதங்களைச் சார்ந்திருப்பவர் எல்லா உலகத்துக்கு மேலாகிய மோக்ஷ வுலகத்தில் அழியாமல் வாழ்ந்திருப்பர்.* (4) *யாதொரு பொருளிடத்தும் ஆசையும் வெறுப்பு மில்லாதவராகிய கடவுளது திருவடியைச் சேர்ந்தவர்க்கு எந்தக் காலத்தும் பிறவித் துன்பங்களில்லை.* (5) *கடவுளுடைய மெய்ம்மை*

---

* *அறமாவது:—இல்லறம், துறவறமென இருவகைப்படும். இவ்விடத்து அறமென்பது - சிறப்புடைய ஒழுக்கமாம்.*

சேர்ந்த கீர்த்தியை விரும்பினவ ரிடத்து மயக்கத்தைப்பற்றி வருகின்ற நல்வினை தீவினைகள் சேரமாட்டாவாம். (6) மெய், வாய், கண், மூக்கு, செவி யென்கின்ற பஞ்சேந்திரியங்களை வழிகளாக வுடைய பரிசம், ரசம், ரூபம், கந்தம், சத்தம் என்னும் ஐந்தினிடத்துஞ் செல்லுகின்ற ஐந்தாசைகளையுங் கெடுத்த அக்கடவுளுடைய மெய்யாகிய ஒழுககவழி (அவராற் சொல்லப்பட்ட வேத மார்க்கத்தில்) தவறாது நின்றவர் எக்காலத்தும் பிறப்பில்லாமல் வாழ்ந்திருப்பர்.

ச. கடவுளை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் செய்யாத வழி உண்டாகும் குற்றம்.

(7) எந்த விதத்தாலுந் தனக்குச் சமானமில்லாத கடவுளுடைய பாதங்களை யடைந்தவர்க்கன்றி மற்றவர்க்கு மனததிலே யுண்டாகுந் துன்பங்களைப் போக்குதல் கூடாது. (8) தருமக் கடலாகிய அழகிய கருணையுடைய கடவுளது திருவடியை யடைந்தவர்க்கன்றிப் பிறருக்குப் பொருளு மின்பமுமாகிய சமூத்திரத்தைக் கடத்தல் முடியாது. (9) * எட்டு வகைப்பட்ட குணங்களை யுடைய கடவுளது சீபாதங்களை வணங்காத தலைகள், காட்சியில்லாத கண், ஓசை கேளாத காது, வாசனையறியாத மூக்கு முதலிய அவயவங்களைப்போல ஒரு பயனை யடையாவாம்.

ரு. கடவுளடியையே நினைப்பார்க்குப் பிறவியறுதலும், அவ்வாறன்றி வேறு நினைப்பார்க்குப் பிறவி அறுமையும் ஆம்.

(10) இறைவனுடைய சீபாதங்களை யடைந்தவர் சனனமாகிய பெரிய கடலைத் தாண்டிச் செல்லுவர். அடையாதவர் தாண்டிச் செல்லமாட்டார்.

---

* எட்டுக் குணங்களாவன:—ஒருவர் ஏவப்படும் வசமாகாமல் தாமே சுதந்திரமா யிருத்தல், பரிசுத்தமாகிய திருமேனி யுடையரா யிருத்தல், தாமே யறியும் அறிவுடையரா யிருத்தல், எல்லா முணரும் உணர்ச்சி யுடையராயிருத்தல், இயற்கையிலே பாசமில்லாதவராயிருத்தல், மிகுந்த கருணை யுடையரா யிருத்தல், கெடாத வலிமை யுடையரா யிருத்தல், அளவில்லாத ஆனந்த முடையரா யிருததல்.

உ-ஆம் அதிகாரம்.

வான் சிறப்பு.

அஃதாவது:—கடவுளுடைய ஆணையால் உலகமும் அதற்கு உறுதியாகிய அறம், பொருள், இன்பங்களும் நிலைபெறுதற்குக் காரணமாகிய மழையின்சிறப்புச் சொல்லுதல்.

க. உலகம் நடத்தற்குக் காரணம் மழை.

(1) மழையானது இடைவிடாமற் பெய்து நிற்க உயிர்கள் நிலைபெற்றுச் சீவித்திருக்கையினாலே அம்மழை யுயிர்களுக்கு அமிழ்தமென்று அறியப்படுந் தன்மையுடையது. (2) உண்பவருக்கு நன்மையாகிய உணவுகளை யுண்டாக்கித் தானும் அவ்வுணவுப் பொருள்களோடு உணவாக நிற்கின்றதும் அம்மழையே யாம். (3) அம்மழை பெய்யவேண்டுங் காலத்திற் பெய்யாம லிருந்துவிட்டால் கடலாற் சூழப்பட்ட பெரிய வுலகத்திலுள்ள உயிர்களது வயிற்றினுள்ளே பசியானது நின்று வருத்தப்படுத்தும். (4) மழையாகிய வரவின் வளங் குறைந்தால் உழவர்கள் உழுதொழிலைச் செய்யமாட்டார்கள். (5) ஒருவரைப் பெய்யாது நின்று கெடுத்துவிடுவதும் அவ்விதங் கெட்டவரைப் பெய்து கைதூக்கிவிடுவதும் ஆகிய எல்லா வல்லமையுமுடையதும் மழையாம். (6) மேகத்தினின்றும் மழைத்துளி பூமியில் விழுந்தாலன்றிப் பசிய புல்லினது தலையையுங் காணுதலில்லையாகும். (7) தன்னிடத்திலுள்ள தண்ணீரை முகந்து மேகமானது தன்னிடத்திலே திரும்பப் பெய்யாவிட்டால் நீண்ட சமுத்திரமுந் தன்வளங் குறைந்துவிடும்.

உ. அறம் பொரு ளின்பம் நடத்தற்குக் காரணமும் மழையே.

(8) மழை பெய்யாதிருந்துவிட்டால் கடவுளருக்குந் திருவிழா முதலிய சிறப்புடனே பூசை நடக்கமாட்டாது. (9) மழை பெய்யாதாகில் பெரிய வுலகத்திலே கொடையுந் தவமுமாகிய இரண்டு தருமங்களும் இராமற் போய்விடும். (10) எவ்வகை மேன்மை யுடையவருக்கும் தண்ணீரில்லாமல் உலகியலாகிய பொரு ளின்பம் நடவாது; அதுபோல அந்நீரினது *இடையறாத நடத்தல் மழை யில்லாமற் பொருந்தாதென்பதாம்.

---

* இடையறாத நடத்தல் - தண்ணீர் ஊற்றெடுத் தோடிக்கொண்டிருத்தல்.

௩-ஆம் அதிகாரம்.

நீத்தார் பெருமை.

அஃதாவது:—முற்றத்துறந்த முனிவரது பெருமையைச் சொல்லுதல்.

௧. துறந்தார் பெருமை யெல்லாப் பெருமையினும் உயர்ந்தது.

(1) நூல்களினுடைய நிச்சயமானது, தங்கள் தங்கள் வருணாச்சிரம தருமங்களிலே நின்று யான் எனதென்னுஞ் செருக்கைத் துறந்தவர் மகிமையை மேலானதென்று விரும்பும். (2) அவ்விதந் துறந்தவரது மகிமைக்கு அளவு சொல்லப் புகுந்தால் இவ்வுலகத்திலே பிறந்திறந்தவரை யிவ்வளவுபேரென்று எண்ணிக்கொண்டாற் போலும். 'எனவே இறந்தவரைக் கணக்கிட முடியாதது போலவே துறந்த முனிவருடைய மகிமையையுங் கணக்கிட முடியாதென்பதாயிற்று.' (3) பிறப்பினது துன்பமும் மோக்ஷத்தினது இன்பமுமாகிய பகுப்புக்களை யாராய்ந்து அப்பிறப்பை நீக்குதற்கு இந்தச் சன்மத்திலே துறவறத்தைக் கொண்டவரது பெருமையே யிவ்வுலகத்தி லுயர்ந்து விளங்கியது.

௨. துறந்தார் பெருமைக்குக் காரணம் பஞ்சேந்திரியங்களைக் கெடுத்தலும் யோகப்பயிற்சியும் தத்துவவுணர்ச்சியுமாம்.

(4) அறிவென்னும் * அங்குசத்தினாலே மெய், வாய், கண், மூக்கு, செவி யென்கிற ஐந்து யானைகளையும் அதனதன் விடயங்களாகிய பரிசம், ரசம், ரூபம், கந்தம், சத்தங்களிலே செல்லவொட்டாமல் நிறுத்திய முனிவர் எல்லா வுலகங்களினு முயர்ந்ததென்று சொல்லப்படுகிற மோக்ஷநிலத்திலே போய்த் தோன்றும் விதையாவர். (5) இத்தன்மையராகிய ஐந்தாசைகளையும் அடக்கிய முனிவரது வல்லமைக்கு விரிந்த தேவருலகத்திலுள்ளவர்க்கரசனாகிய தேவேந்திரனே போதுமான சாட்சியாக இருக்கிறான். அஃதாவது: ஐந்தாசையும் அடக்காமையால் அவற்றை யடக்கிய கௌதம முனிவரிட்ட சாபத்தை இந்திரன் பெற்ற சரித்திரங் கூறும் 'கம்பராமாயணம் அகலிகை சாபந்தீர்த்த படலத்'தாலுணர்க. முனிவராற் சாபம் பெற்றார் பலரிருக்க இந்திரனைச் சாட்சியாகக்

---

* அங்குசம்- யானையைப் பாகன் தன் வசப்படுத்துந் தோட்டி.

கூறிய தென்னையெனில் அவனிடத்துச் சாபமும் அநுக்கிரகமும் ஒன்றாயிருத்தலா லென்க. அஃதாவது:—உடம்பெல்லாம் இந்திரன் பார்க்கும்போது சாபத்தாலாகிய ஆயிரம் பெண்குறிகளும், மற்றவர் பார்க்கும்போது அநுக்கிரகத்தாலாகிய ஆயிரங்கண்களுமாயிருத்தல். (6) சமானமுள்ள பிறப்பினராகிய மனிதருக்குள்ளே பெரியோ ரென்பவர் உயர்ந்த செய்கைகளைச் செய்பவர்; அச்செய்கைகளைச் செய்யமாட்டாதவர் சிறியவரெனப்படுவர். உயர்ந்தசெய்கையாவது: *இயமம் நியம முதலிய யோகங்களைச் செய்து மோக்ஷமடைதல். (7) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் பஞ்சதன்மாத் திரைகளிற் றோன்றிய பஞ்சபூதங்களும், அவற்றின் கூறாகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஆராய்ந் தவனிடத்திலே யுலக முள்ளது. பஞ்சபூதங்களாவன: நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம். ஞானேந்திரியமைந்தாவன: மெய், வாய், கண், மூக்கு, செவி. கன்மேந்திரிய மைந்தாவன: வாக்கு, பாதம், †பாணி, ‡பாயுரு, உபத்தம் என்பனவாம்.

௩. துறந்தாரது §ஆணை.

(8) ||பயனிறைந்த சொல்லையுடைய முனிவரது மகிமை யை இந்நிலவுலகத்தில் அம்முனிவர் ஆணையாகச் சொல்லிய மந்திர ங்களே காண்பிக்கும். (9) துறவு, மெய்யறிவு, வெறுப்பு முதலிய நற்குணங்களாகிய மலைமேலேறித் தடுமாறாது நின்ற முனிவரது கோபமானது க்ஷணப்பொழுதாயினுங் கோபிக்கப் பட்டவரானே தடுத்தல் கூடாது.

௪. மேற்கூறிய ஆணையுடையராயினும் உயிர்களிடத்து அரு ளுடையராவர்.

(10) எல்லா வுயிர்களிடத்துஞ் செவ்வையான கருணையை வைத்து நடத்தலால் அந்தணரென்று சொல்லப்படுவோர் முனிவர் களே யாவர்.

---

* இயம நியமங்களி னிலக்கணங்களை யோகநூலிற் காண்க.

† பாணி - கை. ‡ பாயுரு - மலத்துவாரம். § ஆணை - சாபம்.

|| பயனிறைந்த சொல்- குணத்தாலாவது கோபத்தாலாவது கூறுஞ் சொல். இவ்விரண்டு சொற்களும் அவ்வப் பயன்களைத் தந்தேவிடுதலா லிவை பயனிறைந்த சொல்லெனப்பட்டன.

௪-ஆம் அதிகாரம்.

அறன்வலியுறுத்தல்

அஃதாவது—அம்முனிவரால் அறிவிக்கப்பட்ட அறம், பொருள், இன்ப மென்னு மூன்றினுள் அறமானது பொருளும் இன்பமும்போ லாகாமல் இம்மை, மறுமை, மோக்ஷம் என்கிற மூன்றையுங் கொடுத்தலால் அவ் விரண்டினும் உறுதியுடையதென்று சொல்லுதல்.

க. அறத்தின் மிக்க உறுதியில்லை.

(1) *தருமமானது மோக்ஷத்தையுஞ் சுவர்க்கலோக முதலிய செல்வத்தையுங் கொடுக்கும், ஆதலால் மனிதருக்குத் தருமத்தின் மேலாகிய பெருக்கம் யாதிருக்கிறது?*

உ. அறஞ் செய்யாதவழிக் கேடு வருதல்.

(2) *ஒருவனுக்குத் தருமஞ் செய்வதைப் பார்க்கினு மேலாகிய பெருக்கமும், அத்தருமத்தை மறந்துவிடுவதைப் பார்க்கினு மேலாகிய கேடு மில்லையாம்.*

௩. அறஞ் செய்யும் வழி.

(3) *தங்கள் தங்களுக்குக் கூடும் விதத்தால் தருமமாகிய நல்வினையை யிடைவிடாமல் செல்லுமிடங்களிலெல்லாம் ஒவ்வொருவருஞ் செய்யவேண்டும். கூடும் விதமாவது: இல்லறம் பொருளளவுக்கு ஏற்கவும், துறவறம் சரீர நிலைக்கு ஏற்கவுஞ் செய்தலாம். செல்லு மிடங்களாவன: மனம், வாக்கு, காயம் ஆம்; இம்மூன்றினாலுஞ் செய்யப்படுந் தருமங்களாவன: நல்ல சிந்தையும், நல்ல சொல்லும், நல்ல செய்கையுமாம்.*

௪. அறத்தி னியல்பு.

(4) *மேற்கூறியபடி தருமஞ் செய்பவன் தனது மனத்தினிடத்துக் குற்றமில்லாதவனா யிருத்தல் வேண்டும், அவ்வளவே தருமமாவது; அது நீங்கிய சொல்லும் வேடமும் தருமமென்று சொல்லப்படா. வேறென்னையெனில்? பிறர் அறியவேண்டிச் செய்யப்படும் ஆரவாரகுணமுடையனவாம். ஆரவாரம் - பெருமுழக்கம். மனத்தினிடத்துக் குற்றமாவது: தீயவை சிந்தித்தல். இதனால் மனம் பரிசுத்தமில்லாதவனுக்கு வாக்காற் கூறுஞ்சொல்லும, காயத்தினிலே தரித்துக்கொள்ளும் வேடமும் பிரயோசனமில்லை யென்பதா*

யிற்று. (5) பிறருடைய செல்வத்தைக்கண்டு பொறாமை யடைத லும், பஞ்சேந்திரியங்களி னாசையும் இவ்விரண்டுங் காரணமாகப் பிறர்மேலுண்டாகுங் கோபமும், அதுபற்றிவருகிற கொடிய வார்த் தையுமாகிய நான்கையு நீக்கிசசெய்யப்பட்டதே தருமம்.

ரு. அறத்தினை நிலையில்லாத வுடம்பு நிலைத்திருக்கிறபோதே செய்யவேண்டும்.

(6) நாமிப்போது சிறு வயதுடையரா யிருக்கின்றோம். இறக்கும்போது செய்வோமென்று நினையாமல் தருமத்தைத் தினந் தோறும் ஒவ்வொருவருஞ் செய்யவேண்டும். அப்படிச் செய்யப் பட்ட தருமமானது உடம்பினின்று உயிர் போகுங் காலத்து அவ் வுயிர்க்கு அழியாத துணையாகும்.

சா. கெடாத துணையாவது.

(7) தருமத்தின் பய னிதுவென்று சாத்திரத்தா லறிவிக்க வேண்டியதில்லை. பல்லக்குச் சுமப்பவனிடத்தும் அதை யேறி நடத்துகிறவனிடத்தும் அறியலாகும். இவ்விருவரு மனிதராயிருந்தும் ஒருவர் சுமப்பவரும் ஒருவர் ஏறுபவருமாதலைப் புண்ணியத்தின் பயனில்லாமையும், அப்பயனுண்டாயிருத்தலும் அறிவிக்கின்றன.

எ. அறம் மோக்ஷந் தரும்.

(8) ஒருவன் தருமத்தைச் செய்யாமற் கழியுநாள் உண் டாகாமற் செய்வானாகில் அச்செய்கையானது அவனுடைய பிறவி வரும் வழியை வராம லடைக்குங் கல்லாகும்.

அ. அறஞ் செய்வாரே யிம்மை யின்பமும் புகழு மெய்துவர்.

(9) தருமத்தோடு கூடிவரு மின்பமே யின்பமாகும்; அத் தருமத்தோடு சேராமல் பாவத்தோடு கூடிவரு மின்பந் துன்பமா கும். அம்மட்டோ புகழுங் கிடையாது. தருமத்தோடு கூடிவரு மின்பம் தன் மனைவியை யநுபவித்தலால் வருஞ்சுகம். பாவத்தோடு கூடிவரு மின்பம் பிறர் மனைவியை யநுபவித்தலால் வருஞ் சுகம்.

கூ. செய்வதும் நீக்குவதும் இஃது இஃதென்பது.

(10) ஒருவனுக்குச் செய்யத்தக்கது தருமமாகிய நல்வினை. நீக்கத்தக்கது பாவமாகிய தீவினையே.

பாயிரம் முற்றிற்று.

முதலாவது

இல்லற இயல்.

ரு-ஆம் அதிகாரம்.

இல் வாழ்க்கை.

அஃதாவது:— இல் வாழ்க்கை நிலைக்குச் சொல்லப்படுகிற வழியிலே நின்று அதற்குத் துணையாகிய கற்புடைய மனைவியோடு கூடிச் செய்யப் படுவதாம்.

க. இல்லறத்தின் நிலை எல்லாவுபகாரத்திற்குமுரிமையுடையது.

(1) இல்லறத்தோடு கூடி வாழ்பவனென்று சொல்லப்படு வான் துறவறத்தின் றன்மையுடைய பிரமசாரியும், வானப்பிரத்த னும், சந்நியாசியுமாகிய மூவருக்கும் அவர்களுடைய நல்லொழுக்க வழிகளில் நிலைபெற்று நின்ற துணையாவான். பிரமசாரி: குருவி னிடத்தே ஓதி விரதங்காக்கிறவன். வானப்பிரத்தன்: காட்டினிட த்தே மனைவியுடன் போய்த் தவஞ்செய்கிறவன். சந்நியாசி: எல்லாப் பற்றுக்களையும் விட்டவன். துணையாவதெப்படியென்றால் மேற்சொல்லப்பட்ட மூவருக்கும் பசி, நோய், குளிர் முதலியவற்றால் இடையூறு வராமல் உணவு, மருந்து, ஆடை முதலியவை கொடுத்து அவரவரொழுக்கங்கள் தவறாமல் நடக்கச் செய்தல். (2) பொரு ளிருந்தும் அதை விட்டு நீங்கிய முனிவருக்கும், பொருளில்லாமல் தரித்திரப்பட்டவருக்கும், ஒருவருமில்லாமல் வந்து மரணமடைந் தவருக்கும் உணவுமுதலிய பொருள்கள் கொடுத்தலாலும் நீர்க்கடன் முதலானவைகள் செய்து நல்லகதியை யடைவித்தலாலும் இல்வாழ் வானென்று சொல்லப்படுவோனே துணையாவான்.

உ. இல்லறத்தின் நிலை நின்றார் அறஞ்செய்யும் விதம்.

(3) பிதிரரும், தேவரும், விருந்தினரும், சுற்றத்தாரும், தானும் என்று சொல்லப்பட்ட ஐந்திடத்துஞ் செய்யப்படுகின்ற தருமவழியை வழுவாமற்செய்தல் இல்வாழ்வானுக்குச்சிறப்புடைய

தருமமாம்; ஆதலால் இல்வாழ்வான் தன்னுடைய வரவுப்பொருளை ஐந்துபங்கிட்டுத் தானொருபங்கை யநுபவிக்க வேண்டுமென்பதாயிற்று. ஐந்து பங்கும் அரசனுக்குக் கொடுக்கவேண்டிய ஒரு பங்கு போக மீந்தவைகளே. இந்த முறை பற்றியே யரசன் ஆறிலொரு கடமை கொண்டு உலகத்தை யாளுதல் கண்டு கொள்க. (4) பாவத்துக்குப் பயப்பட்டுச் சம்பாதித்த பொருளை முன்னே சொல்லப்பட்ட * பத்துப் பேர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்துத் தான் உண்ணுதலை யொருவன் வாழ்க்கை யுடையதானால் அவனது சந்ததி யெந்தக் காலத்துங் குறைதலில்லை. எனவே, பாவத்தால் வந்த பொருளை யொருவன் மேற்கூறியபடி பங்கிட்டுக் கொடுத்து உண்டானாயினும் தருமமானது பொருளுடையானையும் பாவமானது தன்னையுமடையப் புத்திரப் பேறில்லாமற் போய்விடுமென்பதாயிற்று. (5) ஒருவனுடைய இல்வாழ்க்கையானது தன் மனையாளிடத்துச் செய்யத்தகு மன்பினையும் பிறர்க்குப் பங்கிட்டுக் கொடுத்தலாகிய தருமத்தினையு முடையதானால் அவ்வுடைமை யவ்வில்வாழ்க்கைக்குக் குணமும் பிரயோசனமுமாம். மனையாளுக்குங் கணவனுக்கு மனவொற்றுமை யில்லாவிட்டால் இல்லறம் நடவாதாகையால் அன்புடைமை குணமும் அருளுடைமை பிரயோசனமுமாதல் காண்க.

௩. இல்லறத்தினது நிலையே பயனுடையதென்னுஞ் சிறப்பு.

(6) ஒருவன் இல்லற வாழ்க்கையைத் தருமவழியிலே செலுத்துவானாகில் மனைவியை விட்டு வனத்திலே சென்று தவஞ் செய்து அடையும் பயன் எது இருக்கிறது? இங்கே யெல்லாப்பயனுமடையலாம். அத்தருமவழியாவது: பழிபாவத்துக்குப் பயந்து தேடியபொருளை முன் சொன்னபடி பங்கிட்டுக் கொடுத்தலும் அன்புடைமையுமாம். (7) இல்லறவாழ்க்கையிலே நின்று அதற்குரிய இயற்கையோடு கூடி வாழ்பவன் ஐம்புல இன்பங்களை விட்டுத் தவஞ்செய்ய முயற்சி செய்வாருளெல்லாம் உயர்ந்தவனாவான். (8) தவஞ்செய்வோரையும் பசி முதலிய இடர் தீர்த்துத் தமது வழி

* பத்துப்பேர்-பிரமசாரி, வானப்பிரத்தன், சந்நியாசி, துறந்தார், தரித்திரர், ஆதரவின்றி வந்து செத்தவர், தென்புலத்தார், தெய்வம், புதிதாய்வந்தவர், சுற்றத்தார்.

யிலே நடத்தித் தானுந்தன்னுடைய தருமத்தினின்றுந்தவறாத இவ் வாழ்க்கையானது அத்தவஞ் செய்வாரது நிலையைப் பார்க்கினும் பொறுமை யுடையதாம். பொறுமையாவது: பிறருக்கு வந்தநோய் முதலிய இடையூறு தீர்த்தல். (9) இல்லறந் துறவறமென்னு மிரண்டறங்களுள்ளே நூல்களால் அறமென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே. மற்றைத் துறவறமோ என்றால் பிறரால் நிந்திக்கப்படுங் கூடாவொழுக்க மில்லாதிருந்தால் அதுவும் நன்மையாம். கூடா வொழுக்கம்: மாதர் போகம்.

௪. இல்லறத்தின் மறுமைப் பயன்.

(10) இல்லறத்தோடு கூடி வாழு முறைப்படி இவ்வுலகத்திலே வாழ்பவன் இவ்வுலகத்திலிருப்பவனாயினும் விண்ணுலகத்திலிருக்கிற தேவருள்ளொருவனாக வைத்து மதிக்கப்படுவான். இல்லறத்தை வழுவாது நடத்துகிறவன் பின்னே தேவனாய்ப் பிறப்பானென்பது நிச்சயம்.

௬-ஆம் அதிகாரம்.

வாழ்க்கைத் துணைநலம்.

அஃதாவது:—அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளது நன்மையாம்.

௧. நற்குண நற்செய்கைகளும் வரவுக்குத் தக்க செலவு செய்தலுஞ் சிறந்தன.

(1) இல்லறத்துக்குத் தக்க நற்குண நற்செய்கைகளை யுடையவளாகித் தன்னை விவாகஞ் செய்த கணவனது வரவுக்குத்தக்க வாழ்க்கையுடையவள் அவ்வில்லறத்துக்குத் துணையாவள். நற்குணங்களாவன: துறந்தவரை யுபசரித்தலும், வறியவரிடத்தே யருளுடைமையு முதலானவையாம். நற்செய்கைகளாவன: வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களறிந்து காப்பாற்றி வைத்தலும், உணவு சமைத்தல் வல்லமையு முதலியவையாம். வரவுக்குத் தக்க வாழ்க்கையாவது: கிடைத்த பொருளுக்குத் தக்கபடி செலவுசெய்தலாம்.

2. இல்வாழ்க்கைக்கு வேண்டுவேது மனையாளது குணமே யன்றி வேறில்லை.

(2) இல்லறத்துக்குத் தகுந்த நற்குண நற்செய்கைகள் மனையாளிடத்திலில்லையானால் அவ்வில்வாழ்க்கை யெவ்வளவு பெருமை யுடையதாயினும் அப்பெருமை யுடையதில்லை. (3) ஒருவனுக்கு மனையாள் நற்குண நற்செய்கையுடையவளா யிருந்தால் இல்லாத தொன்று மில்லை. அம்மனையாள், மேலே சொல்லிய குணங்க ளில்லாதவளானால் எல்லாமிருந்தாலும் இருந்ததாகப் பயன்படுவ தொன்றுமில்லை.

௩. கற்பின் சிறப்பு.

(4) கற்பென்னுங் கலங்கா நிலைமை யுண்டாயிருக்கப்பெற்ற மனையாளைப் பார்க்கினும ஒருவன் பெறுதற்குரிய பொருள்களுள் உயர்வாகிய பொருள்க ளெவை யிருக்கின்றன? ஒன்றுமில்லை.

௪. கற்புடையவள் வலிமை.

(5) பிற தெய்வத்தை வணங்காதவளாகித் தன் தெய்வ மாகிய கணவனை நித்திரைவிட் டெழுந்து வணங்குபவள் பெய் யென்று சொல்ல மழை பெய்யும்.

௫. கற்புடையவளது தற்புகழ்ச்சி.

(6) கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு தன்கணவனையும் உண்டி முதலியவற்றா லுபசரித்துத் தம் மிருவரிடத்தும் நன்மை யமைந்த புகழை நீங்காமற் காப்பாற்றி முன் சொல்லப்பட்ட நற்குண நற்செய்கைகளிலும் மறதி யில்லாத வளே மனையாளாவள்.

௬. தற்காத்தற் சிறப்பு.

(7) பெண்களைச் சிறையினாலே கணவர் காக்குங் காவல் என்ன பிரயோசனத்தைச் செய்யும்? அப்பெண்கள் தங்களுடைய கற்பாகிய காவலாலே காக்குங் காவலே முதன்மையான காவலாம். சிறை: மதிற்காவலும், வாயிற்காவலுமாம்.

எ. கணவனைப் பேணிய பெண்கள் தேவர்களாற் பேணப் படுவர்.

(8) *பெண்கள் தம்மைக் கொண்ட கணவரைப் பூசித்தல் பெறுவாரானால் தேவர்கள் வாழும் உலகத்திலே அத்தேவராற் செய் யப்படுஞ் சிறப்பினை யடைவர்.*

அ. தகுதி மிக்க புகழ் நீங்காமற் காவாதவழி யுண்டாகுங் குற்றம்.

(9) *கீர்த்தியை விரும்பிய மனையாள் இல்லாதவர்க்குத் தம்மை யிகழ்ந்து பேசும் பகைவருக்கெதிரே ஆண் சிங்கம்போலே நடக்கும் பெருமித நடையில்லை.*

௯. வாழ்க்கைத்துணைக் காவதோர் அணிகலம்.

(10) *மனையாளது நற்குண நற்செய்கைகள் ஒருவனுக்கு நன்மையாமென்று அறிந்தோர் சொல்லுவர். நல்ல புதல்வரைப் பெறுதல் அந் நற்குண நற்செய்கைகளுக்கு நல்ல ஆபரண மென்று சொல்லுவர்.*

எ-ஆம் அதிகாரம்.

புதல்வரைப் பெறுதல்.

அஃதாவது:—முனிவர் கடன் கேள்வியாலும், தேவர்கடன் வேள்வி யாலும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலாலும் அல்லது செலுத்தக்கூடாமையால் அக்கடன் செலுத்தற்பொருட்டு நல்ல மக்களைப் பெறுதலாம். கடனென்பது: கடமை; செய்யத்தக்கது.

௧. புதல்வரைப் பெறுதலின் சிறப்பு.

(1) *ஒருவன் பெறும் பேறுகளுள்ளே யறிய வேண்டியவைகளை யறிதற்குரிய புதல்வரைப் பெறுதலை யன்றி வேறு பேறுகளை நாம் மதிப்பதில்லை.*

௨. மக்களைப் பெற்றார் பெறும் மறுமைப்பயன்.

(2) *பிறராலே பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வரையொருவன் பெறுவானாயின் வினைவசத்தாலுண்டாகிற தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் ஆகிய எழு*

வகைப்பட்ட பிறப்பிலுந் துன்பங்கள் அவனை யடையாவாம். (3) தம்முடைய புதல்வரைத் தம்முடைய பொருளென்று அறிந்தோர் சொல்லுவார். ஏனெனில் அப்புதல்வர் சம்பாதித்த பொருள்கள் தம்மைக் குறித்து அப்புதல்வர் செய்யும் நல்வினையினாலே தம்மிடத்து வரும் ஆதலாலென்க.

ரு. இம்மைப் பயன்.

(4) பெற்றவருக்குத் தம்முடைய மக்களது சிறிய கைகளா லளையப்பட்ட சோறானது மதுரமிக்க அமிர்தத்தைப் பார்க்கினுமினிமையுடையதாயிருக்கும். (5) ஒருவனுடைய உடம்புக்கு இன்பமாவது தான்பெற்ற மக்களுடைய உடம்பைத் தொடுதலாம்; இஃதன்றி, அவன் காதுக்கு இனபமாவது அப்பிள்ளைகள் சொற்களைக் கேட்குதலாம். (6) தமது பிள்ளைகளுடைய குதலைச்சொற்களைக் கேளாதவரே குழலினிசை யினியது, வீணையி னிசையினியது என்று சொல்லுவர்.

சு. தந்தை கடமை.

(7) தகப்பனானவன் தன்புத்திரனுக்குச் செய்யும் நன்மையாவது கற்றவரது சபையிடத்து அக்கற்றவரினு மேலாயிருக்கக் கல்வியை யுடையவ னாக்குதலாம்.

ரு. தந்தையைப் பார்க்கினும் அவையத்தார் மைந்தனை மகிழ்வர்.

(8) தம்மக்க ளறிவுடையரா யிருத்தலானது தமக்கினியதாயிருத்தலைப்பார்க்கினும் பெரிய பூமியினிடத்து நிலைபெற்ற உயிர்களுக்கெல்லா மினியதாயிருக்கும்.

சு. தாய் மைந்தனை மகிழும் விதம்.

(9) தன் புத்திரனைக் கல்வி கேள்விகளாலே நிறைந்தோனென்று அறிவுடையோர் சொல்லக்கேட்ட தாயானவள் பெற்ற காலத்தினும் மகிழ்ச்சி யுடையவளாவள்.

எ. மைந்தன் கடமை.

(10) தன்னைக் கல்வியுடையவனாக்கிய தகப்பனுக்குப் புத்திரன் செய்யும் எதிர் நன்றியானது தன்னறிவையும் நல்லொழுக்கத்தையுங்கண்டவர் இவனது தகப்பன் என்ன தவத்தைச்செய்தானோவென்கிற சொல்லை யுண்டாக்குதலாம்.

அ-ஆம் அதிகாரம்.

அன்புடைமை.

அஃதாவது:—மேற்கூறிய மனைவி, புதல்வர் முதலாகிய சம்பந்த முடையவரிடத்து ஆசையுடையவனா யிருத்தல்.

க. அன்பினது உண்மை.

(1) *தம்மா லன்பு வைக்கப்பட்டவருடைய துன்பத்தைக் கண்ட இடத்தில் அன்பு வைத்தவருடைய கண்ணீரே யுள்ளேயிருக்கின்ற அவ்வன்பை வெளிப்படுத்திவிடும். ஆதலா லன்புக்கும் பிறரறியாம லடைத்துவைக்குந் தாழ்க்கோல் உண்டோ? இல்லை.*

உ. அன்பினது சிறப்பு.

(2) *அன்பில்லாதவர் எல்லாப் பொருள்களையுந் தமக்கே யுடைமையாக்கிக் கொள்ளுவர். அன்புடையவர் மற்றெல்லாப் பொருள்களோடு தம்முடம்பிலுள்ள எலும்பையும் பிறருக்குக் கொடுத்து உதவி செய்வர்.* அன்பு செய்தற்காகவே உயிர்களுக்கு மானிட சரீரம் வந்ததாம். ஏனென்றால் சரீரமில்லாம லுயிர் தனியே நின்று அன்பு செய்ய முடியாது ஆதலாலென்க. எலும்பைப் பிறருக்குக் கொடுத்து உதவி செய்தல் புறவுக்காகத் துலையேறிய சிபிச் சக்கரவர்த்தியிடத்தும் இந்திரனுக்காக முதுகெலும்பைக் கொடுத்த ததீசிமுனிவரிடத்துங் காண்க. இவ்விரண்டு சரித்திரங்களும் புறநானூறு 43-ஆம் செய்யுளினும் திருவிளையாடற்புராணம் இந்திரன் பழிதீர்த்தபடலம் 36-ஆம்செய்யுளினு மிருக்கின்றன. (3) *பெறுதற்குரிய மனிதருயிர்க்குச் சரீரத்தோடு தான் சேர்ந்த சம்பந்தத்தை யன்போடு பொருந்துதற்கு வந்தவழியின் பிரயோசனமாகு மென்று அறிந்தோர் சொல்லுவர்.* எனவே, உடம்போடு சேராவிட்டால் அன்பு செய்யக் கூடாதாகையால் அவ்வன்பு செய்தற்கே யிவ்வுடம்பின் றொடர்ச்சி யுண்டாகியதென்பதாயிற்று. (4) *ஒருவன் தனக்குச் சம்பந்தமுடைய ஒருவனிடத்துச் செய்யப்பட்ட அன்பானது பிறரிடத்தும் ஆசையுடையவனாகி யிருத்தலைச் செய்யும். அப்படியாசையுடையவனாயிருத்தலானது இவனுக்கு எல்லாருஞ் சிநேக*

முடையவனென்று சொல்லப்படுகிற அளவில்லாத சிறப்பைக் கொடுக்கும். (5) இந்நிலவுலகத்திலே இல்லறத்திலிருந்து இன்பத்தை யநுபவித்தவராகிப் பின்னர் தேவலோகத்திற் சென்று அடையப் படும் பேரின்பத்தை அன்புடையவராகி இல்வாழ்க்கையிலிருந்த முறையின் பிரயோசனமென்று அறிந்தவர் சொல்லுவர். (6) அன்பானது தருமத்துக்கே துணையாவதென்று தெரியாதவர் சிலர் சொல்லுவர; அம்மட்டோ? தருமத்துக்குத் துணையாவ தல்லாமல் கோபத்தை நீக்குதற்குந் துணையாகும். எப்படியென்றால் ஒருவனிடத்துப் பகையுண்டாகியபோது தன்னுள்ளத்திலே யுண்டாகிய கோபமானது அவனை நட்பாக நினைத்து அன்பு செய்தால் நீங்கிவிடுதலாலென்க; இஃதன்றி, மற்றொரு பொருளுங் கூறலாம். அஃதாவது: மனைவி மக்கள் குற்றஞ் செய்தபோது அவரை நல்வழிப்படுத்தும் பொருட்டு அவரிடத்துச் செய்யப்படுங் கோபத்துக்கும் அன்பு துணையாமென்பது.

உ. அன்பில்லாத வழி யுண்டாகுங் குற்றம்.

(7) வெயிலுக்கு முன்னே எலும்பில்லாத புழு முதலிய செந்துக்கள் சென்று கெடுதல்போலத் தருமக்கடவுளுக்கு முன்னே யன்பில்லாத உயிர்கள் சென்று கெடுதலடையும். (8) மனத்திலன்பில்லாத வுயிரானது இல்லறத்தோடு கூடி வாழ்தல் கடின நிலத்திலே பட்டமரமானது தளிர்க்க மாட்டாததுபோலப் பயன்படமாட்டாது. (9) இல்லறத்துக்கு அங்கமாய்ச் சரீரத்தினுள்ளேயிருக்கும் அன்பில்லாதவருக்கு வெளியேயிருக்கும் அங்கமாகிய இடம் பொருளேவல் முதலியவையிருந்தாலும் அவைகளால் யாதொரு பயனுமில்லை, (10) அன்பு முதலாயிருக்க அதைப்பற்றி நின்ற உடம்பே யுயிரிருக்கின்ற உடம்பாகும். அன்பைப்பற்றி நில்லாத வுடம்புகள் எலும்பைத் தோலால் மூடப்பட்ட வுயிரற்ற வுடம்புகளாம்; எனவே அன்பில்லாத வுடம்பு பிணமென்றதாயிற்று.

கூ-ஆம் அதிகாரம்.

விருந்தோம்பல்.

அஃதாவது:—மேலே சொல்லப்பட்ட அன்புடைய கணவனும் மனையாளுங்கூடி விருந்தினரை யுபசரித்தல்.

க. விருந்தினரைப் பாதுகாத்தலின் சிறப்பு.

(1) மனைவியுடன் காட்டினிடத்துச் செல்லாமல் வீட்டினிடத்தேயிருந்து பொருள்களைக் காப்பாற்றி வாழுஞ் செய்கை முழுவதும் விருந்தினரை யுபசரித்து உபகாரஞ் செய்தற் பொருட்டேயாம். (2) உண்ணப்படும் உணவுகள் அமிர்தமா யிருந்தாலும் தன்னிடத்தைத் தேடிவந்த விருந்தினர் தன் வீட்டின் புறத்திலிருக்கத் தானுண்ணுதல் கூடாத செய்கையாம்.

உ. விருந்தினரைக் காப்பவர் இம்மைக்கண் எய்தும்பயன்.

(3) தன்னை நோக்கி வந்த விருந்தினரைத் தினந்தோறும் உபசரித்து வருபவனுடைய இல்வாழ்க்கையானது தரித்திரத்தால் வருந்திக் கெடுதலடையமாட்டாது. (4) நன்மையுடைய விருந்தினரைக் காப்பவனது வீட்டினிடத்தே மனமகிழ்ந்து இலக்குமியானவள் வாழ்ந்து கொண்டிருப்பாள். நன்மையாவது: ஞானத்தினாலும் ஆசாரத்தினாலும் உயர்தல். (5) முன்னே விருந்தினரை உண்ணச்செய்து அவருண்டபின் பாத்திரத்திலே மிகுந்திருந்த உணவுகளை யுண்பவனுடைய விளைநிலம், உழுதல் முதலிய முயற்சியின்றித் தானே விளையும்.

ங. விருந்தினரைக் காப்பவர் மறுமைக்க ணெய்தும் பயன்.

(6) தன்னிடத்திலே வந்த விருந்தினரை யுபசரித்து உண்ணச்செய்து, அதன்பின் வரும் விருந்தினரை யெதிர் பார்த்து அவரோடு உண்பதற்குக் காத்திருப்பவன் மறு பிறப்பிலே தேவனாய்ப் பிறந்து அத்தேவருக்கு நல்ல விருந்தாளியாவான்.

ச. இம்மைப் பயனும் மறுமைப்பயனுந் தருதற்குக்காரணம்.

(7) விருந்தினரை யுண்ணச்செய்தலாகிய யாகத்தின் பிரயோசனம் இவ்வளவென்று சொல்லும் ஒரு அளவினையுடையதன்று. விருந்தினரது தகுதியளவே அந்தப் பிரயோசனத்தின்

அளவாம். ஆதலால் சற்பாத்திரங்களாகிய பெரியவருக்குக் கொடுக்கு முணவு சிறிதாயினும் அதன் பயன் பெரிதென்பது பெறப்பட்டது.

௫. விருந்தினரைக் காவாதவழி யுண்டாகுங் குற்றம்.

(8) விருந்தினரை நிலையில்லாத பொருளைக்கொண்டு உபசரித்தலாகிய யாகத்தின் பயனையடையும் அறிவு இல்லாதவர் மேற்கூறிய பொருளை வருந்திககாத்துப் பின்பு அதனையிழந்து யாதொரு ஆதாரமுமில்லாமற் போயினோ மென்பார். ஆதலால் விருந்தினரையுபசரித்தவர் தம் பொருளை யொருநாளுமிழக்கமாட்டா ரென்பதாம். (9) பொருளுடையரா யிருக்குங்காலத்துத் தரித்திரமாவது, விருந்தினரை யுபசரியாம லிகழும் அறியாமையே. அவ்வறியாமை அறிந்தோரிடத்திருக்க மாட்டாது. அறிவில்லாரிடத்தே யுண்டு.

௬. விருந்தினரைக் காப்பவருக்கு முதலாவது இனிய முகம் வேண்டும்.

(10) அனிச்சப் பூவானது மோந்து பார்த்தவிடத்து வாடிவிடும். விருந்தினரோ தம்மைக் கண்டவுடன் முகமலர்ச்சி காட்டாமல வேறுபட்டுப் பார்த்தவுடன் வாடுதலடைவர். இதனாலே ஆரத்திலே விருந்தினரைக் கண்டவுடன் முகமலர்ச்சி காட்டுதல் அவசியமாம். சமீபத்திலே வந்தவுடன் இன்சொற் சொல்லுதல்வேண்டும். அது கேட்டுச் சம்மதித்தால் உபசரித்தல் வேண்டும. (உபசரித்தல்: உணவாதிய கொடுத்தல்.)

௧௦-ஆம் அதிகாரம்.

இனியவை கூறல்.

அஃதாவது:—மனத்திலுள்ளமகிழ்ச்சியை வெளிப்படுத்துகிற இனிய சொற்களைச் சொல்லுதல்.

௧. இனிய சொல்லுக் கிலக்கணம்.

(1) இனிய சொற்களாவன: அன்போடு கலந்து வஞ்சகமில்லாதனவா யிருக்கின்ற தருமத்தினை யறிந்தவர்களுடைய வாய்ச்

சொற்களாம். (அன்போடு கலத்தலாவது: அன்புடைமையை வெளிப்படுத்தல்.)

உ. இனிய முகத்தோடு கூடிய இன்சொல் முன்னரே விருந்தினரை வசப்படுத்துதலின் விருந்து * புரப்பதன்கட் சிறந்தது.

(2) ஒருவரைக் கண்டவுடனே முகமலர்ச்சியுற்று அம்முக மலர்ச்சியுடன் இனியசொல்லையு முடையவனுவானெனில் அச்சொல்லானது மனமகிழ்ந்து வேண்டிய பொருளைக் கொடுப்பதைப் பார்க்கினும் நல்லதாகும். (3) தருமமானது ஒருவரைக் கண்டபோதே முகத்தால்விரும்பி இனிதாகப்பார்த்துப் பின் அவர் தம்மைச் சேர்ந்த போது மனத்துடனிருக்கிற இனிய சொற்களைச் சொல்லுதலினிடத்தே யுள்ளதாம். ஆதலால் இனிய சொல்லில்லாமல் எவ்வளவு கொடுத்தாலும் புண்ணியமில்லை யென்பதாயிற்று.

ங. இனியவை கூறுவார்க்கு இம்மைப் பயனெய்தும்.

(4) எல்லாரிடத்திலும் இன்பத்தை யதிகப்படுத்தும் இனிய சொற்களை யுடையவருக்குத் துன்பத்தை யதிகப்படுத்துந் தரித்திரங்கிடையாது. (5) ஒருவனுக்கு ஆபரணமாவது பெரியோரிடத்தே வணக்கமுடையவனுகி யெல்லாரிடத்திலு மினிய சொல்லை யுடையவனு யிருத்தலாம்; இவ்விரண்டு மல்லாமல் உடம்பிலே யணிந்திருக்கும் ஆபரணங்கள் ஆபரணங்க ளாகாவாம்.

ச. இனியவை கூறுவார்க்கு மறுமைப்பய னெய்தும்.

(6) பொருளினுலே பிறருக்கு நன்மையைத் தருஞ் சொற்களை யாராய்ந்து இனிமையுள்ளனவாக ஒருவன் சொல்லுவானுயின் அவனுக்குப் பாவங்கள் கெடத் தருமம் வளரும். இதனுலே கடினமான சொற்களைப் பேசலாகாதென்பதும், பேசினுற் பாவமுண்டாமென்பதும் பெறப்பட்டன.

ரு. இருமைப் பயனு மொன்முகப் பெறுதல்.

(7) பொருளினுலே பிறருக்கு நன்மையைக் கொடுத்து இனிமைக் குணத்தினின்றும் நீங்காத சொற்களானவை யொருவனு

* புரப்பது-காப்பது.

க்கு இம்மையிலே கீர்த்தியையுமுண்டாக்கி மறுமையிலே புண்ணியத்தையுங் கொடுக்கும். (8) பொருளினாலே பிறருக்கு வருத்தஞ் செய்யாத இனிய சொற்களானவை யொருவனுக்கு வருபிறப்பிலும் இப்பிறப்பிலு மின்பத்தைக்கொடுக்கும்.(இப்பிறப்பி லின்பமாவது: இன்சொல்லாலுலகம் தன் வசப்படுதலால் நல்லன வெய்திச் சுக மடைதல்.)

கூ. தீயசோற் கூறுதலா லுண்டாகுங் குற்றம்.

(9)பிறருடைய இனிய சொற்களானவை தனக்கு இன்பந் தருதலை யநுபவித்தறிபவன் பிறரிடத்துத் தான் பேசும்போது கடினமான சொற்களைப் பேசுவது என்ன பிரயோசனத்தைக் கருதியோ? (10) தருமமுண்டாகும் இனிய சொற்கள் தன்னிடத்திலிருக்க அச்சொல்லைச் சொல்லாமற் பாவமுண்டாகுங் கொடிய சொற்களை யொருவன் பேசுதல் இனிய கனிகள் தன்னிடத்திலிருக்க அவற்றைத் தின்னாமற் காய்களைத்தின்பதற்குச் சமமாகும்.

கக-ஆம் அதிகாரம்.

செய்ந்நன்றியறிதல்.

அஃதாவது:—தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாதிருத்தல்.

க. காரணமில்லாமற் செய்ததுங் காலத்தினற் செய்ததும் பிரயோசனங் கருதாது செய்ததுமாகிய உதவியின் பெருமை அளக்க முடியாது.

(1) தனக்கு முன்னொரு உதவியுஞ் செய்யாதிருந்த அன்னியனொருவனுக்குச் செய்தவுபகாரத்துக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையுங் கொடுத்தாலுஞ் சமானமாகமாட்டாது. (2)ஒருவனுக்கு ஆபத்து வந்தவளவிலே ஒருவன் செய்த உபகாரப் பொருளானது சிறிதாயிருந்தாலும் சமய நோக்கி இப்பூமியைப்பார்க்கிலும் பெரிதே யாகும். (3) தாம் செய்யுமுதவியைப் பெறுவோராலே தமக்குப் பின்வரும் பிரயோசனத்தைக் கருதாது அவருக்குத் தாம் செய்யு முபகாரத்தின் நன்மையானது கடலினும் பெரியதாகும்.

௨. மேற்கூறிய மூன்றுதவியும் அறிவுடையோர்க்குச் செய்த வழிப் பெரிதாம்.

(4) தமக்குத் தினையளவாகிய வுதவியை யொருவன் செய்தாலும் அவ்வுதவியைச் சிறியதென்று நினையாமல் பனை யளவு பெரியதென்று நினைப்பார் அப்படி நினைத்தலாலாகிய பிரயோசனத்தைத் தெரிந்த பெரியோர். (5)மேலே கூறிய செய்யாமற் செய்த வுதவியும் ஆபத்து வந்த காலத்துச்செய்த வுதவியும் தாம் செய்த வுதவியைப் பெற்றதாலே தமக்குப் பின்வரும் பயனை நினையாமற் செய்தவுதவியுமல்லாத வேறுவகையாற் செய்த வுதவிக்கு அளவு கூறினல் அவ்வுதவிக்குத் தக்கபடி சிறிது பெரிதென்று சொல்லக் கூடாது. அவ்வுதவியை யேற்றுக்கொண்டவரது குணமெவ்வளவோ அவ்வளவே யதற்களவுடையதாகும்.

௩. நன்றி செய்தாரது நட்பை விடலாகாது.

(6) தனக்குத் துக்கம் வந்தகாலத்தினிலே யுதவிசெய்தவரது சிநேகத்தை யொருவன விடாதிருக்க வேண்டும். அதுபோலவே யறிவொழுக்கங்களிற் குற்ற மில்லாத பெரியோர்களுடைய சிநேகத்தையு மறவாதிருக்கவேண்டும். ஏனென்றால் அது மறுமைக்குப் பயன்தருமாதலாலென்க.(7)நல்லவர்கள் தமக்குவந்த துன்பத்தைக் கெடுத்தவருடைய சிநேகத்தை வினைபயன் விடாது பற்றப்படும் தம்முடைய எழுவகைப் பிறப்பிலு மறக்கமாட்டார்கள்.

௪. மறவாததும் மறப்பதும் இன்னது, இன்னதென்பது.

(8) ஒருவன் தனக்கு முன்செய்த நன்மையை மறந்து விடுவது தருமமல்ல. அவன் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறந்து விடுவது தருமமாகும்.

௫. ஒருவன் செய்த நன்றல்லதை மறக்கும் உபாயம்.

(9) தமக்கு முன்னொரு நன்மையைச் செய்தவர் பின் கொலை செய்தாற்போலுங் கேடுகளைச் செய்தாராலும் அவர் முன் செய்த ஒருநன்றியை நினைக்க அக்கேடுகளெல்லா மில்லையாகும்.

௬. செய்ந்நன்றி மறத்தலின் கொடுமை.

(10) எந்தத் தருமங்களைக் கெடுத்தவர்களுக்கும் பாவத்தினின்று நீங்கும் வழியுண்டு. ஒருவன் செய்த வுபகாரத்தைக் கெடுத்த மனிதனுக்குப் பாவத்தினின்று நீங்கும் வழி கிடையாது.

கஉ-ஆம் அதிகாரம்.

நடுவு நிலைமை.

அஃதாவது:—பகைவர், அயலோர், சிநேகர் ஆகிய இம்மூவகையோ ரிடத்தும் தருமத்தினின்றுந் தவறுமல் ஒப்ப நிற்கும் நிலைமை.

க. நடுவு நிலைமையின் சிறப்பு.

(1) பகைவர், அயலோர், நட்பினரென்னும் மூன்று பிரிவின ரிடத்துந் தன்னுடைய நீதியை விடாமல் நடப்பாளுயின் ஒருவ னுக்கு அவ்விதம் நடப்பதாகிய நடுவு நிலைமையென்று சொல்லப் படுமொரு தருமமுமே நல்லதாகும்.

உ. நடுவுநிலைமையால் வந்த செல்வம் நன்மையைத் தரும், மற்றைச் செல்வந் தீமையைத் தரும்.

(2) நடுவுநிலைமை யுடையவனது செல்வமானது பிறருடைய செல்வம்போல் அழியாமல் அவன் புத்திரருக்கும் இன்பந்தருமுறுதி யுடையதாயிருக்கும். (3) தீங்கைத் தருதலல்லாமல் நன்மையைக் கொடுத்தாலும் நடுவுநிலைமை நீங்கலால் வந்த செல்வத்தை அப் பொழுதே யொருவன் விட்டு விடவேண்டும். (நடுவுநிலை நீங்கலால் வந்த செல்வமாவது: பொய், களவு முதலியவற்ருற் கிடைத்த பொருளாம்.)

ங. தக்கவரையுந் தகாதவரையும் அறியும் வழி.

(4) இவர் நடுவுநிலைமை யுடையவர், இவர் நடுவுநிலைமை யில்லாதவரென்னும் விசேடம் அவரவருடைய நல்ல புத்திரர் இருப் பினுலும் இல்லாமையினுலும் அறியக்கூடும்.

ச. கேடுவராமை காரணமாகவும் செல்வம் வருங்காரணமாக வும்நடுவு நிலைமை தவறலாகாதென்பதும், தவறுதல் கேடு வருவத ற்குக் காரணமென்பதும், தவருதவன் தாழ்வு செல்வமென்பதும்.

(5) தீவினையினுலே கேடும் நல்வினையினுலே ஆக்கமும் எல்லாருக்கு முன்னமே யமைந்திருக்கின்றன; அதை யறிந்து கேடு வராமற் றடுத்தற் பொருட்டும் ஆக்கம் வருதற் பொருட்டும் மன த்திலே சாய்தலில்லாம லிருத்தலே யறிவாலுயர்ந்தோர்க்கு அழ காம். சாய்தலாவது: ஒரு காரியாக நியாயந்தவறி நிற்றல். (6)ஒரு

வன் தன்னுடைய மனமானது நியாயந்தவறிப் பட்சபாதங்களைச் செய்ய நினைக்குமானால் அந்நினைப்பு தான் கெட்டுப் போவேனென்னும் அடையாளமாக அறியவேண்டும். (7) இஃதறிந்து நடுவு நிலைமைதவறாமல் தருமத்தின் வழி நடந்தவனது வறுமையை வறுமையாக உயர்ந்தோர் நினைக்கமாட்டார். எனவே, அவ்வறுமை நன்மையையே தருமென்றறிக.

ரு. ஒரு பட்சம் சாராத மனத்தோடு தரும மிருந்தபடி சொல்லுதல் நடுவுநிலைமை என்பதும், ஒரு பட்சஞ் சார்ந்த மனத்தோடு தரும மிருந்தபடி சொல்லுதல் நடுவுநிலைமை யன்றென்பதும்.

(8) முன்னே தன்னைச் சமமாகச் செய்துகொண்டு அதன் பின்னே தன்னிடத்து வைக்கப்பட்ட பொருள்களை நிறுப்பதாகிய துலாக்கோல் போலத் தம்மை நேர்வழியிலே நிறுத்திக்கொண்டு தம்மிடத்திலே வந்து சொல்லும் வாதி பிரதிவாதிகள் வழக்கை ஒரு பக்கத்திலே கூட்டிக்குறைத்துப் பேசாமல் இருவருக்கும் பொதுவாகப் பேசித் தீர்ப்புச்சொல்லுதல் அறிவாலுயர்ந்தோர்க்கு அழகாகும். (9) நடுவு நிலைமையாவது: உயர்ந்தோர் தாம் சொல்லுஞ் சொல்லினிடத்தே கோணுத லில்லாமையாம். அதுவும் தம்மனத்தினிடத்தே கோணுத லில்லாமையை யுறுதியாகப் பெற்றால்,எனவே, மனத்திலொன்று வாக்கிலொன்று சொல்லுவார் சொல் நடுவு நிலைமை யாகா தென்பது பெறப்பட்டது.

சு. நடுவு நிலைமை யாகும் விதம்.

(10) பிறர்பொருளையுந் தம்பொருளைப்போலச் சீர்தூக்கிக் காத்து வியாபாரஞ்செய்தால் அங்ஙனஞ்செய்வார்க்கு அச்செய்கையானது நல்ல வியாபாரமாகும். (சீர்தூக்கிக் காத்தலாவது: வாங்குவது அதிகமுங் கொடுப்பது குறைவுமாகாமல் ஒப்ப நாடிச்செய்தல், இதுவும் நடுவுநிலைமையாம்.)

௧௩-ஆம் அதிகாரம்.

அடக்கமுடைமை.

அஃதாவது:—காயமும் வாக்கும் மனமும் தீயவழியிலே செல்லாமல் அடங்குதலுடையனா யிருத்தல்.

௧. பொது வகையால் அடங்குஞ் சிறப்பு.

(1) அடக்கமாகிய தருமமானது ஒருவனைத் தேவருலகத்திலே கொண்டுபோய்விடும். அடக்க மில்லாமையாகிய பாவமானது தாங்குதற் கரிய நரகத்திலே செலுத்திவிடும். (2) இத்தகைய அடக்கத்தை யொருவன் உறுதிப்பொருளாகக் காக்கவேண்டும். இதைப் பார்க்கினு மேலான செல்வம் மனிதருயிர்க்கு வேறில்லை. (3) ஆதலாலே அடங்கி நடத்தலே நமக்கறிவாவதென்றறிந்து நல்வழியிலொருவன் அடங்கப்பெற்றால் அவ்வடக்கமாவது பெரியோராலறியப் பட்டு அவனுக்கு மேன்மையைக் கொடுக்கும். (இல்வாழ்வானுக்கு அடக்கமாவது: காயமும் வாக்கும் மனமு மவன் வசப்படுதலாம்.) (4) இல்வாழ்க்கையாகிய தன் வழியிலே வேறுபடாது நின்று அடங்கினவனுடைய உயர்ச்சியானது மலையினும் மிகப்பெரியதாகும. (வேறுபடாது நின்றடங்குதலாவது: ஐம்புலன்களையு மநுசரித்துக் கொண்டிருந்தே யடங்குதல்.) (5) பெருமையில்லாமலடங்குதல் யாவருக்குஞ் சமமாக நன்றாகும். ஆனாலும் அங்ஙனம் அடங்குவாரெல்லாருள்ளுஞ் செல்வவான்களுக்கே யவ்வடக்கமானது வேறொரு செல்வமாகத்தோன்றுந் தகுதியுடையதாம். எப்படியென்றால் செல்வமில்லாதவர் அடங்கி நடந்தால் அதையெடுத்துப் பேசமாட்டார். செல்வமுடையவர் அடங்கி நடந்தால் இவ்வளவு பெருஞ் செல்வமுடையார் எவ்வளவு பணிவாக நடக்கின்றாரென்று எல்லாருமெடுத்துப் பேசி நன்கு மதிப்பார். அப்பொழுது அச்செல்வவான்களுக்குச் செல்வத்தாலுண்டாகுமகிழ்ச்சியைப் பார்க்கினும் பெருமகிழ்ச்சி யுண்டாகும். ஆதலால் வேறொரு செல்வமாக அடக்கமுடைமை தோன்று மென்றறிக.

௨. * மெய் யடக்கம்.

(6) ஒரு பிறப்பினிடத்தே கால் நான்குந் தலை ஒன்றுமாகிய ஐந்து அவயவங்களையுந் தன்னுள்ளே யடக்கும் ஆமையைப்

---

* மெய் - உடம்பு.

போல மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐம்பொறிகளை யொருவன் தன்னுள்ளடக்க வல்லவனானால் அவனுக்கு அவ்வல்லமையானது ஏழு பிறப்பினிடத்தும் உறுதியாகிய காவலாயிருக்கும்.

ங. * வாக்கின் அடக்கம்.

(7) ஒருவர் காக்கவேண்டு மெல்லாவற்றையுங் காக்கமாட்டாராயினும் நாவொன்றையேனுந் தவறாமற் காக்கவேண்டும். அதைக் காவாது விட்டாரானால் சொற்குற்றத்திலே யகப்பட்டுத் துன்பத்தையடைவர். (காத்தலாவது: சொற்குற்றம் வரப் பேசாதிருத்தலாம்.) (8) தாம் பேசுந் தீயசொற்களது பொருள்களாலே பிறருக்கு வரும் பிரயோசனந் தம்மிடத்திலே யொன்றாயினும் உண்டாகுமானால் பிறதருமங்களாலாகிய நன்மை தமக்குத் தீமையாகிவிடும். (தீயசொல்: பொய், கொடுஞ்சொல் முதலியவையாம்.) (9) ஒருவனை யொருவன் நெருப்பினாலே சுட்ட புண்ணானது சரீரத்திலிருந்தாலும் மனத்தினிடத்தே யப்பொழுதே மாறிவிடும். நாவினாலே தீய சொற்களாலே சுட்ட தழும்பானது அம்மனத்திலே எப்பொழுதும் ஆறமாட்டாது.

ச. மன அடக்கம்.

(10) கோபத்தை மனத்திலே வரவொட்டாமற் காத்துக் கல்வியுடையவனாகி யடங்குதலில் வல்லவனாயிருப்பவனது சமயத்தைத் தருமதேவதை யவனைச் சேரும் வழியிலே நுழைந்து பார்த்துக்கொண்டிருக்கும்.

கச-ஆம் அதிகாரம்.

ஒழுக்கமுடைமை.

அஃதாவது:— தங்கள் தங்கள் வருணாச்சிரமங்களுக்குச் சொல்லப்பட்ட ஆசாரத்தை யுடையவராகி யிருத்தல்.

க. ஒழுக்கத்தின் சிறப்பு.

(1) எல்லாருக்கும் ஆசாரமானது சிறப்பைத் தருதலால் அவ்வாசாரத்தைத் தம்முயிரைப் பார்க்கினும் காப்பாற்றவேண்டும்.

* வாக்கு - சொல்.

(2) பலதருமங்களையு மாராய்ந்து, இவற்றுள், இம்மை மறுமைஇரண்டுக்குந் துணையாவது எதுவென்று மனத்தை யடக்கி யறிந்தாலுந் துணையாய் நிற்பது அவ்வாசாரமே யாதலால், அதனை ஒருவிதத்தாலுங் கெடாமற் பேணி, வருந்தப் பட்டாயினுங் காக்கவேண்டும்.

உ. ஒழுக்கமுள்ள இடத்து உண்டாகுங் குணமும், அஃதில்லாத இடத்து உண்டாகுங் குற்றமும்.

(3) எல்லார்க்குந் தங்கள் தங்களுடைய குலத்துக்கேற்ற ஆசாரமுடைமையானது குலமுடைமையாகும்; அவ்வாசாரத்தினின்றுந் தவறுதலானது தாழ்ந்த குலமாகிவிடும். எனவே, ஆசாரந் தவறாமை உயர்ந்தபிறப்பாய் விடுமென்ப தாயிற்று. (4) பார்ப்பான் தான் கற்ற வேதத்தை மறந்துவிட்டானாலுங் குலங்கெடாமையினாலே பின்னும் ஓதிக்கொள்ளலாகும். அவனது ஆசாரங் குறைந்து போனால் அவன குலம் கெட்டு விடும். அவனுக்கே அப்படியானால் மற்றவர்களுக்குச் சொல்லவேண்டுமோ? ஆதலால் எல்லாச் சாதியாரும் ஒழுக்கத்தைக் குறையவிடலாகாது. (5) பொறாமையுடையவனிடத்திலே செல்வமானது இல்லாமற் போதல் போல ஆசாரமில்லாதவனிடத்தே உயர்குலமில்லாமற்போய்விடும். (6) ஒழுக்கந் தவறுதலாலுண்டாகும் இழிகுலம் ஆதலாகிய குற்றமுண்டாதலைத் தெரிந்து மன வலிமையுடையவர் அவ்வொழுக்கத்தினின்றுங் குறைவுபடமாட்டார். (7) ஒழுக்கத்தினாலே எல்லாரு மேன்மை யடைவர்; அவ்வொழுக்கத்தினின்றுந் தவறினவர் தாம அடைதற்குரிய தல்லாத நிந்தையை யடைவர். (அஃதாவது: பகையினாலே ஒருவர் பொய்யாகத் தம்மேற் சுமத்திய பழிச்சொல.)

ங. ஒழுக்க மில்லாமையாற் பின்வருங் குற்றம்.

(8) ஒருவனுக்கு நல்ல ஆசாரமானது தருமத்துக்குக் காரணமாகும். தீய ஆசாரமானது இம்மை மறுமை இரண்டிலுந் துன்பத்தைக் கொடுக்கும்.

ச. சொல்லாலுஞ் செயலாலும் வரும் ஒழுக்கங்கள்.

(9) நல்லொழுக்கமுள்ளவர்க்கு மறந்துந் தீயசொற்களைச் சொல்ல முடியாவாம். தீயசொற்களாவன: பிறர்க்குத் தீங்கைத்

தரும் பொய்முதலான சொற்கள்; இச்சொற்கள் பேசுதலும் ஒழுக்க விரோதமாம். (10) உயர்ந்தாரோடு பொருந்த நடத்தலைக் கல்லாதவர், பலநூலைக் கற்றாராலும் விவேகமில்லாதவ ராவார். (உயர்ந்தாரோடு பொருந்த நடத்தலாவது: அவரெப்படி நடந்தாரோ அப்படி நடத்தலாம்.)

கரு-ஆம் அதிகாரம்.

பிறனில் விழையாமை.

அஃதாவது:—காம மயக்கத்தினாலே அன்னியனுடைய மனைவியை விரும்பாதிருத்தல்.

க. பிறன்மனையாளை விரும்புவானிடத்து உண்டாகுங் குற்றம்.

(1) அன்னியனுக்குச் சொந்தமாகிய மனைவியை இச்சித்து நடக்கின்ற அறியாமையானது பூமியினிடத்துத் தரும நூலையும் பொருள் நூலையும் ஆராய்ந்தறிந்த பெரியோரிடத்திற் கிடையாது, இதனால், தருமமும் பொருளும் பிறன் மனைவியிடத்து விவசாரஞ் செய்தவனிடத்து இல்லாமற் போமென்பதாயிற்று. (2) பாவத்திலே நின்றவரெல்லாருள்ளும் விவசாரங் காரணமாகப் பிறனுடைய தலைவாயிலிலே அவன் மனையாளை இச்சித்து நின்றவர்போல மூடரில்லையாம். (3) சந்தேகமில்லாமல் தம்மை நல்லவரென்று அறிந்தவருடைய மனைவியினிடத்தே விவசாரமாகிய பாவஞ் செய்தலை விரும்பி நடப்பவர் உயிருடையவரா யிருந்தாலுஞ் செத்தவரே யாவர். (4) எவ்வளவு பெருமையுடையவரா யிருந்தாலுந் தமக்கு வருங் குற்றத்தைச் சிறிதாயினும் உணராமல் பிறனுடைய மனையாளிடத்தே ஆசைகொண்டு செல்லுதல் அவருக்குப் பாவமாய் முடியும். (5) இவளைச்சேர்தல் இலேசென்று நினைத்துப் பிறன் மனைவியிடத்தே செல்லுவோன் அழியாமல் எக்காலமும் நிலைநிற்பதாகிய குடிப்பழியை யடைவான். (6) இம்மட்டோ? அவனிடத்துப் பகையும், பாவமும், பயமும், மேற்கூறிய குடிப்பழியுமாகிய நான்கும் எப்போதும் நீங்காவாம்.

உ. பிறன்மனையாளை விரும்பாதவனிடத்து உண்டாகும் குணம்.

(7) அன்னியனுடைய ஆளுகைக்குள் அவனுக்குரிமை பூண்டு நிற்பவளாகிய மனையாளது இன்பத்தை விரும்பாதவன் தருமமாகிய இயல்போடு கூடி இல்வாழ்வானென்று சொல்லப்படுபவனாவான். (8) அன்னியனுடைய மனைவியை மனத்தினும் நினையாத பெரிய ஆண் தன்மையானது அறிவாலுயர்ந்தோர்க்குந் தருமமாகும்; அம்மட்டோ? நிறைந்த நல்லொழுக்கமுமாகும். பெரிய ஆண் தன்மை என்றதனால் இது எல்லாராலுஞ் செய்யமுடியாதென்பதாயிற்று. (ஆண் தன்மை-வீரம்.) (9) பயத்தைத் தருங் கடலாற் சூழப்பட்ட உலகத்தினிடத்தே சகல நன்மைகளையும் பெறுதற்குரியவர் யாரென்றால், அன்னியனுக்குரிய மனையாளது தோளைத் தழுவாதவரேயாம். (10) ஒருவன் தனக்குத் தருமத்தை உரிமையுடையதென்று அங்கீகரியாதவனாகிப் பாவங்களைச் செய்வானாலும் பிறனுக்குச் சொந்தமானவளுடைய காம இன்பத்தை விரும்பாதிருந்தானால் அது நன்மையைக் கொடுக்குமென்பதாம்.

கக-ஆம் அதிகாரம்.

பொறையுடைமை.

அஃதாவது:—காரணம் பற்றியாவது, அறியாமையினாலாவது ஒருவன் தம்மிடத்துத் தீங்கு செய்த இடத்துத் தாமும் அத்தீங்கை அவனுக்குச் செய்யாமற் பொறுத்த லுடையரா யிருத்தல்.

க. பொறையுடைமையின் சிறப்பு.

(1) தன்னை வெட்டுவோரைக் கீழே விழாமற் சுமப்பதாகிய பூமியைப்போலத் தம்மைஇகழ்ந்து பேசுவாரைப் பொறுத்துக் கொள்ளுதல் முதன்மையான புண்ணியமாம். (2) ஒருவன் செய்த குற்றத்தைத் தன்னாலேயவனைத் தண்டிக்கக்கூடிய காலத்திலும் பொறுத்துக்கொள்ள வேண்டும். அப்படிப் பொறுப்பதைப் பார்க்கிலும் அகுற்றத்தை அவன் செய்த அப்பொழுதே மறந்துவிடுதல் மிக நலலது. ஏனென்றால்? பொறுத்தல் காரணமாகக கடவுள் அவனைத தண்டிக்கக கூடும். அத்தண்டனைக் கிடமில்லாமற் செய்த புண்ணிய மெய்துதலாலென்க. (3) ஒருவனுககு வறுமை

யுள் வறுமையாவது, விருந்தினரை யேற்றுக்கொள்ளாமல் நீக்குதலாம். அதுபோலவே வல்லமையுள் வல்லமையாவது அறியாமையினாலே தீமை செய்தவரைப் பொறுத்துக்கொள்ளுதலாம். (4) எல்லாவற்றாலும் நிறையுடையவனாயிருத்தல் தன்னைவிட்டு நீங்காமையை விரும்புவானானால் அவன் பொறுமையுடையவனாயிருக்கையை அழியாமற் காப்பாற்றி வரவேண்டும்.

௨. பிறர் செய்யும் தீமையைப் பொறுத்தல்.

(5) பிறர் தமக்குத் தீங்கு செய்த இடத்து, அத்தீங்கைப் பொறுத்துக்கொள்ளாமல் அவரை வருத்தப்படுத்தினவரை அறிவுடையோர் ஒரு பொருளாக நினைக்கமாட்டார். அத்தீங்கைப் பொறுத்துக்கொண்டவரைப் பொன்னைப்போல இடைவிடாமல் மனத்தில் வைத்துக்கொள்ளுவர். (6) இவ்விதம் பொறுத்துக் கொள்வார்க்கு உலகமழியுமட்டும் கீர்த்தியிருக்கும். பொறுத்தலில்லாமல் தாமுமவருக்குத் தீங்கு செய்வாரானால் செய்த ஒரு நாளைக்கு மட்டு மின்பமாம்; இவற்றுள், எது பெரிதென்று கவனிக்கவேண்டும். (7) தன்னிடத்துச் செய்யத் தகாத தீமைகளை அயலார் செய்தாலும் இத்தீமை செய்தவர் மறு பிறப்பிலே துன்பத்தை யடைவாரேயென்று வருந்தித் தானுமவருக்குத் தருமமாகாத கொடிய செய்கையைச் செய்யாதிருத்தலே நல்லதாம். (8) பலவிதமான கெருவத்தால் தம்மிடத்துத் தீயவைகளைச் செய்தவரைத் தாம் தம்முடைய பொறுமையினாலே அவரை வென்று விடவேண்டும்; இதனாலே தீமை செய்தவனுக்குத் தீமை செய்வார் ஒருகால் தோற்றாலுந் தோற்பர். பொறுத்துக்கொண்டால் அவனை வென்றே விடுவாரென்பதாயிற்று.

௩. பிறர் சொல்லிய குற்றங்களைப் பொறுத்தல்.

(9) தீயவரது வாயினுண்டாகுந் தீயசொற்களைப் பொறுத்துக்கொள்பவர் இல்வாழ்க்கையி லிருந்தாலுந் துறவிகளைப்போலப் பரிசுத்த குணமுடையவ ராவார். (10) விரதங்களினாலே உணவை நீக்கித் தன்னையடைந்த பசி முதலிய நோயைப் பொறுப்பவர் எல்லோரினும் பெரியவராவார்; அவரும் தம்மை அயலார் நிந்தித்துப் பேசுந் துன்பந் தருஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்பவருக்குச் சமானமாக மாட்டார்.

கஎ-ஆம் அதிகாரம்.

அழுக்காறாமை.

அஃதாவது:—பிறருடைய செல்வ முதலானவை கண்டவிடத்துப் பொறாமைப் படாதிருத்தல்.

க. பொறாமை யில்லாமையினது குணம்

(1) ஒருவன் தன் மனத்தினிடத்தே பொறாமையாகிய குற்றம் இல்லாத அறிவோடு கூடிய தன்மையைத் தனக்கு முன்னே சொல்லப்பட்ட ஒழுக்கத்தின் வழியாகக் கொள்ளவேண்டும். (2) யாரிடத்தும் பொறாமை வையாதிருத்தலை ஒருவன் பெறுவனானால் அதைப்போல அவனடையும் பெரிய பேறுகளுக்குள்ளே வேறொன்றுமில்லையாம்.

உ. பொறாமை யுடைமையினது குற்றம்.

(3) மறுமைக்குத் தருமத்தையும் இம்மைக்குச் செல்வத்தையும் தனக்கு வேண்டாதவ னென்று சொல்லப்படுவானெவனென்றால் அன்னியனுடைய செல்வத்தைக் கண்டவுடனே சந்தோஷப் படாமல் பொறாமைப் படுபவனேயாம். (4) பொறாமைப்படுந் தீய வழியினாலே தமக்கு இம்மை மறுமையிலுந் துன்பமுண்டாவதை யறிந்து அறிவுடையோர் பொறாமையினாலே தருமமல்லாதவைகளைச் செய்யமாட்டார். தரும மல்லாதவை: செல்வம், கல்வியுடையவருக்குத் தீங்கு நினைத்தலும், சொல்லலும், செய்தலுமென வுணர்க. (5) பொறாமையானது பகைவரில்லாதிருந்தாலுங் கேட்டைத்தருவது. ஆதலால் அப்பொறாமை யுடையவருக்குக் கேட்டைத் தருவதற்கு வேறு பகைவர் வேண்டாம்; அப்பொறாமையே போதுமானதா யிருக்கிறது. (6) ஒருவனாற் பிறருக்குக் கொடுக்கப்படும் பொருளைக் குறித்துப் பொறாமைப் படுவானது சுற்றத்தார் உடுக்கப் படுவதாகிய ஆடையும் உண்ணப் படுவதாகிய உணவுப் பொருளுங் கிடையாமற் கெட்டுப் போவார். பொறாமை யுடையவர் சுற்றத்தாரே கெடுவாரென்றால், அவர் கெடுவாரென்பது சொல்லவும் வேண்டுமோ? (7) பொறாமையுடையவனை இலக்குமியானவள் தானும் பொறாமைப்பட்டு அவனைத் தன்னுடைய தமக்கையாகிய மூதேவிக்குக் கொடுத்துத் தான் அவனைவிட்டு நீங்கிவிடுவாள். (8) பொறாமையென்று சொல்லப்பட்ட ஒப்பற்ற பாவியானவன் தன்னை வைக்

திருக்கப் பட்டவனை இம்மையிலே அவனுடைய செல்வத்தைக் கெடுத்து மறுமையிலே நரகத்திலே தள்ளிவிடுவான்.

௫. பொறாமை யுடைமையினது குற்றமுங் குணமும்.

(9) பொறாமையுள்ள மனத்தையுடையவனது செல்வமும், பொறாமையில்லாத மனத்தையுடையவனது தரித்திரமுங் கண்டால், அறிவுடையாரால் அவையிரண்டும் ஆராய்ந்து பார்க்கப்படும். ஆராய்ந்து பார்த்தலாவது: பொறாமையுடையோர்க்கு ஆக்கமும், பொறாமை யில்லாதவர்க்குத் தரித்திரமும் வருவதற்கு நியாயமில்லை. ஆதலால் இவ்விதம் மாறி வநததற்குக் காரணம் பழவினையென்றறிதலாம். (10) பொறாமைப்பட்டு விருத்தியாயினவரும் பொறாமைப் படாமலிருந்து விருத்தியிலிருந்து நீங்கினவரு மில்லை. ஆதலால் ஒருவிதத்திலும் பொறாமையொருவனுக்குக் கூடாதென்பதாயிற்று.

௧௭-ஆம் அதிகாரம்.

வெஃகாமை.

அஃதாவது:—பிறர் பொருளைக் கிரகிப்பதற்கு நினையாதிருத்தல்,

௧. பிறர் பொருளை விரும்புதலின் குற்றம்.

(1) பிறருக் குரிய பொருளை எடுத்துக் கொள்ளுதல் நமக்குத் தருமமல்லவென்னும் நியாய மில்லாமல் அவருடைய நல்ல பொருளை அபகரித்தற்கு விரும்பினால் அவ்விருப்பமானது அபகரித்தவனுடைய குடியைக் கெடுத்துப் பல குற்றங்களையும் அப்போதே அவனுக்குக் கொடுத்து விடும். (நல்ல பொருளாவது: தருமவழியால் வந்த பொருள்.) (2) ஒருவன் பொருளுக்கு மற்றவ னுரியவனல்லனென்னும் நீதியில்லாமையாகிய பாவத்துக்குப் பயப்படுவோர், பிறர் பொருளை அபகரித்தலினாலே தமக்கு வரும் பிரயோசனத்தை விரும்பிப் பழியினிடத்தே பொருந்துந் தீச் செயல்களைச் செய்ய மாட்டார். (3) நிலையுடையதாகிய பேரின்பத்தை இச்சிப்பவர் பிறரிடத்தே அபகரிக்கப்பட்ட பொருளினாலே தாமடைவதாகிய நிலையில்லாத சிற்றின்பத்தை விரும்பித் தருமமல்லாத செயல்களைச் செய்

யார். (4) ஐம்புலன்களையுஞ் செயித்த குற்ற மில்லாத அறிவுடையோர் தாம் வறுமையுடையோ மென்று நினைத்து அதை நீக்குதற்காகப் பிறர் பொருளை விரும்புதல் செய்யார். (5) பொருளை விரும்பி எல்லாரிடத்தும் அறிவோடு பொருந்தாத செயல்களை யறிவுடையோர் செய்வாராகில் நுட்பமானதாகி எல்லா நூல்களிலும் பழகிய அவர் அறிவானது என்ன பிரயோசனத்தை யுடையதாம்.? (6) துறவறத்தை விரும்பி இல்லறமாகிய வழியிலே நின்றவன் பிறர் பொருளை விரும்பி அப்பொருளை வருவிக்கும உபாயங்களாகிய குற்ற வழிகளை நினைத்தலால் கெட்டுப் போவான். நினைத்தலாலே கெடுவானென்றால் செய்தலாலே கெடுவானென்பது சொல்ல வேண்டுவதில்லை. நினைத்தலும் செய்தலோ டொக்கு மென்பதே அறிவுடையோர் துணிவு. (7) பிறர் பொருளை விரும்பிக் கொண்டு அப்பொருளாலுண்டாகும் பெருக்கத்தை வேண்டாமலிருக்க வேண்டும். ஏனென்றால், பின்னர் அப்பொருளை அநுபவிக்கும போது அப்பெருக்கத்தின் பயன் நன்றாக மாட்டாது. ஆதலாலெனக.

௨. பிறர் பொருளை விரும்பாமையின் குணம்.

(8) குறைந்து போகுந் தன்மையுடைய செல்வத்துக்குக் குறையாதிருக்குங் காரணம் எதுவென்றொருவன் ஆராய்ந்து பார்த்தால், பிறன் விரும்புகின்ற அவனுடைய சொந்தப் பொருளைத் தான் ஆசைப்படாதிருத்தலேயாம். (9) இது தருமமென்றறிந்து பிறர் பொருளை இச்சியாத அறிவுடையவரை இலக்குமியானவள் அவரைச் சேருதற்கு உபாயத்தை யறிந்து அவ்வுபாயத்தினாலே வந்து சேருவள்.

௩. பிறர் பொருளை விரும்புதலுமையின் குற்றமுங்குணமும்.

(10) ஒருவன் தனக்குப்பின் விளையுங் கேட்டை நினையாமல் பிறன் பொருளை அபகரிக்க நினைப்பானால் அந்நினைப்பானது அவனுக்கு நாசத்தை யுண்டுபண்ணும். அப்பொருளை அபகரிக்க நினையாதிருத்தலாகிய செருவமானது வெற்றியைக் கொடுத்துக் கொண்டிருக்கும்.

கக-ம் அதிகாரம்.

புறங்கூறாமை.

அஃதாவது:— காணாத இடத்தே பிறரை இகழ்ந்து பேசாதிருத்தல்.

க. புறங்கூறாதிருத்தலின் நன்மை.

(1) ஒருவன் தருமமென்று வாயினாற் சொல்வது மில்லாமற் பாவங்களைச் செய்தாலும் அன்னியரைக் காணாத இடத்தே அவரை இகழ்ந்து பேசமாட்டானென்று சொல்லும்படி நடந்து கொள்ளுதல் நல்லதாம்.

உ. புறங்கூறுதலின் கொடுமை.

(2) தருமமென்ப தொன்றில்லையென்று அழித்துப்பேசிப் பாவங்களைச் செய்தலைப் பார்க்கினும் ஒருவனைக் காணாத இடத்தில் இகழ்ந்து பேசிக் கண்ட இடத்தில் அவனோடு பொய்யாக மகிழ்ச்சியடைதல் தீமையுடையதேயாம். (3) இவ்விதம் பொய் வேடம் பூண்டு ஒருவனுயிர் வைத்துக் கொண்டிருப்பதைவிட அவ்வுயிரை விட்டுவிடுதலானது அவனுக்குத் தரும நூலிலே சொல்லப்பட்ட பயனைக் கொடுக்கும். (4) ஒருவனை அவனெதிரே நின்று தாட்சணியமில்லாமற் பேசினாலும் அவனைக் காணாமற் பின் வருங் குற்றத்தை நோக்காத சொல்லைப் பேசாதிருத்தல் வேண்டும்.

ந. புறங்கூறுவார்க்கு உண்டாகுங் குற்றம்.

(5) பிறரைக் காணாத இடத்துக் குறைத்துப் பேசுகின்ற ஒருவன் தருமம் நன்றென்று வாயினாலே சொன்னாலும் மனத்தோடு பொருந்தச் சொல்லுகின்றானில்லையென்பது காணாதஇடத்துப் பிறரை நிந்தித்துக் கூறுதற் கேதுவாகிய அவன் மன வஞ்சகத்தினாலே யறிவுடையாரா லறியக் கூடும்; எனவே மனநல மில்லாதவன் தருமமென்று சொல்லுஞ் சொல் பயனற்ற தென்பதாயிற்று. (6) அன்னியருடைய நிந்தைகளை அவரைக் காணாத இடத்துச் சொல்லுவோன் தனது பல நிந்தைகளுள்ளும் தன்னை வருத்தப் படுத்தும் விதமுடைய இழிவான செய்கைகளை யறிந்து தன்னெதிரே அவராலே சொல்லப் படுவான. (7) தம்முடன் கூடி மகிழும்படி இனிய சொற்களைச் சொல்லிச் சிநேகஞ் செய்தலைத் தமக்கு உறுதி யெனவறியாதவர் தம்மைவிட்டு நீங்கும்படி புறங்கூறித

தமது சுற்றத்தாரையும் பிரியச் செய்வர். இதனாலே புறங்கூறுவார்க்கு எல்லாரும் விரோதிகளாவரென்பதாயிற்று. (8) தம்மோடு நெருங்கிய சிநேகிதருடைய குற்றத்தையும் அவரைக் காணாத இடத்துத் தூற்றும் இயற்கையுடையவர் அயலாரிடத்துச் செய்வது யாதோ தெரியாது? (9) பிறர் நீங்கின சமயம் பார்த்து அவருடைய பழிப்புச் சொல்லைச் சொல்லுவோனது உடற்பாரத்தைப் பூமியானது, இப்பாரத்தைச் சுமப்பதே எனக்குத் தருமமாவதென்று நினைத்துச் சுமக்கின்றது போலும். எல்லாப் பாரங்களையுந் தாங்குதல் பூமிக்குச் சுபாவமானாலும் புறங்கூறுவானது உடற் பாரத்தைத் தாங்குதல் தகாத காரியமாதலால் தருமமாவதென்று நினைத்துத் தாங்குகின்றதென்று சொல்லப்பட்டது.

ச. புறங்கூறுதலை விடுதற்கு உபாயம்.

(10) புறங்கூறுவோர் அயலோரது குற்றத்தைப் போலப் புறங் கூறுதலாகிய தம்முடைய குற்றத்தைக் காண்பாராயின் அவரது நிலைபெற்ற உயிருக்கு ஒரு துன்பமுண்டாகுமோ? உண்டாகமாட்டாது.

உ௦-ஆம் அதிகாரம்.

பயனில சொல்லாமை.

அதாவது:—தமக்கும் பிறர்க்கும் அறம், பொருள், இன்பங்களுள் ஒன்றையுந் தாராத சொற்களைச் சொல்லாதிருத்தல்.

க. பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றம்.

(1) அறிவுடையார் பலருங்கேட்டு வெறுக்கப் பிரயோசனம் இல்லாத சொற்களைச் சொல்பவன் எல்லாராலும் இகழப்படுவான். எனவே, தன்னிலுந் தாழ்ந்தவருந் தன்னை மதியாரென்பதாயிற்று. (2) அறிவுடையார் பலர் முன்னே பயனில்லாத சொற்களைப் பேசுதலானது தன் சிநேகரிடத்தே விருப்பமில்லாத செய்கைகளைச் செய்வதைப்பார்க்கிலுங் குற்றமாகும். (3) பயனில்லாத சொற்களை ஒருவன் பேசுதலானது இவன் நீதியில்லாதவனென்பதை அறிவிக்கும். (4) பயனோடு பொருந்தாத குணமில்லாத சொற்களைப்

பலரிடத்தே ஒருவன் சொல்வானாறல் அச்சொற்கள் நீதியோடு பொருந்ாதவையாகி நற்குணங்களிலிருந்து, அவனை நீக்கிவிடும். (5) பயனில்லாத சொற்களைக் குணத்தன்மையுடையவர்கள் சொல்வாரானால் அவருடைய மேன்மையானது அதனால் வருஞ் சிறப்புடனே அவரை விட்டு நீங்கிவிடும். (மேன்மை நீங்குதல்: மதிப்புக் குறைதலாம்.) (6) பயனில்லாத சொற்களைப் பலதரமுஞ் சொல்லுவோனை மனிதனென்று சொல்லாதே. மனிதருக்குள்ளே பதரென்று சொல்லுக. நெல்லினுள் அரிசிபோல மனிதருள்ளிருக்கும் அறிவில்லாமையாற் பதரென்று சொல்லப்பட்டது.

உ. பயனில்லாத சொற்களைச் சொல்லாமையின் குணம்.

(7) அறிவுடையோர் நீதியோடு பொருந்தாத சொற்களைச் சொன்னாலும் பிரயோசனமில்லாத சொற்களைச்சொல்லாதிருத்தல் நல்லதாம். சொன்னாலுமெனவே, அதுவுஞ் சொல்லலாகாதென்பதுதான் கருத்து. (8) அறிதற்கரிய பிரயோசனங்களை ஆராய வல்ல அறிவுடையார் மிகுந்த பிரயோசன மில்லாத சொற்களைச் சொல்லார். எனவே, நன்றாக ஆராய்ந்து பேச வேண்டுமென்பதாயிற்று. (9) மயக்கத்தி னீங்கிய பரிசுத்தமாகிய அறிவையுடையார் பயனில்லாத சொற்களை மறந்தாயினுஞ் சொல்லமாட்டார்.

ந. சொல்லத் தகுவனவும் தகாதனவும்.

(10) சொற்களுக்குள்ளே பிரயோசன முடைய சொற்களையே சொல்லவேண்டும். அஃதில்லாத சொற்களைச் சிறிதுஞ் சொல்லாதிருக்க வேண்டும்.

உ௧-ஆம் அதிகாரம்.

தீ வி னை ய ச் ச ம்.

அஃதாவது:—பாவங்களாயுள்ளவைகளைச் செய்தற்குப் பயப்படுதல்

௧. தீவினைக்குப் பயப்பட வேண்டும்.

(1) தீவினையென்று சொல்லப்படும் மயக்கத்துக்கு முற்பிறப்பிற் செய்த தீவினை யுடையோர் பயப்படமாட்டார். அவ்விதஞ்

செய்யாத மேலோர் பயப்படுவர். (தீவினையாவது: பாவம்.) (2) இன்பத்தின் பொருட்டுச்செய்யும் பாவச்செய்கைகள் பின்னை துன்பத்தைத்தருதலால் அப்படிப்பட்ட பாவச்செய்கைகள் தீயைப் பார்க்கினும் அதிகமாகச் சுடுமென்று பயப்படவேண்டும். (தீயைப் பார்க்கினும் அதிகமாகச் சுடுதலாவது: தீயானது தொட்ட போது மட்டுஞ் சுடும். பாவச்செய்கைகள், இனிமேலெடுக்கும பிறவிதோறுந் தன்னை விடாது, பிடைபற்றிச் சுடுவதேயாம்.) (3) தம்மை வருத்தப்படுத்துவோருக்குங் கொடிய துன்பங்களைச் செய்யாதிருப்பதையே தமக்கு உறுதியாகிய அறிவுகளெல்லாவற்றிலும் மேலான அறிவென்று நல்லோர் சொல்லுவர்.

உ. பிறருக்குத் தீவினை செய்தவர் தாம் கெடுவர்.

(4) ஒருவன் பிறனுக்கு மறந்தாயினுங் கேட்டைத் தருஞ் செய்கையை, எண்ணாதிருக்கவேண்டும். எண்ணுவானானால் எண்ணினவனுக்குக் கேட்டைத் தருஞ்செய்கையை அறக்கடவுளெண்ணுவான். (5) வறுமையுடையே னென்று நினைத்து அவ்வறுமை நீங்கும் பொருட்டுக் கெட்ட காரியங்களை ஒருவன் பிறருக்குச் செய்யா திருக்கவேண்டும். செய்தால முன்னைப்பார்க்கினும் பின்னும் அதிக வறுமையுடையவனாவான். (6) துன்பஞ் செய்யும் பகுப்புடைய பாவங்கள் பிற்காலத்துத் தன்னை வந்து வருத்தஞ் செய்வதை விரும்பாதவன், தான் பிறரிடத்தே தீயவாகிய பலதொழில்களைச் செய்யாதிருக்கவேண்டும். (7) எவ்வளவு பெரிய பகையுடையவரும் அப்பகையை ஒரு வழியினாலே தப்பித்துப் பிழைக்கலாம். தாஞ்செய்த கொடிய செய்கையாகிய பாவத்தைத் தப்பித்துப் பிழைக்க முடியாது. அப்பாவம் ஒருநாளுங் கெடாமல் தாம்போன இடமெல்லாங் கூடவே வந்து தம்மைக் கெடுத்துவிடும். ஆதலால் ஒவ்வொருவரும ஒரு சிறிதுந் தீவினை செய்யலாகாது. (8) தீங்காகிய பாவங்களைப் பிறருக்குச் செய்தால் அப்பாவமானது செய்தவனைக்கெடுப்பதற்கு நெடுந் தூரம் போனாலும் அவனை விடாது கூடவே வந்திருக்கும். எப்படியென்றால், ஒருவனுடைய நிழலானது அவன் சென்ற இடமெல்லாம போய் அவனுடைய காலின்மேல் ஒடுங்கி யிருப்பது போலுமெனக. (9) ஒருவன் தன்னைக்காத்துக்கொண்

ளும் ஆசையுடையவனுயிருந்தால் தீவினை சம்பந்தப்பட்டவற்றுள் மிகச்சிறியது ஒன்ருகிய செய்கையையும் பிறரிடத்தே செய்யாதிருக்கவேண்டும்.

௯. தீவினை செய்யாதவன் கேடில்லாதவன் ஆவான்.

(10) ஒருவன் ஒழுங்கான வழியைவிட்டுக் கொடிய வழியிலே போய்ப் பிறருக்குத் தீச்செயல்களைச் செய்யாதிருப்பானுகில் அவன் யாதொரு கேடும் இல்லாதவனென்றறிந்து கொள்க.

௨௨-ஆம் அதிகாரம்.

ஒப்புரவு அறிதல்.

அஃதாவது:—உலக நடையை யறிந்து செயதல்.

௧. உலக நடையை யறிந்து செய்தலின் சிறப்பு.

(1) உயிர்களானவை தமக்கு நீருதவும் மேகங்களிடத்து ஒரு பிரதியுபகாரமுஞ் செய்தலில்லை. ஆதலால் அம்மேகங்கள் போல் வார்செய்யும் உபகாரத்தை யடைந்தவரும் அவ்வுபகாரத்தைச் செய்தவருக்கு ஒரு பிரதியுபகாரமுஞ் செய்தலில்லையாம். எனவே, மேகங்கள்போலக் கொடையாளிகளும் பிரதி யுபகாரத்தை யிச்சியாரென்பதாயிற்று. (2) முயற்சி செய்து சம்பாதிக்கப்பட்ட பொருளெல்லாம் தகுதியுடையவருக்கானுல் உபகாரத்தைச்செய்யும் பிரயோசனமுடையனவாகும். எனவே, தகுதி யில்லாதவர் சம்பாதிக்கப்பட்ட பொருள்கள் அவரநுபவித்தற்கும், காப்பாற்றி வைத்திருந்து இழந்து விடுதற்குமா மென்பதாயிற்று. (இழந்துவிடுதல்: திருடர் முதலியவரால் அபகரித்தல். தகுதியுடையவர்: உயர்ந்த குணமுடையவர்.) (3) தேவருலகத்திலும் இவ்வுலகத்திலும் பிறருக்கு உபகாரஞ்செய்தலைப்போல நல்லவையாகிய வேறுசெயல்கள் கிடைப்பன இல்லை.

௨. வேதநடை தவறுதல் பிராயச்சித்தத்தால் நீங்குதல் போல உலக நடை தவறுதல் பிராயச்சித்தத்தால் நீங்காது.

(4) உலக நடையை அறிந்து செய்பவன் உயிரோடு கூடி வாழ்பவனுவான்; அதனை யறிந்து செய்யாதவன் உயிருடனிருந்து

வனுனாலும் இறந்தவருள் ஒருவனாக நினைக்கப்படுவான். ஏனென்றால், உயிருக்குரிய அறிவும், செயலும் அவனிடத்தே காணப்படாமையாலென்க.

௩. உலகநடை தவறாதவனுடைய பொருள் பயன்படும்.

(5) உலக நடையை விரும்பிச்செய்யும் பெரிய அறிவினையுடையவனுவான் செல்வத்தினாலே நிறைதலானது ஊரில் வாழ்வார் உண்ணுங் குளமானது நீரினாலே நிறைந்தாற்போலும்; எனவே ஊருணி நீர்போலத் தடையின்றி யெல்லாருக்கும் அறிவுடையான் செல்வமானது பயன்படு மென்பதாயிற்று. (6) இதுவன்றியும், ஊருக்கு நடுவேயிருக்கிற மரத்தினிடத்தே பழுத்த மதுரமான பழம்போலவும் எல்லாருக்கும் பிரயோசனப்படும். (7) உபகாரம் செய்யும் பெரிய தகுதியுடையவனிடத்துச் செல்வமுண்டானால் அச்செல்வமானது: தனக்கு அங்கமாகிய இலை, பூ, பிஞ்சு, காய், கனி முதலிய எல்லாவற்றாலு மருந்தாயிருந்து, தவறாமல் பிறருடைய நோய்களைத் தீர்க்கும் மரத்தைப்போல, எல்லாருடைய வறுமைத் துன்பங்களையும் தனக்கு அங்கமாகிய அன்னம், ஆடை, ஆபரணம், பொன் முதலியவற்றால் நீக்கிவிடும்.

௪. தரித்திரத்தால் உலக நடை தவறலாகாது.

(8) தாம் செய்யத் தக்க காரியங்களை அறிந்த இயற்கையறிவுடையவர் செல்வஞ் சுருங்கிய காலத்தும் உபகாரஞ் செய்தற்குத் தளர்ச்சியடைய மாட்டார். (9) உபகாரஞ் செய்தவன் வறுமைப்பட்டவனாகுதல் எதுவென்றால், நீங்காமற் செய்யுங் குணத்தை யுடைய அவ்வுபகாரங்களைச் செய்ய முடியாமல் வருந்துகின்றதாம். எனவே, தான் அநுபவிக்கும் பொருள் கிடையாமை வறுமை யன்றென்பதாயிற்று.

௫. உலகநடை தவறாமற் செய்தலால் வருங் கேடு கேடாகாது.

(10) உபகாரஞ் செய்தலினாலே ஒருவனுக்குப் பொருட் கேடு வருமென்று சொன்னாலும், அக்கேடானது தன்னை விற்றாயினும் ஒருவன் வாங்குந் தகுதியுடையதாகும். ஏனென்றால், இக் கேடு புகழையுண்டாக்கலாலென்க.

உக-ஆம் அதிகாரம்.

ஈகை.

அஃதாவது:—தரித்திரராய் வந்து யாசித்தவருக்கு இல்லையென்று சொல்லாமல் இயன்றமட்டுங் கொடுத்தல்.

க. ஈகையின் இலக்கணம்.

(1) தம்மிடத்திலே ஒரு பொருளுமில்லாதவருக்கு அவர் வேண்டிய ஒரு பொருளைக் கொடுப்பதே கொடையாம்; அதைத் தவிர வேறெல்லாக் கொடையும், கொடுப்பவர் தாம் நினைக்கப்பட்ட பிரதியுபகாரத்தைப் பெறுங்குணத்தை யுடையதேயாகும் ஆதலால் தரித்திர ரல்லாதவருக்குக் கொடுத்தல் கொடையாகாதென்க.

உ. ஈகையின் சிறப்பு.

(2) யாசித்தலானது மேலுலகத்துக்கு நல்லவழி யென்று சொன்னாலுந் தீயதேயாம். கொடுப்பவருக்கு அவ்வுலகமாகிய மோக்ஷத்தை யடைதலில்லை யென்று சொன்னாலுங் கொடுத்தலே நல்லதாகும். சொன்னாலுமெனவே, இவ்விரண்டுஞ் சொல்லுவார் எக்காலத்தும் இல்லை யென்பதாயிற்று (3) நான் வறியவனென்று யாசிப்பவன் சொல்லும் இழிவான வார்த்தையைப் பிறரிடத்தே சொல்லாதிருத்தலும், அந்த வார்த்தையைத்தன்னிடத்திலே சொல்லிய யாசகனுக்குக் கொடுத்தலுமாகிய இரண்டு குணங்களும் நல்ல குடியிற் பிறந்தவனிடத்தே யுள்ளனவாம். (4) யாசித்தலைப்போல யாசகனுக்குக் கொடுப்பார் கொடுப்பேனென்றிருத்தலும், தாம் கொடுக்கும் கொடையால் அக்கொடைப் பொருளைக் கொண்ட யாசகருடைய இனிய முகத்தைப்பார்க்கும் வரையும் இன்பஞ் செய்வதில்லையாம். ஏனென்றால், யாசிப்பவர் கேட்ட பொருள்களுள் ஒன்று கொடுக்க முடியாமற் போய்விடுமோ? என்னும் பயமுடைமையாலென்க; இதனாற் கேட்ட பொருளெல்லாம் இல்லையென்னுமற கொடுக்கவேண்டும் என்பதாயிற்று. (5) தவத்தால் வல்லவராவோருக்கு வல்லமையாவது தம்மையடைந்த பசியைப் பொறுத்துக்கொண்டிருத்தலாம். அதுவும் அப்படிப் பொறுத்தற்கரிய பசியைக் கொடையினாலே நீககுவோரது வல்லமைக்கு ஒப்பாகாது. ஏனெனில், தம் பசியை யும் பிறர்பசியையும் நீக்கமாட்டாதவர் வல்

லமை அவ்விரண்டையும் விலக்குவார் வல்லமைக்கு எப்படிச் சமான மாகுமென்க. (6) வறியவராது எல்லா நன்மைகளையுங் கெடுக்க வரும் பசியைப் போக்குதலாகிய தருமமானது பொருள் படைத்த வனாகிய ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பின்னுதவுமாறு வைக் கப்படும் இடமாகும். (7) தனக்குள்ள பொருளை எந்நாளுங் கொடுக்க வேண்டியவர்களுக்குப் பகுந்து கொடுத்து உண்ணுதல் பழகியவனைப் பசி யென்னுங் கொடிய வியாதி யடையமாட்டாது. கொடுக்கவேண்டியவர்களாவார்: 5-ஆம். அதி. இல்வாழ்க்கையிற் கூறப்பட்ட இயல்புடைய மூவரும், துறந்தார் முதலிய மூவரும், தென்புலத்தார் முதலிய ஐவரில் தான் நீங்கிய நால்வருமாம்.

ரு. ஈயாமையின் குற்றம்.

(8) தம்முடைய பொருளை ஒருவருக்குங் கொடாமற் காத்துவைத்திருந்து பின்னை யிழந்துவிடுங் கொடியவர் வறியவர் க்கு வேண்டிய பொருளைக்கொடுத்து, அவ்வறியவர் மகிழ்தலினால் அருளுடையாரடையு மகிழ்ச்சியைக் கண்டறியமாட்டாரோ? கண் டிருந்தால் வறியவர்க்குக் கொடுப்பர். (9) பொருளை அதிகப்படுத் தும் பொருட்டு யாசகருக்குக் கொடாமல் தனித்தவராகியிருந்து உணவுப்பொருளைப் புசித்தலானது ஒருவருக்கு நிச்சயமாகப் பிற ரிடத்திலே போய் யாசிப்பதினும் பெரியதுன்பஞ் செய்வதாம். எப்படியென்றால், யாசித்தலுக்கு இழிவு அப்போது மட்டுமே பின் வறுமையில்லை. தனித்துண்ணுதலுக்கு அவ்விழிவும், வறுமையும் உண்டாகும். ஆதலாலென்க. (10) மரணமடைதல்போலத் துன்பஞ் செய்வதொன்றில்லை. அப்படி மரணமடைதலும் யாசகருக்குக் கொடுக்க முடியாத இடத்துஇன்பஞ் செய்வதாம். எனவே, யாச கருக்குக் கொடுக்க முடியாமலுயிர் வைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கினும் மரணமடைவது நல்லதென்பதாயிற்று. ஏனெனில், கொடாத மாபாவியென்னும் பழி அடையாமையாலென்க.

உச-ஆம் அதிகாரம்.

புகழ்.

அஃதாவது:—இல்வாழ்க்கை முதல் ஈகை யிறுதியாகச் சொல்லப்பட்ட இல்லறத்தில் வழுவாதவருக்கு இம்மைப் பயனாகி இவ்வுலகத்திலே செய்தபடியே நிற்றலாகிய கீர்த்தியாம்.

க. புகழின் சிறப்பு.

(1) வறியவர்க்குக் கொடுத்தலினாலே புகழுண்டாகும்படி வாழவேண்டும். அப்புகழல்லாமல் மனிதருயிர்களுக்கு வேறு பயனில்லையாம். புகழுண்டாவதற்குக் கல்வி, வீரம் முதலானவைகளிருந்தாலும் கொடையே மிகச்சிறந்தது. ஆதலின் அது இங்கே சொல்லப்பட்டது. (2) உலகத்திலே ஒன்றைச் சொல்வார் சொல்லப்படும் அவைகளெல்லாம் தரித்திரத்தால் யாசிப்பவருக்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுப்பவரிடத்தே நிற்கும் கீர்த்திகளேயாம். ஆயினும், இனம் பற்றிப் பாடுவார்பாடப்படும் அவையெல்லாம் அக்கீர்த்திகளே யென்றுஞ் சொல்லலாம். (3) தனக்கு ஒப்பில்லையாக உயர்ந்த கீர்த்தியல்லாமல் உலகத்திலே அழியாமல் நிலைபெறுவது வேறொன்றில்லையாம். (ஒப்பில்லாமலுயர்ந்த கீர்த்தியாவது: கொடுத்தற்கரிய உயிரையும், அவயவத்தையும், பொருளையுங் கொடுத்தலால் வருங்கீர்த்தியென்க.)

உ. புகழுடையவர் அடையும் மேன்மை.

(4) பூமியின் எல்லையில் ஒருவன் அழியாது நிலை பெறுங் கீர்த்தியைச் செய்வானானால் தெய்வலோகமானது அவனையல்லாமல் தன்னையடைந்திருக்கிற தேவர்களைப் பேணமாட்டாது. ஏனென்றால், புகழ் வடிவால் இவ்வுலகத்தை அத்தேவர்களடையாமையாலென்க. எனவே, தேவவடிவால் அத்தேவலோகத்தைப் புகழ்படைத்தவன் அடைவானென்பதுங் கொள்க. (5) திறமையுடையவருக்கன்றி அத்திறமையில்லாருக்குப் புகழுடம்பு வளர்ச்சியடையப் பூதவுடம்பு தேய்தலும், புகழுடம்பு நிலைநிற்கப் பூதவுடம்பு இறத்தலுமில்லையாம். எனவே, திறமையுடையார் பூதவுடம்பை வருத்தப்படுத்தியும் புகழுடம்பை வளர்ப்பாரென்பதும, அவ்வுடம்பு நிலை

---

* செய்தபடியே நிற்றல் - குறைவில்லாதிருத்தல்.

பெற்றிருப்பதற்குப் பூதவுடம்புக்கு மரணம் வந்தால் அதையுஞ் செய்வாரென்பதும் ஆயின. இவ்விரண்டுக்கு முறையே சக்கிரவர்த்தியாகிய அரிச்சந்திரன் முதலாயினோரும் தவசிரேட்டராகிய ததீசி முனிவர் முதலாயினோரும் சாட்சியாயிருந்தல் காண்க. (திறமையுடையார்: அறிவுடையோர்.)

ங. புகழில்லாதவரது தாழ்வு.

(6) மனிதராய்ப் பிறந்தால் புகழுக்குக் காரணமாகிய குணத்தோடு பிறக்கவேண்டும்; அக்குணமில்லாதவர் மனிதராய்ப் பிறப்பதைப் பார்க்கினும் மிருகங்களாய்ப் பிறப்பது நல்லதாம். ஏனென்றால், புகழுக்குரிய குணமில்லை யென்று இகழப்படாமையாலென்க. (7) தமக்குப் புகழுண்டாக வாழமாட்டாதவர் அது பற்றித் தம்மைப் பிறரிகழ்ந்த இடத்தே இந்த இகழ்ச்சியானது நாம் புகழைச் செய்யாமலிருந்ததனா லன்றோ வந்ததென்று தம்மை நொந்துகொள்ளாமல் தம்மை நிந்திப்பவரை நொந்து கொள்வது என்ன காரணமோ தெரியவில்லை. (8) புகழென்னும் பிள்ளையைப் பெறவேண்டியதிருக்க அப்பிள்ளையைப் பெறாமலிருப்பாரானால் உலகத்திலுள்ளாருக் கெல்லாம் வசையாகுமென்று பெரியோர் சொல்லுவார்; இதனால் இகழ்ச்சி சொல்லுவதற்கு வேறு குற்றம் வேண்டா மென்பதாயிற்று. (9) புகழில்லாத உடம்பைத் தாங்கிய பூமியில் பழிப்பில்லாத வளத்தையுடைய விளைவு குறையும். எனவே, புண்ணிய சரீரமுள்ளார் வசிக்கும் பூமியில் சகல வளமுந் தழைத்தோங்கு மென்பதாயிற்று; இதற்குச் சாட்சியாகப் பாண்டவர்களெங்கே யிருப்பாரென்று தேடும்போது "அறன் காளையுறை நாடுகார், மின்னுற்று மழையுண்டு விளைவுண்டு" என்று அடையாளங் கூறியிருப்பதை, வில்லிபாரதம் நிரைமீட்சிச் சருக்கம் ரு-ஆம். செய்யுளிற்காண்க.

ச. இறவாதவரும் இறந்தவரும்.

(10) தம்மிடத்துப் புகழுண்டாக வாழ்வாரே உயிரோடு வாழ்வாராவர். வசையுண்டாக வாழ்பவரே உயிரோடிருந்தாலுஞ்

செத்தவராவர்; இதனால், இல்லறத்துக்கு இம்மைப்பயன் புகழென்பது காண்க. மறுமைப் பயனாவது: தேவருலகத்திலே போகமநுபவித்தல். இதை, ௩-ஆம். அதிகாரம். இல்வாழ்க்கை ௧௦-ஆம் குறள் வாக்கியத்திற் சொல்லியிருத்தலா லறிக. இதுவரையும் தரும சாத்திரங்களிலே சொல்லப்பட்ட இல்லறங்க ளெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டன. எத்தனை பிரிவுகளாக யார் யார் இல்லற தருமங்களை வகுத்துச் சொன்னாலும், அவையெல்லாம் திருவள்ளுவநாயனார் தொகுத்துக் கூறிய இவற்றுளடங்குதல் அறிவுடையோர் கண்டுகொள்க.

முதலாவது,

இல்லற இயல் முற்றுப் பெற்றது.

——(*)——

இரண்டாவது,

துறவற இயல்.

துறவறமாவது: முன்சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாது நடந்து, அறிவுடையராகிப் பிறவித்துன்பத்துக்குப் பயந்து மோக்ஷம் பெறும்பொருட்டுத் துறந்தவர்க்குரிய தருமமாம்; அது: விரதமும், ஞானமுமென இருவகைப்படும்; அவற்றுள் விரதமாவது: தீவினையொழிந்து அந்தக்கரணங்கள் பரிசுத்தமாதற் பொருட்டு இன்ன தருமங்களைச் செய்வேனென்றும் இன்னபாவங்களை விட்டுவிடுவேனென்றும் தமது வல்லமைக்குத் தக்கபடி வரையறை செய்துகொண்டு துறந்தோராலே காப்பாற்றப்படுவது; அவ்விரதங்கள் அளவில்லாதவைகளாயிருக்கினும் அவை பலவற்றையுந் தம்முள்ளே அடக்கிநிற்குஞ் சிறப்புடைய சிலவற்றை இங்கே சொல்லத்தொடங்கி முதலிலே அருளுடைமையை அருளிச்செய்கின்றார்.

உரு-ஆம் அதிகாரம்.

அருளுடைமை.

அஃதாவது:—யாதோரு சம்பந்தமுமில்லாமல் இயல்பாக எல்லா உயிர்களிடத்துஞ் செல்வதாகிய கருணையுடையராதல். இல்லறத்துக்கு அன்புடைமை சிறந்தது போலத் துறவறத்துக்கு அருளுடைமை சிறந்ததாம்.

க. அருளின் சிறப்பு.

(1) பொருளால் வருஞ் செல்வங்கள் தாழ்ந்தவரிடத்திலுமிருக்கின்றன. ஆதலால் செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட செல்வமாவது, அருளால் வருஞ் செல்வம்; அஃதாவது: உயிர்களைக் காப்பாற்றி அத்தருமத்தால் மேன்மையடைதலாம். உயிர்களைக்காப்பாற்றுதல் இழிந்தோரிடத்திலில்லாமையால் அவர் மேன்மையடைதலில்லை. இனி, பொருளால் வருஞ் செல்வங்களாவன: பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தங்கள் முதலியவைகளாம். (2) நல்வழியிலே நின்று அளவைகளாலும், யுத்திகளாலும் நமக்குத் துணையாகுந் தருமம் யாதென்று ஆராய்ந்து அருளுடை

யவராக வேண்டும். ஒன்றுக்கொன்று விரோதிக்கின்ற பல சமய வழிகளால், ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளையன்றி வேறொன்றில்லை. அளவைகளாவன: கண் முதலியவற்றாலே காணும் காட்சியும், அடையாளங்களால் அறியும் அநுமானமும், கடவுள் வாக்கியமாகிய ஆகமமுமென்க. மற்றெல்லா அளவைகளும் இம்மூன்று அளவைகளுள் அடங்கும். சமயங்கள் ஒன்றுக்கொன்று விரோதித்தலாவது: அளவைகளும் பொருள்களுமாறு பட்டிருத்தலாம்; அவ்விதம் மாறு பட்டிருந்தாலும் அருள் துணையென்பது எல்லார்க்கும் ஒத்திருக்கும். இம்மையிலும் மறுமையிலும் உயிரை விட்டு நீங்காமலிருந்து உதவி செய்தலால் அருளானது துணையென்று சொல்லப்பட்டது.

உ. அருளாகிய துணையுடையார்க்கு இம்மை மறுமை யிரண்டினுந் துன்பம் இல்லை.

(3) இருளடைந்த துன்ப உலகமாகிய நரகத்திலே போய்ப் புகுதலானது அருளைச்சேர்ந்த மனமுடையவர்க்கு இல்லையாம். (4) நிலைபேறுடைய பிறவுயிர்களைக் காப்பாற்றி அவ்வுயிர்களிடத்தே அருளுடையவனாயிருப்பவனுக்குத் தன்னுடைய உயிர் பயப்படுதற்கேதுவாகிய பாவங்களானவை உண்டாகமாட்டாவென்று அறிந்தோர் சொல்லுவர். (5) அவ்வருளுடையவர்க்கு இம்மையிலும் ஒரு துன்பமாவது உண்டாகாது; அதற்குச் சாட்சியாவார் காற்று உலாவுகின்ற வளந்தங்கிய பெரிய இப்பூமியில் வாழ்வாரேயாம். தாம் கண்டறிந்ததைக் காணாதவர்க்குச் சாட்சியாவார் சொல்லுதற்குரியவர். ஆதலால், இது வரையும் அருளுடையவரிடத்தே துன்பம் உண்டாயிருந்ததென்று ஒருவரும் சொல்வாரில்லாமையால் பூமியில் வாழ்வாரெல்லாரும் அருளுடையவரிடத்தே துன்பமில்லையென்பதற்குச் சாட்சி யாயினாரென்றறிக.

௩. அருளாகிய துணையில்லார்க்கு வருங் குற்றம்.

(6) உயிர்களிடத்தே செய்ய வேண்டும் அருளைவிட்டு, விடவேண்டுங் கொடுமைகளைச் செய்து நடப்பவரை முற்பிறப்பிலேயும் உறுதிப் பொருளைத்தேடாமல் தாம் துன்பப் படுகின்றதை மறந்தவரென்று நல்லோர் சொல்லுவர். உறுதிப்பொருளென்றது, தரு

மத்தை. துன்பப்படுத்த லென்றது, தன்னைப்பற்றி வரும் பிறவித் துன்பம் மூன்றும் அநுபவித்தலை. பிறவித் துன்பமூன்றாவன: இறந்தகாலம், நிகழ்காலம் வருங்காலங்களிலாகுஞ் சனனங்களிலுண்டாகும வருத்தங்கள். (7) பொருளில்லாதவருக்கு இவ்வுலகத்து இன்பம் இல்லாததுபோல உயிர்களின் மேல் அருளில்லாதவருக்கு அவ்வுலகத்து இன்பமில்லையாம் (8) ஆயினும், ஊழினாலே வறுமையடைந்தவர் அவ்வறுமை நீங்கிப் பின்னொருகாலத்திலே செல்வம் பெற்று விளங்குவர். அப்படியல்லாமல் அருளில்லாதவர் பாவம் நீங்காமையாற் கெட்டவரே யாவர், பின்னொரு காலத்தினும் அருளுடையராக மாட்டார். (9) உயிர்களிடத்தே அருள் செய்யாதவன் செய்யுந் தருமத்தை ஆராய்ந்தால் அத்தருமமானது ஞானமிலலாதவன் உண்மை நூலிற் சொல்லப்பட்ட பொருளை ஒருகாற் கண்டது போலும். எனவே, ஞானமில்லாதவன் ஒருகாற் கண்டபொருள் அழிதலபோல, அருளில்லாதவன் செய்யுந் தருமமும் அழியுமென்பதாயிற்று. ஆகலால் தருமம் செய்பவனுக்கு உயிர்களிடத்தே வைக்கும் அருளுடைமை அவசியம் வேண்டுவதாம்.

ச. அருளுண்டாவதற்கு உபாயம்.

(10) அருளில்லாதவன் தனக்கெளியவர்மேல் தான் அவரை வருத்தப்படுத்துதற்குச் செல்லுமிடத்துத் தன்னினும்வலியவர் தன்னைவருத்தப் படுத்துதற்கு வரும்போது அவர் முன்பயந்து நிற்குந் தன்னிலையை நினைக்கவேண்டும். நினைத்தால் தன்னைப்போலத் தனக்கெளியவரும் பயப்படுவாரென்னும் எண்ணந்தோன்றும்; அது தோன்றவே, அவரிடத்துக்கருணையுண்டாகும். ஆதலால் அந்நினைப்பை மறக்கலாகாது.

உசு-ஆம் அதிகாரம்.

புலால் மறுத்தல்.

அஃதாவது:—ஊனுண்ணுதலை நீக்குதலாம்.

க. ஊன் உண்டாராயினும் உயிர்களுக்கு ஒரு தீங்கு நினையாராயின் அவரை அருளானது ஆளுமென்பாரை மறுத்து, ஆளாதென்பது.

(1) தன்னுடம்பை வளர்த்தற் பொருட்டு, தான் மற்றொன்றின் உடம்பாகிய மாமிசத்தைத் தின்பவன் எவ்வகையால் அருளையாளுவான். (2) ஆகலால் மாம்சத்தைத் தின்பவனுக்கு அருளினாலே பயன் கொள்ளுதலில்லை. எதுபோல என்றால் பொருளினாலே பிரயோசன முறுதல் அப்பொருளைக் காப்பாற்றாதவருக்கு இயலாதது போலாமென்க.

உ. ஊன் தின்றார் மனம் தீங்கு நினைத்த லுண்டென்று உவமானத்தாற் கூறி, மேலே சொல்லியதை வற்புறுத்தல்.

(3) வேறோருயிரினது உடலைச் சுவைபட உண்டார் மனமானது கொலைக்கருவியைத் தமது கையிலே கொண்டவரது மனம் போலக் கொலையை நோக்குவதல்லது கருணையை நோக்கமாட்டாது.

ரு. கொலைப்பாவங் கொன்றார்மேல் நிற்குமாதலின், ஊனுண்பார்க்குப் பாவமில்லை யென்பாரை மறுத்துப் பாவம் உண்டென்பது.

(4) அருளானது எதுவென்றால் கொலை செய்யாமையாம்; அவ்வருளல்லாததானது எதுவென்றால் கொலை செய்தலாம். ஆதலாற் கொல்லுதலால் வந்த அந்த ஊனைத்தின்னுதல் பாவம். (5) பலவகையுயிர்கள் உடம்புகளிலே நிற்றல் ஊனுண்ணுமை யென்னுந் தருமத்தினிடத்ததாகும். ஆதலால் அவ்விதம் நிற்றலாகிய நிலையழியும்படி ஒருவன் அவ்வுடம்புகளாகிய ஊனையுண்பானாயின் அவனை விழுங்கிய நரகமானது வெளியே கக்குதற்கு வாயைத்திறக்கமாட்டாது. எனவே, ஊனுண்டவன் எண்ணில்லாத காலம் நரகத்திலே கிடப்பானென்பதாயிற்று. இதனால், கொலை செய்தவனுக்குத் தான் பாவம், ஊனையுண்டவனுக்குப் பாவமில்லையென்று சொல்லுதல் மறுக்கப்பட்டது.

ச. மேலே கூறியதை நியாயத்தால் வற்புறுத்தியது.

(6) உண்ணுதல் காரணமாக உலகத்தார் ஊனைக் கொள்ளாரானால் விலைப்பொருள் காரணமாக ஊனை விற்பவர் ஒருவருமில்லையாம். இதனாலும், ஊனையுண்டவருக்குங் கொலைசெய்தவருக்கு ஒப்பப் பாவமுண்டென்பது உறுதி செய்யப்பட்டது.

ரு. யுத்தியினாலும் ஊனுண்டல் இழிந்ததென்பது.

(7) மாமிசமானது வேறொரு உடம்பினது புண்ணாகும்; அவ்வசுத்தமாகிய தன்மையறிந்தவரை அறிந்தால் அம்மாமிசத்தை யுண்ணாதிருக்கவேண்டும்; இதனால், மாமிசத்தை அசுத்தமென்று தெரியாதவரே உண்கின்றாரென்பதாயிற்று.

சா. ஊனுண்ணாமையின் உயர்ச்சி.

(8) மயக்கமாகிய குற்றத்தினின்றும் நீங்கிய அறிவினையுடையார் ஒருயிரினின்றும் நீங்கி வந்த மாமிசத்தை உண்ணமாட்டார். மயக்கமாவது: அசுத்தத்தைச் சுத்தமென்று நினைத்திருத்தல். (9) ஓமகுண்டத்தினிடத்தே நெய் தேன் முதலிய பொருள்களைச் சொரிந்து ஆயிரம் யாகஞ் செய்தலைப் பார்க்கினும் ஒரு விலங்கினது உயிரைப்போக்கி அவ்வுயிர் நின்ற உடம்பாகிய மாமிசத்தை உண்ணாதிருத்தல் நல்லதாம்; இதனால் ஆயிரம் யாகத்தினால் வரும் பயன் மாமிச போசனஞ் செய்யாமையாகிய விரதம் ஒன்றினாலே கிடைக்குமென்பதாயிற்று. (10) ஒருயிரையுங் கொலை செய்யாதவனுமாகிப் புலாலையும் உண்ணாதவனை எல்லாவுயிர்களுங் கைகுவித்து வணங்கும்; இதனால், இவ்விரண்டு தருமங்களையும் ஒருமிக்க உடையவருக்கன்றி ஒன்றைமாத்திரம் உடையவருக்கு அதனாற் பிரயோசனமில்லை யென்பதாயிற்று.

உஎ-ஆம் அதிகாரம்.

தவம்

அஃதாவது:—மனம் பொறிவழி போகாமல் நிற்றற்பொருட்டு விரதங்களினாலே உண்டி சுருக்குதல், கோடைகாலத்தில் வெயிலிலே நிற்றல், மழைகாலத்திலும் பனிக்காலத்திலும் நீரிலே நிற்றல் முதலான செயல்களை மேற்கொண்டு,அவைகளால் தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்துப் பிற உயிர்களைக் காப்பாற்றலாம்.

க. தவத்தின் இலக்கணம்.

(1) தவத்துக்கு வடிவமானது உண்டிசுருக்குதல் முதலானவைகளால் தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்துக்கொள்ளுதலும், பிறவுயிர்க்குத் தாம் துன்பஞ் செய்யாமையுமாகிய அவ்

வளவே யாகும். அவ்வளவே யென்றதனால் மற்றைய விரதங்க ளெல்லாம் இவ்விரண்டிலே அடங்கு மென்பதாயிற்று.

உ. தவத்தின் சிறப்பு.

(2) தவத்தினாலாகும் பயனுண்டாவதல்லாமல் அத்தவம் உண்டாவதும் முன்னைத்தவம் உடையாருக்கே கிடைக்கும். ஆதலால் அத்தவத்தை முன்னைத்தவமில்லாதவர் செய்யத் தொடங்குவது பயனற்றதாகிவிடும். ஏனென்றால் முன் செய்த பழக்கத்தால் வந்த அறிவும் வல்லமையும் இல்லாமையாலென்க. எனவே, அவ்வறிவும், வல்லமையும் உடையவருக்கே தவம் பிரயோசனப்படு மென்பதாயிற்று. (3) இல்லறத்தையே பற்றி நிற்பவர்கள் இருவகைப் பற்றையுந் துறந்த முனிவர்களுக்கு உணவும், மருந்தும், இருப்பிடமும் உதவி செய்யவேண்டித் தாம் தவஞ்செய்தலை மறந்தார் போலும்; இதனால் தவஞ்செய்யு முனிவர்களுக்கு வேண்டிய வுதவிகளை யில்லறத்திலிருப்பவர் செய்யவேண்டு மென்பதும், தவமுடிவதற்கு இவ்வுதவி வேண்டுமென்பதுங் காண்க. (4) தமது துறவறத்துக்கு இடையூறு செய்த பகைவரைக் கெடச் செய்தலும், அவ்வறத்தை மகிழ்ந்து உதவிசெய்தவரை உயரச்செய்தலுந் தவஞ்செய்வார் நினைப்பாரானால் அவரது தவவலிமையினாலே அவருக்கு அவ்விரண்டும் உண்டாகும்; இவ்விரண்டுக்குஞ் சாட்சியாக விசுவாமித்திர முனிவர் தமது தவத்துக்கு இடையூறு செய்த தாடகையைக் கெடச்செய்ததையும் உதவி செய்த ஸ்ரீராமனை உயரச்செய்ததையும் அறிந்து கொள்க. (5) முயற்சி செய்தால் பெறவேண்டிய பயன்களை வேண்டியபடியே மறுமையிலே தாம் பெறலாம். ஆதலால் செய்யத்தகுவதாகிய தவத்தை, இம்மையிலே அறிவுடையோர் முயன்று செய்யவேண்டும்; இதனால் தவமானது எல்லாப் பயன்களையுங் கொடுக்கு மென்பதாயிற்று.

ட. தவஞ் செய்வாரது உயர்ச்சி.

(6) அநித்தியமாகிய உடம்புக்கு வருத்தம் வருமென்று விட்டுவிடாமல் நித்தியமாகிய உயிர் மோக்ஷத்தை யடைதற் கேதுவாகிய தவத்தைச் செய்வோரே தம்முடைய நற் செய்கையைச் செய்தவராவர். க்ஷணத்தில் அழிவதாகிய சிற்றின்பத்தையும

பொருளின்பத்தையுஞ்செய்வோர் அவ்விரண்டினு லாகிய ஆசை வலையில் அகப்பட்டுத் தமக்குக் கேடு செய்பவராவார். (7) புடத்தி லுள்ள தீயானது சுடுதலால் குற்றம் நீங்கிப் பிரகாசிக்கும் பொன் போல, தவஞ் செய்ய வல்லவர் அத்தவத்தால் வருகிற துன்ப மானது வருத்தப் படுத்தலால் பாவமாகிய குற்றம் நீங்க ஞான மாகிய பிரகாசத்தையடைவர். (8) தவமாகிய கருமஞ் செய்து தன்னுயிரைத் தனக்கு உரித்தாகப் பெற்றவனை அவ்விதம் பெறாத வையாகிய நிலை பேறுடைய உயிர்களெல்லாம் வணங்கும். எதனால் வணங்கு மென்றால், தவஞ்செய்து தமக்குரித்தாகத் தம்முயிரைப் பெற்ற முனிவரிடத்திலே சாபாநுக்கிரகம் இருத்தலாலென்க. எனவே, தவஞ்செய்யாதவனுக்குத் தன்னுயிர் தனக்கு உரித்தாகா தென்பது நன்றாக விளங்குகின்றது காண்க. (9) தவஞ்செய்த லாகிய வல்லமையை அடைந்தவர்க்கு இயமனுடைய ஆணையைக் கடத்தலும் உண்டாகும்; இதற்கு மார்க்கண்ட முனிவரே சாட்சியா யிருக்கின்றார்.

ச. தவம் செய்யாதவருக்கு இம்மை யின்பமும் இல்லையாகிய தாழ்வு.

(10) இவ்வுலகத்திலே செல்வர்கள் சிலராவதற்குக் காரணம் தவஞ் செய்வார் சிலராயிருத்தலே. தரித்திரர் பலராவதற்குக் காரணம் தவஞ் செய்யாதவர் அநேகராயிருத்தலேயாம். எனவே, எவ்வளவு தவஞ்செய்வாரோ? அவ்வளவு செல்வம் பெறு வரென்பதாயிற்று. இங்கே செல்வமென்றது: ஞானத்தையும், தரித்திர மென்றது: அஞ்ஞானத்தையும் குறித்தன.

உ அ-ஆம் அதிகாரம்.

கூடா ஒழுக்கம்.

அஃதாவது:—தாம் வெறுத்துவிட்ட காம இன்பத்தை மன உறுதி யில்லாமையினாலே பின்னும் விரும்பும் வழி தோன்ற,அவ்வழியே நின்று தவத்தோடு பொருந்தாததாகிய தீய ஒழுக்கமாம்.

க. கூடா ஒழுக்கத்தினது குற்றம்.

(1) காமமானது தன்னுள்ளே வருத்திக் கொண்டிருக்கவும் காமமில்லையென்று சொல்லிப் பக்கத்திலுள்ளவரை வஞ்சிக்கு மன

த்தை யுடையவனது விவசாரஞ் செய்தலாகிய கள்ள ஒழுக்கத்தை அவனுடம்பாகி, அவனோடு கலந்து நிற்கின்ற பஞ்ச பூதங்களுங் கண்டு தம்முள்ளே சிரிக்கும். எனவே, ஒரு காரியத்தை யாருக்கு மறைத்துச் செய்தாலுந் தன்னுடம்பாகிய பஞ்சபூதங்களுக்கு மறைக்கலாகா தென்பதாயிற்று. (2) தன்னுடைய மனம் தானறிந்த கள்ள ஒழுக்கத்தில் அழுந்து மானால் வானுலகம்போல் உயர்ந்த தவவேடமானது ஒருவனுக்கு என்ன பயனைச் செய்யும்.? (3) மனத்தை அடக்கும் வல்லமை யில்லாத இயல்புடையவன் அவ்வல்லமையுடையவரது தவவேடத்தைக் கொண்டு மனம்போன வழி போகுதல் பசுவானது புலித்தோலை மூடிக்கொண்டு பயிரை மேய்ந்தாற் போலும். எப்படி யென்றால் "புலி பசித்தாற் புல்லைத் தின்னாது" என்ற பழமொழியால் தன்னை விரட்ட மாட்டார்களென்று புலித்தோலை மூடிக்கொண்டு பயிரை மேயும் பசுவைப்போல, பிறர் கண்டால் சந்நியாசி காமத்தை அநுபவிக்க மாட்டானென்று நினைத்துத் தன்னை வருத்தப் படுத்தா ரென்றெண்ணித் தவவேடம் பூண்டு விவசாரஞ் செய்யுஞ் சந்நியாசி யென்க. இதற்குச் சாட்சி, சந்நியாசி வேடங்கொண்டு வள்ளி நாயகியிடஞ் சென்ற முருகக் கடவுளை வள்ளி நாயகி பந்துக்களாகிய வேடர் கண்டு, அக்கடவுளின் கள்ளத்தை அறியாது நம்பி விட்டு விட்ட சரித்திரம் ஒன்றே போதும். (4) மேலே சொல்லிய வல்லமை யில்லாதவன் தவவேடத்திலே மறைந்து பிறர்க்குரிய மகளிரைத் தன்வசமாக்கலானது, வேடன் ஆளிருந்தால் தெரியாத ஒரு செடியிலே மறைந்திருந்து பறவைகளைப் பிடித்தல் போலுமாம். (5) பிறர் தம்மை நன்றாக மதிக்கும் பொருட்டு எல்லாப் பற்றையும் விட்டுவிட்டோமென்பவரது கள்ள ஒழுக்கமானது அப்பொழுது இனிமைபோலத் தோன்றினும் பின்னா என் செய்தோம் என் செய்தோமென்று வருந்தும்படி துன்பங்களையுங் கொடுக்கும்.

உ. கூடா ஒழுக்கத்தாரது குற்றமும், அவரை அறிந்து நீக்க வேண்டு மென்பதும்.

(6) மனத்தினாலே ஆசைகளை விடாதவராகி விட்டவர் போல நினைக்கும்படி, தானங் கொடுப்பவர் காண நடித்துக் காட்டி அவர் இப்பெரியவருக்குத் தானங் கொடுத்தால் மறுமையில் நற்

கதியடைவோ மென்றெண்ணி, கொடுக்கும் பொருளை வாங்கிக் கொண்டு அவரைத் தாழ்ந்த கதியடையச் செய்து வாழுங் கொடிய வரைப்போலும் இரக்க மில்லாதவரில்லையாம். எனவே, நல்லொழுக் கமும், இரக்கமும் இல்லாதவருக்குத் தானங் கொடுத்தால் உய ர்ந்தகதி யடையாமல் தாழ்ந்த கதியடைவரென்பதாயிற்று. (7) குன்றிமணியானது மேலே காட்டுஞ் சிவப்பு நிறத்தைப் போல வெளிவேடத்தினாலே நல்லொழுக்கம் உடையவர் போலக் காட்டி, அக்குன்றி மணியின் மூக்குக் கறுத்திருப்பது போல உள்ளே வஞ் சகத்தை வைத்துக்கொண்டிருக்கும பொய்த்துறவிகளும் இந்தப் பூமியிலிருக்கின்றார்கள்; அவரை ஆராய்ந்தறிந்து கொள்க. (8) இது வுமன்றி, மனத்தினிடத்தே காமம், வெகுளி, மயக்கங்கள் நீங்காம லிருக்க அவற்றை நீங்கின தவத்தாற் பெரியவர் போல நீரிலே விடியற் கால ஸ்நானஞ்செய்து பிறருக்குக் காட்டி, அந்த ஸ்நான மாகிய திரையினுள்ளே மறைந்து நடக்கு மனிதரும் இவ்வுலகத்தில் அநேகர் உண்டு. அவரையுந் தெரிந்தறிய வேண்டும்.

௩. கூடா ஒழுக்கத்தாரை அறியும் வழி.

(9) அம்பானது வடிவினாலே நேராயிருந்தாலுஞ் செய் கையினாலே பிறரைக் கொல்லுங் கொடிதாயிருக்கின்றது. வீணை யானது வடிவினாலே வளைவா யிருந்தாலும் செய்கையினாலே பிற ரைமகிழ்விக்குங் குணமுடையதா யிருக்கின்றது. அவை போலத் தவஞ் செய்வார் பார்வையினாலே நல்லவர் போலக் காணப்பட்டா லும் செய்கையினாலே தீயவராயிருப்பர். பார்வையினாலே தீயவர் போலக்காணப்பட்டாலுஞ் செய்கையினாலே காம முதலிய குற்றங் கள் நீங்கிய மகான்களாயிருப்பர். ஆதலால், வடிவத்தைக் கண்டு புகழ்தலும் இகழ்தலும் ஆகாவாம்.

௪. கூடா ஒழுக்கத்தை விட்டுத் தவஞ் செய்வோர்க்கு வேஷம் வேண்டாவாகிய அவரது சிறப்பு.

(10) தவஞ் செய்வார்க்கு உயர்ந்தோரால் பழிக்கத்தக்க தாகிய காமம் ஒன்றில்லாவிட்டால தலைமயிரைக் களைந்து விடுத லும், அம்மயிரைச் சடையாக்கலும், அல்லது வளர்த்தலும் வேண் டுவன வல்ல. எனவே, காமத்தை நீக்காயல் இம்மூன்றினாலும் மோக் ஷம் அடைய மாட்டாரென்பதாயிற்று.

உகூ-ம் அதிகாரம்.

கள்ளாமை.

அஃதாவது:—பிறருடைமையா யுள்ளவைகளில் யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துத் திருடிக்கொள்ள நினையாதிருத்தலாம். நினைத்தலுஞ் செயதலோ டொக்குமாதலால் நினையாதிருத்த லென்று கூறினர்.

க. துறந்தார்க்குக் களவாவது இதுவென்பதும், அதை நீக்க வேண்டு மென்பதும்.

(1) முத்தியை யிகழாமல் விரும்புவோனிவனென்று தவத்தோராலே நன்கு மதிக்கப் படுவோனாக வேண்டுமானால், பிறருடைய யாதொரு பொருளையும் வஞ்சித்துக் களவு செய்யாதிருக்கும்படி தன்னுடைய மனத்தைக் காக்க வேண்டும். (முத்தியை யிகழ்தலாவது: காட்சியே பிரமாண மென்றும், நிலம், நீர், நெருப்பு, காற்று, எனப் பூதம் நான்கே யென்றும், அந்நான்குங் கூடுதலின் சிறப்பினாலே தோன்றி, அவைகள் பிரிதலினாலே அழிவதாகிய உடம்பினிடத்தே அறிவு மதுவினிடத்தே களிப்புப்போல வெளிப்பட்டுக் கெடுமென்றும், இறந்த உயிர் மீளப்பிறவாதென்றும், இன்பமும் பொருளும் முயற்சியால் வருவதென்றுஞ் சொல்லும் உலோகாயத முதலாகிய மயக்க நூல்களைத் தெளிந்து அவைகளுக்கு ஏற்க நடத்தல். யாதொரு பொருளையு மென்றதனால் ஞான நூற்பொருளைக் குருவினிடத்து வழிபாடு செய்து பெற்றுக் கொள்ளாமல் வஞ்சித்துக் கவர்ந்து கொள்ளலுங் களவாகிய பாவமாம். இதற்குச் சாட்சியாக, க்ஷத்திரியரைக் கருவறுக்க வேண்டு மென்றும், அவருக்கு ஆயுத வித்தை மந்திரோபதேசஞ் செய்யக் கூடாதென்றும் இருந்த பரசுராமரிடத்தில் க்ஷத்திரியனாகிய கன்னன் பிராமண வேடங்கொண்டுபோய் ஆயுத வித்தை முதலியவற்றைக் கற்று வருங் காலத்தில் ஒரு நாள் அவன் தொடையினிடத்துப் பரசுராமர் தலைவைத்து நித்திரை செய்யும்போது, கண்ணபிரான் வண்டுருவங் கொண்டுபோய்க் கன்னனுடைய தொடையைத் துளைத்தலால், இரத்தம் பெருக் கெடுத்தோட வருந்தியும், கன்னன் குருவினுடைய நித்திரைக்குப் பங்கம் வருமென்று அவ்வருத்தத்தைச் சகித்துத் தொடையை அசையாதிருந்தனன். பரசுராமர் இரத்த வெள்ளத்தில் நனைந்து விழித்துப் பார்த்து நடந்ததை விசாரித்து இவன்

உள்ளபடியே பிராமணனானால் இவ்வளவு வருத்தம் பொறுக்கமாட்டான். க்ஷத்திரியனாக இருக்க வேண்டுமென்று சந்தேகித்துக் கன்னனை நோக்கி நீ யாவன்? உள்ளதைச் சொல்லென்று கேட்க, அவன் தன்னுடைய வரலாற்றைக்கூறுதலும், பரசுராமர் நீ வஞ்சகமாக வந்து ஆயுத வித்தை மந்திரோபதேசங்களைத் திருட்டுத்தனமாகக் கிரகித்துக்கொண்டதனால் நீ என்னிடத்திற் கற்ற வித்தைகள் காலத்துக்கு உதவாமற் போவனவாக என்று சபித்த கதையைக் கண்டு கொள்க. (2) தவத்தோர் தமது நெஞ்சினாலே பாவச் செய்கையை நினைத்தலுங் குற்றமாம். ஆதலால், அன்னியனுடைய பொருளை அவனறியாமல் வஞ்சித்து அபகரித்துக் கொள்வோமென்று நினையாதிருக்க வேண்டும்.

உ. களவை நீக்குதற்குக் காரணம்.

(3) களவு செய்தலினாலுண்டாகிய பொருளானது விருத்தியாவது போலத் தோன்றிப் பாவத்தையும் பழியையும்உண்டாக்கி வைத்துவிட்டுத் தருமத்தைத் தன்னுடன் கொண்டு போயழித்து விடும். (4) பிறர் பொருளைத் திருடும் மிகுந்த ஆசையானது அப்பொழுது இன்பமாகத் தோன்றி முடிவிலே பயனைத் தரும்போது துன்பத்தைக் கொடுத்து விடும்.

ங. களவும், துறவறமும், இருளும் ஒளியும்போல ஒன்றுக்கொன்று பகையாதலால் கூடி நிற்பனவல்ல.

(5) சீவகாருணியத்தின் உயர்ச்சியை யறிந்து அதன்மேலன்புடையவராயிருத்தலானது பிறர் பொருளைத் திருட நினைத்து, அவருடைய சோர்வை (சமயத்தை)ப்பார்த்துக் கொண்டிருப்பவரிடத்தில் இல்லையாம் (6)களவினிடத்தே மிகுந்த ஆசையை யுடையவர் உயிர்ப் பொருளையும்,அவ்வுயிர்க்கு அநாதியாய் வருகிற குற்றமாகிய வினை விளைவுகளையும், அவற்றால் அவ்வுயிர் பிறந்திறந்து வருதலையும், அதனை யொழித்தற்கு உபாயமான யோக ஞானங்களையும், அவ்விரண்டினாலடையு முத்தி யினையும் அளவு செய்தலாகிய வழியிலே நின்று, அதற்கேற்க நடக்கமாட்டார். (7) இந்த அளவாகிய பெருமையை விரும்பினவரிடத்தே களவென்று சொல்லப்படும் இருண்ட அறிவுடைமை யில்லையாம்.

ச. களவோடு நீங்காது நிற்பது வஞ்சனை.

(8) மேற்சொல்லியபடி உயிர் முதலியவற்றை அளத்தலை அறிந்தவரது மனத்திலே தருமம் நிற்பது போல, களவு தெரிந்தவரது மனத்திலே வஞ்சனையானது நிலைபெற்று நிற்கும்.

ரு. களவு செய்வார் கேடோ.

(9) களவொன்றையே தெரிந்தவர் முன் சொல்லப்பட்ட அளவல்லாத தீய நினைவுகளை நினைத்து, அப்பொழுதே கெடுவர். (தீய நினைவுகளாவன: பொருளுடையாரை வஞ்சிக்கும் விதமும் அவ்வஞ்சனையால் பொருளைத் திருடும் விதமும் திருடப் பட்ட பொருளைத் தாமநுபவிக்கும் விதமும் முதலானவைகள்.)

சு. களவு செய்வார்க்கும் செய்யாதார்க்கும் உண்டாகும் பயன்கள்.

(10) களவிலே பழகுவோருக்குத் தம்மோடொற்றுமையுடைய உடம்புந் தவறுதலடையும். களவிலே பழகாதவருக்கு அவ்வொற்றுமையில்லாமல் நெடுந் தூரமாகிய தேவருலகமுங் கைவசமாதல் தவறமாட்டாது. (தவறுதலாவது: மறுமையிலே கடவுளாலே தண்டிக்கப் படுதலல்லாமல், இம்மையிலும் அரசனாலே தண்டிக்கப்படுதலாம்.)

கூ0-ம் அதிகாரம்.

வாய்மை.

அஃதாவது:—மெய்யினது தன்மை.

க. கேட்டைத் தராத நடந்ததைச் சொல்லுதலும், நன்மையைத்தரும் நடவாததைச்சொல்லுதலும் மெய்ம்மையா மென்பதும், கேட்டைத்தரும் நடந்ததைச் சொல்லுதலும், நன்மையைத் தராத நடவாததைச் சொல்லுதலும் பொய்ம்மை யாமென்பதும்.

(1) மெய்ம்மையென்று சொல்லப்படுவது எதுவென்றால் பிறிதொரு உயிர்க்குச் சிறிதாயினுந் தீமையைத் தராத சொற்களைச் சொல்லுதலாம்; எனவே, நடந்ததைச் சொல்லுதல் மெய்ம்மையல்ல

வென்பதாயிற்று. ஆகவே, பிற உயிர்க்குத் தீங்கைத் தராவிட்டால் நடந்ததைச் சொல்லுதல் மெய்ம்மையா மென்பதும, தீங்கைத் தருமாறு பொய்ம்மையா மென்பதும் பெறப்பட்டன. (2) பொய்ம்மைச் சொற்களுங் குற்றமில்லாத நன்மையைப் பிறருக்குக் கொடுக்குமானல் மெய்ம்மைச் சொற்களோடு சம்பந்தமுடையன வாகும். (குற்றமில்லாத நன்மையாவது: தருமம். நன்மையைக் கொடுத்தலாவது: மரணத்தையாவது கேட்டையாவது நியாயமில்லாமலடைய நின்ற உயிர் அவற்றினின்று நீங்கி யின்புறுதல்.)

உ. பொய் மறைக்கப் படாததாயிருத்தலினல் அதைச் சொல்லலாகாது.

(3) தன்னுடைய மனத்தினலே அறியப்படுவதொன்றைப் பிறரறிந்தில ரென்று பொய் சொல்லக்கூடாது. அப்படி யல்லாமல் பொய் சொல்லுவானகில், அப்பொய்யை அறிந்த தன்மனமே பொய் சொன்ன பாவத்துக்குச் சாட்சியாக நின்று தன்னைக் கெடுத்து விடும்.

௩. இம்மைப் பயன்.

(4) தன்மனத்துக் கேற்ப ஒருவன் பொய் பேசாமால் நடப்பானயின், அவன் உயர்ந்தோரது மனங்களி லெல்லாமிருப்பான். எனவே, பொய்சொல்லாமலிருப்பது பெரிய தருமமென்பதாயிற்று.

௪. மற்றைத் தருமங்கள் கொடுக்கப்பட்டன எல்லாம் வாய்மை தானே தர வல்லது.

(5) ஒருவன் தன் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல், உண்மையைச் சொல்லுவானயின், அவன் தவமுந் தானமும் ஒருமிக்கச்செய்வாரினுஞ் சிறந்தவனவான். (6) புகழுண்டாதற்குக் காரணம் வேறில்லை. பொய் பேசாதவன் இல்லறத்தானனல் பொருள் சம்பாதிக்கை முதலானவைகளாலும், துறவறத்தானனல் உண்ணுமை முதலானவைகளாலும் வரும் வருத்தங்களடையாமல் எல்லாத் தருமங்களையும் பெறுவான். (7) இஃதன்றிப், பலவகைப் பட்டதருமங்களையுஞ்செய்யப்புகுந்தால் ஏதாவதொன்று தவறினற் குற்றமுண்டாகு மல்லவா? அக்குற்றம் வராமல் எல்லாத்தருமங்களும்

ஒருங்கு பெறுவதற்கு மேற்கூறிய வாறு பொய் சொல்லாதிரு த்தலொன்றையே செய்ய வல்லவனாயின், அது மிக நல்லதாம்.

௫. மெய்ம்மையாகிய தருமத்தின் முதன்மை.

(8) ஒருவனுக்கு நீரினாலே உடம்பு பரிசுத்தமடையும்; அதுபோலவே, மனம் மெய்ம்மையினாலே பரிசுத்தமடையும். (9) துறவினாலே உயர்ந்தோருக்குப் புறத்திருளை நீக்குகின்ற விளக்குக ளெல்லாம் விளக்குகளாவனவல்ல. அகத்திருளை நீக்குகின்ற பொய் சொல்லாமையாகிய விளக்கே விளக்காம். (10) எம்மாலே மெய்ந் நூல்களாகக் காணப்பட்டவற்றுள் யாதொரு விதத்தினாலும் மெய் ம்மையைப் பார்க்கினும் உயர்ந்த தருமங்களில்லை. (மெய்ந்நூல்களா வன: கடவுளாலும் அவனருள் வழிப்பட்டோராலுஞ் செய்தவேதா கமங்கள்.)

௩௧-ஆம் அதிகாரம்.

வெகுளாமை.

அஃதாவது:—கோபஞ் செய்தற்குக் காரணமாகிய குற்றம் ஒருவனி டத்தே யுண்டாகிய இடத்துங் கோபஞ்செய்யாதிருத்தல்.

௧. கோபஞ்செய்யாமல் இருக்கும் இடம்.

(1) தனக்குக் கீழ்ப்பட்ட எளியவனிடத்துக் கோபஞ்செல் லாமல் தடுப்பவனே தடுப்பவனாவான். தனக்கு மேற்பட்ட வலிய வனிடத்துக் கோபஞ் செல்லாமல் தடுத்தாலுந் தடுக்காமற் செலுத் தினாலும் ஒரு பிரயோசனமும் இல்லை. ஆயினுஞ் செலுத்தாதிருந் தால் தனக்குவருங் கேடில்லை யென்பதாம்.

௨. கோபத்தினது தீங்கு.

(2) கோபமானது தனக்கு மேற்பட்ட வலியவர்மேலே உண்டானால் தனக்கே அக்கோபம் தீங்கைத்தருவதாகும். தனக் குக் கீழ்ப்பட்ட எளியவர் மேலுண்டானால் அதைப் போலுந் தீமை யுடையவை வேறேயில்லை. (3) ஆதலால் யாரிடத்திலுங் கோபஞ் செய்வதை மறந்து விடவேண்டும். ஏனென்றால் தீமையுடையவை

யெல்லாம் அக்கோபத்தினால் உண்டாகும் என்க. (4) துறந்தோருக்குக் கருணையினாலுண்டாகிய முகமலர்ச்சியையும் மனத்தினிடத்து உண்டாகிய மகிழ்ச்சியையுங் கெடுத்தெழுகின்ற கோபத்தைப் பார்க்கினும் வேறாகிய பகைகளும் உண்டோ? இல்லை.

௩. கோபஞ்செய்தவருக்கு வருந்தீங்கு.

(5) ஒருவன் தன்னைத் தான் துன்பமடையாமற் காக்க நினைத்தானாகில் தன் மனத்திலே கோபம் வராமல் தடுக்கவேண்டும். தடுக்காவிட்டால் அக்கோபமானது தன்னைக் கெடுக்குங் கொடிய துன்பங்களை யுண்டாக்கும். (6) கோபமென்று சொல்லப்படுந் தீயானது தன்னைச் சுடுதலன்றித் தனக்கினமாய், தன்னைப் பிறவிக் கடலில் வீழாதெடுப்பவராகிய இதோபதேசஞ் செய்யும் மரக்கலம் போன்ற சற்குருவையுஞ் சுடும். (சுடுதல்: துன்பஞ் செய்தல்.) (7) இத்தகைய கோபத்தைத் தனது வல்லமையைக் காட்டுகிற ஒரு குணமென்று தன்னிடத்தே கொண்டவனுக்குப் பூமியிலே அறைந்தவனது கையானது அப்பூமியிலே படுதல் தப்பாத விதம் போல அவ்வல்லமையை இழந்து விடுதல் தவறமாட்டாது.

௪. கோபஞ்செய்யாதிருப்பதின் நன்மை.

(8) கொழுந்துவிட்டெரியுந் தீயானது தன்னை வந்து பற்றினாற் போலுந் துன்பந்தரும் பல செய்கைகளை ஒருவன் செய்தானாயினும், அவன் மேலே கோபஞ் செய்யாதிருத்தல் நல்லதாம்.

௫. கோபஞ்செய்யாதவருக்கு வரும் நன்மை.

(9) அருளுடைய மனத்தால் கோபத்தை நினையானாயின் அவன் தான் நினைக்கப்பட்ட இம்மை, மறுமை, மோக்ஷமாகிய இவையெல்லாம் ஒருமிக்க அடைவான்.

௬. கோபஞ்செய்தவர் செய்யாதவராகிய இருவர்பயன்.

(10) மேற்கூறியதறியாமல் கோபத்திலே மிகுந்தவர் உயிருடையவரா யிருந்தாலும் முன் சொன்ன பயனடையாமையாற் செத்தவரோடொப்பவ ராவார். அக்கோபத்தை நீக்கினவர் சாகுந் தன்மையுடையவரா யிருந்தாலும் பயன் அடைதற்கு உரியராதலால் முத்தி பெற்றாரோடொப்பாவார்.

௩௨-ஆம் அதிகாரம்.

இன்னா செய்யாமை.

அஃதாவது:—ஒருபயனைக் குறித்தாவது, வைரம் பற்றியாவது, சோர்விலாவது ஒரு உயிர்க்குத் துன்பந்தருஞ்செய்கைகளைச் செய்யாதிருத்தல்.

க. தமக்கோருபயனைக் குறித்துப் பிறருக்குத்துன்பஞ் செய்தலை விலக்கல்.

(1) யோகமாகிய சிறப்பினாலே தரப்படுவனவாகிய அட்டமாசித்தி முதலாகிய செல்வங்களைப் பெறலாமாயினும், அயலாருக்குத்துன்பந்தருஞ் செய்கைகளைச் செய்யாதிருத்தல் வேதாகம வழியிலே நின்ற குற்றமற்றோர் யாவருக்குங் கொள்கையாம்.

உ. வைரங்கொண்டு பிறர்க்குத் துன்பஞ்செய்தலை விலக்கல்.

(2) தம்மேலே கோபங்கொண்டு துன்பந்தருஞ் செய்கைகளை ஒருவன் செய்த இடத்தும் தாமுந் திரும்ப அத் துன்பந்தருஞ் செய்கைகளை அவன் மேற் செய்யாதிருத்தலும் மேலே சொல்லப்பட்ட குற்றமற்றவரது துணிவாகும். (3) அஃதன்றி, தாம் முன்பு துன்பந்தருவதொன்றைச் செய்யா திருக்க, தம்மேல் துன்பஞ் செய்தவர்க்கும் துறந்தவர் பொறுமையின்றித் துன்பத்தைச் செய்தாரானால் பின்பு அச் செய்கையானது கடக்கமுடியாத துனபத்தை அவருக்குக் கொடுக்கும். (துன்பமாவது: தவமிழந்து பழியும் பாவமும் எய்தல்.) (4) தமக்குத் துன்பந்தருஞ் செய்கைகளைச் செய்தவரைத் துறந்தோர் தண்டித்தலாவது, அவர் தாமே நாணும்படி அவருக்கு இனிமையான மகிழ்ச்சிகளைச் செய்து அவர் செய்த தீச்செய்கையை மறந்து விடுதலாம். மறவாவிட்டால், மற்றொருகாலம் அவர் மேற் கோபம் உண்டாகி அவருக்குத் தீங்கு செய்ய நேரும். ஆதலால், மறந்துவிட வேண்டியது அவசியமாம்.

௩. சோர்வினாலே துன்பஞ்செய்தலை விலக்கல்.

(5) வேறோருயிருக்கு வந்த துன்பந்தருஞ் செய்கைகளைத் தமக்கு வந்த துன்பந்தருஞ் செய்கைகள் போல நினைத்து, அவ்வுயிரைக் காப்பாற்றாத இடத்துத் துறந்தோர்க்கு, உயிர் முதலானவைகளை உள்ளவாறுணர்ந்த அறிவினாலேயாகும் ஒரு பயனில்லையாம்.

(காப்பாற்றலாவது: நடத்தல், இருத்தல், நிற்றல், உண்டல் முதலாகிய தமது தொழில்களாலும் பிறவற்றாலும் வருந்துன்பங்களை முன்னேயறிந்து விலக்கல்.)

௪. பொதுவகையால் துன்பஞ்செய்தலை விலக்கல்.

(6) இவை மனிதருக்குத் துன்பந் தருவனவென்று அனுமானப் பிரமாணத்தினாலறியப்பட்டவைகளைப் பிறரிடத்தே செய்யாதிருக்குஞ் செய்கை துறந்தோருக்கு நிச்சயமாகவேண்டும். (அனுமானப்பிரமாணமாவது: இன்னது செய்தா லின்னது வருமென்றறிதல்) (7) மனத்தினாலறிந்த துன்பந்தருமவைகளை எவ்வளவு சிறிதாயினும் எந்தக்காலத்திலும் யாரொருவருக்குஞ் செய்யாதிருத்தல் முதன்மையான தருமமாம். (8) பிறர் செய்யுந் துன்பந்தருஞ் செயல்கள் தன்னுயிர்க்குத் துன்பந் தருவனவாந் தன்மையை யனுபவித்தறிபவன் நிலையுள்ள பிறவுயிர்களுக்கு அத்துன்பந்தருஞ் செயல்களைத் தான் செய்தல் என்ன காரணத்தாலோ? தெரியவில்லை.

ரு. பொதுவகையால் துன்பஞ்செய்தவருக்கு வருந்தீங்கு.

(9) துறந்த பெரியவர் பிறருக்குத் துன்பந்தருமவைகளை ஒரு முகூர்த்த காலத்தின் முற்பாகத்திலே செய்தால் அம்முகூர்த்த காலத்தின் பிற்பாகத்திலே தமக்குத் துன்பந் தருமவைகள் தம்மாற் செய்யப்பட்ட அவர் செய்யாதிருக்கத் தாமே வந்து சேரும். (முகூர்த்த மென்பது: மூன்றே முக்கால் நாழிகை; இரண்டு நாழிகை யென்பாரும் உண்டு.) (10) துன்பமெல்லாம் பிறவுயிர்க்குத் துன்பஞ் செய்தவரை அடையுமாதலால் தம்முயிர்க்குத் துன்பமில்லாதிருத்தலை விரும்புவோர் பிறவுயிர்க்குத் துன்பஞ் செய்யமாட்டாரென்பதாம்.

௩௩-ஆம் அதிகாரம்.

கொல்லாமை.

அஃதாவது:—* ஐயறிவுடையவை முதல் ஓரறிவுடையவை யீறாகிய உயிர்களைச் சோர்வினாலுங் கொலை செய்யாதிருத்தல்.

௧. கொல்லாமையின் சிறப்பு.

(1) தருமங்களெல்லாமாகிய செய்கை யெதுவென்றால், ஒரு உயிரையுங் கொல்லாமையாம். உயிர்களைக் கொல்லுதல் பாவச் செய்கைகளெல்லாவற்றையுங் கொடுக்கும். (2) ஆதலால் உண்ணப்பட்ட உணவுகளைப் பசித்த உயிர்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்து மேற் கூறிய ஐவகை உயிர்களையுங் காப்பாற்றல் துறந்தவர்க்குத் திரட்டிவைக்கப் பட்ட தருமங்களெல்லாவற்றினும் முதன்மையான தருமமாம். (3) அத்தருமங்களுள் தனக்குத் தானே சமமாக இருப்பதாக நல்லது கொல்லாமையாகிய தருமம்; அது நீங்கினால் பொய் சொல்லாமையாகிய தருமம் அக்கொலை செய்யாமையின் பின்னே நிற்க நல்லதாம். எனவே, இவ்விரண்டினும் முன்னே தலைமையாய் நிற்குந் தருமம் கொலை செய்யாமை யென்பது பெறப்பட்டது.

௨. கொல்லாமையையுடையதே நன்மார்க்கம்.

(4) மேற் பதவியும், மோக்ஷமும் பெறுவதற்கு நல்ல வழியென்று சொல்லப்படுவது எதுவென்றால், யாதொரு உயிரையுங் கொல்லாமையாகிய தருமத்தை நினைக்கும் மார்க்கமாம். (உயிரைக் கொல்லுதலாவது: அவ்வுயிரை உடம்பை விட்டுப் பிரித்து விடுதல்.)

௩. கொல்லாமையை மறவாதவனது உயர்ச்சி.

(5) சரமும் அசரமுமாகிய இருவகைப் பிறப்புக்களினும் இன்பமில்லாமல் உள்ளவை யெல்லாந் துன்பமே யாகிய நிலையைக் கண்டு பயந்து அத்துன்பம் நீங்குதற்குப் பிறவாதிருக்கும்பொருட்டு மனைவாழ்க்கையைத் துறந்தவரெல்லாருள்ளும் கொலைப்பாவத்துக்குப்பயந்து, கொல்லாமையாகிய தருமத்தை மறவாதவன் உயர்ந்தோனாவான்.

---

* ஐயறிவுடைய உயிர்களாவன: மனிதருயிர்கள்; இவற்றை ஆறறிவுடையன என்பார் சிலர்.

௪. கொல்லா விரதத்தோர்க்கு வரும் நன்மை.

(6) உயிரைக்கொண்டு போகும் இயமனானவன் கொலை செய்யாமை யாகிய விரதத்தை மேலாகக் கொண்டு நடப்பவனது ஆயுளின் மேலே பிரவேசிக்கமாட்டான். எனவே, கொலைசெய்யாதவன் நீண்டகாலமிருந்து மோக்ஷத்தை அடைவான் என்பது கருத்து.

௫. கொலை செய்தலின் குற்றம்.

(7) தான் வேறொன்றினது இனிய உயிரை அதன் உடம்பினின்று நீக்குதலாகிய கொலையைச் செய்யாத இடத்து, தன்னுயிர் தன்னுடம்பை விட்டு நீங்கிப்போமாயினும் ஒருவன் அக்கொலையைச் செய்யாதிருக்கவேண்டும்; இதன் கருத்து, தன்னை ஒன்று கொன்றாலுந் தான் அதனைக் கொல்லலாகா தென்பதுவேயாம். (8) யாகத்திலே ஒரு உயிரைக்கொன்றால் சுவர்க்கத்தை யடையும் இன்பமிகுவதாகிய செல்வமானது பெரிதென்று சொல்லப்பட்டாலும், துறவாலுயர்ந்தோர்க்கு ஒரு உயிரைக் கொன்று அதனாலாகுஞ் செல்வமானது தாழ்ந்ததாம். ஏதனாலென்றால், சுவர்க்கத்துக்கு மேற்பட்ட மோக்ஷம் கொலைசெய்யாமையாற் கிடைத்தலாலென்க.

௬. கொலை செய்வோர்க்கு வருந் தீங்கு.

(9) கொலைத் தொழிலையுடையவராகிய மனிதர் அத்தொழிலின் இழிவை அறியாத மனமுடையவராயிருந்தாலும், அத்தொழிலின் இழிவை அறிவோரது நெஞ்சிலே புலைத்தொழிலராய்க் காணப்படுவர். எனவே, கொலைசெய்வோர் எவராயினும் புலையராவரென்பதாயிற்று. (10) பார்க்கக் கூடாத நோயுடம்புடனே தரித்திரத்தோடு கூடிய வாழ்க்கையுடையவரை இவர் முற்பிறப்பிலே உயிர்களை அவை நின்ற உடம்புகளிலிருந்து நீக்குதலாகிய கொலை செய்தவரென்று வினைப்பயன்களை அறிந்தோர் சொல்லுவர். எனவே, இப்பிறப்பிற் கொலை செய்தால் மறுபிறப்பிலே வியாதியும், தரித்திரமும நீங்காமலநுபவிக்க வருமென்று பயந்து ஒவ்வொருவருங் கொலை செய்யாதிருக்க வேண்டு மென்பதாயிற்று. அருளுடைமைமுதல் கொல்லாமை இறுதியாகச்சொல்லப்பட்ட இவற்றுள்ளே சொல்லப்படாத விரதங்களும் அடங்கும்; அஃதறிந்து அடக்கிக் கொள்க.

ஞானம்.

அஃதாவது:—மேற்கூறிய விரதங்களினாலே அந்தக்கரணங்கள் பரிசுத்தமான இடத்து உண்டாவதும், மோக்ஷத்தைத் தருவதுமாகிய அறிவு; அது: நிலையாமை முதல் அவாவறுத்தலிறுதியாகிய நான்கதிகாரத்தினுள்ளடக்கிச் சொல்லப்படுகின்றது.

௩௪-ஆம் அதிகாரம்.

நிலையாமை.

அஃதாவது:—காணப்பட்டவைகளெல்லாம் அழியப்பட்டனவாதல்.

க. நிலையாதவைகளை நிலையுடையவை யென்று கருதுதல் பிறவித்துன்பத்துக்குக் காரணம் ஆதலால் அது: மோக்ஷமடைவார்க்கு இழுக்கு.

(1) *நிலையில்லாதவைகளை நிலையுடையவை யென்று நினைக்கிற அற்பப் புத்தி யுடையவரா யிருத்தலானது துறந்தோர்க்கு இழிவாகும். (நிலையில்லாதவைகளாவன: காணப்பட்ட எல்லாப்பொருள்களுமாம்.)*

உ. செல்வம் நிலையாமை யென்பதும், செல்வம் உள்ள பொழுதே அறஞ் செய்யவேண்டுமென்பதும்.

(2) *கூத்தாடுகின்ற சபையினிடத்தே கூத்துக்காரணமாகக் காண்போர் கூட்டம் வருதல்போல, ஒருவனிடத்தே நல்வினை காரணமாகப் பெருஞ்செல்வமானது வந்து சேரும். கூத்து முடிந்தவுடனே அக்கூட்டம் போதல் போல அச்செல்வம் அந்நல்வினை முடிந்த இடத்தே போய் விடும்.* (3) *ஆதலால், செல்வத்தை ஒருவன் பெற்றால் அது நிலையாத இயல்பினையுடையதென்றறிந்து அச்செல்வத்தாலே செய்யப்படுந் தருமங்களைக் காலந்தாழாமல் உடனே செய்ய வேண்டும். (தருமங்களாவன: பிரயோசனங் கருதாது செய்யும் கடவுட் பூசையும், தானமும் முதலாயின.)*

௩. உடம்புகளுக்கு அளவு செய்யப்பட்ட நாள் கழியும் விதம்.

(4) *நாளென்று அளவு செய்யப்படுவதாகிய ஒரு கால அளவுபோலத் தன்னைக்காண்பித்துச் சிறிது சிறிதாக அறுத்துச்*

செல்லும் வாளாயுதத்தின் வாயினிடத்து உடம்பானது இருக்கின்றது. அதையறிவாரில்லை. அறிந்தால் சரீர நிலையாமை தெளிவாகத் தோன்றும்.

௪. மேற்கூறிய நாள் கழிந்தால் நிலையாமையுண்டாம். அது வருமுன் அவசரமாக அறஞ்செய்க.

(5) பேசாதிருக்கும்படி நாவையடக்குகிற விக்கலானது மேலெழுவதற்கு முன்னே மோக்ஷத்துக்கு ஏதுவாகிய தருமங்களை விரைந்து செய்யவேண்டும்.

௫. உடம்புகள் ஓரே இடத்தில் பிறந்த அளவிலே இறத்தல்.

(6) நேற்றிருந்தவனொருவன் இன்று இறந்து போனானென்னும் பெருமையை யுடையதாய் இந்த உலகமிருக்கின்றது.

௬. உடம்புகள் ஒரு கணமாயினுமிருக்குமென்று நம்பலாகாது.

(7) அறிவில்லாதவர் ஒரு கணப்பொழுதுந் தம்முடம்பும் உயிருங்கூடி வாழ்ந்திருத்தலை யறியமாட்டார். அத்தன்மையுடையாராகியும் கோடிக்கு மேற்பட்ட பலவாகிய நினைவுகளை நினைக்கின்றனர். (பலவாகிய நினைவுகளாவன: தாமநுபவிக்கும் இன்பங்களுக்கு உரியவைகளாகும் விதமும், அதற்குப் பொருள்வேண்டும் விதமும், அது தம் முயற்சிகளால் வரும் விதமும், அம்முயற்சிகளைத் தாம் செய்யும் விதமும், பொருள்வந்தபோது வரும் இடையூறுகளை நீக்கும் விதமும், அப்பொருளைக் காப்பாற்றும் விதமும் முதலானவைகள்.)

௭. உடம்புகள் உயிர் நீங்கிய இடத்துக் கிடக்கும் விதம்.

(8) சரீரத்தோடு உயிர்க்கு உண்டாகிய சிநேகமானது முட்டையோடிருந்த பறவை பருவம் வந்தபோது அம்முட்டை தனித்துக் கிடக்க, அதை விட்டுப் பறந்துபோகுந் தன்மையுடையதாகும். ஆதலால் எப்பொழுதும் சரீரமும், உயிரும் இருந்தபடியே யிருக்குமென்று நம்பவேண்டாம்.

௮. உடம்புகளுக்கு இறப்பும் பிறப்பும் மாறி மாறி வரும் விதம்.

(9) ஒருவனுக்கு மரணம் வருதல் தூக்கம் வருதல்போலும். அதன் பின்னே பிறப்பு வருதல் தூங்கிவிழித்தல் போலுமாம். இவ்விதம் சீக்கிரம் மாறிமாறி வருதலை [illegible] அறியவேண்டும்.

௰. உடம்புகள் உயிருக்கு உரியவை அல்ல.

(10) வாத பித்த சிலேற்பனங்களது வீடுகளாகிய உடம்புகளுள் ஒதுக்குக் குடியிருந்துவந்த உயிருக்கு என்றைக்கும் இருப்பதாகிய ஒரு வீடானது இது வரையில் அமைந்ததில்லை போலும். (ஒதுக்குக்குடியாவது: தனியே இல்லாமல் ஒருவரிருக்குங் குடியில் இரவலாக இருக்குங் குடியாம்.)

௩௫-ஆம் அதிகாரம்.

துறவு.

அஃதாவது:—புறமாகிய செல்வத்திலும், அகமாகிய உடம்பிலும் உண்டாகிய ஆசையை அவைகளது நிலையாமையைப் பார்த்து விடுதல்.

க. எனதென்னும் புறப் * பற்று விடுதல்.

(1) ஒருவன் எந்தெந்தப்பொருளில் ஆசையை நீக்கினானோ அந்தந்தப் பொருளினாலே துன்பத்தை யடையமாட்டான். எனவே, ஆசை வைக்கப்பட்ட பொருள்களினாலே துன்பத்தை யடைவானென்பதும், எல்லாப் பொருள்களிலும் ஒருமிக்க ஆசையை விட்டுவிட்டால் ஒருதுன்பமும் அடையமாட்டானென்பதுங் காண்க. (2) எல்லாப் பொருள்களையுந் துறந்தபின் ஒருவனுக்கு இப்பிறப்பிலே உண்டாகு முறைமையுடைய இன்பங்கள் பலவாம்; அவ்வின்பங்களை விரும்பினால் இளமைப் பருவத்தே எல்லாப் பொருள்களையுந் துறக்கக் கடவன். (இன்பங்களாவன: மேற்கூறிய பொருளுக்காக மனமும், வாக்கும், காயமும், வருந்தாது நிற்றலாலும் அவற்றை நல்வழியிலே செலுத்தலாலும் வருவனவாகிய பயன்களாம்.) (3) முத்தியை யடைவோருக்கு மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்பொறிகளுக்குரிய பரிசம், ரசம், ரூபம், கந்தம், சத்தங்களாகிய புலன்களைக் கெடுத்தல் வேண்டும். கெடுக்கும் போது அப்புலன்களை அநுபவிக்கும் பொருட்டுத் தாம் படைத்த பொருள்களை யெல்லாம் ஒருமிக்க விட்டுவிட வேண்டும். (4) மேற்கூறிய முத்தியை அடையத் தவஞ் செய்வோருக்கு ஆசைப்படுவதொருபொருளும் இல்லாதிருத்தலே நல்லதாகும். யாதாயினுமொரு பொருளிருந்தால் அத்தவத்தைப் போக்குதலால் அது திரும்பவும் மயக்கத்துக்கு ஏதுவாகும்.

---

* பற்று-ஆசை.

இருவகைப்பற்றையும் விட்டவருக்கே மோக்ஷம் உண்டு.

(5) பிறப்பை நீக்குமுயற்சியைக் கொண்டவருக்கு அம்முயற்சிக்கு உதவியாகிய சரீரமும் அதிகமென்றால் அதற்குமேலும் யாதொரு சம்பந்தமுமில்லாத சில பொருளை விரும்பிச் சேர்ப்பதாலென்ன பிரயோசனம்? (6) தானல்லாத உடம்பை யானென்றும் தன்னோடு சம்பந்தமில்லாத பொருளை எனதென்றும் நினைத்து அவைகளிலே ஆசைவைத்தற்கு ஏதுவாகிய அறியாமையைக் குரு உபதேசத்தாலும் யோகாப்பியாசத்தாலுங் கெடுப்பவன் தேவர்களுக்குஞ் சேருதற்கரிய மோக்ஷவுலகத்திலே போய்ச் சேர்ந்திருப்பான்.

இருவகைப்பற்றுக்களை விடாதவருக்கு மோக்ஷம் இல்லை.

(7) அகப்பற்று, புறப்பற்று என்னும் இருவகை ஆசைகளையும் இறுகப்பற்றி விடாதவரைத் துன்பங்களும் இறுகப்பற்றிவிட்டு நீங்காவாம்; இதனால், "ஆசையற்றவரே அல்லலற்றவ" ரென்றறிக.

பற்றறுதலாற் பிறவியறுதலும் அறாத பொழுது பிறவி அறாமையுங் காணப்படும்.

(8) எல்லாப் பற்றையும் விட்டவரே முத்தியை அடைந்தவராவர். அப்படி விடாதவர் மயக்கமுற்றுப் பிறப்பாகிய வலையில் அகப்பட்டவராவர். (9) இவ்விதம் ஒருவன் இருவகை ஆசைகளையும் விட்டபோதே, அவ்விடுதலானது அவனது பிறவியைக் கெடுக்கும். விடாதபோது அவ்விருவகை ஆசையால் பிறப்பதும் இறப்பதுமாகிய நிலையாமை வந்துகொண்டேயிருக்கும்.

பற்று விடுதற்கு உபாயம்.

(10) அகத்திலும் புறத்திலும் விடாது வந்த ஆசையானது விடுதற்கு எல்லாப் பொருள்களையும் பற்றி நின்றே அவைகளோடு பற்றில்லாத கடவுளாலே அருளிச் செய்யப்பட்ட முத்தி வழியை இதுவே நல்ல வழி யென்று மனத்திற் கொள்ளவேண்டும். அவ்விதம் கொண்டு, அம்முத்தியினிடத்தே தியான நிட்டைகளை அம்மனத்தாற் செய்யவேண்டும்.

௩௬-ஆம் அதிகாரம்.

மெய்யுணர்தல்.

அஃதாவது:—பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் *விபரீத சந்தேகங்கள் இல்லாமல் உண்மையாலறிதல்; இதை வடநூலார் தத்துவஞான மென்பர்.

௧. பிறப்பு, துன்பமென்பதும் அதற்கு முதற்காரணம் விபரீத ஞானமென்பதும்.

(1) பொய்ப் பொருள்களை மெய்ப் பொருள்களென்றறிகின்ற விபரீத ஞானத்தினாலே இன்பமில்லாத சனன முண்டாகும். பொய்ப் பொருளாவது: அநித்திய மாகிய பிரபஞ்சமாம்; இதனாலே பிறவி, துன்பமென்பதும் அப்பிறவி விபரீத ஞானத்தால் வருமென்பதுங் காண்க.

௨. உயர்வு ஒப்பில்லாத இன்பம் மோக்ஷமென்பதும், அதற்கு நிமித்த காரணம் தனிப்பொருளாகிய பிரம மென்பதும்.

(2) மேற் சொல்லிய விபரீத ஞானத்தினின்றும் நீங்கிக் குற்றமற்ற மெய்யறிவினை உடையவருக்கு அவ்வறிவானது பிறவியை நீங்கச் செய்து முத்தியைக் கொடுக்கும்.

௩. மெய்யையுணர்ந்தவர்க்கே முத்தியுண்டென்பதால் ஆம் மெய்யின் சிறப்பு.

(3) மறுபிறப்பும் இருவினைப் பயன்களும் உண்டோ இல்லையோ?வென்று ஒன்றிலே துணிவு பிறவாமல் நிற்குஞ் சந்தேகத்திலிருந்து அவையுண்டென்று மெய்யுணர்ந்தவருக்குத் தாம் அடைந்து நின்ற இந்நில வுலகத்திலும் இனி யடைவதாகிய மோக்ஷ உலகம் சமீபமாதலை யுடையதாம். (4) மேற்கூறிய மெய்ம்மையறியாதவருக்குச் சத்த, பரிச, ரூப, ரச, கந்தங்களாகிய ஐந்தனிடத்திலுஞ் செல்லும் ஐந்து உணர்வை யுடைய மனம் அவைகளிற் செல்லாமல் வசப்பட்டாலும் பிரயோசன மில்லை.

௪. மெய்யுணர்வினது இலக்கணம்.

(5) எப்பொருள் எந்த இயல்புடையதாய்த் தோன்றினும் அத்தோன்றிய விதத்தைக்கண்டதோடு விடாமல் அப்பொருளினிட

* விபரீதம் - ஒன்றையொன்றாகக் காணுதல்.

த்திருந்தும் உண்மை யாகிய பொருளைக் காண்பது மெய்யறிவாம். அஃதெப்படி யென்றால், அரசன சேரமான் என்றொருவனைச் சொன்னால் அரசனென்பதோர் சாதியும் சேரமானென்பதோர் குடியும் பொய்யாதலால் அப்பொய்மை நீக்கி அவனைப் பிருதிவி முதல் உயிரீறுகிய தத்துவங்களின் கூட்டமென்றறிந்து, அத்தத்துவங்களை நிலம் முதலாகிய காரணங்களுள் ஒடுக்கிக் கொண்டு போய் முடிவிலே காரண காரியம் இரண்டுமில்லாமல் நிற்பதனை அறிதலாம.

௫. மோக்ஷத்துக்கு முதற்காரணமாகிய முதற் பொருளை அறிதற்கு உபாயம் மூன்று. அவற்றுள், கேட்டல்.

(6) இம்மையிலே இப்பிறப்பினிடத்து ஞானசாரியரிடத்தில் உபதேசஞானத்தைக் கேட்டு, அதனாலுண்மைப் பொருளை உணர்ந்தவர் திரும்பி இப்பிறப்பில் வாரா நெறியாகிய மோக்ஷ நெறியை யடைவர். இது, கேள்வி ஞானமாம்.

௬. மேலே கேட்டதைச் சிந்தித்தல்.

(7) அவ்விதங் கேட்கப் பட்ட உபதேசப் பொருளை மனமானது நிச்சயப்படப் பிரமாணங்களாலும், யுக்தியினாலும ஆராய்ந்து அதனால் முதற் பொருளை அறிவானானால் அவனுக்குப் பிறப்பு திரும்ப உள்ளதாக நினைக்க வேண்டுவதில்லை.

௭. மேற்சிந்தித்ததைத் தெளிதல்.

(8) பிறவிக்கு முதற் காரணம் எனப்படுகிற அஞ்ஞானங் கெட மோக்ஷத்துக்கு நிமித்தகாரண மெனப்படுகிற பிரம மெனனப் பட்ட முதற் கடவுளை அறிவதே ஒருவனுக்கு மெய்புணர்வாகும்.

௮. ஞான யோக முதிர்ச்சி யுடைய உயிரைப் பின் வரும் துன்பங்கள் சேரமாட்டாமையாற் கெட்டு விடும்.

(9) எல்லாப் பொருளுக்குஞ் சார்பாகிய பிரமப் பொருளை யுணர்ந்து, இருவகைப் பற்றுக்களுங் கெட நடக்க வல்லவனாயின், முன் அவனைச் சேர்தற்குரியவையாய் நின்ற துன்பங்கள் பின் அவ்வுணர்வையும் நடக்கையையும் அழித்து, அவனைச் சேரமாட்டாவாம. (நடக்கையாவது: யோகவழி நடத்தல்)

௯. காரணமாகிய குற்றங்களைக் கெடுத்தோர் காரியமாகிய இருவினைகளைச செய்யாமையால் அவருக்கு வருதற்குரிய துன்பங்களும் இல்லை.

(10) ஞான யோகங்களின் முதிர்ச்சி யுடையவருக்கு விருப்பு, வெறுப்பு, அநாதியாகிய அஞ்ஞானம் எனப்படுகிற மூன்று குற்றங்களின் பெயருங் கெடுதலால் அக் குற்றங்களின காரியமாகிய வினைப்பயன்கள உண்டாகுதல் இல்லையாம.

௩௭-ஆம் அதிகாரம்.

அவா அறுத்தல்.

அஃதாவது:—௩௬-ஆம் அதிகாரம் ௯, ௧௦ வசனங்களிற் கூறியபடி முன்னும் பின்னும் வினைத்தொடர்பறுத்தார்க்கு, நடு நின்ற உடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களும் நின்றமைபால் வேதனையுற்றி ஒவ்வோரிடத்துந் துறக்கப்பட்ட புலன்களின் மேலே பழைய பழக்க வசத்தினாலே நினைவு செல்லு மல்லவா? அந்நினைவும் பிறவிக்கு வித்தாமாகலால் அதனையிடைவிடாத மெய்யுணர்வால் அறுத்தல். (அவா-ஆசை.)

௧. பிறவிக்கு ஆசை வித்து.

(1) சகல உயிர்களுக்கும் எக்காலத்தினுங் கெடாது வருகிற பிறவியை விளைப்பதாகிய விதை ஆசையாகுமென்று நூலோர் சொல்லுவர்.

௨. பிறவாமைக்கு வழியென்பதும் மேலாகிய செலவமென்பதும் வேண்டாமை யாதலால் அதன் சிறப்பு.

(2) பிறவி, துன்பமாயிருத்தலை அறிந்தவன் ஒன்றை விரும்பினால் பிறவாதிருத்தலை விரும்பவேண்டும். அப்பிறவாமையானது எதனால் வருமென்றால் தானொரு பொருளையும் இச்சியாதிருத்தலை விரும்பினால் அதனால் வருமென்க. (3) ஆதலால் ஒரு பொருளையும் இச்சியாதிருத்தல் போலும் மேலாகிய செல்வமானது காணப்படுகிற இவ்வுலகத்தில் இல்லை இம்மட்டோ? கேட்கப்படுகிற அவ்வுலகத்திலும் இல்லையாம.

௩. ஆசையைக் கெடுத்தல் முத்திக்கு நேரே காரணமென்பதும் அது வரும் வழியும்.

(4) ஒருவருக்கு முத்தி யென்று சொல்லப்படுவது ஆசை யில்லாமையாம். அவ்வாசை யில்லாமை யானது மெய்ம்மையை யிச்சிப்பாராகில் அவருக்குத் தானே யுண்டாகும்.

௪. ஆசையற்றவரது சிறப்பு.

(5) பிறவி அற்றவ ரென்று சொல்லப்படுவோர் அதற்கு நேரே காரணமாகிய ஆசை அற்றவரே. மற்றைக் காரணங்கள் அற்று ஆசை யொன்றும் அறாதவர் அக்காரணங்களாலே சில துன் பங்கள் அற்றவரல்லாமல், ஆசை யற்றவர் போலப் பிறவியற மாட் டாராம்.

௫. ஆசையின் குற்றமும், அதனை வரவொட்டாமல் தடுப்பதே அறமென்பதும்.

(6) முற்றத் துறந்து மெய்யுணர்தலாகிய காரணம்பெற்று அதனால் முத்தியை அடைதற்குரியவனாகிய ஒருத்தனை, மறவி வழி யினாலே நுழைந்து பின்னும் பிறவி வழியிலே தள்ளிக்கெடுக்க வல் லது ஆசையாம். ஆதலால், பயந்து அவ்வாசையை வரவொட்டா மல் தடுப்பதே துறவறமாம்.

௬. ஆசையைக் கெடுத்தலின் சிறப்பு.

(7) ஒருவன் ஆசையை முழுவதுங் கெடுத்தால் அவனுக் குப் பிறவித்துன்பங்களால் அழியாமைக்கு ஏதுவாகிய துறவறங் கள் மெய் வருந்தாத வழியினாலே யுண்டாகும்; இதனால் வருந்தித் தவஞ் செய்ய வேண்டுவதில்லை யென்பதாயிற்று.

௭. ஆசையே துன்பத்திற்குக் காரணம்.

(8) ஆசையில்லாதவருக்கு யாதொரு துன்பமுமில்லையா கும். முத்தியை யடைதற்கு விரோதமாகிய பிற காரணங்களெல் லாம் இல்லாதிருந்தும் ஆசை ஒன்று மாத்திரம் உண்டானால் அத னால் தன்னாலும் பிறராலும் தெய்வத்தாலும் வரும் எல்லாத் துன் பங்களும் அளவில்லாமல் மேலும் மேலும் வந்து சேரும்.

௮. ஆசையற்றவர் முத்தி யின்பத்தை உடலோடு நின்றே அடைவர்.

(9) ஆசை யென்று சொல்லப்படுகிற பெரிய துன்பமானது ஒருவனுக்குக் கெட்டால் அவனை மோக்ஷமடைந்த இடத்துமாத்திர மல்ல, உடம்போடு கூடி நின்ற இவ்வுலகத்தும் ஆனந்தம் அவனை விட்டு நீங்காது.

௯. மோக்ஷமாவது இதுவென்பதும், அஃது ஆசையைக் கெடுத்தவருக்கு அப்போதே உண்டாமென்பதும்.

(10) ஒருகாலத்தும் பூர்த்தியாகாத இயல்பினை யுடைய ஆசையை ஒருவன் விடுவானாயின், அவனுக்கு களிப்பு, கவலை, பிறப்பு, பிணி, மூப்பு, இறப்புக்களில்லாமல் எப்போதும் ஒரு நிலை மையனாந் தன்மையை அவ்வாசையை விடுதலானது கொடுக்கும். இந்த நிலைமை உடையவனே சீவன் முத்தனென்று பெரியோர் சொல்லுவர்.

௩௮-ஆம் அதிகாரம்.

ஊழ்.

அஃதாவது;—நல்வினைப் பயனாகிய இன்பமும், தீவினைப் பயனாகிய துன்பமும் அவ்வினைகளைச் செய்தவனையே சென்றடைதற்கு ஏதுவாகிய நியதியாம். ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பவை ஒருபொருட் சொற்கள்.

௧. பொருள்களுக்குக் காரணமாகிய ஊழின் வலிமை.

(1) ஒருவனுக்குக் கையிலிருக்கும் பொருள் விருத்தியா தற்குக் காரணமாகிய ஊழினாலே முயற்சியானது உண்டாகும். அப்பொருள் கெடுதற்குக் காரணமாகிய ஊழினாலே சோம்பலானது உண்டாகும். (2) எல்லா அறிவும் உண்டாயிருந்தாலுங் கைப் பொருளை யிழத்தற்குரிய ஊழ் பொருந்திய இடத்து அவ்வூழ் அவ்வறிவை அறியாமையாகச் செய்யும். அறிவு சுருங்கியிருந்தா லும் அப்பொருளை விருத்தி செய்தற்குக் காரணமாகிய ஊழ் பொருந்திய இடத்து அவ்வூழ் அவ்வறிவை விரியும்படி செய்யும். (3) அறிவை

அறியாமையாகச் செய்யும் ஊழுடைய ஒருவன் நுட்பமான பொருள்களையுடைய பல நூல்களையுங் கற்றானாயினும் பின்னுந் தனது ஊழினாலாகிய அறிவே மேற்படும். (4) உலகத்தில் ஊழினது இயற்கையானது இரண்டு கூறாயிருக்கின்றது. ஆதலால், செல்வமுடையராதலும் வேறு. அறிவுடையராதலும் வேறு. எனவே, செல்வத்தை யுண்டுபண்ணும ஊழ் அறிவை யுண்டுபண்ணாது. அறிவை உண்டுபண்ணும் ஊழ் செல்வத்தை உண்டுபண்ணாது. செல்வமும் அறிவும் ஒருவரிடத்திலிருப்பதற்கு இரண்டு ஊழும் வேண்டுமென்பதாயிற்று. (5) அழிக்கும் ஊழ் வந்தபோது செல்வத்தை ஆக்குதற்குக் காரணங்களாகிய காலம், இடம், கருவி, தொழிலாகிய நல்லவை யெல்லாந் தீயவையாகி அச்செல்வத்தை யழிந்துவிடும். ஆக்கும் ஊழ் வந்தபோது மேற்கூறிய கால முதலிய நான்குந் தீயவைபா யிருந்தாலும் நல்லவையாகி விருத்தியடையச் செய்யும். (6) ஊழினாலே தம்முடையவை ஆகாத பொருள்கள் வருந்திக் காப்பாற்றினாலும் தம்மிடத்து நில்லாமற் போய்விடும். அவ்வூழினாலே தம்முடையவையாகிய பொருள்கள் புறத்தே கொண்டு போய்ப் போட்டாலுந் தம்மைவிட்டுப் போகாமல் திரும்பவும்வந்து சேரும். இதுவரையுஞ் சொல்லியதனால் பொருள் விருத்தியாதற்குங் கெடுதற்கும் ஊழே காரணமென் றறிக.

௨. இன்ப துன்பங்களுக்குக் காரணமாகிய ஊழின் வலிமை.

(7) தாம் அநுபவிக்கப்படும் பொருள்கள் கோடியை வருந்திச் சேர்த்து வைத்தவருக்கும் ஊழால் வகுக்கப்பட்ட விதம் அல்லாமல் அநுபவித்தல் கூடாதாம். (8) அடையும் பகுப்புடைய துன்பங்களை ஊழ்கள் அடைவிக்காமல் நீங்குமானால் வறுமையினால் ஒன்றையும் அநுபவித்தலில்லாதவர் இல்வாழ்க்கையைத் துறக்குங் கருத்துடையராவர். எனவே, வறுமை துறவுக்கு ஏதுவாயினும ஊழ் துன்பங்களை யடைவித்து நீங்காவிடத்து ஆகாதென்பதாயிற்று. (9) நல்வினை, இன்பங்களைக் கொடுக்கும்போது அவ்வின்பங்களை நீக்கும் விதந்தேடாமல் இவை நல்லவையென்று இசைந்து அநுபவிப்பவர் தீவினை, துன்பங்களைக்கொடுக்கும்போது அத்துன்பங்களையும் இன்பங்களைப்போல அநுபவியாமல் அவற்றை நீக்கும் விதந்

தேடித் துன்பப்படுவது யாது காரணம்? இதனால், இவ்விருவினையுந் தாம் செய்ததனாலே அவற்றின் பயன்களை ஊழ் கூட்டுங்கால் அநுபவித்தே தீரவேண்டு மென்பது காண்க.

௱. மேலே சொல்லிய இருவகையூழின் வல்லமையும் பொதுவாகக் கூறுதல்.

(10) ஊழானது தன்னை யொருவன் விலக்குதற் பொருட்டுத் தனக்குப் பகையாகிய ஒரு உபாயத்தை ஆராய்ந்தாலும், தான் அவ்வுபாயத்தையாவது மற்றொன்றையாவது வழியாகக் கொண்டு வந்து, முன்னின்று அவ்வாராய்ச்சியைத் தடுத்து விடும். ஆதலால் அவ்வூழ்போல மிகுந்த வலியுடையவை யெவையிருக்கின்றன?

முதலாவது: அறத்துப்பால்
முற்றிற்று.

இனி, இல்லறத்தின் வழிப்படுவனவாகிய பொருளின்பங்களுள், இம்மை மறுமை இரண்டையுந் தருவதாகிய பொருளைச் சொல்லும்படி எடுத்துக் கொண்டார்.

இரண்டாவது

பொருட்பால்.

பொருளாவது: தரும வழியினாலே சேர்க்கப்பட்ட பொன் மணி முதலானவையாம். அது, தனக்குத் துணைக்காரணமாகிய அரச நீதி சொல்லவே அடங்கும். அவ்வரசநீதியாவது: அரசை நடத்து முறையாம்; அதனை அரசியல், அங்க இயல், ஒழிபியலென மூன்றியல்களாலருளிச் செய்தார்.

முதலாவது: அரசியல்.

அரசியலாவது: உலகத்துக்கு உயிரெனச் சிறந்த அரசனது தன்மையாம். அவ்வரசியலை இருபத்தைந்து அதிகாரங்களினாலே சொல்லத்தொடங்கி முதலிலே இறைமாட்சி சொல்லுகின்றார்.

௩௯-ஆம் அதிகாரம்.

இறைமாட்சி.

அஃதாவது:—அரசனது நற்குண நற்செய்கைகளாம்.

௧. அரசனுக்கு அங்கமாவன இவை யென்பதும், இவை முழுதும் உடைமையே அவன் வெற்றிக்குக் காரணமென்பதும்.

(1) சேனையும், நாடும், பொருளும், அமைச்சும், நட்பும், அரணுமென்று சொல்லப்படுகிற ஆறங்கங்களும் உடையவன் மன்னருள்ளே ஆண்சிங்கம் போல்வானாவான்.

௨. அரசனது நற்குண நற்செய்கையாகிய மாட்சிமை.

(2) அரசருக்கு இயற்கையாவது: வலிமையுங் கொடையும் விவேகமும் மனவெழுச்சியுமாகிய இந்த நான்கு குணங்களுங் குறையாமல் நிற்கையாம். (3) பூமியை ஆளுந் திருவினையுடைய அரசனுக்கு அவ்வாட்சிக் காரியங்களிலே விரைவுடைமையும், அவைகளை அறிதற்கேற்ற, கல்வியுடைமையும் ஆண்மை யுடைமையும் ஆகிய இம்மூன்று குணங்களும் ஒருபோதும் நீங்காவாம். (4) தனக்குச் சொல்லப்பட்ட தருமத்திலிருந்து தவறாது நடந்து தருமமல்

லாதவைகளைத் தனது நாட்டிடத்தும் உண்டாகாமற் போக்கி வீரத்திலிருந்து தவறாத மானத்தையுடையவன் அரசனாவான். (5) தனக்குப் பொருள்கள் வரும் நல்வழிகளை மேலு மேலும் உண்டாக்கலும், அப்படி நல்வழியிலே வந்த பொருள்களை ஓரிடத்திலே சேர்த்துவைத்தலும், அவைகளைப் பிறர் கவர்ந்து கொள்ளாமற்காத்தலும், காக்கப்பட்ட அப்பொருள்களை அறம்பொருளின்பங்களின் பொருட்டுச் செலவு செய்தலும் வல்லவன் அரசனாவான்.

௩. மேற்கூறிய மாட்சிமையும், பயனும்.

(6) அவ்வரசன் வழக்கறிவிப்பவர்க்கும், தங்கள் குறையைச்சொல்லி யாசிப்பவருக்கும் எளியவனாகி யாவரிடத்துங் கடுமையான சொல்லைச் சொல்லாதவனுமா யிருந்தால் அவனது பூமியை உலகம் எல்லாப்பூமியினும் உயர்த்திச்சொல்லும். எனவே, யாவரும் தன்னை இலேசாகக் காணும்படி சமயங்கொடுத்தலும், யாவரிடத்தும் இன்சொற் சொல்லுதலும் அரசனுக்கு உயர்ச்சியைத் தருமென்பதாயிற்று. (7) அவ்விதம் இனிய சொல்லுடனே வேண்டுவோர்க்கு வேண்டுவன கொடுத்துத் தன்னாலும், தன் * பரிசனத்தாலும், பகைவராலுந் துன்பப்படாமல் உயிர்களைக் காப்பாற்றவல்ல அரசனுக்கு இந்த உலகம் தன் புகழுடன் பொருந்தித் தான் கருதிய பொருளெல்லாவற்றையுங் கொடுக்கும். (8) இவ்வாறு நீதியைச் செய்து காக்கும் அரசனானவன் பிறப்பினாலே மனிதனாலும் செயலினாலே கடவுளென்று வேறு வைக்கப்படுவானாவன். (9) கண்டித்துப் புத்திசொல்லுந் துணையாயுள்ளவரது சொற்களைத் தன் காது பொறாததானாலும் அச்சொற்களின் பயனைக் கருதிப் பொறுத்துக் கொள்ளுங் குணமுடைய அரசனது குடை நிழலின் கீழே இவ்வுலகம் தங்கி இருக்கும். (10) மேற்கூறிய கொடையும், இன்சொல்லும், நீதியும், தளர்ந்த குடியைப் பேணுதலுமாகிய இந்நான்கு செயல்களையும் உடையவனே அரசருக்கெல்லாந்தீபம் போலப்பிரகாசிப்பவன். (குடியைப் பேணுதலாவது: வறுமை வந்தவிடத்து, ஆறிலொன்று வாங்கும் இறைப்பொருளையும் வாங்காததோடு பிறஉதவியுஞ் செய்தல். இறை-வரி.)

---

* பரிசனம்—வேலைகாரர்.

௪0-ஆம் அதிகாரம்.

கல்வி.

அஃதாவது:—அவ்வரசன் கற்றற்குரிய நூல்களைக்கற்றல்; அந்நூல்களாவன: தருமசாத்திரமும், நீதிநூலும், தேர், யானை, குதிரை, ஆயுதம் என்னப்பட்ட இவற்றின் நூல்களுமுதலானவையாம். அரசன் அறிவுடையவனாயிருந்தால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் குறித்து இக்கல்வி அரசியலுள் வைக்கப்பட்டதாயினும் யாவருக்கும் உறுதியைத்தருகின்ற சிறப்புடைமையினாலே எல்லாருக்கும் அவசியம் வேண்டுமெனப் பொதுப்படச்சொல்லுகின்றார்.

க. சிறப்புடையவன் கற்கவேண்டுமென்பதும், கற்கத்தகும் நூல்களும், அவைகளைக்கற்கும் விதமும், கற்றதனாற் பயனும்.

(1) *ஒருவன் கற்கப்படும் நூல்களைக் குற்றமறக்கற்கவேண்டும். அப்படிக்கற்றபின் அக்கல்விக்குப் பொருத்தமாக அந்நூல்களிலே சொல்லப்பட்டவழியிலே நடக்கவேண்டும். (கற்கப்படும் நூல்களாவன: அறம் பொருள் இன்பம் வீடு என்கிற உறுதிப்பொருள்களை உணர்த்தும் நூல்களாம். குற்றமறக்கற்றலாவது: ஒன்றை ஒன்றாக அறியும் விபரீதமும் இதுவோ அதுவோ? என்று சந்தேகப்படுதலும் இல்லாமல் உண்மைப்பொருள்களை, அவைகளைத் தெரிந்த பெரியோர் பலருடனும் பழகியறிதலாம். நூல் வழி நடத்தலாவது: இல்வாழ்க்கையுடையார் சற்கருமங்களைச்செய்து தானங்கொடுத்துத் தாம் அநுபவித்தலும், துறவறமுடையார் மெய்யுணர்ந்து அவாவறுத்தலுமாம்.)*

உ. கற்கப்படும் நூல்களுக்குக் கருவியாவனவும், அவைகள் அவசியம் வேண்டுமென்பதும்.

(2) *அறியாதவராலே எண்ணென்று சொல்லப்படுங் கணிதநூல்களும், எழுத்தென்று சொல்லப்படும் இலக்கண நூல்களுமாகிய இரண்டையும் வாழ்தற்குரிய மனிதருக்குக் கண்களாகுமென்று அறிந்தோர் சொல்லுவர்.*

ங. பொருள்நூல்களையுங் கருவிநூல்களையுங் கற்றோரது உயர்வும், அவைகளைக் கல்லாதவரது இழிவும்.

(3) *மேற்கூறிய அவ்விரண்டு நூல்களையும் படித்தவரே கண்களுடையவரென்று உயர்த்திச்சொல்லப்படுவார். அந்த நூல்*

கல்லைப்படியாதவர் முகத்தினிடத்துள்ள இரண்டு கண்களையும் இரண்டு புண்களென்று சொல்லப்படுபவராவர். எனவே, படித்தவர் முகத்தி லுள்ள கண்களே கண்களென்பது காண்க.

௪. கற்றாரது உயர்வு.

(4) கற்றறிந்தவர் தொழிலானது எல்லாருமகிழும்படி அவரைச்சேர்ந்து நல்லகாரியங்களைப்பேசித் தாம் அவரை விட்டு நீங்கும்போது அவரெல்லாரும் இனி, இவரை நாமெப்போது காண் போமென்று நினைக்கத் தாம் பிரிந்துசெல்லுதலாகிய அத்தன்மையு டையதாம்.

௫. கற்றாரது உயர்வும், கல்லாதவரது இழிவும்.

(5) செல்லவான்களுக்கு முன்னே தரித்திரர் பெருமை யிழந்து நிற்பதுபோல நூல்கற்பிக்கும் குருவின் முன்னே மானமிழ ந்து வணக்கமாக நின்றும் கல்வியைப்படித்தவர் உயர்ந்தவராவர். அவ்விதம் வணக்கமாக நின்று படிப்பதற்கு நாணமுற்றுக் கல்லா தவர் எந்நாளும் இழிந்தவரே யாவர். எனவே, மெய்ப்பொரு ளாகிய கல்வியை விரும்புவோர் பொய்ப்பொருளாகிய மானத் தைக் கருதமாட்டாரென்பதாயிற்று.

௬. கல்வியது சிறப்பு.

(6) மணலினிடத்த நீரானது தோண்டிய அளவினதாக ஊறும். அதுபோலவே, மனிதருக்கு அறிவானது கற்ற அளவின தாக வளரும். ஆதலால் பேரறிவை விரும்புவோர் பெரியநூல் பல வற்றையும் படிக்கவேண்டும். (7) படித்தவனுக்குத்தன்னாடும் தன்னூரும் அல்லாமல் வேறெந்தநாடும் எந்த ஊரும் பொருள் கொடுத்து உபசரித்தல் செய்வனவாம். அப்படியிருக்க ஒருவன் இறந்துபோகும் வரையும் படியாதிருக்கும் விதம என்ன நினைத் தோ? தெரியவில்லை. (8) ஒரு பிறப்பினிடத்துக் கற்றவித்தை யானது ஒருவனுக்கு வினைகள்போல அவனுயிரிடத்தே தங்கி எழு பிறப்புக்களிலும் அவ்வுயிர் சென்ற இடத்தே கூடச்சென்று நல்வழி யிலே சேர்த்தலையுடையதாகும். (9) கற்கும்போது தாம் சொற் பொருளின் சுவையை யநுபவித்தலும் புகழும் பொருளும் மரியா தையும் பிறவுமாகிய இன்பத்தை அடைதற்கேதுவாகிய கல்விக்கு உலகத்தார் இன்பமடைவர்; அதனைக்கண்டு, கற்றவர் மேலுமேலுங்

கல்வியே கற்க ஆசைப்படுவர்; இதனுலொருவர் கற்றவரிருந்தால் உலகத்தாரெல்லாருக்கு மகிழ்ச்சியைச் செய்வரென்பதாயிற்று. (10) ஒருவனுக்குப் பங்காளிகள், திருடர், வலியவர், அரசராகிய வர்கள் அபகரிக்கப்படுகிறதுக் தம்மை வேண்டுவோருக்குக் கொடுத் த இடத்தே குறைவதுமாகிய கேடில்லாத சிறந்த செல்வமானது கல்வியாம். அது, நீங்கலாகிய மணி, பொன், நெல் முதலான செல் வம் மேற்கூறிய கேடுகளடையப்படுவதாதலாற் சிறந்த செல்வமா காதாம்.

சுக-ஆம் அதிகாரம்.

கல்லாமை.

அஃதாவது:—கற்றலைச் செய்யாமையின் இழிவு.

க. கல்லாதவர் சபையிலே பேசுதற்குரியர் ஆகார்.

(1) அறியவேண்டியவைகளை யெல்லாம் அறிவதற்கு ஏது வாகிய நூல்களைக் கல்லாதவனெருவன் சபையி னிடத்தே பேசுதல் சூதுக்குரிய காய்களைக் கணக்கின்படி யெடுத்துவைக்கும் வீடில் லாமல் சூதாடுகருவியையுருட்டி விளையாடுதல் போலும். (2) அது வன்றி, இரண்டு தனங்களுஞ் சிறிதும் இல்லாதவளொருத்தி பெண் தன்மையை விரும்புதல் போலுமாம். இவ்விதம் ஆடுதலும் விரும் புதலும் பயன்படாமை போலக் கல்லாதவன் சபையினிடத்துப் பே சுதல் பயன்படமாட்டாது. (3) படியாதவரும் தம்முடைய மூடத் தனத்தைத் தாமேயறிந்துகொண்டு கற்றோர்சபையினிடத்து யா தொன்றையும் பேசாதிருக்கப் பெறுவாராளுல் மிகவும் நல்லவராவர். எனவே, பேசினுற் சொற் சோர்விஞலே அவமான மடைவரென்ப தாயிற்று.

உ. கல்லாதவரது இயற்கையறிவின் குற்றம்.

(4) கல்லாதவனது அறிவுடைமையானது ஒவ்வோரிட த்து நன்றுயிருப்பினும், அது நீர் மேலெழுத்துப்போல் அழியுமாத லால் நிலைபெற்ற நூலறிவினையுடையோர் அதனை அறிவுடைமையாக

மதிக்கமாட்டார். (5) இஃதன்றியும், கல்லாத ஒருவன் கற்றவனைப்போலத், தன்னைமதிக்கும் மதிப்பானது கற்றவன் கண்டு பேசும்போது அழிந்துபோகும்.

௩. கல்லாதவர் பயன் படாமை.

(6) கல்லாதவர் கற்றவரைப் போலக் கண் காண நடந்து திரிதலால் உயிரோடிருப்பவரென்று சொல்லப்படும் அளவினையுடையராத லன்றி, தமக்கும் பிறர்க்கும் பயன படாமையால் விளையாத உவர் நிலத்துக்குச் சமானமாவர்.

௪. கல்லாதவர் வடிவழகினாலே பயனில்லாமை.

(7) கூர்மையாகிய பொருள்களை எளிதிலே அறியுங் குணப்பட்டு, பல நூல்களிலுஞ் சென்ற அறிவு இல்லாதவனுடைய பெருக்கமும், அழகும் சுண்ணும்பினாலே அழகாக அலங்கரிக்கப்பட்ட பாவையினது பெருக்கமும், அழகும் போலப் பயன்படாவாம்.

௫. கல்லாதவரது செல்வத்தின் குற்றம்.

(8) கல்லாதவரிடத்து உண்டாகிய செல்வமானது கற்றவரிடத்து உண்டாகிய தரித்திரத்தைப் பார்க்கினும், அதிக துன்பத்தைச் செய்வதாம். எவ்விதமெனில், கற்றவரிடத்திருக்குஞ் செல்வம் நல்வழியிலே செலுத்தப்பட்டு நன்மையைத் தருதல் போலக் கல்லாதவரிடத்திருக்குஞ் செல்வம் நன்மையைத் தராமல் தீயவழியிலே செலுத்தப்பட்டுத் தீமையைத் தருதலாலெனக. கற்றவரிடத்திருக்குந் தரித்திரம் இவ்வாறொன்றுஞ் செய்யாதென்பதுங் காண்க.

௬. கல்லாதவர் சாதியுயர்ச்சியினாற் பயனில்லாமை.

(9) தாழ்ந்த சாதியிலே பிறந்திருந்தாலும் அவர் படித்திருப்பாராகில் அவரது பெருமை அளவினதாகிய பெருமையை உயர்ந்த சாதியிலே பிறந்திருந்தாலும், படியாதவர் இல்லாதவராவர்; இதனால் உடம்போடழியுஞ் சாதியுயர்ச்சி கல்வியறிவில்லாத இடத்தும் பயனில்லையென்பது காண்க.

எ. கல்லாதவர் மனிதப் பிறப்பினாலே பயன் படாமை.

(10) மிருகங்களைப் பார்க்கினும் மனிதர் எவ்வளவு உயர்ச்சியுடையவரோ? அது போலக் கல்லாதவரைப் பார்க்கினும் அறம், பொருள், இன்பம், வீட்டை உணர்த்தி விளங்கிய நூலைக்கற்றவர் அவ்வளவு உயர்ச்சியை யுடையராம். எனவே, மிருகங்களுங் கல்லாதவருஞ் சமமாதல் காண்க.

சஉ-ஆம் அதிகாரம்.

கேள்வி.

அஃதாவது:—கேட்கத்தகுநூலின் பொருளைக் கற்றறிந்தவர் சொல்லக் கேட்டதல்.

க. கேள்வியின் சிறப்பு.

(1) ஒருவனுக்கு, சிறப்புடைய செல்வமாவது காதாற் கேட்கப் படுஞ் செல்வமாம்; அந்தச் செல்வம் பொருளால் வரும் எல்லாச் செல்வங்களினும் முதன்மையுடையதாம். பொருளால் வரும் செல்வங்கள் நிலை பெறுமற் போதலாலும், துன்பந் தருதலாலும் கேள்வியால் வருஞ் செல்வம் முதன்மை யுடையதாயிற்று. (செல்வமென்பது: ஆளப்படும் எல்லாப் பதார்த்தங்களுக்கும் பொதுப் பெயர்.) (2) காதுக்கு உணவாகிய கேள்வி யில்லாத காலத்தே வயிற்றுக்குஞ் சிறிது உணவுகொடுக்கப்படும். இதனால், காதாற் கேட்கிறபோது மிகுந்த சுவையையும் பின்னே பயனையுந் தருவதாகிய கேள்வி யுள்ளபொழுது வயிற்றுணவு வேண்டிப் பசியானது வருத்தப்படுத்தா தென்பதாயிற்று.

உ. கேள்வியுடையவரது சிறப்பு.

(3) செவியுணவாகிய கேள்வியை உடையவர் பூமியிலிருக்கினும் துன்பத்தை அறிதல் இல்லாமையால், அமுதம் உண்பாராகிய தேவருக்குச் சமானமாவர்.

ங. கேள்வியினாலே திடப்பட்டவருக்கு வரும் நன்மை.

(4) உண்மை நூல்களைக் கல்லாதவனானாலும் அந்நூல்களின் பொருள்களைக் கற்றோர் சொல்லக் கேட்கவேண்டும். அக்கேள்வி

யானது ஒருவனுக்கு வறுமையாலாவது, அறிவில்லாமையாலாவது தளர்ச்சி வந்த இடத்து, அத்தளர்ச்சியை நீக்கும் ஆதாரமாகிய துணையாகும். (5) ஆபத்து வந்த இடத்து நல்லொழுக்கம் உடையார் வாயிற் பிறக்கின்ற சொல்லானது வழுக்குதலுடைய சேற்று நிலத்திலே ஊன்று கோல்போல உதவி செய்வதாகும். (6) உறுதிப்பொருள்களிலே எவ்வளவு சிறியதாயினும் கேட்கவேண்டும்; அக்கேள்வி அவ்வளவு சிறியதானாலும் நிறைந்த பெருமையைக் கொடுக்கும். (7) பொருள்களை நுட்பமாக ஆராய்ந்தறிந்து நிறைந்த கேள்வியை யுடையவர் தமோகுணத்தால் மயங்கினாராயினும், தமக்குப்பேதைமையை உண்டாக்குஞ் சொற்களைச் சொல்லமாட்டார். எனவே, கேள்விஞானத்தினாலே திடப்பட்டவர் ஒருகால் மயங்கினாலுந் தவறமாட்டா ரென்பதாயிற்று.

ச. கேள்வி யில்லாத இடத்து உண்டாகும் குற்றம்.

(8) கேள்வியினாலே தொளைக்கப்படாத காதுகள் தமக்குரிய ஓசையைக் கேட்குமானாலும் செவிடாந் தன்மையினவேயாம். எனவே, நற்பொருள்களைக் கேட்குங் காதுகளே பயனுடையன வாமாறு காண்க. (9) நுட்பமாகிய கேள்வியை யுடையவரல்லாதவர் வணக்கத்தைக் காட்டுகிற சொல்லையுடையவராக மாட்டார். எனவே, கேள்வியறிவில்லாதவர் தம்மைத் தாமே புகழ்ந்து பேசுவரென்பதாயிற்று. (10) காதுகளாலறியப்படுஞ் சொற்சுவை பொருட் சுவைகளை அறியாதவராகிய வாயினாலுண்ணப்படும் அறுசுவை அறியு மனிதர்கள் இறந்தாலும் இருந்தாலும் உலகத்துக்கு யாதொரு பயனுமில்லை.

சஉ-ஆம் அதிகாரம்.

அறிவுடைமை.

அஃதாவது:—கல்வி கேள்விகளினாலாகிய அறிவோடு உண்மையறிவுடையனாதல்.

க. அறிவினது சிறப்பு.

(1) அரசருக்கு அறிவாவது, கேடுவராமற் காக்கின்ற படையாகும்; அதுவுமல்லாமல் பகைவராலும் அழிக்கக்கூடாத உட்காவலிடமுமாகும்.

௨. அறிவுடைமையின், இலக்கணம்.

(2) மனத்தைப் போன விஷயத்திலே போகவிடாமல் அவ்விஷயங்களின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயதிலிருந்து நீக்கி நல்லதினிடத்துச் செல்லவிடுவது அறிவு (3) இதுவன்றி, முக்குணங்களும் மாறி மாறி வருவதால் உயர்ந்த பொருளை இழிந்தார்வாயிலும இழிந்தபொருளை உயர்ந்தார்வாயிலும் உறுதிப் பொருளைப் பகைவர்வாயிலும் கெடுபொருளைச் சிநேகர்வாயிலும் ஒவ்வொரு சமயத்திற் கேட்டாலும், அவரவர்களை நோக்காது, அவர் கூறிய மெய்யாகிய அப்பொருளின் பிரயோசனத்தைக் காணவல்லதும் அறிவாம். (4) இம்மட்டோ? தன்னாலே சொல்லப்படுஞ் சொற்கள் அரியபொருளினவாயிருந்தாலும் கேட்பவர்க்கு எளியபொருளினவாம்படி மனங்கொள்ள கொள்ளச் சொல்லித் தான் பிறர்வாயிற் கேட்கப்படுஞ் சொற்களிற் காணுதற்கரிய நுட்பப் பொருளையுங்காணவல்லதும் அவ்வறிவேயாம், (5) அவ்வறிவு ஒருவனுக்கு உடைமையாயிருந்தால் உயர்ந்தோரை நட்பாக்குவதாகும். ஆதலால், அவ்வுயர்ந்தோரிடத்தில முன்னே மகிழ்ச்சியடைதலும் அதன்பின் வெறுப்படைதலும இல்லாமல் ஒரேநிலைமையாகப்பழகுவதே அறிவினிலக்கணமாகும். (6) உலகமானது எவ்விதத்தால் நடப்பதாயிருக்கின்றதோ? அவ்விதத்தால் உலகத்துடன் பொருந்தித் தானும் நடப்பதே அரசனுக்கு அறிவாகும். அவ்விதம் நடவாமல் உலகம் என்னாலே நியமிக்கப்பட்டது என்னை நியமிப்பாரில்லை யென்று நினைந்து, அரசன் தானினைத்தபடி நடந்தால் பழியும், பாவமும் உண்டாகும். ஆதலால் அப்படி நடத்தல் அறிவல்லவென்பதாயிற்று.

௩. அறிவுடையவரது இலக்கணம்.

(7) பின்னே வரத்தக்கவைகளை முன்னே யெண்ணி அறியவல்லவர் அறிவுடையவராவர். அப்படி அறியமாட்டாதவர் அறிவில்லாதவராவர். (8) பயப்படவேண்டியதற்குப் பயப்படாதிருத்தல் அறிவில்லாமையாகும், பயப்படுதல் அறிவுடையாரது செய்கையாகும்.

ச. அறிவுடையவருக்குத் துன்பம் இல்லை.

(9) பின்னே வரத்தக்க தீமையை முன்னே அறிந்து, அதனைவரவொட்டாமல் தடுக்கவல்ல விவேகமுள்ளவருக்கு நடுங்கும்படிவருவதாகிய ஒரு துன்பமும் இல்லை.

ரு. அறிவுடையவரது உடைமையும், மற்றவரது இன்மையும்.

(10) அறிவுடையவர் வேறொன்றும் இல்லாதிருந்தாலும் எல்லாச்செல்வமும் உடையவராவர். எப்படியென்றால், அறிவுடையார் எல்லாஞ் சம்பாதித்துக் கொள்வாரென்றபடி. எல்லாச் செல்வமும் உடையவரா யிருந்தாலும் அறிவில்லாதவரது அச்செல்வங்கள் காக்கப்படாமையால் அழிதலும், அழிந்த இடத்துச் சேர்க்கப்படுதல் கூடாமையும் ஆதலால் ஒன்றும் இல்லாதவராவர்.

சச-ஆம் அதிகாரம்.

குற்றங்கடிதல்.

அஃதாவது:—காமம், குரோதம், உலோபம், மானம், உவகை, மதம் என்னப்பட்ட ஆறு குற்றங்களையும் அரசன் தன்னிடத்தே தோன்றமல் நீக்குதல்.

க. குற்றங்களாவன.

(1) கருவமும், கோபமும், காமமும் ஆகிய குற்றங்கள் இல்லாதஅரசரது செல்வமானது நல்வழிப்படுதலும், நிலை நிற்பதும் ஆதலால் மதிக்கப்படுங் குணமுடையதாகும். (2) கொடுக்கவேண்டுமிடத்துப் பொருள் கொடாதிருத்தலும் அந்தணர் உயர்ந்தோர், அருந்தவர், தன் முன்னோர், தந்தைதாய் முதலியோரை வணங்கும் நன்மையினின்று நீங்கியமானமும், அளவிறந்த மகிழ்ச்சியும் அரசனுக்குக் குற்றங்களாகும். (அளவிறந்த மகிழ்ச்சியாவது: பிறரிடத்து வரம்புகடந்து செய்யுந்தாட்சணியம்.)

உ. பொதுவகையினாலே குற்றத்தை நீக்குதல்.

(3) பழிக்குப் பயப்படுவோர் தினையளவு குற்றம் தம்மிடத்து வந்தாலும் பனையளவு பெரிதாகக் கருதுவர். அப்படிக் கருதினால் பின்னுங் குற்றஞ்செய்வதற்கு உடன்படாரென்பதாம்.

(4) கேட்டைத்தரும் பகை, மேற்கூறிய குற்றங்களேயாதலால் அக்குற்றங்கள் தன்னிடத்து வராதிருத்தலைப் பொருளாகக் கொண்டு, வருதலைத் தடுக்கவேண்டும். (5) குற்றம் வருவதன் முன்னே அதனை வராமல் தடுக்காத அரசனது வாழ்வானது தீயின்முன்னே நின்ற வைக்கோலின் கூட்டம்போல அழிந்துவிடும்; இவ்வுபமானத்தினாலே சிறியகுற்றமும் பெரியசெல்வத்தைக் கெடுத்துவிடுமென்பதாயிற்று. (6) தன்னுடைய குற்றத்தை முன்னே கண்டுபிடித்து நீக்கிப் பிறருடைய குற்றத்தைப்பின்னே காணவல்லவனானால் அரசனுக்கு வரக்கடவதாகிய குற்றம் எது? இருக்கிறது ஒன்றுமில்லை.

ங. உலோபத்தின் தீமை.

(7) செய்யப்படுவனவாகிய அறம் பொருள் இன்பங்களைப் பொருளைச்செலவிட்டு விருத்திசெய்து கொள்ளாமல் அப்பொருளினிடத்து உலோபஞ் செய்தவனது செல்வமானது பின்னே நீடித்திருக்கும் பகுப்பில்லாமல் வீணாகக்கெட்டுவிடும். (8) பொருளைச் செலவிடும் இடத்துச் செலவிடாது பற்றுகின்ற மனமாகிய உலோபத்தன்மையானது எல்லாக்குற்றத் தன்மைகளுள்ளுஞ் சேர்த்து நினைக்கப்படுவதொன்றல்ல. ஏனென்றால், உலோபம்போல வேறு குற்றங்கள் குணங்களைக் கீழ்ப்படுத்த மாட்டாமையாலென்க.

ச. மதமானங்களின் தீமை. (மதம் - கர்வம்.)

(9) தான் மிகவுமுயர்ந்த காலத்திலும் தன்னைக்கருவத்தினாலே நன்குமதியாதிருக்கவேண்டும். அதுவன்றி, நன்மையைத் தனக்குத் தராத தொழில்களை மனத்தால் விரும்பாதிருக்கவும் வேண்டும்.

ரு. முழுதும் விடலாகாத காமத்தை யநுபவிக்கும் விதம்.

(10) தன்னாலே விரும்பப்பட்ட காமப்பொருள்களையும், அந்தப்பொருள்களின் விருப்பத்தையும் பகைவர் அறியாமல் அநுபவிக்க வல்லவனானால், அப்பகைவர் தன்னை வருத்தப்படுத்த நினைப்பதற்குக் காரணமில்லை. எனவே, பொருட்செருக்கால் காமம், பகைவரறிய அநுபவிப்பானாகில் அதுவே, காரணமாகத் தன்னைத் துன்புறுத்துவரென்பதும், முழுவதும் விடக்கூடியதன்றாகலால் சிறுபான்மை அநுபவிக்குங்கால் பிறரறியாதிருக்கவேண்டு மென்பதும் தெரிந்து கொள்க.

சஙு—ஆம் அதிகாரம்.

பெரியாரைத் துணைக்கோடல்.

அஃதாவது:—மேற்கூறிய அறுவகைக் குற்றங்களையும் நீக்கிய அரசன் தன்னைத் தீயவழியிலே செல்லாமல் விலக்கி நல்ல வழியிலே செலுத்தும் பேரறிவுடையவரைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதல்.

க. பெரியோரது இலக்கணமும், அவரைத் துணையாகக்கொள்ளவேண்டுமென்பதும், கொள்ளும் விதமும்.

(1) *தருமத்தின் நன்மையறிந்து ஞானத்தாலும் ஒழுக்கத்தாலும் வயதாலும் தன்னினுயர்ந்த அறிவுடையோரது சிநேகத்தை அதனருமையைத் தெரிந்துகொள்ளும் திறத்தை யுணர்ந்து, அரசன் கொள்ளவேண்டும். இங்கே அறிவுடையோரென்றது, நீதியையும் உலகியலையும் அறிதலுடையவரை.* (2) *இதுவன்றி, தெய்வத்தாலாவது மனிதராலாவது தனக்கு வருந் துன்பங்களை நீக்கும் விதமுணர்ந்து நீக்கிப் பின்னும் அப்படிப்பட்ட துன்பங்கள் வராமல் முன்னே அறிந்து தடுக்கவல்ல தன்மையுடையவரை அவர் மகிழத்தக்கவைகளைச் செய்து துணையாகவுங் கொள்ளவேண்டும். (தெய்வத்தால் வருந்துன்பங்களாவன: மழையில்லாமையாலும், அதிக மழையாலும், காற்று, தீ, நோய்களாலும் வரும் துன்பங்கள்; அவை, கடவுளையும் தக்கோரையு நோக்கிச் செய்யப்படுஞ் சாந்திகளால் நீக்கப்படும். மனிதரால் வருந்துன்பங்களாவன: பகைவர், இருடர், சுற்றத்தார் முதலியவரால் வருந்தீமைகள்; அவை, சாம பேத தான தண்டமாகிய நால்வகை உபாயங்களில் ஏற்றதொன்றால் நீக்கப்படும். முன்னறிந்து தடுத்தலாவது: தெய்வத்தால் வருமவைகளை மழை வருவதை முன்னே அறிவிக்கும் மின்னல் போலக் காட்டும் உற்பாதங்களாலும் மனிதரால் வருமவைகளை அவருடைய குணம், தொழில் முதலியவற்றாலும் அறிந்து மேற்கூறிய சாந்தியாலும் உபாயத்தாலும் தடுத்தலாம். உற்பாதமாவது: பின்வருவதைமுன்னே காட்டும் அடையாளம்.)*

உ. பெரியாரைத் துணைக்கோள்ளுதலின் சிறப்பு.

(3) *பேரறிவுடையவர்களை அவரை நன்கு மதித்தல் முதலிய மகிழ்ச்சியைச் செய்து தமக்குச் சிறந்தவராகக் கைக்கொள்ளு*

தல் அரசருக்கு அரிய பயன்கள் பலவினும் அரியது. (4) பொருள் சேனை முதலியவற்றால் நீக்கக்கூடாத தெய்வத்தால் வருந்துன்ப முதலானவைகளையும் நீக்குதற்குரியவ ராதலால் அறிவு முதலானவைகளாலே தம்மினும் பெரியவர் தமக்குச் சிறந்தவராகத் தாம் அவர் சொல் வழியிலேநின்று காரியங்களைச் செய்தல் வலியுடைமை பலவினும் முதன்மையாகும். (5) ஆராய்ச்சியுடைய மந்திரிகளைக் கண்ணாகக்கொண்டு இராச்சியபாரம் நடத்தலால் அப்படிப்பட்ட மந்திரிகளை ஆராய்ந்து அரசர் தமக்குத் துணையாகக் கொள்ளல் வேண்டும். ஏனென்றால், அரசர் ஆராய வல்லவரானாலும், அதனோடு அளவில்லாத தொழில்களும் இருத்தலால் ஆராய்தல் ஒன்றையே உடைய மந்திரிகளைக் கொண்டே அரசாளவேண்டு மென்பதாம்.

௩. பெரியாரைத் துணைக்கொள்ளுதலின் பயன்.

(6) அறிவொழுக்கங்களினாலே தகுதி யுடையவர் கூட்டத்தினையுடையவனாகி, தானும் தரும நீதிகளின் வழிதவறாமல் நடக்கவல்ல அரசனைப் பகைவர் எவ்வகை வலிமையாலுஞ் செய்யக்கிடந்த ஒரு துன்பமும் இல்லையாம். (7) நீதியல்லாத செய்கைகளைக் கண்டால் கண்டித்துப் புத்தி சொல்லுந் துணையார் தன்மையுடையவரை இவர் நமக்குச் சிறந்தவரென்று கைக்கொள்ளும் அரசரை, கெடுக்கும் பெருமையுடைய பகைவர் உலகத்தில் எவரிருக்கின்றார்? ஒருவரு மில்லை.

௪. பெரியாரைத் துணைக்கொள்ளாத இடத்து உண்டாகும் குற்றம்.

(8) மேற்கூறிய வாறு கண்டித்துப் புத்தி கூறும் மந்திரிகளைத் தனக்குத் துணையாகக் கொள்ளாத காவலற்ற அரசனை வன் பகையாகிக் கெடுப்பவரில்லாதிருந்தாலுந் தானே கெடுவன். (தானே கெடுதலாவது: பாகனில்லாத யானைபோலத் தான் போன வழியிலே போய்க்கெடுதலாம்.) (9) முதற் பொருளில்லாத வியாபாரிகளுக்கு அம்முதலால் வரும் இலாபமில்லை; அதுபோலத் தம்மைத் தாங்குவதாகிய துணையில்லாத அரசருக்கு அத்துணையால்

வரும் நிலைமை யில்லையாம். (10) பெரியவரோடு சிநேகங்கொள்ளாமல் அவரை விட்டுவிடுதல் பலரோடு விரோதங்கொள்ளுதலைப் பார்க்கினும் பத்துப்பங்கதிகமாக அடுத்த தீமையுடையதே யாகும். ஏனென்றால், பலபேர் செய்யுந் தீமைகளுக்குத் தப்பிப் பிழைத்தல் கூடினுங் கூடும். பெரியோர் சிநேகத்தைக் கைவிட்டால் ஒருவிதத்திலும் பிழைத்தல் கூடாமையாமெலன்க.

சகூ-ஆம் அதிகாரம்.

சிற்றினஞ்சேராமை.

அஃதாவது:—சிறிய இனத்தைப் பொருந்தாமை. சிறிய இனமாவது, நல்லதிலே நன்மையுந் தீயதிலே தீமையும் இல்லை யென்போரும், விடரும் தூர்த்தரும், நடரும் முதலாயின கூட்டம். (விடர் - மிக்க காமமுடையவர்.)

க. சிற்றினம் பெரியோர்க்கு ஆகாது.

(1) பெரியோரியல்பானது சிறிய இனத்தினியல்பைக் கண்டால் அறிவு வேறுபடும் விதமும், அதனால் வருங்கேடும் நோக்கலால் பயப்படும். சிறியோரியல்பானது அவவியல்புடையாரைக் கண்ட பொழுதே அவ்வியல்போடு ஒற்றுமைப் பட்டு நிற்றலால் அதனைத் தனக்கு உறவாகத் துணிந்து செல்லும்.

உ. சிற்றினம் பெரியோர்க்கு ஆகாதென்பதற்குக் காரணம்.

(2) ஆகாயத்திலே தன் தன்மை யாயிருந்த நீரானது தான் சேர்ந்த நிலத்தின் றன்மையினாலே தன் தன்மை வேறுபட்டு, அந் நிலத்தினது நிறம், சுவை முதலிய குணங்களையுடையதாகும்; அது போலத் தனித்திருக்கையிலே யிருந்த அறிவானது தாம் சேர்ந்த இனத்து இயல்பினாலே தன் தன்மை வேறுபட்டு, அவ்வினத்தினது காட்சி, தொழில் முதலிய தன்மை யுடையதாகும்.

ங. இயற்கையாகிய போது அறிவு மனத்தால் ஆமென்பதும், செயற்கையாகிய சிறப்பறிவுபற்றி, இவன் இன்னானென்றறிதல் இனத்தால் ஆமென்பதும்.

(3) மனிதர்க்குப் பொது அறிவானது தம் மனத்தினாலே யுண்டாகும். இவன் இன்னானென்று உலகத்தாராலே சொல்லப்

படுகிற சொல்லானது தாம் சேர்ந்த இனத்தினாலே உண்டாகும். எனவே, நல்லவனைச் சேர்ந்தால் நல்லவனென்ற சொல்லும் தீயவனைச் சேர்ந்தால் தீயவனென்ற சொல்லும் உண்டாமென்பதாயிற்று (பொது அறிவாவது - ஐம்புல அறிவு.)

ச. விசேட அறிவு உண்டாவதற்குக் காரணம் தான் சேர்ந்த இனம்.

(4) மேற்கூறிய சிறப்பறிவானது ஒருவனுக்கு மனத்தினிடத்து உள்ளதாவது போலத் தன்னைப் புலப்படுத்தி, அவன் சேர்ந்த இனத்தினிடத்தே யுள்ளதாம். இதனால், ஒருவனுக்கு விசேட அறிவு விளங்குதற்கு மூலம் அவன் சேர்ந்த இனமென்பது கண்டு கொள்க' (புலப்படுத்தல் - விளங்கச் செய்தல்.)

ரு. தான் சேர்ந்த இனத்தினாலே மனமும் செயலும் தூயனாவன்.

(5) அச் சிறப்பறிவு வெளிப்படுதற்கிடமாகிய மனம் பரிசுத்த மாதற்றன்மையும், செய்தொழில் பரிசுத்தமாதற் றன்மையுமாகிய இரண்டும் தான் சேர்ந்த பரிசுத்தமுடைய இனம் பற்றுக்கோடாக ஒருவனுக்கு உண்டாகும். (மனம்பரிசுத்த மாதல்: சிறப்பறிவு வெளிப்படும்படி இயற்கையாகிய அறியாமை நீங்குதல். செய்தொழில் பரிசுத்தமாதல்: மனம் வாக்குக் காயங்கள் நல்ல தொழிலைச் செய்தல். பற்றுக்கோடு - ஆதாரம்.)

சா. மனநலம் முன்னை நல்வினையினாலே இயல்பாகவுடையார்க்கும் இன நலம் வேண்டும். மனநலம் - விசேட அறிவு.

(6) மனம் பரிசுத்தமுடையவருக்கு மக்கட்பேறு காரணத்தின்குணம் காரியத்திலும் இருப்பது போல நன்றாக விளங்கும். பரிசுத்தமான இனத்தையுடையவர்க்கு நன்றாகாத செயல் ஒன்றுமில்லை. எனவே, எல்லாச் செயலும் நல்லதாகு மென்பதாயிற்று. (7) இவ்விதம் பரிசுத்தமான மனத்தினது நன்மையானது நிலைபெற்ற உயிர்களுக்குச் செல்வத்தைக் கொடுக்கும். இனத்தினது நன்மையானது அச்செல்வத்தோடு எல்லாப் புகழையுங் கொடுக்கும்.

எ. மன நன்மை உடையவராலும் அரசருக்கு இன நன்மை உறுதியுடையது.

(8) அம்மனத்தினது நன்மையை முன்னே நல்வினையினாலே தாமேயுடையவரா யிருந்தாலும் உயர்ந்தோர்க்கு இன நன்மையானது அம்மன நன்மைக்கு வலியாதலை யுடையதாம். ஏனெனில், அந் நல்வினையுள்ள இடத்தும் மனநலத்தை வளர்த்து வருதலாலென்க. (வலியாதல் - வலிமையடையப் பண்ணுதல்.)

அ. சிலவேளைகளில் தமோ குணத்தினாலே மனநலம் வேறு பட்டாலும் நல்லினம் அவ்வேறுபாட்டைத் திருத்தி மறுமை இன்பத்தை உண்டாக்கும்.

(9) ஒருவனுக்கு மனநலத்தினது நன்மையால் வரு பிறப்பினது இன்பம் உண்டாகும். அந்தச் சிறப்புத்தானும் இன நன்மையானுறுதி யடைதலை யுடையது. சிற்றினஞ் சேராமையாகிய சிறப்பு நல்லினஞ்சேர்தலாகிய எதிர்மறை முகத்தால் ஐந்து முதல் ஒன்பது திருக்குறள் வசனத்தாற் சொல்லப்பட்டது கண்டுகொள்க.

க0. நல்லினத்தினுடன்பாட்டினால் நன்மையும், தீயினத்தினுடன் பாட்டினால் தீமையும் உண்டாகும்.

(10) ஒருவனுக்கு நல்லினத்தைப் பார்க்கினும் உயர்ந்த துணையும் தீயினத்தைப் பார்க்கினும் உயர்ந்த துன்பந்தரும் பகையும் இல்லையாம். நல்லினம் அறியாமையை நீக்கிக் காத்தலால் துணையும், தீயினம் அறிவை நீக்கிக்கெடுத்தலாற் பகையும் ஆதல் காண்க.

சஎ-ஆம் அதிகாரம்.

தெரிந்து செயல்வகை.

அஃதாவது:—அரசன் தான்செய்யும் தொழில்களை ஆராய்ந்து செய்யும் திறம்.

க. செய்யத்தகுந் தொழிலும், அத்தொழில் செய்யும் விதமும்.

(1) தொழில் செய்யுமிடத்து, அப்போது அதனாலழிவதையும் அழிந்தால் பின்னே ஆவதையும் விருத்தியாய் நின்று பிற்கா

லத்துத் தரும் இலாபத்தையும் ஆராய்ந்து, பொருந்துமானால் அத்தொழிலைச் செய்யவேண்டும். (பொருந்துதலாவது: தொழில் செய்யுமிடத்து, அழியுமளவில் ஆகுமளவு மிகுந்து பிற்காலத்தும் வளர்ந்துவருதல்.) எனவே, பிற்காலத்து, வளர்ந்துவரும் இலாபம் கிடைக்குமானால், தொழில்செய்யும்போது ஆவதும் அழிவதும் சமமாயிருந்தாலும் அத்தொழிலை விடலாகாதென்பதாயிற்று. (2) தம்மாலே தெரிந்துகொள்ளப்பட்ட இனத்துடனே செய்யத்தகுந் தொழில்களை ஆராய்ந்து பின்னை தாயாகவும் எண்ணிச்செய்து முடிக்கவல்ல அரசருக்குக் கிடைத்தற்கரிய பொருள் யாதொன்றும் இல்லையாம். (தொழிலாவது: போர்க்குச்செல்லுதல் முதல் வெல்லுதல் வரையுள்ளதென்க.)

௨. விடத்தகுந் தொழிலும், விடாத இடத்து உண்டாகுங் குற்றமும்.

(3) பின் பெறக்கடவதாகிய இலாபத்தை யுத்தேசித்து முன்பெற்றுள்ள முதலையும் இழத்தற்கேதுவாகிய தொழிலை விவேகமுள்ளவர் மேற்கொள்ளமாட்டார். (இலாபமேயன்றி, முதலிழத்தலாவது: வலியும் காலமும் இடமும் அறியாமல் பிறர்தேசத்தைப்பிடிக்கப்போய்த் தன் தேசத்தையும் இழந்தல்.) (4) அறிவும் மானமும் இல்லாதவ ரென்று தம்மை உலகத்தாரிகழ்ந்து பேசும் இகழ்ச்சியென்னுங் குற்றம் உண்டாதலுக்குப் பயப்படுவோர், இனத்தோடும் தனித்தும் ஆராய்ந்து துணியப்படாத தொழிலைச்செய்யத் தொடங்கார். எனவே, துணிந்து தெளிவுள்ள இடத்துத் தொடங்குக என்பதாயிற்று. (5) மேலேநடக்கும் விதங்களை யெல்லாம் முழுவதும் ஆலோசியாமல் அரசன் பகைவர் மேலே செல்லுதலானது அப்பகைவரை வளருநிலத்திலே விருத்தியாகச் செய்வதொரு வழியாகும்.

௩. செய்யத்தகுந் தொழில்களைச் செய்து, விடத்தகுந் தொழில்களை விட்டு விடல்.

(6) அரசன் தனது தொழில்களிலே செய்யத்தகாதவைகளாகிய தகுதிக்கு மிஞ்சிப் பெருமுயற்சியை யுடையவையும், செய்தாற் பயனில்லாதவையும், முயற்சிக்குத் தக்கபடியின்றிப் பயன்

சிறிதானவையும், ஐயமானவையும், பின்னே துயரம் விளைப்பவையும் செய்தால் கெடுவான். அதனாலே மாத்திரம் அல்லாமல் செய்யத்தக்கவைகளைச் செய்யாமையாலுங் கெடுவான். செய்யத்தக்கவைகளாவன: முன்சொல்லப்பட்ட செய்யத்தகாதவைகளுக்கு எதிரானவைகள்.

ச. செய்யத்தகுந் தொழில்களுக்கு உபாயமும் அதன் உரிமையும்.

7. செய்யத்தக்கதொழிலை முடிக்கும் உபாயத்தை எண்ணித் தொடங்கவேண்டும். தொடங்கியபின் ஆலோசிப்போமென்பது குற்றமாம். (உபாயமாவது:சாம பேத தான தண்டம்.) (8) முடியும் உபாயத்தால் தொழிலை ஆரம்பியாத முயற்சியானது துணைவர் பலர் நின்று குற்றப்படாமல் காத்தாலுங் குற்றப்படும். (முடியும் உபாயமாவன: பொருளாசைக் காரனுக்குப் பொருள் கொடுத்தலும், நடுநிலையாளன், சோம்பலாளன், பிறரோடு போர்செய்து நொந்தவன் ஆகிய இவரிடத்தே இன்சொற்சொல்லுதலும், துணைப்படையாளன், தன்பகுதியோடு பொருந்தாதவன் ஆகிய இவரிடத்தே வேறுபடுத்தலும், இவைகளின் வழிவாராத இடத்து இவரிடத்தும், நம்பக்கூடாத கீழ்மக்களிடத்தும் தண்டம் செய்து தன் வசப்படுத்தலுமாம்.) (9) அவரவர் குணங்களை ஆராய்ந்தறிந்து, அக்குணங்களுக்கிசையச் செய்யாத இடத்து, வேற்றரசரிடத்து நல்ல உபாயத்தைச் செய்த வுள்ளுங் குற்றமுண்டாம். குணங்களுக்கிசையச் செய்யாமையாவன. பொருளாசையுடையவனுக்குத் தண்டஞ் செய்தலும், தண்டஞ் செய்யப்படுபவனுக்குப் பொருளைக்கொடுத்தலும் போல்வன. (நல்ல வுபாயமாவன. கொடுத்தலும், இன்சொற் சொல்லுதலுமே.) இவை, உபாயமல்ல வென்பதாம். (குற்றமுண்டாதல்: காரியமுடியாமை.) (10) தமது நிலைமையோடு பொருந்தாத உபாயங்களை அரசர் தொழில்முடித்தற்பொருட்டுச் செய்வாரானல் உலகத்தார் அங்கீகரிக்கமாட்டார். ஆதலால் அவ்வுலகத்தாரால் இகழப்படாத உபாயங்களை ஆராய்ந்து செய்யவேண்டும். (பொருந்தாத உபாயங்களாவன: தாம் வலியராயிருந்துகொண்டு மெலியார் செய்தற்கு உரிய சாம பேத தானங்களைச் செய்தலும், மெலியராயிருந்துகொண்டு வலியார் செய்தற்கு உரிய தண்டஞ் செய்தலுமாம்.

௪௮-ஆம் அதிகாரம்.

வலியறிதல்.

அஃதாவது:—அவ்வுபாயங்களுள் தண்டஞ் செய்யக் குறித்த அரசனானவன் நால்வகை வலிமைகளையும் அளந்தறிதலாம். (நால்வகையாவன: வினை வலி முதலியன.)

க. வலிமையின் பகுப்பும், அதனையறிந்து பகைமேற் செல்வோர் பெறும் பயனும்.

(1) தான் செய்யக்கருதிய தொழிலினது வலிமையையும் அதனைச்செய்து முடிக்குந் தன் வலிமையையும் அதனை விலக்கும் பகைவனது வலிமையையும் இருவருக்குந் துணை ஆவோர்தம் வலிமைகளையும் ஆராய்ந்து, தனது வலிமை மிகுமானால் அத்தொழிலை அரசன் செய்தல்வேண்டும். எனவே, தன் வலி குறைந்த இடத்தும் சமானமான இடத்தும் செய்யக்கூடாதென்பதாம். (2) தம்வலிமை மிகுந்த இடத்துத் தமக்குச் செய்யக்கூடுந் தொழிலையும், அதற்கறியவேண்டிய துணை வலியையுந் தெரிந்து அதனிடத்து மனம் வாக்குக்களை எப்போதும் வைத்துப் பகையின் மேலே செல்லும் அரசர்க்கு முடியாத பொருள் இல்லையாம்.

உ. தன் வலிமை அறியாதஇடத்து உண்டாகுங் குற்றம்.

(3) தலைவராதலையுடைய தமது வலிமையினது அளவை அறிந்து கொள்ளாதவராகி மனவூக்கத்தால் தம்மின் வலியவரோடு யுத்தஞ் செய்யத்தொடங்கி, அவ்வலியவர் வருத்தப்படுத்தலால் யுத்தஞ் செய்து முடிக்கமாட்டாமல் நடுவிலே கெட்ட அரசர் உலகத்தில் அநேகருண்டு. ஆகலால், தமது பலத்தை அறிந்தே போர்செய்யத் தொடங்கவேண்டுமென்பதாம். (4) அயலரசரிடத்துப் பொருந்திச் சிநேகமுற்று நடவாதவனாகியும், தன் வலிமையின் அளவையறியாதவனாகியுந் தன்னை மெச்சிக்கொண்டு அவ்வரசரோடு பகைத்த அரசன் சீக்கிரத்திலே கெடுவான்.

ந. பகைவன் வலிமையும் அவனது துணைவலிமையும் அறியாத இடத்து உண்டாகுங் குற்றம்.

(5) இலேசாகிய மயிலிறகை அதிகமாக ஏற்றப் பெற்றால் பலமுள்ள வண்டியும் அச்சொடிந்துவிடும். அதுபோல எளியவரும்

அதிகமாக ஒன்று சேர்ந்தாராகில் அவரோடு பகைத்த வலிமையுடைய அரசன் வலிமையிழந்து கெடுவான். இதனால், பகைவரை இலேசாகநினைக்கலாகாதென்பதாயிற்று.

ச. தொழில்வலிமை அறியாத இடத்து உண்டாகுங் குற்றம்.

(6) ஒருமரக்கொம்பினது நுனியிலே ஏறிநின்றவர் அம்மட்டினில்லாது அதைக்கடந்து மேலும் ஏற மன எழுச்சிகொண்டால் அவ்வெழுச்சி அவருயிர்க்கு நாசமாய் முடியும்; அதுபோலப் பகைவர்மேற் போர்செய்யத் தொடங்கினால் தம்மாலே கூடியமட்டுஞ் சென்று நின்றவர் அவ்வளவிலே நில்லாமல் மன ஊக்கத்தாலே மேலுஞ் செல்லுவாரானால் அவ்வூக்கமானது போர் செய்தற்கு ஏதுவாகாமல் அவருயிர் கெடுதற்கு ஏதுவாகுமென்பது உணர்க.

ரு. அறிவும், ஆண்மையும், பெருமையும் ஆகிய மூவகை வலியுள் பெருமையின் பகுப்பாகிய பொருள்வலியறிதல்.

(7) கொடுக்கும் வழியினாலே தனக்குள்ள பொருளின் அளவையறிந்து காற்பாகத்தைமேலேவரும் ஆபத்தை விலக்குதற்காகவும், அரைப்பாகத்தைத் தன் குடும்பச் செலவுக்காகவும் வைத்துவிட்டு, காற்பாகத்தைக் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தலானது பொருளைக்காப்பாற்றி நடக்கும் வழியாகும். கொடுத்தல் மூவகைப்படும். (அவையாவன: தருமத்தின்பொருட்டு, கடவுளர் அந்தணர் வறியோரென்கிற இவருக்கும் புகழுக்கும், பொருளின்பொருட்டு, யானை குதிரை படை நாடு என்ற இவைகளுக்கும், பகையோடு கூடும்போது பிரிக்கப்படுவோர்க்கும், தன்னைவிட்டுப் பிரியும்போது கூட்டப்படுவோர்க்கும், இன்பத்தின பொருட்டு, மண்டபம் வாவி செய்குன்று இளமரச்சோலை முதலானவைகளைச் செய்தற்கும், ஐம்பொறிகள் அநுபவிக்கப்படுமவைகளுக்கும் கொடுத்தல்கள் என்பவைகளாம்.) (8) அரசனுக்குப்பொருள் வருகின்றவழி சிறியதாயிருந்தாலுஞ் செலவாகின்ற வழி பெரியதாகாமலிருப்பதானால் அவ்வரவு சிறியதாயிருப்பதினாலே ஒருகேடுமில்லை. எனவே, வரவுஞ்செலவும் ஒத்திருந்தாலுங்கேடில்லையென்பதுமாம். (9) இவ்விதம் தனக்குள்ள பொருளின் அளவைத் தெரிந்து அதற்கேற்க

வாழமாட்டாமல் அதிகச்செலவு செய்பவன் வாழ்க்கையானவை, உள்ளவைபோலத்தோன்றிப் பின்பு அத்தோற்றமும் இல்லாமல் அழிந்துவிடும். (10) ஒருவன் தனக்குள்ள பொருளினளவை ஆராயாமல் வரவுக்குமிஞ்சிய உதவி செய்தலினாலே அவன் செல்வத்தினளவு சீக்கிரத்திலே கெடும். இதனால், உதவியைச் சுருக்கவேண்டுமென்று கொள்ளாமல் உதவிக்குத் தக்கவாறு பொருளைப் பெருக்கவேண்டுமென்பது கொள்க.

சக-ஆம் அதிகாரம்.

காலம் அறிதல்.

அஃதாவது:—வலிமையினாலே மிகுதியுடையவனாய்ப் பகைவன்மேற் போர்க்குச் செல்லும் அரசன் செல்லுதலுக்கேற்ற காலத்தினையறிதல்.

க. காலத்தினது சிறப்பு.

(1) காக்கையானது தன்னின் வலிதாகிய கோட்டானைப் பகற்பொழுதிலே வெல்லும்; அதுபோல, பகைவரை வெல்லக்கருதுகின்ற அரசருக்கு அதற்கேற்றகாலம் வேண்டும். (ஏற்றகாலமாவது: வெப்பமும், குளிர்ச்சியும் சமமாய் நோய்செய்யாமல் நீரும், உணவுங் கிடைத்தற்கு உரியகாலம்.)

உ. காலம் அறிதலின் பயன்.

(2) இத்தகைய காலத்தோடு பொருந்த அரசன் தொழில் செய்து நடத்தலானது ஒருவரிடத்தும் நில்லாது நீங்குஞ் செல்வத்தைத் தன்னிடத்து நீங்காமற் கட்டுவதாகிய கயிறாகும். (3) இவ்விதம் செய்தற்காகுங் காலம் அறிந்து வேண்டுங் காரியங்களைச் செய்தால் அரசரால் செய்யக்கூடாத தொழில் ஒன்றுமில்லையாம். (4) காலத்தை அறிந்து இடத்தோடு பொருந்தச் செய்யுந்தொழிலைச் செய்வானானால் பூமி முழுதையுந் தானே ஆளநினைத்தாலும் தனக்கு அது கைவசப்படும்.

ங. காலம் அறியாத இடத்தே செய்யவேண்டுவது.

(5) பூமி முழுவதுந் தப்பாது கைக்கொள்ள நினைக்கும் அரசர் தமது வலிமிகுந்திருந்தாலும் அதனை யெண்ணாமல் கைக்கொள்

ளுதற் கேற்ற காலத்தையே நினைத்து அது வருமளவும் பகைவர் மேற் செல்லாமற் காத்திருப்பர்.

௪. காலம் வரும் அளவும் ஒடுங்குதலின் சிறப்பு.

(6) மிகுந்த வலிமையுடைய அரசன் பகைவர்மேற் செல்லுங்காலம் பார்த்திருக்கின்ற இருப்பானது போர்செய்கின்ற ஆட்டுக்கடா தன்பகை கெடப் பாய்தற்பொருட்டுப் பின்னே கால்வாங்குந் தன்மையை யொப்பாகும்

௫. காலம் பார்த்திருக்கும் இடத்துப் பகைமை தோன்றாம லிருக்கவேண்டும்.

(7) அறிவுடைய அரசர், பகைவர் தீங்குசெய்த அப்பொழுதே அவரறிய விரைவாகப் புறத்திலே கோபஞ்செய்யமாட்டார். தாம் அவரை வெல்லுதற்கேற்ற காலத்தையறிந்து, அது வருமளவும் உள்ளே கோபஞ்செய்து கொண்டிருப்பர் எனவே, காலம் வருமுன் புறத்திலே கோபஞ்செய்தால் பகைவர் அதனைத் தடுத்து விடுவரென்பதாம். (8) வெல்லக்கருதிய அரசர் பகைவரைக்கண்டால் அவருக்கு முடிவுகாலம் வருமளவும் அவரைப்பணிந்து நடக்கவேண்டும். அப்படிநடந்து, அக்காலம் வந்து முடியுமிடத்து அப்பகைவர் மேற்செல்வாராளுல் அவர் தலைபற்றுக் கீழேவிழ வெற்றியையடைவர்

௬. காலம்வந்த இடத்து விரைந்து செய்யவேண்டும்.

(9) பகையை இவ்விதம் வெல்ல நினைக்கின்ற அரசர் தம்மாலே பெறுதற்கரிய காலம் வந்துகூடினால் அதுநிற்கும் அளவிலே அதன் முன்னே செய்தற்கரியவைகளா யிருந்த தொழில்களைச் செய்யவேண்டும்.

௭. காலம்பார்த்து இருத்தலுக்கும், தொழில் செய்தலுக்கும் இலக்கணம்.

(10) அரசன் தொழிலின்மேலே செல்லாதிருக்கவேண்டுங் காலத்திலே மீன்வராதபோது கொக்கு ஒடுங்கி யிருத்தல்போல அடங்கியிருத்தல் வேண்டும். தொழிலின்மேலே செல்லுங்காலம் வந்த இடத்து மீன் வந்த காலத்தில் அதைத்தப்பாமற் பிடிக்கின்ற அக் கொக்குப்போல, தொழிலைத் தப்பாது செய்யவேண்டும்.

௫௦-ஆம் அதிகாரம்.

இடனறிதல்.

அஃதாவது:—வலியும் காலமும் அறிந்து பகைவர் மேற்செல்லும் அரசன் தான் செல்லுதற்கேற்ற நிலத்தினையறிதல்.

க. பகைவரது கோட்டையின் புறத்து இறங்குதற்கு ஆகும் இடத்தை அறிதல்.

(1) பகைவரை வளைத்துக் கொள்ளுதற்காகும் ஓரிடத்தைப்பெறுதற்கு, முன்னே யாதொரு தொழிலையும் அவரிடத்துத் தொடங்காதிருக்கவேண்டும். அதுவுமல்லாமல் அவரைச் சிறியவரென்று இகழாதிருக்கவும் வேண்டும். (ஓரிடமாவது: வாயில்களாலும் கீழறைகளாலும் அப்பகைவர் வருதலும் போகுதலும் இல்லா விதம் அரணினைச் சூழ்ந்து ஒன்றற்கொன்று துணையாய்த் தமக்குள்ளே வருத்தமில்லாது பல படைகளிருப்பிற்கும், மதிலும் அகழும் முதலாகிய *அரண் செய்யப்பட்ட † அரசிருப்பிற்கும், ஏற்றநிலம் இருத்தலும் நீரும் உடையது.) அவ்விடத்தைப் பெற்றால் போர் தொடங்கலும், பகைவரையிகழ்தலுஞ் செய்க. (2) மாறுபாட்டைச் சேர்ந்த வலிமையுடையவருக்கும் அரணைச் சேர்ந்து ஆகின்ற பெருக்கமானது பலபயன்களையும் கொடுக்கும். (மாறுபாடாவது: பூமி பல அரசர் ஆளுதற்குப் பொதுவாயுள்ளதென்பது மறந்து தனக்கே யுரித்தாகக்கொள்ள வேண்டுமென்னும் நினைப்பு.)பெருக்கமென்றது: கோட்டையை வளைத்தலை. பலபயன்களாவன:பகைவராலே தனக்கு வருத்தமில்லாமையும் தாம் அவருக்கு வருத்தஞ்செய்தலு முதலானவைகள்.) (3) இவ்விதம் பகைவரை வெல்லுதற்கேற்ற இடத்தைத்தெரிந்து, தம்மைக்காத்துக்கொண்டு, தொழிலைச்செய்வாரானால் வலிமை யில்லாதவரும் வலிமையுடையவராய் வெல்வாரென்பதாம். (4) தாம் தொழில் செய்தற்கு ஏற்ற இடத்தையறிந்து சென்ற அரசர் காவலைப் பொருந்தி நின்று அத்தொழிலைச் செய்வாரானால் முன்பு அவரை வெல்ல எண்ணியிருந்த பகைவர் அவ்வெண்ணத்தை யிழந்துவிடுவர்.

உ. போர் செய்தற்கு ஆகும் இடம் அறிதல்.

(5) முதலையானது ஆழமுள்ள நீரிலானால் பிறவுயிர்களையெல்லாம் வென்றுவிடும். அந்நீரினின்று நீங்கினால் அம்முதலையைப்

---

* அரண் - காவல். † அரசிருப்பு - பாசறை; படைவீடு.

பிறவுயிர்கள் வென்றுவிடும்; இவை போல, பகைவர் மேற்செல்லும் அரசன் அப்பகைவர் நிற்கமாட்டாத இடமறிந்து சென்றால் அவர் அவனுக்குத் தோல்வியடைவர். தான் நிற்கமாட்டாத இடத்திலே சென்றால் அப்பகைவருக்கு அரசன் தோல்வி யடைவானும். (6) நிலத்திலோடுகின்ற வலிமை பொருந்திய உருளைகளையுடைய பெரிய தேர்களானவைகள் கடலில் ஓடமாட்டாவாம். கடலில் ஓடுகின்ற மரக்கலங்களும் (கப்பல்களும்) நிலத்தில் ஓட மாட்டாவாம்; அது போலப் போர்க்குச் செல்பவன் தான் செல்லுதற்குரிய இடனறிந்து செல்லா விட்டால் போர் முடிய மாட்டாதென்பதறிக. (7) இவ்விதம் அரசன் பகைவரிடத்துத் தொழில் செய்யும் இடங்களை யெல்லாம் குறையாமலெண்ணி, இடத்தோடு தொழில் செய்வானானால் அச்செயலுக்கு, தைரியத்தை அன்றி வேறொரு துணை வேண்டுவதில்லை.

ங. பகைவரைச் சார்தலாகாத இடமும் சார்ந்த இடத்து உண்டாகுங் குற்றமும்.

(8) பெருஞ்சேனையையுடைய அரசன் சிறு சேனையுடையவனிருக்கும் இடத்தை அவனை அழிக்க நினைத்துச் சேர்வானாயின் அவனால் தன் பெருமை யழிந்துவிடும். (9) அழிதற்குரிய கோட்டை முதலாகிய காவலினருமையும் பெருமையாகிய வலிமையு முடையர் அல்லராயினும் போர்த் தொழில் செய்தற்குரிய மனிதரை அவர் இருப்பிடத்திற் சென்று தாக்குதல் அரிதாகும். ஏனென்றால், ஆண்மை யுடையவரைச் சிறுமை நோக்கி, அவரிருப்பிடத்திலே சென்று தாக்கினால் அவர் அவ்விடத்தை விட்டுப் போதற்குத் துணியாமல் சாவதற்குத் துணிவுகொண்டவராய்ப்போர்செய்வாராதலால் அவருக்குப் பெரிய சேனையும் தோற்றோடிப் போமென்பதாம். (10) பாகர்க்கு அடங்காதவையும் வேலாயுதத்தையுடைய ஆள்களைக் குத்திக் கோத்த கொம்பை யுடையவையுமாகிய யானைகளைக் கால் புதைகின்ற சேற்று நிலத்தில் அகப்பட்ட இடத்தே நரிகளானவை கொன்று விடும். இதனாலே எவ்வளவு வலிமையுள்ளவரும் செல்லத் தகாத இடத்திலே சென்றால் மிகவும் எளியராலே கொல்லப்படுவ ரென்பது தோன்றுதல் காண்க.

௫க-ஆம் அதிகாரம்.

தெரிந்துதெளிதல்.

அஃதாவது:—மந்திரி முதலானவர்களை அவர்களது பிறப்பு, குணம், அறிவு எனப்படுகின்றவைகளையும் செய்கையையும் காட்சி, கருத்து, ஆகமம் எனப்படுகிற பிரமாணங்களினாலே ஆராய்ந்துதெளிதல்.

க. குணமும், குற்றமும் தெரிந்து குணமுடையவரைத் தெளிதல் வேண்டும்.

(1) *அரசனாலே ஒருவனைத் தெளியவேண்டுமானால் தருமமும், பொருளும், இன்பமும், உயிர்ப் பொருட்டு வரும் பயமும் என்கிற நான்கினது சோதனைத் திறத்தால் மனத்தினியல்பை ஆராய்ந்து, அதன் பின்னே தெளியவேண்டும். (தருமத்தினாலே தெளிதலாவது: தனக்கன்புடையார் ஒருவரால் இவ்வரசன் தருமம் இல்லாதவனா யிருக்கின்றான். ஆதலால் இவனை நீக்கி, வேறொரு அரசனை நியமிக்க எண்ணுகின்றோம். உன் சம்மதமென்னவென்று சொல்லச் செய்து தெரிதல். பொருளாலே தெளிதலாவது: இவ்வரசன் உலோபனாய் ஒருவருக்கும் கொடாமலிருக்கின்றான். ஆதலால் இவனை நீக்கி, ஈகையுடைய ஒருவனை நியமிக்க எண்ணுகின்றோம். உன் அபிப்பிராயம் என்னவென்று சொல்லச் செய்து தெரிதல். இன்பத்தாலே தெளிதலாவது: தொன்று தொட்டுப் பழகிய தவத்தால் வயது முதிர்ந்தவளை அனுப்பி, யௌவனமுள்ள ஒரு பெண் பெயரைச் சொல்லி, இவள் உன்னைச் சேர விரும்புகின்றாள். சேர்வாயாகில் இன்பம் அநுபவிப்பதோடு இவளாற் பெரும் பொருளும் அநுபவிப்பா யென்று உறுதிபடச் சொல்லும்படி செய்து, அவன் அபிப்பிராயந் தெரிதல். அச்சத்தாலே தெளிதலாவது: யாதாவதொரு காரணத்தால் ஒருவனை முன்னிட்டு, இவ்வரசன் நம்மைக் கொல்ல எண்ணுகின்றான். அவன் கொல்லுமுன்னமே நாம் அவனைக் கொன்று வேறொரு அரசனை வைத்துக்கொள்வோம். உன் கருத்து என்னவென்று ஒரு மந்திரியாற் சொல்லும்படி செய்து, தெரிதல்.) இந்நான்கினும் மனம் வேறுபடாதவனா யிருந்தால் பிற்காலத்தினும் வேறுபடமாட்டானென்று கொள்ள வேண்டும்; இவ்விதந் தெரிந்து கொள்ளும் அளவை கருதலளவையாம். (2) அரசன் தெளிவு வைக்கவேண்டுவது உயர்ந்த குடியிலே பிறந்து, குற்றம்*

கடிதல் அதிகாரத்திற் சொல்லப்பட்ட அறுவகைக் குற்றங்களுடன் சோம்பல், மறவி முதலிய குற்றத்தினின்று நீங்கி நமக்குக் குற்றம் வருமோவென்று பயந்து நிற்கும் நாணமுடையவரிடத்தேயாம். (நாணமாவது: இழிதொழிலிலே மனஞ் செல்லாதிருத்தல்.) இவ்வி தந் தெளிதல் ஆகமப் பிரமாணத் தெளிவாம். (3) கற்றற்கு அரு மையான நூல்களைக் கற்று, முன் சொல்லப் பட்ட குற்றங்கள் இல் லாதவிடத்தும் நுட்பமாக ஆராயுமிடத்து, அறியாமையானது ஏகதேசமிருக்கும். காட்சிப் பிரமாணத்திலே தெரிந்தால் இவ்வள வும் இல்லாதிருப்பவரைத் தெளியவேண்டும்.

உ. குணமிகுந்தவரைக் கோள்ளவேண்டும் என்பதும், குற்ற மிகுந்தவரைத் தள்ளவேண்டுமென்பதும்.

(4) குணம் குற்றங்களுள் ஒன்றேயுடையார் உலகத்திலே ல்லாமையால் குணங்களையும், குற்றங்களையும் ஆராய்ந்து பின்னர் அவ்விரண்டினுள்ளும் மிகுந்தவைகளைத்தெரிந்து மிகுந்தவைகளால் அவரைக்கொள்ளவேண்டும். எனவே, குணமிகுந்தால் யோக்கிய ரென்று கொள்ளவேண்டுமென்பதும், குற்றமிகுந்தால் அயோக் கியரென்று தள்ளவேண்டுமென்பதும் ஆயின.

ங. குணங் குற்றங்களை அறியுங் கருவி.

(5) குடிப்பிறப்பு, குணம், அறிவு என்பவைகளால் மனி தரையும் பெருமையாகிய பொன்னின் மாற்று அறிதற்கும், மற் றைச் சிறுமையாகிய பொன்னின்மாற்று அறிதற்கும் உரை கல் லாவது தங்கள் தங்களுடைய செயல்களேயாம்.

ச. தேளியப்படாதவர் இவரேன்பதும், தேளியப்படாதவரைத் தேளிந்தால் உண்டாகுங் குற்றமும், தேளிவுக்கு அளவும்.

(6) உலகத்தாற் பழிக்கப்படுவனவற்றை விட்டுவிடுதற் கும், புகழப்படுவனவற்றைச் செய்தற்குங் காரணமாகிய உலக நடையினியல்பு சுற்றமில்லாதவருக்கு இல்லாமையால் சுற்றத்தா ரில்லாதவரைத் தெளியாதிருக்கவேண்டும். ஏனென்றால் அவர் உல கத்தோடு சம்பந்தம் இல்லாராதலால் பழிக்குப்பயப்பட மாட்டா ரென்க. (தெளிதல்: நல்லவரென்று நம்புதல்.) (7) அன்பு செலு

த்துதல் காரணமாக தமக்கு அறியவேண்டும் அவைகளை அறியா தவரைத் தெளிந்து கைக்கொள்ளுதலானது, அரசனுக்கு அறிவி ல்லாமையெல்லாவற்றையுங் கொடுத்துவிடும். (அறிவில்லாமையா வன: தொழில்செய்யவல்லவரை அறியாமையும், மேல்வருவன வற்றை அறியாமையு முதலியனவாம்.) (8) தன்னோடு சம்பந் தமில்லாதவனைப் பிறப்புமுதலிய வற்றாலும் செய்கையாலும் ஆரா யாதவனாகித் தெளிந்துவைத்துக் கொண்ட அரசனுக்கு அவ்விதம் வைத்துக்கொள்ளுதல் அவன் சந்ததி முறையினும் நீங்காத துன் பத்தைக் கொடுக்கும். (சம்பந்தமாவது: குடியோடு தொடர்ந்த பழமையுடையதாம.) (9) யாரையும் ஆராயாமற் கைக்கொள் ளக்கூடாது. அவரவர் வல்லமைக்கேற்ற தொழில்களைத் தெரிந்து கைக்கொண்டபின் அவரிடத்துச் சந்தேகம் வையாதிருத்தல் வே ண்டும். (10.) அரசன் ஒருவனை ஆராயாமற் கொள்ளுதலும் ஆரா ய்ந்து நல்லவனென்று கொள்ளப்பட்டபின் அவனிடத்தே சந்தே கம் வைத்தலும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

ருஉ-ஆம் அதிகாரம்.

தெரிந்து வினையாடல்.

அஃதாவது:—மேற்கூறியவாறு தெளியப்பட்டவரை அவர் செய்ய வல்ல தொழில்களை அறிந்து அவைகளினாலே ஆளுந்திறம்.

க. ஆளுதற்கு உரியவனது இலக்கணம்.

(1) அரசன் முதலிலே ஒரு வேலையைக்கொடுத்தால் அவ் வேலையில் ஆமவைகளையும் ஆகாதவைகளையும் ஆராய்ந்து, ஆமவை களையே விரும்பிய இயல்புடையவன் பின்னை அவ்வரசனாலேயுயர் ந்த வேலையிலேவைத்து, ஆளப்படுவான். (2) பொருள்கள் வரும் வழிகளை அதிகப்படுத்தி, அப்பொருள்களாலே செல்வங்களை வள ரச்செய்து பொருள்கள் வரும்வழிகளுக்கும் பொருள்களுக்கும் செல்வங்களுக்கும் வந்த இடையூறுகளைத் தினந்தோறும் ஆராய் ந்து நீக்கவல்லவன் அரசனுக்கு வேலைசெய்யக்கடவன். (செல்வங் களாவன: பலவகையான பதார்த்தங்களும், இன்பமுமாம். இடை

பூறு: சுற்றந்தார், பகைவர், திருடரால்வருந்துன்பம்.) (3) அரச னிடத்தே அன்பும் அவனுக்கு ஆங்காரியங்களை அறியும் அறிவும் அக்காரியங்களைச் செய்யுமிடத்துக் கலங்காமையும் அக்காரியங்களா லே பொருள்கிடைத்தபோது, அவைகள்மேலே ஆசையில்லாமையுமா கிய இந்நான்கு குணங்களையும் நன்றாகவுடையவனிடத்தே அதிகார ங்கொடுக்குந்தெளிவு அரசனுக்கு உண்டாகும். எனவே,மேற்கூறிய நான்கு குணங்களும் அரசன் அதிகாரங் கொடுத்தற்குக் காரண மாதலறிக.

உ. ஒருவகையால் ஒழிக்கப் படுவார்.

(4) எல்லாவகைகளாலும் ஆராய்ந்து தெளிந்து, அதிகார த்தில் வைத்தபின்னும் அவ்வதிகாரத்தினியல்பால் அரசன் பதவி யை விரும்பி மாறுபடுகிற மனிதர் உலகத்திற் பலருள்ளார். சீவக னென்னும் அரசன் கட்டியங்காரனை மந்திரித்தனத்தில் வைக்க, அவன் அவ்வரசன் பதவியை விரும்பிச்செய்த மோசமே இதற்குச் சாட்சியாதலறிக; இச்சரிதம் சீவக சிந்தாமணியில் விரிவாகக் காண லாம். இத்தன்மையுடையவரே ஒழிக்கப்படுவார். (ஒழித்தல் - நீக்கல்.)

ங. வினையினது இயல்பு, அறிவு,வலிமை உடையவனை விட லாகாது.

(5) அரசன் தொழில்செய்யும் உபாயங்களையறிந்து, செய் கையாலும் இடையூறுகளாலும் வருந் துன்பங்களைப் பொறுத்துக் காரியத்தை முடிவுசெய்ய வல்லவனை விட்டுவிட்டு, அன்புடையவ னென்று முடிக்குந் திறமில்லாத மற்றொருவனை ஒரு தொழில் முடிக்க ஏவக்கூடாது. ஏவினால் காரியங்கெட்டுவிடும். ஆதலால், அறிவு வலிமையுடையவனை விடலாகாதென்பது காண்க.

ச. ஆளுதற்கு உரியவனை ஆளுந் திறம்.

(6) செய்பவனிலக்கணத்தை முன்னே ஆராய்ந்து, செய்யப் படுந்தொழிலி னியல்பைப் பின்னே ஆராய்ந்து, அதன்பின்பு அவ னையும் அத்தொழிலினியல்பையும் காலத்தோடு சேர்த்து, ஒற்று மைப்பட அறிந்து, அவனை அத்தொழிலிலே செலுத்தி ஆளுதல் வேண்டும். (காலத்தோடுசேர்த்து ஒற்றுமைப்பட அறிதலாவது:

இந்தக்காலத்தில் இவ்விலக்கணமுடையவன் செய்தால் இத்தொழில் முடியுமென்றறிதல்.) (7) இத்தொழிலை இச்சாதனத்தால் இவன் முடிக்கவல்லவனென்று பிரிவுபடுத்தி, ஆராய்ந்து, இம்மூன்றும் விரோதமில்லாமல் ஒத்திருந்தால் அத்தொழிலை அவனிடத்து விட்டு முடிக்கவேண்டும். (சாதனமாவன: துணையும், பொருளும்.) (8) ஒருவனை அரசன் தனது தொழில் செய்தற்குரியவனாயிருக்குந் தன்மையை அறிந்து, துணிந்தபின்பு அவனை, அத்தொழில் செய்தற்குரியவனாக உயரச்செய்யவேண்டும். அவ்விதஞ் செய்யாவிடில் அதனாலும் கேடு உண்டாகும். (உயரச் செய்தலாவது: தொழிலைத் தானே செய்துமுடிக்கும் வலிமையுடையவனாக்குதல்.) (9) தனது தொழிலினிடத்தே எப்போதும் முயற்சியையுடையவன் அவ்வுரிமையால் தனக்குச் சிநேகமாய் நடக்கிற தன்மையை, அது பொறாமல் கோட்சொல்பவர் சொல்லைக்கேட்டு மாறாக நினைக்கும் அரசனை விட்டு இலக்குமி நீங்குவள்.

௫. ஒருவனை ஆண்ட இடத்துச் செய்யத் தக்கது.

(10) அதிகாரஞ் செய்பவன் கோணாதிருக்க உலகமானது கோணாது. ஆதலால், தினந்தோறும் அவ்வதிகாரஞ்செய்பவன் செய்கையை ஆராய்ந்து வரல்வேண்டும். (அதிகாரஞ்செய்பவன்: மந்திரி.) அதிகாரஞ்செய்யு மந்திரியின் செய்கை ஒன்றினை ஆராயவே, அதன் வழிப்பட்ட உலகமெங்கும் ஆராய்ந்தவனாவனென்பது கருத்து.

௫௩-ஆம் அதிகாரம்.

சுற்றந்தழால்.

அஃதாவது:—அரசன் தனதுசுற்றத்தாரைத் தன்னைவிட்டு நீங்காதிருக்கும்படி தழுவுதல்.

௧. சுற்றத்தினது சிறப்பு.

(1) ஒருவன் செல்வங்கெட்டு வறுமைப்பட்ட இடத்தும் தம்மோடு அவனிடத்து உண்டாகிய பழைய நன்றியை யெடுத்துக் கொண்டாடும் இயல்புகள் உறவினரிடத்தேயுள்ளனவாம். (பழைய நன்றியாவது: செல்வத்தோடிருக்குங்காலத்திலே தமக்குச் செய்த உபகாரம்.)

உ. சுற்றத்தைத் தழுவுதல் செல்வத்துக்கு ஏதுவும், அரணும், பயனும் ஆம்.

(2) அன்பு நீங்காத சுற்றத்தார் ஒருவனுக்குக் கிடைக்குமானால், அக்கிடைத்தலானது விருத்தியாகல் நீங்காத பலசெல்வங்களையும் அவனுக்குக் கொடுக்கும். (பலசெல்வமாவன: படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆகிய ஆறுமாம்.) (3) அச் சுற்றத்தாரோடு ஒற்றுமையில்லாதவனது செல்வங்கள் குளப்பரப்பானது கரையில்லாமல் நீர் நிறைந்தாற் போலும். எனவே, கரையில்லாத நீர் குளத்திலே தங்காமல் புறத்திலே போதல போலச் சுற்றத்தார் சூழ்ந்து காவாத செல்வம் தன்னிடத்தில்லாமற் கெட்டுப்போமென்பதாயிற்று. (4) செல்வத்தைப் பெற்ற ஒருவன் அச்செல்வத்தாற் பெற்றபயனாவது: தன்னுறவினராலே சூழப்படும் வகை அவ்வுறவினரைத் தழுவி நடத்தலாம்; இந்நடக்கை பகையில்லாமல் அரசாளுதற்கு ஏதுவாகலால் இதனைச் செல்வத்திற்குப் பயனென்று சொல்லினார்.

ங. சுற்றம் தழுவுதற்கு உபாயம்.

(5) சுற்றத்தாருக்கு வேண்டுமவைகளைக் கொடுத்தலையும் இன்சொற் சொல்லுதலையும் ஒருவன் செய்யவல்லவனானால் ஒன்றையொன்று தொடர்ந்துபற்றிய சுற்றத்தாராலே சூழப்படுவான். இவ்விதஞ் சூழ்தல் ஒருபெரிய கோட்டை சூழ்தல்போலாகும். (6) ஒருவன் பெருங்கொடை யுடையவனும் அளவுக்கு மிஞ்சிய கோபத்தை விரும்பாதவனுமானால் அவன்போலச் சுற்றமுடையவர் இப்பெரிய உலகத்திலில்லை. (பெருங்கொடையாவது: ஒன்றினாலும் வறுமையடையாதிருக்கக் கொடுத்தல்.) (7) காக்கைகள் தமக்கு இரையைக் கண்ட இடத்து மறைக்காமல் தம்மினத்தை அழைத்து, அதனோடு கூடியுண்ணும். அப்படிப்பட்ட குணமுடையவருக்கே சுற்றத்தினாலாகிய பெருக்கங்களும் உளவாகும். (8) அரசனானவன் எல்லாரையும் ஒரு தன்மையராக நோக்காமல் அவரவர் தகுதிக்கேற்க நோக்குவானாயின் அச்சிறப்பு நோக்கி, அவனை விடாது வாழுஞ் சுற்றத்தார் அநேகராவார். இவ்விதம் சிறப்புநோக்கில்லாத இடத்து உயர்ந்தோர் தன்னை நீங்குவரென்பதாம்.

௪. தீமை செய்யப்போய் அதைவிட வருவானும் அது செய்யாமற்போய் பின்பு நன்மை செய்ய வருவானுமாகிய சுற்றத்தாரைத் தழுவுதல் வேண்டும்.

(9) சுற்றத்தாராயிருந்து தன்னோடு பொருந்தாமல் யாதாயினும் ஒரு காரணத்தினாலே பிரிந்துபோனவர் பொருந்தாமைக்குக்காரணம் தன்னிடத்திலே யில்லைபாக மீண்டுஞ் சுற்றத்தாராக வருதல்தானே யுண்டாகும். எனவே, தன்னிடத்திற் குற்றமில்லாதபோது பிரிந்துபோன சுற்றத்தார் வலியவருவரென்பதாயிற்று. ஆதலால் சுற்றத்தார் பிரியும் வண்ணம் குற்றமுண்டாக நடக்கலாகாது. (10) தன்னிடத்தினின்றுங் காரணமில்லாமற் பிரிந்துபோய்ப் பின்பு ஒருகாரணத்தினாலே தன்னிடத்திலே வந்த சுற்றத்தாரை அக்காரணத்தை அரசனானவன் செய்துவைத்து (முடித்துவிட்டு) ஆராய்ந்து தழுவிக்கொள்ள வேண்டும். காரணமில்லாமற்பிரிந்துபோய் மற்றொருகாரணத்தால் வந்தவனாதலால் ஆராய்ந்து தழுவவேண்டுமென்று சொல்லலாயிற்று.

ருச- ஆம் அதிகாரம்.

பொச்சாவாமை.

அஃதாவது:—அழகு, செல்வம், ஆற்றல் முதலானவைகளால் மகிழ்ந்து தன்னைக்காத்துக் கொள்ளுதலினும், பகையழித்தல் முதலாகிய காரியங்களிலும் மறதிசெய்யாமை. (ஆற்றல் - வல்லமை.)

௧. மறவியின் குற்றம்.

(1) மிகுந்த மகிழ்ச்சிக் களிப்பால் வரும் மறதியானது அரசனுக்கு அளவு கடந்த கோபத்தினுந் தீயதாகும். (மிகுந்த மகிழ்ச்சியாவது: பெருஞ்செல்வம், பேரின்பம், பெருமிதம் என்ற இவைகளால் வருவது. அளவாவது; பகைவரைக் கொல்லுதற்கும், கொடியோரைத் தண்டித்தற்கும் வேண்டுவது.) மறதி-காக்கவேண்டிய இடத்தில் காவாமல் தன்னையே கொல்லுதலால் கோபத்தினுந் தீயதென்னப்பட்டது. (2) ஒருவனுக்கு நித்தியத்தரித்திரமானது அறிவினைக் கெடுக்கும் விதம்போல மறதியானது புகழுடை

யவனிடத்து உண்டானல் அப்புகழைக் கெடுத்துவிடும். (நித்தியத் தரித்திரமாவது: தினந்தோறும யாசகத்தால் வருந்தி வயிறு வளர்த்தல்.)

உ. மறவியுடையவருக்கு வருந்துன்பம்.

(3) புகழுடையராயிருக்கையானது மறவியுடையாருக்கில்லையாம். இது உலகத்தில் எவ்வகைப்பட்ட நூலுடையாருக்கும் ஒப்ப முடிந்தது. எனவே, இது மறுக்கமுடியாதென்பதாயிற்று. (4) மனத்தினிடத்துப்பயம் உடையவருக்குக் காடுமலை முதலாகிய காவலுக்குள்ளிருந்தாலும் அவைகளாலே பயனில்லை. அதுபோல மறதியுடையவர் எல்லாச் செல்வங்களும் உடையராயிருந்தாலும் அவருக்கு அவைகளாலே பயனில்லையாம். (5) வராமல் தடுக்கப்படுந் துன்பங்களை அவை வருதற்கு முன்னாக அறிந்து, தடுக்காமல் மறந்திருந்தவன் பின்பு இடையூறுவந்த காலத்துத் தடுக்கக்கூடாமையால் தன்னுடைய அம்மறதிக் குற்றத்தை நினைத்து வருத்தப்படுவன்.

ங. மறவாமையின் சிறப்பு.

(6) அரசர்க்கு மறவாமையானது தொழில்செய்வோர் சுற்றத்தாராகிய எவரிடத்தும் எந்தக்காலத்திலும் தவறாமல் கிட்டுமானல் அதையொக்கும் நன்மையானது இல்லையாம். தன்பெருக்கக் காலத்திலும் மறவாமை வேண்டும் எனபதற்காக எந்தக்காலத்தினுமென்று சொல்லப்பட்டது. (7) மறவாதமனத்தினாலே எண்ணிச்செய்தால் இவை அரியவையென்று சொல்லப்பட்டு, ஒருவனுக்கு முடியாத காரியங்களில்லை. இதனால் இடைவிடாத நினைவும், ஆராய்ச்சியும் உடையார்க்கு எல்லாம் எளிதிலே முடியுமென்பதாம். (எண்ணுதல் - ஆராய்தல்.)

ச. மறவாது செய்யவேண்டியவைகள்.

(8) நீதிநூலுடையரால் இவை அரசர்க்கு உரியவை வென்று உயர்த்திச் சொலலப்பட்ட செயல்களைப்பாதுகாத்துச் செய்யக் கடவர்; அப்படிச் செய்யாமல் மறந்தவர்க்கு எழுபிறப்பிலும் வரும் நன்மையில்லையாம். (செயல்களாவன: மூவகையாற்றல்,

நால்வகையுபாயம், ஐவகைத்தொழில், அறுவகைக்குணம் முதலான செயல்கள்.) இவற்றுள், மூவகையாற்றல்: அறிவு, ஆண்மை, பெருமைகளாம். நால்வகை யுபாயம்: சாம பேத தான தண்டங்களாம். ஐவகைத் தொழில்: *மேற்சேறல், †அரண்முற்றல், ‡கோடல், §பொருதல், ‖வேறல்களாம. அறுவகைக்குணங்கள்: நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், ¶இருத்தல். பிரித்தல், கூட்டல்களாம். சாதி தருமமாகிய இவைகளில் தவறிய அரசர்களுக்கும் நரகத் துன்பமேயுள்ளது. ஆதலால், எழுபிறப்பினும் நன்மையில்லையென்று கூறினர்.

ரு. மறவாமைக்கு உபாயம்.

(9) அரசர் தமது மகிழ்ச்சியினிடத்துத் தாம் செருக்குறும்போது முற்காலத்திலே அதனாலாகிய மறதியினாலே கெட்டவர்களை நினைக்கக்கடவர். கெட்டவரை நினைக்கவே, நாமும் அப்படியே கெடுவோமென்று, அம்மகிழ்ச்சியினிடத்தே செருக்குற மாட்டார். ஆதலால், கெட்டவர்களை நினைக்கவேண்டு மென்று விதித்தனர். (10) முன்போலப் பின்னுந் தானினைந்த பொருளையே மறவாமல் நினைக்கக் கூடுமானால் அரசனுக்கு, அப்பொருளை நினைத்தபடியே அடைதல் எளிதாகும். இதனால், நினைத்த பொருள் அடைதற்கு மறவாமல் முயற்சிசெய்ய வேண்டுமென்பதாயிற்று. அடையாமைக்குக் காரணம் மறதியேயாம்.

ருரு-ஆம் அதிகாரம்.

செங்கோன்மை.

அஃதாவது:—அரசனாலே செய்யப்படும் முறையினது தன்மை; அந்த முறையானது ஒருபக்கத்திலே சாயாமல் செவ்வையாகிய கோல் போலுதலால் செங்கோலெனப்பட்டது.

---

* மேற்சேறல் - பகைவர்மேற் செல்லுதல். † அரண் முற்றல் - பகைவர் கோட்டையை வளைத்தல். ‡கோடல் - வளைந்த இடத்தைக்கைப்பற்றுதல். § பொருதல் - யுத்தஞ் செய்தல். ‖ வேறல் - வெல்லுதல். ¶ இருத்தல் - சமயம் வாய்க்கும் வரை யுத்தத்துக்குச் செல்லாமல் அடங்கியிருத்தல்.

க. செங்கோலினது இலக்கணம்.

(1) தன் கீழ்வாழ்வோராலே செய்யப்பட்ட குற்றத்தை யுணர்ந்து, எல்லாரிடத்தும் தாட்சணியமில்லாமல் நடுவுநிலைமையைப் பொருந்தி, அக்குற்றத்துக்குச் சொல்லப்பட்ட தண்டனையை நூல் வல்லவரோடும் ஆராய்ந்து, குற்றத்துக்குத் தக்கபடி தண்டனை செய்தலே நீதியாம்.

உ. செங்கோலின் சிறப்பு.

(2) உயிர்களெல்லாம் மழையை நோக்கி வாழுமென்றாலும் குடிகளானவை அரசனது நீதியாகிய செங்கோலை நோக்கிவாழும். ஏனென்றால், மழையாலாகும் உணவுப்பொருளிருந்தாலும் அரசன் நீதி யில்லாத இடத்துப்பயனில்லை. ஆதலாலென்க. (3) அரசன் செங்கோலானது, அந்தணர்க்கு உரித்தாகிய வேதத்திற்கும் அந்த வேதஞ் சொல்லப்பட்ட தருமத்திற்குங் காரணமாகி நின்றதாம். வேதமும், தருமமும் அநாதியாயினும், அரசன் செங்கோல் இல்லாத இடத்து நடக்கமாட்டாவாம். ஆதலால் செங்கோலை அவ்விரண்டிற்குங் காரணமென்றார்.

ங. செங்கோல் செலுத்தியவன் அடையும் பயன்.

(4) தன் குடிகளை அணைத்துச் செங்கோல் செலுத்தும் பெரு நிலத்தையுடைய அரசனது அடியைப் பொருந்தி, உலகத்தார் நிற்பார். (அணைத்தலாவன: இன்சொற் சொல்லுதல், தளர்ந்த இடத்து வேண்டும்பொருள்களைக் கொடுத்தல் முதலியவை.) (5) பருவமழையும் குறையாத விளைவும் ஒன்று சேர்ந்து, நூல்களாலே சொல்லப்பட்ட இயல்பாற் செங்கோலைச் செலுத்தும் அரசனது நாட்டினிடத்து உள்ளனவாம். (பருவ மழை: பெய்யவேண்டிய காலத்துப் பெய்யும் மழை.) (6) அரசனுக்குப் போரில் வெற்றியைத் தருவது, அவனெறியப்பட்ட வேற்படையல்ல. அவனது செங்கோல் கோணுதிருக்குமானால், அச்செங்கோலேயாம். (கோணுதிருத்தலாவது: நீதி தவருதிருத்தல்.) (7) அரசன் முட்டுப் பாடு வந்த இடத்தும் செங்கோலை நீதிதவருமல் செலுத்துவானாகில் உலக முழுவதையுங் காப்பாற்றுவானாவான். அச்செங்கோலானது,

அவ்வரசனைக் காப்பாற்றுவதாகும். இவ்விதம் செங்கோல் செலுத்தியதற்கு, உதாரணமாக மகனைத் தேர்க்காலில் வைத்துத் தேர் நடத்திய மனு நீதிகண்ட சோழனை அறிக; இச்சரிதம் பெரிய புராணத்தில் மனு நீதிகண்ட புராணத்திலுண்டு. (முட்டுப்பாடு: தன்னுயிர் போல்வார் உயிரை யிழத்தல் முதலானவையாம்.)

ச. செங்கோல் செலுத்தாதவனது கேடு.

(8) வழக்கறிவிப்பவருக்கு எளிதான சமயத்தையுடையவனாகி, அவ்வழக்கறிவிப்பவரால் அறிவிக்கப்பட்டவைகளை நூல் கற்றவர் பலரோடும் ஆராய்ந்து, தோன்றிய உண்மைக்கு ஒப்பாக நீதி செலுத்தாத அரசன் தாழ்ந்த பதத்திலே நின்று தானே கெடுவான். (தாழ்ந்த பதம்: பாவமும் பழியும் எய்தி நிற்கும் நிலை.)

ரு. செங்கோல் செலுத்தும் அரசனுக்குத் தீயவரிடத்து மூவகைத்தண்டமுஞ் செய்யவேண்டும்.

(9) குடிகளைப் பிறர் வருத்தஞ் செய்யாமற் காத்து, தானும் அளவுக்கு மிஞ்சிய வரிகளேற்படுத்தாமல் ஆதரித்து, அவரிடத்திலே குற்றமுண்டானால் அதனைத் தீர்க்கும்படி, அவரைத் தண்டித்தல் அரசனது தொழிலாம். ஆதலால், அது பழியாகாது. ஏனென்றால், அவரைக்குற்றத்தினின்று நீக்கிப் பரிசுத்தராக்குதலாலென்க; இதனை மறக்கருணை யென்பர். இதனை "தண்டமுங் கருணை யென்றறிவாயே" எனக் கைவல்லியம் சந்தேகந் தெளிதற் படலத்தில் 60-ஆம் செய்யுளிற் கூறியதனாலு முணர்க. தண்டம் மூவகையாம்; அவையாவன: பொருளைக் கொள்ளுதல், துன்பஞ் செய்தல், கொல்லுதல்களாம். இவற்றில் குற்றத்துக்குத் தக்க ஒன்றைச் செய்யவேண்டுவதறிந்து செய்க. (10) அரசனானவன் கொலையினாலே கொடியவரைத் தண்டித்து நல்லோரைக் காப்பாற்றலானது உழவனானவன் பயிருக்குக் களையெடுத்தலை யொப்பாகும். (கொடியவராவார்- தீக்கொளுவுவோர், நஞ்சிடுவோர், திருடர், பிறர் மனையை விரும்புவோர் முதலானவர்கள்.) இப்படிப் பட்டவரை அரசன் கொல்லாத இடத்துப் புல்லுக் களைக்கு, அஞ்சுகின்ற பயிர்போலப் பல வருத்தங்களை அடைந்து உலகத்தார் துன்பப்படுவர்.

௫௬-ஆம் அதிகாரம்.

கொடுங்கோன்மை.

அஃதாவது:—நீதியினது கோணுதற் றன்மை.

௧. கொடுங்கோன்மையினது குற்றம்,

(1) பொருளை விரும்பிக் குடிகளை வருத்தப்படுத்துந் தொழிலைத் தன்னிடத்துக் கொண்டு நீதியல்லாதவைகளைச் செய்து நடக்கும் அரசனானவன், பகைமை பற்றிக் கொல்லுதற்றொழிலைத் தம்மிடத்தே கொண்டு நடப்பவரினுங் கொடியனானவன், ஏனென்றால், கொலைசெய்வார் செய்யுந் துன்பம் அன்றோடு போகும். கொடுங்கோலரசர் செய்யுந் துன்பம் எந்நாளும் ஒழியாது. ஆதலாலென்க. (2) தண்டித்தற்றொழிலோடு நின்ற அரசன் குடிகளிடத்தில் வரியல்லாதவழிப் பொருள் கேட்டு வாங்குதல் வழிப்பறிபறித்து வேலாயுதத்தோடு தனியே நின்ற திருடன் வழிப்போக்கனை நோக்கி, உன் கைப் பொருளைத் தாவென்று வாங்குதல் போலும். தாராக்கால் தண்டிப்பேனென்னுங் குறிப்புடையவனாதலால் அரசன் யாசித்து வேண்டுதலுங் கொடுங் கோலாம்.

௨. கொடுங்கோலுடைய அரசன் அடையுங் குற்றம்.

(3) தினந்தோறும் தன்னாட்டிலே தோன்றுந் தீமைகளை ஆராய்ந்து, அவற்றை விலக்கும் நீதியைச் செலுத்தாத அரசன் தினந்தோறும் சிறிது சிறிதாக அந்நாட்டை இழந்து விடுவான். (நாட்டை இழத்தலாவது: நாட்டிலுள்ளாரால் பயனடையாமையாம்.) (4) பின்னே வருவனவற்றை எண்ணாமல் முறை தவறச் செய்யும் அரசனானவன் அச்செயலால் முன்னே சம்பாதிக்கப் பட்ட பொருளையும் பின் அப்பொருள் சம்பாதித்தற்கு ஏதுவாகிய குடிகளையும் ஒருமிக்க இழந்து விடுவான். (5) அரசன் செல்வமாகிய மரத்தைக் குறைக்கும் வாளாயுதமானது அவன் நீதி செலுத்தாமையினாலே குடிகள் துன்பப் பட்டு, அதனைப் பொறுக்க மாட்டாமல் அழுத கண்ணீரல்லவோ? ஆதலால் அக்கண்ணீர் உண்டாகாமல் விலக்குவது அரசனுடைய நீதியாம். (6) அரசர்க்குப் புகழ்கள் நிலைபெறுதல் செங்கோன்மையினாலாகும். அச்செங்கோன்மை யில்லையானால் அவ்வரசருக்கு, அப்புகழ்கள் உண்டாக மாட்டாவாம்

(புகழ்களாவன: வெற்றி, கொடை முதலியவற்றாலுண்டாகிய நன்மைச் சொற்கள்.)

௩. கொடுங்கோலுடைய அரசரது நாட்டில் வாழ்வார்க்கு வருங் குற்றம்.

(7) மழை இல்லாமையானது பூமியில்வாழும் உயிர்களுக்கு எவ்வகைத் துன்பந் தருமோ? அவ்வகைத் துன்பத்தை அரசனது அருளில்லாமையானது குடிகளுக்குக் கொடுக்கும். (8) நீதியைச் செய்யாத அரசனது கொடுங்கோலின் கீழ் வாழ்ந்தால் எல்லாருக்கும் பொருளுடைமையானது இல்லாமையைப் பார்க்கிலும் அதிகத் துக்கத்தைச் செய்யும். எவ்விதமெனில்? உள்ளது போதுமென்றடங்காமல் பேராசைப் படுவோனது நாட்டிலே அடி, குத்து, வெட்டுப் பொருளுடையார்க்கே யாதலாலென்க.

௪. கொடுங்கோலுடைய அரசனது நாட்டில் உண்டாகுங் குற்றம்.

(9) மேற் கூறியவாறு அரசன் முறை தவறும் விதம் பொருள் சம்பாதிப்பானாகில் அவனது நாட்டிலே பருவ காலத்து மழையில்லாமற் போக மேகம் பொழிதலைப் பொருந்தாது. (10) காப்பாற்றற்குரிய அரசன் உயிர்களைக் காப்பாற்றானாகில் பசுக்களிலே பால் குறைந்து விடும். அந்தணரும் வேதங்களை மறந்து விடுவர். இவ்விரண்டுஞ் சுருங்கி விட்டால் தேவருணவுபெற யாகம் நடவாதாம். யாகம் இல்லா விட்டால் மழையுமில்லை. இவைகளுக்கெல்லாம் காரணம் அரசநீதி தவறுதலென்றறிக.

௫௭-ஆம் அதிகாரம்.

வெருவந்தசெய்யாமை.

அஃதாவது:—குடிகள் அஞ்சுவதும், மந்திரி முதலிய அங்கங்கள் அஞ்சுவதும், தான் அஞ்சுவதுமாகிய தொழில்களைச் செய்யாமை.

௧. குடிகள் பயப்படுவன செய்யாமையின் இலக்கணம்.

(1) ஒருவன் மெலியவனுக்குத் தீங்கு செய்த இடத்து நடுவாக நின்று அத்தீங்கை ஆராய்ந்து, பின்னும் அப்படிப்பட்ட காரி

யத்திலே செல்லாதிருக்கும் பொருட்டு, அத்தீங்காகிய குற்றத்துக்குத் தக்கபடி அத்தீங்கு செய்பவனைத் தண்டிப்பவனே அரசனாவான். இதனால், நடுவாக நின்று ஆராயாமையும் வேறொரு காரணம் பற்றி அதிகமாகத் தண்டித்தலுங் குடிகள் அஞ்சுந் தொழிலென்றறிக. (2) செல்வமானது நெடுங்காலம் நீங்காதிருத்தலை விரும்புவோர் மேலே சொன்னபடி குற்றவாளிக்குத் தகுந்த தண்டஞ் செய்யத் தொடங்கும்போது, அளவு கடந்து செய்வார்போல் ஆரம்பித்து, செய்யுங் கால் அளவு கடவாமற் செய்யவேண்டும்; இவ்விதஞ் செய்தல் குற்றஞ் செய்வார் பயப்படுதற்கும், குற்றஞ் செய்யாதவர் பயப்படாமைக்குங் காரண மாதலறிக.

௨. குடிகள் அஞ்சுந் தொழில்களைச் செய்தவன் ஆயுளையும், வலிமையையும், செல்வத்தையும், இழந்துவிடுவான்.

(3) குடிகள் அஞ்சப்பட்ட செயல்களைச் செய்து நடக்குங் கொடுங்கோலனாயிருந்தால் நிச்சயமாகவே சீக்கிரத்தில் அவ்வரசன் கெடுவானென்பதாம். (4) நம் அரசனானவன் பொல்லாதவனென்று குடிகளாலே சொல்லப்படுகிற துன்பந் தருஞ் சொல்லையுடைய அரசன் ஆயுள்குறைவதோடு, செல்வத்தையுஞ் சீக்கிரத்தில் இழந்துவிடுவான். (5) தன்னைக் காணவேண்டுவோருக்கு அரிய சமயத்தையும், கண்டால் இனிமை யில்லாத முகத்தையும் உடையவனது பெருஞ்செல்வமானது தனக்கும் பிறருக்கும் பயன்படாமையால் பேயாற் சேர்த்து வைக்கப்பட்டது போல்வதொரு குற்ற முடையதாகும். (அரிய சமயமாவது: காணவருவாரைப் பின்னை வாவென்று பலமுறை அலைய வைத்துத் தனக்குச் சம்மதமானபோது காணச் செய்தல்.) இவ்வித அரிய சமயமும், இனிமை யில்லாத முகமும் குடிகள் பயப்படுதற்கு ஏதுவாயின அறிக. (6) கடிய சொல்லுடையவனும் இரக்கமில்லாதவனுமானால் அவனது பெருஞ் செல்வமானது நெடுங்காலம் இராமல் அப்போழுதே அழியும். பெருஞ் செல்வமென்றது கெடுஞ் சிறுமையதல்லாத செல்வமாணது மென்றபடி. (7) இம்மட்டோ? மேற்கூறிய கடிய சொல்லும், குற்றத்தின் அளவு கடந்த தண்டனையும் அரசனது பகை வெல்லுதற்கு ஏற்றவலிமையாகிய இரும்பைத் தேய்க்கின்ற அரங்க

ளாகும். இதுவரையுஞ் சொல்லிய அரசனுடைய அரிய சமயம், இனிய முகம் இல்லாமை, இரக்கமில்லாமை, கடுஞ் சொற் கூறல், அதிக தண்டம் ஆகிய இவைகள் குடிகள் பயப்படுந் தொழில்களாதல்காண்க.

ங. மந்திரிகள் அஞ்சுந் தொழிலும், அது செய்தாலடைவதும்.

(8) செய்யத்தகும் காரிய எண்ணத்தை மந்திரிகளிடத்தே வைத்து, அவரோடு தானும் எண்ணிச் செய்யாத அரசன் தன் காரியந் தவறிய இடத்துத் தன்னைக் கோபத்திலே செலுத்தி, அம்மந்திரிகளைக் கோபிப்பானாயின் அவனது செல்வமானது தினந்தோறுஞ் சுருஙகும். எவ்விதமென்றால், மந்திரிகளுடன் கலந்து செய்யாததால வந்த குற்றம் தன்னதென்று நினையாமல் அம்மந்திரிமார் மேலேற்றி, அவரைக் கோபித்தலால் அதற்குப் பயந்து அம்மந்திரிமார் தன்னைவிட்டு நீங்கவே, அக்குற்றம் தீரும் விதமும் இராச்சியபாரந்தாங்கும் விதமும் இல்லாதவனாதலா லென்க.

ச. அரசன் அஞ்சுஞ் செயலும், அது செய்தாலடைவதும்.

(9) முன்னே தனக்கொரு காவலிடமாகக் கோட்டை முதலியவைகள் செய்து வைத்துக் கொள்ளாத அரசன் யுத்தம் வந்த காலத்திலே காப்பு இல்லாமையால் பயந்து விரைவிலே கெடுவான்;

ரு. அஞ்சுவன செய்தலின் குற்றம்.

(10) கொடுங்கோலனாகிய அரசன் நீதி நூல்களைக் கல்லாதவரைத் தனக்கு மந்திரிகளாக வைத்துக் கொள்வான். அம்மந்திரிகளாகிய கூட்டமல்லாமல் பூமிக்கு மிகுதியாகிய பாரம் வேறில்லையாம். எனவே, நீதிநூல் படியாதவர் மந்திரிகளாவதற்கு அருகரல்ல ரென்பதாயிற்று.

௫அ-ஆம் அதிகாரம்.

கண்ணோட்டம்.

அஃதாவது:—தன்னோடு பழகினவரைக் கண்டால் அவரால் சொல்லப்பட்டதனை மறக்கமாட்டாமை; இது அவர் மேலே கண்ணோடிய இடத்து நிகழ்வதாகலால் அப்பெயர் பெற்றது. இது, தாக்ஷணிய மென்றும் முகங்கொடுத்தலென்றுஞ் சொல்லப்படும்.

க. தாட்சணியத்தினது சிறப்பு.

(1) தாட்சணியமென்று சொல்லப் படுகிற மிகவும் பெரிய அழகானது அரசரிடத்தே உண்டாயிருக்கையால் இவ்வுலகமானது உண்டாகின்றது. அரசர் தாட்சணியம் இல்லாதிருந்தால் குடிகள் பயப்படுதலடைந்து புலியைச் சேர்ந்த மானினம் போல் காப்பிடம் பெறாமல் வருந்துவர். தாட்சணியமுடைய அரசரால் குடிகள் பயமில்லாமல் வாழ்தலால் இவ்வுலகம் உண்டாமெனக் கூறினார். (2) தாட்சணியத்தினிடத்தே உலகநடையானது நிகழ்வதாகும். ஆதலால் அத்தாட்சணியம் இல்லாதவர் உண்டாயிருத்தல் எதற்கென்றால், பூமிக்குப் பாரமாவதற்கன்றி வேறில்லை. (உலகநடையாவது: உபகாரஞ் செய்தல், காப்பாற்றல், பிழை பொறுத்தல் முதலானவைகள்; அவை தாட்சணியம் இல்லாரிடத்து உண்டாகாமையால் அவர் தமக்கும் பிறர்க்கும் பயன்படாரென்பது பற்றி, அவரைப் பூமிக்குப் பாரமென்று கூறினார்.)

உ. தாட்சணியஞ் செய்யாத கண்ணின் குற்றம்.

(3) இராகமானது பாடற்றொழிலுடன் பொருத்தமில்லையானால் என்ன பயனுடையதாகும். அது போலக் கண்ணானது தாட்சணியம் இல்லாத இடத்து என்ன பயனுடையதாகும். (4) பொருந்தும் அளவால் (கூடுமான மட்டும்) தாட்சணியம் இல்லாத கண்களானவை முகத்தினிடத்து உள்ளவை போலக் கண்டோர்க்குத் தோன்றுதலை அல்லாமல் வேறே என்ன பயனைச்செய்யும்?. பொருந்தும் அளவாலென்றதனால் அளவுக்கு மிஞ்சிய தாட்சணியத்தை விலக்கியவாறு காண்க. (5) ஒருவனுடைய கண்ணுக்கு அணியும் ஆபரணமாவது தாட்சணியமாகும். அவ்வாபரணம் இல்லையானால், அக்கண் புண்ணென்று அறிவுடையோரால் அறியப்படும்.

௩. தாட்சணியஞ் செய்யாதவரது இழிவு.

(6) தாட்சணியஞ் செய்தற்குரிய கண்ணோடு பொருந்தியிருந்தும் அத்தாட்சணியம் இல்லாதவராய் நடந்து திரிபவராயிருந்தால் அவர் மண்ணோடு பொருந்தி நின்ற மரத்தினை யொப்பாவர். (7) தாட்சணியம் இல்லாதவர் கண்ணில்லாதவராவர். தாட்சணியம் உள்ளவர் கண்ணுடையாராவர்; இவ்விரண்டுக்கும் நெருப்பில்லாத இடத்துப் புகையில்லாமையும் புகையுள்ள இடத்து நெருப்புண்மையும் போலும் என்று அறிந்தோர் அநுமானப் பிரமாணங் கூறுவர்.

௪. தாட்சணியம் செய்யும் விதம்.

(8) நீதி யொழுக்கமாகிய தமது தொழில் அழியாமல் தாட்சணியஞ் செய்ய வல்ல அரசருக்கு இந்த உலகம் உரியதாந் தன்மையுடையதாம். எனவே, தம்மோடு பழகினவர் நீதிக்கு விரோதமாகப் பிறருக்குத் துன்பஞ் செய்த இடத்து, அவரைத் தாட்சணியத்தினாலே தண்டிக்காமல் விடக்கூடாதென்பதாயிற்று. ஆகவே, மேலே சொல்லிய தாட்சணியஞ் செய்யவேண்டியது நீதி தவறாத இடத்தி லென்றறிக.

௫. தம்முடன் பழகியவரை அரசர் தண்டியாமல் கண்ணோட்டஞ் செய்யவேண்டுவது பிறர்க்குக் குற்றஞ் செய்த இடத்தல்லாமல் தமக்குக் குற்றஞ் செய்த இடத்தென்பது.

(9) தம்மை வருத்தப்படுத்தும் இயல்புடையவரிடத்துந் தாட்சணியமுடையவராகி, அக்குற்றத்தைப் பொறுக்கும் இயல்பே அரசர்க்குத் தலைமையான இயல்பாகும். (இயல்பு:குணம்.) (10) யாவராலும் விரும்பத்தக்க தாட்சணியத்தை வேண்டுவோர் பழகினவர் தமக்கு நஞ்சிடக் கண்டும், தாட்சணிய மறுக்கமாட்டாமல் அந்நஞ்சையுண்டு பின்னும் அவரோடு பொருந்துவர். இதனால், இங்ஙனம் பெரிய தாட்சணியம் பிறருக்குக் குற்றஞ் செய்த இடத்துங் கூடாதென்பதறிக.

௫௯-ஆம் அதிகாரம்.

ஒற்றாடல்.

அஃதாவது:—பகைவர், அயலார், நட்பினர் என்னு மூன்று திறத்தாரிடத்தும் நிகழ்ந்தவை அறிதற்கு ஒற்றரையாளுதலாம். முன் சொல்லப்பட்ட இலக்கணமுடைய அரசனுக்குத் தன்னாடுகாக்கும்போதும், பிறர் நாடு பிடிக்கும்போதும் வேண்டுமவைகளைச் சொல்லத் தொடங்கினாராதலால் அவ்விரண்டு காரியங்களுக்கும் அவர் அவசியம் வேண்டப்படுவாரென்பதறிக. ஒற்றர்-மேற்கூறிய மூவகையாரிடத்தும் நிகழ்ந்தவற்றை அறிந்து வந்து சொல்லுவோர்.

௧. ஒற்றன் சிறப்பு.

(1) ஒற்றனும் புகழ் நிறைந்த நீதி நூலுமாகிய இரண்டும் தன்னிரண்டு கண்களாக அரசன் தெளியவேண்டும். ஏனென்றால், ஒற்றனானவன் கண்ணுக்கெட்டாத தூரதேசத்திலே நடந்தவைகளைப் போய்க் கண்டுவந்து, அறிவித்தலாலும் நூலானது தன்னறிவுக்கு, எட்டாதவைகளை யெல்லாஞ் சொல்லி அறிவித்தலாலு மென்க. இவ்விரண்டையும் முறையே ஊனக்கண்ணும் ஞானக் கண்ணுமாகக் கொள்க.

௨. ஒற்றனாலாகிய பயன்.

(2) பகைவர் அயலோர் நட்பினராகிய எல்லாரிடத்தும் உண்டாவனவாகிய நல்லவையும் தீயவையுமாகிய சொற்களையும் செயல்களையும் நாள்தோறும் ஒற்றனாலே விரைவாக அறிதல் அரசனது தொழிலாம்.

௩. ஒற்றனில்லாத இடத்து வரும் குற்றம்.

(3) ஒற்றனைக்கொண்டு மேற்கூறிய மூவகையாரிடத்தும் நடந்தவைகளை அறிந்துவரச்செய்து, அந் நடந்தவைகளால் அறியும் பயனை ஆராய்ந்து அறியாத அரசனானவன் அடைய இருந்ததாகிய வெற்றியானது இல்லை யாதும்.

௪. ஒற்றனது இலக்கணம்.

(4) தம்முடைய காரியஞ் செய்வோர், சுற்றத்தார், பகைவர் என்று சொல்லப்பட்ட எல்லாரையும் சொல்லாலும், செயலாலும் ஆராய்பவனே ஒற்றனாவான், எனவே, இம்மூவரும் ஒவ்வொரு நிமித்தம் பற்றி விரோதஞ் செய்வாரென்பதாயிற்று.

(5) எவருடைய செய்தியை அறிதற்குச் சென்றானோ? அவராலே சந்தேகிக்கப்படாத பார்ப்பார வணிகர் முதலானவர் வடிவத்தோடு பொருந்திநின்று, அவர் சந்தேகித்து, அறியத்தொடங்கினால் கோபித்துப் பார்க்கின்ற அவர் பார்வைக்குப் பயப்படாமல் நின்று, அவர் தன்னிடத்துச் சாம பேத தான தண்டங்களைச் செய்து கேட்டாலும் தன் மனத்திலுள்ளவைகளைச் சொல்லாதிருக்க வல்லவனே ஒற்றனாவான். (6) மேற்கூறிய வடிவத்தோடன்றி, முற்றத்துறந்த முனிவரும் தீர்த்த யாத்திரை முதலிய செய்யும் விரதவொழுக்கத்தோருமாகிப் போகக்கூடாத இடங்களிலெல்லாம் போய் ஆராய வேண்டியவைகளையெல்லாம் ஆராய்ந்து, அவ்விடத்திலுள்ளவர் சந்தேகித்துப் பிடித்து, என்ன துன்பஞ்செய்து கேட்டாலும் தன்னை இன்னானென்று வெளிப்படுத்தாதவனே ஒற்றனாவான். (7) இதுவன்றி, இரகசியமான செயல்களை மேற்சொல்லப்பட்டவருக்கு உரியவர்களாலே கேட்கும் வல்லமையுடையவனாகிக் கேட்டறியப்பட்ட அச்செயல்களிலே பின் சந்தேகிக்கப்படுதல் இல்லாதவனே ஒற்றனாவான்; இதனால், கேட்டறியப்பட்டவற்றை ஒற்றன் சந்தேகித்து வந்து சொன்னால் அரசனவன் மேலே இன்னதுசெய்ய வேண்டுமென்று துணியப்படாமையால் சந்தேகப்படாமல் தெளிவாக அறிந்துவரவேண்டுமென்பது கருத்து.

௫. ஒற்றரை ஆளும் விதமும், அவராலே நடந்தவை அறியும் விதமும், அறிந்தால் அவருக்குச் சிறப்புச் செய்யும் விதமும்.

(8) ஒரு ஒற்றனாலே மறைவாயறிந்து வந்து, அறிவிக்கப்பட்ட காரியத்தையும் பின்னும் ஒரு ஒற்றனாலும் அறிந்து வரச் செய்து, இருவர் சொல்லும் ஒத்திருத்தல் கண்டு கொள்ளவேண்டும். ஏனென்றால், ஒற்றன் பகைவர் முதலியவரோடு கலந்து வந்து மாறுபடக் கூறினாலுங் கூறுவன். ஆதலாலென்க; இதனால், ஒருவன் சொல்லையே நம்பலாகாதென்பது கருத்து. (9) அரசன் ஒற்றரை ஆளுமிடத்து, ஒரு ஒற்றன் மற்றொரு ஒற்றனை அறியாதிருக்கும்படி ஆளவேண்டும். அப்படி ஆளப்பட்ட ஒற்றர்களுள் ஒன்றையறிதற்கு விடப்பட்ட மூவருடைய சொற்களும் பயனொத்திருக்குமானால் அப்பொருள் மெய்யென்று தெளியவேண்டும்.

ஏனென்றால், ஒருவனை ஒருவனறிந்தால் தங்களிலே கலந்து பேசி ஒப்பச் சொல்வார் ஆதலா லென்க. அப்படிச் சொல்லும்போது மெய்ம்மை வெளிப்பட மாட்டாதாம். (10) மறைந்தவைகளை அறிந்து வந்து சொல்லிய ஒற்றனிடத்து அரசன் சிறப்பாகிய நன்கொடையைப் பிறரறியும்படி செய்யாதிருக்க வேண்டும். அறியும்படி செய்தால், தன்னுள்ளே அடக்கமாக வைத்திருக்கப்பட்ட இரகசியங்களைத் தானே வெளியிட்டவனாவான். எப்படி யென்னில், நன்கொடைபெற்ற இவன் யாவன்? இவனுக்கு இவ்வளவு அரசன் செய்யவேண்டியதென்னை? என்று கேட்பாரும் சொல்வாரும் யூகித்தறிதலா லென்க.

௬௰-ஆம் அதிகாரம்.

ஊக்கமுடைமை.

அஃதாவது:—மனமானது தொழில் செய்தலிலே எழுச்சி யுடைத் தாதல்.

௧. தான் அடைந்து நின்ற பொருளினும் அதற்குக் காரண மாகிய ஊக்கஞ் சிறந்தது.

(1) ஒருவரைப் பொருளுடையவரென்று சொல்லுதற்குச் சிறந்தது மன வெழுச்சி (ஊக்கம்) ஆம். அம்மன வெழுச்சியில்லாதவர் முன் பொருளடைந்திருந்தாலும் அப்பொருளுடையவ ராகமாட்டார். ஏனென்றால், மனவூக்கம் இல்லார் அப்பொருளைக் காப்பாற்ற மாட்டாமல் இழந்து விடுவார் ஆதலாலென்க. (2) ஒருவனுக்கு மன வெழுச்சி யுடைமையே நிலைபெற்ற உடைமையாம். பொருளுடைமை நிலைபெறாமல் நீங்கி விடும். எனவே, மன வெழுச்சியானது உள்ளத்தின் குணமாதலால் நிலைபெறுதலும், பொருளானது உடம்பினும் வேறாகி, அழிவதாயிருக்கையால் நிலைபெறாமையும் நன்கு விளங்குதல்காண்க. (3) நிலைபெற்றதாகிய மன வெழுச்சியைக் கைப்பொருளாக உடையவர் கைப்பொருளை யிழந்தவராயினும், இழந்து விட்டோமென்று மனஞ் சுழலமாட்டார். (4) என்னவந்தாலும் தளராதமனவூக்கம் உடையவனிடத்தே பொருளானது வழி கேட்டுக் கொண்டுபோகும். தானே வந்து சேருமென்பதற்கு வழிகேட்டுக் கொண்டு போகுமென்று சொல்லினார்.

உ. ஊக்கமுடையவரது உயர்ச்சி.

(5) நீர்ப்பூத் தாள்களின் நீளமானவை, நின்ற நீரினது அளவாம்; அதுபோலப் பொருள், படை முதலியவற்றால் மனிதர்கள் உயர்ச்சியானது அவரது மன ஊக்கத்தின் அளவாகும். (6) அரசரானவர் நினைப்பதெல்லாம் தமது உயர்ச்சியையே நினைக்க வேண்டும்; அவ்வுயர்ச்சியானது ஊழ்வகையினாலே கூடாமற் போனாலும் அந்நினைப்பு அவ்வுயர்ச்சியைத் தள்ளாமைக் குணமுடையதாம். எப்படியென்றால், ஊழ்தள்ளினும் முயற்சியிலே அவர் தவறுதலில்லாமல் நல்லோரால் பழிக்கப்படாமையாலென்க. இதனால், மேலே மனவூக்கத்தினளவு உயர்ச்சியென்பது உறுதி செய்யப்பட்டது. (7) யானையானது தன் மேனியிலே அழுந்துகின்ற பாணத்தினாலே புண்பட்ட இடத்துத் தளராமல் தன் பெருமையை நிலை நிறுத்தும்; அதுபோல மன எழுச்சியுடையவர் தாம் நினைத்த உயர்ச்சிக்கு அழிவு வந்த இடத்துத்தளராமல் தம் பெருமையை நிலை நிறுத்துவார். எனவே, தளராத இடத்து நினைத்த உயர்ச்சி கைகூடுமென்பதாயிற்று.

௩. ஊக்கம் இல்லாதவரது இழிவு.

(8) மனவூக்கம் இல்லாத அரசர் இவ்வுலகத்தாருள் வண்மையையுடையேமென்று தம்மைத்தாமே மதிக்கும் மதிப்பைப் பெறமாட்டார். (மதிப்பாவது: முயற்சி, பொருள், கொடை முதலியவை உளவாதல்.) (9) யானையானது எல்லா மிருகங்களுக்கும் பெரிய உடம்புடையது. அதுவல்லாமலும், கூர்மையான கொம்புகளையு முடையது. ஆனாலும், புலியானது தனக்கு எதிர்ப்பட்டால் அதற்குப் பயப்படும்; இதனால், பகைவரைக் காட்டினும் மிகுந்த சரீர வலிமையும் வெல்லுதற் கேற்ற ஆயுதமும் உடையவராயினும் அரசர் ஊக்கமில்லாரானால் அவ்வூக்கம் உடையவருக்குப் பயப்படுவரென்பது காண்க. (10) ஒருவனுக்குத் திடமான அறிவாவது: மனவூக்க மிகுதியாம். அவ்வூக்கமில்லாதவர் மரங்களாவர். இயற்கையாகிய சாதி மரங்களுக்கும் இம்மரங்களுக்கும் வேறுபாடு யாதெனில், பழ முதலானவையும், ஆலயம் தேர் முதலியவற்றிற்கு உறுப்பாதல் முதலியவையும் இல்லாமைக்கிடமாக மக்கள் வடிவத்தைத் தாங்கி நிற்றலாம். இதுவன்றி வேறில்லை.

சஎ-ஆம் அதிகாரம்.

மடியின்மை.

அஃதாவது:—நினைக்கப்பட்டவைகளைச் செய்யும்போது சோம்புத லில்லாமை.

க. சோம்பலினது தன்மை.

(1) தான் பிறந்த குடியாகிய மழுங்கா விளக்கானது ஒருவனது சோம்பலாகிய இருள் நெருங்கக் கெட்டு விடும். (2) தாம் பிறந்த குடியை மேன்மேலுயரும் நற்குடியாக வேண்டுவோர் சோம்பலைக் கொடியதாக நினைத்து நடக்க வேண்டும். அப்படி நடவாமற் போனால் குடி அழியுமென்பது கருத்து. (3) மடிக்கத் தருவதாகிய சோம்பலைத் தன்னுள்ளே கொண்டு நடக்கும் அறிவில்லாதவன் பிறந்த குடியானது, அவனைப் பார்க்கினும் விரைந்து கெடும். அஃதாவது: ஆக்கத்திலே பிறபடினும் கேட்டிலே முற்படுமென்றபடி. (4) சோம்பலிலே வீழ்தலால் திருத்தமாகிய முயற்சி இல்லாதவராயினவர்க்குக் குடியும்அழிந்து குற்றமும் பெருகும்.

உ. சோம்பலின் குற்றம்.

(5) சோம்பலும், விரைவிலே செய்ய வேண்டியவைகளை நீட்டித்துச் செய்யும் இயற்கையும், மறதியும், நித்திரையுமாகிய இந் நான்கும் இறக்கும் இயல்பினை யுடையவர் விரும்பி யேறும் மரக்கலம் (கப்பல்) ஆகும். சோம்பலோடு மற்றை மூன்றுந் தமோகுணத் திலே தோன்றி உடனிகழ்வன. ஆதலால், சோம்பலோடு சேர்த்து அம்மூன்றும் எண்ணப்பட்டன. மரக்கலமானது மரணஞ் சமீபித்த வருக்குப் பெருக்கந் தருவது போலத் தோன்றி, அவர் விரும்பி யேறிய இடத்துக் கடலில் எப்படி விழுத்துமோ அப்படியே இந்த நான்கும் துன்பஞ் சமீபித்தவருக்கு இன்பஞ் செய்வாரைப்போலத் தோன்றி, அவர் அவைகளை விரும்பிக்கொண்ட இடத்துத் துன்பத் திலே விழுத்துத லறிக. (6) நில முழுதும் ஆண்ட அரசரது செல்வமானது தானே வந்துசேர்ந்த இடத்தும் அதனால் மாட்சிமைப்பட்ட இன்பத்தைச் சோம்பலுடையவர் அடைதலில்லையாம். ஏனெனில், சோம்பலால் அச்செல்வமானது காக்கும் முயற்சி யில்லாமல் அழிவ தாலெனக. (7) சோம்பலை விரும்புதலாற் பெருமை பொருந்திய

முயற்சி யில்லாதவர் நட்பாளர் கண்டித்துப் புத்தி சொல்லும்போது கேளாமல் பின்பு இகழ்ந்து பேசுஞ் சொல்லைக் கேட்பர்; அஃதாவது: செல்வங் கெட்ட இடத்துதான் சொல்லியுங் கேட்டீரில்லையே கேளாமையால் கெட்டீரென்று வசை கூறுவதை எதிர் பேசுதற் கிடமில்லாமல் கேட்டிருத்தலாம். (8) சோம்பற்றன்மையானது குடிகளைக் காக்குந் தன்மை யுடைய அரசனிடத்தே தங்கு மாறுல் அது தன் பகைவர்க்கு அடியனுந் தன்மையுள்ளே யடைத்து விடும்.

ரு. சோம்பலில்லாதவன் அடையும் பயன்.

(9) ஒருவன் சோம்பலை ஆளுந் தன்மையை ஒழிக்கவே அவனது குடியுள்ளும் ஆளுந் தன்மையுள்ளும் வந்த குற்றங்கள் அழியும். (சோம்பலை ஆளுந் தன்மையாவது: தமோகுணம் அதிகப்படுதல்.) (10) சோம்பலில்லாத அரசனுனவன் தன்னடியினுலே எல்லா உலகத்தையும் அளந்த கடவுள் கடந்த விரிந்த நிலம் முழுவதையும் ஒருசேர அடைவானென்பதாம்.

சுஉ- ஆம்: அதிகாரம்.

ஆள் வி னை யு டை மை.

அஃதாவது:—இடைவிடாத மெய்ம் முயற்சியுடையனுதல்.

க. முயற்சியது சிறப்பு.

(1) தமது சிறுமையை நோக்கி நாம் இத்தொழிலை முடித்தல் அருமையுடைய தென்று நினைத்து மனத்தளர்ச்சி அடையாதிருக்கவேண்டும். அத்தொழிலை முடித்தற்கு ஏற்ற பெருமையை முயற்சியானது உண்டாக்கும். எனவே, விடாது முயற்சி செய்தால் அரிய தொழில்களும் எளிதிலே முடியு மென்பதாயிற்று. (2) ஒரு தொழிலைச் செய்து, அத்தொழிலின் குறையைச் சோம்பலாற் செய்யாது விட்டவரை உலகம் மதியாமல் விட்டது. ஆதலால், செய்யத் தகுந்த தொழிலினிடத்தே செய்த லில்லாமற் சும்மா இருத்தலை நீக்க வேண்டும். (3) எல்லாருக்கும் உபகாரஞ் செய்தலென்னு மேம்பாடானது முயற்சி யென்னும் உயர்ந்த குணத்தினிடத்து நிலைபெற்றதே யாகும்.

உ. முயற்சியில்லாதவனது குற்றம்.

(4) முயற்சி யில்லாதவன் உபகாரியாந் தன்மையானது படையைக் கண்டாற் பயப்படும் பேடியானவன் அச்சேனையினிடத்தே கையில் வாளாயுதத்தை ஆளுதற்றன்மை போலக் கெடுவதாகும். எனவே, உபகாரஞ் செய்தற்கு வேண்டிய கருவி, முயற்சியென்பதாயிற்று.

௩. முயற்சியுடையவனது நன்மை.

(5) தனக்கு இன்பத்தை விரும்பாதவனாகித் தொழில் முடித்தலை விரும்புவோன் தன் சுற்றத்தாரும் நட்பினருமாகியவரது பாரத்தின் துன்பத்தை ஒழித்து, அப்பாரத்தைத் தாங்கும் தூணாவன. இதனால், காரியமாகிய இன்பத்தை விரும்பாமல் காரணமாகிய முயற்சியை விரும்புவோனே பிறருடைய துன்பத்தை நீக்குவதற்கு உரியவ னென்பது ஆயிற்று.

௪. முயற்சியின்மைக்கும், உடைமைக்குங் காரணங்கள்.

(6) அரசரிடத்தே உண்டாகிய முயற்சியானது அவருடைய செல்வத்தை வளர்க்கும். அம்முயற்சி யில்லாமையானது தரித்திரத்தைக் சேரச் செய்து விடும். தரித்திரம் வந்த இடத்துப் பகைவரால் அழிவரென்பதாம். இங்கே செல்வமென்றது மந்திரி முதலிய ஆறு அங்கங்களை. (7) ஒருவனுடைய சோம்பலினிடத்தே கரிய மூதேவியானவளிருப்பாள். சோம்பலில்லாதவன் முயற்சியினிடத்தே சீதேவியானவ ளிருப்பாள் என்று அறிந்தோர் சொல்லுவர்.

௫. ஊழினாலேதுன்பம் வந்தாலும் முயற்சிவிடத்தக்கதன்று.

(8) பயனைத் தருவதாகிய ஊழில்லாமை யாவருக்கும் பழியாகாது. அறியவேண்டுமவைகளை அறிந்து தொழில் செய்யாமையே பழியாகும். எனவே, விடாது முயற்சி செய்யவேண்டுமென்றதாயிற்று. (9) முயற்சி செய்த தொழிலில் ஊழ்வினை வகையால் நினைக்கப் பட்ட பயனைத் தராதாயினும் முயற்சியானது தனக்கிடமாகிய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு பயனைத் தரும். இதனால், ஊழாலான இடத்தும் ஆகாத இடத்தும் பாழ்படா

மையால் ஊழை நோக்கிச் சும்மா இராமல் முயற்சி செய்யவேண்டு மென்பது பெறப்பட்டது. (10) ஊழ் பயனை விலக்குவதற்கு இளையாது, ஆலோசனையிலுஞ்செயலிலும் குற்றமற மேலுமேலு முயற்சி செய்வோர், பயனை விலக்குவதாகிய அவ்வூழையும் புறங்கொடுத்தோடச் செய்வர். எனவே, ஒருகால் இருகால் தவறினும் பலகாலு முயற்சி செய்தாற் பயனடைவா ரென்பதாம் இதற்குச்சாட்சியாக, ராபர்ட்புரூஸ் என்னும் ஆங்கில அரசனொருவன் ஆறுதரம் யுக்தத்துக்குச்சென்று தோல்வியடைந்து மனந்தளர்ந்து ஒருவீட்டில் வந்திருக்கும்போது, அந்தவீட்டினது முகட்டில் வலைநெய்ய எண்ணிய சிலம்பிப் பூச்சியொன்று தனதுவாயினின்றும் இழைக்கப்பட்ட நூலினது ஒருமுனையை ஒரு உத்திரத்திற் கட்டி மற்றொரு முனையை மற்றொரு உத்திரத்தில் தொடுக்க அந்நூலில் ஊஞ்சலாடி ஆறுமுறை முயன்றுங் காரிய சித்திபெறாமல் ஏழாவது முறை அதிவேகத்துடன் ஊஞ்சலாடி அந்நூலை உத்திரத்திற் சேர்த்ததைக் கண்ணிமையாமற் பார்த்துக் கொண்டிருந்து, ஆறுதரம் அவசயப்பட்ட தனது நிலைமையும் அவ்வண்ணமே ஆகுமென்று தீர்மானித்து ஏழாவது முறை சண்டைக்குச் சென்று வெற்றியடைந்து ஸ்காட்லண்டின் என்னுந் தேசசுவாதீனத்தைப் பெற்றானென்னும் சரிதம் வெள்ளிடை மலைபோல வெளிப்பட்டுக் கிடப்பதைக்காண்க. இச்சரிதம் ஆங்கிலம் படித்த ஒவ்வொரு சிறுவர்களுக்குங் கூட நன்றாகத் தெரியும். (வெள்ளிடை—வெளியிடம்)

காரு-ஆம் அதிகாரம்.

இடுக்கணழியாமை.

அஃதாவது:—தொழிலிலேமுயல்பவன் ஊழினாலாவது பொருளில்லாமையினாலாவது மெய்வருத்தத்தாலாவது தனக்குத்துன்பம் வந்த இடத்து மனங்கலங்கா திருத்தல்.

க- ஊழினாலாகிய துன்பத்துக்கு வருந்தாமைக்கு உபாயம்.

(1) ஒருவ னனக்குத் துன்பமானது தன்னுடைய வினையானே வரும்படிதது அதற்காக மனம் வருந்தாமல் மகிழக்கடவன்.

* இடுக்கண் - துன்பம்.

அத்துன்பத்தை மேலு மேலும் நெருக்கி ஓட்டவல்லது அம்மகி ழ்ச்சியேயாம். அதுபோல வேறொன்றுமில்லை. (2) வெள்ளம்போல் அளவில்லாத துன்பமெல்லாம் புத்தியுள்ளவன் மனத்தினாலே யின்ப மாக நினைத்த அளவிலே அழிந்துவிடும்; இதனால், மனத்தினினைப்பே துன்பமாதற்கும், அது நீங்குதற்குங் காரணமென்றறிக.

உ. ஊழினாலாகிய துன்பத்துக்கு வருந்தாமை.

(3.) ஒரு தொழிலைச் செய்யும்போது அதற்கிடையிலே வந்த துன்பத்துக்கு இளைத்து அத்தொழிலை விட்டுவிட நினையாத வர் அத்துன்பத்துக்குத் துன்பத்தை உண்டாக்குவர். (4) இடை விடாத முயற்சிசெய்த காலத்துந் தடைபட்ட இடங்களிலெல்லாம் வண்டியை யிழுத்துச் செல்லுங் கடா மாடுபோலே தொழிலை மேற் கொண்டு செலுத்த வல்லவனை அடைந்த துன்பமானது துன்பப்படு தலை உடையதாகும். கடா மாட்டை உவமானமாகச் சொன்னது ஏதனாலென்றால், சேற்றுநிலத்தில் வண்டி தடைபட்டபோது, பக்கத் திலே ஒதுங்கியும் மூச்சடக்கியும் கால்மடக்கியும் இழுத்துச்செல்லு தல்போல ஊழால் தொழில் தடைப்பட்டபோது பல உபாயத்தா லும் முயன்று காரியத்தை மேலே நடத்த வேண்டுமென்பது பற்றி யென்க. (5) மேலு மேலும் துன்பம் வந்தன ஆனாலும், தன்னு டைய முயற்சி விடாதவனை உற்ற அத்துன்பமானது துன்பத்தை யடையும், இவ்விதம் துன்பமானது துன்பத்தை அடையுமென்று பல முறை சொன்னது, நிச்சயமாக அத்துன்பங் கெடுமென்பது விளக்குதற் பொருட்டென்க.

ங. பொருளில்லாமையால் வந்த துன்பத்திற்கு வருந்தாமை யும், அதற்கு உபாயமும்.

(6) செல்வம் பெற்ற காலத்திலே இச்செல்வத்தைப்பெற் றோமென்று, உலோபஞ்செய்தலை அறியாதவர் (கொடுத்து உதவி னோர்) செல்வம் இழந்தோமென்று மனத்தினாலே துன்பப்படுவா ரோ? இல்லை. ஏனென்றால், செல்வம் பெற்றகாலத்துக் கொடுத்து உதவியஉதவியை நினைந்து வறுமைக்காலத்து மந்திரிமுதலானவர்கள் விட்டு நீங்காதிருத்தலாலென்க. எனவே, ஒருவன் செல்வம்பெறு தல் பிறருக்குக் கொடுத்து உதவிசெய்தற்கு என்பது கருத்து.

௪. மெய்வருத்தத்தாலாகிய துன்பத்திற்கு வருந்தாமையும், அதற்கு உபாயமும்.

(7) அறிவுடையார், தேகமானது துன்பமாகிய வாளாயுதத்துக்குக் குறியிடமென்று தெளிந்து, தம்மேல் வந்த துன்பத்தைத் துன்பமாகக் கொள்ளமாட்டார். (தேகமானது துன்பத்துக்குக் குறியிடமென்று தெளிதலாவது: வினைவசத்தால் வருந்துன்பத்தை அனுபவிக்கவேண்டு மென்று அறிந்தடங்கலாம்.) (8) தன்னுடம்பிற்கு இன்பமானவைகளை விரும்பாதவனாகி மேற்கூறியவாறு வினையால் துன்பமடைதல் இயல்பென்று தெளிந்திருப்பவன் தன் முயற்சியினாலே துன்பமடையமாட்டான். இதனால், இன்பத்தை விரும்பினாலும் துன்பத்தை வினைவசத்தால் வருவது இயல்பென்றுது நீக்கக் கருதினாலும் துன்பமாமென்பது காண்க. (9) இவ்விதம் வினையினாலேயின்பம் வந்த இடத்து, அவ்வின்பத்தை அநுபவித்துக் கொண்டே மனத்தால் விரும்பாதவன துன்பம் வந்த இடத்தும் அத்துன்பத்தை அநுபவித்துக்கொண்டே மனத்தாலடைய மாட்டான். (10) ஒருவன் தொழில் செய்யுமிடத்து முயற்சியால் வருந் துன்பத்தையே தனக்கு இன்பமாக நினைத்துக் கொள்வானாயின் அதனால், தன் பகைவர் நன்குமதித்தற்கு ஏதுவாகிய உயர்ச்சியானது உண்டாகும்.

அரசியல் முற்றிற்று.

இனி, முறையாலே அரசியலை நடத்துதலிலே ஒன்றற்கொன்று துணையாகிய அங்கங்களது இயல்பை முப்பத்திரண்டதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி, அவ்அங்கங்கள் ஆறனுள்ளும் ஆக்கினைசக்கரத்தைச் செலுத்துதலிலே அவ்வரசனுக்குச் சமமாகிய அமைச்சனது இயல்பு பத்ததிகாரத்தினாலே சொல்லத் தொடங்கி, முதலிலே அமைச்சு சொல்லுகின்றார். (அமைச்சு - மந்திரியின் தன்மை.)

சஈ-ஆம் அதிகாரம்.

அமைச்சு.

அஃதாவது:—மந்திரியினது தன்மை. தன்மையாவன: அவன்குணங் களுஞ் செயல்களும்.

க. மந்திரிகளது குணத் தன்மை.

(1) தொழில்செய்யும்போது அதற்கு வேண்டுஞ் சாதனங் களாகிய சேனையும், பொருளும், அத்தொழிலைத்தொடங்குங்காலமும், அதத்தொழில் தொடங்கும் உபாயமும, அவ்வுபாயத்திலே செய்யப் படும் அரிய தொழில்களும் பொருந்த எண்ணவல்லவனே மந்திரி யாவான். (2) தொழில்செய்தலிலே சோர்வில்லாமையும், குடிகளைக் காத்தலும், நீதிநூல்களைக் கற்று, விதிவிலக்குகளை அறிதலும, முயற் சியும் முன்சொல்லப்பட்ட அங்கங்கள் ஐந்துடனே திருந்த உடைய வனே மந்திரியாவான். (3) யுத்தம் வந்த இடத்துப் பகைவர்க்குத் துணையாயினவரைப் பிரிக்கவேண்டுமானால் பிரித்துவிடுதலும், தம் மிடத்துள்ளோரைப் பிரிந்து போகாமல் கொடையினாலும் இன் சொல்லாலுங் காத்துக்கொள்ளுதலும், தம்மையும் தம்மைச் சேர்ந்த வரையும் பிரிந்துபோனவரை மறுபடி பொருத்த வேண்டுமானால் பொருத்தலும் வல்லவனே மந்திரியாவான். (4) ஒருகாரியச் செய் கை பல வாறுகத்தோன்றினால், அவற்றுள்ளே ஆகுஞ்செய்கையை அறிதலும், அச்செய்கை செய்யும் போது முடியுந்திறத்தை நாடிச் செய்தலும், சிலரைப் பிரித்தல் கூட்டல் செய்யுமிடத்து அவர்க்கு இதுவே செய்யத் தக்கதென்று துணிவு பிறக்கும் விதம் சொல்லு தலும் வல்லவனே மந்திரி யாவான், (5) அரசனாலே செய்யப்படும் தருமங்களைத் தெரிந்து தனக்கேற்ற கல்வியாலே நிறைந்தமைந்த சொல்லையுடையவனாகி எந்த நாளிலுந் தொழில் செய்யுந் திறங்களை அறிந்தவன் அரசனுடைய ஆலோசனைக்குத் துணையாவான். எந்த நாளுமென்றது தன்னரசன் வளஞ்சுருங்கிய காலமும், பெருகிய காலமும், இவ்விரண்டு காலமும் என்றபடி.

உ. மந்திரிகளது சிறப்பு.

(6) இயற்கை யாகிய புத்திநுட்பத்தைச் செயற்கையாகிய நூலறிவோடு உடைய மந்திரிகளுக்கு அதிக நுட்பத்தையுடைய ஆலோசனைகளாய் முன்னிற்பவை யெவை யுள்ளன? ஒன்று மில்லை.

ங. மந்திரிகளது செயல்.

(7) நூல் வழியினாலே தொழில் செய்யுந் திறத்தை அறிந்த இடத்தும் உலகத்திலே அப்போதப்போது நடக்கின்ற இயற்கையைத் தெரிந்து, அதனோடு பொருந்தச் செய்யவேண்டும். எனவே, நூல்வழியே செய்வது உலகவழியோடு பொருந்தாதாகில் அவ்வுலகம் பழிக்குமென்பதாயிற்று. (8) அரசன் அறிந்து சொல்லினவரது அறிவையுங் கேளாமல் தானும் அறியானேயாயினும் அக் குற்றம் நோக்கிக் கைவிடாமல் அவ்வரசனுக்கு உறுதியானவைகளைச் சொல்லுதல் மந்திரியினது கடமையாகும்.

ச. மந்திரிகளுள் விடப்படுவோரது குற்றம்.

(9) பக்கத்திலிருந்து தீங்குசெய்ய எண்ணும் மந்திரி ஒருவன் அரசனுக்கு எழுபது கோடி பகைவரிலுங் கொடியவனாவான். ஏனென்றால், புறப்பகையா யிருக்கின்ற அவ்வெழுபது கோடி பகைவருக்குத் தப்பினாலுந் தப்பலாம். உட்பகையாயிருக்கின்ற இவ்வொரு மந்திரிக்குத் தப்பலாகாது ஆதலாலென்க. (10) செய்யப்படுந் தொழில்களிலே முடித்தற்கேற்ற கூறுபாடு இல்லாதவர் அவைகளை முன்னே முறையாக ஆலோசித்து வைத்திருந்தாலும் செய்யும்போது அவைகள் முடிவில்லனவாகவே செய்யாநிற்பர். (கூறுபாடாவன: வந்த வந்த இடையூறுக்குத் தக்க தக்க பரிகாரம் அறிந்து செய்தலும், தாம் திடமுடையவராதலுமாம்.) இதனால், ஆலோசனை யிருந்தாலும் முடிக்கவல்லமையில்லாதவரும் உண்டென்பதறிக.

சுரு-ஆம் அதிகாரம்.

சொல்வன்மை.

அஃதாவது:—தானினைத்த தொழில் முடியும் வழியால் வார்த்தை சொல்ல வல்லவனாதல்.

க. சொல் வல்லமை மந்திரிகளுக்கு அவசியம் வேண்டும்.

(1) மந்திரிகளுக்கு அவசியம் வேண்டிய குணமாவது, நாவாலுளதாகிய நலமென்று சிறப்பித்துச் சொல்லப்படும் நலத்தினையுடையராதல். அந்த நலமானது வேறுள்ள நலங்களுள் ஒன்றாக

அடங்குவதன்று. எல்லா நலங்களுக்கும் மேலானதாகும். ஆதலால், எனையோருக்கும் இது அவசியம் வேண்டுவதாம். (நாவாலுளதாகிய நலமாவது: இனியசொற்களைச் சொல்லி உலகத்தை வசமாக்குதல்.) (2) தம்மரசனுக்கும் அங்கங்களுக்கும் பெருக்கமும் அழிவும் சொல்லால் வருதலால் மந்திரிகள் அச்சொல்லினிடத்துச் சோர்வு உண்டாகாமல் காத்து வரல் வேண்டும். எனவே, நல்லசொல்லால் பெருக்கமும், தீயசொல்லால் அழிவும் உண்டாமென்பதாயிற்று.

௨. சொல்லினது இலக்கணம்.

(3) நட்பாயேற்றுக் கொண்டவரைப் பின்னர் வேறுபடாமல் வசப்படுத்துங் குணங்களை விரும்பி, பகையாயேற்றுக் கொள்ளாதாரும் பின்னர் அப்பகைமை நீங்கி, நட்பினையிச்சிக்கும் வண்ணம் சொல்லப்படுவதே மந்திரிகளுக்குச் சொல்லாம். (குணங்களாவன: குற்றமில்லாமை, சொற்சுருங்கல், பொருள்விளங்கல், இனிமையுடையதாதல், பெரும் பயன்றருதல் ஆம்.)

௩. சொல்லைச் சொல்லும் விதம்.

(4) மந்திரிகள் அப்படிப் பட்டசொல்லைத் தம்முடையவும் கேட்பாருடையவுமாகிய குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவம் என்பவைகளால் வரும் தகுதி வேறுபாடுகளால் தமக்கும் அவர்க்கும் உள்ள உயர்வுதாழ்வுகளை அறிந்து, 'அவரவருக்குத்தகுந்த முறைப்படி சொல்லவேண்டும். அப்படிச் சொல்லுதற்கு மேற்பட்ட தருமமும், பொருளுமில்லை. (5) தாம் சொல்லக்கருதிய சொல்லை வெல்ல வல்ல சொல்லாகிய பகைவராதுசொல் இல்லாமையை அறிந்து சொல்லவேண்டும். (வெல்லுதலாவது: குணங்கள் மேற்படுதல்.) (6) பிறர் மேலுமேலும் கேட்க விரும்பும்படி தாங்கள் சொல்லி, பிறர் தமக்குச் சொல்லுஞ் சொல்லினது பயனைக் கொள்ளுதல் மந்திரியிலக்கணத்திலே குற்றமற்றவரது கொள்கையாகும்.

௪. சொல்லுதல் வல்லாரது சிறப்பு.

(7) தான் எண்ணிய காரியங்கள் பிறர்க்குப் பொருந்தாதனவேனும், அவற்றை அவர் நம்பும்படி சொல்ல வல்லுவனாகி, ஓங்

றிலுஞ் சோர்வில்லாதவனைச் சபைக்குப் பயப்படாதவன் எவனோ? அவனை மாறுபாட்டால் வெல்லுதல் எவருக்குங்கூடாது. (சோர்வாவது: சொல்ல வேண்டுவதை மறந்திருத்தல்.) (8) சொல்லப்படுங் காரியங்களை ஒழுங்குபடுத்தி இனிதாகச் சொல்லுதல் வல்லவரைப் பெற்றால் அக்காரியங்களை உலகம் விரைவாக ஏற்றுக் கொள்ளும். (ஒழுங்குபடுத்தலாவது: முன்னே சொல்ல வேண்டுவதையும், பின்னே சொல்ல வேண்டுவதையுந் தெரிந்து வைத்துக் கொள்ளுதல்.) இவ்விதஞ் சொல்ல வல்லவர் நூறாயிரம் பேரிலொருவராம், இவ்வாறு வார்த்தைக்கு நூறாயிரத் தொருவரென்று வடநூலாருங் கூறுவர்.

௫. சொல்லமாட்டாரது இழிவு.

(9) குற்றமற்றவையாய்ச் சிலவாகிய சொற்களை மேற்சொல்லியபடி சொல்லத்தெரியாதவர் பலவாகிய வார்த்தைகளைப் பேசுவர். (குற்றம்: முன்சொல்லப் பட்டகுணங்களுக்கு எதிரானவை.) இவ்விதம் பலவாகப் பேசுவாரையும் சொல்வன்மையுடையாரென்று சிலர் கொள்வர். (10) தாம் கற்ற நூல்களைப் பிறர் அறியும் விதமாக விரித்துச்சொல்லமாட்டாதவர் பூங்கொத்தினிடத்தே மலர்ந்திருந்து மணக்காத பூவையொப்பாவர். ஆதலால் மணமில்லாத பூவை ஒருவருஞ் சூடமாட்டாரல்லவா? அதுபோல, படித்திருந்தும் பிறருக்குச்சொல்லத்தெரியாதவர் நன்கு மதிக்கப் படாரென்பதாம்.

௬௬-ஆம் அதிகாரம்.

வினைத் தூய்மை.

அஃதாவது:—செய்யப்படுந் தொழில்கள் பொருளை மாத்திரமல்லாமல் தருமமும் புகழுந்தந்து நல்லவையாதல்.

௧. காணப்படுந் துணைநன்மையினுங் கருதப்படுந் தொழில் நன்மை சிறந்தது. (தொழில் நன்மை: வினைத்தூய்மை.)

(1) துணையினது நன்மையானது செல்வம் ஒன்றையே கொடுக்கும். தொழிலினது நன்மையானது இம்மையில் அறம் பொருள் இன்பமுதலானவைகளையும் மறுமையில் தான் விரும்பிய பதவிகளையுங் கொடுக்கும்.

௨. பாவமும் பழியுந் தருந் தொழிலைச் செய்யலாகாது.

(2) தம்மரசனுக்கு இம்மைக்குப் புகழையும் மறுமைக்குத் தருமத்தையும் தராத தொழில்களை எக்காலத்தினும் மந்திரிகள் விட்டுவிடவேண்டும். (3) தாம் மேலாக வேண்டுமென்று நினைப்பவர் தம்மை நன்கு மதிக்கப்படும் மதிப்பானது கெடுதற்குக் காரணமாகிய தொழிலை விட்டுவிடக் கடவர். (4) அசைவற்ற தெளிவுடையவர் தாம் துன்பப்பட்டாலும் அத்துன்பந் தீர்தற்பொருட்டு,முன்னே தமக்குச் செய்தவர்க்கு, தாமும் இழிவான துன்பத்தைச் செய்ய மாட்டார். ஏனென்றால், நமக்கு வருவது வந்தே தீருமாதலால் நாமும் பிறர்க்குத் தீங்கு செய்ய லாகாதென்னும் பொறுமையுடைமையினாலென்க. (5) நான் செய்தது எப்படிப்பட்ட தீயதென்று பின் தானே வருத்தமடையும் தொழில்களை ஒருபோதுஞ் செய்யாதிருக்கவேண்டும். ஒருகால் முன்யோசனை யில்லாமல் மயங்கிச் செய்வானாயின், பின் அதற்காக அவ்வருத்தங்களை யடையாதிருத்தல் நல்லது. ஏனென்றால், தீமையை நீக்க வழி அறியானென்றும் தைரியமில்லாதவ னென்றும், பயனில்லாதவைகளைச் செய்கின்றானென்றும், தன் பழியைத் தானே தூற்றுகின்றானென்றும் எல்லாரும் இகழுவராதலாலென்க. (6) ஒருவன் தன்னைப்பெற்ற தாயினது பசியைக் கண்டிருக்குந் தன்மையன் ஆயினானென்றாலும், அப்பசியை அவளுக்கு நீக்கும் பொருட்டு, அறிவாலுயர்ந்தோர் நிந்திக்கும் தொழில்களைச் செய்யாதிருக்க வேண்டும். வயது முதிர்ந்த தாய் தந்தையரும் கற்புடை மனைவியும் பசியால் வருந்துங் காலத்தில் தீயவை பலவுஞ் செய்தாயினும்,அவர்களைக் காப்பாற்றவேண்டுமென்று, அறநூலிற் சொல்லப்பட்ட பொது விதியானது பொருள் நூலின்வழி நடத்தலும், அரசர்தொழிற்கு உரியராதலும், நன்கு மதிக்கப்படுதலும் உடைய மந்திரிகளுக்கு ஆகாமைபற்றி, இங்கே மறுக்கப்பட்டது.

௩. பாவமும் பழியுந்தருந்தொழிலைச்செய்தல் ஆகாதென்றதற்குக் காரணம்.

(7) உயர்ந்தோ ரல்லாதவர் தீய தொழில்களைச் செய்து, அதனாற் பழியைத் தம்மிடத்திற்கொண்டு, பெற்ற செல்வத்தைக்

காட்டிலும் அப்பழியை மேற்கொள்ளாத உயர்ந்தோர் அநுபவிக்கும் மிகுந்த வறுமையே மேலானதாகும். (8) நூலறிவுடையோர் தீயவை யென்று தள்ளப்பட்ட தொழில்களைத் தாமுந் தள்ளிவிடாதவராகிப் பொருளைக் கருதித் செய்த மந்திரிகளுக்கு அத்தொழில்கள் தூயவை அல்லாமையால், முடியாவாம். ஒருவேளை முடிந்தாலும், பின் துன்பத்தைக் கொடுக்கும். (9) ஒருவன் தீயதொழில்களைச் செய்து பிறர் கண்ணீர்விட அவரிடம் பறித்த பொருளெல்லாம் இம்மையிலே தான் கண்ணீர்விடத் தன்னிடம் வேறுசிலர் பறித்துக் கொள்வர். மற்ற நல்ல தொழில்களால் வந்த பொருள்கள் முன்னே இழந்தாலுயினும் பின்னே வந்து பயன் கொடுக்கும். (10) மந்திரியானவன் தீயதொழில்களாற் பொருள் சம்பாதித்து, அதனால் அரசனுக்குக்காவல் செய்தலானது, பசிய மண்பாத்திரத்துள் நீர் வார்த்து, அதற்குக் காவல்செய்ததனையொப்பாகும். எனவே, மண்பாத்திரமும் தண்ணீருங் கெடுதல்போல் அரசனும் பொருளுங் கெடுமெனப தாயிற்று.

௬௭-ஆம் அதிகாரம்.

வினைத் * திட்பம்.

அஃதாவது:—அப் பரிசுத்தமாகிய தொழிலை முடிப்பவனுக்கு வேண்டுவதாகிய மன வலிமையாம்.

௧. வினைத்திட்பமாவது இன்னதென்பது.

(1) தொழில் செய்யுமிடத்து வலிமை யென்று சொல்லப் படுவது, அதனை முடித்தற்குரிய ஒருவனது மனத்தினது வலிமை யாம். அது நீங்கலான சேனை, அரண் முதலிய வலிமைகளெல்லாம் அம்மன வலிமைக்கு நிகராகிய வலிமைகளாகாவாம்.

௨. வினைத்திட்பத்தின் பகுப்பு.

(2) முன்பு நீதிநூல்களை ஆராய்ந்த மந்திரிகளது துணிவாவது குற்றமுண்டாகுந் தொழிலைச் செய்யாமையும், செய்யுந்தொழில் ஊழினாலே குற்றப் பட்டஇடத்து அதற்கு மனந்தளராமையுமாகிய இவ்விரண்டினது வழியாகுமென்று நூலறிந்தவர் சொல்லுவார்.

---

* திட்பம் - வலிமை.

(3) செய்யப்படுந் தொழிலை முடிவிலே வெளிப்படும் படியாக அதற்கு முன்னெல்லாம் தன் ஐந்து அங்கங்களும் எண்ணிய விதத்தைப் பிறரறியாதிருக்கவும், தானறிந்ததையும் தன் இங்கிதம், வடிவு, செயல், சொற்களால பிறர் ஆலோசித்தறியா திருக்கவும் மறைத்துச் செய்வதே வலிமையாகும். நடுவிலே வெளிப்படுமானால், அவ்வெளிப்படுதலானது வெளிப்படச் செய்தவனுக்கு நீக்கப்படாத துன்பத்தைக் கொடுத்துவிடும். (அங்கம் ஐந்தாவன: மந்திரி, புரோகிதன், தூதன், ஒற்றன், சேனாதிபதியாம்.)

ங. வினைத்திட்பத்தின் அருமை.

(4) இத்தொழிலை இவ்விதத்தாலே செய்வோமென்று ஒழுங்குபடச் சொல்லுதல் எவர்க்கும் எளியவையாகும், அத்தொழிலைச் சொல்லப்பட்ட விதத்தால் செய்தல் அரியவை யாகும். இதனால், தன்னாலே செய்யக்கூடாத காரியத்தை வாயினாலொருவன் சொல்லுதல் பயனற்றதா மென்றறிக. (சொல்லுதல், செயல் என்பன சாதிப்பெயர்கள்.)

ச. வினைத்திட்பத்தின் சிறப்பு.

(5) எண்ணத்தினாலே சிறப்படைந்து மற்றை யிலக்கணங்களாலும் மாட்சிமைப்பட்ட மந்திரிகளது தொழில் வன்மையானது அரசனிடத்துப் பொருந்தி, எல்லாராலும் நன்குமதிக்கப்படும். நன்கு மதிக்கப்படுதற்குக்காரணம். தொழில் முடிந்தபின் அரசனுக்குச் செல்வமும் புகழும் உண்டாதல். மற்றையிலக்கணங்களை, கூச-ஆம் அதிகாரத்திற் காண்க.

ரு. வினைத்திட்டம் உடையவரடையும் பயன்.

(6) எண்ணப்பட்டவர் அவ்வெண்ணப் பட்டபொருள்களுக்கு வழியாகிய தொழிலிடத்தே வலிமையுடையவராகப் பெற்றால், தம்மா லெண்ணபபட்ட பொருள்களை யெல்லாம விரைவிலே அடைவர்.

சு. வினைத்திட்பம் உடையவரை அறியும் விதம்.

(7) உருளுகின்ற பெரிய தேருக்கு அச்சினிடத்தே உள்ள ஆணிபோல வடிவம் சிறிதாயிருந்தாலும் தொழிலினிடத்தே வலிமையுடையவரை உலகமானது உடையது. ஆதலால், அவர் வடிவினிடத்தே சிறுமை நோக்கி அவரை இகழாதிருக்க வேண்டும்.

இவ்விதம் வடிவிலே சிறியவராகியும் பெரிய காரியத்தை முடிப்பதில் வலியவராயுமுள்ள மந்திரிகளும் உண்டு. அவரை அவ்வலிமையாலறிந்துகொள்க.

எ. வினைத்திட்பம் உடையவர் தொழில் செய்யும் விதம்.

(8) மந்திரிகளாயினோர் மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த தொழிலிடத்துப் பின் சோர்வில்லாமல் காலதாமதமின்றி விரைந்து செய்யக்கடவர். (9) முதலிலே மெய்ம்முயற்சியில் துன்பமானது தமக்கு மிகவந்தாலும், அதுகண்டு மனந்தளராமல் சுகத்தை முடிவிலே கொடுக்கிற தொழிலை வலிமையுடையவராய்ச் செய்ய வேண்டும்.

அ. தொழில் வலிமை இல்லாதவரது இழிவு.

(10) தொழில் வலிமையை இது நமக்குச் சிறந்ததென்று கொள்ளாத மந்திரிகளை வேறுவலிமைகளெல்லாம் உடையவராகிய இடத்தும் உயர்ந்தோர் நன்குமதிக்க மாட்டார். ஆகலால், மந்திரிகள் தொழில்வலிமையை எப்போதும் உறுதியாகக் கைக்கொள்ள வேண்டும்.

௬௮-ஆம் அதிகாரம்.

வினைசெயல்வகை.

அஃதாவது:—அவ்வலிமையுடைய மந்திரியானவன் அத்தொழிலைச் செய்யுந்திறம்.

க. பொதுவகையால் தொழில் செய்யுந் திறம்.

(1) மந்திரியின் ஆலோசனைக்கு எல்லையாவது இனி, இது தப்பாதென்னும் துணிவைப் பெறுதலாம். அப்படித் துணிவு பெற்றதொழில் உடனே செய்யப்பெறாமல் பின காலம்நீட்டித்தலில் தங்குமானால் குற்றமுடையதாம். ஏனென்றால், காலம் நீட்டித்தலால் பகைவர் அத்துணிவு பெற்ற தொழிலையறிந்து அழிப்பாராதலாலென்க. (2) காலம நீட்டித்துச் செய்யும் பகுப்புடைய தொழில்களிடத்துக் காலம் நீட்டிக்கவேண்டும். காலம் நீட்டியாமற் செய்யுந் தொழில்களிடத்துக் காலம நீட்டியாமற் செய்யவேண்டுப; இவ்விதமன்றி மாறிச் செய்தாற் பயன்படாதென்பது கருத்தாகக் கொள்க.

உ. வலிமை ஒப்புமை மேலிமை என நிலை மூவகைப்படு மென்பதும், அவற்றுள் வலிமையின் சிறப்பும்.

(3) தொழில் செய்யும்போது கூடுமிடத்தெல்லாம் தண்டஞ்செய்கல் நல்லதாகும். அதுகூடாத இடத்து மற்றை மூன்று உபாயங்களிலே முடிவதொரு உபாயம் நோக்கிச்செய்யவேண்டும். (கூடுமிடம்: பகைவனிலுந்தான் வலியனாகியகாலம்.) (கூடாத இடம் பகைவனுக்கு ஒத்தகாலமும், இளைத்த காலமும் ஆம். மூன்று உபாயங்களாவன: சாம பேத தானம்.)

ங. வலியவன் செய்யுந் திறம்.

(4) செய்யத்தொடங்கிய தொழிலும் அழிக்கத் தொடங்கிய பகையும் என்று சொல்லப்பட்ட இரண்டினது குறையும் ஆராயுமிடத்து, இக்குறை என்ன செய்யுமென்று விட்டுவிட்டால் தீயினது குறைபோலப் பின்வளர்ந்து கெடுக்கும். எனவே, தொழில் செய்யும்போது முழுதுஞ் செய்யவேண்டுமென்பது கருத்து.

௪. ஒப்பவன் செய்யுந் திறம்.

(5) தொழில் செய்யுமிடத்து, பொருளும், சேனையும், காலமும், தொழிலும், இடமும் ஆகிய ஐந்தையும் மயக்கமற எண்ணிச் செய்யவேண்டும். (எண்ணிச்செய்தலாவது: தனக்கும் பகைவர்க்குமுள்ள மேற்கூறிய ஐந்தின் பலமும் பலவீனமும் ஆராய்ந்து போர்தொடங்கல்.) (6) தொழில் செய்யுமிடத்து அது முடித்தற்கு உளதாகிய முயற்சியையும், அதற்குவரும் இடையூற்றையும், அவ்விடையூற்றை நீக்கிமுடித்தால் தான் அடையும் பெரும்பயனையும் சீர்தூக்கிச் செய்யக்கடவன். (சீர்தூக்கலாவது: முயற்சி அளவுக்கும் இடையூற்றின் அளவுக்கும்பெறும் பயனளவுமிகுதியாயிருத்தலறிதல்.) அவ்விதமில்லாவிட்டால்,அத்தொழிலை விட்டுவிடவேண்டும். (7) மேற்சொல்லிய அவ்வழியினாலே செய்யப்படுந்தொழிலைச் செய்யத்தொடங்கினவன் செய்யுமுறைமையாவது முன்செய்து கைவந்தவன் செய்துவந்த உபாயத்தைத் தானறிதலாம். அதனையறியவே, தானும் அவ்விதஞ்செய்து பயனெய்துவனென்பதாம்.

ரு. மேலியவன் செய்யுந் திறம்.

(8) செய்யப்படுகிற தொழிலினாலே அப்படிப்பட்ட

வேறொரு தொழிலை முடித்துக்கொள்ளக் கடவன். அது, மதத்தால் நனைந்த கன்னத்தையுடைய யானையினாலே அப்படிப்பட்ட வேறொரு யானையைக் கட்டியது ஒப்பாகும். (9) தொழில் செய்பவனால் தனது நட்பினருக்கு நல்லவைகளைச் செய்தலினும், தன் பகைவரது பகைவரைத் தனக்கு நட்பாக்கிக் கொள்ளுதல் விரைந்து செய்யத் தகுவதாகும். பகைவர்க்குத் தன் மெலிவு தெரியாதிருக்கு முன்னமே மேற்கூறிய இரண்டுகாரியங்களையுஞ் செய்கவென்பதுவே, விரைந்து செய்யத்தகுவதென்றதற்குப் பொருளாதலறிக. (10) ஆளுமிடம் சிறிதாயிருக்கின்ற மந்திரிகள் தம்மின் மிகுந்தவலியவர் எதிர்ந்த இடத்தே தமது சேனைமுதலிய அங்கங்கள் நடுங்குதலுக்குப்பயந்து, அந்நிலைக்கு வேண்டுவதாகிய சமாதானம் கூடுமானால் அப்பெரியவரை வணங்கி, அதனையேற்றுக்கொள்வர்.

௬௰௯-ஆம் அதிகாரம்.

தூது.

அஃதாவது:—பொருந்தல் பிரிதல்களுக்கு வேற்றரசரிடத்தே செல்வாரது தன்மை. தூதுசொல்வோன், தான் வகுத்துச் சொல்வோன், சொல்லியதைச் சொல்வோன் என இருவகையாம்; அவருள் முற்கூறப்பட்டவன் மந்திரிக்குச் சமானமாவான். பிற்கூறப்பட்டவன் காற்பங்கு குணங்குறைந்தோனாவான்.

க. இருவகைத் தூதர்க்கும் பொது இலக்கணம்.

(1) தன் சுற்றத்தாரிடத்து அன்புடையனாதலும், மந்திரித்தொழில் செய்தற்கு அமைந்த குடியிலே பிறத்தலும், அரசர் சாதி விரும்புங் குணமுடையவனாதலும் தூதுவார்த்தையைச் சொல்லுவோனுக்கு அடையாளமாம். அரசர் சாதிவிரும்புங் குணங்களை மன்னரைச் சேர்ந்தொழுக லென்னும் அதிகாரத்திலே காண்க. (2) தம்மரசனிடத்து அன்புடைமையும், அவனுக்கு ஆங்காரியங்களை அறியும் அறிவுடைமையும், அவைகளை வேற்றரசரிடத்துச் சொல்லும்போது ஆராய்ந்து சொல்லுதலில் வன்மையும் எனத் தூது சொல்ல உரியவர்க்கு அவசியமாக வேண்டிய குணங்கள் மூன்றும் அவசியமாக வேண்டிய குணங்கள் மூன்றெனவே, மந்திரிகளுக்குச் சொல்லிய வேறுகுணங்களும் வேண்டுமென்பதாயிற்று.

உ. தான் வகுத்துச் சொல்லுவானது இலக்கணம்.

(3) வேலினையுடைய வேற்றரசரிடத்துத் தன்னரசனுக்கு வெற்றியைத் தருகின்ற தொழிலைச்சொல்வோனாகிய தூதனுக்கு இலக்கணமாவது நீதி நூலை அறிந்தமந்திரிகளிடத்துத் தான் அந்நூலிலே வல்லவனாகுதலாம், (அஃதாவது: நூலறிகல் மட்டுமேயுடைய மந்திரிகளுக்குமுன்னே அறிந்தபடி செய்யுந் திறமையுடையவனாகுதல்.) (4) இயற்கையாகிய அறிவும், கண்டோர் விரும்புந் தோற்றப் பொலிவும், பலரோடும் பலகாலும் ஆராயப்பட்ட கல்வியும் என நன்கு மதித்தற்கு ஏதுவாகிய இம்மூன்றினது கூட்டத்தையுடையவன் வேற்றரசரிடத்துத் தூதத்தொழிற்குச் செலலவேண்டும். மேற்கூறிய மூன்றும் ஒத்திருப்பவன் எடுத்தகாரியமுடியுமென்பதாம். (5) வேற்றரசர்களுக்குப் பல காரியங்களைச் சொல்லுமிடத்துக் காரணவகையால் தொகுத்துச் சொல்லியும், இனிமையில்லாத காரியங்களைச் சொல்லுமிடத்து வெய்யசொற்களைநீக்கியும், இனிமையான சொற்களால் மகிழச்சொல்லியும் தன்னரசனுக்கு நன்மையைச் செய்பவனே தூதனாவான். (6) நீதிநூல்களைக்கற்றுப் பகைவேந்தர் மனம் ஒப்புக்கொள்ளும்படி தான் சென்றகாரியத்தைச் சொல்லி, அவவேந்தர் கோபித்துப்பார்த்தால் அதற்குப்பயப்படாதவனாகிக் காலத்தோடுபொருந்தக் காரியமுடிக்கத்தக்க உபாயத்தை அறிபவனே தூதனாவான். (7) வேற்றரசர் நிலையும், தன்னரசனிலையும், தன்னிலையும் சீர்தூக்கி, அவைகளுக்கேற்பக், காணுமுறைமையும் சொல்லுமுறைமையும் தெரிந்து, தன் சொல்லை ஏற்றுக்கொள்ளுஞ் சமயம் பார்த்துச் சொல்லவேண்டிய காரியத்துக்குச் சகாயமாயினோர் கூட இருக்குமிடத்தைத் தெரிந்து, சொல்லும் வகையை முன்னே விசாரித்து, அவ்வகை சொல்லுவோன் தூதரில் முதன்மையானவனும்.

௩. சொல்லியது சொல்லுவானது இலக்கணம்.

(8) தன்னரசன் வார்த்தையை அவன் சொல்லியவழியே வேற்றரசர்க்குச் சொல்லுவானது இலக்கணமாவது, பொருளாலுங் காமத்தாலும் வேறுபடச்சொல்லாத பரிசுத்தனாந்தன்மையும், தனக்கு அவ்வேற்றரசர்கள் மந்திரிகள் துணையாந்தன்மையும், அவ்வா

சர் கோபத்துக்குப் பயப்படாத துணிவுடைமையுமாகிய இம்மூன்றோடு கூடிய மெய்ம்மையுமாம். வேற்றரசர் மந்திரிகள் துணையாவது எதற்கென்றால், தனசொல்லால் அவ்வரசர்க்குக் கோபம் வந்தவிடத்து இது தூதர் செயலென்று சொல்லிக் கோபத்தைத் தணித்தற்கு எனக. (9) தன்னரசன சொல்லிவிட்ட வார்த்தையை வேற்றரசர்க்குச் சொல்லுதற்குரியவன் தனக்கு வருந்துன்பத்துக்குப் பயந்து, தன்னரசனுக்குக் குறைவான வார்த்தையை வாய்வழுவியுஞ் சொல்லாத வலிமையுடையவனும். (10) தன்னரசன் சொல்லிவிட்டவார்த்தை தனக்கு நாசத்தைத் தருமாறுமும பயப்படாமல் தன்னரசன் சொன்னபடியே அவனுக்குள்ள இடத்தை வேற்றரசனிடத்துச் சொல்லுவோனே தூதனாவான்.

எஅ-ஆம் அதிகாரம்.

மன்னரைச் சேர்ந்தொழுகல்.

அஃதாவது:—மந்திரி அரசரைப் பொருந்தி நடக்கும் விதம்.

க. பொதுவகையால் குற்றம் தன்னிடத்தில் வராமல் காத்தலரிது.

(1) மாறுபடுதலையுடைய அரசரையடுத்து நடக்கும் மந்திரிகள் அவ்வரசரை மிக நீங்காமலும் மிக நெருங்காமலும் நெருப்பில் குளிர்காய்பவர்போல நெருங்குதற்கும் நீங்குதற்கும் இடையிலே நிற்கக்கடவர். (மாறுபடுதலாவது: முன் கோபங்கொள்ளல்.) (2) தம் அரசரால் விரும்பப்பட்ட உண்டி, ஆடை, ஆபரண முதலியவற்றைத் தாம் விரும்பாதிருத்தலானது அவ்வரசரால் நிலை பெற்ற செல்வத்தை மந்திரிகளுக்குக் கொடுக்கும். எவ்விதமெனில், அவ்வரசர் தம்மிற்றாழ்ந்து நடக்கையைக் கண்டு, தாமே வேண்டியவைகளைக்கொடுப்பரெனக. (3) மந்திரிகள் தம்மைக்காத்துக் கொள்ளவேண்டின் அரியபிழைகளைத் தம்மிடத்தில் வராமல் காக்கக்கடவர். ஏனென்றால், அவ்வரசர் அப்பிழைகள் வந்தவைகளாகக் கேட்டுச் சந்தேகித்த பின்பு அவ்வரசருக்குச் சந்தேக நிவிர்த்தி செய்தல் கூடாது. ஆதலாலெனக.

உ. மேலே கூறப்பட்டதைச் சிறப்புவகையாற் கூறுதல்.

(4) மந்திரி, நிறைந்த அரசரிடத்திருக்கும்போது ஒருவன் காதிலே இரகசியம் பேசுதலையும் ஒருவன் முகம் நோக்கிச் சிரித்து

லேயும் நீக்கி நடக்க வேண்டும். (5) அரசனுக்குப்பிறரோடு இரகசியம் நிகழுமிடத்து யாதொருபொருளேயுங் காதுகொடுத்துக் கேளாமலும் இரகசியம் பேசும் அவரைப் பின்றொடர்ந்து கேளாமலும் அந்த ரகசியப் பொருளே அவ்வரசனே தன்னுள்ளடக்காமற் சொல்லினல் கேட்கவேண்டும். (6) அரசனுக்குக்காரியம் சொல்லும்போது, அப்பொழுது நிகழ்கின்ற அவனது குறிப்பையறிந்து சொல்லுதற்கேற்ற காலத்தையும் பார்த்து வெறுப்பில்லாதனவும் விருப்புடையனவுமாகிய காரியங்களே அவன் மனம் விரும்பும் வகை சொல்லவேண்டும். (சொல்லுதற்கேற்ற காலமாவது: காமம் கோப முதலியவையில்லாத காலம்.) அவையுள்ள காலத்தில் ஒன்றைச் சொன்னுற் பயன்படாதாம். (7) பெரும் பயனுள்ளவையும் அரசன் விரும்புவனவுமாகிய காரியங்களே அவன் கேட்டிலனுனுலும் சொல்லி, எந்நாளும் பயனில்லாதவைகளேத் தானே கேட்டானுனுலுஞ் சொல்லாதிருக்கவேண்டும்.

ரு. பொறுப்பாரென்று அரசர்களுக்கு வெறுப்புள்ளவைகளேச் செய்யலாகாது.

(8) இவர் நமக்கு இளேயவர், எமக்கு இன்ன முறையுடையவரென்று அரசரை அவமதியாமல் அவரிடத்து நிலேபெற்று நின்ற ஒளியோடுபொருந்த மந்திரிகள் நடக்கவேண்டும். (ஒளியாவது: அரசர் நித்திரை செய்யாநிற்கவும் உலகங் காக்கின்ற தெய்வத் தன்மையாம்.) அத்தெய்வத்தன்மை உறங்கும்போது உலகங் காக்குமென்பதற்கு உதாரணமாக "உறங்குமாயினு மன்னவன் றன்னெளி, கறங்கு தெண்டிரை வையகங் காககுமால்" என்னுஞ் சீவகசிந்தாமணிச் செய்யுளேக் காண்க. நாமகளிலம்பகம் 219-ஆம் செய்யுள். (அவ்வொளியோடு பொருந்த நடத்தலாவது: அவ்வரசர் தேவரும் தாம் மனிதருமாக எண்ணி நடத்தல்.) (9) அசைவற்ற அறிவையுடையவர் அரசனுல் நன்கு மதிக்கப்பட்டோமென்று நினேத்து, அவன் விரும்பாதவைகளேச் செய்யமாட்டாராம். (10) இவ்விதமன்றி, நாம் அரசனுக்கு நெடுநாட் சிநேகரா யிருக்கின்றேமென்று நினேத்து, தமக்கு இயல்பல்லாதவைகளேச் செய்கின்ற உரிமையானது மந்திரிகளுக்குக் கேட்டைக்கொடுக்கும்.

எக-ஆம்-அதிகாரம்.

குறிப்பறிதல்.

அஃதாவது:—அரசர் நினைத்ததை அவர் சொல்லாமலறிதல்.

க. குறிப்பறிவாரது சிறப்பு.

(1) அரசனாற் குறிக்கப்பட்ட காரியத்தை அவன் சொல்ல வேண்டாதவிதம் அவன்முகத்தையாவது கண்ணையாவது பார்த்து, அறிகிற மந்திரியானவன் எந்நாளும் வற்றாத கடலாற் சூழப்பட்ட உலகத்திலுள்ளாருக்கு ஆபரணமாவன். (2) ஒருவனது மனத்தினிடத்தில் நிகழ்வதைச் சந்தேகப்படாமல் துணிவாகவறிய வல்லவனை, மனிதனேயாயினுந் தெய்வத்தோடு சமமாக நன்குமதிக்கவேண்டும். ஏனெனனில், பிறர் நினைத்ததை அவர் சொல்லாமல் அறிதல் தெய்வத்தன்மையாதலாலென்க. (3) தம குறிப்பு நிகழும் விதம் அறிந்து, அதனால் பிறர் குறிப்பறியுந் தன்மையுடையவரை அரசர் தமது உறுப்பாகிய நாடுநகர் முதலிவற்றுள் எதைக் கொடுத்தாயினுந் தமக்குத் துணையாகக் கொள்ளல்வேண்டும். உள்ளே நிகழும் வழி யாவருக்கும் ஒக்தலால் பிறர் குறிப்பை அறிதற்குத் தம் குறிப்புச் சாதன மாதல் அறிக.

உ. குறிப்பறியாதவர் இழிவு.

(4) ஒருவன் மனத்தில் நினைத்ததை அவன்சொல்லாம லறிய வல்லவரோடு மற்றை அறியமாட்டாதவர் அவயவத்தால் ஒருதன்மையாக ஒத்தாலும அறிவால் வேறுவர். எனவே, மிருகமாவரென்பதாயிற்று. (5) நினைத்ததை அறியவல்ல தம் காட்சியால் அறியமாட்டாவாஞல், ஒருவனுக்கு அவயங்களுட் சிறந்தவையாகிய கண்கள் வேறே யென்னபிரயோசனஞ் செய்யமேவா? எனவே, அக்கண்கள் கண்களல்லவென்பதாயிற்று.

ஈ. குறிப்பறிதற்குச் சாதனம் முகம்.

(6) தன்னை அடுத்த பொருளினிறத்தைத் தான்கொண்டு காட்டுகிற பளிங்கினைப் போல ஒருவன் மனத்தில் மிகுந்த குணத்தை

அவன் முகமானது தான்கொண்டு, காண்பிக்கும். (7) உயிரானது ஒருவனை விரும்பினாலும் வெறுத்தாலும், தானறிந்து அவ்விருப்பு வெறுப்பாகிய இரண்டினும் அவ்வுயிருக்கு முற்பட்டு நிற்குமாதலால், முகம்போல அறிவு மிகுந்தது உண்டோ? இல்லையாம். இதனால், அறிவு உயிர்க்கேயல்லால் முகத்திற்கில்லை யென்பாரை மறுத்தலுங்கண்டு கொள்க. (முற்பட்டு நிற்றலாவது: முகம் உயிரின் கருத்தையறிந்து, அது விரும்பினால் தான் மலர்ந்தும் அது வெறுத்தால் தான் கருகியுந் தோன்றலாம்.) (8) குறையுறுவோன் தன் மனத்தைக் குறிப்பாலறிந்து, தானடைந்த வருத்தத்தைத் தெரிந்து தீர்ப்பாரையடையப்பெற்றால், அவர் தன் முகத்தைப் பார்க்கும்படியாகத் தான் அவர் முகத்தைப்பார்த்து நிற்றல்போதும். எனவே, வாயினாலே தன் குறையைச் சொல்லவேண்டா மென்பதாயிற்று. இவ்வளவில் அமையாது சொன்னால், தன் குறையை மானமின்றி வெளிப்படுத்துதலினாலே குறையுறுவோனுக்குச் சிறுமையும்,குறிப்பாலறிவார் குறிப்பாலறியாத சிறுமையும் உண்டாகும்.

௪. குறிப்பறிதற்கு நுண்ணிய கருவி பார்வை.

(9) அரசருடைய பார்வை வேறுபாட்டுத் தன்மையை அறியவல்ல மந்திரிகளை அடைந்தால்,அம்மந்திரிகளுக்கு மனத்திலுள்ள பகைத்தன்மையும் நட்புத்தன்மையும் வேற்றரசர் சொல்லாமற்போனாலும் அவர் கண்களே சொல்லும். (10) நுட்ப அறிவுடையேமென்றிருக்கும் மந்திரிகள் அரசர்களது கருத்தை அளக்குங் கோலாவது, ஆராயுமிடத்து அவ்வரசர் கண்களல்லாமல் வேறில்லையாம். வடிவு, தொழில், சொல் முதலானவை அளக்குங் கோலாயினும், அவையெல்லாம் அவராலே மறைக்கப்படும். பார்வைமனத்தோடு கலத்தலால் மறைக்கப்படாதென்பது பற்றி, அதனையே அளவு கருவியாகச் சொல்லினார்.

எஉ-ஆம் அதிகாரம்.

அவையறிதல்.

அஃதாவது:—அரசனோடிருந்த சபையினியல்பை அறிதல்.

க. ஒன்று சொல்லும்போது சபையறிந்தே சொல்லவேண்டும்.

(1) செஞ்சொல், ஆக்கச்சொல், குறிப்புச்சொல் என்னும் சொற்கூட்டங்களை அறிந்து, அச்சொற்களிலே தமக்கு ஆகாதவைகளை ஒழிந்து, ஆமவைகளைக் கொள்ளுதலாகிய பரிசுத்தகுணமுடையவர் தாம் ஒன்றுசொல்லும்போது, அப்பொழுதுள்ள சபையினது உயர்வு,ஒப்பு, தாழ்வுகளைச் சீர்தூக்கி அறிந்து,இச்சபையிலே சொல்லப்படுங் காரியம் இது, சொல்லும் விதம் இது, சொன்னால் அதன் முடிவு இது என்பன முதலியவற்றை ஆராய்ந்து சொல்லவேண்டும். (2) மேற்கூறிய சொற்களது பொருளை ஆராய்ந்தறிந்த நன்மையுடையவர் சபையின் சமயத்தையும் ஆராய்ந்து,குற்றப்படாமல் மிகவுந் தெளிந்து சொல்லவேண்டும்.

உ. சபையறியாத இடத்து வருங் குற்றம்.

(3) மேற்கூறியவிதம் சபையினளவை அறியாதவராகி ஒன்று சொல்லத்தொடங்கினோர் அச்சொல்லின் கூறுபாடும் அறியாதவராவர்; அம்மட்டோ? எல்லாராலும் இகழப்படுதலால் மற்றும் அவர் கற்ற கல்வியும் இழந்தவராவர்.

ரு. சபை அளவு அறிந்தார் செய்யுந் திறம்.

(4) அறிவால் பிரகாசமுடையோரது சபையினிடத்து அறிவுடையோர் பிரகாசமுடையராகக் கடவர். மற்றை அறிவில்லாரது சபையினிடத்துத் தாமும் வெண்சுண்ணச் சாந்தினிறத்தை அடையக்கடவர். (அறிவில்லாதவராவரென்றபடி) எனவே, அறிவில்லாதவரது சபைக்குச்செல்லலாகாதென்பதாயிற்று. வெண்மைநிறம், அறிவில்லாமைக்கு உவமானமாம். (சுண்ணம் - சுண்ணாம்பு.)

ச. உயர்ந்தவரது சபையிடத்துச் செய்யுந் திறம்.

(5) தம்மின் மிகுந்தவரது சபையினிடத்து, அவர் சொல்லுதற்கு முன்னே ஒன்றைச்சொல்லாத அடக்கமானது ஒருவருக்கு இது நல்லதென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்கள் பலவினும் நல்லதாகும். முந்திச்சொல்லுதலையே விலக்கினமையால் பிந்திச் சொல்லுதலாமென்பதாயிற்று.

ரு. உயர்ந்தவரது சபையிடத்துத் தவறிய இடத்து உண்டாகுங் குற்றம்.

(6) விரிந்தநூற் பொருளை உட்கொண்டு, அவைகளினுண்மையை அறியவல்லவரது சபையில் வல்லவனொருவன் சொல்லிழுக்குப்படுதலானது முத்திபெறும் பொருட்டு நல்வழியில் நின்ற ஒருவன் அவ்வழியினின்றும் நிலைதளர்ந்து கீழ்விழுதலுக்குச்சமானமாகும். (நிலைதளர்ந்து கீழ்வீழ்தலாவது: அறிவால் பஞ்சேந்திரியங்களை வென்றவனொருவன் மனமிளகிக் கூடாவொழுக்கத்தானுகுதலாம்.)

சு. ஒத்தவர் சபையினிடத்து எவ்வழியும் பேசலாம்.

(7) குற்றப்படாமல் சொற்களை ஆராய்தலில் வல்லவரது சபையினிடத்தே பேசினுல் பலநூல்களையுங் கற்று, அவைகளாலாகிய பயனை அறிந்தவரது கல்வியானது யாவர்க்கும் விளங்கிப் பிரகாசிக்கும். (8) பொருள்களைத் தாமே அறியவல்ல அறிவுடையவர் சபையினிடத்துக் கற்றவர் ஒன்றைச் சொல்லுதல் தாமே வளர்வதாகிய ஒருபயிர்நின்ற பாத்தியுள் நீரைச் சொரிந்தாற்போலும். எனவே, அவ்விதஞ் சொல்லுவாரது கல்வி மேலும் மேலும் வளருமென்பதாயிற்று.

எ. தாழ்ந்தவர் சபையினிடத்து ஒருவழியும் பேசலாகாது.

(9) நல்லவரிருந்த சபையினிடத்து நல்லபொருள்களை அவர் மனம் ஒப்புக்கொள்ளச் சொல்லுதற்குரியவர் அப்பொருள்களை அறியாத புல்லர்களிருந்த சபையினிடத்து மறந்தாயினும் அப்பொருள்களைச் சொல்லலாகாது. சொல்வாராஞல், தமக்குரிய சபையறியாத குற்றமும் அப்புல்லரது சபையால் இகழப்படுதலும் வருமென்பது உணர்க. (10) நல்லோர் தம்மினத்தவரல்லாதவர் சபையினிடத்து, யாதொன்றையுஞ் சொல்லாதிருக்கக் கடவர். சொன்னல், அது பரிசுத்தமில்லாத சலதாரையிற் கொட்டிய அமிழ்தத்தைப்போலும். எனவே, அச்சொல் பயனில்லாத சொல்லாமென்பது பெறப்பட்டது.

எ௬-ஆம் அதிகாரம்.

அவையஞ்சாமை.

அஃதாவது:—சொல்லுதற்குரிய சபையை அறிந்து சொல்லுங்கால் அச்சபைக்கு அச்சப்படுதல் இல்லாமை.

க. சபைக்கு அஞ்சாதவரது சிறப்பு.

(1) எல்லாச் சொற்களையும் அறிந்த பரிசுத்த குணமுடையவர் கற்றுயர்ந்தவரது சபை, மூடரது சபையென்கிற வகையைத் தெரிந்து, கற்றுயர்ந்தவரது சபையில் ஒன்று சொல்லும்போது பயத்தினாலே பிழைபடச் சொல்லமாட்டார் (2) கற்றோர் சபையினிடத்தே தாம் கற்றவைகளை அவர்மனம் ஒப்புக்கொள்ளும் விதம் பயப்படாமல் சொல்ல வல்லவர் கற்றவரெல்லாருள்ளும் இவர் நன்றாகக் கற்றவரென்று, உலகத்தாராலே நன்குமதிக்கப்படுவர். (3) பகையினிடத்துப் பயப்படாமற்போய் இறக்கவல்லவர் உலகத்திற் பலராவர். சபையினிடத்துப் பயப்படாமற்போய் ஒன்றைச் சொல்லவல்லவர் சிலராவர். எனவே, பகையினிடத்துப் போர்செய்யும் வன்மையைப் பார்க்கினும் சபையினிடத்துப் பேசும் வன்மை பெரிதென்பதாயிற்று.

உ. சபைக்கு அஞ்சாமையின் பயன்.

(4) பலநூல்களையுங் கற்றோரது சபையினிடத்து ஒருவர் தாம் கற்றவைகளை அவர்மனம் அங்கிகரிக்கும்படி சொல்லிக் காண்பித்து, தாம் கற்றவைகளினும் அதிகமான பொருள்களை அதிகமாகக் கற்றவரிடத்திலறிந்து கொள்ளல்வேண்டும். இதனால், எல்லாம் ஒருவருக்குக் கற்றல் கூடாமையால் வேறு வேறாகிய கல்வியுடையார் பலரிருந்த சபையில் தாம் கற்றவைகளைச் சொல்லிக் கற்கப்பெறுதவைகளையுங் கேட்டறியலாமென்பது கருத்து.

௩. சபைக்கு அஞ்சாமையின் காரணம்.

(5) வேற்றரசர் சபையில் பயப்படாமல் எதிர்வார்த்தை பேசுங் காரணமாகச், சொல்லிலக்கண வழியாலே அளவை

நூலைத் தெரிந்து மந்திரிகள் கற்கக்கடவர். எனவே, சொல்லிலக்கணம் அறியார் அளவை நூல் கற்க முடியாதென்பதாயிற்று. (அளவை நூலென்பது: தருக்கநூல்.) தருக்கசாத்திரம் படியாதவர் வேற்றரசர் சபையில் வெல்ல வல்லவராக மாட்டார்.

௪. சபைக்கு அஞ்சுவோரது இழிவு.

(6) வீரமில்லாதவருக்கு வாளாயுதத்துடன் என்ன சம்பந்தமுண்டு. அதுபோலப் புத்தி நுட்பமுடையவரது சபையைக் கண்டு, பயப்படுவோருக்கு நூலுடனே என்ன சம்பந்தமுண்டு. எனவே, வீரமில்லாதவர் வாளைத் தாங்குதல் வீண்சுமையும், சபைக்கஞ்சுவோர் நூலைக் கற்றல் வீண்காலப்போக்கும் ஆதல் அறிக. (7) சொல்லப்படுஞ் சபை நடுவிலே சபையைக்கண்டு பயப்படுவோன் கற்றறிந்த நூலானது, பகைவர்நடுவில் அப்பகைவர் கூட்டங் கண்டு பயப்படும் பேடி கையிற் பிடித்த வாளாயுதம் போலும். எனவே, இவ்விரண்டாலும் பயனில்லையென்று மேலே சொல்லியதை வற்புறுத்தியது காண்க. (பேடி-வீரமில்லாதவன்.) "வீரமறு பேடிகையில் வேலுநிகராமால்" என்றார் பிறரும். (8) நல்லவரிருந்த சபையுள்ளே அவருக்கு ஒப்ப நல்ல சொற்பொருள்களை அச்சத்தால் சொல்லமாட்டாதவர் பல நூல்களைக் கற்றாராயினும், உலகத்துக்குப் பிரயோசனப் படுதல் இல்லாதவராவர். (9) நூல்களைக் கற்று, அவைகளாலே பயனை அறிந்திருந்தும் நல்லவரிருந்த சபைக்கு அஞ்சி, அவ்விடத்தே சொல்லாதவர் மூடரினுங் கடையரென்று உலகத்தார் சொல்லுவர். மூடர் இகழப்படார் ஆதலால் அவரினுங் கடையரென்று கூறினார். (10) சபைக்குப் பயந்து தாம் கற்றவைகளைச் சபைக்கு ஏற்கச் சொல்லமாட்டாதவர் உயிரோடிருந்தாலும் இறந்தவரோடொப்பாவர்.

எசு-ஆம் அதிகாரம்.

நாடு.

இனி, அவ்வரசனாலும், மந்திரியாலும் கொண்டு செலுத்தப் படுவதும் அரண் முதலிய அங்கங்களுக்கு அவசியம் வேண்டுவது மாகிய நாடு ஓரதிகாரத்தினாலே சொல்கின்றார்.

அஃதாவது:—இப்படிப்பட்டதென்பது இதனுள் விளங்கும்.

க. நாட்டினது இலக்கணம்.

(1) நாடாவது: எல்லா உணவுப் பொருள்களும் நிறைய விளைவு செய்வோரும், துறந்தோர், அந்தணர் முதலாயினோரும், கொடுக்கக் குறையாத செல்வமுடையோரும் கூடி வாழ்வதும், (2) அளவற்ற பொருளுடைமையால் பிறதேசத்தாராலும், விரும் பத்தக்கதாகி, அதிக மழை, விளைவில்லாமை, எலி, விட்டில், கிளி, அரசண்மை. (வேற்றரசர் நெருங்குதல்.) என்ற இவைகளால் வரும் கேடு இல்லாமை யோடு கூடி அதிகமாக விளைவதும், (3) பிறநாடுகளாற் சுமக்கப்பட்ட மனிதர்கள் கூட்டமும், பசு முதலாகிய விலங்கின் கூட்டமும், பகைவர் வருத்தலாலாவது அர சன் முறை தப்பலாலாவது உணவில்லாமையாலாவது தன்னிடத்தி லே வந்தால், அந்தந்தத் தேசங்கள் போல அப்பாரமெல்லாம் ஒரு மிக்கத் தாங்கி அப்படித் தாங்குதற்காகத் தன் அரசனுக்கு வரிப் பொருளைக் குறைபடுத்தாது முழுவதும உடன்பட்டுக் கொடுப்பது மாம். (அஃதாவது: மிகுந்த விளைவின் வளங்களை உடையது நாடு என்றபடி.) (4) அதிகப் பசியும், நீங்காத நோயும், புறத்திலிருந்து வந்து அழிவுசெய்யும் பகையுமாகிய மூன்றும் அடையாதிருப்பதும், (5) சாதி பற்றியும் சமயம் பற்றியும் மாறுபட்டுக் கூடும் பல கூட்ட மும், உடனிருந்துகொண்டே பாழாகச் செய்யுங் கள்ளர் முதலிய உட்பகையும், சமயம் வந்தால் அரசனை வருத்துகின்ற கொலைத் தொழிற் குறும்பரும் இல்லாததுமேயாம். (6) பகைவராலே கெடுத லறியாததும் ஒருகாலத்திற் கெட்ட இடத்தும் வளங்குறையாதது மான நாட்டை எல்லா நாடுகளிலும் முதன்மையது ஆகுமென்று

நூலறிந்தோர் சொல்லுவர். கெடுதலறியாததற்குக் காரணம்: கடவுட்பூசை முதலிய தருமமும், அரசன் வலிமையுமாம். (வளமென்பது: மணி, பொன், நெல் முதலிய சகலத்தையும் அடக்கிநின்ற பொதுச்சொல்.)

உ. நாட்டினது அவயவம்.

(7) கீழ்நீர் மேல்நீர் என்னப்பட்ட இரண்டுவகையான நீரும் வாய்ப்புடைத்தாகிய மலையும் அதிலிருந்து வருவதாகிய நீரும் வலிய நகரியும் நாட்டினுக்கு அவயவமாம். (கீழ்நீராவன: கிணறும், கேணியும். மேல்நீராவன: ஏரிகளும், நதிகளும். வாய்ப்புடைத்தாகிய மலையாவது: மாரிக்காலத்தி லுண்ட நீரைக் கோடைகாலத்திற் கொடுக்குமலை.)

௩. பிறதேசத்தாரும் விரும்புதற்கு ஏற்ற அழகு.

(8) நோயிலலாமையும், செல்லவமும், பயிர் விளைவும், இன்பமும், காவலுமாகிய இவ்வைந்தினையும் தேசத்திற்கு அழகாகுமென்று நூலறிந்தோர் சொல்லுவர். (நோயில்லாமை: நிலநலத்தாலாவது. இன்பம்: விழவும், வேள்வியும், சான்றோரும் உடைமையாலும், வேண்டும் பொருள்களை அநுபவிப்பவையுடைமையாலும் நில நீர்களது நன்மையாலும் வாழ்வார்க்கு உள்ளே நிகழ்வது. காவல்: அரசன்காவலும், வாழ்வோர் காவலும், அரண்காவலுமாம்.)

ச. குடிகளுடன் அமைவில்லாத அரசன்குற்றம்.

(9) தம்மிடத்து வாழ்வோர் தேடி வருந்தாமல் அவரிடத்தே தானே அடையுஞ் செல்வத்தை உடையவைகளை நாடுகளென்று சொல்லுவர். ஆதலால், தேடி வருந்தச் செல்வத்தைக்கொடுப்பனவாகிய நாடுகள் நாடுகளாகாவாம். (10) அரசனோடு பொருந்துதலில்லாத நாடாவது, மேற்சொல்லிய குணங்களெல்லாம் நிறைந்துள்ளதாயினும் அவைகளாலே பயனொன்றுமில்லையாம். (அரசனோடு பொருந்தலாவது: குடிகள் அரசனிடத்தே அன்புடையராதலும், அரசன் குடிகளிடத்தே அருளுடையனாதலுமாம்.)

௭௫-ஆம் அதிகாரம்.

* அரண்.

இனி, அந்நாட்டிற்கு அவயவமாய் அடங்குமாறும், பகைவரால் நொலைவு வந்த இடத்து அந்நாட்டிற்கும், அரசனுக்கும் காப்பாதற் சிறப்புப்பற்றியே வேறோராங்கமாகச் சொல்லப்பட்ட அரண் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்.

அஃதாவது:—இன்னதென்பது இதனுள் விளங்கும்.

க. அரணின் சிறப்பு.

(1) அரணானது மூவகை வலியும் உடையவராய்ப் பிறர் மேலே செல்வோர்க்கும் சிறந்ததாம். அஃதன்றி, தம்மேலே வருவோர்க்கு அவ்வலியில்லாமற் பயந்து, தன்னை அடைவோர்க்கும் சிறந்ததாம். பிறர்மேற் செல்லும்போது, தம் உரிமைப்பொருள்களைப் பிறனொருவனெடுத்துக் கொண்டுபோகாமல் வைத்தற்கு இடமும், தம்பெருமை தொலைந்து முடிவு வரும்போது தாம் மறைந்திருத்தற்கு இடமும் ஆதலால், இவ்விதம் இருபகுப்பாருக்கும் அரண்(மதில்)சிறந்ததென்பது கூறப்பட்டது. தன்னை என்றது அரணை. (மூவகைவலி, அறிவு, ஆண்மை, பெருமைகளாம்.)

உ. அரணின் இலக்கணம்.

(2) இவ்விதமன்றி, அரணானது எந்நாளும் வற்றாத நீருங் (அகழும்) நீரும் நிழலுமில்லாமல் பிராணிகள் தாபதாகங்களால் மரணம் அடையத்தக்க வெளி நிலமும், மலையும், குளிர்ந்த நிழலையுடைய காடும் உடையதாம். (வெளி நிலம்: பகைவர் அரண் பற்றாமைப்பொருட்டு மதிற்புறத்து உள்ளது) எனவே, நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என்கிற இந்நான்கு அரணுஞ் சூழப்படுவது அரண் (மதில்) என்று உணர்க. (3) உயர்ச்சியும், அகலமும், வலிமையும், அருமையும் என்னப்பட்ட இந்நான்கினது மிகுதியையுடைய மதிலே அரணென்று நூலோர்சொல்லுவர். மேற்கூறிய நான்கனுள் (உயர்வு: ஏணிக்கெட்டாதது. அகலம்: புறத்தோர்க்குத் தோண்டக்கூடாத அடியகலமும், உள்ளிடத்தோர்

---

* அரண் - காப்பாதற் சிறப்புடையவற்றிற்கெல்லாம் பொதுவாயதோர் சொல்.

நின்று வேலைசெய்தற்கு ஆகும் தலையகலமுமாம். (திண்மை: கருங்கல் செங்கல்களாலே செய்யப்படுதலால், குத்தப்படாமை. அருமை: எந்திரப் பாவைகளாலே சேரமுடியாமை.) (4) இத்தகைய மதிலென்னும் அரணனது காக்கவேண்டும் இடம் சிறிதாய் விரிந்த இடத்தையுடையதாய்த் தன்னைச் சூழ்ந்த பகைவரது மன எழுச்சியைக் கெடுப்பதேயாம். காக்கவேண்டும் இடம் சிறிதென்றது, மேலே கூறிய நீரரண் முதலிய நான்கும் உள்ள இடமல்லாத வேறு இடத்தை. (5) இன்னும், புறத்தோராலே கொள்ளுதற்கு அரிதாகித் தன்னுட்கொண்ட பலவகை உணவு முதலிய பொருள்களை உடையதாகி உள்ளிடத்தோர் போர்செய்யும் நிலைக்கு எளிதாகின்ற குணமுடையதுமாம். (புறத்தோராலே கொள்ளுதற்கு அருமையாவது: காவற்காடு, அகழ், எந்திரங்களால் புறத்தோர் வந்து வளைதற்கு இடமில்லாதிருத்தல். போர்நிலைக்கு எளிதாங் குணமாவது: உள்ளிடத்தோராலே விடப்பட்ட ஆயுதமுதலானவை புறத்தோர்மேலே எளிதிலே செல்லுதலும், புறத்தோர் விடப்பட்ட ஆயுதமுதலானவை உள்ளிடத்தோர் மேலே செல்லாமையும், மதிலுள்மேடையின் விசாலமுமாம்.

ங. அரண் காப்பவர் அவசியம் வேண்டும்.

(6) அரணனது உள்ளிடத்தோர் வேண்டும் எல்லாப் பொருள்களையும் உடையதாகிப் புறத்தோரால் அழிவடையுமளவில் அதுவராமல் உதவிக் காக்கவல்ல நல்ல வீரரையும் உடையதேயாம். (நல்ல வீரராவார்: அரசனிடத்து அன்பும், மானமும், மறமும், சோர்வில்லாமையு முதலாகிய நற்குணங்களை யுடையவர்.) (7) பிறர் வரவு போக்கு ஒழியும் வகை நெருங்கிச் சூழ்ந்தும், அப்படிச் சூழாமல் சமயம் பார்த்து ஒருமுகமாகப் போர்செய்தும், உள்ளிடத்தோரை அவருக்கு நம்பிக்கையானவரை விட்டுக் கீழறையைத் திறக்கும்படி செய்தும், புறத்தோர்ாலே பிடித்துக் கொள்ளக் கூடாதது அரணும். (8) இஃது அன்றியும்; அவ் அரணனது சேனைப் பெருக்கத்தால் சூழ்தல் வல்லவராகி வந்து, சூழ்ந்த புறத்தோரையும் தன்னைப் பற்றிய உள்ளிடத்தோர் தாம் பற்றிய இடம் விடாதே நின்று போர்செய்து வெல்வதற்கிடமுமாம். (9) இம்மட்டோ? போர்தொடங்கின அளவிலே பகைவர் கெட உள்ளிடத்தோர் செய்யுந் தொழில் வேறுபாடுகளால் விளக்கம்

வெற்று, மற்றும் வேண்டும் பெருமையும் உடையதாம். (தொழில் வேறுபாடுகளாவன: பகைவர் தொடங்கிய போரை அறிந்து, எய்தல், எறிதல், குத்துதல், வெட்டுதல் முதலியவைகளுள் அப்போரை அழிப்பவைகளைச் செய்தல். விளக்கமாவது: பிறரெடுத்துப் பேசுஞ் சிறப்புடையதாதல். மற்றும் வேண்டும் பெருமை யாவது: புறத்தோரறியாமற் புகுதல், போகுதல் செய்தற்கு உண்டாக்கப்பட்ட சுருங்கைவழி முதலானவை யுடைமை. இவ்வழியை இக்காலத்தார் திட்டிவாசலென்பர்.) (10) இவ்விதம் முன் சொல்லப்பட்ட பெருமை யெல்லாம் உடையதாகிய இடத்தும் அரணானது தொழிலில் திறமையில்லாதவர் தன்னிடத் திருந்தால் அப்பெருமையால் பயனடையாதாம். (தொழிலில் திறமையாவது: பகையரசர் வளைந்த காலத்து ஏற்ற தொழில் செய்து, இடையூறு வராமற் காக்கும் வன்மை.)

எசு-ஆம் அதிகாரம்.

பொருள்செயல்வகை.

இனி, பெரும்பாலும் நாட்டாலும் அரணாலும் ஆக்கவும் காக்கவும் படுவதாகிய பொருள் சம்பாதித்தலின் விதம் இவ்வதிகாரத்தாலே சொல்லுகின்றார்.

அஃதாவது:—இன்னதென்பது இதனுள் விளங்கும்.

க. பொருளின் சிறப்பு.

(1) ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும் பொருளாக மதிக்கப்படுவராகச் செய்யவல்ல பொருளையல்லாமல் ஒருவருக்குப் பொருள் வேறில்லை. (மதிக்கப்படாதவர்: அறிவில்லாதவரும் இழிகுலத்தவருமாம்.) மதிக்கப்படச் செய்தல்: அறிவுடையவரும் உயர்குலத்தவரும் அவர்பாற் சென்று நிற்கப்பண்ணுதல்.) (2) எல்லா நன்மையும் உடையவரா யிருந்தாலும் பொருளில்லாதவரை யாவரும் இகழ்ந்து பேசுவர். எல்லாத் தீமையும் உடையவரா யிருந்தாலும் அப்பொருளுடையவரை யாவருங் கனப்படுத்துவர். (3) பொருளென்று எல்லாராலுஞ் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற

கெடாத விளக்கானது தன்னைச் சம்பாதித்தவருக்கு அவர் நினைத்த தேசத்திலே போய்ப் பகை யென்னும் இருளைக் கெடுக்கும்.

உ. பொருள் சம்பாதிக்கும் வழி.

(4) அரசன் சம்பாதித்தற்குரிய வழியறிந்து கொடுங்கோன்மை யிலனாகக் கிடைத்தபொருள் அவனுக்கு அறத்தையும் இன்பத்தையுங் கொடுக்கும். எனவே, செங்கோன்மையினாலே பொருள் சம்பாதிக்க வேண்டுமென்பதாயிற்று. (செங்கோன்மை: நீதி வழுவாமை) (5) தாம் குடிகளிடத்துச் செய்யும் அருளோடும் குடிகள் தம்மிடத்துச் செய்யும் அன்போடுங் கூடி வராத சம்பாத்தியப் பொருட்பெருக்கத்தை அரசர் பொருந்தாராகி நீங்க விட வேண்டும். (அருளோடும் அன்போடுங் கூடி வருதலாவது: குடிகளுடைய வருவாயில் ஆறிலொன்றாய் வருதலாம்.) அப்படி வராமல் வீண்வரி ஏற்படுத்தி மனம்போன வழியெல்லாம் வாங்கும் பொருள் பச்சை மண் குடத்து நீர்போலச் சம்பாதித்தவனோடு தானுங் கெடும். (6) உடையவரில்லாமல் தானே வந்து கிடைத்த பொருளும், சுங்கப்பொருளும், தன பகைவரை வென்று கப்பம் வாங்கும் பொருளும் அரசனுக்குரிய பொருள்களாம். (தானே வந்து கிடைத்த பொருளாவது: நிலத்திறகிடந்த புதையற் பொருள். சுங்கப் பொருளாவது: கப்பலிலும் பண்டியிலும் வரும் பண்டங்களுக்கு வாங்கும் வரிப்பணம்.)

ங. பொருளின் பிரயோசனம்.

(7) அன்பினாலே பெறப்பட்ட அருளென்கிற பிள்ளையானது பொருளென்று உயர்த்திச்சொல்லப்படும் அருமைச் செவிலித்தாயால் வளர்ந்துவரும். இங்கே வறுமையுடையார்மேற் செல்வதாகிய அருளாகிய பிள்ளை அவ்வறுமையைக் களைதற்கேதுவாகிய பொருளில்லாவிடில் வளராது. ஆதலால், அவ்வறுமை களையவல்லதாகிய அப்பொருளைச் செவிலித்தா யென்று சொல்லிய நுணுக்கம் தெரிந்துகொள்க. இதனால், பொருளுடையாரிடத்து உளதாகிய அருளே மிகச் சிறந்ததாம். (அன்பாவது: ஏதேனும ஒரு சம்பந்தம் பற்றிப் பிறரிடத்துச் செலலுஞ் செயல. அருளாவது: அச்செயல் முதிர்ந்து யாதொரு சம்பந்தமும் பற்றுமற் பிறரிடத்துச்

செல்வதாகிய செயல், ஆதலிற்றான். அன்பினாலே பெறப்பட்ட அருளென்கிற பிள்ளை யென்றார். (8) தன் கையதாகிய பொருளிருக்க ஒரு தொழிலைச் செய்பவனது செய்கையானது மலைமேலே யேறி நின்று யானைகளது சண்டையைப்பார்த்தற்கு ஒப்பாகும். (அஃதாவது; மலைமேலேறினவன் பயமும் வருத்தமும் இல்லாமல் பூமியில் நடக்கும் யானைச்சண்டையை மகிழ்ந்திருந்து எப்படிப்பார்ப்பானோ? அப்படியே கைப்பொருளுண்டாயிருக்க ஒரு தொழிலை மேற்கொண்டவனும் பயமும் வருத்தமும் இல்லாமல் வல்லவரை ஏவி இனிதிருந்து முடிப்பானென்பதாம்.) (9) தமக்கு ஒன்று உண்டாக நினைப்பவர் திரவியத்தைச் சம்பாதிக்கவேண்டும். அத்திரவியம் பகைவரது செருக்கைக் கெடுக்கும் ஆயுதமாகும்; அதுபோலக் கூரிய ஆயுதம் வேறில்லை. அருவப்பொருளாகிய செருக்கை மற்றை ஆயுதங்கள் அறுக்கமாட்டாமையால் வேறில்லையென்று கூறினார். (10) நல்ல வழியால்வரும் பொருளை அதிகமாக உண்டாக்கினவருக்கு மற்றைத் தருமமும் இன்பமும ஒரே காலத்தில் எளிய பொருள்களாகும் எனவே, பொருளொன்றிருந்தால் தருமமும் இன்பமும் வேண்டுங்கால், சிரமமில்லாமல் ஆக்கிக் கொள்ளலாமென்பதாயிற்று.

எஎ-ஆம் அதிகாரம்.

படைமாட்சி.

இனி, பொருளினாலாவதாகிய படையை இரண்டதிகாரத்தினாலே சொல்லத்தொடங்கி முதலிலே படைமாட்சி சொல்கின்றார்.

அஃதாவது:—சேனையினது தன்மையுமாம்.

க. அரசனுக்குப் படையானது மற்றை அங்கங்களுட் சிறந்ததென்பதும், அதனுள்ளும் மூலப்படை சிறந்ததென்பதும், அதனுள்ளும் வீரன் சிறந்தவனென்பதும்.

(1) யானை குதிரை தேர் காலாளாகிய நாலுறுப்புக்களாலு நிறைந்து போரிலே காயம்படுதற்குப் பயப்படாது நின்று பகையை வெல்வதாகிய சேனையானது அரசனது செல்வங்களிலெல்லாந் தலைமையான செல்வமாம். (சேனையென்பது: மேற்சொல்லிய நான்

கின் கூட்டம்.) நாடு நகர் முதலிய மற்றை உறுப்புக்களுக்கும் அரச னுக்குங் காவலாகலால், சேனையை முதன்மையான செல்வமென்று கூறினார். (2) தான் சிறுத்த இடத்தும் அரசனுக்கு யுத்தத்தில் அழிவுவந்தால் தன்மேலே காயம்படுவதற்குப் பயப்படாது நின்று தாங்கும் வீரத்தன்மையானது அவன் முன்னோரைத் தொடர்ந்து வருஞ்சேனைக்கல்லாமல் மற்றைச்சேனைக்கு உண்டாகாதாம். சேனை: படை; அப்படை: மூலப்படை கூலிப்படை நாட்டுப்படை காட்டுப் படை துணைப்படை கைப்படை என அறுவகைப்படும். (3) எலிக ளாகிய பகைதிரண்டு கடல்போல முழங்கினால் பாம்புக்கு என்ன துன்பமுண்டாகும். அப்பாம்பு மூச்சுவிட்டவுடனே அப்பகை தானேகெடும். அதுபோல, வீரரல்லாதவர் பலர் திரண்டு ஆரவாரித் தால் அதற்கு வீரன் பயப்படமாட்டான். அவனெழுந்தவுடனே அவர் கெட்டுப்போவர்.

உ. படையின் இலக்கணம்.

(4) அரசனுக்குப்படையாவது, போரினிடத்துக் கெடுதல் இல்லாமல் பகைவராலே ஓட்டைபடாததாகிப் பழமையாகவந்த சௌரியம் உடையதேயாம். (ஓட்டைபடுதல்: பகைவர் தந்திரத்து க்கு உட்பட்டு அவர் வசப்படுதல். சௌரியம்: வீரம்) (5) யமன் கோபித்துத் தன்மேல்வந்தாலும் மனம் ஒத்து எதிர்நின்று தாங்கும் வலிமையுடையதே சேனையாம். (6) வீரமும் மானமும் பழைய வீரர்சென்ற மாட்சிமைப்பட்ட நல்வழியிலே செல்லுதலும் அரசனால் நம்பப்படுதலுமாகிய இந்நான்கு குணமே சேனைக்குக் காவலாம். (7) சேனையாவது, பகைவராலே வகுக்கப்பட்டுத் தன்மேலே வந்த பகையின் போரை விலக்கும் படைவகுப்பை, அறிந்து வகுத்துக்கொண்டு அப்பகைவரது தூசிப்படையாகிய முதற்படையைத் தன்மேலே வராமல் தடுத்துத் தான் அதன்மேற் செல்வதேயாம்.

ரு. சேனையின் காட்சிப் பொலிவில்லாமையாலும், அரசன் கொடைத்தாழ்வுகளாலும், தலைவரில்லாமையாலும் தாழ்வு உண்டாகும்.

(8) சேனையானது பகைவர்மேலேசென்று போர்செய்யும் வீரமும் அப்பகை தன்மேலேவந்தால் பொறுக்கும் வலிமையும்

இல்லையாயினும் தனது தோற்றப்பொலிவினாலே பெருமையை அடையும். ஆதலால், தோற்றப்பொலிவு அவசியம்வேண்டுவதாம். (அஃதாவது: அலங்கரிக்கப்பட்ட தேர் யானை குதிரைகளுடனும் விருதுக்கொடி, மற்றைக்கொடி, குடை, பலவாத்தியம், எக்காள முதலானவைகளுடனுந் தோன்றும் அழகுகண்டவுடனே, பகைவரஞ்சும் பெருமை (9) தான் தேய்ந்து சிறிதாகலும் மனத்தினின்று நீங்காத வெறுப்பும் தரித்திரமும் தனக்கு இல்லையானால் சேனையானது பகையை வெல்லும். எனவே, இம்மூன்றும் வராமல் அரசன் காக்கவேண்டுமென்பதாயிற்று. (10) போரினிடத்து நிலைமையுடைய வீரரை மிகவுடையதாயினும் தனக்கு முதன்மையராகிய படைத்தலைவரில்லாத இடத்துச் சேனை நில்லாது. ஆதலால், சேனாதிபதிகளே படையை நிறுத்தவல்லவரென்பதாம்.

எஅ-ஆம் அதிகாரம்.

படைச்செருக்கு.

அஃதாவது:—அச் சேனையினது வீரமிகுதி.

க. பகைவர் முன்னே தன் வீரஞ் சொல்வது.

(1) பகைவரே என்னுடைய தலைவனெதிரே போரேற்று நின்று அவன் வேல்பட்டு விழுந்து கல்லினிடத்தே நின்ற வீரர் பலராவர். நீர் அக் கல்லிலே நில்லாமல் உடம்புடனிலே நிற்றலை விரும்பினால், என்னுடைய தலைவனெதிரே போரேற்று நில்லாதே செல்லுங்கள். (கல்லினிடத்தே நிற்றலாவது: போரிலே யிறந்துபோன வீரரைக் கல்லாலே செய்வித்து நட்டி வைத்தல்.) இது பழைய காலத்து வழக்கமாம்.

உ. தோற்றவர் மேலே ஆயுதஞ் செலுத்தாத மிகுந்த வீரம்.

(2) காட்டிலோடுகிற முயலைத் தப்பாமலெய்த அம்பைக் கையிலேந்துதலைப் பார்க்கினும், வெளி நிலத்திலே நின்ற யானையை யெறிந்து தவறிய வேலைத் தாங்குதல் நன்று. இது, பகையரசன் சேனையோடு சண்டைசெய்து அச்சேனை தோற்றுப் பின்னிடக் கண்டு நாணிப் பின் அவ்வரசன் மேற்செல்ல லுற்ற ஒரு வீரன் சொல்லு. இதனால், எதிர்த்து யுத்தம் செய்யக்கூடாதவரோடு யுத்தம்

செய்து வெல்வதினும், எதிர்த்து யுத்தம் செய்வாரோடு யுத்தஞ் செய்து தோற்றல் வீரமாமெனபது கருத்தாயிற்று. (3) பகைவரிடத்தே முகங்கொடாமல் செய்கிற வீரம், மிகுந்த ஆண் தன்மையாகும். அப்பகைவர்க்கு யுத்தத்தில் ஒரு தாழ்வு வந்தகாலை, அது தீர்த்துக் கொள்ளுந்தற பொருட்டு முகங் கொடுத்து உபகாரியாந்தன்மை, அவ் வாண் தன்மைக்குக் கூர்மையாகுமென்று நாலோர் சொல்லுவர் இதற்குச் சான்ருக, இராவணன் யுத்தத்திலே சேனைகளை யிழந்து வறியனாய் நிற்க, அக்குறை தீரும் பொருட்டு "இன்று போய்ப் போர்க்கு நாளைவா" என்று ஸ்ரீராமபிரான் உதவி புரிந்ததைக்காண்க. இராமாயணம் யுத்த காண்டம். முதற் போர்ப் படலம் (256).

௩. இடையூறுகளுக்குப் பயப்படாதிருத்தல்.

(4) தன் கையிலுள்ள ஆயுதமாகிய வேலைத் தன்மேல் எதிர்த்து வந்த யானை மேலே யெறிந்து விட்டு, வருகிற யானைக்கு வேல் தேடித் திரிபவன் தன் மார்பிலிருந்த வேலைக் கண்டு பிடுங்கி மகிழ்ச்சி அடைவான். எனவே, தன் மார்பில் பகைவரெறிந்த வேலிருப்பதை அறியாமல் மிகக கோபத்தோடு திரிந்தானென்பதாயிற்று. இவனே வீரருள் சிறந்த வீரனாவான். (5) பகைவரைக் கோபித்துப் பார்த்தகண் அப்பகைவர் வேலைத் தம்மேலே எறிய அதற்குப் பொருமல் அப்பார்வையை அழித்து இமைக்குமானால், அவ்விமைத்தல வீரர்க்குத் தோல்வி அல்லவோ? (இமைத்தல்: கண்ணை மூடி விழித்தல்.) (6) வீரனானவன் தன் ஆயுள் நாள்களில், சென்ற தினங்களை யெடுத்தெண்ணி அத்தினங்களுள் தன் முகத்திலும் மார்பிலும் பகைவராயுதங்களால் பெரிய புண்படாத தினங்களை யெல்லாம் பயன்படாது வீணாகிய தினங்களுள்ளே சேர்த்தெண்ணுவான். இது பற்றியே, சியகங்கனென்னும் அரசனைத் தன் மேலே பெரிய காயம்படப் போர்செய்தலையே ஆபரணமாக உடையவனென்று நன்னூற் சிறப்புப்பாயிரத்துட் கூறியது காண்க.

௪. வீரரானவர் இறத்தற்குப் பயப்படாதிருத்தல்.

(7) பூமியைச்சூழ்ந்துநிற்கும் புகழைவிரும்பி, உயிர்வாழ்தலை விரும்பாத வீரர் வீரக்கழலைகட்டுதலானது அவருக்கு அலங்கார

குணமுடையதாகும். (8) போர்கிடைத்தால் தம்முயிருக்காகப் பயப்படாமல் அப்போர் செய்யச் செல்லும்வீரர் தம்மரசன் அப்போர்வேண்டாமென்று கோபித்தாலும், அவ்வீரமிகுதி குறைய மாட்டார். (9) தாம் சொல்லிய சபதம் தப்பாதிருக்கும் பொருட்டுப் போரிற்போய்ச் சாகவல்ல வீரரை அச்சபதந்தப்பிய விதஞ்சொல்லி இகழ்தற்குரியார் ஒருவருமில்லை. எனவே, சபதமுடிக்குமுன்னர் இறந்தாராயினும், சபத முடித்தவரே ஆவரென்பதாம். (10) தமக்குச் செய்த நன்றிகளை நினைத்துத் தம்மை ஆண்ட அரசரது கண்கள் நீர்பெருகும்படி போரிலே சாகப்பெற்றால், அச்சாவு யாசித்தாயினுங் கொள்ளும் தகுதியை யுடையதாகும். சுற்றத்தார் அழ இறந்தால் வினைப் பயனெய்தல் போலாது, தம் அரசன் அழப் போரிலிறந்தால் வீர சொற்கமெய்தலால், இச்சாவு யாசித்தாயினுங் கொள்ளும் தகுதியை உடையதென்றார்.

௭௰௯-ஆம் அதிகாரம்.

*நட்பு.

இனி, படைபோல அரசனுக்குத் தொழிலிடத்து உதவுவதாகிய நட்பை, ஐந்ததிகாரத்தால் விதிமுகத்தாலும் பன்னிரண்டதிகாரத்தால் எதிர்மறை முகத்தாலும் சொல்லத் தொடங்கி, விதிமுக அதிகாரம் ஐந்தினுள்ளும் முதலிலே நட்புச் சொல்லுகின்றார்.

அலைதாவது:—இன்னதென்பது இதனுள் விளங்கும்.

க. முன்செய்த உதவிபற்றி, வருவதாகிய செயற்கை நட்பின் சிறப்பு.

(1) நட்புப்போலச் சம்பாதித்துக்கொள்ளும் அரிய பொருள்கள் எவை யிருக்கின்றன? சம்பாதித்துக்கொண்டால் பகைவர் செய்யும் போர்த் தொழிற்குப் புகுதற்கு வரவொட்டாமல் தடுக்குங் காவலானவை அந்த நட்பைப்போல எவையிருக்கின்றன? ஒன்றுமில்லையாம். (நட்பு: இயற்கை, செயற்கையென இருவகைப்படும். அவ்விரண்டில், இயற்கை நட்பாவது: பிறப்புமுறையாலாகியதும் தேசமுறையாலாகியதும் என இருவகைப்படும். அவற்றுள், இயற்

* நட்பு - சிநேகம்.

கை நட்பு, சுற்றமாகலால் சுற்றந்தழாலென்னும் அதிகாரத்து ளடங்கியது.) செயற்கை நட்பு, பகையிடையிட்டதேசத்தது ஆதலால், துணைவலி யென வலியறிதலதிகாரத்து ளடங்கியது. இனி, இவ்வதிகாரத்திலே சொல்லப்படுவது, முன்செய்த உதவிபெற்று வருவதாகிய செயற்கை நட்பே ஆம்.

உ. செயற்கை நட்பின் சிறப்புக்குக் காரணம்.

(2) அறிவுடையவரது நட்புக்கள் பிறைச்சந்திரனைப் போல நாள்தோறும் வளருந் தன்மையினவாகும். அறிவில்லாரது நட்புக்கள் பூரணசந்திரனைப்போலப் பின்னை நாள் தோறுங் குறையுந் தன்மையினவாகும். (3) நற்குணமுடைய மனிதர்கள் தங்களிலே செய்த சிநேகம் பழகுந்தோறும் அவருக்கு இன்பம் செய்தலாவது, நூற்பொருள் கற்குந்தோறும் கற்பவர்களுக்கு இன்பஞ் செய்தலைப் போலுமாம்.

ங. நட்பின் பயன்.

(4) ஒருவரோடொருவர் நட்புச்செய்தல், சிரிப்பதற்கேற்றவைகளைச் சொல்லிச் சிரித்தற்கல்ல. அவர்க்கு வேண்டாத பழியும் பாவமுமாகிய தீச்செய்கையுண்டான இடத்து முற்பட்டுக் கண்டித்துப், புத்தி சொல்லுதற் பொருட்டேயாம்.

ச. புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி ஒத்தல் என்னு மூன்றனுள் உணர்ச்சி ஒத்தலே நட்பிற்குச் சிறப்புடையது.

(5) ஒருவனோடொருவன் சிநேகமாதற்கு ஒரு தேசத்திலாவது ஒரு ஊரிலாவது இருத்தலும், பலதரங் கண்டு பேசுதலும் வேண்டுவது இல்லை. இருவருக்கும் ஒத்த அறிவு தானே சிநேகமாம் உரிமையைக்கொடுக்கும். அன்றியும், உடன் உயிர் நீங்குதற்குரிய நட்பையும் உண்டாக்கும். இதற்குச் சாட்சியாக, கோப்பெருஞ்சோழனென்னும் அரசன் தன்னுடைய மரணகாலத்து, பாண்டிநாட்டிலுள்ள பிசிராந்தையார் என்னும் வித்துவான் வருவானென்று சொல்லியபடி, அவ்வித்துவான்வந்து அரசனிறந்துபோனதறிந்து தானும் உடனே உயிர்விடுத்தனன் என்பதை புறநானூறு 215 முதல் 218 வரை யுள்ள செய்யுட்களிற் காண்க.

௫. நட்பினது இலக்கணம்.

(6) கண்ட இடத்து முகமாத்திரமே மலரும் விதம் சிநேகிப்பது சிநேகமன்று. அன்பால் உள்ளமும் மலரச் சிநேகிப்பதே சிநேகமாம். (7) ஒருவனுக்கு நட்பாவது அழிவைத் தருகிற தீயவழிகளை விலக்கி நல்வழியிலே நடத்தி ஊழினாலே கேடுவந்த இடத்து அத்துன்பத்தை உடனிருந்து அநுபவிப்பதாம். (8) அன்றியும், சபையினிடத்தே ஆடை குலைந்தவனுக்குக் கைசென்று தழுவுதல் போலச் சிநேகிக்கப்பட்டவனுக்கு, அப்பொழுதே துன்பத்தை நீக்குவதுமாம். (9) அந்நட்பிற்கு இருப்பிடம் யாதென்றால், எந்நாளும வேறுபடாமல் கூடுமிடத்தெல்லாம் அறம் பொருள்களிலே நட்பாளருக்குத் தளர்ச்சி வராமல் தாங்கும் வலிமையேயாம். (தாங்குதல்: வற்புறுத்திச் சொல்லி வேண்டும் உதவி செய்தல்.) (10) இவர் எங்களுக்கு இவ்வளவு அன்பினர். யாங்கள் இவர்க்கு இவ்வளவு அன்புடையோமென்று, ஒருவரை ஒருவர் சிறப்பித்துப் பேசினும் சிநேகங் குறையும். ஏனென்றால், தாம் அவரென்கிற பேதமில்லாதிருந்தும் பேதப்படச் சிறப்பித்துப் பேசலாலென்க. எனவே, உண்மைச் சிநேகர் ஒருவரை ஒருவர் உபசரித்துப்பேசலாகா தென்பது கருத்து.

௮௦-ஆம்-அதிகாரம்.

நட்பாராய்தல்.

அஃதாவது:—முன் சொல்லப்பட்ட இலக்கணமுடையவரை ஆராய்ந்து அஃதறிந்தே சிநேகிக்க வேண்டுதலால், அவரை ஆராயுந்திறம்.

க. நட்பை ஆராயாத இடத்து உண்டாகுங் குற்றம்.

(1) சிநேகத்தை விரும்பி நிற்பவருக்கு ஒருவனோடு சிநேகஞ் செய்தபின் அச்சிநேகிதனை விடமுடியாது. ஆதலால், குணநன்மை, செய்கைநன்மைகளை ஆராய்ந்து ஒருவனைச் சிநேகிக்க வேண்டும். அப்படி ஆராயாமல் சிநேகித்தால், அதுபோலக் கேடுதருவது வேறொன்றில்லை. (2) குணத்தாலும் செய்கையாலும் நல்லனென்பதும் தீயனென்பதும் பலகாலும் பலவழியால் ஆராய்ந்து ஒரு-

வனோடு சிநேகியாதவன் முடிவில், தான்சாவதற்கு ஏதுவாகிய துன்பத்தைத் தானே விளைத்துக்கொள்ளுவான்.

உ. நட்பை ஆராயும் விதமும், ஆராய்ந்தால் சிநேகிக்கப் படுவோ ரிவரென்பதும்.

(3) ஒருவனது குணத்தை அறிவதோடும் குடிப்பிறப்பையும், குற்றத்தையும், குறைவற்ற சுற்றத்தையும் ஆராய்ந்து, அவனோடு சிநேகஞ்செய்யவேண்டும். குற்றமில்லாதவர் உலகத்திலில்லாமையால், பொறுக்கத்தக்க குற்றமானால் அவரோடு சிநேகஞ் செய்யலாமென்பதற்காகக் குற்றத்தையும் ஆராயும்படி கூறினார். எனவே, நற்குணமும் நற்குடிப்பிறப்பும் நற்சுற்றத்தாரையும் உடையவனே சிநேகத்துக்கு உரியவனென்பதாயிற்று. (4) உயர்ந்த குடியிற் பிறந்து உலகத்தார் சொல்லும் பழிக்குப் பயப்படுபவனைச் சில பொருள் கொடுத்தாயினும் சிநேகம் கொள்ள வேண்டும். எனவே, நல்லகுடியிற்பிறந்து பழிபாவத்துக்குப் பயப்படுகிறவன் சிநேகங்கிடைப்பது அருமை யென்பதாயிற்று. (5) தாம் உலக நடையல்லாத தீயவைகளைச் செய்ய நினைத்தால், அழும் விதஞ் சொல்லி விலக்கியும், அத்தீயவைகளைச் செய்தால் பின்னும் செய்யாவகை கண்டித்துச் சொல்லி நெருக்கியும் அவ்வுலக நடையாகிய நல்லவைகளைச் செய்யும்படி சொல்லவும் வல்லவரைச் சிநேகம் கொள்ளல் வேண்டும். (6) ஒருவனுக்கு, கேடென்பது சுற்றத்தாரது சிநேகமாகிய நிலங்களைக் குறையாமல் அளப்பதாகிய ஒரு கோலாம். ஆதலால், அவராலே பெறப்படும் அக்கேட்டினிடத்தும் ஒருநல்லறிவுண்டாகும். (நல்லறிவாவது: தான் பொருள் முதலிய குறைந்து, கெட்ட காலத்தில் தனக்கு வருந்துன்பத்தைச் சுற்றத்தார் தன்னோடிருந்து அநுபவித்தலும், தன்னைக் கைவிட்டுப் போவது மாகிய அவரது செய்கைகளைத்தெரிவது.)

ங. ஆராய்ந்தால், சிநேகிக்கப் படாதவர் இவரென்பது.

(7) ஒருவனுக்கு இலாபமென்று சொல்லப்படுவது அறிவில்லாரது சிநேகத்தை நீக்கி, அவரைக் கைவிடுதலாம். சிநேகம் நீங்கினாலும் அறிவில்லாதவரை விட்டு நீங்காத இடத்து, தீங்கு வருதலால் அவரையுங் கைவிடவேண்டுமென்று கூறினார். (இலாப

மாவது: இம்மை மறுமை இன்பங்களுக்கு உரிமைபெறுதல்.) (8) தம் மன ஊக்கஞ் சுருங்குதற்குக் காரணமாகிய தொழில்களைச் செய்ய நினையாதிருக்க வேண்டும். அதுபோலத் தமக்கொரு துன்பம் வந்த இடத்துத் தம்மைக் கைவிடுவோரது சிநேகத்தைக் கொள்ளாதிருக்க வேண்டும். கொண்டால், கெட்டேபோவார். (9) ஒருவன் கெடுங் காலத்து, அவனைக் கைவிடுவோருடைய சிநேகமானது யமன் கொல்லுங்காலத்து (மரணகாலத்து) நினைத்தாலும், நினைத்தமனத் தைச் சுட்டுவிடும். இவ்விதம் பிறனொருவன் நினைந்தாலும் அவன் மனத்தைச் சுடுமென்றால், சமயம் வந்தால் கைவிடுவாரது நட்பின் கொடுமையை யென்னென்று கூறுவது? கொடியதினுங் கொடியதாம்.

ச. சிநேகிக்கப் படாதவரும் சிநேகிக்கப்படுபவரும்.

(10) உலக நடையோடு பொருந்திக் குற்றமற்றவரது நட்பையே பொருந்தல் வேண்டும். உலக நடையோடு பொருந்தாதவரது நட்பை முன்னர் ஆராயாமல் கொண்டிருந்தால், அவருக்கு வேண்டிய ஒரு பொருளைக் கொடுத்தாயினும் அந்நட்பை விட்டு விடவேண்டும்.

அக-ஆம் அதிகாரம்.

பழமை.

அஃதாவது:—சிநேகித்தவாது பழையராந்தன்மைபற்றி, அவர் செய்த பிழைகளைப் பொறுத்தல். நட்பிற் பிழை பொறுத்தற்குப் பழமை, காரணமாதலால் அக்காரணப்பெயர் காரியமாகிய நட்பிற் பிழை பொறுத்தலுக்காயிற்று.

க. பழமையானது காலஞ்சென்றதன்று. இப்படிப்பட்ட நட்பென்பது.

(1) பழமை யென்று சொல்லப்படுவது யாதென்றால்? அது, பழமையோர் உரிமையாலே செய்தவைகளைச் சிறிதாயினும் அழிக் காமல் அச் செய்தவைகளுக்கு உடன்படுவதாகிய சிநேகமாம். (உரிமையாற் செய்தவையாவன: ஒன்றைச்செய்யும்போது கேளாது செய்தல், கெடும் வகை செய்தல், தமக்கு வேண்டுபவைகளைத் தாமே யெடுத்துக் கொள்ளுதல், பணிவு, பயமில்லாமை முதலியன.)

உ. பழமையால் வரும் உரிமையின் சிறப்பு.

(2) சிநேகத்துக்கு அவயவமாவன: சிநேகர் உரிமையாற் செய்பவையாம். ஆதலால், அவ்வுரிமைக்கு இனிமையராதல் உயர்ந்தோர்க்கு முறை. (இனிமையராதல்: உடன் படுதல்.)(3) தமக்குச் சம்மதம் இல்லாதவையானாலும் சிநேகிதர் உரிமையினாலே செய்த காரியங்களுக்குத் தாம் செய்தவை போல உடன் படாரானால், பழையதாய் வந்த நட்பு என்ன பிரயோசனத்தைச் செய்யும்.

ஙு. தம்மைக் கேளாது நட்பினர் ஒன்றைச் செய்தால், அதனைக் கைக்கொள்ளவேண்டும்.

(4) சிநேகர் உரிமையாலே தம்மைக் கேளாது தம் கருத்தைச் செய்தாரானால், அச்செயலினுடைய விரும்பப்படும் தன்மை பற்றி, அதனை அறிவுடையோர் விரும்புவர். ஒருவருக்குத் தம் காரியம் தாம் அறியாமலே முடிந்திருத்தலைக் காட்டினும் நன்மையில்லாமையால், அச் செயல் விரும்பத் தக்கதென்று உணர்க.

ச. கேடும்வகை செய்தாராயின், அதற்குக் காரணம் அவரறியாமையும், நட்புமாம்.

(5) தாம் வெறுக்கத் தக்க காரியங்களைச் சிநேகிதர் செய்தால், அதற்குக் காரணம் அறியாமையாம்; அதுவுமன்றி, மிகுந்த உரிமையுமாமென்று அறியக் கடவர். இதனால், தீயவூழினாலே அறியாமை எல்லார்க்கும் பொதுவாக உண்டாகலால், நம்மால் வரக் கடவது நம்முடைய சிநேகிதரால் வந்ததென்று கொள்வதன்றி, அவர் அன்பில்லாமையால் வந்ததென்று கொள்ளலாகாதென்பதாம்.

ரு. அன்பால் கேடுசெய்த இடத்தும் நட்பு விடுந்தன்மையதன்று.

(6) நட்பின் வரம்பிலே நின்றவர் தம்மோடு பழமையில் வேறுபடாது நின்றவர் நட்பை, அவராலே கேடு வந்த இடத்துங் கைவிடமாட்டார். (கேடாவன: பொருட் கேடு, போர்க்கேடு.) (7) அன்புடனே பழையதாய் வந்த சிநேகத்தை அச் சிநேகமுடையவர் அச் சிநேகத்துக்கு இடமாயுள்ளார் அழிவு வந்த காரியங்களைச் செய்தாலும், அவரிடத்தே அன்பு நீங்கமாட்டார்.

சு. பிழை பொறுத்தலின் சிறப்பு.

(8) நட்புடையார் பிழையைப் பிறர் சொன்னாலுங் கேளாத உரிமை அறியவல்லவருக்கு அந் நட்பினர் பிழையைச் செய்தால், அப்பிழை செய்யப்பட்ட நாள் பயன் பட்ட நாளாம். ஏனென்றால், பிழை செய்யாத நாள் அப்பிழை பொறுக்கும் உரிமையறியும் வல்லமை தெரியாதாகலால், செய்த நாளே அவ்வல்லமையை வெளிப்படுத்தலா லென்க.

எ. பழமையறிவா ரடையும் பயன்.

(9) உரிமை கெடாமல் பழையதாய் வந்த சிநேகம் உடையவரது சிநேகத்தை, அவர் குற்றத்தை நோக்கிக் கைவிடாதவரை உலகமானது சிநேகங் குறித்து இச்சிக்கும். (10) பழைய சிநேகிதரிடத்து, அவர் குற்றஞ் செய்தாராயினும், தம்மன்பு நீங்காதவர் பகைவராலும் இச்சிக்கப் படுவர்.

அ௨-ஆம் அதிகாரம்.

தீ நட்பு.

இனி, பொறுக்கப்படாத குற்றமுடைமையால் விடத்தக்கதாகிய நட்பு நட்பாராய்தல் அதிகாரத்திலே சுருங்கச் சொல்லி, அவ்வளவி லடங்காமையால் அதனை இருவகைப்படுத்தி, இரண்டதிகாரத்திலே சொல்லத்தொடங்கி முன்னே தீ நட்புச் சொல்லுகின்றார்.

அஃதாவது:—தீக்குணத்தாரோடு உண்டாகிய சிநேகமாம்.

க. பொதுவகையால் தீ நட்புக் கூடாது.

(1) ஆசை மிகுதியினாலே உண்ணப்படுவார் போன்றாராயினும், தீக்குணமுடையவரது சிநேகமானது வளர்தலினும், குறைதல் இனியதாகும். ஏனென்றால், வளர்ந்தால் வருங்கேடு குறைந்தாலில்லை ஆதலா லென்க.

௨. தமக்குப் பிரயோசனம் பார்ப்பவரது நட்பினது தீமை.

(2) தமக்குப் பிரயோசனம் உள்ள இடத்துச் சிநேகித்து அஃதில்லாத இடத்து நீங்கும் சமான குணம் இல்லாதவர் சிநேகத்

தைப் பெற்றாலும், இழந்தாலும் கிடைப்பதாகிய நன்மை யிலலை. (3) சிநேகத்தளவு பாராமல் அதனால் வரும் பிரயோசனத்தளவு பார்க்கும் சிநேகரும் கொடுப்பாரைக் கொள்ளாமல் விலைப்பொருளைக் கொள்ளும் வேசையரும், பிறர் கேடு நோக்காது அவர் சோர்வு பார்த்துத் திருடுந் திருடரும் தம்முள் ஒருவருக்கு ஒருவர் சமானமாவர். பொருளைக் குறித்து வஞ்சகமாக நடித்தலால், பிரயோசனத்தைக் கருதும் சிநேகரை மற்றிருவரோடு சமானமாக்கிக் கூறினர்.

௩. கேடுவந்த இடத்துத் துணையாகாதவரது தீமை.

(4) முன்னெல்லாம் உதவிசெய்வதுபோலிருந்து யுத்தம் வந்த இடத்துப்போர்க்களத்திலே தள்ளிவிட்டுப்போகின்ற கல்வியில்லாத குதிரைபோல்வாரது சிநேகத்திலும், தனிமையாயிருத்தலே சிறப்புடையதாம். ஏனென்றால், அவர் சிநேகத்தினால் வருங்கேடு தனிமையாயிருந்தால் வாராமையாலென்க. (கல்வியில்லாத குதிரையாவது: ஐந்துகதியும், பதினெட்டுச்சாரியும், போர் செய்யுந் திறமும் அறியாதகுதிரையாம்; இவற்றை, அசுவலக்ஷணங் கூறு நூலுட்காண்க.) (5) சிநேகஞ்செய்துவைத்தாலும், காவலாகாத கீழ்மக்களது நீகட்பு ஒருவனுக்கு உண்டாதலைக்காட்டினும், இல்லாதிருத்தல் நல்லது. இதனால், இருந்தால் வருங்கேடு இல்லாதிருந்தால் இல்லையென்பதாம். (காவலாகாமையாவது: தொலைவுவந்த இடத்துக் கைவிட்டுநீங்குதல்.)

ச. அறிவில்லாதவர், சிரிக்கச்செய்பவர், இயல்வதுசெய்யாதவர் ஆகிய இம்மூவர் நட்பினது தீமை.

(6) அறிவில்லாதவனது மிகநெருங்கிய நட்பைப்பார்க்கினும், அறிவுடையவனது பகையானது கோடிபங்கு நல்லதாகும். ஏனெனில், அறிவுடையவனது பகைமை ஒரு தீங்கு செய்யாமையாலும், அறிவில்லாதவன் சிநேகம் பல தீங்கு செய்வதாலுமென்க. (7) தாமறியவேண்டியவைகளை அறியச்செய்தற்கு ஏதுவாகாத பொருள் கருதி, விடமரும், தூர்த்தரும், கழாய்க்கூத்தரும்போலத், தீயவற்றிலே மகிழச்செய்தற்கு ஏதுவாகிய சிநேகத்தால் வரும் இன்பங்களைப்பார்க்கினும், பகைவரால வருந்துன்பங்கள் பத்துக்கோடி

மடக்கு நல்லவையாம். இதனால், பகைவரைப்பார்க்கினும் தீநட்புடையவர் கொடியவரென்பதும் அப்பகைவர் செய்யுந்தீமையினும் இவர்செய்யும் நன்மை கொடிதென்பதும் பெறப்பட்டன. (விடமர்: வருத்தப்படுத்துவோர்.) (8) தம்மாலே செய்யக்கூடியதைக்கூடாததாகக் கடத்துவாரோடு கொண்ட சிநேகத்தை அவர் வஞ்சகங் கண்டால், அதை அவரறியச் சொல்லாமல் தளரவிடவேண்டும். ஏனென்றால், அறியச் சொன்னால்,அதற்குச் சமாதானஞ் சொல்லிப் பின்னும் சிநேகஞ் செய்யவருவர் ஆதலாலென்க. (தளரவிடுதலாவது: நாளுக்கு நாள் சிறிது சிறிதாக நட்பைக் குறைத்து வருதல்.)

௫. வஞ்சர் நட்பினது தீமை.

(9) தொழில்வேறு சொல்வேறுபட்டவரது நட்பு நனவிலே மாத்திரமல்லாமல், கனவினுந் துன்பஞ்செய்வதாகும். (தொழிலுஞ்சொல்லும் வேறு வேறாயிருத்தலாவது: செய்கையிலே பகைவராயும் சொல்லிலே சிநேகராயும் இருத்தல். நனவு: தெளிவாகிய காலம்) (10) வீட்டிலே தனித்திருந்தபோது உறவாடிச் சபையிலே பலருடனிருந்தபோது பழிசொல்லுவோரது நட்பு எவ்வளவு சிறிதாயினும், தள்ளிவிடவேண்டும். ஏனென்றால், நெருப்பு சிறிதாயிருந்தாலும் சுடுதல்போல வஞ்சகமுடையார் சிறுநட்பும் கேடு தருமென்க.

அ௩-ஆம் அதிகாரம்.

கூடாநட்பு.

இனி, மற்றைக் கூடாநட்புச் சொல்லுகின்றார்.

அஃதாவது:—பகைமையால் உள்ளே கூடாதிருந்து சமயம் கிடைக்குமளவும் புறத்திலே கூடி நடப்பவரது சிநேகம்.

௧. கூடா நட்பினது குற்றம்.

(1) அகத்திற் கூடாதிருந்தே வாய்க்குமிடம் காணுமளவும் புறத்திற் கூடி நடப்பவரது சிநேகமானது வாய்க்குமிடத்தைக் கண்டால், மிக அடிப்பதற்குத் துணையாகிய பட்டடையை ஒப்பார். (பட்டடையாவது: பழுக்கக் காய்ச்சிய இரும்பை அடிப்பத

ற்குத் தாங்குங்கல்.) எனவே, தம்மைத் துன்பஞ் செய்பவருக்கு உதவி புரிவரென்பதாயிற்று. (2) தமக்கு உறவு ஆவார்போன்று உறவாகாதவரோடு உண்டாகிய நட்பானது இடம் பெற்றால், பெண்கள் மனம் போல வேறுபடும். (உறவு ஆவார் போன்று உறவாகாதவர்: புறத்தொன்றும் அகத்தொன்றும் உடையவர். நட்பு வேறுபடுதலாவது: பகைமைய பகையே யாகுதல்.)

உ. மேற்கூறிய குற்றத்திற்குக் காரணமாகிய அவர்கோடுமை.

(3) நல்லவையாகிய பல நூல்களைக்கற்ற இடத்தும், அதனால் மனந்திருந்தி நட்பினராகுதல் பகைவருக்கில்லையாம். இதனால், உள் வஞ்சக முடையவரைக் கல்வியுடைமை பற்றி நட்பாகக் கொள்ளலாகாதென்பதாயிற்று. (4) கண்டபோது முகத்தால் இனிமையுள்ளனவாகச் சிரித்து மனத்தால் எப்பொழுதும் இனியராகாத வஞ்சகரைக் கண்டால், பயப்படவேண்டும்.

ங. கூடாநட்பு உடையவரைச் சொல்லாலே தெளியலாகாது.

(5) மனத்தால் தம்மோடு பொருந்ாதவரை யாதொருவிதத்தினாலும் சொல்லினால் தெளியு முறைமை இல்லை யென்று நீதிநூல் சொல்லும். எனவே, அவர் சொல்லெல்லாம் வஞ்சகச் சொல்லென்பதறிக. (6) நட்பினர் போல நன்மையைத் தருஞ் சொற்களைச் சொன்னாலும்,பகைவரது சொற்கள் அந்நன்மையைத் தராமை விரைவிலே யறியப்படும். (விரைவாவது: சொன்ன அப்பொழுதே யென்றபடி.) எனவே, தீமை தருதற்கு ஐயமில்லை யென்பதாம். (7) வில்லினது வணக்கம் ஏற்றவர்க்குத் தீமை செய்தலைக் குறித்ததனால், பகைவரிடத்தே காணப்படுஞ் சொல்லினது வணக்கத்தையும் நமக்கு நன்மை செய்தலைக் குறித்ததென்று நினையாதிருக்க வேண்டும். இதனால், வில் வளைவும், பகைவரது சொல்வளைவுந் தீங்கு தருமென்பதாம்.

ச. கூடா நட்பு உடையவரைச் செயலாலே தெளியலாகாது.

(8) தம்மைப்பகைவர் கும்பிட்ட கையுள்ளும் ஆயுதமானது மறைந்திருக்கும். அப்பகைவர் அழுத கண்ணீரும் அப்படியே ஆயுதமறைந்திருக்குமிடமாம். இதற்கு இலக்கியமாக "தொழுத

கையுளும் படையுள சூழ்ச்சியும் பெரிதால்" என்ற செய்யுளைக் காண்க. பாரதம் வாரணாவதச்சருக்கம் ககசு ஆம் செய்யுள். இதனால், பகைவர் தமது தளர்ச்சி காட்டித் தொழுதாலும், அழுதாலும் அவர் குறிப்பை அறிந்து தம்மைக் காத்துக் கொள்க என்பதாம்.

ரு. கூடா நட்பிடத்து நடக்கும் விதம்.

(9) புறத்திலே மிகச் சிநேகஞ் செய்து அகத்திலே தம்மை இகழ்ச்சி செய்யும் பகைவரைத் தாமும் அப்படியே சிநேகித்து அவரைப் புறத்திலே மகிழும்படி செய்து அகத்திலே அச் சிநேகம் கெடும் வண்ணம் பொருந்துந் தன்மையுடையது அரச நீதியாம். (பொருந்துதலாவது: பகைவரை அவர்போல் நடித்துக்காட்டி அவருடன் பழகுதல்.) (10) தம் பகைவர் நட்பினராய் நடக்கும் காலம் வந்தால் தாமும் புறத்திலே அவரோடு நட்புச் செய்து, அகத்திலே நட்பை நீங்கிப் பின் புறத்திலே செய்யும் நட்பையும் விட்டு விடல் வேண்டும்.

அசு-ஆம் அதிகாரம்.

பேதைமை.

இனி, அந்நட்பை எதிர்மறுத்துப் பகைமுகத்தாலே சொல்லத் தொடங்கினார். அப்பகைதான் முழுதும் விடலாகாத குற்றமாகிய குரோதத்தாலும், காமத்தாலும் வருவதாம். அவைகளுள் குரோதத்தால் வருபவை ஐந்ததிகாரத்தாலும், காமத்தால் வருபவை ஐந்ததிகாரத்தாலுஞ் சொல்லுதற்கு அவ்விரண்டுக்கும் மூலமாகிய மயக்கத்தை இருவகைப்படுத்தி, இரண்டதிகாரத்திலே சொல்லத் தொடங்கி முதலிலே பேதைமை சொல்லுகின்றார்.

அஃதாவது:—யாதொன்றும் அறியாமை.

க. பேதைமையின் இலக்கணம்.

(1) அறியாமை யென்று சொல்லப்படுவது, மற்றைக் குற்றங்களிலெல்லாம் மிகுந்ததொன்று. அது யாதென்று கேட்டால்,

தனக்குக் கேடு தருமவைகளைக் கைக்கொண்டு ஆக்கந்தருமவைகளைக் கைவிடுதலாம். (கேடாவன: வறுமை, பழி, பாவங்கள். ஆக்கமாவன: செல்வம், புகழ், புண்ணியம்.) (2) அறியாமை எல்லாவற்றுள்ளும் உயர்ந்த அறியாமையாவது: தனக்கு ஆகாத செய்கையில் ஆசையைச் செய்தலாம்.

௨. அறிவில்லானது பேதைத்தொழில்.

(3) பழி பாவங்களுக்கு நாணாமையும், கருமங்களிலே விதிவிலக்குகளை ஆராயாமையும், யாவரிடத்துந் தாக்ஷண்யம் அறப் பேசுதலும், குடிப்பிறப்பு கல்வி ஒழுக்கம் முதலியவைகளைப்பேணாமையும் ஆகிய இவைகள் மூடனது தொழில்களாம். (4) மனம் வாக்கு காயங்கள் அடங்குதற்கு ஏதுவாகிய நூல்களைப் படித்தும் அவ்வடக்கத்தால் வரும் பயனை அறிந்தும் பிறருக்கு அதனையறியும்படி சொல்லியும் தானடங்காத மூடன் போல் மூடரில்லையாம்.

௩. அறிவில்லான் மறுமைச் செயல்.

(5) மூடனானவன் வரும் பிறவிதோறும் தான் புகுந்து அழுந்துதற்கு இடமாகிய நரகத்தை இவ்வொரு பிறப்புள்ளே செய்துகொள்ள வல்லவனாவான். எனவே, எல்லாக் கொடுவினைகளையுஞ் செய்வனென்பதாயிற்று.

௪. அறிவில்லான் செல்வம்படைக்கும் விதம்.

(6) செய்யு முறைமை அறியாத மூடனானவன் ஒரு தொழிலைச் செய்யத் தொடங்குவானாயின், அதுவும் பயன் படாமற் கெடும். அஃது, ஒன்றோ தானே? தானும் தளை பூட்டப்படுவன். (தளை: விலங்கு.)

௫. அறிவில்லான் செல்வம் அடைந்த இடத்துப் பயன் கொள்ளும் விதம்.

(7) மூடனானவன் பெருஞ் செல்வத்தை ஊழாலடைந்த இடத்து, தன்னோடு சம்பந்தம் இல்லாதவராகிய அயலார் எல்லா நலமும் அநுபவிக்க, தன்னோடு எல்லாச்சம்பந்தமும் உடைய சுற்றத்தார் பசித்திருப்பர். (8) இன்னும், அம்மூடனானவன் தன் கையில் ஒரு பொருளை உடைமையாகப் பெற்று மகிழ்தல் பித்தினையுடைய

ஒருவன் கள்ளுண்டு மயங்கியது போலும். மூடனுடைய அறியாமை பித்தாகவும் அவன் ஒரு பொருள் பெற்றால் அது, கள்ளாகவுங் கண்டு கொள்க.

சு. அறிவில்லானது நட்பின் குற்றம்.

(9) பின் பிரிவு வந்த இடத்து அப்பிரிவு இருவருக்குங் கொடுப்பதாகிய துன்பம் ஒன்றில்லை. ஆதலால், மூடரது சிநேகம் மிகவும் இனியது; இது அம்மூடரைப் புகழ்வதுபோலிகழ்ந்ததாம்.

எ. அறிவில்லான் சபையிடத்திருக்கும் விதம்.

(10) பெரியோரது சபையிடத்து மூடனானவன் புகுதலானது அசுத்தம் பட்ட காலைச் சயனத்தின் மேல் வைத்தாற் போலும். இதனால், அச்சயனம் அசுத்தப்படுவதுபோல அச்சபையும் இழிவுபடு மென்பதறிக. (சயனம் : படுக்கை.)

அரு-ஆம் அதிகாரம்.

புல்லறிவாண்மை.

இனி, மற்றைப் புல்லறிவாண்மை சொல்லுகின்றார். அது : புல்லிய அறிவையாளுதற்றன்மை என்பதாம்.

அஃதாவது:—தான் சிற்றறிவினனாயிருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோராலே சொல்லப்படும் உறுதிச் சொல்லைக் கொள்ளாமை.

க. புல்லறிவின் குற்றம்.

(1) ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிகுந்த இல்லாமையானது அறிவில்லாமையாம். மற்றைப்பொருளில்லாமையோ? என்றால், அதனை உலகத்தார் அப்படிப்பட்ட இல்லாமையாகக் கொள்ளார். ஏனென்றால், புல்லறிவாளர் செல்வமடைந்தாலும் அதனால், இம்மை மறுமைப்பயனடைதற்கு ஏதுவாகிய செயல் செய்யாராதலால், அப்பொருள் இல்லாமையினாலே அவருக்குக் கேடில்லை ஆதலாலென்க.

உ. புல்லறிவாளர் தம்மிடத்து நல்லவை செய்தலறியாமை.

(2) புல்லறிவுடையவன் மனமகிழ்ந்து ஒருவனுக்கு ஒன்று கொடுத்தல் கூடியதானால், அதற்குக்காரணம் அவ்வொரு பொருளை வாங்குகின்றவனது நல்வினையே அன்றி, வேறொன்று மில்லை. இத னால், இம்மைப் பயன் கருதியாவது மறுமைப்பயன் கருதியாவது அப்புல்லறிவாளர் கொடுத்திலரென்பதாயிற்று.

ங. புல்லறிவாளர் தம்மிடத்தும் தீயவை செய்தலே அறிவர்.

(3) புல்லறிவுடையவர் தாமே தங்களை வருத்தப்படும் வரு த்தமானது வருத்தப்படுத்துதற்குரிய பகைவருக்கும் செய்தல் அரி தாகும். ஏனென்றால், பகைவர் தாம் தெரிந்த ஒரு தீங்கை காலம் பார்த்திருந்து செய்வதல்லது, வறுமை பழி பாவ முதலானவை பல வும் எக்காலமும் புல்லறிவுடையார் தமக்குத் தாமே செய்தல் போலச் செய்யக்கூடாது ஆதலாலென்க.

ச. புல்லறிவாளர் தம்மை மகிழ்தலின் குற்றம்.

(4) புல்லறிவுடைமை எனப்படுவது யாதென்றால், அது: நல்லறிவுடையோம் நாமென்று தம்மைத்தாமே நன்கு மதிக்கும் மயக்கமாம். (5) புல்லறிவாளர் தாம் படியாத நூல்களையும் படித்தவராக மேலிட்டுக்கொண்டு நடத்தலானது குற்றமறப்படித் தது ஒருநூலுண்டாயின் அந் நூலினிடத்தும் இவர் வல்லவரென் பது இப்படித்தானிருக்குமோ?என்னும் சந்தேகத்தைக் கொடுக்கும். ஆதலால், தாம் தெரியாததைத் தெரிந்ததாகச்சொல்வார் அவமதிக் கப்படுவரென்பதாயிற்று, (6) புல்லறிவாளர் தம்மிடத்து உண்டா கும் குற்றங்களை அறிந்து நீக்காரானால், மறைக்கத் தக்க அவயவத் தை ஆடையால் மறைத்தவராகத் தம்மை நினைத்தலும் புல்லறிவா கும். அஃதாவது: மறைக்கப்படுமவை பலவுள்ளும் உயர்ந்தவை களை யெல்லா மறையாது தாழ்ந்த ஒன்றையே மறைத்து அவ்வளவி லே தம்மை உலகநடை உள்ளவராக மதித்தல். எனவே, குற்றத்தை மறையாதவர் மறைக்கத்தக்க அவையவத்தை மறையாமல் திரிபவ ரோ டொப்பாவரென்பதாயிற்று. (குற்றங்களாவன: பழி பாவங் கள். புல்லறிவு: அற்ப அறிவு.)

ரு. உறுதிச் சொல்லைக் கொள்ளாமையின் குற்றம்.

(7) பெறுதற்கரிய உபதேசப் பொருள்களைப் பெற்றாலும் உட்கொள்ளாது போக்கிவிடும் புல்லறிவாளன் தானே தனக்கு மிகுந்த துன்பத்தைச் செய்வானவான். (8) புல்லறிவாளனானவன் தனக்கு உறுதியானவைகளை அறிவுடையோர் சொல்லவுஞ் செய்யமாட்டான். அதுவுமல்லாமல் தானாகவும் இவை செய்யத் தக்கவையென்றறியவுமாட்டான். அவனுயிர் உடம்பைவிட்டுப் போமளவும் பூமிக்குப் பொறுத்தற்கு அரிய ஒரு நோயாகும். மலை முதலானவைகளைச் சுமக்கின்ற பூமிக்கு அவற்றினும் இப்பாவ உடம்பு பெரும்பாரமாதலால் நோயென்று கூறினர். (9) தன்னை எல்லாம் அறிந்தவனாக மதித்தலால் பிறராலொன்றை அறியுந் தன்மையில்லாத புல்லறிவாளனுக்கு ஒன்றை உணர்த்தப் புகுவோன் அவனாலே பழிக்கப்பட்டு, தான் அறியாதவனாவன். இனி, அறியுந் தன்மையில்லாத அப்புல்லறிவாளன் தான கொண்டது விடாமையால் தான் அறிந்த விதத்தால், உணர்த்தப் புகுந்தோன் கூறப்படும் பொருளைத் தெரிந்தவனாவன். (தானறிந்தவிதமாவது: உண்மைக்கு மாறுபாடாகிறது.) (10) உயர்ந்தோர் பலராலும் உண்டென்று சொல்லப்படுகிற பொருளைத் தன் புல்லறிவால் இல்லையென்று சொல்லுவோன் மனிதனேயானாலும், பூமியிற் காணப்படுகிற ஒரு பேயென்று நினைக்கப்படுவான். உயர்ந்தோருண்டென்பது பலவாம். அவை: கடவுள், மறுபிறப்பு, நல்வினை, தீவினை முதலியன.

அகூ-ஆம் அதிகாரம்

இகல்.

இனி, குரோதம்,காமங்களுள் அரசர்க்குக்குரோதம் அதிகமாயுள்ளதாதலால், அதனால் வருமவைகளைச் சொல்லத் தொடங்கி முதலிலே இகல் சொல்லுகின்றார்.

அஃதாவது: இருவர் தம்முள்ளே போர்செய்து வலிமை தோலைந்து ஏதுவாகிய மாறுபாடாம்.

க. மாறுபாட்டினது குற்றம்.

(1) சகல உயிர்களுக்கும் பிறவுயிரோடு கூடாமை யென்னுந் தீயகுணத்தை வளர்க்குங் குற்றமாவது மாறுபாடாமென்று நூலோர் சொல்லுவார்.

உ. மாறுபடாதவருக்கு வரும் நன்மை.

(2) அரசர் தம்மோடு கூடாமையை நினைத்து ஒருவன் வெறுக்கத்தக்க செய்கைகளைச் செய்தானாயினும் அவனோடு விரோதித்தலைக்குறித்துத் துன்பந்தருஞ் செய்கைகளைத் தாம் அவனுக்குச் செய்யாதிருத்தல் உயர்ந்த குணமாம். துன்பந் தருமவைகளைச் செய்தால் பகைமை வளரத் தாம் தாழ்ந்து குறைதலாலும், செய்யாவிடில் அவன் வெறுக்கத் தக்கவைகள் குறைந்துபோகத் தாம் ஓங்கி வருதலாலும் செய்யாதிருத்தல் உயர்ந்த குணமென்றார். (3) ஒருவன் மாறுபாடென்கிற துன்பத்தைச் செய்யும் நோயைத் தன் மனத்திலிருந்து நீக்குவானாகில், அப்படி நீக்குதல் எந்நாளும் அழிவில்லாமைக்கு ஏதுவாகிய கெடாத புகழை அவனுக்குக் கொடுக்கும். (4) மாறுபாடென்கிற துன்பங்கள் பலவினுமிகுந்த துன்பம் ஒருவனுக்கில்லையானால் அவ்வில்லாமை, இன்பங்கள் பலவினுக்கும் மிகுந்த இன்பத்தை அவனுக்குக் கொடுக்கும். (மிகுந்த துன்பம்: யாவருக்கும் எளியவனாயிருப்பது. மிகுந்த இன்பம். எல்லாப் பயனும் பெற்றிருப்பது. (5) மாறுபாடு தம் மனத்துத்தோன்றிய இடத்து அதனை ஏற்றுக்கொள்ளாது சாய்ந்தொழுக வல்லவரை வெல்ல நினைக்கும் தன்மை யுடையவர் யாவர்? (சாய்ந்தொழுகலாவது: உடன்படாதிருத்தல்.)

ங. மாறுபட்டவருக்கு வருந்தீமை.

(6) பிறரோடு விரோதித்தலிலே மேலும் மேலும் எழும்புதல் எனக்கு இனிதென்று அவ் விரோதத்தைச் செய்பவனது உயிர் வாழ்க்கை குற்றப்படுதலும் முழுதுங் கெடுதலுஞ் சமீபகாலத்திலுண்டாகும். (குற்றப்படுதலாவது: வறுமையாலே துன்பப்படுதல். முழுதுங்கெடுதலாவது: மரணமடைதல்.) (7) மாறுபாட்டோடு பொருந்துதலையுடைய துன்பஞ் செய்கிற அறிவை

யுடையவர் வெற்றி பொருந்துதலை யுடைய நீதி நூற்பொருள்களை அறியமாட்டார். எனவே, மாறுபாடு உடையவர்க்கு அறிவு கலங்குமென்பதும் அவர் வெற்றியடைய மாட்டாரென்பதும் ஆயின.

ச. மாறுபட்டவருக்கு வரும் நன்மையும் தீமையும்.

(8) தன்னுள்ளத்து மாறுபாடு தோன்றிய இடத்து அதனைத்தடுத்தல் ஒருவனுக்கு ஆக்கமாம். அம் மாறுபாட்டிலே உடன்படுதலை மேற்கொள்ளுவானாயின, கேடும் தன்னிடத்து வருதலை மேற்கொள்ளும். (மேற்கொள்ளலாவது: நினைத்தல்.) (9) தனனிடத்து ஆக்கம் வரும்போது காரணம் உண்டாயினும் மாறுபாட்டை நினைக்கமாட்டான். தனக்குக் கேடு செய்து கொள்ளுமிடத்துக் காரணமில்லாதிருந்தும் அம் மாறுபாட்டினிடத்தே மிகுதலை நினைப்பான். (அதிகமாக நினைப்பானென்றபடி) எனவே, ஆக்கத்துக்குங் கேட்டுக்கு முன்னே நிகழ்வன மாறுபாடு இன்மையும், மாறுபாடு உண்மையுமாம். (10) விரோதம் ஒன்றினாலே துன்பஞ்செய்பவை யெல்லாம் உண்டாகும். சிநேகம் ஒன்றினாலே நல்ல நீதி யென்னும பெருஞ் செல்வம் உண்டாகும். (துன்பஞ்செய்பவை: வறுமை, பழி, பாவங்கள் முதலானவை.)

அஎ-ஆம்-அதிகாரம்.

பகைமாட்சி.

அஃதாவது:—அறிவில்லாமை முதலிய குற்றங்களுடைமையால் பகையை மாட்சிமைப்படுத்தல். அரசர்க்கு எவ்வழியாலும் பகையில்லாமை கூடாமையால் மேலே பொது வகையால் விலக்கப்பட்ட இகலை இவ்விடத்தே சிறப்புவகையால் விதிக்கின்றார். மாட்சிமைப் படுத்தலாவது: துணைப்படுத்தல்; இதற்குப்பொருள் வெல்லுதற் கேற்ற பகையென்பது.

க. பொது வகையாற் பகைமாட்சி.

(1) சேனையும் பொருளும் முதலாகிய மேற்றுமைத்துணையும், நல்லறிவும் நீதியு முதலாகிய ஒற்றுமைத்துணையும் உடைய வலியவரோடு பகைத்துச்சண்டைசெய்தலை நீங்கவேண்டும். மேற்

கூறிய துணைகளில்லாதவரோடு பகையாகுதலை நீங்காமல் விரும்ப வேண்டும். ஏனென்றால், துணைவலியில்லாதவரோடு பகைத்துப் போர்செய்வார்க்குத் தம் வலிகெடாமல் வெற்றியுண்டாம் ஆதலா லென்க. இப்பகைதான் வெல்லுதற்கேற்ற பகையாம்.

உ. சிறப்பு வகையாற் பகைமாட்சி.

(2) சுற்றத்தார்மேல் அன்பில்லாதவனும் வலியதுணையில் லாதவனும் ஆதலோடு, தானும் வலியில்லாத ஒருவன் தன்மேல் வந்த பகைவனது வலிமையை யெப்படித்தொலைத்து வெல்லுவான்? எனவே, மேற்கூறிய துணைகளோடு சுற்றத்தார் துணையும் வேறு வலிய துணையும் தன்வலிமையும் இல்லாதவனே வெல்லுதற்கேற்ற பகையாமென்பதாயிற்று. (3) பயப்படவேண்டாதவைகளுக் குப் பயப்படுவானும், அறியவேண்டுமவைகளை அறியானும், பிறரோடு பொருந்துதலில்லாதவனும், உலோபகுணம் உடையவ னும் உள்ள ஒருவன் பகைவர்க்கு மிக எளியவனாவான். (4) கோப த்தினின்று நீங்காதவனும் இரகசியத்தை வெளிப்படுத்துபவனு மாகிய ஒருவன்மேலே போருக்குச்செல்லுதல் எந்நாளும் எவ்விட த்தும் யாவருக்கும் இலேசாகும். (5) நீதி நூல்களைக் கல்லாத வனும், அந்நூல்கள் விதித்ததொழில்களைச் செய்யாதவனும், தனக் குவரும் பழியைக்கருதாதவனும், தனமில்லாதவனுமாகிய ஒருவன் பகைமை பகைவருக்கு இன்பமாம். (இன்பமாவது: இவனை வெல் லுதல் எளிதென்றபடி). (6) தன்னையும் பிறரையும் அறியாமை க்கு ஏதுவாகிய கோபத்தையுடையவனும் மேன்மேலும் வளர் கின்றகாமத்தையுடையவனுமாகிய இருவரதுபகையைத் தானே விரும்பிக்கொள்ளவேண்டும். இவ்விருவருள் முன் சொல்லப்பட்ட வனுக்கு யாவரும் பகையாதலாலும் பின் சொல்லப்பட்டவனுக்கு க்காரியந்தோன்றாமையாலும் இவ்விருவருந் தாமே அழிவராதலால் அவரது பகைமை விரும்பிக்கொள்ளத்தக்கதாயிற்று. (7) தொழிலை ஆரம்பித்திருந்து அதற்கேற்காதவைகளைச்செய்பவனது பகையைச் சில பொருளைச் செலவிட்டாவது நிச்சயமாகக் கொள்ளுதல் வேண் டும். (ஏற்காதவையாவன: மெலியவனாயிருந்து துணிதலும் வலிய வனாயிருந்து தணிதலும் போல்வன)

ரு. பகைமாட்சியால் ஆகிய பயன்.

(8) ஒருவன் குணம் ஒன்றுமில்லாதவனாகிக் குற்றம் பலவுமுடையவனாகிய இடத்து அவன் துணையில்லாதவனாவன். அப்படியில்லாதவனாதலே அவன் பகைவருக்குச் சகாயமாதலையுடையது. (பகைவர்க்கெளியவனாவனென்றபடி.) (குணமாவன: இறைமாட்சியுள்ளே சொல்லப்பட்டவை. குற்றமாவன: இவ்வதிகாரத்துள்ளே சொல்லப்பட்டவையும் பிறவும் இப்படிப் பட்டவையுமாம்.) (9) நீதியை அறிதலில்லாத பயப்படுகின்ற பகைவரைப் பெற்றால், அவரை வெல்வார்க்கு உயர்வுள்ள இன்பங்கள் நீங்காவென்பதாம். (10) நீதி நூல்களைக் கல்லாதவனோடு பகைத்தலால் வரும் எளிய பொருளை அடையாதவனை யெந்நாளும் புகழுடையமாட்டாது. எனவே, நீதி நூல்களைக்கல்லாதவனைப் பகைக்கவேண்டுமென்பதும், அதனால் எய்தும் பொருளை அடையவேண்டும் என்பதும் காண்க. (எளியபொருளாவது: முயற்சி சிறிதாகக்கிடைத்த பொருள்.)

அஅ-ஆம் அதிகாரம்.

பகைத்திறந்தெரிதல்.

அஃதாவது:—மாட்சிமைப்படாத பகையை ஆக்குதற்குற்றமும், முன்னேயிருந்த பகையுள் நட்பாக்குந் தன்மையதும், அயலாக்குந் தன்மையதும், அவற்றினிடத்தே செய்வதும், மற்றைக் களையுந்தன்மையதும், அதனிடத்தே செய்வனவும், களையும் பருவமும், களையாமற்போனால் உண்டாகுங்குற்றமும் என இவ்விதங்களை ஆராய்தல்.

க. பொதுவினும் சிறப்பினும் பகை கொள்ளுதற் குற்றம்.

(1) ஒருவன் பகையென்று சொல்லப்படுந் தீமையுண்டாக்குவதனை விளையாட்டிடத்தேயானாலும் விரும்பக்கூடாது. தனக்குத் தீமையை யுண்டாக்கும் பகைதான் மாட்சிமைப்படாதபகையென்பது. (வலிய பகையென்றபடி.) (2) வில்லை ஏராகவுடைய உழவராகிய வீரரோடு பகைத்துக்கொண்டாலும் சொல்லை ஏராக உடைய உழவராகிய மந்திரிகளோடு பகைத்துக் கொள்ளாதிருக்க வேண்டும். ஏனென்றால், வீரர் பகை தனக்கு மட்டுங் கேடு விளைக்

கும். மந்திரிகள்பகை தன்னோடு தன் வமிசத்தார்க்குங் கேடு விளைக்குமாதலாலென்க. கேடு செய்வதில் இரண்டுஞ் சமமாதலால் வீரர் பகையுங்கொள்ளக்கூடாதென்பதே கருத்தாம். (3) சுற்றத்தாரும் சேனை முதலியவையும் இல்லாமல் தனியே யிருந்துகொண்டு பல்லாரோடும் பகைத்துக்கொள்பவன் பித்தங்கொண்டவரைப் பார்க்கினும் அறிவில்லாதவனாவன். ஏனென்றால், துணையுள்ள இடத்தும் பகை வெல்லுதல் சந்தேகமாயிருக்க, அத்துணையில்லாமல பல்லாரோடும் பகைத்து அவரால் வேறு வேறு போர்செய்யிடத்தும் ஒருமுகமாகப் போர்செய்யிடத்தும் அழிந்தே விடுதலாலென்க. இதனால், பித்தருக்கு அறிவில்லாமையுமுணர்க.

௨. நட்பாக்குதற் றன்மை.

(4) பகையை வேண்டியபோது வேறுபடுத்தி, தனக்கு நட்பாகச்செய்துகொண்டு நடக்கும் இயல்பையுடைய அரசனது பெருமையுள்ளே உலகம் இருக்கின்றது. (வேறுபடுத்தலாவது: பகை நிலையினின்று நீக்கல்.) (5) துணையில்லாத ஒருவனுக்கு வருத்தஞ்செய்யும் இரண்டு பகையுண்டானால் அவ்விரண்டனுள் பொருந்தியதாகிய ஒரு பகையை அப்போதைக்கு இனிய துணையாக அவன் செய்துகொள்ளவேண்டும். (பொருந்தியதாவது: மற்றொருபகையை வெல்லுதற்கு ஏற்றது.)

௩. அயலாக்குந் தன்மை.

(6) தான் முன்பு தெளியப்பட்டவனாயினும் தெளியப்படாதவனாயினும் பகைவனைத் தனக்கு ஒரு தாழ்வு வந்த இடத்தில் சேராதவனாகவும் சேர்ந்தவனாகவும் இரண்டுக்கும் நடுவில் விட்டு வைத்திருக்கவேண்டும். தெளியப்பட்டவனைச் சேராதவனாக்குதற்குக்காரணம், உள்ளாய் நின்று கெடுத்து விடுதல். தெளியப்படாதவனைச் சேர்த்தற்குக் காரணம், அத்தாழ்வுவந்த காலத்து உதவி செய்தல்.

௪. நட்பு பகை யென்னும் இருவகை இடத்தும் செய்வது.

(7) நொந்திருக்குஞ் செய்தியைத்தாமாக அறியாத சிநேகிதருக்குத் தன் னோவைச்சொல்லாதிருக்கவேண்டும். எளிமையைப்பகைவரிடத்துக் காட்டிக்கொள்ளாதிருக்கவேண்டும்.

ரு. பகை களையுந் தன்மை.

(8) வலியவனைத் தான் போர்செய்யும் விதமும் மெலியவனைய போது போர்விலக்கும் விதமும் முதலாகிய தொழில் செய்யும் வகையை அறிந்து அத்தொழில் முடிக்கும் பொருள் படை முதலியவைகளை விருத்திசெய்து மறதியடையாமல் தன்னைக் காத்தால் தன் பகைவரிடத்து உண்டாகிய செருவங் கெட்டுவிடும்.

சா. பகை களையும் பருவம்.

(9) களையவேண்டுவதாகிய முள்ளுமரத்தை இளையது (இளம்பருவம்) ஆகிய நிலையிலே களையவேண்டும். அப்படியின்றி வயிரமேறி முதிர்ந்தபோது களையத்தொடங்கினால், களைபவரது கையை அது தானேயறுத்துவிடும். இதனால், பகை வளருமுன ஆரம்பத்திலே அதனைக்கெடுப்பது இலேசாகும். அப்பகைவளர்ந்து பெருகினாற் கெடுக்கமுடியாது. அப் பகை தன்னைக் கெடுத்துவிடுமென்பதாயிற்று.

எ. பகை களையா வழி உண்டாகுங் குற்றம்.

(10) தம்மோடு பகைப்பாரது செருக்கைக் கெடுக்கவேண்டியதாயிருக்க, இஃதென்னசெய்யுமென்று இகழ்ச்சியாற் கெடுக்காத அரசர் பின் அப்பகைவர் மூச்சுவிடுமளவிலே யிறந்துவிடுவார். (விரைவில் அப் பகைவர் வெல்வரென்றபடி.)

அகூ-ஆம் அதிகாரம்.

உட்பகை.

அஃதாவது.—புறப்பகைக்கு இடமாக்கிக் கொடுத்து அது வெல்லுமளவும் உள்ளாயிருக்கும் பகை; இதுவுங் களையப்படுவதிலே சேர்ந்ததாம்.

க. உட்பகை ஆகாது.

(1) ஒருவனுக்கு அனுபவிக்கப் படுவனவாகிய நிழலும் நீரும் முன் இன்பஞ்செய்வனவாயினும் பின் நோய்செய்யும் ஆனால், இனியன அல்லவாம். அதுபோலத் தழுவவேண்டுவன ஆகிய

சுற்றத்தார் இயல்புகளும் முன் இன்பஞ் செய்வன ஆயினும் பின் சமயம் வந்தபோது துன்பஞ் செய்யும் ஆனால், இனியன அல்லவாம். (நோய்: பெருங்கால் பெருவயிறு முதலானவை.) (2) வாள் போல் வெட்டுவோமென்று வெளிப்பட்டுநிற்குஞ் சத்துருக்களுக்கு அஞ்சவேண்டாம். அப்படியன்றி, உறவினர்போல் மறைந்து நிற்கும் பகைவராது சிநேகத்துக்கு அஞ்சவேண்டும். வாள்போலெதிர்ப்படுஞ் சத்துருக்களுக்குத் தப்பலாம். உறவினர் போலும் உட்பகைவருக்குத் தப்பலாகாது. ஆதலால், அவருக்குப் பயப்பட வேண்டாமென்றும் இவருக்குப் பயப்படவேண்டுமென்றுங் கூறினார்.

௨. உட்பகையால் தனக்கு வருந் தீங்கு.

(3) உட்பகையாயினோருக்குப் பயந்து தன்னைக் காத்துக் கொண்டு நடக்கவேண்டும். அப்படி நடவாதபோது தனக்குத் தளர்ச்சி வந்த இடத்துக் குயவன் மட்பாண்டத்தை உடைக்கும் ஆயுதம்போல அவர் தப்பாமல் கெடுத்துவிடுவர். (4) புறம் திருந்தியது போன்று, அகந்திருந்தாத உட்பகை அரசனுக்கு உண்டாமானால், அப் பகை சுற்றத்தார் வசப்படாமைக்கு ஏதுவாகிய குற்றம் பலவற்றையுங் கொடுக்கும். (5) புறத்திலே உறவு முறைத் தன்மையோடுகூடிய உட்பகையானது அரசனுக்கு உண்டானால், அது மரணமடையுந் தன்மையோடு கூடியகுற்றம் பலவற்றையும் அவ்வரசனுக்குக் கொடுக்கும். (உறவு முறைத்தன்மை: சந்தேகித்தற்கு இடமில்லாதிருத்தல்.) (6) பகைமையானது தனக்கு உள்ளாயினாரிடத்து உண்டானால் இறவாதிருத்தலானது கூடுதல் அரசனுக்கு எந்நாளும் இல்லை. (மரணத்தைத் தருமென்றபடி.)

௩. உட்பகை சிறிதென்று இகழப்படாது.

(7) செப்பினது சேர்க்கைபோலப் புறத்தே வேற்றுமை தெரியாமற் கூடினாராயினும், உள்ளிடத்துப் பகையுண்டாகிய குடியிலுள்ளவர் அகத்தே தம்முட் சேரமாட்டார். அவர் உட்பகையால் மனம் வேறுபட்டமையால் புறப்பகை பெற்றவிடத்து வேறு வேறாவரென்பதாம். (செப்பின் சேர்க்கை: செப்பு மேன் மூடியோடு சேர்த்தல்.) (8) முன் வளர்ந்துவந்ததாயினும், உட்பகையுற்ற குடியானது அரத்தினாலே தேய்க்கப்பட்ட இரும்புபோல அவ்வுட்

பகையாலே தேய்க்கப்பட்டுத் தேய்ந்து போகும். (9) அரசனது உட்பகை அவன் பெருமையை நோக்க, எள்ளின் பிளவை யொத்த சிறுமையுடையதே யாயினும், அப்பெருமை யெல்லாம் அழிய வருங்கேடு அவ்வுட்பகையினுள்ளிடத்தே யுண்டாகும். ஆதலால், உட்பகையைச் சிறிதென்று நினைக்கலாகாது.

௰. மன ஒற்றுமை இல்லாதவரை நீக்கவேண்டும்.

(10) மனப்பொருத்தம் இல்லாதவரோடு ஒருவன் கூடி வாழும் வாழ்க்கையானது ஒரு குடிசையினுள்ளே நாகப்பாம்போடு கூடிவாழ்ந்தாற்போலும். இடச்சிறுமையால் தப்பமுடியாமல் அப்பாம்பாற் கடிக்கப்படுதல் நிச்சயமாம்; அதுபோல அவனுயிருக்கு நாசம் வருதல் நிச்சயமென்றறிக. (நாகப்பாம்பு: நல்லபாம்பு.)

௯0-ஆம் அதிகாரம்.

பெரியாரைப் பிழையாமை.

அஃதாவது:—பெரியராயினாரை அவமதித்து நடவாமை. இரட்டுற மொழிதலால் பெரியாரென்பது, வலிமையினாலே பெரியாராகிய வேந்தரையும் தவத்தினாலே பெரியாராகிய முனிவரையுங் குறிக்கும்.

க. பெரியவரிடத்துப் பிழைசெய்யா திருத்தலின் சிறப்பு.

(1) எல்லாக் காரியங்களையும் முடிக்கவல்லவருடைய பெருமை, அறிவு, முயற்சியாகிய வல்லமைகளை அவமதியாதிருத்தலானது, தம்மிடத்துத் தீங்கு வராமற் காப்பவருடைய காவல்களுக்கெல்லாம் முதன்மையான காவலாம். ஏனென்றால், வல்லவருடைய வல்லமையை அவமதித்தால், அவர் அவமதித்தவருடைய சேனை, கோட்டை, பொருள் முதலிய எல்லாவற்றையும் அழித்துவிடுவார் ஆதலாலென்க.

உ. பொதுவகையால் பெரியவரிடத்துப் பிழை செய்தற் குற்றம்.

(2) அரசரானவர் தம்மினும் வலியரான பெரியவரை நன்கு மதியாமல் அவமதித்து நடப்பாராயின், அந்நடக்கையானது

அப் பெரியவரால் எந்நாளும் நீங்காத துன்பங்களை அவருக்குக் கொடுக்கும். (அத் துன்பங்களாவன: இருமையினும் ஓயாமல் வருகிற மூவகைத் துன்பங்கள்.) அவை: தன்னைப்பற்றியும், பிறரைப் பற்றியும், தெய்வத்தைப்பற்றியும் வருவன. இவற்றை முதலாவது அதிகாரம் 4-வது குறளுரையிற் காண்க. (தன்னைப்பற்றி வருதலாவது: சுரம் வயிற்றுவலி முதலியன. பிறரைப்பற்றி வருதலாவது: அன்னியரால அடித்தல், வெட்டுதல் முதலியன. தெய்வத்தைப்பற்றி வருதலாவது: இடி தலைமேல் விழுதல், மரம் ஒடிந்து மேல் விழுதல் முதலியனவாம்)

௩. அரசர்க்குப் பிழை செய்தற் குற்றம்.

(3) வேற்றரசரைக் கொல்ல வேண்டினால், அதை அப்பொழுதே செய்ய வல்ல அரசரிடத்து, பிழையைத் தான் கெட வேண்டுவனாயின் நீதிநூலிற்சொல்லப் பட்டதைக் கேளாமல் ஒருவன் செய்யவேண்டும். இதனால். பெரிய அரசரிடத்துப் பிழைசெய்யலாகாதென்பது நீதிநூல்கள் கூறும் விதியென்பதுணர்க. (4) வினைவலி தன்வலி துணைவலியாகிய மூவகையாற்றலும் உடையவர்க்கு அவ்வாற்றல் இல்லாதவர் துன்பமான காரியங்களை முற்பட்டுச் செய்தல், தானே வருகிறயமனைத் தன்னிடத்து விரைந்து வரும்படி கையைக் காட்டி அழைத்தாற் போலும். எனவே, சீக்கிரம் மரணமடைவரென்பதாம்.

௪. குற்றமுடையவர் அருமையுடைய அரண் சேர்ந்தாலும் உய்யமாட்டார்.

(5) கொடுமையுடைய அரசனால் கோபிக்கப்பட்டஅரசர் அவனுக்குத்தப்பி யெங்கேபோயுயிர்வாழ்வர்? ஓரிடத்தும் உயிர்வாழமாட்டார், ஏனென்றால், வலியஅரசனால் துரத்தப்பட்டவருக்கு ஒருவரும்இடங் கொடுக்க மாட்டார். கொடுத்தாலும், இவர் இனி, தலையெடுக்க மாட்டாரென்பதுகருதி, அவ்வலிய அரசனோடு நட்புறுதற்பொருட்டும் இவரிடம் ஏதாவது பொருளிருந்தால் அதை அபகரித்தற்பொருட்டும் இவரைக்கொல்லுவர் ஆதலாலென்க.

௫. முனிவர்க்குப் பிழைசெய்தலின் குற்றம்.

(6) காட்டினிடத்துச் சென்றவனொருவன் அக்காட்டுத் தீயால் சுடப்பட்டாலும், ஒருவழியால் உயிர்பிழைப்பன். தவத்தாற் பெரியவருக்குத் தீங்குசெய்து நடப்பவர் எவ்வழியாலும் பிழைக்கமாட்டார். எப்படியென்றால், நெருப்பானது முதலில் உடம்பிலே பற்றி அதுவழியாக உயிர் மேலே செல்லும். அதற்கிடையில், ஒருவழியாற் பிழைக்கலாம். அருந்தவர் கோபம் அப்படிப்பட்டதல்லாமல் உடம்பையும் உயிரையும் ஒன்றாகவே,பற்றிப் பிடித்துக கணத்திற் கெடுத்துவிடுமென்று சொல்லுக. இவ்விரண்டையும் இராவணனாற் சுடப்பட்ட அனுமார் உயிர்பிழைத்த சரிதமும், கபில முனிவர் கோபத்தால் சகரர் அறுபதினாயிரம்பேர் இறந்தசரிதமும் புலப்படுத்துதல் காண்க. (7) சாபானுக்கிரகங்களுக்கு ஏதுவாகிய பெருமையால் உயர்ந்த அருந்தவர் அரசனைக் கோபிப்பாரானால், சதுரங்க சேனையால் அழகுபெற்ற அவன் அரசாட்சியும் சம்பாதித்து வைத்த பெரும் பொருளும் என்னபயனடையும்? ஒருகணத்துள்ளேவெந்து நீறாய்விடும். ஆதலால் அருந்தவர்கோபம் உண்டாகாதபடி அரசன் நடக்கவேண்டும். (8) மலையைப் போலும் பெரிய தவமுடையவர் இந்நிலத்து நிலைபெற்றார்போலுள்ள செல்வரை அவர் குடியோடு கெட நினைப்பாரானால், அச்செல்வர் அப்பொழுதே கெடுவார். மலைபோலும்பெரிய தவம்உடையரென்றது,வெயில்மழைகாற்றுமுதலானவைகளைப்பொறுத்து அசையாமல் உயர்ந்து நிற்றலாலென்க. (9)காத்தற்கு அருமையால் உயர்ந்த விரதங்களுடையபெரியவர் தவவலியாற் கோபிப்பாரானால், இந்திரனும் தன் பதவியிழந்து அழிந்து கெட்டுப் போவான். இதற்குச்சாட்சி நகுடன்பிழைசெய்து அகத்திய முனிவர் சாபத்தால் தான்பெற்ற இந்திரபதவியிழந்ததை, திருவிளையாடற் புராணம் இந்திரன் பழிதீர்த்த படலம் 65-ஆம் பாடலிற்காண்க.

௬. முனிவருக்குப் பிழைசெய்தவர் ஒருசார்பு பற்றியிருந்தாலும் உய்யமாட்டார்.

(10) மிகவும் அதிகமான தவத்தையுடையவர் கோபிப்பாரானால், அக்கோபிக்கப் பட்டவர் மிகவும் பெரிய சார்புடையவராயினும், அதனால் பிழைக்கமாட்டார். (சார்பு: அரண் படை பொருள் நட்புஎன்பனவாம்.)இதற்குச்சான்றாகத்திரிபுரத்து அசுரர்கள் சிவபிரான கோபத்தாலழிந்த கதையைப் பலபுராணங்களாலுமுணர்க.

௬௧-ஆம்- அதிகாரம்.

பெண்வழிச்சேறல்.

இனி, காமத்தால் வருபவை, நேரேபகையல்லவாயினும் ஆக்கங்கெடுத்தல், அழிவைத்தருதலென்கிற தொழில்களாலே பகையோடு ஒத்தலால் அவைகளைப் பகைப்பகுதியின் முடிவிலேசொல்லத்தொடங்கி, முதலிலே பெண்வழிச்சேறல் சொல்லுகின்றார்.

அஃதாவது:—தன்வழி நடத்தற்குரிய மனையவள்வழியிலே தானடத்தல்.

௧. மனைவியினது சொல்வழி நடத்தலின்குற்றம்.

(1) இன்பங்காரணமாக, தம்மனையாளை விரும்பி அவள் வழிநடப்பவர் தமக்கு இனியதுணையாகிய தருமத்தை அடையமாட்டார். பொருள்சம்பாதித்தலிலே முயல்பவர் அதற்குவிரோதமென்று இகழப்படும்பொருளும் அவ்வின்பமாம். இல்லறத்தில் மனைவியோடுகூடிச் செய்யும் விருந்தோம்பல் முதலிய தருமத்துக்கு அவள் தம் சொல்வழி நடத்தலானது அவள்சொல்வழிநிற்பார்க்கு இல்லாமையால் அத்தருமத்தை அடையாரென்றார். அத்தருமத்திற்கும், தன் ஆண்மைக்கும் காரணமாகிய பொருள்சம்பாதித்தலுக்கும் செல்லவிடாமையால் அவ்வின்பம் அதற்குவிரோதமெனவுங் கூறினார். (2) தன் ஆண்மையைவிரும்பாமல் மனையாளது பெண்மையாகிய இன்பத்தை விரும்புவோனது செல்வமானது இவ்வுலகத்திலுள்ள ஆண்பாலார்க்கெல்லாம் பெரிய ஒருநாணம் உண்டாக, தனக்கும் நாணத்தைக் கொடுக்கும். (ஆண்மையைவிரும்பாமையாவது: தான்பெற்ற செல்வத்தைப் பிறர்க்குக் கொடுப்பதும், தானநுபவிப்பதுமாகிய சுதந்திரத்தை அவள்சொற்கேட்டு இழந்துநிற்றல்.) இவ்விதம் நிற்றலே ஆண்பாலார்க்கெல்லாம் பெரியநாணத்தை உண்டாக்கியது.

௨. மனைவிக்குப் பயப்படுதலின் குற்றம்.

(3) ஒருவன்மனையாளிடத்துக் காமங்கருதிக் கீழ்ப்படிதற்கு ஏதுவாகியபயமானது அப்பயமில்லாத நல்லவரிடத்துச் செல்லுங்கால் வெட்கப்படுதலை யெந்நாளும்அவனுக்குக் கொடுக்கும். (வெட்கப்படுதலாவது: நல்லவரிடத்துப்போம்போது இவர்நம்மை மனைவிசொற்கேட்பவனென்றிகழ்ந்து நினைப்பாரோவென்றெண்ணி மனங்

குறைதல்.) (4) தன்மனையாளுக்குப் பயந்துநடக்கின்றதனால் மறுமைப்பயனில்லாதவனுக்கு ஒவ்வொருதொழிலையும் மேற்கொண்டு நடத்தும்போதும் நல்லோராலே கொண்டாடப்படும்பெருமையில்லை. ஏனென்றால், புருஷத்தன்மையில்லாதவன் செய்யுந்தொழில் முடியாது ஆதலாலென்க. மறுமைப்பயனில்லாதவனென்றதற்குக் காரணம்இல்லறஞ்செய்தல் கூடாமையேயாம். ஆகவே, அவ்வில்லறமானது மனையாள் தன்சொற்கேட்பவளாயிருக்கப் பட்டவனுக்கே செய்யமுடியு மென்பதாயிற்று. (5) தன்மனைவிக்குப் பயப்படுகின்றவன் தான்தேடியபொருளேயானாலும நல்லோர்களுக்கு அப்பொருள்களாலே நல்லகாரியங்களைச் செய்தற்கு எந்தநாளும்பயப்படுவான். (நல்லோரென்பவர்: அருந்தவர் பெரியோர், தாய்தந்தையர், விருந்தினர் முதலியோராம்.) எந்தநாளும் பயப்படுவானெனவே, தாய்தந்தைகளுக்கு இன்றியமையாமல் செய்யப்படுவனவாகிய சிராத்தங்களும் அந்நாளிற் செய்யக்கூசுவானென்பதாம். (6) பகைத்த வீரரது மலைபோலும் தோள்களை வென்றதும் அல்லாமல், வீரத்தாலே சுவர்க்கமடைந்த தேவர்களைப்போல இவ்வுலகத்தில் வாழ்ந்தாலும், தம்மில்லாளுடைய பச்சை மூங்கில் போலுந் தோள்களுக்குப் பயப்படுகிறவர் ஆண்மையில்லாதவராவர். (ஆண்மை: புருஷார்த்தம்.).

௩. மனைவியின் ஏவல்செய்தலின் குற்றம்.

(7) மனையாளுடைய ஏவற்றொழிலை நாணமில்லாமல் செய்து திரிகின்றவனது ஆண்டன்மையைப் பார்க்கிலும், நாணத்தையுடைய அவள் பெண்டன்மை மேன்மையுடையதாம். ஏனென்றால், தான் ஏவல் செய்யப்படும் புருஷன் தனக்கு ஏவல்செய்கிற சிறப்பாலென்க. (8) தாம் வேண்டியபடியன்றி, தம் மனைவியானவள் வேண்டியபடி ஏவல்செய்து நடப்பவர் தம்மோடு சிநேகஞ் செய்தவரது குறையை நீக்கமாட்டார். அதுவுமல்லாமல், மறுமைக்குத் துணையாகிய தருமத்தையுஞ் செய்யமாட்டார். இதனால், இம்மை மறுமையாகிய இரண்டின் பயனும் இழப்பரென்பதறிக. (9) தருமச்செயலும், அது முடிதற்கு ஏதுவாகிய பொருட்செயலும், அவ்விரண்டின் வேறாகிய இன்பச் செயல்களும் தம்முடைய மனையாள் ஏவலைச் செய்பவரிடத்திலே உண்டாகாவாம்.

ச. மேலே சொல்லிய மூன்றுந் தொகுத்துச் சொல்லுதல்.

(10) தொழில் செய்யும் ஆலோசனையிலே சென்ற மனத்தையும் அதனாலாகிய செல்வத்தையும் உடையவருக்கு மனையாளைச் சேர்தலால் விளையும் அறியாமை எக்காலத்தும் உண்டாகாது. (அறியாமையாவது: மேற்சொல்லிய விரும்புதல், பயப்படுதல், ஏவலென்கிற மூன்றுமாம்.)

கூஉ-ஆ-ம் அதிகாரம்

வரைவின் மகளிர்.

அஃதாவது:—தம் இன்பத்தை விலை கொடுப்பவர் யாவர்க்கும் விற்பதல்லது அவ்வின்பத்துக்கு ஆவார் ஆகாரென்கின்ற வரைவு இல்லாத பெண்களது இயல்பு.

க. பொதுப் பெண்கள் சொல்லுஞ் செயலும் பொய்.

(1) ஒருவனை அன்புபற்றி விரும்பாராகி, பொருளுக்காக விரும்பும வேசையர் அப்பொருள் கைவருமளவும் அன்புபற்றி விரும்பினராகச் சொல்லும் இனிய சொல் முன்னே சுகம்போலத் தோன்றினும் பின்னே அவனுக்குத் துன்பத்தைக் கொடுக்கும். (துன்பத்தைக் கொடுத்தல்: வறுமையுண்டாக்கல்.) (2) ஒருவனுக்கு உள்ள பொருளை அளந்தறிந்து அப்பொருள் கிடைக்கும் அளவும் தமது குணங்களை யெடுத்துப் பேசுஞ் சொல்லினிடத்தன்றி, தம்மிடத்துக் குணமில்லாத வேசையரது நடக்கைவழியை ஆலோசித்தறிந்து பொருந்தாமல் விட்டுவிடல்வேண்டும். (3) கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொது மாதரது பொய்ம்மையுடைய தழுவுதல் (கட்டிச் சேர்தல்) ஆனது கூலியின் பொருட்டுப் பிணமெடுப்பவர் இருட்டு வீட்டில் முன்னறியாத பிணத்தைத் தழுவினாற்போலும்; (அஃதாவது: அகத்திலேயருவருத்துப் புறத்திலே தழுவுதலாம்.) இருட்டு வீட்டிலென்று கூறியது மிகவும் அருவருப்புற்றென்பது விளக்குதற்காம். அஃதெப்படியென்றால், பூசிமுடித்து மணப்படுத்திக்கிடத்தியிருந்தாலும் நேரேமுன்காணப்படாமையால் இப்பிணம் மலசலாதிகளாதிகளால் என்ன ஆபாசமா யிருக்குமோ வென்று நினைப்பு உண்டாதல் பற்றி யென்பதாம். இருட்டு வீட்டில்

முன்னறியாத பிணமென்பதற்கு இன்னுமொருபொருள் கூறலாம். அஃதாவது: ஊராராலே கூலி கொடுத்து எடுத்தெறியப்படும் அநாதிப்பிண மென்பதாம். அதற்கென்ன குறிப்பென்றால், செத்த இடத்தில் ஒரு விளக்கும் இல்லாமலிருப்பதாம்.

உ. பொதுட்பெண்களை உயர்ந்தோர் தொடமாட்டார்.

(4) இன்பமாகிய பொருளையிகழ்ந்து பொருளாகிய பொருளையே விரும்பும் பெண்களது அற்பசுகத்தை அருளோடுகூடிய பொருளை ஆராய்ந்து சம்பாதிக்கும் அறிவினையுடையவர் அநுபவிக்கமாட்டார். எனவே, அருளோடு கூடாமல் அநீதிவழியால் வந்த செல்வமே அவ்வேசையர் வழியில் செலவாமென்பதாயிற்று. (5) இயற்கையாகிய மதிநன்மையால் மாட்சிமைப்பட்ட செயற்கை அறிவினையுடையவர் பொருள் கொடுப்பவர்க்கெல்லாம் பொதுவாகிய ஆசையையுடைய பெண்களது அற்ப சுகத்தை யநுபவிக்கமாட்டார். (இயற்கையாகிய மதிநன்மை: முற்பிறப்பிலே செய்த நல்வினைகளால் மனந்தெளிவுடையதாதல்.) (6) ஆடல்பாடல் அழகென்பவைகளாலே களித்துத்தமது அற்பசுகத்தை விலைகொடுப்பவர்க்கெல்லாம் பரப்பும் வேசையாதுதோளை அறிவொழுக்கங்களாகிய தமது புகழை உலகத்தே பரப்புதற்குரிய உயர்ந்தோர் தொடமாட்டார்.

௩. பொதுப்பெண்களைத் தீண்டுவோர் இழிந்தவர்.

(7) வெவ்வேறு பொருள்களை மனத்தினால் ஆசைப்பட்டு அவை கொடுப்பாரை அவை காரணமாக மெய்யினாலே சேரும் வேசையரது தோள்களை மனத்தை நிலையிலே நிறுத்த வல்லமையில்லாதவர் சேருவர். மெய்யினாற் சேருவரெனவே, மனத்தால் வெறுப்பரென்பதாம். (8) வடிவு செயல் செய்கைகளால் வஞ்சித்தலில் வல்லமையுடைய வேசையர் புணர்ச்சியை அவ்வஞ்சனையை ஆராய்ந்தறியும் அறிவில்லாதவர்க்குக் காமநெறியால் உயிர்வாங்கும்பேயாகிய தெய்வம் பிடித்தலென்று நூலோர் சொல்லுவர். (9) உயர்ந்தோர் இழிந்தோரென்னாது விலைகொடுப்பார் யாவரையும் சேரும் குற்றத்தையுடைய, விலையாலுயர்ந்த ஆபரணங்களை அணிந்த வேசையரது மெல்லிய தோள்கள் அக்குற்றத்தையறியும் அறிவில்லாத கீழ்மக்கள் அழுந்தும் நரகமாம். (10) ஒருவனோடு புறத்

தாற் கூடுதலும், அகத்தாற் கூடாமையுமாகிய இரண்டு மனத்தை யுடைய வேசையரும், கள்ளும், சூதும் இலக்குமியாற் கைவிடப் பட்டவரது சிநேகப்பொருள்களாகும். எனவே, இம்மூன்றும் தரித் திரத்தை யுண்டுபண்ணும பொருள்களென்பதாயிற்று.

கூரு-ஆம். அதிகாரம்.

கள்ளுண்ணாமை.

அஃதாவது;—இனி, ஒழுக்கத்தையும் உணர்வையும் அழித்தலால் பரத்தையரோடு ஒப்பதாகிய கள்ளை உண்ணாமையது சிறப்பு எதிர்மறை முகத்தாலே சொல்லுகின்றார்.

க. கள்ளுண்பவருக்குப் பகைவர் பயப்படமாட்டாரென்பதும் புகழில்லையென்பதும்.

(1) கள்ளின்மேலே ஆசைகொண்டுதிரியும் அரசருக்கு எந்நாளும் பகைவர் பயப்படமாட்டார். அஃதல்லாமல், அவ்வரசர் தம்முன்னோர் பெற்றுநின்ற புகழையும் இழந்து விடுவர்.

உ. புகழ் இழப்பதற்குக் காரணம்

(2) அறிவுடையவர் அவ்வறிவு கெடுதற்கு ஏதுவாகிய கள்ளை உண்ணுதிருக்கவேண்டும். உண்ணவேண்டுமானால், நல்லோ ரால் மதிக்கப்படவேண்டாதவர் உண்ணக்கடவர். (3) என்ன குற்றஞ்செய்தாலும் பொறுத்து மகிழ்ச்சியடையுந் தாய்முன்பா னும் ஒருவன் கள்ளுண்டுகளித்து நிற்றல், அவளுக்குத் துன்பஞ் செய்வதாம். ஆதலால், சிறிது குற்றமும் பொறாதபெரியோர் முன்பு ஒருவன் கள்ளுண்டுகளித்து நிற்றல், அப்பெரியோருக்கு என்னபயனைத்தரும்? (4) யாவரும் இகழும் கள்ளென்று சொல் லப்படுகிற பெரியகுற்றத்தையுடையவரைப் பார்ப்பதற்குப்பயந்து நாணமாகிய நல்லவள் முகத்தில் விழியாமல் புறங்காட்டி ஓடுவள்.

ஙு. கள்ளுண்பவர் அறிவிழத்தலின் குற்றம்.

(5) ஒருவன் விலைப்பொருளைக் கொடுத்துக் கள்ளாலே தனக்கு மெய்ம்மறதியைக் கொள்ளுதல் அவன் பழவினைப்பயனு

கிய அறியாமையுடையதாகும். (அறியாமையாவது: விலைகொடுத்து நல்லதைவாங்காமல் கெட்டதைவாங்குதல்.) (6) உறங்கினவர் செத்தவரோடெண்ணப்படுவரேயன்றி வேறெண்ணப்படார். ஏனென்றால், இருவருக்கும் அறிவில்லாமை காரணம்பற்றியென்க. அதுபோலக் கள்ளைக்குடிப்பவர் எக்காலத்தும் அறிவில்லாமையால் நஞ்சுண்பவரேயாவர். இதனால், கள்ளானது நஞ்சுக்கு ஒப்பென்பதும், நஞ்சைப்போல வெறுக்கத்தக்கதென்பதும் தெளிவாக விளங்குகின்றன.

ச. கள்ளுண்ணுதலை மறைக்கமுடியாது.

(7) ஒருவருக்குந்தெரியாமல் மறைந்திருந்து கள்ளைக்குடித்து அக்களிப்பால் அறிவுசோர்பவர் உள்ளூரில்வாழ்பவரால் உள்ளேநடக்கிற காரியத்தை அறிந்து எந்நாளுஞ் சிரிக்கப்படுவர். (8) இரகசியமாகக் கள்ளைக்குடித்துக்கொண்டு நான் கள்ளுண்டறியேனென்று உண்ணாதபொழுது தமது ஆசாரம் பேசுதலைவிட்டுவிடவேண்டும். ஏனென்றால், கள்ளைப் பின்பு உண்டபொழுதே பிறரறிந்தால் முன்பு அவமானமாமென்று ஒளித்த குற்றமும் முன்னைப் பார்க்கினு மிகுந்து வெளிப்படும் ஆதலாலென்க.

ரு. கள்ளுண்பவனைத் தெளிவித்தல் முடியாது.

(9) கள்ளுண்டுகளித்த ஒருவனை இது ஆகாதென்று காரணங்காட்டித் தெளிவித்தலானது நீருள்ளே முழுகிய ஒருவனை விளக்கினாலே தேடுதலைப்போலும். எப்படியென்றால், விளக்கு நீருட்செல்லாமல் கெடுதல்போலக் காரணம் கட்குடியன் மனத்திற் புகாமல் கெடுமென்க.

கூ. கள்ளுண்பதை நீக்குதற்குக்காரணம்.

(10) கள்ளுண்பவனொருவன் கள்ளை உண்ணாமல் தெளிந்திருந்த பொழுதில் கள்ளுண்டுகளித்த மற்றொருவனைக்காணும்போது தானுண்டபோது உண்டாகும் தன்மயக்கத்தை அவன் மயக்கத்தாலறிந்து, அதுவும் இப்படித்தானே யிருக்குமென்று நினைக்கமாட்டான்போலும். நினைத்தால், கள்ளுண்ணமாட்டானென்பது கருத்து.

௯௪-ஆம்- அதிகாரம்.

சூது.

அஃதாவது:—இனி, அக்கள்ளுண்டல்போல அறம்பொருளின்பங்களுக்குத் தடையாகிய சூதாடலும், பிணியநுபவித்தலும் சொல்லத் தொடங்கி முதலிலே சூதினதியல்பு சொல்லுகின்றார்.

க. சூது தரித்திரத்தை உண்டாக்குதலின் குற்றம்.

(1) *தான் வெல்லும் வலிமையுடையவனானாலும் சூதாடுதலை விரும்பாதிருக்க வேண்டும். வென்றபொருள் கொள்வார் இருக்கின்றாரே யென்றால், அவ்வென்றபொருளும், இரையெனக்கருதி மீனானது உண்ட தூண்டிலிலிருந்த இரும்புக்குச் சமானமாகும்; இதன் கருத்தாவது, அவ் இரும்பு தன்னையுண்ட மீனைக் கெடுத்தல் போல அப்பொருளும் தன்னை அடைந்தாரைக் கெடுத்துவிடுமென்பதாம். (2) அத்தூண்டிலினிரும்பு போன்ற ஒரு பொருளை முன்பெற்று இன்னும்பெறுவோ மென்னும் கருத்தால் நூறுபொருளை யிழந்து வறியராகும் சூதாட்டம் உடையவர்க்கும் அப்பொருளால் அறமும் இன்பமும் பெற்று வாழ்வதொரு வழியுண்டாகமாட்டாது. (3) அரசனானவன் சூதாடுதற்கு உருட்டுங்கவற்றுக்கட்டையிலே தோன்றிய ஆதாயத்தை (தொகையை) இடைவிடாமல் சொல்லிக் கொண்டு சூதாடுவானாயின் அவன்சம்பாதித்த பொருளும் அப்பொருள்வரும் வழியும் அவனை விட்டுப்போய் பகைவரிடத்தே தங்கும். (4) முன்னில்லாத துன்பங்கள் பலவும் தன்னைவிரும்பினவர்க்குச் செய்து புகழையும் கெடுக்கும் சூதுபோல வறுமையைக் கொடுக்க வல்லது வேறொன்றில்லையாம். (5) முற்காலத்திலே எல்லாப் பொருளும் உடையவரா யிருந்தும் இல்லாதவராய்க் கெட்டவர், சூதினையும் அதையாடும்இடத்தினையும் ஆடுதற்கு வேண்டும் கைத்தொழிலையு மேற்கொண்டு கைவிடாத அரசராம். இதற்குச் சாட்சியாகப் பாண்டவரும் நளச்சக்கிரவர்த்தியும் அரசிழந்து காட்டுக்குச் சென்ற கதை உலகப்பிரசித்தம்.*

உ. சூது சிறுமைபலசெய்து, அவைகளால் இருமையுங்கெடுக்கும்.

(6) *தனது பெயர் சொல்ல மங்கலம் அல்லாமையால் சூதென்று வேறு பெயர் சொல்லப்படுகிற மூதேவியால் விழுங்கப்பட்ட*

வர் இம்மையிலே வயிறு நிறைய உண்ணமாட்டார். மறுமையிலே நரகத்துன்பம் அநுபவிப்பர். வயிறு நிறைய உண்ணமாட்டாரென்றது தரித்திரம் அதிக்கப்படுதல் கூறியவாறும். நரகத்துன்பம் அநுபவிப்பாரென்றதனாற் பழிபாவங்களுக்குப் பயப்படாரென்பதாயிற்று. (7) அறம் பொருளின்பங்களுக்கு விதித்தகாலம் சூதாடுமிடத்து அரசனுக்குக் கழியுமானால் அது: நெடுநாளாய்வந்த அவன் செல்வத்தையும் நற்குணங்களையும் கெடுத்துவிடும். (8) சூதாட்டமானது தன்னோடு பழகினவனது பொருளைக்கெடுத்துப் பொய்யை மேற்கொள்ளச்செய்து மனத்திலுண்டாகின்ற அருளைக் கெடுத்து, அவனை இம்மையினும் மறுமையினும் துன்பத்தை அடையச்செய்யும். (9) அரசன் சூதினைத் தனக்கு விளையாட்டுத் தொழிலாக விரும்புவானாயின், புகழும் கல்வியும் செல்வமும் ஊணும் உடையுமென்ற இவ்வைந்தும் அவனைச் சேராவாம்.

௩. சூது விடுதற்கு அருமையும் விட்டவரது பெருமையும்.

(10) சூதாடலால் இருமைப்பயன்களையும் இழக்குந்தோறும் அச்சூதின்மேல் ஆசைவைக்கும் சூதனைபோல உயிரானது உடம்பால் மூவகைத் துன்பங்களை அநுபவிக்குந்தோறும் அவ்வுடம்பின்மேலே வைக்கும் ஆசையுடையது. (மூவகைத் துன்பமாவன: வாத பித்த சிலேற்பனத்தால்வரும் வியாதிகள்.) இதனால், சூதினை வெறுத்துவிடுபவனை யொக்கும் உடம்பினை வெறுத்துவிடும் உயிரென்பது காண்க.

௯௫-ஆம். அதிகாரம்.

மருந்து.

பழவினையாலும் காரணங்களாலும் மனிதர்க்கு வாத பித்த சிலேற்பன நோய்கள் வரும்; அவைகளுள் பழவினையால் வருவன அவ்வினைகழியும்போதல்லாமல் தீராமையால், அவைகளை ஒழித்து, மற்றைக் காரணங்களால்வரும் நோய்களைத் தீர்க்கும் திறமை சொல்லுகின்றார். காரணங்களாவன: உணவு தொழில்களது ஒவ்வாமையாதலால், நோய்களுங் காரணங்களால் வருவனவாயின. (ஒவ்வாமை: வேறுபாடு.)

க. உடம்புகளுக்கு இயல்பாகிய நோய் மூவகையென்பதும் அவை துன்பஞ்செய்தற்குக் காரணம் இருவகையென்பதும்.

(1) உணவும் செயல்களும் ஒருவன் சரீரசுபாவத்துக்கு ஒத்த அளவினவன்றி, அதனின் மிகுமானாலும், குறையுமானாலும் வயித்திய நூலோரால் எண்ணப்பட்ட வாதம் பித்தம் சிலேட்டுமமெனப் படுகின்ற மூன்று வியாதியும் அவனுக்குத் துன்பத்தைச் செய்யும்.

உ. உண்ணப்படுவனவும் அவைகளினளவும் காலமும் பயனும்.

(2) ஒருவன் முன்னுண்ணப்பட்டது சீரணித்த தன்மையை அடையாளங்களாலே தெளிய அறிந்து பின்னே உண்பானாயின், அவனுடம்புக்கு வேறு மருந்தெனஒன்று வேண்டுவதில்லை. (அடையாளங்களாவன: உடம்பு சிறுத்திருத்தல், பார்வை பரிசுத்தமாயிருத்தல், கை கால் முதலிய உறுப்புக்கள் தொழிற்கு உரியனவாதல், பசி மிகுத்தல் முதலியனவாம்.) (3) முன்னுணணப்பட்டது சீரணித்தால் பின்னுண்ணப்படுவதனைச் சீரணிக்கும் அளவறிந்து உண்ணக் கடவன். அப்படியுண்பது பெறுதற்கரிய இம்மனிதவுடம்பினைப் பெற்றவன் நெடுங்காலம் அதனைக்கொண்டு செலுத்தும் வழியாகும். (4) முன்னுண்ணப்பட்டது சீரணித்ததன்மையையறிந்து பின்னே மிகப்பசித்து உண்ணும்போது மாறுகொள்ளாத உணவுகளை உறுதியாகத் தெரிந்துகொண்டு உண்ணக்கடவன். முன்னுண்ணப்பட்டது சீரணித்ததைத் தெரிந்தே பின்னுண்ணவேண்டுமென்பதை வற்புறுத்துதற்காக ஒருதரத்தோடுவிடாமல் பின்னும்இரண்டுதரங்கூறினர். மாறு கொள்ளாத உணவுகளாவன: காலத்துக்கும் சரீரத்துக்கும் ஏற்றவுணவுகளாம். அன்றியும், தேனுநெய்யுஞ் சமமாகக் கலந்தால் நஞ்சாதல் போல, ஒருபதார்த்தத்தோடு மற்றொரு பதார்த்தங்கலந்தால் அக்கலப்பால் விரோதமில்லாத உணவுகளுமாம். (5) மேற்சொல்லிய விதத்தால் விரோதமில்லாத உணவைத் தன்னுள்ளம் வேண்டிய அளவு உண்ணுமல் வியாதியுண்டாகாத விதம் சிறிது குறைத்து ஒருவனுண்டால் அவனுயிருக்குத் துன்பம் உண்டாக மாட்டாது.

ரு. மேற்கூறியபடி உண்ணாத இடத்து உண்டாகுங் குற்றம்.

(6) மேலே சொல்லப்பட்ட குறைதலை நன்றென்றறிந்து அவ்வாறே உண்பவனிடத்து இன்பமிருப்பதுபோல மிகவும் அதிகமாக இரையை (உணவை) விழுங்குவோனிடத்து நோயானது நீங்காதிருக்கும். (குறைதலாவது: உண்ணலாம் அளவிற் சிறிது குறைய உண்ணல்.) அளவுக்குமிஞ்சிக் கண்டமட்டுஞ் சாப்பிடுபவனை மிருகமென்பதற்கு அடையாளமாக அவனுணவை இரை யென்று கூறினார். மிருகத்தினுணவுக்குத்தான் இரையென்றுபெயர். (7) தன் சரீர சுபாவமும், அதற்கேற்ற உணவும், காலமும் ஆராயாதவனாகி வேண்டிய உணவை வேண்டிய காலத்து வயிற்றுத் தீயளவல்லாமல் ஒருவன் மிகவும் உண்ணுவானானால், நோயானது அளவில்லாமல் அவனிடத்தே வளரும்.

ச. மேற்சோன்ன குற்றம் வந்தஇடத்துத் தீர்க்கும் வழி.

(8) வயித்தியன் நோயாளியிடத்து நிகழ்கின்ற நோயை அதன் குறிகளால் இன்னதென்று துணிந்து பின்பு அந்நோய் வருவதற்குக்காரணத்தை ஆராய்ந்து பின் அது தீர்க்கும் உபாயத்தினை ஆராய்ந்து அதனைக் குற்றப்படாமல் செய்யவேண்டும். (காரணம்: உணவு செயலென முன் சொல்லப்பட்டவை. குற்றம்: பழைய வயித்தியர் செய்யு முறையிலே தவறுதல்.) (9) வயித்திய சாத்திரங்கற்ற பண்டிதன் அவ்வுபாயத்தைச் செய்யுங்கால் நோயாளி அளவையும் அவனிடத்தே நிகழ்கின்ற நோயின் அளவையும் தான் செய்தற்கேற்ற காலத்தினையும் அச்சாத்திர வழியால் பார்த்து அவைகளோடு பொருந்தச் செய்யக்கடவன். (நோயாளியின் அளவாவன: சரீர சுபாவம், வயது, வேதனைகளினளவு, தீர்க்கத்தக்கது, தீர்க்கத்தகாதது முதலானவைகளாம்.)

ரு. வியாதி அடைந்தவன் தீர்த்தற்கு வேண்டுங் கருவிகள்.

(10) பிணிக்கு மருந்தாவது: அப்பிணியை அடைந்தவன், அப்பிணியைத் தீர்க்குமருத்துவன், அம்மருத்துவனுக்குச் சாதனமாகிய மருந்து, அம்மருந்தைத் தப்பாமற் செய்பவன் என்று சொல்லப்பட்ட நான்கு பகுப்புடைய நான்கு திறத்ததாம். (திறம்: வகை.) இவற்றுள், பிணியை அடைந்தவன் வகை நான்காவன: பொருளுடைமை, வயித்தியன் சொல்வழி நிற்றல், வியாதி நிலையைச் சொல்

ஊதல், மருந்துத் துன்பம் பொறுத்தலாம். மருத்துவன் வகைநான்காவன: நோயைப் பார்ப்பதற்குப் பயப்படாமை, வயித்திய நூலறிவுடைமை, பலகாலும் வியாதி தீர்த்து வருதல், மனம் வாக்குக் காயம் பரிசுத்தமாதலாம். மருந்தின் வகை நான்காவன: பல பிணிகளுக்கும் பொருத்தமாகிய சுவையாதல், தாது விருத்தி முதலியவைகளா லுயர்தல், எளிதிலே கிடைத்தல், சரீரசுபாவத்தோடு பொருந்தலாம். மருந்து செய்பவன் வகை நான்காவன: நோயாளியிடத்தே அன்புடைமை, மன முதலிய பரிசுத்தமாதல், சொல்லியபடியே செய்யும் வல்லமை, அறிவுடைமையாம். இவை எல்லாம் கூடினலன்றி வியாதி தீராமையால் இப்பதினறு கூட்டத்தையும் மருந்தென்றார்.

அங்க இயல் முற்றிற்று.

ஒழிபியல்.

இனி, அவ்வரசியல் முதலானவைகளிலே அடங்காதொழிந்தவைகளினியல்பைப் பதின்மூன்றதிகாரத்தினலே சொல்லத் தொடங்கி முதலிலே குடிமை சொல்கின்றார்.

சுசு-ஆம் அதிகாரம்.

குடிமை.

அஃதாவது:—உயர்ந்த குடியினிடத்துப் பிறந்தவரது தன்மை.

க. குடிப்பிறந்தாரது இயல்பு.

(1) கருத்தும் சொல்லும் செயலும் தம்முள் மாறுபடாத செம்மைக் குணமும், நாணமும் ஒன்றுசேர உயர்ந்த குடியிற் பிறந்தவரிடத்தே யிருக்குமன்றிப் பிறரிடத்தே சுபாவமாக உண்டாகாவாம். எனவே, ஒருவர் கற்பித்தாலுண்டாகுமென்றதாயிற்று. ஆனலும் அவை நில்லாவாம். (2) உயர்ந்த குடியிலே பிறந்தவர் தமக்குரிய நன்னடைக்கையும் சத்தியமும் நாணமுமாகிய இம்மூன்றினிடத்தும் தவறமாட்டார். (3) எக்காலத்தும் வேறுபடாத குடியிற்

பிறந்தவருக்கு வறியவர் சென்ற இடத்து முகமலர்ச்சியும் உள்ள வை கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலும் இகழாமையுமாகிய இந்நான்கும் உரியவையாகு மென்று நூலோர் சொல்லுவர்.

உ. குடிப்பிறந்தவர் வறுமை வந்த இடத்தும் வேறுபடமாட்டார்.

(4) அநேகமாக அடுக்கிய கோடி அளவினதாகிய பொருளைப் பெற்றாலும் உயர்ந்த குடியிலே பிறந்தவர் தமதொழுக்கங் குறையுந் தொழில்களைச் செய்யமாட்டார். (5) பழமை தொட்டு வருகிற குடியிலே பிறந்தவர் தாம் கொடுக்கும் பொருள் முன்னிருந்த அளவில் குறைந்த இடத்தும், தமது குணத்தினின்றுங் குறைபடமாட்டார். (பழமைதொட்டு வருதலாவது: நீண்டகாலமாக மேம்பட்டு வருதலாம்.) (6) வசையற்று வருகின்ற நம்முடைய குடிப்பிறப்புக்கு ஒத்து வாழ்வோமென்று, நினைத்து, அப்படியே வாழ்வோர் வறுமை வந்த காலத்தும் வஞ்சனையைப் பொருந்திப் பொருத்தமில்லாத தொழில்களைச் செய்யமாட்டார்.

௩. குடிப்பிறந்தவர் வேறுபட்டவழி உண்டாகுங் குற்றம்.

(7) உயர்ந்த குடியிற் பிறந்தாரிடத்து உண்டாகிற குற்றமானது தான் சிறியதேயானாலும் ஆகாயத்தில் சந்திரனிடத்துக் களங்கம் போல உயர்ந்து தோன்றும். (8) நலநலமுடையவனாய் வருகின்றவனிடத்தே அன்பில்லாமையுண்டாமானால் உலகமானது அம்மனிதனை அக்குலப் பிறப்பினிடத்தே சந்தேகப்படும். (சந்தேகப்படுதலாவது: வேறுகலப்பாற் பிறந்தவனோவென்பது.)

௪. குடித்தன்மைக்கு வேண்டும் பொருள்கள்.

(9) நிலத்தினியல்பை அதனிடத்தே முளைத்த முளையானது காண்பிக்கும். அதுபோல நல்ல குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல்லானது அவர் குலத்தினியல்பைக் காண்பிக்கும். நிலத்தினியல்பறிதற்குப் பல காரணமிருக்கினும் முளைமாத்திரஞ் சொன்னபடியால் குலத்தியல்பறிதற்குப் பல காரணமிருக்கினும் சொல்லொன்றே போதுமென்பதாம். (10) ஒருவன் தனக்கு நலமுடைமை வேண்டுவானாயின், நாணமுடைமை வேண்டும். குலமுடைமை வேண்டுவானாயின், வணங்கத்தக்க யாவரிடத்தும் வணங்குதலே வேண்டற்பாலன.

கூஎ ஆம்-அதிகாரம்.

மானம்.

இனி, குடிப்பிறந்தவர்க்கு உரிய குணங்கள் சொல்லத்தொடங்கி, முதலில் மானஞ்சொல்லுகின்றார்.

அஃதாவது:—எந்நாளும் தன்னிலையிலே தாழாமையும் ஊழால் தாழ்வு வந்த இடத்து உயிர் வாழாமையுமாம். இஃது: அக்குடிப்பிறப்பை அழியாமல் நிலைநிறுத்துவது.

க. தாம் தாழ்தற்குக் காரணமானவைகளைச் செய்யாமையின் சிறப்பு.

(1) ஒருவன் இவை செய்யாத இடத்து மரணம் வருமென்னுஞ் சிறப்புடையனவானாலும், தன் குடிப்பிறப்பானது தாழ்வடையவருஞ்செயல்களை விட்டுவிடவேண்டும். தான் இறக்கவருமிடத்து, இழிவான தொழில்களைச் செய்தாயினும் பிழைக்கலாமென்னும் வடநூலின் முறையைமறுத்து உடம்பினது நிலையில்லாமையும் மானத்தினது நிலையுடைமையும் ஆராய்ந்து அவ்விழிதொழில்களைச் செய்யலாகாதென்றறிக. (2) புகழுடனே மானத்தை நிலை நிறுத்த விரும்புவோர் புகழ்சம்பாதிக்குமிடத்தும் தங்குடிக்கு ஒவ்வாத செயல்களைச்செய்யமாட்டாராம். புகழ்சம்பாதிக்கும் இடத்தென்றதனால் புகழைப்பார்க்கினும் மானம் பெரிதென்பதாயிற்று. (3) குடிப்பிறந்தவருக்கு நிறைந்தசெல்வம் உண்டான இடத்து யாவரிடத்தும் பணிவு வேண்டும். குறைந்தவறுமையுண்டானவிடத்துப் பணியாதிருத்தல்வேண்டும். ஏனென்றால், குடிப்பிறந்தவருக்குச் செல்வமிருக்கும்போது அச்செல்வம் உயர்ச்சியைத் தருதலினாலே பணிதலால் இகழ்ச்சியில்லை. வறுமையுடைய போது அவ்வறுமை இகழ்ச்சியைத் தருதலினாலே பணிதலானுயர்ச்சியில்லை. ஆதலாலென்க.

உ. தாம் தாழ்தற்குக் காரணமானவைகளைச் செய்தலின் குற்றம்.

(4) உயர்குடியிற் பிறந்தமனிதர் தம்முயர்ந்த நிலையிலிருந்து தாழ்ந்தஇடத்துத் தலையிலிருந்து வீழ்ந்தமயிருக்குச் சமானமாவர். (5) குடிப்பிறப்பால் மலைபோலுயர்ந்தவரும் பழிக்கப்படுந் தாழ்தற்கேதுவாகிய செயல்களை ஒரு குன்றிமணியளவு (சிறிது)

ஆயினுஞ் செய்வாரானால் தாழ்மையடைவார். (6) தம்மை அவமதிப்பார் பின்னே ஒருவன் மானத்தை விட்டுச் சென்று நிற்கின்ற நிலையானது இவ்வுலகத்தில் புகழையுண்டாக்காது. தெய்வலோகத்திலே செலுத்த மாட்டாது. இவ்விரண்டுமில்லாமல் செய்வது யாது?

ங. மானத்தின் பொருட்டாகிய மரணத்தின் சிறப்பு.

(7) தன்னையிகழ்வார்பின்னேபோய்ப் பொருள்பெற்று ஒருவன் அதனால் உயிர்வாழ்தலைப்பார்க்கினும், பழையநிலையிலே நின்று இறந்தானென்று சொல்லப்படுதல் அவனுக்கு நல்லதாம். (8) உயர்குடிப்பிறப்பின் வலிமையாகிய மானங்கெடவந்த இடத்து இறந்துபோகாமல் பிரயோசனம் இல்லாதவுடம்பைக் காப்பாற்றும் வாழ்க்கையானது பின்னும் இறவாதிருப்பதற்கு மருந்தாகுமோ? எப்படியாவது இறந்துபோகும் உடலைப்பார்க்கினும் இறவாத மானமே உயர்வுடையதென்பது இதனாலறிக. (9) தன்மயிர்க் கூட்டங்களில் ஒருமயிர் நீங்கினாலும், தன்மானம் நீங்குதலால், உயிர்வாழாத கவரிமானை யொப்பாவார் மானம் நிலைநிற்பதாகவந்தால் அதற்காக உயிரை விட்டுவிடுவர். இதனால், உயிரினுமானஞ் சிறந்ததென்பது பெறப்பட்டது. (10) தமக்கு ஒரு அவமானம் வந்த இடத்துப்பொறுத்துக்கொள்ளாமல் இறக்கின், மானமுடையவரது புகழ்வடிவை உலகத்தார் எந்நாளும் தொழுது துதிசெய்வர்.

கூக-ஆம்-அதிகாரம்.

பெருமை.

அஃதாவது:—செய்தற்கரிய செயல், செருக்கில்லாமை, பிறர் குற்றஞ் சொல்லாமை முதலிய நற்குணங்களாலே பெரியவராயினோரது தன்மையாம். நிலையிலிருந்து மேலும் மேலும் உயர்த்துவதாகிய இக் குணங்களுண்டாவது நிலையிலிருந்து தாழாமையுள்ள இடத்தேயாம்.

க. பெருமையின் சிறப்பு.

(1) ஒருவனுக்குப் புகழாவது: பிறராலே செய்தற்கு அரியவைகளைச் செய்வோமென்று நினைக்கிற ஊக்கமிகுதியாம். ஒருவனுக்கு இகழாவது: அவ்வூக்கமிகுதியாகிய செயலை யொழிந்து உயிர்

வாழக்கடவோமென்று நினைத்தலாம். (செய்தற்கரியவை: அளவிறந்த உபகாரம், ஈகை முதலியவைகள். ஊக்கம்: மன எழுச்சி.)

௨. குடிப்பிறப்பு மாத்திரத்தாலும் செல்வமாத்திரத்தாலும் பெருமையுண்டாக மாட்டாது.

(2) எல்லா மனிதருயிர்க்கும் வினைவசத்தால் பஞ்ச பூத காரியமாகிய உடம்பைப் பொருந்தி நின்று, அதன் பயனநுபவித்தலாகிய பிறப்பியல்பு ஒத்திருக்குமானாலும், பெருமை சிறுமைக்கு ஏதுவென்னப்பட்ட தொழிற்பிரிவுகளாகிய சிறப்பியல்கள் உடம்புதோறும் வேறுபடுவதால் ஒவ்வாவாம். (3) செய்தற்கு அரியவைகளைச் செய்யமாட்டாமல் சிறியராயினோர் உயர்ந்த ஆசனங்களிலே யிருந்தாலும் பெரியராகார். செய்தற்கு அரியவைகளைச் செய்து பெரியராயினோர் தாழ்ந்த வெறு நிலத்திலிருந்தாராயினும் சிறியராகமாட்டார். இதனாலே செல்வமாத்திரத்தாலும் குடிப்பிறப்பு மாத்திரத்தாலும் பெருமையுண்டாகாதென்பது காண்க.

௩. பெருமையுண்டாகும் வழி.

(4) பிளவுபடாத மனத்தையுடைய கற்புள்ள மாதரைப்போலத் தன்னைத்தானே ஒருவன் நிறையின் வழுவாமல் காத்து நடக்க வல்லவனாயின், பெருமைக்குணமும் அவனிடத் துண்டாகும். (நிறை:மனமொழி மெய்களை யடக்கி உபகார முதலானவைசெய்தல்.)

௪. பெருமையுடையார் செய்தி.

(5) மேற்கூறியவைகளாலே பெருமையுடையவராயினோர் தாம் வறியராகிய வழியும் பிறராலே செய்தற்கு அருமையுடையவையாகிய தம் செயல்களை அவை செய்யும் வழியால் முடிவு பெறச் செய்ய வல்லவராவர்.

௫. பெருமையில்லார் செய்தி.

(6) அப்படிப்பட்ட பெரியாரை வழிபட்டு அவ ரியல்பைக் கொள்ளுவோமென்னுங் கருத்துச் சிறியராயினோர் மனத்து உண்டாகாதாம். (7) தனக்குத்தகும் பெரியோரிடத்து அடங்கியிருத்தலைச் செய்வதாகிய சிறப்பும் தனக்குத்தகாத சிறியவரிடத்து உண்டாகுமானால், அடங்கியிருத்தலை விட்டுச் செருக்கினிடத்தே மிகுந்த

செயலையுடையதாகும். (கனைகுக் தரும பெரியோர்: தனக்குச் சமமாகும பெரியவர். தனக்குத்தகாத சிறியோர்: தனக்குச் சமமாகாத சிறியவர். சிறப்பு: குடிமை செலவம கல்விகளினு லாகியமிகுதி.)

௫. மேற்கூறிய இருவர்செயல்களும்.

(8) பெருமையுடையவர் சிறப்பு உண்டாகிய நாளிலும் அடங்கி நடப்பர். சிறுமையுடையவர் அச்சிறப்பில்லாத நாளிலும் தம்மை மெச்சிப் புகழ்ந்து பேசிக்கொண்டு திரிவர். (9) பெருமைக் குணமாவது: காரணம உண்டாகிய இடத்தும அஃதியல்பென்றெண்ணிச் செருக்கில்லாதிருத்தலாம. சிறுமைக்குணமாவது: காரணமில்லாத இடத்தும் அஃதிருப்பதுபோலப் பாவித்துக்கொண்டு செருக்கின முடிவிலே நின்று விடுதலாம. (10) பெருமையுடையவர் பிறர் மானத்தைநீயெசொல்லி அவமானத்தை மறைத்து விடுபர். சிறுமையுடையவர் பிறர்குணத்தை மறைத்துக்குற்றத்தையே சொல்லிவிடுவர். (மாண்பு: பெருமை)

௯௯-ஆம் அதிகாரம்.

சான்றாண்மை.

அஃதாவது— பலகுணங்களாலும் நிறைந்து அவைகளை ஆளுந் தன்மை. இது, பெருமையுளடங்காத பலகுணங்களையும் தொகுத்துக் கொண்டு நிற்பதாம்.

க. பொதுவகையால் *சால்புக்கு ஏற்றகுணங்கள்.

(1) நமக்கு இது தகுவதென்றறிந்து பலகுணங்களாலும் நிறைந்து அக்குணங்களை ஆளுந்தன்மையை மேற்கொண்டு நடப்பவருக்கு நல்லகுணங்களெல்லாம இயல்பாயிருக்குமென்று நூலோர் சொல்லுவர். (2) கல்வி கேள்விகளாலுயர்ந்தோர் நலமாவது குணங்களாகிய நலமே. அது நீங்கலான உறுப்புக்களாலாகிய நலம் எந்த நலத்தினும் உள்ளதன்று. குணங்களாலாகிய நலந்தான் அகநலமென்பது. உறுப்புக்களாலாகிய நலமே புறநலமென்பது. இந்நலம், குடிப்

---

* சால்பு - உயர்ச்சி.

பிறப்பும், கல்வியும் முதலாக நூலோரெடுத்த நலங்களுள் அடங்காமை யால் எந்த நலத்தினும் உள்ளதன்றென்று கூறினர். ஆதலால், இந் நலம் உயர்ந்தோர்க்கு நலமல்லவென்பது கண்டுகொள்க. (உறுப்புக்க ளாவன: கண் கால் முதலியவைகளாம்.)

உ. சிறப்புவகையால் சால்புக்கு ஏற்றகுணங்கள்.

(3) சுற்றத்தாரிடத்தல்லாமல் அன்னியரிடத்தும் உண்டாகிய அன்பும், பழிபாவங்களுக்கு நாணுதலும், யாவரிடத்தும் உபகாரஞ்செய்தலும், பழமையானவரிடத்துத் தாட்சண்யப்படுதலும், எவ்விடத்தும் மெய்ம்மைசொல்லுதலுமாகிய ஐந்துகுணங்களும் சால்பென்னும் பாரத்தைத்தாங்கிய தூண்களாகும். (4) தவமாவது: பிற அறங்களும் வேண்டுமோனாலும், ஒரு உயிரையுங்கொல்லாத அறத்தினிடத்திலுள்ளதாம். அதுபோலச் சால்பாவது: பிறகுணங்களும் வேண்டுமானாலும், பிறர்தீமையைச் சொல்லாத குணத்தினிடத்திலுள்ளதாம். ஆகலால், தவத்திற்குக் கொல்லாமைக்குணம் சிறந்தாற்போல, சால்பிற்குப் பிறர் குற்றத்தைச் சொல்லாமைக்குணம் சிறந்ததென்பதாம். (5) ஒரு கருமத்தைச் செய்துமுடிப்பவரது வலிமையாவது: அதற்குத் துணையாவாரைத்தாழ்ந்து தேடிக்கொள்ளுதலாம். அப்படித் தேடிக்கொண்டால், அது: சால்புடையவர் தம் பகைவரைக்கெடுக்கும் ஆயுதமாகும். (6) குணமாகிய பொன்னினளவறிதற்கு உரைகல்லாகிய செயல் யாதென்றால், தம்மினுயர்ந்தவரிடத்துக் கொள்ளுந் தோல்வியை இழிந்தவரிடத்துங் கொள்ளுதல்; அஃதாவது: வெல்லும் வலிமையுடையவராயிருந்தும் இழிந்தவரைத் தமக்குச் சமமாக்கிக் கொள்ளாமல் அவருக்குத் தோல்வியடைந்து தாம் உயர்தல். (7) சால்புடையவர் தமக்குத் துன்பம் தருமவைகளைச் செய்தவர்க்கும், இன்பந்தருமவைகளையே செய்யாவிட்டால் சான்றாண்மை வேறே என்ன பயனுடையதாகும்?

௩. பல குணங்களாலும் நிறைந்தவரது சிறப்பு.

(8) குணமென்று சொல்லப்படும் வலிமை தன்னிடத்து உண்டாகப் பெற்றால், ஒருவனுக்கு வறுமையால்வருவது இகழ்வாக மாட்டாதாம். எனவே, தரித்திர நிலையினுஞ் சான்றாண்மையுடையவர் மேன்மை அடைவாரென்பதாயிற்று. (9) குணமுடையமை

யாகிய கடலுக்குக் கரையென்று சொல்லப்படுவோர், மற்றைக் கடலுங்கரையுள் நில்லாமல் காலம் வேறுபட்டாலும், தாம் வேறுபட மாட்டார். ஒரே நிலையினில் நிற்பாரென்றபடி. (10) பலகுணங்களாலும் நிறைந்தவர் தமது தன்மை குறைவாராகில், பெரிய பூமியுந் தன் பாரத்தைத் தாங்கமாட்டாததாய் முடியும். இதனால், குணங்களால் நிறைந்தவர் தன்மை குறையாமையும் பூமி தன் பாரத்தைத் தாங்குதலும் இயற்கையாதலால், இவ்விரண்டும் மாறுபடா என்பதாயிற்று.

கοο-ஆம் அதிகாரம்.

பண்புடைமை.

அஃதாவது:—பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறிந்து நடத்தலுடையாராதல்.

க. எல்லாரியல்புகளும் அறிந்து ஒத்துநடப்பதற்குக் காரணம்

(1) எவரிடத்தும் எளியசமயத்தவராயிருந்தால் பண்புடைமை யென்னப்படுகிற அரிதாகிய நல்வழியடைதல் எளிதென்று நூலோர் சொல்லுவர். (எளியசமயமாவது: தடைமைப்பார்க்க வந்தவர் சிரமப்படாமற் பார்ப்பதற்கு இடங்கொடுத்தல்; அஃது: உலகத்தை யெல்லாம் வசியமாக்குவதாம். (2) பிறர்மேல் அன்புடையனாதலும் உயர்ந்த குடியிற் பிறத்தலுமாகிய இவ்விரண்டும் ஒருவனுக்கும் பண்புடைமை யென்று உலகத்தார் சொல்லும் நல்வழியாம்

உ. ஒத்து நடக்குங் குணமுடையாரது உயர்ச்சி.

(3) உயிரின் வேறாகி நிலைபெறாத உடம்பினாலே மனிதர் உயர்ந்தோரோடு சமானமாகமாட்டார். உயிரின வேறாகாமல் நிலைபெறுதலுடைய பண்பினாலே சமானமாவர். (4) நீதியையும் அறத்தையும் விரும்பிய தமக்கும் பிறர்க்கும் பயன்படுதலுடையவரது பண்பை உலகத்தார் மகிழ்ந்து கொண்டாடுவர். (5) தன்னைப் பிறரிகழ்தல் ஒருவனுக்கு விளையாட்டினிடத்துந் துன்பந்தருவதாம். ஆதலால், பிறரின்பமறிந்து நடப்பவரிடத்துப் பகையாளரிடத்தும் அவ்விகழ்தலுண்டாகாமல் இனிமையாகிய பண்புகளே

உண்டாவனவாம். (6) நற்குணம் உடையவரிடத்தே உலகியலுண்டாதலால், அது எந்நாளும் உளதாய் வருகின்றது. அவரிடத்தில்லையானால், அவ்வுலகியல் பூமியினுட் புகுந்து இறந்து போவதாகும். (உலகியல்: உயர்ந்தோர் நடை.)

ங. ஒத்துநடக்கும் குணமில்லாதவரது இழிபு.

(7) நன்மக்களுக்கே உரிய நற்குணமில்லாதவர் அரத்தைப்போலுங்கூர்மையுடையவரேயாயினும், ஓரறிவினதாகிய மரத்தை ஒப்பாவர். எனவே, நற்குணமில்லாதபோது அரம்போலும் கூர்மை தீயவழியிலேசெல்லுமென்பதாம். (8) நட்பினைத் தம்மோடு செய்யாதவராகிப் பகைமையைச் செய்யுந்தீயவர்க்கும் தாம் பண்புடையவராய் நடக்தல்வேண்டும். அப்படிநடவாமை அறிவுடையோர்க்குக் குற்றமாம். (குற்றமாதல்: அத்தீயவரோடொப்பாதல்.) (9) குணமில்லாமையால் ஒருவரோடுகலந்து மனமகிழமாட்டாதவருக்கு மிகவும் பெரிய பூமியானது இருளினிடத்தே கிடந்ததாகும். எனவே, இருளினிடத்துக்கிடந்த உலகத்தில் ஒருபொருளும் அறியப்படாததுபோல எல்லாரிடத்துங் கலந்துபேசாதவருக்கு உலகியல் அறியப் படாதென்பதாயிற்று. (10) குணமில்லாதவன முன்னை நலவினையினாலே அடைந்த செல்வமானது குணமில்லாத குற்றத்தால் ஒருவருக்கும் பயன்படாது கெடுதல் நல்லபசுவின்பால் தானடைந்த பாத்திரதோஷத்தினாலே கெட்டாற்போலுமாம்.

கOக-ஆம். அதிகாரம்.

நன்றியில்செல்வம்.

அஃதாவது:—சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தினியல்பு.

க. நன்றியில்லாத செல்வம் சம்பாதித்தவனுக்குப் பயன்படாது.

(1) தன் மனையிடமெல்லாம் நிறைதற்கு ஏதுவாகிய பெரியபொருளைச் சம்பாதித்துவைதது அப்பொருளை உலோபத்தால் அநுபவியாதவன் உயிரோடிருந்தானாயினும் செத்தவனாவன். ஏனெ

ன்றால், அப்பொருளைச்செலவுசெய்தற்கு ஆதஞ்சுதந்திரம் செத்தவனுக்குப்போலத் தனக்கும இல்லாமையாலெனக.

௨. நன்றியில்லாத செல்வம பிறர்க்குப் பயன்படாது.

(2) பொருளொன்றினால் எல்லாம் உண்டாகுமென்று அதனைச்சம்பாதித்து, அப்பால் பிறருக்குக்கொடாது உலோபத்தனஞ் செய்யுமயக்கத்தினாலே ஒருவனுக்கு மாட்சிமையில்லாத பேய்ப்பிறப்பு உண்டாகும. பேய்ப்பிறப்பென்றது: தானுமநுபவியாது பிறருக்குங் கொடாது பொன்னைக்காத்துக்கொண்டிருத்தல் பற்றியெனக. இதனை, "பொன்காத்த பூதமபோ" லென்ற பழமொழியாலுங்காண்க. (3) மற்றவர்களைப்பார்க்கினும் தாம் அதிகமாகச் சம்பாதிப்போமெனறு பொருள்சம்பாதித்தல் மாத்திரமே விரும்பி அதன் பயனாகிய புகழை விரும்பாத மனிதரது பிறப்பு, பூமிகதுப் பாரமாமன்றி, வேறில்லையாம. (புகழ்: இருமைக்கும் உறுதியாகிய தருமம்; அதனைச்சமபாதிப்பதே பிறப்பின பயனும்.) (4) யாதொரு பொருளையும தருமவழியிலே கொடுத்தறியாமையால் ஒருவராலும் இச்சிககப்படாதவன் தானிறந்த இடத்து இங்கே மிச்சமாக இருக்கின்றதென்று எந்தப்பொருளை நினைப்பானோ? எனவே, மிச்சமாக இருககிறபொருள் புகழேயாதலால் அப்புகழை முன்னே செய்துவையாமையால், வேறேயிருக்கிறபொருள் ஒன்றுமில்லையெனபதாயிற்று.

௩. நன்றியில்லாதசெல்வம் தனக்கும்பிறர்க்கும் பயன்படாது.

(5) பிறருக்குக்கொடுப்பதும தானநுபவிப்பதுமாகிய இரண்டு செய்கையும் இல்லாத உலோபருககுப்பலவாக அடுககியகோடித்திரவியம் இருந்தாலும் ஒன்றுமில்லை. யாதொன்றுமில்லாதவர்போல மேற்சொல்லிய இரண்டையுடனுட இழத்தலால் கோடியிருந்தும் ஒன்றுமில்லையெனறார். (6) தானநுபவியாதவனாகி அதன்மேலுந்தானம் வாங்குதற்கு ஏற்ற தகுதியுடையவர்க்கு அவர்வேண்டிய ஒருபொருளைக் கொடுக்குந்தன்மையில்லாதவன் அவ்விரண்டுஞ்செய்தற்கு இடையந்தசெல்வத்திற்கு ஒருவியாதியாவான். இதனால், நல்லது செய்தற்கு உபயோகமாகிய செல்வம், அதுசெய்யாமையால் சீரழிந்து விடுமென்பதாம்.

௪. நன்றியில்லாத அச்செல்வத்தின் குற்றம்.

(7) ஒருபொருளும் இல்லாதவருக்கு அவர்வேண்டிய ஒன்றைக் கொடாதவனது செல்வம் வீணாகக் கழிதலானது பெண்களுக்குள் உயர்ந்த அழகையும் குணத்தையும் பெற்ற குமரியொருத்தி கொடுப்பாரில்லாமையாலே கணவனில்லாமல் தனியளாயிருந்து கிழவியானாற்போலும். (8) வறியவருக்குச் சமீபம் உடையவனாயிருந்தும், ஒன்றுங் கொடாமையால் அவ்வறியவரால் இச்சிக்கப்படாத உலோபன் செல்வம்பெறுதல் ஊர்நடுவிலுள்ள எட்டிமரம் பழுத்தாற்போலுமாம். (எட்டிமரம்: நஞ்சுமரம்.) எனவே, உலோபன் செல்வம் நஞ்சுக்குச் சமானமென்பதாயிற்று. (9) ஒருவன் கொடாதிருத்தற்பொருட்டுச் சுற்றத்தாரிடத்தும் நட்பினரிடத்தும் அன்புசெய்வதனை ஒழித்து, வேண்டுவனவற்றை அநுபவியாமல் தன்னையும் வருத்தப்படுத்தி, வறியவர்க்குக் கொடுத்தலாகிய அறத்தை நினையாமல் சம்பாதித்த ஒள்ளிய பொருளைக்கொண்டுபோய்ப் பயனநுபவிப்பார் அன்னியர். (அன்னியராவார்: தாயாதிக்காரர்கள், திருடர், கொடுங்கோலரசர் முதலியவர்களாம்.) அன்னியரென்றதனால், உலோபன் பொருள் அவன் சந்ததியாருக்கும் உதவாதென்பதாயிற்று. (10) புகழுடையதாகிய செல்வத்தினை உடையவருக்குச் சிறியதரித்திரம் ஒருகால் வந்து நிற்பது, உலகத்தையெல்லாம் நிலைநிறுத்துகிற மேகம் சிலகாலம் பெய்யாது நிற்கின்றதோரியல்பினையுடையதாம். அங்ஙனம் பெய்யாது நின்றாலும், பின்பு பெய்து வாழ்விப்பதுபோலச் சிறிய தரித்திரம் பின்பு நீங்கிப் பெருஞ்செல்வர் ஆவராம்.

௧0௨-ஆம் அதிகாரம்.

நாணுடைமை.

அஃதாவது:—முன்புசொல்லப்பட்ட சால்பு பண்பு முதலியகுணங்களால் உயர்ந்தோர் தமக்குத் தகாத கருமங்களிலே நாணுதலுடையாரது தன்மை.

௧. நாணினது இலக்கணம்.

(1) நன் மக்களது நாணுவது: இழிந்ததொழில் காரணமாக நாணுதலாம். அஃதல்லாமல், மனம் வாக்கு காயங்களது ஒடுக்கத்தால் வருகிற நாணங்கள் அழகிய நெற்றியுடைய குலப்பெண்களது நாணங்களாம்.

௨. நாணின் சிறப்பு.

(2) உண்டியும் ஆடையும் உறக்கமும் காமமும் பயமும் மனிதருயிர்க்கெல்லாம் பொதுவாகும். நன்மக்களாகிய உயர்ந்தோர்க்குச் சிறப்பாவது நாணமுடைமையாம். ஆகவே, இந்நாணம் உயர்ந்தோரிடத்தன்றி, எல்லாமனிதரிடத்தும் இராதென்றறிக. (3) உயிர்களெல்லாம் உடம்பைத் தனக்கிருப்பிடமாகக்கொண்டு அவ்வுடம்பை விடமாட்டாவாம். அதுபோல, நற்குணங்களினிறைவானது நாணென்கிற நற்குணத்தைத் தனக்கிருப்பிடமாகக்கொண்டு அதனை விடமாட்டாது. (4) பெரியோர்க்கு நாணமுடைமை ஆபரணமல்லவோ? அவ்வாபரணம் இல்லையாகுல், அவர் பெருமிதநடையானது பார்த்தவர்க்கு நோயாம். எப்படியென்னில், நாணமில்லாதவரது இறுமாப்பைக் காண்பவர் சகித்தற்கு முடியாமையாலென்க.

௩. நாணுடையவரது சிறப்பு.

(5) பிறருக்குவரும் நிந்தையையுந் தமக்குவரும் நிந்தையையுஞ் சமமாக மதித்து நாணுவாரை நாணத்திற்கு இருப்பிடமென்று உலகத்தார் சொல்லுவர்.

௪. நாணுடையவர் செயல்.

(6) உயர்ந்தவர் தமக்குக் காப்பாக நாணத்தைக் கொள்வதல்லாமல், பரப்பான பூமியைக் கொள்ளவிரும்பார். பழிபாபங்கள் அடையாமற்காக்கவல்லதாதலால் நாணத்தைக்காவலென்றார். இதனுல்,நாணமும் பூமியுஞ் சமமாக்கி, இவ்விரண்டில் எதுவேண்டுமென்றால்,பழிபாவங்கள் புகும வழியாகியபூமியை உயர்ந்தோர் கொள்ளாரெனக்காண்க. (7) நாணத்தை அதனது சிறப்பறிந்துவிடாது கைப்பற்றுபவர் அந்நாணும் உயிரும் நிற்கமாட்டாத இடத்து,நாண்கெடாமை காரணமாக உயிரைநீக்குவர். உயிர்கெடாமை காரணமாக நாணை நீக்கமாட்டார். ஆகலால், நாண் உயிரினுஞ் சிறந்ததென்பதாம்.

௫. நாணில்லாதவரது இழிவு.

(8) கேட்டவரும் கண்டவரும் நாணத்தக்கபழியை ஒருவன் தான் நாணாது செய்வானாயின், அவன் செய்கையானது, கருமம் அவனை விட்டு நீங்கத்தக்க குற்றமுடைய காரணம். (9) ஒழுக்கம் ஒருவனுக்குத் தவறுமானால், அத்தவறு அவன் குடிப்பிறப்பு ஒன்றைமட்டுங் கெடுக்கும். நாணில்லாமை ஒருவனிடத்து நின்றால் அந்நிலை அவனுடைய நலமுழுமையுங் கெடுக்கும். (நலமாவது: பிறப்பு கல்வி குணம் செயல் இனம் முதலானவைகளாம்.) (10) தம்மனத்தில் நாணம் இல்லாத மனிதர் உயிருடையவர்போலச் சஞ்சரிக்கின்ற சஞ்சரிப்பானது, மரத்தால் செய்யப்பட்டபாவை எந்திரக்கயிற்றினாலாகிய சஞ்சரிப்பால் உயிருடையதாக மயக்கியதுபோலும்.

௧௦௩-ஆம் அதிகாரம்.

குடிசெயல்வகை.

அஃதாவது:—ஒருவன்தான் பிறந்தகுடியை உயரச்செய்தலின் விதம்.

௧. குடிசெய்தற்குக் காரணம்.

(1) ஒருவன் தன் குடியுயர்தற்பொருட்டுத் தொடங்கிய கருமமுடியாமையால், அக்கருமமுடியும் வரையும் இளைக்கமாட்டேனென்கிறமுயற்சிப் பெருமைபோல், மேலாகிய பெருமை அவனுக்கு வேறொன்றில்லை. இதனால், பலவகைத் தொழில்செய்தலினாலே ஊதியம் உண்டாகக் குடி உயருமென்பதாம். (2) முயற்சியும் நிறைந்த அறிவும் என்று சொல்லப்பட்ட இரண்டினையுமுடைய ஒப்பில்லாத கருமச்செயலால், ஒருவனது குடி உயரும். (நிறைதல்: இயற்கையறிவுஞ் செயற்கையறிவும் நிரம்புதல். அறிவாவது: உயர்தற்கு ஏற்றசெயல்களும் அவை முடிக்கும் விதமும் ஆராய்ந்து பிழைபடாமலெண்ணுதலாம்.)

௨. குடிசெய்தற்கு ஊழ்துணையாவது:

(3) என் குடியினை உயரச்செய்யக்கடவேனென்று அதற்கு ஏற்ற தொழிலின் முயற்சி செய்கிற ஒருவனுக்குத் தெய்வமானது உடையைநெகிழாது இறுகவுடுத்திக்கொண்டு தான் முன்னேவந்து

நிற்கும். இது, 'முயற்சி திருவினையாக்கும்' என்பதை வற்புறுத்துகிறது காண்க. (4) தமகுடிக்கு ஆதந்தொழில் விரைந்த முயற்சி செய்பவருக்கு அதந்தொழில் முடிக்கும விதம ஆலோசிக்கவேண்டாமல் தானே முடிவுபெறும். எனவே, ஊழ்முடிக்குமெனபதாயிற்று.

௩. குடிசெயல் செய்வாரடையும் சிறப்பு

(5) குற்றமானவைகளைச் செய்யாதவனாகித் தன்குடியை உயரச்செய்து வாழ்பவனை அவனுக்குச் சுற்றமாகவேண்டி உலகத்தார் தாமேசென்று சூழ்வர். (குற்றமானவை: தருமநீதிகளுக்கு விரோதமான செயல்கள்.) சென்று சூழ்தல், பயன்பெறும பொருட்டென்க. (6) ஒருவனுக்கு நல்ல ஆண்மையென்று உயர்த்திச் சொல்லப்படுவது, தான் பிறந்தகுடியை ஆளுந்தற்றன்மையைத் தனக்கு உண்டாக்கிக்கொள்ளுதலாம். (குடியைஆளுந்தற்றன்மையாவது: தன் குடியிலுள்ளவரை உயரச்செய்து தன வழிநடக்கச்செய்தல்.) (7) யுத்தகளத்துச் சென்றவர் பலரானாலும் போர்தாங்குதல் சுத்தவீரர்மேலதாதல்போல, குடியினிடத்துப் பிறந்தவர் பலரானாலும் அதன் பாரம பொறுத்தல் வலிமையுடையவர்மேலதேயாகும். இதனால், நன்கு மதிக்கப்படுவார் குடும்பபாரம் தாங்குவரே யெனபதாம்.

௪. குடி உயரச்செய்வார் குடிசெயல்வகை செய்யுமியல்பு.

(8) குடி உயரச்செய்தலை நோக்காது வெயில் மழை பனியுடைமையை நோக்கி, பின்னே செய்வோமென்று சோம்பலாயிருந்துகொண்டு, இக்குடியிலுள்ளாரெல்லாரும் சுகமடைய நான் மட்டும் இக்காலத்துத்துன்பமுற்று இக்காரியஞ் செய்வேனோவென்று நினைப்பாராகில் அக்குடிகெடும். ஆதலால், தன் குடும்பத்தை உயரச்செய்வார்க்கு இன்னகாலமென்பது இல்லையாம். (9) தன் குடும்பத்தை நட்பு பகை அயலென்னு மூன்றால்வரும் மூன்றுவித துன்பங்களும் அடையாமல் காக்க முயல்வானது சரீரம் முயற்சித் துன்பம் இருத்தற்கு இருப்பிடமாம். அவ்வளவு தானோ? இன்பத்திற்கிருப்பிடமாகுகவில்லையோ? எனறால, அதற்கும் இருப்பிடமாதல்உண்டு. எவ்வாறெனில், தன் குடிமுழுதும் உயரவே, தான் இருமைப்பயனும்

எய்துதலாமென்க. எனவே, இம்மை மறுமைப்பயன் கருதுவோன் தன் மெய்வருத்தம் பாராது தன் குடும்பத்தை உயரச்செய்வதற்கு விடாமுயற்சி செய்வானென்பதாயிற்று.

ரு. குடிசெயல்வகை செய்வாரில்லாத குடிக்கு உண்டாகுங் குற்றம்.

(10) தான் வீழும்போது முட்டுக்கொடுத்துத தாங்கவல்ல நல்ல ஆண்மகன் பிறவாத குடியாகியமரம் துன்பமாகிய கோடா ரியானது, அம்மரத்தினுடைய அடியை வெட்டிச்சாய்க்கக் கீழே விழும். அடியென்றது: அக்குடி வழிக்கு உரியவரை.

க௦ச-ஆம் அதிகாரம்.

உழவு.

அஃதாவது:—வணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கும் உரித் தாகிய உழுதற்றொழிலாம். வணிகர் வேளாளராகிய வைசியரில் ஒரு பிரி வார்.

க. உழவினது சிறப்பு.

(1) உலகத்தார் உழுதலால் வரும் மெய்வருத்தம் நோக்கி வேறு தொழில்களைச் செய்து திரிந்தும் முடிவிலே ஏருடையார் வழி யினராவர். ஆதலால், எல்லா வருத்த மடைந்தும், தலைமையாகிய தொழில் உழுதலேயாம். வேறு தொழில்களாலே எவ்வளவு திரவி யம் பெற்றாலும் உணவின் பொருட்டு உழுவாரிடத்துச் செல்லவேண் டுதலால், அவ்வுணவுப் பொருளுக்கு ஏதுவாகிய உழவே தலைமை யாகிய தொழிலென்று சொல்லப் பட்டது.

உ. உழவு செய்வாரது சிறப்பு.

(2) உழவு தொழில் வல்லவர் அத்தொழிலைச் செய்யமாட் டாமல் வேறு தொழில்களின்மேற் செல்லப்பட்டயாவரையும் தாங் குதலால் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவார். (உலகத்தா ரென்றது: அவ்வுழவர் நீங்கலாகிய மற்றவரை.) கலங்காமல் நிலை நிறுத்துதலால், உழவர் அச்சாணிக்கு ஒப்பாயினர். (3) எல்லாரும் உண்ணும்படி உழுதலைச் செய்து அதனால் தாமும் உண்டு வாழ்கின்

றவரே தமக்குச் சுதந்திரராய் வாழ்கின்றவராவர். மற்றவரெல்லாரும் பிறரைத் தொழுது தாம் உண்டு அவருக்குப் பின் சென்று நடப்பவராவர். (4) உழுதற்றொழிலால் நெல்லையுடைய ராகிய தண்ணளியுடையோர் பல வேந்தர் குடைநிழலிலுள்ளதாகிய பூமி முழுவதையுந் தம்முடைய வேந்தர் குடை நிழலுக்குக் கீழே பார்ப்பர். இதனால், உழவர் தம் அரசனுக்கு வெற்றியை உண்டாக்குதற்கு ஆதாரமா யிருக்கின்றாரென்பதாம். (5) தம்முடைய கையால் உழுதல் செய்து உண்ணுதலை யியல்பாக உடையவர் பிறரிடத்திற்போய், யாசிக்கமாட்டார். தம்மிடத்தில் வந்து யாசிப்பவருக்கு அவர் வேண்டிய ஒரு பொருளை ஒளிக்காமல் கொடுப்பாராவர். (6) உழவு தொழிலுடையவரது கையானது அத்தொழிலைச் செய்யாது மடங்குமானால் யாவரும் விரும்பும் உணவையுந் துறந்தோமென்று சொல்லுந் துறவிகட்கு அத்துறவறத்திலே நிற்றலும் இல்லையாம். உழவால் வரும் உணவுப் பொருள் கொண்டு, இல்லறத்தார் துறவிகள் பசியை மாற்றுதல் உழவுதொழிலில்லா இடத்து இல்லையாதலால், அத்துறவிகளது துறவு நிலை யில்லையென்று கூறினார்.

ங. உழவு செய்யும் விதம்.

(7) ஒரு நிலத்தினை உழுதவன் ஒரு பலப் புழுதி காற்பலமாம்படி அப்புழுதியைக் காயச் செய்வானாயின், அதனிடத்துச் செய்த பயிர் ஒருகைப் பிடிக்குள் அடங்கிய எருவும் இட வேண்டாமல் பருத்து விளையும். (8) அப்பயிருக்கு உழுதலைப்பார்க்கினும், எருப் போடுதல் நல்லதாகும்; இவ்விரண்டும் செய்து களை பிடுங்கிய பின் அப்பயிரைப் பட்டிமாடு முதலானவைகளால் அழியவிடாமல் காப்பது நீர்பாய்ச்சலினும் நன்றாகும். எனவே, உழுதல், எருப்போடுதல், களைபிடுங்கல், நீர் பாய்ச்சல், காத்தலாகிய ஐந்தும் வேண்டுமென்பதாம். (பட்டி மாடு: காவலற்றமாடு.) (9) அந்நிலத்துக்கு உரியவன் அதனிடத்துத் தினந்தோறும் போய்ப் பார்த்து வேண்டியவை செய்யானாகிச் சோம்பலுடையவனாயிருந்தால், அந்நிலம், மனைவியைப் போலத் தன்னுள் வெறுப்புற்று அவனோடு பிணங்கி விடும். மனைவி பிணங்கினால், கணவன் போகம் இழத்தல் போல நிலம் பிணங்கினால், அந்நிலமுடையவன் பலனை யிழந்துவிடுவானென்பது உவமான முகத்தாற் கண்டு மகாமக.

௪. உழவு செய்யாத இடத்து உண்டாகுங் குற்றம்.

(10) தரித்திரம் உடையோமென்று செய்யவேண்டிய உழுதல் முதலிய வேலைகளைச்செய்யாது சோம்பி யிருப்பவரைக் கண்டால், நிலமகளென்று உயர்த்திச் சொல்லப் படுகிற நல்லாள் தனனுள்ளே சிரிப்பள். (சிரித்தலாவது:சிறிது பொருள் செலவிட்டுப் பெரிது பயன் கொள்ளும் அறிவில்லாளென்றிகழ்தல்.)

௧௦௫-ஆம் அதிகாரம்

* நல்குரவு.

அஃதாவது:—அநுபவிக்கப்படும் எல்லாப் பொருளும் இல்லாமை.

௧. தரித்திரத்தின் கொடுமை.

(1) ஒருவனுக்குத் தரித்திரம் போலத் துன்பஞ் செய்வது எதுவென்று கேட்டால், அத்தரித்திரமே யன்றி வேறில்லை. சமானமாகத் துன்பஞ் செய்வதே யில்லை யென்றால், அதிகமாகத் துன்பஞ் செய்வது இல்லை யென்பது சொல்லாமலே விளங்கும். (2) வறுமை யென்னப்படும் ஒப்பற்ற பாவியானவன் ஒருவனிடத்து வரும்போது மறுமை யின்பமும் இம்மையின்பமும் அவனுக்கு இல்லாமற் போகும். மறுமை யின்பமாவது: கொடுத்துப் புகழ் பெறுதல். இம்மையின்பமாவது தானநுபவித்தல்.) (3) வறுமை யென்று சொல்லப்படுகிற ஆசையானது தன்னாலே பீடிக்கப் பட்டவருடைய பழைய குடிப் பிறப்பின் வரவாகிய பெருமையையும், அதற்கேற்ற புகழ்ச்சொல்லையும் ஒருமிக்கக்கெடுத்துவிடும் ஆசையில்லாவிட்டால், வறுமையு மில்லை. ஆகலால், வறுமையை ஆசை யென்றார். பெருமையையும் புகழ்ச்சொல்லையும் கெடுக்கும் எனவே, அக்குடியிலுள்ள பழமையானவருக்கு இல்லாத இழிதொழில்களையும் அவமானச்சொற்களையும் உண்டாக்கு மென்பதாயிற்று. (4) வறுமையானது பிறரிடத்துப் போய் நின்று எமக்குக்கொடுமென்று யாசிக்கும் அவமானச் சொல்லுண்டாதற்கு ஏதுவாகிய சோர்வினை உயர்ந்த குடிப்பிறந்தவரிடத்திலும் உண்டாக்கும். (சோர்வாவது: தாம்படுகிற துன்

* நல்குரவு - தரித்திரம்.

பத்துக்காக அவ்வவமானச் சொல்லைச் சொல்ல நினைத்தல்.) (5) அவ்வறுமையென்று சொல்லப்படும் துன்பம் ஒன்றினுள்ளே பலவாகிய துன்பங்களும் வந்து விருத்தியாகும. (பல துன்பங்களாவன: செல்வர் வீடு நோக்கிப் போதற்றுன்பமும், அவரைக் காணுதற் றுன்பமும், கண்டபின் அவர் ஒன்றுங் கொடாதபோது உண்டாந் துன்பமும், கொடுத்தால் கொடுக்கப்பட்டதை வாங்கதற்றுன்பமும், அது கொண்டு வந்து அநுபவிப்பவைகளைச் சேர்க்குந் துன்பமும் முதலாகிய துன்பங்களாம்.

உ. தரித்திரப் பட்டவருக்கு உண்டாகுங் குற்றம்.

(6) உண்மை நூற்பொருளைச் சந்தேகம் அறத் தெளிய அறிந்து சொன்னாராயினும், வறுமைப் பட்டவரது சொல்லானது பயனில்லாததாக முடியும். (அஃதாவது: இவர் வார்த்தையை நம்பி விரும்பிக் கேட்டோமானால், தாட்சண்ணியம் உண்டாகி யிவருக்கு ஏதாவது கொடுக்க வேண்டியது வந்தாலும வருமென்று பயந்து யாவரும் கேளாதிருத்தலாம்.) (7) தருமத்தோடு பொருந்த வில்லாத வறுமை யுடையவன் தன்னைப்பெற்ற தாயினாலும் அன்னியன் போல நினைத்துப் பார்க்கப் படுவான். எந்த விதத்தாலும் வெறுப்பில்லாத தாயும் இவ்விதம வெறுத்துக் கைவிடுவாளானால் கொடுத்தாலொன்றும கொடாவிட்டா லொன்றும் பேசுகிற சுற்றத்தார் முதலியவர் வெறுப்பாரென்பது சொல்லவும் வேண்டுமோ? தருமத்தோடு பொருந்தாத வறுமையென்றது: தீயவழியிற்பொருளைச் செலவிட்டதனால் வந்த துன்பத்தை. (8) நேற்றுங் கொலைசெய்ததுபோன்று எனக்குத் துன்பங்களைச் செய்த வறுமையானது இன்றைக்கும் என்னிடத்தில் வரக்கடவதோ? வந்தால் யாதுசெய்வேன். (இது: நேற்றும்பவும வருந்தப்பட்டுக் கிடைத்ததைக்கொண்டு வயிறுநிரப்பிய ஒருவன் வாக்கியமாம்.) (9) தீயிற்கிடந்து நித்திரைசெய்தலும், மந்திரமருந்துகளால் ஒருவனுக்குமுடியும். தரித்திரம் வந்த இடத்து யாதொன்றாலும் நித்திரைசெய்ய முடியாது. எனவே, தீயினுங்கொடியது அத்தரித்திரமென்பது கண்டுகொள்க.

௰. தரித்திரம் அளவுக்கு மிஞ்சிய இடத்துச் செய்யவேண்டுவது.

(10) அநுபவிக்கப்படும் பொருளில்லாதவர் தம்மாலே நிலையாமை நோக்கித் துறக்கப்படும் பொருள்களெல்லாம் தாமே தம்மைத் துறந்திருக்கவும் தாம் முழுவதுந் துறவாமலிருத்தல் அயலார் வீட்டு உப்பிற்கும் புளித்ததண்ணீருக்கும் யமனாம். (துறக்கப்படும் பொருள்களாவன: பெண்டு பிள்ளை சுற்றத்தார் முதலியவர். முழுவதுந் துறவாதிருத்தலாவது: தரித்திர மிகுதியால் சுற்றத்தாரால் தாமே துறக்கப்பட்டவர் எஞ்சி நின்ற தம் உடம்பின்பற்றினையும் ஒழியாதிருத்தல். இஃதன்றி, புறப்பற்றுத் தானே நீங்கியிருந்தும் அகப்பற்று நீங்காதிருத்தலுமாம். இதனால் நிலைநிற்பதாகிய மானத்தையிழந்து அயலார் வீட்டிற்போய் உப்பும் புளித்ததண்ணீரும் யாசித்து உண்டு, நிலையில்லாத உடம்பைவளர்த்துக் கொண்டிருப்பதினும் அவ்வுடம்பின் பற்றொழித்தலே செய்யத்தக்கதென்று சொல்லியபடி காண்க.

௧௦௬-ஆம். அதிகாரம்.

* இரவு.

இனி, மானங்கெடாத யாசித்தல், யாசியாமையோடு ஒத்தலால், அந்த யாசித்தலாலும் மோக்ஷம் அடைவதற்கு உதவியாகிய உடம்பைக் காக்கலாமென்கிற தருமநூல் வழக்குப்பற்றி, முன்முழுதும் துறத்தலென்றதை விலக்குதற்பொருட்டு, யாசித்தல சொல்லுகின்றார்.

௧. வறுமையால் உயிர் நீங்கும் அளவில் அவமானமில்லாத இரவு விலக்கப்படமாட்டாது.

(1) வறுமைப்பட்டவர் யாசித்தற்கு ஏற்புடையவரைக் கண்ட இடத்தே யாசிக்கக்கடவர். அவர் யாசிப்பவரைக்கண்டு ஒளித்தாரானால் அவருக்குப் பழியுண்டாகும். யாசிப்பவருக்குப் பழியாகமாட்டாது. (யாசித்தற்கு ஏற்புடையராவார்: கேட்குமுன்னே குறிப்பறிந்து மாறாமல் கொடுப்பவர்.) கண்ட இடத்தே

---

* இரவு - யாசித்தல்.

யென்றதனால் கொடுப்பவரைக்காண்பதரிதாம். ஏனென்றால், உலகத்தில் பெரும்பாலார் உலோபராயிருத்தலாலென்க. (2) யாசித்தபொருள்கள் கொடுப்பாரது அறிவுடைமையால் யாசித்தவன் துன்பமுறாமல் கிடைக்குமாயின், அவனுக்கு யாசித்தலும் இன்பத்துக்கு ஏதுவாகும். (துன்பமாவன: ஈவாரிடத்துக் காலமும் இடமும் அறிந்துசெல்லுதலும், அவர் குறிப்பறிதலும், அவரைத்தன்வசப்படுத்தலும், அவர்மனம் இரங்கத்தக்கவை நாடிப்பேசுதலும் முதலானவைகளால் வருவனவும், அவரில்லையென்ற இடத்துவருவனவுமாம். இத்துன்பங்களுறாமற்கிடைத்தலாவது: கொடுப்பவர், முன்னே குறிப்பறிந்து கொடுக்கக்கொள்ளுதல்.)

உ. யாசிக்கத்தக்கவர் இயல்பு.

(3) யாசிப்பவரைக்கண்டு ஒளித்தலில்லாத நெஞ்சினையுடையவராய் யாசிப்பவர் மானத்தையறிபவர்க்குமுன்னே நின்று அவரிடத்தில் ஒன்றையாசித்தலும் யாசிப்பவருக்கு ஓரழகுடையதாம். (மானமறிதலாவது: கேட்கத்தொடங்கிக் கேட்கமாட்டாமல் தம்முன்னிற்றற்கு ஏதுவாகிய அதனியல்பை யறிதலாம்.) அவ்வறிதலுடையவர்க்கு முன்னே யாசகர் நின்றாலும் போதும். குறிப்பறிந்து கொடுப்பர். ஆதலால், கேட்டலாகிய இழிவில்லையாம். அவ்விழிவில்லாமைதான் ஓரழகென்பது. (4) சொப்பனத்திலும் தமக்குள்ளது மறைத்தலையறியாதவரிடத்து யாசித்தலும் வறியவர்க்குக் கொடுத்தலேபோலும். எப்படியென்றால், யாசித்தலாகிய தான் புகழ்கொடாதாயினும், முன்னுண்டாகிய புகழ் கெடவாராமையாலென்க. அஃதாவது: குறிப்பறிந்து கொடுப்பாரிடம் யாசிக்கும் சிறுமை பலரறிந்து பழிக்கப்படாமை. (5) வாயினாற்சொல்லமாட்டாமல் முன்னே நின்றமாத்திரத்தால் யாசகர் தம உயிர்காத்தற் பொருட்டு யாசித்தலைமேற்கொள்வது, அவர்க்குத் தம்மிடத்தில் உள்ளதை ஒளியாமற் கொடுக்கின்றவர் இவ்வுலகத்திலிருக்கின்ற படியினாலேதான் வேறொன்றாலில்லை. (6) உள்ளதை ஒளித்தலாகிய நோயிலலாதவரைக்கண்டால் மானங்கெடாமல் யாசிப்பவருக்கு வறுமையால் வருந்துன்பங்களெல்லாம் ஒருமிக்கக்கெட்டுவிடும். இதனாலே, கொடையாளிகள் உள்ளதை ஒளி

க்க மாட்டார்களென்பதும் ஒருகால் ஒளிப்பாரானால், அவ்வொளிப்பு நோய்போலத் துன்பந்தருமென்பதும் விளங்குதல் காண்க. (7) தம்மை அவமதித்து இழிவுசொல்லாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால் யாசிப்பவரது மனம் மகிழ்ச்சியடைந்து உள்ளிடத்தே மலருந்தன்மையுடையதாம். (உள்ளிடத்தே மலருந்தன்மையாவது: ஐம்புலன்களாலும் பேரின்பமடைந்தவராகத் தம்மை நினைத்துக்கொள்ளுதல்.)

௩. உலகிற்கு யாசிப்பார் வேண்டும்.

(8) வறுமையால் யாசிப்பவரில்லையானால் குளிர்ந்த இடமுடைய இப்பூமியிலுள்ளவரது போககுவரவுகள் உயிரிலலாத மரப்பாவைகள் எந்திரக்கயிற்றால் போதல் வருதலை ஒப்பாகும். உயிரிருநதும் கொடுத்துப் புகழுபுண்ணியமுமடையாமையால் இவ்விதங்கூறினார், இதனால், யாசிபபவர் புகழையும், புண்ணியத்தையும் கொடுத்தற்கு ஏதுவாதலால்; அவர் கிடையாவிடில் அவரைத் தேடியாயினும் பெறவேண்டுமெனபதாயிற்று பூமியிலுள்ளவரென்றது யாசிப்பவரல்லாத மறறவரை (9) தமமிடத்தில் வந்து ஒன்றையாசித்துக்கொள்ளுதலை விரும்புவார் இல்லாத இடத்துக் கொடுப்பவரிடத்தில் ஒரு புகழும உண்டாகமாட்டாது.

௪. யாசிப்பவருக்கு அவசியமான ஒருகுணம்வேண்டும்.

(10) கொடுப்பவனுக்குக் கொடுக்கப்படும்பொருள் கைகூடாத இடத்து, இவன் எனக்குக்கொடுக்கவில்லையென்று அவனிடத்துக் கோபஞ்செய்யாதிருக்கவேண்டும். கொடுக்கப்படும்பொருள் கொடுக்கவேண்டும சமயத்தில் கிடையாதென்பதற்கு வேறு சாட்சிவேண்டாம். யாசிப்பவனது வறுமையாகிய தன்னோய் தானும் சாட்சியாயிருததலொன்றே போதும். அஃதாவது: கொடுப்பவன் தனக்கேயல்லாமல் தன்னிடத்தில் யாசித்தவருக்கும் அன்றைக்கன்று பொருள்சமபாதித்தற்குப் படுந்துன்பததைத் தனக்கே யாகவைத்துத் தான்படுகிற துன்பத்தைத ஞானறிந்தால் தெரியுமென்பதாம்.

இரவச்சம்.

அஃதாவது:—மானங்கெடவரும் யாசித்தலுக்குப் பயப்படுதல்.

க. யாசித்தலின் கொடுமை,

(1) தமக்குள்ளதை ஒளியாமல் இவர் வரப்பெற்றோமென்று மனமகிழ்ந்து யாசகருக்குக்கொடுக்கும் கண்போற்சிறந்தவரிடத்தும் ஒருவன் யாசியாமல் வறுமைப்படுதல், யாசித்துச் செல்வம் பெறுதலைப்பார்க்கினும் கோடிமடங்கு நன்றாகும். இதன் கருத்து, உள்ளதை ஒளியாமல் கொடுப்பாரிடத்து யாசித்தல் மானங்கெடாதது ஒன்றேயல்லாமல், வேறுசிறப்பில்லாமையால் அப்படியாசித்தலையும் விட்டு, செய்யத்தகுவதோர் முயற்சிசெய்து சீவனஞ் செய்தலே சிறந்ததென்பது. (2) இவ்வுலகத்தைப் படைத்தவன் இவ்வுலகத்தில் வாழ்வார்க்கு முயன்று சீவனஞ்செய்தலேயல்லாமல் யாசித்தும் சீவனஞ்செய்தலை விதித்தானாயின், அக்கொடியவன் தானும் அந்தயாசகர்போல் எங்குஞ்சுழன்று கெடக்கடவன். (முயலுதலாவது: பலதொழில்களுள் இயன்ற தொன்றைச்செய்தலாம்.)

உ. யாசித்தல் தரித்திரம் நீங்குதற்கு வழி அன்று.

(3) வறுமையால் வருந்துன்பத்தைத் தொழில்செய்து சம்பாதித்து நீக்கக்கடவோமென்று நினையாமல், யாசித்து நீக்கக்கடவோமென்று நினைக்கும் வல்லமைபோல முரட்டுத்தனங்கிடையாது. (முரட்டுத்தனமாவது: ஆவதையாலோசியாது நிற்றலாம்.)

ங. மேலேகூறிய வழியல்லாததை மாட்சிமையுடையார் செய்யார்

(4) அநுபவிக்கவேண்டி, பொருளில்லாமல் வறுமைப்பட்ட இடத்தும் பிறரிடத்திற்போய் யாசித்தலுக்கு உடன்படாத நிறைகுணம் எல்லாவுலகத்திலும், அடங்காத பெருமையுடையதாம்.

ச. வழியாலாகியது சிறிதேனினும் அவ்வின்பம் பெரிது.

(5) தன் முயற்சிவழியால் கிடைத்தது தெளிந்த நீர்போலச் சமைத்த கூழேயாயினும், அதனை உண்ணுதற்கு மேலாக இன்பு

ந்தருவது இல்லை. எனவே, யாசித்தலால் வரும் அவமானமில்லாமையால் முயற்சியால் வந்த கூழ் அமிழ்தத்துக்குச் சமானமாகுமென்பது கருத்து.

ரு. தருமத்தையும் முயன்றுசெய்வதல்லது யாசித்துச்செய்யலாகாது.

(6) தண்ணீர்கிடையாமல் இறக்குநிலைமையதாகிய பசுவுக்குத் தருமநோக்கி யிதற்குத்தண்ணீர் தரல்வேண்டுமென்று யாசித்துக்கேட்டாலும், அப்படியாசித்துக் கேட்பதுபோல ஒருவனுடைய நாவுக்கு அவமானம் வந்ததுவேறில்லை. இதனால், தருமத்தையும் முயன்றுசெய்யவேண்டியதேயன்றி யாசித்துச் செய்யலாகாதென்பதாயிற்று.

சு. மானங்கெடவரும் யாசகத்தை விலக்கவேண்டும்.

(7) யாசிப்பவரையெல்லாம் நான் யாசிக்கின்றேன். நீங்கள் யாசிக்கவேண்டுமானால், தமக்கு உள்ளதை ஒளிப்பவரிடத்தில் யாசியாதிருங்கள். ஏனென்றால், உள்ளதை ஒளிப்பவரிடத்தில் யாசித்தால் மானங்கெடுமென்க.

எ. யாசகத்தின் குற்றமும் யாசகரைக்கண்டு ஒளித்தலின் குற்றமும்.

(8) வறுமைக்கடலை இதனால் கடப்போமென்று ஒருவனேறிய யாசகமென்னும் இன்பமில்லாத தோணியானது ஓடும்போது, கொடுப்போர் உள்ளதை ஒளித்தலாகிய வன்னிலத்திலே மோத, பிளந்துவிடும். இதனால், வறுமைக்கடலைக் கடப்பதற்கு உடையாததோணி முயற்சி யென்பது காண்க. (வன்னிலம்: வலியநிலம்; அஃதாவது: பாறையுள்ள இடம்.) (9) பொருளுடையவர் முன்னே பொருளில்லாதவர் போய்நின்று யாசித்தலின் கொடுமையை நினைத்தால், எமது நெஞ்சங்கரைந்துருகும். அவ்விதம் யாசித்தவருக்குத் தம்மிடத்தில் உள்ளதை ஒளித்துக்கொள்வார் இல்லையென்றலின் கொடுமையை நினைத்தால் உருகும் நெஞ்சமும் இல்லாமல அழிந்துபோகும். யாசித்தலைப்பார்க்கினும் இல்லையென்பது மிகக்கொடியதாம். (10) உள்ளதை ஒளிப்பவர் ஒன்றுமில்லையென்று சொல்லியமாத்திரத்தே யாசிப்பவருக்கு உயிர்

போகின்றது. உள்ளதை ஒளிப்பவர்க்கு உயிரெங்கேபுகுந்து ஒளித்துநிற்குமோ? கேட்டாரைக் கொல்வதாகிய இலஞ்சியென்ற செயலானது சொல்வாரைக்கொல்லாமல் விடாது. ஆதலால், எங்கே புகுந்து ஒளிந்து நிற்குமோ? என்றார். (உயிர்போதலாவது: இனி யாமென் செய்வோமென்று ஏங்கி நிற்றல்.)

௱௮-ஆம் அதிகாரம்.

கயமை.

அஃதாவது:— முன்னே அரசியலுள்ளும் அங்கவியலுள்ளும் சிறப்பியலால் சொல்லப்பட்டகுணங்களுள் ஏற்புடையவைகளைத் திரிப்பினல் யாவருக்கும் பொருந்தவைத்தமையால், அங்கேதிரிபால் சொல்லியவையும், இங்கே ஒழிபியலுள் வெளிப்படச் சொல்லியவையுமாகிய குணங்களுள் யாதுமில்லாராகிய கீழோரது தன்மை.

௧. கீழோரது குற்றமிகுதி.

(1) கீழோர் வடிவத்தால் முழுவதும் மக்களை போலிருப்பர்; அக்கீழோர் மக்களை ஒத்தல்போன்ற ஒப்பு நாம் வேறிரண்டு சாதிகளிடத்துக்கண்டதில்லை. (மக்களாவார்: உயர்ந்தோர்.) எனவே, உயர்ந்தோரும் கீழோரும் கண்கால் முதலிய அவயவங்களால் சமானராகத் தோன்றினும், அறிவால் வேறாகத் தோன்றுவரென்பதாம். இங்கே சாதியென்றது பகுப்பென்று கொள்ளவேண்டும்.

௨. கீழோர் பழிபாவ முதலானவைகளுக்கு அஞ்சார்.

(2 தமக்கு உறுதியாகிய புகழ் புண்ணியம் ஞானங்களை அறிவாரைப்பார்க்கிலும், அவைகளை அறியாத கீழ்மக்கள் நன்மையுடையவராவர். ஏனென்றால், அவ்வறிபவரைப்போல நெஞ்சிலிட்டுப் பழிபாவங்களுக்குப் பயப்படுங்கவலை அக்கீழ்மக்களுக்கு இல்லை. ஆதலாலென்க.

௩. கீழோர் விலக்கப்படுதலில்லாமல் வேண்டியது செய்வார்.

(3) தேவரும் கீழ்மக்களும் ஒருதன்மையராவர். அஃது எதனாலென்றால், தேவரைப்போலக் கீழ்மக்களும் தம்மை நியமிப்

யாரில்லாமல் தாம் விரும்பும் அவைகளைச்செய்தலாமெனக. எனவே, கீழோர் உயர்ந்தோர் சொல்வழி நில்லாரென்பதாயிற்று.

ச. கீழோர் மேன்மையடையும் விதம்.

(4) கீழோர் தம்மிலுந்தாழ்ந்த கள்ளமனமுடையவரைக் கண்டால், அவர் நடத்தையிலே அவரைக்காட்டிலும் தாம் வஞ்சகஞ்செய்து, அதனாலே மேம்பட்டு இறுமாந்திருப்பர். (மேம்படுதலாவது: அந்தத்திருடனிலும் இந்தத்திருடன் பிறரறியாதபடி களவுசெய்தலில் வல்லவனென்று சொல்லப்பட்டிருத்தலாம்.)

ரு கீழ்மக்கள் ஆசாரஞ்செய்தல் இயல்பன்று.

(5) கீழோரிடத்து நல்லொழுக்கங்கண்டது உண்டானால், அதற்குக்காரணம் இது, இல்லாவிட்டால் இராசதண்டனை உண்டாமென்று பயப்படும் பயமேயாம்; அஃதில்லையானால், விரும்பப்படும் பொருள்வருமாகில் சிறிது உண்டாகும். எனவே, பயத்தினால் பெரும்பாலும், பொருளால் சிறுபான்மையும் உண்டாவதன்றி இயற்கையிலே ஆசாரமில்லையென்பதாம்.

சா. கீழோரது அடக்கமில்லாமை.

(6) தாங்கள் கேள்விப்பட்ட இரகசியச்சொல்லை இடந்தோறுந்தாங்கிக்கொண்டுபோய் அந்நியருக்குச் சொல்லுதலால் கீழ்மக்கள், அடிக்கப்படும் பறைக்குச்சமானமாவர். இங்கே இரகசியச்சொல்லென்றது: வெளிப்பட்டால் பிறனொருவனுக்குத் தீங்குதருஞ்சொல். (பறையாவது: பிறரறியாததை அறிவிக்குங் கருவி.)

எ. கீழோர் கொடுக்கும் விதம்.

(7) கீழோர் தம் கன்னத்தை அடித்துத்தாக்கும் முறுக்கிய கையையுடையோரல்லாதவருக்கு யாசித்துக்கேட்டாலும் தாம் உண்டு கழுவிய ஈரக்கையையும் அசைக்கமாட்டார். ஏனென்றால், அக்கையில் ஏதேனுஞ்சழுவப்படாமல் ஒட்டியிருக்கிறபருக்கை கீழே விழுந்து வீணாகுமே யென்னுங் கருத்தாலெனக. "எச்சிற்கையிட்டுக் காக்கையோட்டமாட்டான்" என்னும் பழமொழி இதற்குச்சாட்சியாதலறிக. (8) மேலாயினோர், மெலியவர் போய்த்தம் குறையைச் சொன்னவுடனே இரங்கி ஏதேனும் இயன்றது

கொடுத்து மகிழ்வர். கீழாயினோர் வலியவர்வந்து கரும்பைப் போலத் தம்மை நையநறுக்கியஇடத்து வேண்டியதைக்கொடுத்து, வருந்துவர்.

௯. கீழானவன் பிறர் செல்வங்கண்டு பொறாமை யடைதல்.

(9) கீழானவன், அந்நியர் பட்டுந்துகிலும் உடுத்தலையும், பாலுஞ் சோறும் உண்ணுதலையுங்கண்டால் பொறாமையால் அவர் மேல் குற்றமில்லையாகவும் குற்றமுண்டாக்க வல்லவனாவன். (வல்லவனாதல்: கேட்டவர் நம்பும்படி பொய்யைப் பொருந்தச்சொல்லுதலாம்.)

௰. கீழோர் பிறருக்கு அடிமையாய் நிற்பர்.

(10) கீழோர் உணவில்லாமையாலாவது வேறொன்றாலாவது ஒரு துன்பம் தம்மையடைந்தபோது அத்துன்பங்காரணமாகச் சீக்கிரத்தில் தம்மை விலைசெய்தற்கு உரியவராவர். அதுவன்றி, வேறெந்தத் தொழிலுக்கு உரியவராவர்? இதனால், கீழோர் பிறருக்கு அடிமையாதற்கு உரியவரென்பது காண்க.

இரண்டாவது பொருட்பால் முற்றிற்று.

மூன்றாவது

காமத்துப்பால்.

களவியல்.

இனி, அப்பொருளைத் துணைக்காரணமாக உடையதாய் இம்மையே தருவதாகிய இன்பத்தைச்சொல்லும்படி யெடுத்துக்கொண்டார். இவ்விடத்து இன்பமென்றது, ஒரே காலத்தில் ஒரு பொருளால் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென்கிற ஐம்புலன்களையும் அநுபவித்தற்சிறப்புடைத்தாகிய காம இன்பத்தினை. இது: புணர்ச்சி, பிரிவு என விருவகைப்படும். வினை இருத்தல் இரங்கல் ஊடலென்பனவோ? என்றால், இந்நூலாசிரியர் பொருட்பாகுபாட்டினை அறம் பொருள் இன்பமென வடநூல்வழக்குப்பற்றிச் சொல்லுதலால், அப்படியே அம்மூன்றினையும் பிரிவினிடத்தடக்கினாரென்றறிக. இனி, அவைகளைத் தமிழ்நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக், களவென்றும் பிரிவைக், கற்பென்றும் பெரும்பான்மைபற்றி வகுத்து அவைகளைச் சுவைமிகுதியுண்டாக்க உலக நடையோடு ஒத்தலும் ஒவ்வாமையும் உடையனவாக்கிச் சொல்லுகின்றார், அவ்வொழுக்கம் இரண்டனுள், களவாவது: பிணி மூப்பு இறப்புக்களில்லாது எந்நாளும் ஒரு தன்மையராய் உருவும் திருவும் பருவமும் குலமும் குணமும் அன்பு முதலானவைகளாலே தம்முள் ஒப்புடையராகிய தலைவனும் தலைவியும் பிறர் கொடுப்பவும், அடுப்பவுமில்லாமல் ஊழ்வகையால் தாமே யெதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது; அதனை, எழுதிகாரத்திலே சொல்லத்தொடங்கி முதலிலே தகையணங்குறுத்தல் சொல்லுகின்றார்.

௧0௯-ஆம் அதிகாரம்.

தகையணங்குறுத்தல்.

அஃதாவது:—பொழில் விளையாட்டு ஆசையால், பெண்கள் கூட்டம் நீங்க, அங்குத் தனித்து நின்ற தலைமகளை வேட்டையாடும் ஆசையால் இளைஞர் கூட்டம் நீங்கத் தனித்து வந்த தலைவன் அவளழகு தனக்கு வருத்தம் உண்டாக்குதலைச் சொல்லுதலாம். (பொழில் - சோலை.)

௧. தலைவியின் உருவு முதலானவை முன் கண்டறிந்தவையல்லாமல் சிறந்திருக்கையால் அவளைத் தலைவன் ஐயுறல். (ஐயுறல்: சந்தேகப்படுதல்.)

(1) கனம் பொருந்திய குழையை அணிந்த இவள் இச்சோலையிலிருப்பவளாகிய ஒரு தெய்வப் பெண்ணோ? அல்லாமல், பிரமன் ஆராய்ந்து விசேஷமாகச் சிருஷ்டிக்கப் பட்ட மயிலோ? அல்லாமல், ஒரு மானுடப் பெண்ணோ? இவளை இன்னளென்று துணியமாட்டாமல் என் மனம் மயங்குகின்றது.

௨. மானுடப் பெண்ணென்று தெளிந்த தலைவன் அவள் பார்வையாலாகிய வருத்தஞ் சொல்லுதல்.

(2) இப்படிப்பட்ட அழகையுடையவள் என் பார்வைக்கு எதிரே நோக்குதல், தானே மோதி வருத்துகிற ஒரு தெய்வப் பெண் மோதுதற்குச் சேனையைக் கொண்டு வந்தது போலுந் தன்மையுடையதாம். (எதிரே நோக்குதல்: குறிப்புப் பார்வை.) அஃதாவது: தன்னை அழகால் வருத்துதலன்றியும், குறிப்புப் பார்வையாலும் வருத்தினாளென்றபடி. (3) கூற்றென்று நூலோர் சொல்லுவதை முன் கேட்டறிந்தேனன்றி, பார்த்தறிந்திலேன். இப்போது பார்த்தறிந்தேன். அது: பெண் குணங்களுடனே பெரியவையாய்ப் போர் செய்கின்ற கண்களை யுடையது. பெண் குணங்களால் இன்பம் தருதலும் உண்டேனும், துன்ப மிகுதிபற்றிக் கூற்றுவனாக்கிக் கூறினான். (4) பெண்குணங்களையுடைய இம்மாதுக்குக் கண்கள் தம்மைக் கண்டவரது உயிருண்ணும் தோற்றத்துடனே கூடி மாறுபட்டிருந்தன. (5) என்னை வருத்துதலாலே யமனோ? என்மேல் ஓடுதலாலே கண்ணோ? இயல்பாக அஞ்சுதலாலே பெண்மானோ? அறியேன் இம்மாது கண்களின்பார்வையானது இம்மூன்றினுடைய தன்மைகளையும் உடையதாயிருக்கின்றது. (6) பிரியா நட்பாகிய கொடிய புருவங்கள் தாம் கோணாமல் செவ்வையாய் நடுநிலையினின்று விலக்கினால் அப்புருவங்களைக்கடந்து இவளது கண்கள் நடுங்குதற்கு ஏதுவாகிய துன்பத்தை எனக்குச் செய்யமாட்டாவாம். இதனால், தாம் நல்ல நிலையில்லாமல் மாறுபட்டிருப்பார் பிறரைக் கண்டித்துப் புத்தி கூறமாட்டாரென்பதாயிற்று.

ந. தலைவன் தலைவியின் தனங்களால் ஆகிய வருத்தஞ் சொல்லுதல்.

(7) இம்மாதருடைய சாய்தலில்லாத தனங்களின் மேலிட்ட ஆடையானது அத்தனங்கள் கொல்லாமல் காத்தலால், கொல்லுவதாகிய மதயானையின் மேலேயிட்ட முகபடாத்தினை ஒக்குமென்பதாம். எனவே, சிறிது மறையாவிட்டாலும், கொல்லுமென்பது விளங்குகின்றது. மாதரென்பதிலுள்ள அர்:சாரியை, இவ்விதம் வரும் இடந்தோறுங் கொள்க.

ச. தலைவன் தலைவியின் நெற்றியாலாகிய வருத்தம் சொல்லுதல்.

(8) போர்க்களத்தே யெதிர்த்து நில்லாத பகைவரும் எதிர்த்து நின்றவரது அநுபவம் கேட்டுப் பயப்படுதற்கு ஏதுவாகிய என் வலியின்பெருமை இம்மாதருடைய ஒளிபொருந்திய நெற்றியொன்றுக்கு ஐயோ! தோற்றுப்போனது. சென்ற காரியத்துக்கு வருந்துதலால், என் வலிமையின் பெருமை யென்னென்று தலைவன் கூறியதனால் இது தற்புகழ்ச்சியாகாதென்க.

ரு. தலைவன் தலைவியின் ஆபரணங்களால் ஆகிய வருத்தஞ் சொல்லுதல்.

(9) புறத்திலே அழகிய பெண்மான்போன்ற அஞ்சுதலுடைய பார்வையையும், அகத்திலே வெட்கத்தையும் உடைய இவளுக்கு ஒற்றுமையுடைய இப்பார்வையும், நாணமுமாகிய ஆபரணங்களே போதுமானவையாயிருக்க, வேற்றுமையுடைய ஆபரணங்கள் பலவற்றைச்செய்து அணிதல் என்ன பிரயோசனமுடையது? இதனால், ஆலோசனையில்லாமல் ஆபரணங்களை அணிந்தவர் அறிவில்லாரென்பதாம்.

சு. தலைவியின் குறிப்பு அறியலுற்ற தலைவன் சொல்லுதல்.

(10) காய்ச்சப்பட்ட மதுவானது தன்னை உண்டவரிடத்தேயல்லாமல், காமம்போலக் கண்டவரிடத்தே மகிழ்ச்சி செய்தலையுடையதன்று. (காமமென்றது: அதையநுபவித்தற்குரிய பெண்களை.)

கக௦-ஆம் அதிகாரம்.

குறிப்பறிதல்.

அஃதாவது:—தலைவன் தலைவி குறிப்பை அறிதலும், தோழி குறிப்பை அறிதலும், அந்தோழி அவ்விருவர் குறிப்பை அறிதலுமாம். தலைவி அழகைக் கண்டு வருந்திய தலைவன் தலைவியைக்கூடும்போது, இக்குறிப்பறிதல் அவசியம் வேண்டுமென்பது காண்க.

க. தலைவன் தலைவி மனக்குறிப்பை அவள் பார்வையாலறிதல்.

(1) இவளுடைய மையுண்ட கண்களிலிருக்கின்ற பார்வையானது இப்பொழுது என்மேல் இரண்டு பார்வையாயிற்று. அவற்றுள், ஒரு பார்வையானது நோய் செய்யும் பார்வையாம். மற்றொரு பார்வையானது அந்நோயைத்தீர்க்கும் மருந்தாகும். இதனால், ஒரு பார்வை மருட்பார்வையும், ஒரு பார்வை அருட்பார்வையுமாமென்பதாம். (2) இவளது கண்கள் நான் காணாமல் என்னைப்பார்க்கின்ற சிறிய பார்வையானது மெய்யுறு புணர்ச்சி விருப்பத்தில் ஒத்த பாதியளவன்று. அதனிலும் அதிகமாம். இதனால், தலைவியைக் கூடுதல் நிச்சயமென்று தெளிந்தானென்க.

உ. தலைவன் தலைவியது குறிப்பைப் பார்வையாலும் நாணாலும் அறிதல்.

(3) அம்மாது நான்பாராத அளவிலே யென்னை அன்போடு பார்த்தாள். பார்த்து, ஏதோ ஒன்றை நினைத்து வெட்கப்பட்டுத் தலை குனிந்தாள். அவ்விதம் குனிதற்கு ஏதுவாகிய குறிப்பானது எம்மிருவரிடத்துந்தோன்றிய அன்பாகிய பயிருள் அது, வளரும்படிப் பாய்ச்சிய நீராயிற்று.

ங. தலைவன் தலைவியின் குறிப்பை நாணலும் மகிழ்ச்சியாலும் அறிதல்.

(4) தன்னை நான் பார்க்கும்போது எதிர்பாராமல் நாணித் தலைகுனிந்து நிலத்தைப்பார்க்கின்றாள். அதையறிந்து நான்பாராதபோது, தான் பார்த்துக் குறுஞ்சிரிப்புக் கொள்ளுவாள். (5) நேரே குறிப்பிட்டுப் பாராமை மாத்திரமல்லாமல் ஒரு கண்ணைச் சுருக்கினவள் போல என்னைப் பார்த்துத் தன்னுள்ளே மகிழ்கின்றாள்; இவையெல்லாம் இவளைச் சேர்வது நிச்சயமென்று தலைவன் தெளிதற்கு ஏதுவாயின.

ச. தோழி தலைவியைத் தூரத்தில் கொண்டுபோன இடத்தே அவளது குறிப்பையுணர்ந்த தலைவன் தன்னுள்ளே சொல்லுதல்.

(6) புறத்திலே அயலார்போலக் கடுஞ்சொற்சொன்னாலும் உள்ளே பகையாதவரது அச்சொல் பயன்படுதல், குறை முடிக்க நின்றவராலே சீக்கிரம் அறியப்படும் (கடுஞ்சொல்: இவ்விடங்காவல் மிகவுடையது. இனி, வராதேயென்பது முதலாகியவை. குறைமுடிக்க நின்றவர்: தோழிப்பெண்கள்.) (7) பின் இனிதாவதாய் முன் துன்புறுத்துவதாகிய சொல்லும் உள்ளேபகையாதிருந்தே புறத்தே பகைத்தவர்போன்ற கோபப் பார்வையும் அயலார்போலிருந்து நட்பாயினவர்க்கு ஏதேனும் ஒருகுறிப்புப்பற்றி வருவனவாம். இதனால், அச்சொல்லுக்கும் அப்பார்வைக்கும் அஞ்சவேண்டா மென்பதாயிற்று. (8) என்னை நீக்குகின்ற சொல்லுக்குப்பொறாமல் நான் மிகவேண்டுதலாக வருந்திநோக்கிய இடத்து, அதுதெரிந்து இரக்கம் செய்தவளாகி உள்ளேசிரிக்கின்றாள். அதனால், அசைந்த சாயலையுடைய அவளுக்கு அச்சிரிப்பினிடத்து ஒருநன்மைக் குறிப்புண்டு. (அசைதல்: பிரகாசித்தல்.) (9) முன்னறியாதவர்போல ஒருவரையொருவர் பொதுப் பார்வையாகப் பார்த்தல் ஆசையையுடைய இருவரிடத்தும் உண்டாகின்றன. (10) காமம் அநுபவித்தற்கு உரிய இருவருள் ஒருவரது கண்களோடு ஒருவர் கண்கள் பார்வையால் ஒக்குமானால், மனத்திலில்லாமல் வாயளவிலே தோன்றுகின்ற சொற்கள் ஒருபயனும் உடையனவல்லவாம். எனவே, உண்மையை வெளிப்படுத்துவது கண்ணே யென்பதாயிற்று.

கககூ-ஆம் அதிகாரம்.

புணர்ச்சி மகிழ்தல்.

அஃதாவது:—அப்படிக் குறிப்பு அறிந்து புணர்ந்த தலைவன் அப்புணர்ச்சியை மகிழ்ந்து சொல்லுதல்.

க. தலைவன் இயற்கைப் புணர்ச்சி முடிவிலே சொல்லுதல். (இயற்கைப்புணர்ச்சியாவது: ஒரு இராசகுமாரன் வேட்டைக்குப் போய்த் தனிப்பட்டு, மலைச்சோலையிலே விளையாடவந்து தோழிகளை விட்டுத் தனித்து நின்ற ஒரு இராசகன்னிகையைக் கண்டு கூடுவது.)

(1) கண்ணாலே கண்டும் செவியாலே கேட்டும் நாவாலே யுண்டும் மூக்காலே மோந்தும் மெய்யாலே தொட்டும் அநுபவிக்கப் படுகிற ஐந்து விதமாகிய இன்பங்களும், ஒளி பொருந்திய வளைய லணிந்த இப்பெண்ணிடத்தே உண்டாயின. எனவே, இவ்வைந்து இன்பங்களையும் ஒரே காலத்தில் அநுபவிக்கப்படுவதாகிய இடம் பெண்களை அன்றி வேறில்லை யென்பதாயிற்று.

௨. இடந்தலைப்பாட்டிலே சொல்லுதல். (இடந்தலைப்பாடாவது: இரண்டாந்தரம் முன் கூடிய இடத்தே தலைவன் தலைவியைக் குறித்துச் சென்று கூடுதல்.)

(2) வாத பித்த சிலேட்டுமம் ஆகிய வியாதிகளுக்கு மருந்தாவன அவைகளுக்கு விரோதமாகிய குணங்களையுடைய வெவ்வேறு பொருள்களாகும். இந்த ஆபரணங்களையுடையவள் தன்னாலாகிய காமவியாதிக்குத் தானே மருந்துமாயினாள். எனவே, அவள் பிரிந்தால் நோயும், புணர்ந்தால் மருந்துமாமென்பது காண்க.

௩. பேரின்பத்துக்கு உரிய நீ இப்படிப்பட்ட சிற்றின்பத்தில் அழுந்துதல் தகாதென்ற தோழனுக்குத் தலைவன் சொல்லுதல்.

(3) பஞ்சேந்திரியங்களின் இன்பத்தை அநுபவிப்பார்க்குத் தாம் விரும்பும் பெண்களது மெல்லிய தோள்களிடத்து நித்திரை செய்யும் நித்திரைபோல அவ்வின்பங்களைத் துறந்த யோகிகளால் அடையப்படுவதாகிய வைகுந்த உலகம் இனிமையுடையதோ? இல்லை.

௪. தலைவன் பாங்கற் கூட்டமுடிவிலே சொல்லுதல். (பாங்கற்கூட்டமாவது: மூன்றாந்தரம் தலைவன் தனது தோழனைத் துணையாகக்கொண்டு தலைவியைக் கூடுதல்.)

(4) தன்னைவிட்டு நீங்கினாற்சுடும். நீங்காமல் நெருங்கினாற் குளிரும். இப்படிப்பட்ட தீயை யெனக்குத் தருவதற்கு இவள் எவ்வுலகத்திலே சம்பாதித்தாள். தன் காமத்தீயை அவள் தந்ததாகச் சொல்லினான். ஏனென்றால், அவளால் வெளிப்படுதலினாலென்க.

௫. தலைவன் பாங்கியிற் கூட்டமுடிவிலே சொல்லுதல். (பாங்கியிற் கூட்டமாவது: நான்காந்தரம் தலைவன் தோழியைத் துணையாகக்கொண்டு தலைவியைக் கூடுதல்.)

(5) எப்பொழுது பெற்றுக்கூடினாலும், மலரால் நிறைந்த கூந்தலையுடையவளாது தோள்கள் மிகவும் இனிய பொருள்களைப் பெற விரும்பியபொழுது கிடைத்த, அவ்வப்பொருள்களைப்போல இன்பஞ்செய்யும். (6) தன்னைப்பெறாது வாடிய என்னுயிரானது பெற்றுப், பொருந்துந்தோறும் தளிர்க்கும்படி தீண்டுதலால், இப் பெண்ணுக்குத் தோள்கள் அமிழ்தத்தால் செய்யப்பட்டன. வாட்டந்தவிர்த்துப் பிழைக்கச் செய்யுங்குணம் அமிழ்தத்துக்கு உரியதாதலால் அவ்வமிழ்தத்தால் தோள்கள் செய்யப்பட்டன வென்று கூறினான்.

௬. நீ இவளைக் கலியாணம் செய்துகொண்டு, உலகத்தார் தம் வீட்டிலிருந்து தமது பங்குப் பொருளையுண்கின்ற இல்லறத்தோடு பொருந்தவேண்டுமென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல்.

(7) இந்த அழகு நிறைந்த நிறத்தையுடைய பெண்ணின் புணர்ச்சியானது உலகத்தார் தம்முயற்சியால் வந்த பொருளைத் தமக்குரிய மனையிலிருந்து, தென்புலத்தார் முதலாகிய ஐவருக்கும் பகுந்து கொடுத்துத் தமதுபங்கைத் தாம் உண்பதுபோல இன்பஞ் செய்வதாம். ஐவராவார், 5-ஆம் அதி. 3-வது வசனத்திற்சொல்லப்பட்டவர்.

௭. ஒத்த அன்புடைய உனக்கு ஒருபோதும் விடாத புணர்ச்சியே இனிதாகலால், விவாகஞ்செய்துகொள்ளென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல்.

(8) காமமிகுதியால் ஒருபொழுதும் காற்றும் இடையே புகப்பெறாத தழுவுதலானது, ஒருவரை ஒருவர் விரும்புகின்ற இருவருக்கும் இனியதேயாகும்.

௮. மறைக்கவேண்டாமையால் இடையிலே நீங்கலில்லாத புணர்ச்சியே இன்பப் பயனுடைத்தென்று விவாகஞ்செய்து கொள்ளென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல்.

(9) புணர்ச்சி இனிதாதற்பொருட்டு வேண்டும் ஊடலும், அவ்வூடலை அளவறிந்து நீங்குதலும், அதன் பின்னுண்டாகின்ற அப்புணர்ச்சியுமாகிய இவையல்லவா? விவாகஞ்செய்துகொண்டு காமத்தை யிடைவிடாதடைந்தவர் பெற்றபயன்கள்.

க௦. தலைவியைப்புணர்ந்து உடன்கொண்டுபோகின்ற தலைவன் தன்னுள்ளே சொல்லுதல்.

(10) செய்ய ஆபரணத்தையணிந்த இவளிடத்துச் சேரச் சேரக் காமம் (காதல்) நூல்களாலும் நுட்ப அறிவாலும் பொருள்களை அறிய, முன்னை அறியாமை காணப்படுதல்போலக் காணப்படுகின்றது. (அஃதாவது: புதிது புதிதாகத் தோன்றும் நுட்ப அறிவிற்கு அதன்முன் தோன்றும் அறிவு குறைபடுதலால், காமமும் மேலு மேலும் அநுபவிக்கும்போது முன் அநுபவத்தைப்பார்க்கினும் இப்போது அநுபவிக்கிறது மிகச்சுகமென்று தோன்றுதல்.)

கக௩-ஆம் அதிகாரம்

நலம்புனைந்துரைத்தல்.

அஃதாவது:—தலைவன் தலைவியினது நலத்தினை வருணித்துச்சொல்லுதல்.

க. தலைவன் இயற்கைப்புணர்ச்சி முடிவிலே சொல்லுதல்.

(1) அனிசப்பூவே! வாழக்கடவாய். மிருதுவாலே யெல்லாப்பூவினும் நீ நல்லகுணமுடையாய். அப்படியிருந்தாலும், எம்மால் விரும்பப்பட்டவள் உன்னிலும் மெல்லிய குணத்தையுடையவளாம்.

௨. தலைவன் இடந்தலைப்பாட்டிலே சொல்லுதல். (இடந்தலைப்பாடாவது: தலைவன் முன்கண்ட இடத்திலே பின்னும் தலைவியைக்காணுதல்.)

(2) மனமே! யானே காணப்பெற்ற இவள் கண்களைப் பலராலும் காணப்படுகிற மலர்கள் ஒக்குமென்று நினைத்து, தாமரை குவளை நீலம் முதலிய மலர்களைக்கண்டால் மயங்குகின்றாய். உன்னறிவு இருந்தென்னவிதம். அறியாமையென்றபடி.

௩. தலைவியைச் சேர்க்கக்கருதிச் செல்லும் பாங்கனுக்குத் தலைவியின் இயல்பைத் தலைவன் சொல்லுதல்.

(3) மூங்கில் போலும் தோள்களையுடையவளுக்கு நிறம் தளிர் நிறமாயிருக்கும். பல்லானது முத்தாயிருக்கும். இயற்கை வாசனை நல்லவாசனையாயிருக்கும். மைபூசப் பெற்றகண்கள் வேல்களாயிருக்கும்.

௪. தோழனுற்கூடிய இடத்துத் தலைவியைச் சேர்ந்த தலைவன் சொல்லுதல்.

(4) குவளை மலர்கள் பார்க்கிற தொழிலுடையவைகளாயிருந்தால், மாட்சிமைப்பட்ட ஆபரணங்களை உடையவளது கண்களை ஒப்பாக மாட்டோமென்று நினைத்து, அந்நாணத்தினாலே தலைகுனிந்துபார்க்கும். பார்க்கிற தொழிலில்லாமையால் காணுதலும் நாணுதலும் இல்லாமல் ஆகாயத்தை நோக்கின.

௫. பகற்குறியிலே தலைவி பூவணிகண்டு தலைவன் சொல்லுதல். (பகற்குறியாவது: பகற்காலத்தில் ஓரிடத்தில் அடையாளம் வைத்து இருவரும் வந்து கூடுதல்.)

(5) இவள் தன்னுடைய மென்மை நினையாமல் அனிச்ச மலரைக் காம்புகொய்யாது சூடினாள். இனி, இவளிடைக்கு நல்லவையாகிய பறைகள் ஒலியா. ஏனென்றால், அனிச்ச மலர்க் காம்பின் பாரம் பொறாமல் இடை முறிந்துவிடும். அப்போது செத்தபறை முழங்கும் ஆதலாலென்க. (நல்லபறை: மங்கலவாத்தியம்.) இடை முறிந்துவிடவே, இவளிறந்துபடுவளென்பதாயிற்று. இதன்கருத்து இவளுடைய மென்மையை அளவுகடந்து கூறினானென்பது.

௬. இரவுக்குறியிலே தலைவன் சந்திரனைக்கண்டு கூறுதல். (இரவுக் குறியாவது: இரவிலே தலைவி மனையருகுவந்து தலைவன் கூடுதல்)

(6) ஆகாயத்திலேதோன்றும் நட்சத்திரங்கள் வேறுபாடு பெரிதாயிருக்கவும், தமது நாயகனாகிய சந்திரனையும் எமது நாயகி முகத்தையும் இது சந்திரன் இது முகமென்று அறியமாட்டாமல், தமது நிலையினின்றும் கலங்கித் திரிகின்றன. எங்கும் உலாவுதலால்

கலங்கித் திரிகின்றன என்றான். (7) அந்த நட்சத்திரங்கள் மேலே சொல்லியபடி கலங்குதற்குக்காரணம் யாது? முன்குறைந்த இடம் பின் நிறைந்து விளங்குகின்ற சந்திரனிடத்துப்போல இம்மாதர் முகத்தினிடத்துக் களங்கமுண்டோ? இல்லாதிருக்கவும் சலங்குதல் அறியாமையாம். (8) சந்திரனே இப்பெண்முகம்போல நான் மகிழும்படி ஒளிவீச வல்லமையுடையாயானால், நீயும் என்னால் இச்சிக்கப்படுதலையுடையை ஆவாய். அன்றியும் வாழக்கடவாய். (9) சந்திரனே மலர்போலும் கண்களையுடைய இவள் முகத்துக்குச் சமானமாக வேண்டுவையாகில், இதுபோல யான் காணத்தோன்று. பலர் காணத் தோன்றாதே, இவள் முகம் பலர் காணத்தோன்றாமையால், அவ்வுபர்ச்சி உனக்குண்டாக மாட்டாதென்று சந்திரனையிகழ்ந்து கூறினான்.

எ. தலைவியைக் கூட்டிக்கொண்டு போவென்று உடன்போக்குச் சொன்ன தோழிக்குத் தலைவன் கூட்டிப்போதலின் வருத்தஞ் சொல்லுதல்.

(10) உலகத்தாரால் மென்மைக்கு உதாரணமாக எடுத்துச் சொல்லப்பட்ட அனிச்சப்பூவும் அன்னப்பறவையின் இறகும் அவளுடைய காலுக்கு நெருஞ்சிமுட்போல வருத்தம் செய்யும். எனவே, அவ்விரண்டினு மிருதுவானது காலென்பதாயிற்று. ஆகவே, இப்படிப்பட்ட கால்கள் கூரிய கல்லுமுள்ளும் உள்ள கொடிய பாலைநிலத்து வழியில் எப்படி நடக்குமென்று கூறினானென்பதாம்.

கககூ-ஆம் அதிகாரம்.

காதற்சிறப்புரைத்தல்.

அதிகாரமாவது:—தலைவன் தன்னுடைய ஆசைமிகுதியைச் சொல்லுதலும், தலைவி தன்னுடைய ஆசை மிகுதியைச் சொல்லுதலுமாம்.

க. தலைவன் இயற்கைப் புணர்ச்சி முடிவிலே தன் விருப்பத்தை அறிவித்தல்.

(1) இம்மெல்லிய சொல்லை யுடையவளது வெண் பல்லினூறிய நீரானது பாலுடனே தேனைக்கலந்த கலவைபோலும் இனி

மையுடையதாம். இதனால், பாலுந்தேனும் கலந்த சுவை இன்ன தென்று அறியப்படாததுபோல, இவள் பல்லிலூறிய நீரும் இன்ன சுவையென்று அறிய முடியாதென்பது கருத்து.

உ. தலைவன் பிரிவிலுண்டாகிய சந்தேக நிவிர்த்தி கூறுதல். (அஃதாவது: ஊழினாலே கூட்டப்பட்ட புணர்ச்சியாகலால், அப்போது உணர்ச்சி யில்லாதிருந்தவள் அவ்வுணர்ச்சி தோன்ற இவன் எவனோ வென்றும் என்னிடத்து அன்புடையவனோ வென்றும் இனிமேலும் இவனைக் கலத்தல் கூடுமோ வென்றும் அவள் உள்ளத்தே தோன்றும் ஐயத்தைக் குறிப்பாலறிந்து அவ் வையம் நீங்கச் சொல்லுதலாம்.)

(2) இப்பெண்ணுக்கும் எமக்கும் உண்டாகிய நட்புக்கள் உடம்புக்கும் உயிருக்கும் எப்படிப்பட்டவையோ? அப்படிப்பட்ட ஒற்றுமையுடையவையாகும். இருவகை நட்புக்களும் ஆதி தொடங்கி வேறுபாடில்லாமல் கலந்து வருதலால் இங்ஙனம் கூறினான்.

௩. இடந்தலைப்பாட்டிலே தலைவி நீங்கும்போது தலைவன் சொல்லுதல்.

(3) என் கண்ணிற்கருமணியிலிருக்கின்ற பாவையே! நீ அவ் விடம் விட்டுப்போவாயாக. போகாதிருப்பாயாகில், எம்மால் விரும்பப்படுகிற நெற்றியை உடையவளுக்கு இடமில்லையாம். எனவே, கண்மணியினும் தலைவி சிறந்தவளென்பதாயிற்று.

ச. பகற்குறியிலே தலைவியைப் புணர்ந்து நீங்கும் தலைவன் சொல்லுதல்.

(4) எனக்கு ஆராய்ந்து கொள்ளப்பட்ட ஆபரணத்தை யுடைய இவள் புணரும்போது உடம்பானது உயிரோடு கூடிவாழ்தல் போலிருக்கின்றாள். அவ்விதம் இல்லாமல் பிரியும்போது அவ் வுயிர் அவ்வுடம்பினின்றும் நீங்கிப்போதல் போல இருக்கின்றாள்.

ரு. ஒருவழித்தணந்தபோது எம்மை நினைத்தீரோ வென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல். இதுவரை தலைவன் சொன்னது போல இனி, தலைவி சொல்லுதல் (ஒருவழித் தணத்தலாவது: தலைவன் யாதேனு மொரு காரியத்தைக் குறித்துப்பிரிதல்.)

(5) ஒளியினவாகிப் போர்செய்கின்ற கண்களையுடையவளது குணங்களை நான் மறந்தேனாயின், நினைப்பேன். ஒருபோதும் மறத்தலறியேன் ஆதலால், நினைத்தலும் அறியேன். (குணங்களாவன: நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு.)

சு. ஒருவழித்தணத்தலில் தலைவன்றன்மையைத் தோழி பழிப்பாளென்று, அஞ்சி அவள் கேட்க, தலைவி தன்னுள்ளே சொல்லுதல்.

(6) தாம் காணாமையால் தூரத்தே போயினாரென்று நினைப்பார் நினைக்கக்கடவர். எம்முடைய தலைவர் எமது கண்ணுள்ளே நின்றும் போகார். அறியாமல் கண்களை யிமைத்தேனானால், அதனால் வருந்துவதுஞ் செய்யார். ஆதலால், காணப்படாத நுட்பமுடையவர். இடைவிடாத நினைவின் முதிர்ச்சியால் எப்போதும் முன்னிற்றலால் கண்ணுள்ளே நிற்கின்றாரென்றும் இமைத்தலாலும் வருந்திலரென்றுங் கூறினாள். (7) என்மேல் ஆசையுள்ள தலைவர் என் கண்ணுள்ளிருக்கின்றார். ஆதலால், கண்ணுக்கு மைபூசவுமாட்டேன். ஏனென்றால், பூசும் அவ்வளவு காலமும் அவர் மறைந்திருத்தலை அறிந்ததனாலென்க. (8) எனது தலைவர் என்னெஞ்சினுள்ளே யிருக்கின்றார் ஆதலால்; அவர் சூடுறுதலையறிந்து உண்ணும்போது சூடுள்ளபதார்த்தங்களை உண்ணுதற்குப் பயப்படுவேன்.

எ. வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிந்த இடத்துத் தலைவி பொறுத்திருத்தற்பொருட்டுத் தோழி தலைவன்றன்மையைப் பழித்துக் கூறியபோது தலைவி தலைவன்றன்மையையுயர்த்திச்சொல்லுதல். (வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதலாவது:கலியாணஞ் செய்தலுறுதிப் படுத்தி அதற்கு வேண்டும் பொருள்சம்பாதிக்கத் தலைவன் தலைவியைப் பிரிந்துபோதல்.) வரைவு : கலியாணம்.

(9) என்கண் இமைக்குமானால், என்னுள்ளிருக்கிற தலைவர் மறைதலறிந்து கண்ணை யிமைக்கமாட்டேன். அவ்வளவுக்கே இவ்வூரவர் தூங்காத நோய்செய்தார். அன்பிலரென்று அவரைச் சொல்லுவர். (10) என்மனத்துள் தலைவர் எப்போதும் மகிழ்ந்துவாசஞ் செய்வர். அதனையறியாமல், இவ்வூரவர் பிரிந்திருக்கின்றார், அன்பிலரென்று அவரைச் சொல்லுகின்றார். இவ்விதம பிரியாமலிருக்கும் அன்புடையவரைப் பழிக்கக்கூடாதென்று தோழிக்குத்தலைவி குறிப்பாற் கூறியது கண்டுகொள்க.

கககூ- ஆம் அதிகாரம்.

நாணுத்துறவுரைத்தல்.

அஃதாவது:—தூரத்தே பிரிந்து சகியாதவனாகிய தலைவனும், தன் காமத்தைப் பாங்கி முதலானவரால் வெளிப்படுத்தத்தொடங்கிய தலைவியும் தமது நாணம் இழந்தலைச் சொல்லுதலாம்.

க. தூரத்தே பிரிந்து வருந்திய தலைவன் சொல்லுதல்.

(1) அரியபெண்களோடு காமத்தை அநுபவித்து, பின் அது பெறுமல் துன்பம் அடைந்த ஆடவர்க்குத் தொன்றுதொட்டுக் காவலாய்வருகின்ற பனைமடலாலே செய்யப்பட்ட குதிரையல்லது இனி, எனக்கு வலியது இல்லை. இஃதென்னையெனில், ஒரு பெண்ணை விரும்பப்பட்டவன் அப்பெண்ணைச் சேரக்கிடையாவிட்டால், அவளை ஒரு படத்திலே யெழுதிக்கையிலே பிடித்துக்கொண்டு பனங்கருக்குமட்டையாற் செய்த குதிரைமேலேறி நடந்துவரும்போது அம்மட்டை அறுக்கும் வாயெல்லாம் இரத்தம் வெளிப்படாமல் இந்திரியம் வெளிப்பட்டால்,அப்பெண் யாராயிருந்தாலும், அரசன் அவனுக்குக் கொடுக்கும்படி செய்து விவாகஞ்செய்வித்தலாம். இது, பழையகால வழக்கம். ஆதலால் அப்படிச்செய்தாவது தலைவியைச் சேர்வேனென்பதற்குப் பனைமடற்குதிரை யல்லது வேறுவல்ல தில்லையென்று தலைவன் கூறினனென்பதாம். (மடல், தொன்றுதொட்ட காவலாவது: தன்மேல் ஊர்ந்தவருயிர்போகாமல் நெடுகக் காத்துவருதல்.)

உ. நாணமுடைய உமக்குப் பனைமடற்குதிரையேறுதல் முடியாதென்று விலக்கலுற்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல்.

(2) பிரிதலால் உண்டாகிய வருத்தத்தைப் பொறுத உடலும் உயிரும் அவற்றிற்குக் காவலாகிய பனைமடற்குதிரையை ஏறுதலைவிலக்குவதாகிய நாணத்தை ஒழித்துவிட்டு ஏறநினைக்கின்றன.

ங. நாணமே அன்றி,நல்லாண்மையும் உடைமையால் மடலேறுதல் முடியாதென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல்.

(3) நாணத்தையும் மிகுந்த ஆண்மையையு முன்னேயுடையேன். அவ்விரண்டும் காமத்தால் நீங்குதலால் காமம் மிகுந்தவர் ஏறும் மடலை இப்போது உடையேன்.(நாணம்: இழிவானவை செய்யுமிடத்து விலக்குவது. ஆண்மை: ஒன்றுக்குந் தளராதிருத்தல்.)

௪. நாணமும் நல்லாண்மையும் காமவெள்ளத்துக்குப் புணை (கப்பல்) ஆதலால், அவ்விரண்டும் நீங்குவனவல்லவென்ற தோழிக்குத்தலைவன் சொல்லுதல்.

(4) *நாணமும் நல்லாண்மையுமாகிய கப்பல்களைக் காமமாகிய பெருவெள்ளமானது என்னைவிட்டு இழுத்துக்கொண்டுபோகின்றது. எனவே, இந்த வெள்ளத்துக் கடத்தும் வலியுடைய கப்பல்கள் இவையல்லவென்பதாயிற்று.*

௫. பொறுக்கமாட்டாமையாகிய துன்பமும் மடற்குதிரையும் உமக்கு எப்படி வந்தனவென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல்.

(5) *மாலைக்காலத்து அநுபவிக்கும் துன்பத்தையும் அதற்கு மருந்தாகிய மடற்குதிரையையும் முன்னறியேன். மாலைபோலத் தொடர்ந்த சிறியவளையலையுடையவள் இப்பொழுது எனக்குத் தந்தாள். இதனால், உன்னாலே அவ்விரண்டும் நீக்கலாமென்பது கருத்து.*

௬. மடலூரும்போது இன்றைக்கு விட்டு நாளைக்கு ஊரென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல்.

(6) *உன் மாது காரணமாக என்கண்கள் ஒருபோதும் நித்திரை செய்யாவாம். அதனால், எல்லாரும் நித்திரை செய்கிற பாதி யிரவிலும், பனைமடற்குதிரையேறுதலையே மிகவும் நினைப்பேன். இதனால், என்குறை முடிப்பது நாளையென்று நினையாதே யென்பதாம்.*

௭. காமத்தை அறிவிலராகிய பெண்களைப்பார்க்கினும் அறிவுடையராகிய ஆடவரல்லவா? பொறுக்கவேண்டியவரென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல்.

(7) *கடல்போலக் கரையற்ற காமநோயை அநுபவித்தும், பனைமடற்குதிரையிலேறுமல் பொறுத்துக்கொண்டிருக்கிற என்பிறப்புப்போல மிகுந்த தகுதியுடைய பிறப்பு உலகத்திலில்லை.*

இதுவரை தலைவன் சொல்லியது. இனி தலைவி சொல்வது.

௮. காவற்சிறை மிகுந்து காமம் பெருகிய இடத்துத் தலைவி சொல்லுதல்.

(8) கற்புக்குணத்தால் நாம் வெல்லக்கூடாதவரென்று பயப்படாமலும், மிகவும் காக்கத்தக்கவரென்று இரக்கஞ்செய்யாமலும் பெண்கள் காமமும் அவர் மறைத்தலைக் கடந்து சபையினிடத்து வெளிப்படுவதாயிருக்கிறது. இங்கே உலகத்துப் பெண்கள் காமத்தியல்பு சொல்வாள்போலத் தன் காமத்தியல்பு சொல்லினாள். (சபையாவது: அவள் தாய் தந்தையர் கூட்டம்.) (9) நான் முன் அடங்கியிருந்தலால் எல்லாரும் என்னை அறிந்திலர். இனி, அப்படி அடங்கியிராமல், நானே வெளிப்பட்டு அறிவிப்பேனென்று நினைத்து என் காமமானது இவ்வூர் வீதியில் மயங்கிச் சுழல்கின்றது. (மயங்குதல்: சிலரறிந்து தம்முட் பேசுதல். சுழலுதல்: பலரறிந்து தூற்றுதல்.)

கூ. செவிலியாகிய வளர்த்த தாய்க்குத் தன் காமத்தை வெளிப்படுத்திவிட்டு, தான் நிற்கும் விதங்கண்டு சிரித்த தோழியோடு ஊடல் செய்து தலைவி தன்னுள்ளே சொல்லுதல்.

(10) நான் கேட்கும்படி அன்றி, கண்ணுற் காணும்படி அறிவில்லாதவர்கள் என்னைச் சிரிக்கின்றார்கள். அப்படிச் சிரிக்கின்ற தன்காரணம் நானடைந்த துயர்களை அவர்களடையாமையேயாம்.

ககரு-ஆம்-அதிகாரம்.

அலரறிவுறுத்தல்.

அஃதாவது:— களவொழுக்கம் வேண்டிய தலைவன், பிறர் சொல்லுகின்ற அலர் தனக்கு உண்டாகின்ற விதத்தைத் தோழிக்கு அறிவித்தலும், உடன்போக்காகவென்று வேண்டிய தலைவியும் தோழியும் அவ்வலரைத் தலைவனுக்கு அறிவித்தலுமாம், (அலர்: வசைச்சொல்)

க. இரவுக் குறிதவறிப்போய்மறுநாள் வந்த தலைவனை ஊரார் தூற்றும் வசைச்சொல்லைச் சொல்லி விவாகச்செய்தி வினவிய இடத்துத் தோழிக்குத்தலைவன் சொல்லுதல்.

(1) உன்மாதுக்கும் எனக்கும் உண்டாகிய நட்பு இவ்வூரில் அலரா யெழுதலால், அவளைப் பெறுமல் வருந்துகின்ற என் அரிய உயிரானது அவளைப் பெற்றதுபோல நிலைபெறும். அந்நிலைபேற்றை நல்ல ஊழால் நானே அறிவதல்லது அலர் தூற்றுகின்ற

பலரும் அறியமாட்டார். அலரெழுதலால், அரிய உயிர் நிற்குமென்றது, அவ்வலருண்டாகாமால் காமச்சுறமொருட்டுச் சீக்கிரம் விவாக முடியுமென்பது கருத்தெனக.

உ. இரவுக்குறிதவறுதலால் தலைவனைக் கூடப்பெறாத தலைவி அத்தலைவன் காவல்செய்த இடத்தின் பக்கமாயிருகக, தோழிக்குச் சொல்லுவாள் போலப் பழிச்சொல்லைக்கூறி விவாகச்செய்தி வினவுதல்.

(2) தலைவனை நான் காணப்பெற்றது ஒரு நாளேயாகும். அதனாலுண்டாகிய பழிச்சொல்லானது அவ்வளவினதாகாமல் சந்திரனைப் பாம்புகௌவிய செய்திபோல உலகமெஙகும் வியாபித்துப் பெரிதானது. இதனால், காணாமலிருக்கவும் இப்படிப் பழிச்சொல்லடைதல் இனிமேலாகாது விவாகஞ்செய்துகொள்ளவேண்டுமென்பது கருத்து. (3) மலர்போலுங் கண்களையுடையவளது அருமை (பிறர்சென்று சேரக்கூடாமை) அறியாமல் இவ்வூரிலுள்ளவாகள் அவளைச்சாமானியமாக யாரும் சென்று சேரக்கூடிய எளியவளாக்கி அவளோடு பழிச்சொற் கூறுதலை எனக்கு உதவியாகச் செய்தனர். (உதவியாவது: சீக்கிரம் விவாக முடிவதற்குக காரணமாதல்.) (4) எங்களுக்குப் புணர்ச்சி உண்டாயிருத்தலை இவ்வூரார் அறிதலால் உண்டாகிய பழிச்சொல்லானது எனக்கு வருவதாகிய ஒரு பயனல்லவா? எதனாலென்றால், அப்பழிச்சொற்கேட்ட என்மனம் அவள் சேர்க்கையைப் பெறாமலிருந்தே பெற்றதுபோலும் இன்பமுடையது. ஆதலாலெனக. (5) என் காமம் இவ்வூரார் தூற்றுகின்ற பழிச் சொல்லால் மேலுமேலு மிகுதலை யுடையது. அப்பழிச்சொல் இல்லையாகில், தன்னுடைய தன்மை கெட்டுச் சுருங்கிப்போகும. (தன்மை: இன்பம்.) (6) கள்ளுண்பார்க்கும் விருந்தோறும் கள்ளுண்ணுதல் இனிதாதல் போல எனக்கு காமமானது பழிச்சொலலுண்டாகுந்தோறும் இனிதாயிருக்கின்றது.

ந. விவாகஞ்செய்யத் தாமதிப்பது பொறாத தலைவியைத் தலைவன் காவலிடத்துக்குப் பக்கத்திலிருப்பது தெரிந்த தோழி ஊரார் பழிச்சொல்லையும், தாய்சொல்லையும் நீ நோக்கிப் பொறுத்தல்வேண்டுமெனச்சொல்லிய இடத்துத்தலைவி கூறுதல்.

(7) இக்காம நோயாகிய பயிர் இவ்வூரிலுள்ள மாதர் கூறுகின்ற பழிச்சொல் எருவாக அது கேட்டுக் கோபித்துத்தாய் சொல்லுகின்ற கடுஞ்சொல்லானது தண்ணீராகவளர்கின்றது. (8) அயலார் தூற்றுகின்ற பழிமொழியால் நாம் காமத்தைக் கெடுப் போமென்று நினைத்தலானது நெய்யினாலே நெருப்பைக் கெடுப் போமென்று நினைத்தல் போலும். எனவே, விவாகஞ்செய்தால் காமத்தைக் கெடுக்கலாமென்பது விளங்கியதும் அன்றி காமத்தை வளர்த்தற்கு உரியபழிச்சொல்லைக் கெடுத்தற்குஉரியதாகக்கொள் ளலாகாதென்பதுமாயிற்று.

ச. மணஞ்செய்தற்குப் பொருள் சம்பாதிக்கத் தலைவன் பிரிந் தபோது பொறுத்தவளாகிய தலைவி அவன்வந்து காவலிடத்துக்குப் பக்கத்திலிருத்தல் அறிந்து, அயலார் பழிச்சொல்லுக்குப் பயந்து சகித் துக்கொள்ள வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லுதல்.

(9) தம்மைக்கண்ட நாளில் உன்னைவிட்டு நீங்கமாட்டேன், பயப்படாதே யென்றார். அவரே இன்றுகண்டவர்பலரும் நாணப் படும் விதம் நம்மை விட்டு நீங்கியபின் அயலார் தூற்றும் பழிச் சொல்லுக்கு நாம் நாணமுடியுமோ? முடியாது.

ரு. தலைவன் காவலிடத்துக்குப் பக்கத்திலுளனாக, தோழி தலைவிக்குச் சொல்வாளாய், பழிச்சொல்லறிவித்து உடன்போதற்கு ஆசை கொள்ளச் சொல்லுதல்.

(10) நாம் தலைவருடன் போதற்குக் காரணமாதல் பற்றி, முன்னமே யிச்சிப்பதாகிய பழிச்சொல்லை இந்தவூர்தானே சொல்லு கின்றது. இனி, தலைவர் நாம் வேண்டினால் தாமும் அதற்குடன் படுவர். ஆதலால், இப்பழிசசொல் நமக்கு நன்றாகவந்து வாய்த் தது.

கற்பியல்.

இனி, கற்பு பதினெட்டதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி முதலிலே பிரிவாற்றாமை சொல்லுகின்றார்.

கககூ-ஆம் அதிகாரம்.

பிரிவாற்றாமை.

அஃதாவது:—விவாகஞ் செய்துகொண்டபின் தலைவன் அறம், பொருள், இன்பங்களின் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து தூரத்திலும், அவ்விடத்திலும் செல்லுநாளில், அப்பிரிவை அவள் பொறுக்கமாட்டாத வளாந்தன்மையாம்; அது இங்கே பிரிவை அறிவித்த தலைவனுக்குத் தோழி சொல்லுதலும், தோழிக்குத் தலைவி அவன் குறிப்பாலறிந்து சொல்லுதலும், பிரிவை அறிவித்த இடத்துச் சொல்லுதலும், பிரிந்த இடத்து ஆற்றுவிக்குந் தோழிக்குத் தலைவி மறுத்துச் சொல்லுதலும்என நான்கு வகைப்படும்.

க. பிரிந்து விரைவில் வருவேனென்ற தலைவனுக்குத் தோழி சொல்லுதல்.

(1) நீ எங்களைப் பிரியாதிருத்தல் உண்டானால், அதை எங்களுக்குச் சொல்லுவாய். அது நீங்க, நீ பிரிந்து போய்ப் பின் வருதலை நீ பிரிந்து போய் வரும்வரை உயிரோடிருப்பவர்க்குச் சொல்லுவாயாக. எங்களெனத் தலைவியையுஞ் சேர்த்துக் கூறினாள். இதனால், நீ பிரிந்த பொழுதே தலைவி இறந்து போவாளென்பதாம்.

உ. தலைவனது பிரிவைக் குறிப்பாலறிந்து தலைவி தோழிக்குச் சொல்லுதல்.

(2) தழையும் மாலையும் கொண்டுவந்து, என் பின்னே காத்து நின்ற நாளில் அவர் பார்வைமட்டும் புணர்ச்சி குறித்தமையால், நமக்கு இன்பம் உடையதாய் இருந்தது. இன்று அப்புணர்ச்சிதான் நடந்துகொண்டிருக்கவும் அப்புணர்ச்சி, பிரிவாரென்றஞ்சுகின்ற அச்சத்தினையுடையதாயிற்று. அவரன்பினிலையிது. அச்சம் எதனால் தெரிந்ததென்றால், அளவுக்கு மிஞ்சிப் புகழ்தலும் அணிதிருத்தலும் முதலியவற்றாலென்க. (3) பிரியேனென்ற தம்

சொல்லும் நம் பிரிவு பொறாமையும் அறிதலையுடையவராகிய தலைவரிடத்தும் ஒவ்வொரு சமயம் பிரிவுண்டாதலால், அவர் வார்த்தையும் செய்கையும் பற்றி நம்மிடத்தில் அன்புடையரென்று தெளியும் தெளிவு, அரிதாயிருக்கின்றது. (அரிது: அறியக்கூடாமை.) (4) காணப்பட்ட முதல் நாளிலே முதன்மையான அன்பு செய்து உன்னைவிட்டுப் பிரியேன் அஞ்சாதிருவென்ற தலைவர், தாமே பின் பிரிவாராகில் அவருக்கல்லாமல் அவரால் தெளிவிக்கப்பட்ட சொலலை மெய்யென்று தெளிந்தவருக்குக் குற்றமுண்டாகுமோ? தெளிந்தவரென்று தன்னைப் பிறர் போலக் கூறினாள். இதனால், சொல்லும் செயலும் ஒவ்வாத குற்றம் அவருக்கு உண்டாகும்; அஃது உண்டாகாத விதஞ் செய்யென்பது கருத்து. (5) என் னுயிரைப்போகாமல் காப்பாற்றுவாயாகில், அதனை ஆளுதற்கு இருந்த தலைவரது பிரிவைத்தடுப்பாயாக. தடுப்பாரில்லாமல் அவர் என்னைப் பிரிந்து போவாராகில், அவரால் ஆளப்பட்ட உயிரும் போகும். ஆதலால், பின்பு அவரைச் சேருதல் எனக்கில்லையாகும்.

ங. தலைவன் பிரிவை அறிவித்ததை வந்து சொல்லிய தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(6) பிரிவைச்சகிப்பதறியாத நமது நிலைமையறிந்த அத்தலைவர் தாமே நம்முன்னே நின்றும் தம் பிரிவைச் சொல்லும் கொடுமையையுடையவராகில், அத்தன்மையரான பின்பு நம் வருத்தம் தெரிந்துவந்து முதன்மையான அன்பு செய்வாரென்னும் ஆசையை விட்டுவிடவேண்டும். (7) நெய்தல் நிலத்தலைவன் என்னைப்பிரியலுற்றதை அவனறிவிக்காமல் தானே அறிந்து என் முன்கையினின்று நழுவுகின்றவளையல்கள் எனக்குச் சொல்லமாட்டாவோ? அவனறிவிக்க அறிந்துவந்து நீ சொல்லவேண்டுமோ? இதனால், அத்தலைவனைப்பிரிவு விலக்காமல் வந்தாயென்று கோபித்தாளென்பதாயிற்று. (8) பெண்களுக்குத் தம் குறிப்பறிகிறதோழியரில்லாத வேற்றாரினிடத்து வாழுதல் துன்பஞ்செய்வதாகும். தம் காதலரைப்பிரிதல் அப்படிவாழ்தலைக்காட்டிலும் துன்பஞ்செய்வதாகும். தலைவன் பிரிவினைத்தடுத்துவாராது உடன்பட்டுவந்த தோழியோடு பிணங்குவாளாதலால், அவ்வாழ்வும், பிரிவும் தனக்குண்டாயிருக்கவே உலகநடை சொல்லுவாள் போலச்சொல்லினாள்.

ச. காமம் தீயைபோன்று தானின்ற இடத்தைச்சுடும் ஆதலால், நீ பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(9) *நெருப்பானது தன்னைத்தொட்டால் மந்திரமுதலியவற்றால் கட்டுப்படாமல் சுட்டாற் சுடுமேயன்றி, காமநோயைப் போலத் தன்னையநுபவியாமல் விட்டு நீங்கினால், சுடுதலைச்செய்யுமோ? இதனால், தீயினுங் கொடியதனை நான் பொறுக்கும் விதம் எப்படியென்பதாம்.*

ரு. தலைவியர் பலரும் பிரிவைப் பொறுத்திருப்பார். அது செய்கின்றிலை யென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(10) *நீ சொல்லுகின்றது சரி. பிரிவை அறிவித்த இடத்து அதற்கு உடன்பட்டுப் பிரியும்போது உண்டாகிய துன்பநோயையும் ஒழித்து, பிரிந்தால் அப்பிரிவையும் பொறுத்துப் பின்னுமிருந்து உயிர்வாழும் பெண்கள் உலகத்திலே பலர். உடன்பட்டு, ஒழித்து, பொறுத்து, இருந்து என்பவை, ஒலிக்குறிப்பால் வாழ்பவரில்லையென்பதே விளக்குவனவாம். கருத்து, யானும் இறந்து போவேனென்பது.*

கக௭-ஆம் அதிகாரம்.

படர்மெலிந்திரங்கல்.

அஃதாவது:—பிரிவு பொறுக்கமாட்டாதவளாகிய தலைவி உறுத்துகின்ற துன்பத்தை, தான் எப்போதும் நினைத்தால் அந்நினைப்பால் மெலிந்து வருந்துதலாம்.

க. காமநோயை வெளிப்படுத்துதல் உன் வெட்கத்துக்குத் தகாதென்ற தோழிகுத் தலைவி சொல்லுதல்.

(1) *நான் காமநோயைப்பிறரறிதற்கு நாணிமறைக்கின்றேன். அப்படி மறைக்கவும் இந்நோயானது, நீர் வேண்டுமென்று இறைப்பவர்க்கு ஊற்றுநீர் ஊறுதல்போல மேலு மேலும் அதிகப்படும்.*

உ. இவ்விடத்தோர் அறியாமல் மறைத்தலாயினும் அவ்விடத்துச்சென்ற தலைவரறியத் தூதுவிடுதலாயினும் செய்யவேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(2) இக்காமநோயை இவ்விடத்தோர் அறியாமல் மறைக்கவும் வல்லமையில்லேன். இல்லாவிட்டால், இந்நோயைச் செய்தார்க்குச் சொல்லென்பாயாகில், சொல்லுதலும் எனக்கு நாணந் தரும். இனியென்செய்வேன்? இதனால், ஒருவேளைக்கொருவேளை காமமதிகப்படுகிறதென்பதும் தூரத்திலே போயிருப்பவர்க்கு இது சொல்லியனுப்பினால் இன்னும் சாவாதிருக்கிறாளென்று அவரெண்ணுவரென்பதும் தோன்றுகின்றன. (3) காமநோயும், அந்நோயைச் செய்தவர்க்குச் சொல்லுதலைத் தடுக்கின்ற நாணமும் தம்மைப் பொறாத என்னுடம்பினிடத்து உயிர் காவடித் தண்டாக அத் தண்டின் இருபக்கமும் தூங்குகின்றன. (தூங்குதல்: ஒன்றினொன்று மிகாமல் காமமும் நாணமும் சமமாக நிற்றல்.) இதனால், இவ்விரண்டின் பாரம் பொறுமல் என்னுயிரிற்றுப் போமென்பது விளங்குகின்றது.

௩. தலைவியர் காமக்கடலில் வீழ்வார். வீழினும், அதற்கேற்ற மரக்கலத்தால்(கப்பலால்)நீந்திக் கடப்பாரென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(4) யாவருக்கும் உண்டாய் வருகின்ற இரண்டினுள்ளும் காமக்கடலே எனக்கு உண்டாகின்றது. அக்கடலைக் கடக்கும் காப்பாகிய புணை (கப்பல்) எனக்கு உண்டாகவில்லை. இதனால், தூது செல்லுதற்கு உரிய நீயும் அவ்விதஞ் செய்யவில்லை யென்பது குறிப்பு.

௪. தூது விடாமை நோக்கித் தலைவி தோழியுடன் பிணங்கிச் சொல்லுதல்.

(5) இன்பஞ் செய்தற்கு உரிய சிநேகத்தினிடத்துத் துன்பத்தின் வரவைச் செய்வார் துன்பஞ் செய்தற்கு உரிய விரோதத்தினிடத்து என்ன செய்யமாட்டாரோ? தெரியேன்.

௫. காமத்தினால் இன்பமடைந்தவர்க்கும் அதனாலாகிய துன்பமும் வருமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(6) காமம், புணர்ச்சியினால் இன்பஞ் செய்யும்போது அவ்வின்பம், கடல்போலப் பெரியதாகும். அக்காமந்தானே பிரிவினாலே

துன்பஞ் செய்யும்போது, அத்துன்பம் அவ்வின்பக்கடலினும் பெரியதாகும். இதனால், இன்பத்தோடு துன்பம் சமமாயிருந்தால், பொறுக்கக் கூடும், அப்படி யில்லாமல் அதிகமாயிருத்தலால் பொறுக்கக் கூடாதென்பதாம்.

சு. காமக்கடலை நிறைகுணமே புணையாக நீந்தலாமென்று தோழிக்குத் தலைவி சொல்லுதல். புணை - கப்பல்.

(7) காமமாகிய பெரிய சமுத்திரத்தைக் கடந்தும் அச்சமுத்திரத்துக்குக் கரை காண்கின்றிலேன். அப்படி, காணாத காலம் எல்லாரும் நித்திரை செய்யும் நடு இராத்திரியாயிற்று. அந்த நடுராத்திரியிலும் ஒரு துணையில்லாமல் நானே தனியாயினேன். தனித்திருந்தும் இறவாதிருக்கின்றேன். ஈதொரு தீவினைப் பயனிருந்தவிதம் யாது? இதனால், நீ துணையாயினாயில்லை யென்பது குறிப்பு.

எ. தலைவி இராத்திரியின் கொடுமை சொல்லி வருந்துதல்.

(8) இந்த இராக்காலமானது உலகத்தில் நிலைபெற்ற உயிர்களையெல்லாம் தானே தூங்கச் செய்தலால், என்னை அல்லது வேறு துணையை யுடையதில்லை. ஆதலால், என்னிடத்து அன்புடையதாயிருந்தது இதனால், நிலைத்திருக்கிற உயிரைத்துணையாகக் கொள்ளாமல் இப்போதிறந்து போகிற என்னைத் துணை யாகக் கொண்டது அவ்விராக்காலத்துக்கு அறியாமை யென்பது குறிப்பால் விளங்கியது. (இது இகழ்ச்சிக்குறிப்பு) (9) காதலரோடு நாம் இன்புற்ற நாள்களிலே சிறியவையாயிருந்து அவர் பிரிவைப் பொறுக்கமாட்டாத இந்நாள்களிலே பெரியவையாய்ச் செல்லுகின்ற இராத்திரிகள் அக்கொடியவராகிய காதலர் கொடுமைக்கு மேலே, தாம் கொடுமை செய்கின்றன. தன் வருத்தம் கருதாமற் பிரிந்ததனால் தலைவரைக் கொடியவரென்றாள்.

அ. நின்கண்களிலே போழ்து அழிதலால் அழாதிருவென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(10) மனம் போன்று தலைவரிருக்கின்ற நாட்டிற்குச் செல்ல வல்லமை யில்லாமையினாலே எனது கண்கள் தமது நீரை நீந்தமாட்டா. இதனால், தலைவரைச் சேரும்வரை கண்ணீரொழுகுதல் அறாதென்பதாயிற்று. (நீந்துதல்: அழாதிருத்தல்.)

க௧அ- ஆம்- அதிகாரம்.

கண்விதுப்பழிதல்.

அஃதாவது:—கண்கள் தலைவனைக்காணுதற்கு விரைதலாலே வருந்துதல். விரைதல் - அவசரப்படுதல்.

௧. நின்கண்கள் அழுது அழகையிழக்கின்ற நீ பொறுத்தல் வேண்டுமென்று மறுதரஞ் சொன்னதோழிக்குத் தலைவிசொல்லுதல்.

(1) தீராத காமநோயை நாம் அறிந்தது தாம் தலைவரை எனக்குக் காட்டலாலன்றோ? அன்றைத்தினம் அப்படிக் காட்டிய கண்கள் இன்று என்னைக் காண்பிக்கச்சொல்லி அழுகின்றது எதை நினைத்து? (2) மேல் விளைவதனை ஆராய்ந்தறியாமல் அன்று தலைவரைப் பார்த்த மையுண்ட கண்கள் இன்று இவ்வருத்தம் நம்மால் வந்தால் பொறுத்தல் வேண்டுமென்று பகுத்தறியாமல் துன்பம் அநுபவிப்பது என்ன காரணம்? இதனால், பின்வருவதறியாமல் ஒன்றைச் செய்தார், வந்ததைப் பொறுக்கமாட்டாமல் வருந்துவாரானால், முன்னை அறியாமையிலும் பெரிய அறியாமையென்பதாயிற்று. (அறியாமை:மூடத்தனம்) (3) இக்கண்கள் அன்று தலைவரை விரைந்து பார்த்து இன்றும் தாமே இருந்து அழுகின்ற அறியாமைச் செயல் நம்மாலே சிரிக்கத் தக்க தன்மையுடையதாம். (4) இந்த மையணிந்த கண்கள் நான் பிழைக்க மாட்டாமைக்கு ஏதுவாகிய கெடாத நோயை என்னிடத்து நிறகச் செய்துவிட்டுத் தாமும் மேன்மேலும் அழுதற்குஇடமில்லாமல் நீர் வற்றிப்போகமிக அழுது சும்மா சலித்திருந்தன. இதனால், பிறர்க்குத் துன்பஞ் செய்வார் தாமும் துன்பமடைவாரென்பதாம். (5) எனக்குக் கடலும் சிறிதாம் வண்ணம் பெரிதாகிய காமநோயைச் செய்த எனது கண்கள் அத்தீவினையினாலே தாமும் நித்திரை செய்யாதனவாகித் துன்பத்தை அநுபவிக்கும். (6) எமக்கு இக்காம நோயைச் செய்தகண்கள் தாமும் தூங்காமல் அழுதலிலே இருக்கின்றது மிகவும் இனிதாயிற்று. இதனால், தமக்குத் துன்பம செய்தவர்க்கு ஒரு துன்பம் வந்தால், அதைத் தாம் காண்பரேல் மகிழ்ச்சி யடைவாரென்பதாம். (7) விரும்பி உள்ளங் குழைந்து வேண்டி அக்காலம் தலைவரைப்பார்த்த கண்கள் இக்காலம் தூங்காமல் அழுதலாகிய துன்பத்தை அநுபவித்தநுபவித்துக தம் உள்ளிருக்கிற நீர் கெட்டுப்போகக் கடவன.

உ. தலைவர்பிரிந்துபோகவில்லை. அவரிங்கேயிருக்கின்றார்; அவரைப்பார்க்கும் வரையும் நீபோறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(8) *மனத்தால் விரும்பாது சொல் மாத்திரத்தால் விரும்பியவர் இங்கே இருக்கின்றார். கண்கள் அவரைக் காணாமல் பொறுக்கின்றன இல்லையானால். அவரிருத்தலாலே பயன் யாது? (மனத்தால் விரும்பாது சொல்மாத்திரத்தால் விரும்புதலாவது: பிரிதற்கு அஞ்சுதலை வற்புறுத்தி முன்னே கூறியபடி யில்லாமல் பிரிந்துபோதல்.)*

௩. நீயும் போறுத்து உன் கண்களும் தூங்க வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(9) *தலைவர் வராத நாள்களிலே அவர் வரவு பார்த்து நித்திரை செய்ய மாட்டா. வந்த நாள்களிலே அவர் பிரிவரென்று பயந்து நித்திரை செய்யமாட்டா. ஆதலால், அவ்விரண்டு காலங்களிலும் பொறுத்தற்கரிய துன்பத்தை என்கண்கள் அடைந்தன.*

ச. தலைவரை இவ்வூரார் நிந்தியாமல் அவர் கொடுமையை மறைக்க வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(10) *என்னைப்போலும் பறையடித்தலுற்ற கண்களையுடையவர் தமது நெஞ்சில் அடக்கிய இரகசியத்தை அறிதல் இவ்வூரிலுள்ளார்க்கு எளியதாகும். (பறையடித்தலாவது: பலரறிய வெளிப்படுத்தல்) இதனால், தாம்முள்ள நிகழ்ச்சியைத் தாம் மறைத்தாலும் கண்கள் காட்டிவிடு மென்பதாயிற்று.*

கககூ-ஆம் அதிகாரம்.

பசப்புறுபருவரல்.

அஃதாவது:—பசப்புறுதலாகிய வருத்தம். பசப்பாவது, பிரிவு பொறாமையால் வருவதோர் நிறவேறுபாடு.

க. முன் தலைவன் பிரிதலுக்குச் சம்மதித்த தலைவி அப்பிரிவு பொறாமல் பசலைநிறமடைந்த இடத்துத் தன்னுள்ளே சொல்லுதல்.

(1) *என்னை விரும்பிய தலைவர் பிரிந்துபோதலுக்குச் சம்மதித்து நான் அப்பிரிவைப் பொறுமல் இப்பொழுது பசலை நிறம் அடைந்த என்னியல்பை யாருக்குச் சொல்லுவேன்? எனவே, பிரிதலுக்குச் சம்மதியாவிட்டால் பசலை நிறம் வராதென்பதாயிற்று.*

உ. பசலைபொறுளேன்று கவலையற்ற தோழிக்குத் தலைவி பொறுப்பேனென்பது தோன்றச் சோல்லுதல்.

(2) *நான் பொறுத்துக் கொண்டிருக்க, இப்பசலை நிறம் தன்னை அத்தலைவர் உண்டாக்கினரென்னும் சந்தோச மிகுதியால் உரிமைபற்றி என்மேலேறிப் படர்கின்றது. தோழீ! இதற்கு நீ கவலைப்படாதே.*

௩. அழகும் நாணமும் கெடாமல் நீபொறுத்தல் வேண்டுமென்றதோழிக்குத் தலைவிசோல்லுதல்.

(3) *அத்தலைவர் பிரிகின்ற பொழுதே நோயும் பசலையும் எனக்குக் கொடுத்துவிட்டு அவ்விரண்டுக்கும் பண்டமாற்றாக என்னுடைய நாணத்தையும் அழகையும் கொண்டு போயினர். எனவே, தலைவரைப்பிரிதலால் நாணத்தையும் அழகையும் இழந்து, நோயும் பசலையும் அடைந்தா ளென்பதாயிற்று.*

௪. பிரிகின்றவர் தேற்றிய சோற்களையும் அவர்நற்குணங்களையும் அறிவாயாகையால் அவர்விரைந்து வருவாரேன்ற தோழிக்குத் தலைவி சோல்லுதல்.

(4) *அத்தலைவர் கூறிய சொற்களை மனத்தால் நினைக்கின்றேன். வாயாற் சொல்லப்படுவதும் அவரது நற்குணமே. அப்படியிருக்கவும், பசலைநிறம் வந்ததைத ஆலோசித்தால் ஏதோ? வஞ்சனையா யிருக்கின்றது. எனவே, தலைவரை மறந்தவருக்கே பசலை நிறம் வரவேண்டுமென்பதாம்.*

௫. தலைவர் பிரிந்துசமீபமாயிருக்கவும் நீபொறுக்கின்றுயில்லையேன்ற தோழிக்குத் தலைவி முன்னேநிகழ்ந்தது கூறுதல்.

(5) *அக்காலத்து எமது தலைவர் பிரிந்து செல்வாராக, என் சரீரம் இங்கே பசலை நிறமடைவதன்றோ? இன்று அப்பசலை நிறம் வேறொன்றாகுமோ? அவர் செல்வும், பசலை வரவும் பகலிரவுகள்*

போல மாறிமாறி வருவன. அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தோழியே! நீ சொல்லுகின்றது யாது? (6) விளக்கினது சோர்வு பார்த்து நெருங்கிவருகின்ற இருளைப்போலவே இப்பசலைநிறம் தலைவன் புணர்ச்சியில்லாத சோர்வானசமயம் பார்த்து நெருங்கிவரும் (7) முன்னொருநாளிலே தலைவனைத்தழுவிப் படுத்திருந்தநான் அறிவில்லாமல் சற்றுநேரம் விலகினேன். விலகிய அவ்வளவு நேரத்தில் பசலை நிறமானது அள்ளிக்கொள்ளப்படும் பொருள்போல வந்து நிறைந்தது. சற்றுநேரம் பிரிவுக்கே அப்படியானால், இப்பெரும் பிரிவுக்கு ஆகும்விதம் சொல்லவேண்டுமோ.?

௬. நீ இப்படிப் பசலை நிறமடைவது தகாதென்ற தோழியோடு தலைவி பிணங்கிச் சொல்லுதல்.

(8) இவள் பொறுத்திராமல் பசலைநிறமடைந்தாளென்று என்னைப்பழிகூறுவதல்லது இப்பெண்ணை அத்தலைவர் பிரிந்தாரென்று சொல்லுவார் ஒருவருமில்லை. (9) இப்பிரிவை யானேயுடன்படும்வகை சொல்லித் தேற்றியதலைவர் நீசொல்லியபடி நல்லநிலையினராவரென்றால் என்னுடம்பு அடைவது அடைய, பசலைநிறம் வரக்கடவது. இதனால், தலைவர் சொற்றவறாமல் வரக்கடவரானால், எப்படிப்பட்டதுன்பம் வரும்விதமாகவும் பசலைவந்தாலும் பாதகமில்லையென்பது கருத்து.

எ. தலைவி பொறுத்தற் பொருட்டுத் தோழி தலைவனது தன்மையைப் பழித்த இடத்துத் தலைவி தலைவனது தன்மையுயர்ச்சி கூறுதல்.

(10) பிரிவை யுடன் படும்படி சம்மதிக்கச் செய்த தலைவர் அருளா திருத்தலைச் சிநேக மாயுள்ளோர் பழிகூறுவாரானால், பசப்புத் தானுயினுளென ஒற்றுமையால் தாம் அப்பேரைப் பெறுதலெனக்கு நன்றாகும்.

கஉ௦-ஆம் அதிகாரம்.

தனிப்படர் மிகுதி.

அஃதாவது:—தனியாகிய துன்ப மிகுதியாம். அறமும் பொருளும் நோக்கிப் பிரிதலால், அத்துன்ப மிகுதி தலைவனிடத்தில்லாமல் தலைவியிடத்து உண்டாதல்.

க. உன்னைப் பார்க்கிலும் பொருந்தவராய்த் தலைவர் விரைவிலே வருவார். நீஅவரோடு பேரின்பத்தை அநுபவிப்பாயென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(1) தம்மாலே விரும்பப் பட்ட கணவர் தம்மை விரும்பப் பெற்ற மாதர் காம அநுபவத்தினது வித்தில்லாத பழத்தைப் பெற்றாரல்லவா? (வித்தில்லாதபழமென்றது: தடையில்லாமல் அநுபவிக்குங்காமமென்றபடி) கணவர் பிரிதலேயன்றிப் பின்வராமையும் உடைமையால் அப்பழம் நாம்பெறவில்லை யென்பதாயிற்று. (2) அறமும் பொருளும் இன்பமும் நோக்கி, கணவர் பிரிந்தால் அவரைவிட்டிருக்கமாட்டாத மாதருக்குச் சமயமறிந்துவந்து செய்யும் அக்கணவரது முதன்மையான அன்பு தன்னையே நோக்கி உயிர் வாழ்கின்றவருக்கு மேகமானது பருவமறிந்துவந்து பெய்யும் மழை போலாகும். இதனால், சமயமறிந்து கணவர் வராமையால் பருவநோக்கி மேகம் பெய்யப்படாதஉயிர்போல இறத்தலே நமக்குள்ளதென்பது கூறினாளாயிற்று. (3) தம்மால் விரும்பப்படுகிறதலைவரால் விரும்பப்படுகின்றமாதருக்குத் தலைவர் பிரிந்தாலும் விரைந்துவருவார். வந்தால் காமின்புற்று வாழ்வோமென்னுஞ் செருக்குப் பொருந்தியிருக்கும்.

உ. தலைவரது தன்மையைப் பழித்தலுக்குப் பயந்து அவரது அருளில்லாமையை மறைத்தால், நீ தெய்வத்தன்மை பொருந்திய கற்புடையாய். ஆதலால், கற்புடைய மாதரால் நன்குமதிக்கப்படுவாயென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(4) கற்புடைய மாதராலே நன்கு மதிக்கப்படும் பெண்களும் தம்மால் விரும்பப்படுகிற தலைவராலே விரும்பப்படாரானால் நல்வினையில்லாதவராவர். எனவே, நாயகனால் அவமதிக்கும் பெண்களுக்கு மற்றைமதிப்பால் பயனில்லையென்பதாயிற்று.

ங. தலைவர்மேல் ஆசைநீங்காமல் பொறுத்தாயென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(5) நம்மாலே காதல் கொள்ளப்பட்டதலைவர் நம்மைப்போலே அவர் நம்மிடத்தில் காதல் கொள்ளாத இடத்து நமக்கு என்ன இன்பத்தைச்செய்வார்? (6) மகளிர் ஆடவரென்கிற இரண்டிடத்

திலும் இல்லாமல் ஆசை ஓரிடத்தில் உண்டானால் துன்பஞ்செய்வதாம். காவடிப்பாரம்போல் இரண்டிடங்களிலும் ஒத்திருக்குமானால் இன்பஞ்செய்வதாகும். (7) காமத்தை அநுபவித்தற்கு உரிய இருவரிடத்தும் ஒத்துநில்லாமல் ஒருவரிடத்து நின்று போர்செய்கின்றவனாகிய மன்மதன் அவ்விடத்துப் பசப்பாலாகிய நோயையும் துன்பமிகுதியையும் அறியமாட்டானோ? இனி, பிழைக்கும் வழி யாது?.

ச. தலைவனது தூதுவரக்காணாத தலைவிசொல்லுதல்.

(8) தம்மால் விரும்பப்படும் தலைவரிடத்திருந்து ஓரினிய சொல்லும் பெறாமல் பிரிவுபொறுத்து உயிர்வாழ்கின்ற பெண்களைப்போலத், தைரியமுடையவர் உலகத்திலில்லை. (9) என்னால் விரும்பப்பட்ட தலைவர் எனக்கு அருள்செய்யாரானாலும், அவர்திறத்து உண்டாகும், எந்த வார்த்தைகளும் என் காதுகளுக்கு இன்பஞ்செய்கின்றனவாம். எந்தவார்த்தைகளுமென்றது, அவர்வாரரென்கிற கொடிய வார்த்தையும் என்னும் பொருள்பட நின்றது. அவ்வார்த்தையும் பெற்றிலேனென்பது கருத்து. அவர் திறத்தென்பதற்கு அவரைப்பற்றி யென்பது பொருள்.

ரு. தலைவனது தூதுவரப்பெறாமல் தான் தூதுவிட நினைத்த தலைவி தன்னெஞ்சோடு சொல்லுதல்.

(10) உன்னோடு பொருந்தாத தலைவருக்கு உனது மிகுந்த நோயைச் சொல்லலுற்றனையே! நீ பொறுக்கமாட்டாயானாலும், அரிதாகிய அதனைவிட்டு உனக்குத் துயரஞ்செய்கிற கடலைத் தூர்ப்பதற்கு முயற்சி செய்; அது இலேசாகும்.

கஉக ஆம் அதிகாரம்.

நினைந்தவர் புலம்பல்.

அஃதாவது:—முன் கூடியகாலத்தின் இன்பத்தினை நினைத்துத்தலைவி தனிமையடைதலும், தலைவியைப்பிரிந்து படைவீட்டினிடத்துச்சென்ற தலைவன் தனிமையடைதலுமாம்.

க. தூதாய்ச் செல்லும் பாங்கனுக்குத் தலைவன் சொல்லுதல்.

(1) முன் அநுபவித்த நாளில் உண்டாகிய இன்பத்தை, பிரிந்த இடத்து இப்போது நினைத்தாலும், அப்பொழுது பெற்றது

போல நீங்காத பெருமகிழ்ச்சியடைதலால், உண்டபோதல்லது மகிழ்ச்சிசெய்யாத கள்ளைப்பார்க்கினும் காமமானது இனிமையுடையதாகும். (2) தம்மால் விரும்பப்படுவாரைப் பிரிவினிடத்து நினைந்தால் நினைந்தவர்க்கு அப்பிரிவால் வருவதோர் துன்பமில்லை. ஆதலால், காமம் எவ்வளவாயினும், இன்பம் தருவதொன்றேயாகும்.

உ. தலைவனை நினைந்து வருந்துகின்ற தலைவி தோழிக்குச்சொல்லுதல்.

(3) எனக்குத் தும்மல் உண்டாவதுபோலத் தோன்றிக் கெடுகின்றது, அதனால், தலைவர் என்னை நினைப்பவர் போன்று நினையாராகல் வேண்டும். தூரத்துள்ளாராகிய உறவினர் நினைந்த இடத்து நினைக்கப்பட்டவருக்குத் தும்மல் தோன்றுகிற உலகநடையபற்றி, இவ்வாறு கூறினாள். (4) எமது மனத்தில் அவரெப்பொழுதும் உள்ளவரா யிருக்கின்றார். அப்படியே அவர் மனத்திலும் நாமும் இருக்கின்றேமோ இல்லையோ? (5) தமது மனத்தில் யாம் வராமல் எம்மைக் காவல் கொண்ட தலைவர் எமது மனத்தில் நீங்காமல் தாம் வந்திருப்பதற்கு வெட்கப்பட மாட்டாரோ? இதனால், நாம் நினைக்கின்றோம். அவர் நினைத்திலரென்பது கருத்து.

ரு. அத் தலைவரோடு கூடிய நாளை யின்பத்தை நினைந்து வருந்துகின்றாய்; அதனை மறத்தல் வேண்டுமென்ற தோழிக்குத்தலைவி சொல்லுதல்.

(6) நான் அவரோடு புணர்ந்த நாளை யின்பத்தை நினைத்தலால் பிரிந்த நாளில் உண்டாகும் துன்பவெள்ளத்தில் உயிர் வாழ்ந்திருக்கின்றேன். அந்நினைப்பு இல்லையானால், வேறெதனை லுயிர்வாழ்வேன். (7) அத் தலைவரைக் கூடிய இன்பத்தை மறத்தல் அறியேனாகி இன்று நினைந்திருக்கவும் பிரிவானது என்னுள்ளத்தைச் சுடுகின்றது. அப்படிப் பிரிவு சகியாத நான் மறந்தால், எதனாலிறவாதிருப்பேன்.

சா. திரும்பிவந்து தலைவர் உனக்கு இன்பஞ்செய்வாரென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(8) தலைவரானவர் தம்மை நான் எவ்வளவு மிக நினைத்தாலும், அதற்குக் கோபிக்க மாட்டார்; அவ்வளவன்றோ? அவரென

க்குச் செய்யுமின்பமாவது. கோபிக்கமாட்டாரென்றது, தன்னை நினையாதிருக்கின்றா ரென்று குறிப்பால் இகழ்ந்தபடியாம்.

ரு. தலைவன் தூது வரக்காணாது வருந்துகின்ற தலைவி திடஞ் சொல்லுகிற தோழிக்குச் சொல்லுதல்.

(9) முன்னெல்லாம் நாம் வேறல்லேமென்று சொல்வாருடைய அருளில்லாமையை மிகவும் நினைந்து எனது இனிதாகிய உயிர்கழிகின்றது. இதனால், எனதுயிர் போதற்கு வருந்திலேன், அவரன்பில்லாமைக்கு வருந்துகின்றே னென்பது கருத்து.

சு. திடஞ்சொல்லிய தோழிக்கு எதிர் மொழிகூற அறியாத தலைவி காமமிக்க அதிக துக்கத்தால் சந்திரனைப்பார்த்துச் சொல்லுதல்.

(10) என் மனத்தை விடாதிருந்தே விட்டுப்போன தலைவரை, கண்ணளவாலாயினும், எதிர்ப்படும் வகை சந்திரனே! நீ மறையாதிருப்பாயாக. அப்படிச் செய்தால், நீ வாழக்கடவாய். இதனால், மறைந்தால் பார்த்தற்கு முடியாமல் இருள் வந்து விடுமென்பதாம்.

கஉஉ- ஆம் அதிகாரம்.

கனவுநிலையுரைத்தல்.

அஃதாவது:—தலைவி தான்கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லுதல்.

க. தலைவன் தூது வரக்கண்ட தலைவி சொல்லுதல்.

(1) நான் வருந்துகிறதை அறிந்து அவ்வருத்தம் தீரவிடுத்த தலைவருடைய தூதைக் கொண்டு, என்னிடத்து வந்த கனவினுக்கு என்ன உபசாரத்தைச் செய்வேன்?

உ. தூதுவிட நினைந்த தலைவி சொல்லுதல்.

(2) தூங்காது வருந்துகின்ற கயல்போலும் மையுண்டகண்கள் யான் யாசித்து வேண்டுதலை காரணமாகத் தூங்குமா

கனவிலே காணப்பட்ட தலைவருக்குப் பிரிவைப் பொறுத்திருக்கின்றதன்மையை யான் விரிவாகச்சொல்லுவேன்.

௩. பிரிவுபொறுக்கமாட்டாளென்று கவலையுற்ற தோழிக்குப் பொறுப்பேனென்பது தோன்றத் தலைவி கூறுதல்.

(3) விழித்திருக்கும் காலத்தில் வந்து அருள் செய்யாத தலைவரைக் கனவினிடத்துக் காணுதலால், என்னுயிரானது நீங்காதிருக்கின்றது. (4) விழித்திருக்கும் காலத்தில் வந்து அருள் செய்யாத தலைவரை அவர்போன இடந்தேடிக்கொண்டு வந்துதருதலால் அக் கனவாலெனக்கு இன்பம் உண்டாகின்றது. (5) விழித்திருக்கிற போது தலைவரைக் கண்டு அநுபவித்த இன்பமும் கண்ட அப்பொழுதே இனிதாயிற்று. இன்று கனவினிடத்து அவரைக்கண்டு அநுபவித்த இன்பமும் கண்ட இப்பொழுதே இனிதாயிற்று. ஆதலால், எனக்கு இரண்டும் சமானமாயின. (6) விழிப்பென்று சொல்லப்படுகிற ஒருபாவி இல்லையானால், கனவினிடத்து வந்து கூடிய தலைவர் என்னைப் பிரியமாட்டார்.

௪. விழித்துத் தலைவனைக் காணாத தலைவி கனவிற் புணர்ச்சி நினைந்து பிரிவைப்பொறாமல் சொல்லுதல்.

(7) ஒரு நாளாவது விழித்திருக்கிறபோது வந்து அருள் செய்யாத பாதகராகிய தலைவர் தினந்தோறும் கனவில் வந்து எம்மைவருத்துவது என்ன சம்பந்தம் பற்றியோ? தெரியேன். இதனால், உலகத்தார் விழித்திருக்கிறபோது காணாதது கனவிலே இல்லையென்று சொல்லுவர்; அது என்னிடத்தில் இல்லை யென்று சொல்லினாளென்பதாம்.

௫. அப் பிரிவைத் தான்பொறுத்தற் பொருட்டுத் தலைவன் தன்மையைப்பழித்த தோழிக்குத் தலைவி தலைவன்றன்மையை நயப்படுத்திச் சொல்லுதல்.

(8) என்னெஞ்சை விடாமலிருக்கின்ற தலைவர் நானுறங்கும் போது வந்து என் தோள் மேல் உள்ளவராய்ப் பின் விழிக்கும்போது விரைவுற்று முன்போல நெஞ்சிலுள்ளவராவர். (9) தம

க்கொரு காதலர் இல்லாமையால், அவரைககனவிலே காண அறியாத மாதர் தாமறிய விழித்திருககும்போது வநது அருள் செய்யாத என காதலரை நொந்து கொளவர். எனவே, கனவரிருந்தால் நோ காரென்பதாம். (10) இவ்வூரிலுளள மாதா, விழிததிருக்கும் போது நம்மை விட்டு நீங்கினுரெனறு தலைவர் மேலே கொடுமை சொல்லுவர். கனவினிடத்து அத் தலைவர் நீஙகாமல் வருதலைக் கண் டறியமாட்டாரோ?

கஉ௩-ஆம் அதிகாரம்.

பொழுது கண்டிரங்கல்.

அஃதாவது:—மாலைப்பொழுது வந்த இடத்து அதனைக்கண்டு தலைவி வருந்துதல்.

க. தலைவி மாலைக்காலத்தோடு ஊடிச்சொல்லுதல்.

(1) பொழுதே! நீ தலைவரை நான் கூடியிருந்த நாளின் மாலைக் காலமோ? அல்லை. அநநாளிலே தலைவரைக கூடியிருந்து பின் பிரிந்தாரது உயிரை உண்ணும் இறுதிக்காலமாயிருந்தாய். ஆதலால், கெடுவாயாக.

உ. தலைவி அநுபவத்தை மாலைப் பொழுதின்மேலேற்றிச்சொல்லுதல்.

(2) பகலும் இரவும் கலந்திருந்த மாலையே! நீயும் எம்மைப் போல ஒளி இழநதிருக்கினறுய். வாழ்வாயாக. உனது துணையும் எனது துணைவர்போல இரககம இல்லாமை யுடையதோ? சொல்லுவாய்.

௩. பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(3) தலைவரைச் சேர்ந்த நாளெல்லாம் என்முன்னே நடுக்கமடைந்து பசந்து வநத மாலைக்காலமானது, எனக்கு உயிர் வாழ்தவிலே வெறுப்பு உண்டாகி அவ்வெறுப்பால் உண்டாகிற துன்பம் ஒருகாலைக்கொருகால் அதிகப்பட இப்போது வளரும். (4) தலைவர்

உள்ள பொழுதெல்லாம் என்னுயிர் தளிர்க்க வந்த மாலைக் காலமானது, தலைவரில்லாத இப்பொழுது கொலைசெய்கிற இடத்துக் கொலைபாளிகள் போல அவ்வுயிரைக் கொள்ளுதற்கு வருகின்றது. (5) தலைவர் கூடிய நாள் போல இன்று வேறுபடாமல் வருகிற காலைப் பொழுதுக்கு என்னாலே செய்யப்பட்ட உபகாரம் யாது? வேறுபட்டு வருகின்ற மாலைப்பொழுதுக்குச் செய்யப்பட்ட அபகாரம் யாது?

௪. இன்று இப்படிப் பட்டவளாகின்ற நீ அன்று தலைவர் பிரிவுக்கு எப்படிச் சம்மதித்தாயென்ற தோழிககுத் தலைவி சொல்லுதல்.

(6) முன்னெல்லாம் நட்பாய் எனக்கு இன்பஞ் செய்து வந்த மாலைக்காலமானது இன்று பகையாய்த் துன்பஞ் செய்தலைத் தலைவர் பிரிதற்கு முன்னே அறியப்பெற்றிலேன். அறிந்தேனானால், பிரிவுக்கு உடன்படேனென்பது கருத்து.

௫. மாலைப்பொழுதிலே இப்படிப்பட்டவளாதற்குக் காரணம் யாதென்றதோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(7) இக் காமநோயாகிய மலர் காலைப்பொழுதிலே காயரும்பாகிப் பகற்பொழுதெல்லாம் மலரும் பருவத்துப் பெரிய அரும்பாகி மாலைப்பொழுதிலே மலர்கின்றது. (8) முன்னெல்லாம் இன்பம் செய்த இடையன் வேய்ங் குழலோசை இப்போது நெருப்புப்போலச் சுடுவதாகி மாலைக்காலத்துக்குத் தூதுமாகி அம்மாலைவந்து என்னைக் கொல்லும் இடத்து அதற்குத் துணையாகிக் கொல்லும் ஆயுதமுமாயிற்று. இதனால், தானே கொல்வதாகிய மாலைக்காலம் தனக்குச் சகாயமாகக் கொல்லுதற்கு ஒரு ஆயுதமும் பெற்றால், என்ன செய்யமாட்டாதென்பது கருத்து. (9) இதற்கு முன்னெல்லாம் யானே மதிமயங்கித் துன்பமுற்று வருந்தினேன். இனிமேல் கண்டவரும் மதிமருளும்படி மாலைக்காலம் வரும்பொழுது இவ்வூரார் எல்லாரும் மதிமயங்கித் துன்பநோயை அநுபவிப்பார். இதனால், மாலைக்காலம் விரைவாக இறந்துபாடுறுந் துன்பத்தைச் செய்கின்றதென்பது தாயிற்று. (10) தலைவர் பிரிவைப் பொறுத்து இறவாதிருந்த என்னுயிரானது பொருளியல்பே தமக்கு முக்கியமாகவுடைய அவரை நினைத்து மயங்கப்பட்ட இம்மாலைக்காலத்திலே இறக்கும். இனி,

சொல்லி என்ன பயன்? இறக்குமென்றது, வருதற்குக் குறித்த நாள் கழிந்ததனு லென்க.

கஉ௪-ஆம் அதிகாரம்.

உறுப்புநலனழிதல்.

அஃதாவது:—தலைவியினுடைய கண்ணும் தோளும் நெற்றியும் முதலான அவயவங்கள் அழகழிதலாம்.

க. பிரிவாற்றுமை மிகுதியால் வேறுபட்ட தலைவிக்குத் தோழி சொல்லுதல்.

(1) பிரிவாற்றுமை நம்மிடத்து நிற்க நெடுந்தூரத்திலே சென்றதலைவரை நினைத்தழுதலால் உன்கண்கள் ஒளி இழந்தன. அன்றியும், தமக்கு நாணின நல்லமலர்களுக்கு நாணிவிட்டன. இதனால். கண்டார் தலைவரைக் கொடியரென்று சொல்லுவர். நீ பொறுத்துக் கொள்வா யென்றதாயிற்று. (2) நிறம் வேறுபட்டு நீரொழுகுகின்ற நின்கண்கள் நம்மால் விரும்பப்பட்ட தலைவரது அருளாமைப்பிறருக்குச் சொல்லுவனபோல் இருக்கின்றன. ஆதலால், இனி நீ பொறுத்தல் வேண்டும். (3) தலைவரோடு கூடியநாளில் இன்ப மிகுதியால் பூரித்த உன்னுடைய தோள்கள் இன்று அவர்பிரிந்திருத்தலை மிக அறிவிப்பவைபோல வாடுகின்றன. இது, தகாததாம், (4) அன்றைத்தினமும் தலைவர் நீங்குதலால், அவராற்பெற்ற செயற்கையழகு மாத்திரமல்லாமல், பழைய இயற்கையழகும் இழந்த உன்னுடையதோள்கள் இன்றைத்தினம் அதற்குமேலும் பெருமை இழந்து பசும்பொன் வளையல்கள் கழலச்செய்கின்றன. இவை, இப்படிச் செய்யலாகா வென்பதாம். இதனால், தலைவர் பிரிந்த நாளில் அன்பிலரென்பதும் குறித்தநாளில் வாராமையால் பொய்யரெனபதும் வெளிப்பட்டன. (5) தழுவும் கைகள் விலகினாலும் பொருந்தவனுக்கு இப்படிக் காலதாமதஞ் செய்தால் என்னுமோ? என்று நினையாத கொடியவருடைய பொல்லாங்கை வளையல்களுங் கழலச்செய்து, பழைய இயற்கையழகும் இழந்த இத்தோள்கள் சொல்கின்றன. இனி, அப்படிச் சொல்வதை மறைக்கும் உபாயம்யாது?

உ. தான் பொறுத்தற் பொருட்டுத் தலைவன்றன்மையைப்பழித்த தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(6) தலைவர் பிரிவை யான் பொறுத்திருக்கவும் என் வசப்படாமல் வளையல் கழலும்படி தோள்கள் வாட அவற்றைக்கண்டு நீ அவரைக் கொடியவரென்று சொல்லுதலைப் பொறாமல் யான் என்னுள்ளே நோகின்றேன். இதனால், அவர் பிரிந்ததற்கு நோகின்றிலேனென்பதாயிற்று.

ங. தோழி தலைவன் இயலைப்பழித்தல் பொறாது தலைவி தன்னெஞ்சுக்குச் சொல்லுதல்.

(7) மனமே! தோழியாலே கொடியரென்று சொல்லப்பட்ட தலைவருக்கு என் வாடுகிற தோளினால் விளைகிற துன்பமிகுதியைச் சொல்லி, ஒரு மேம்பாட்டையடைய வல்லமையுடையாயோ? வல்லமையுடையாயானால், அதை ஒப்பது வேறில்லையாம்.

ச. தொழிலை முடித்துத் திரும்பிவருகிறதலைவன் முன்னடந்ததை நினைத்துத் தன்னுள்ளே சொல்லுதல்.

(8) தன்னை இறுகத்தழுவிய கைகளை இவளுக்கு நோகுமென்று நினைத்து ஒருகணம் தளரச்செய்தேனாக. அவ்வளவும் பொறாமல் பசியவளையல்களை அணிந்தவளது நெற்றியானது நிறம் வேறுபட்டது. அப்படிப்பட்ட நெற்றி இப்பிரிவிற்கு யாதுசெய்யுமோ? இதனால், இனி விரைந்துசெல்ல வேண்டுமென்பது கருத்து. (9) அப்படித்தழுவிய கைகளைத் தளர்த்தலால், அப்புணர்ச்சிக்கு நடுவே சிறுகாற்று நுழைந்ததாக, அவ்வளவு இடையிட்ட தூரத்தைப்பொறாமல் அப்பெண்ணினது குளிர்ந்த கண்கள் பசலை நிறமடைந்தன. அப்படிப்பட்ட கண்கள் மலைகளும் காடுகளுமாகிய இவ்வளவிடையிட்ட தூரத்தை எப்படிப் பொறுக்கும். (10) புணர்ச்சியிலே கைகளைத் தளர்த்தியபொழுதே பசலைநிறமடைந்த கண்ணினது ஒளி பொருந்திய நெற்றி பசலை நிறத்தைச் செய்ததைக் கண்டு கைகளையும் தளர்த்தி மெய்களும் நீங்கித் தென்றற்காற்று நுழையும்வரை பசந்திலேனென்று தன்வன்மையும் அந்நெற்றியின் மென்மையும் நோக்கித் துன்பமடைந்து வெட்கப்பட்டது. இதனால், அப்படி அவள்

அவயவங்கள் ஒன்றினோடொன்று முந்தி கலகஞ்செய்யுமாதலின், நாம் விரைந்து செல்லுவோமென்பது கருத்து.

கஉரு-ஆம் அதிகாரம்.

நெஞ்சொடுகிளத்தல்.

அஃதாவது;—பிரிவுபொறாமை அதிகப்பட்ட தனக்கு ஒரு ஆதாரங் காணாத தலைவி தன்மனத்தோடு செய்யும்வகையறியாது சொல்லுதல்.

க. தலைவி பிரிவாற்றாமை நீங்கும் விதம் நாடுதல்.

(1) மனமே! ஒன்றாலுந்தீராத மிக்கநோயைத் தீர்க்கும் மருந்தாவதொன்றை நானறியும்படியாக உயிரினுஞ் சிறந்த நாணத்தை விட்டு, செய்வது ஒன்றானாலும் அறிந்துசொல்லமாட்டாயா? இதனால், சொல்லாயென்றால் என்னுயிர் தரியாதென்பதாம்.

உ. தலைவி தலைவனைக்காணும் ஆசைமிகுதியால் சொல்லுதல்.

(2) என்மனமே! வாழ்வாய். அத்தலைவர் என்மேல் ஆசையிலராகவும் நீ அவர் வரவுபார்த்து வருந்துதற்குக் காரணம் உன்னறியாமையே அன்றி, வேறொன்றில்லை. (அறியாமையாவது: அவரிடத்து நாம் போவதறியாதிருத்தல்.) இது, இகழ்ச்சியாதலால் அவ்விகழ்ச்சிக் குறிப்புத்தோன்ற வாழ்வாயென்றாள். (3) மனமே! அவரிடத்துக்குப் போகாமல் இங்கேயும் இறந்திடாமலிருந்து அவரது வரவை நினைத்து நீ வருந்துகின்றதனால் என்னபயன்? இத் துன்பநோய் செய்த தலைவரிடத்து நம்மேல் இரக்கஞ்செய்துவர நினைத்தல் உண்டாகமாட்டாது. (4) மனமே! நீ அத்தலைவரிடத்துச் செல்லுவாயானால், இக் கண்களையும் உடன் கூட்டிக்கொண்டு செல்லுக. அப்படியன்றி, நீ மாத்திரம் செல்வாயானால், இக்கண்கள் அவரைக்காணவேண்டி என்னை நீ காட்டென்று தின்பனவைபோல வருத்தம் செய்யும். (5) மனமே! நாம் தம்மை விரும்பினாலும் நம்மை விரும்பாத தலைவரை வெறுத்தாரென்று நினைந்து பிணங்கிக் கைவிட்டிருக்கும் வழி நமக்கு உண்டோ? இல்லை. ஆதலால், அவரிடத்து நாம் போவதே தக்கதென்பதாம்.

௩. தலைவன் கொடுமை நினைந்து செல்லுதற்கு உடன்படாத நெஞ்சினைத் தலைவி கோபித்துச் சொல்லுதல்.

(6) என்மனமே! நான் தம்மோடு ஊடல்செய்தால் கூடலால் அவ்வூடலை நீக்கவல்ல தலைவரைப்பார்த்தால், பொய்யாகவாவது ஒருதரம் பிணங்கிப் பின் அதனை நீக்கமாட்டாய். அது செய்யும் அளவும் பொருத நீ இப்போது அவரைக்கொடியரென்று பொய்க் கோபமாகக் கோபிக்கின்றாய். இனி, அதனை ஒழித்து அவரிடத்துச் செல்லத் துணிவாயாக. இதனால், கண்டால் வெறுக்கமாட்டாத நீ காணாத இடத்து வெறுக்கின்றதனாற் பயனில்லையென்பதாம்.

௪. நாணம் தடுத்தலாலே செல்லுதலில்லாத தலைவிசொல்லுதல்.

(7) நல்லமனமே! ஒன்று செய். அஃதாவது, நாணத்தை விடமாட்டாயானால் காமவிருப்பத்தை விட்டுவிடு. இவ்விரண்டும் விடாமை உன் கருத்தாகில், ஒன்றற்கொன்று பகையாகிய இவ்விரண்டையும் நானே ஒருமிக்கத் தாங்கும் வலியில்லேன். (8) என்மனமே! தலைவர் நம்பிரிவாற்றாமை அறியாமையால் இரக்கஞ்செய்து வந்து அருள் செய்யாராயினரென்று நினைத்து அப்பிரிவாற்றாமையை அறிவித்தற் பொருட்டு நம்மைப் பிரிந்துபோகிய தலைவர் பின்னே துன்பமுற்றுப்போகலுற்ற நீ அறியாமையுடையாய். இதனால், நம்பிரிவாற்றாமையை அறிந்திருந்தும் பிரிந்தாரென்பதும் அவ்விதம் பிரிந்தவர் இனி என்ன செய்தாலும் அருளாரென்பதும் பெறப்பட்டன. (9) என்மனமே! தலைவர் உன்னுள்ளிருப்பவராக முன்னெல்லாம் கண்டிருந்தும், இப்பொழுது புறத்தே தேடி யாரிடத்துச் செல்லுகின்றாய்? இதனால், தலைவி எப்பொழுதும் தலைவரை நினைத்துக் கொண்டிருக்கின்றாளென்பதாயிற்று.

௫. தலைவரை மறந்துபோறுத்தல் வேண்டு மேன்பது மனத்துக்குத் தோன்றத் தலைவி சொல்லுதல்.

(10) மனமே! நம்மைக்கூடாத வண்ணம் துறந்து போயின தலைவரை நாம் நினைத்தால் முன்னிழந்த புறத்தழகே அன்றி, இன்னமும் அகத்தழகையும் இழந்துவிடப்போகிறோம். (அகத்தழகு: நிறை)

நிறையழிதல்.

அஃதாவது:—தலைவி மனத்திலே அடக்கப்படுமவைகளை ஆசைமிகுதியால் அடக்கமாட்டாமல், வாய்விட்டுச்சொல்லுதல்:

க. நாணும் நிறையும் அழியாமல் பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(1) *நாணமாகிய தாழ்க்கோலினைக் கோத்த நிறை யென்று சொல்லப்படுகிற கதவைக் காமவிருப்பமாகிய உளி முறிக்கின்றது. இனி, நாணும் நிறையுமாகிய இரண்டும், நிற்றலும் இல்லை. யான் பொறுத்தலும் இல்லை. (நிறை: கலங்கா ஒரு நிலை)*

உ. நெஞ்சினிடத்தே தோன்றிய காமம் நெஞ்சத்தால் அடக்கப்படுமென்றதோழிக்குத் தலைவிசொல்லுதல்.

(2) *எல்லாரும் தொழில் நீங்குகின்ற நடு ராத்திரியிலும் என் மனத்தைத் தண்டித்துத் தொழிலிலே ஆளுகின்றது. ஆதலால், காமமென்று சொல்லப்பட்ட ஒன்று ஐயோ தாட்சணியமில்லாததாயிருந்தது. இதனால், காமம் தன்னால் அடக்கப்படாமை சொல்லினாளாதலறிக.*

ங. மகளிர்காமம் மறைக்கப்படுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(3) *இக்காமத்தை நான் ஐயோ! என்னுள்ளே மறைக்க நினைப்பேன். ஆதலால், இக்காமம் என் கருத்தின் வழிவாராமல் தும்மலைப்போல் வெளிப்பட்டே விடுகின்றது.* (4) *ஐயோ நான் இதுவரை என்னை நிறையுடையே னென்று நினைத்திருப்பேன். அதனால், என்னினைவை மாற்ற எனது காமம் மறைத்தலைக் கடந்து பலரும் அறிய வெளிப்படுகின்றது. எனவே, காமம் ஒருவருக்கு அடங்கினதல்ல வென்பதாயிற்று.*

ச. நம்மை மறந்தவரை நாமுமறந்து விடுவேமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(5) *தம்மை நீங்கிப் போன தலைவர்பின் செல்லாமல் தாமும் நீங்கி நிற்கிற நிறையுடைமையானது காமநோயுற்றார் அறிவ*

தோன்றல்லாமல் காமநோயுற்றார் அறிவதோன்றல்ல. எனவே, காம நோயுடையார் மானமில்லாதவரெனபதாயிற்று. (6) என்னை நீங்கிச் சென்ற தலைவர்பின்னே யான் செல்லவேண்டுதலால், என்னை அடைந்த துன்பமானது எந்தன்மையதென்றால், மிக நல்லது. இது, இகழ்ச்சிக் குறிப்பு; அஃதாவது: மிகக கொடியதென்றபடி.

௫. பரத்தையிடத்துப் பிரிந்துவந்த தலைவனோடு நிறையழிவினாலே கூடிய தலைவி நீ பிணங்காமைக்குக்காரணம் யாதென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(7) நம்மால் விரும்பப்பட்ட தலைவர் வந்து காமத்தினாலே நாம் விரும்பியவைகளைச் செய்யுமளவில், நாணென்று சொல்லப்பட்ட இச்சிறியதையும் அறியமாட்டோமாகியிருந்தோம். அபேதம் பற்றித், தோழியையும தன்னோடு சேர்த்து இருந்தோமெனக்கூறினாள். (8) நமது நிறையாகிய கோட்டையை,அழிக்கிற ஆயுதம், பலபொய்கள் பேசவல்ல திருடனாகிய தலைவனுடைய தாழ்ந்த சொற்களல்லவா? ஆதலால், அந்நிறை நிற்கும்விதம் யாது? எனவே, தலைவன் தாழ்ந்த சொல்லையுடையனாகில், தலைவி நிறையும் ஊடலும் நில்லாவென்பதாயிற்று.(9) தலைவர் வந்தபோது ஊடல் செய்யக் கடவேனென்று நினைத்து அவரெதிரே நில்லாமல் வேறோரிடத்திலே போனேன். போகியும் என்மனமானது கலங்கா நிலையில் நில்லாமற் கெட்டு அவரோடு கலத்தலை அறிந்து இனி, அந்நினைப்பு, நிலையாதென்று தழுவினேன். (10) கொழுப்பைத் தீயிலிட்டால் அது உருதுயாறுபோலத் தலைவரைக் கண்டால் நிறையழிந்து உருகுகின்ற மனமுடைய மாதருக்கு நாம் ஊடல் செய்து பின் புணர்ந்து அந்நிலையிலே நிற்போமென்று நினைத்தல் உண்டாகுமோ?

கஉஎ-ஆம் அதிகாரம்,

அவர்வயின்விதும்பல்.

அஃதாவது:—தூரதேசப் பிரிவிலே தலைவனும் தலைவியும் ஆசைமிகுதியால் ஒருவரையொருவர் காணுதற்கு விரைதல். (விரைதல்: அவசரப்படுதல்.)

௧. தலைவி தலைவனைக் காணுதற்கு அவசரப்படுதலாற் சொல்லுதல்.

(1) என் விரல்கள் தலைவர் நம்மைப் பிரிந்து போகிய நாள்களைச் சுவரிலே குறிவைத்துத் தொட்டெண்ணுதலால், தேய்ந்தன. அதுவே அல்லாமல், என் கண்களும் அவர் வரும் வழிபார்த்து ஒளியிழந்து புல்லியவாயின. இவ்வாறாகியும், அவர் வரவு உண்டாவதில்லை. (புல்லியவாதல்:சிவந்து வெதும்பிச் சுருங்குதல்) இச்செய்கைகளால் ஆசை மிகுதியாதலறிக.

௨. பிரிவாற்றுமை மிகுதலால், எப்பொழுதுந்தலைவரை நினையாதேசிறிதுமறக்கல் வேண்டுமென்ற தோழிக்குத்தலைவிசொல்லுதல்.

(2) விளங்காநின்ற ஆபரணமுடைய தோழியே! இறந்துபடுகின்ற இந்நாளில் தலைவரை மறப்பேனுனல், மறுபிறப்பிலும் அழகானது என்னை விட்டு நீங்க, எனது தோள்கள் வளையல்கள் கழலப் பெறுவன. எனவே, இச்சமயம் அவரை நினைத்தால் மறுமையிலே அவரை அடைந்து இன்புறலாம். ஆதலால், மறக்கமாட்டேனென்பதாம். மரண சமயத்தில் எதை நினைத்தாலும் அது மறுபிறப்பிலே கைகூடுதல் நூல் முடிபு. (3) இன்பத்தை விரும்பாமல் வெற்றியை விரும்பி நாம் துணையாதலை யிழந்து தமது மனவூக்கமே துணையாகப் போயின தலைவர், அவ்வெற்றியையும் ஊக்கத்தையும் இழந்து இங்கு வருதலை விரும்புதலால், இந்த நிலையிலும் உயிரோடிருக்கின்றேன். இல்லையாயில், இறந்துபடுவேனென்பதாம். (4) காமத்தை நீங்கினவராகி நம்மைப் பிரிந்து போன தலைவர் காமத்தைக் கூடினவராகி நம்மிடத்து வருதலை நினைத்தலால், என் மனமானது வருத்தமொழிந்து மேன்மேலும் பருத்தெழுகின்றது. எனவே, அவர் வரவை நினையாமல் இருப்பனேல் இறந்து படுவேனென்பதாம்.

௩. தலைவனது வரவு சொல்லிப் பிரிவாற்றுமையால் நிறம்வேறுபடாதே யென்றதோழிக்குத் தலைவிசொல்லுதல்.

(5) என் கண்கள் நிறையும் வகை என் கணவனை நான் காண்பேனாக. அப்படிக் கண்ட பின்பு என் மெல்லிய தோள்களில் உள்ள பசலை நிறம் தானே நீங்கும். (6) இவ்வளவு நாளாகவரா

திருந்த தலைவன் ஒருநாளென்னிடத்து வருவானாக. வந்தால் துன்பஞ் செய்கின்ற காமநோயெல்லாம் கெட, அவனிடத்திலுள்ள இன்பமாகிய அமிர்தத்தை ஐம்பொறிகளால் உண்பேன். (ஐம்பொறிகள: மெய் வாய் கண் மூக்கு செவிகளாம.) (7) என் கண்போன்ற சிறந்த தலைவர் வருவாரானால், அவர் வராமல் தாமதஞ் செய்ததற்காகப் பிணங்குவேனோ? சகிக்க மாட்டாமல் தழுவுவேனோ? இவ்விரண்டும் வேண்டுதலால் இவ்விரு செயல்களையும் கலப்பேனோ? யாது செய்யக் கடவேன். எனவே, இம்மூன்றனையும் செய்தல் கருதுதலாலாசை மிகுதி என்பதாயிற்று.

ச. அரசனுக்குத் துணையாகப் பிரிந்த தலைவன் போர் முடிவு தாமதித்த இடத்தே தலைவியை நினைந்து தன்னுள்ளே சொல்லுதல்.

(8) அரசன் போர்செய்தல் புரிந்து வெல்வானாக. நாமும் மனைவியைச் சென்று கூடி அவ்விடத்து மாலைக்காலத்துக்குப் புதுமை செய்யக் கடவேம். அஃதென்னென்றால், போர் செய்யுமிடத்து வந்த மாலைக்காலத்துக்கு எதிர்கொள்ளுதல் அலங்கரித்தல் முதலியவையில்லாமல், இவ்விரண்டும் மனைகலந்த மாலைக்காலத்துக்கு உண்டாதலென்க. (9) தூரதேசத்திற்குச் சென்ற தம் காதலர் திரும்பி வரக்குறித்த நாளை நினைத்துக் கொண்டு, அந்நாள் வரும் வரை உயிரைத் தாங்கி வருந்து மாதர்க்கு ஒரு நாளானது பல நாள் போல நீண்டதாகக் காட்டும். இது, தலைவி வருத்தத்தைத் தலைவன் பிறர் மேலேற்றிச் சொல்லிய படியாம். (10) தலைவி நம் பிரிவுபொறாமல் உள்ளம் உடைந்து இறந்தஇடத்து நம்மைச் சேரக்கடவளானால், என்ன பயன்? அன்றி, சேர்ந்தாலென்ன பயன்? அன்றி, மெய்யுறக் கலந்தாலென்னபயன்? இவை ஒன்றாலும் பயனில்லை. ஆதலால், நாம் விரைந்து செல்லவேண்டுமென்பது தலைவனது கருத்து.

கஉஅ- ஆம் அதிகாரம்.

குறிப்பறிவுறுத்தல்.

அஃதாவது:- தலைவன் தலைவி தோழி என்ற இவர்கள் ஒருவர் குறிப்பை ஒருவருக்கு அறியச் செய்தல்.

க. பிரிந்து கூடிய தலைவன் ஆசைமிகுதியினாலே புணர்ச்சித் தொழிலைப் புதிது புதிதாகப் பலநாளும் பாராட்டல் கண்டு தலைவி இன்னம் பிரிவானென்று அஞ்ச, அதைத் தலைவன் குறிப்பால் அறிந்து தலைவிக்குச் சொல்லுதல்.

(1) *நீ சொல்லாது மறைத்தாயாலும் அதற்கு உடன்படாமல் நின்னைக் கைகடந்து நின் மையுண்ட கண்களே எனக்குச் சொல்வது ஒரு காரியம் (தலைவனின்னமும் பிரிவானென்று அஞ்சுதல்) உண்டாயிருக்கிறது. இனி, நீயே அதனைத் தெளியச் சொல்வாயாக.*

உ. நாணத்தால் தலைவி தன்னினைப்பைச் சொல்லாத இடத்துத் தலைவன் தோழிக்குச் சொல்லுதல்.

(2) *என் கண்ணிறைந்த அழகையும் மூங்கில்போன்ற தோள்களையும் உடைய உன்னுடைய மாதுக்குப் பெண்பாலாரிடத்து நிறைந்த அறியாமை அளவுக்குள் அடங்காது மிகுந்தது.* (3) *கோக்கப்பட்ட படிகமணிக்குள்ளிருந்து புறத்தே விளங்கித் தோன்றும் நூலைப்போல இம்மடந்தையினது அழகுக்குள்ளிருந்து புறத்தே விளங்கித் தோன்றுவதாகிய ஒரு குறிப்புண்டு. இதனால், அக்குறிப்பை நானறிந்திலேன். நீ அறிந்து சொல்லென்பது கருத்து.* (4) *மலரும்பருவத்து அரும்பினது மொட்டினுள் உள்ளதாய்ப் புறத்தில் தோன்றாத வாசனைபோல உன் மாதினது சிரிப்பின் முதிர்ச்சியுள்ளே ஒரு குறிப்பிருக்கிறது. இதனால், அக்குறிப்பு முழுவதும் வெளிப்படாது இருக்கின்றதென்பதாம்.* (5) *நெருங்கிய வளையல்களையுடைய தலைவி என்னிடத்தில் இல்லாதபிரிவை நினைத்து, அதனை யெனக்குச் சொல்லாமல், மறைத்துப்போன கள்ளத்தனத்தின் குறிப்பால், பொருந்திய என் துன்பத்தை நீக்கு மருந்தொன்று உன்னிடத்திலுடையது. (அஃதாவது: பிரியேனென்பது தலைவிக்குச் சொல்லித் தேற்றுதல்.)*

௩. தலைவன் குறிப்பறிந்த தலைவி அக்குறிப்பை அக்குறிப்புத் தெளிவிக்கவந்த தோழிக்குச் சொல்லுதல்.

(6) *தலைவர்வந்து தம் பிரிவினாலாகிய துன்பத்தை மிகவும் நீக்கி நாம் சந்தோஷிக்கும் விதமாகக் கூடுகின்ற புணர்ச்சியானது*

பின்னும் பிரிவினாலாகிய துன்பத்தை அரிதாகப் பொறுத்திருந்து அவரது அன்பிலாமையை நினையுந் தன்மையையுடையது. இதனால், தலைவர் திரும்பவும் பிரிந்துபோவாரென்பது குறிப்பால் விளங்குகிறதென்று கூறினளாயிற்று. (7) குளிர்ந்த நீர்த்துறைகளையுடைய தலைவன் நம்மை மெய்யினாலே கூடியிருந்தே மனத்தினாலே பிரிந்தமையை அவன்குறிப்பால் அறிதற்கு உரிய நமயினும் இவ்வளையல்கள், முன்னமே அறிந்தன. (அஃதாவது: தலைவன் பிரிந்துபோவானென்று நினைத்த மாத்திரத்தினாலே சரீரமெலிதலால் வளையல்கள் கழன்றனவென்பதாம். (8) எமது தலைவர் நேற்றே பிரிந்துபோயினர். நாமும் அப்பிரிவால் உடம்பு வேற்றுநிறம் அடைந்து எழுநாளுடையோம் ஆயினோம். எழுநாளென்றது, பிரிவைச் சந்தேகித்த நாள்முதல் இன்றுவரையென்க.

ச. தலைவி குறிப்பறிந்த தோழி அதனைத் தலைவனுக்கு அறிவித்தல்.

(9) நான் தெளிவித்த இடத்தே தெளியாமல் அவர்பிரிய நாணிங்கேயிருநதால், இவை நில்லாவென்று, தன் வளையல்களைப் பார்த்து நில்லாமைக்குக் காரணமாக இவை மெலியுமென்று மெல்லிய தோள்களையும் பார்த்துப், பின் இவ்விரண்டும் உண்டாகாமல் நீர் நடந்து காத்தல்வேண்டுமென்று தன் கால்களையும் பார்த்து அவ்விடத்து அவள் செய்த குறிப்பு உம்முடன் அவள் வருதலாயிருந்தது. (நீரென்றது: கால்களை.)

ரு. பிரியாமைக் குறிப்பினைத் தோழிக்குத் தலைவன் அறிவித்தல்.

(10) பெண்கள் தமது காமநோயைத் தோழியர்க்கும் வாயாற் சொல்லாமல் கண்ணினாற் சொலவி அந்நோயைத் தீர்த்தல்வேண்டுமென்று அத்தோழியரை யாசியாமல் உடன்போதல் குறித்துத், தமது கால்களை யாசித்தல் தமக்கு இயல்பாகிய பெண்மைமேலும் ஒரு பெண்மையுடைத்தென்று அறிந்தோர் சொல்லுவர். இப்படிச் சொல்லவே, நான பிரியேனென்று தலைவன் தோழிக்குக் குறிப்பித்தவாறாயிற்று. (யாசித்தல்: இரந்துகேட்டல். பெண்மை: பெண்களுக்குரிய குணம்.)

௧௨௯-ஆம் அதிகாரம்

புணர்ச்சி விதும்பல்.

அஃதாவது:—தலைவனுந் தலைவியும் புணர்ச்சி இடத்து விரைதல்.

௧. பிரிதற்றறிப்புடையவனாகிய தலைவனோடு நீ பிணங்காமைக்குக் காரணம் யாதென்று பரிகாசித்துச் சிரித்த தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(1) நினைத்த அளவிலே களிப்படைதலும், கண்ட அளவிலே மகிழ்ச்சியடைதலும் கள்ளுண்டவருக்கில்லை. காமமுடையவருக்கு உண்டு. (களிப்படைதலாவது: உணர்வு கெடாது மகிழ்தல். மகிழ்ச்சியாவது: அவ்வுணர்வு கெட்டுவிடுதல்.) (2) காமமானது பனையளவினு மிக மகளிருக்கு உண்டாமானால், தினையளவும் தலைவரோடு மகளிர் ஊடல் செய்யாதிருக்கவேண்டும். இதனால், ஊடினால் பொழுது வீண்போமென்று காமம் அநுபவிக்க விரைந்தவாறுதல் காண்க. (3) நம்மை அவமதித்துத் தான்வேண்டும் அவைகளையே செய்தாலும், தலைவனை என்கண்கள் காணாதிருக்கின்றனவில்லை. அப்படியானால், அவனோடு எப்படி ஊடல் செய்வது? (4) தோழியே! தலைவரைக் காணுதற்குமுன அவர் செய்த குற்றத்தையெண்ணி அவரோடு பிணங்குதற்குச் சென்றேன். என்மனம் அவரைக் கண்டவுடன் அதை மறந்து புணர்தலிலே சென்றது. ஆதலால், என்னெண்ணம் முடியவில்லையென்பதாம். (5) முன்னெல்லாங் கண்டிருந்தும் மையெழுதும்போது அவ்வெழுது கோலினகருமையைக் காணமாட்டாத கண்ணைப்போலத் தலைவனது குற்றத்தை அவனைக்காணாத இடத்தெல்லாம் கண்டிருந்தும் அவனைக் கண்ட இடத்துக் காணமாட்டேன். (6) நான் தலைவனைக் காணும்பொழுது அவன் குற்றங்களானவைகளைக் காணமாட்டேன். அவனைக் காணாத பொழுது குற்றங்களல்லாதவைகளைக் காணமாட்டேன். (7) தம்மை இழுத்துக்கொண்டு போதல் அறிந்துகொண்டு ஓடுகின்றநீரிலே பாய்வோர்செயல்போல, ஊடல் நிலைக்கமாட்டாதென்பது அறிந்துகொண்டு கள்வனோடு ஊடல்செய்து பெறும் பயன்யாது?

உ. தலைவி புணர்ச்சி விரைதலறிந்த தோழி தலைவனுக்குச் சொல்லுதல்.

(8) கள்வனாகிய தலைவனே! எங்களுக்கு உனது மார்பானது வெட்கம் ஒழுக்கம் உணர்வு நிறையாகிய இவைகள் இல்லாமையைச் செய்தாலும், தன்னை உண்டு களித்தவருக்கு அவமானப்படத்தக்க இனிமையில்லாதவைகளைச் செய்தாலும், உண்ட அவராலே மேலு மேலும் விரும்பப்படுவதாகிய கள்ளைப்போலும்.

௩. தீராத ஊடலிலே தலைவன் சொல்லுதல்:

(9) காம இன்பம் பூவினும் மெல்லிதாயிருக்கும்: அப்படிமெல்லிதாயிருக்கையை அறிந்து, அதன் பக்குவத்தைப் பெறுவோர் உலகத்திற் சிலர். குறிப்பும், ஆசையும், அநுபவிப்பும், இன்பமும் ஒரு காலத்திலே ஒத்து அநுபவித்தற்கு உரியரிருவர், அதற்கேற்ற காலமும் இடமும் உபகரணங்களும் பெற்றுக்கொண்டு கூடி அநுபவிக்க வேண்டுதலால், இவை எல்லாருக்கும் இயைதல் அருமை நோக்கி அதன் பக்குவத்தைப் பெறுவோர் சிலரென்றான். அவைகளுள் ஏதேனும் ஒன்று ஒவ்வாமல் வேறுபடினும், வாடுதலால் மலரினு மெல்லிதென்றான். இதனால், குறிப்பு ஒவ்வாமையால் அப் பக்குவத்தை யான் பெற்றிலேனென்பதாயிற்று. (குறிப்பு ஒவ்வாமை யாவது: தலைவன் பிரியாதிருக்கவும் பிரிவானென்று தலைவி நினைத்தல்.) (10) என்காதலியாகிய தலைவி முன்னொருநாள் புணரச்சென்ற என்னோடு, தன்னுடைய கண்பார்வை மாத்திரத்தாலே ஊடல் செய்து புணர்தலிலே என்னைப்பார்க்கினும் தான் விரைவுற்றுக் கண் மாத்திரத்திலே ஊடியஅதனையும் அப்பொழுதே மறந்துகூடிவிட்டாள். ஆதலால், நானிப்படி வருந்தவும் விரையாமல் ஊடல்செய்து நிற்கின்ற இவள் அவளல்லள் யாரோ?

கஙௐ-ஆம்-அதிகாரம்.

நெஞ்சொடுபுலத்தல்.

அஃதாவது:—காரணம் உண்டாகிய இடத்தும் ஊடல் செய்யாமல் புணர்ச்சியைவிரும்புகின்ற மனத்துடனே தலைவி ஊடுதலும், தலைவன் ஊடுதலுமாம்.

க. தலைவனிடத்துக் குற்றம் உண்டாகியஇடத்தும் பிணங்க நினையாதநெஞ்சிற்குத் தலைவி சொல்லுதல்.

(1) மனமே! அத்தலைவர் மனம், நம்மை நினையாமல் அவர் வசப்பட்டு நிற்றல் கண்டிருந்தும் நீ அவரையே நினைத்து எம் வசப் பட்டு நில்லாதது யாது காரணம்? (வசப்படாமை: ஊடலுக்கு உடன்படாதிருத்தல்.) இதனால், தாமாக அறிந்து ஒரு காரியஞ் செய்யத் தெரியாதவர் ஒருவரைக் கண்டாயினுஞ் செய்வர். நீ அதுவுஞ் செய்கின்றிலை யென்பது கருத்து. (2) எனதுமனமே! நம்மிடத்து அன்பில்லாததலைவரைஉள்ளபடியறிந்த இடத்தும் நாம்போனால் பழைய தாட்சணியத்தால் கோபியாரென்பது பற்றி அவரிடத்துச் செல்கின்றாய். உனக்கு இப்படிப்பட்ட அறியாமையுமுண்டோ? (3) மனமே! என்னிடத்து நில்லாமல் விரும்பி அப்படியே அத்தலைவரிடத்துச் செல்லுதற்குக் காரணம் கெட்டவர்க்கு நட்புற்றவர் உலகத்தில் இல்லையென்று நினைவோ? அல்லது உன்னியற்கையோ? சொல்லுவாயாக. எனவே, தளர்ந்த இடத்துக் கூட இருந்து வருந்தாமல் கைவிட்டுப்போகு மூடரது சிநேகம்போன்றது உன் சிநேகமென்றதாயிற்று. (4) மனமே! நீ அவரைக் கண்டபொழுதே இன்பம் அநுபவிக்க நினைப்பதல்லாமல், அவர்குற்றத்தை நோக்கிப் பிணக்கைமுன்னுண்டாக்கி அவ்வின்பத்தைப் பின் அளவறிந்து அநுபவிக்க நினைக்கமாட்டாய். ஆதலால், இனி, அப்படிப்பட்ட பிணங்கும் திறங்களை என்னுடனே எண்ணுவோர் யாவர்? நானது செய்யேன். முன்னெல்லாம் பிணங்க எண்ணியிருந்து பின் புணர்ச்சிக்கு அவசரப்படுகின்றதனால் இப்படிச் சொல்லினாள். (பிணங்குதல்: ஊடுதல்.)

உ. தூதாகச் சென்ற தோழி கேட்கத் தலைவி சொல்லுதல்.

(5) தலைவரைச் சேராத நாளிலும் சேராதிருப்பதற்கு அஞ்சும். சேர்ந்த நாளிலும் அவரது பிரிவை நினைத்து அஞ்சும். ஆதலால், என் மனமானது எந்நாளும் நீங்காத துன்பத்தை யுடையதாயிற்று. (6) தலைவரைப் பிரிந்திருந்து அவர் கொடுமைகளை நான் தனியே நினைத்தால் அச்சமயம் அறிந்து என்னைத் தின்னும் பொருட்டே என் மனமானது இங்கிருந்தது. அவரோடு பிணங்குதற்கிருக்கவில்லை. (7) தன்னை மறந்த அவரை மறக்கமாட்டாது

மாட்சிமை யில்லாத எனது அறிவில்லா மனத்தோடு கூடி என்னுயி ரினுஞ் சிறந்த நாணத்தையும் மறந்து விட்டேன். (நாணத்தை மறத்தலாவது: தலைவனைக் கண்டவுடன் புணர்ச்சிக்கு விரைதல்.) (8) உயிர் மேல் ஆசையுடைய என மனமானது நம்மை இகழ்ந்து சென்றாரென்று நாமும் இகழ்வோமானால், பின்பு நமக்கு அவமான மாமென்று நினைத்து அந்தலைவர் திறத்தையே நினைக்கின்றது. (திறமாவது: தூதுக்கு உடன்படுதல், வருதல், கூடல் முதலானவை யாம.)

௯. கேடுத்தற்கு முடியாத பிணக்கிலே தலைவன் சொல்லுதல்.

(9) ஒருவருக்குத் துன்பம் வந்த இடத்து அத்துன்பத் தை நீக்குதற்குத் தாம் உரித்தாகப் பெற்ற தமது மனமானது துணை யாகாத இடத்து வேறு துணையாகின்றவர்கள் ஒருவருமில்லையாம். (10) தாம் உரித்தாகவுடைய மனம் ஒருவருக்குத் தம்மவராகாத இடத்து அயலார் தம்மவரில்லையாகுதல் இலேசல்லவா? இதன் தா ற்பரியம், வேறொருத்தியைத் தலைவியென்று நினைத்து என் மனமே யென்னை வருத்துகின்ற பின் அவ்வேறொருத்தி பிணங்குகின்ற து எளிதென்பதாம்.

௧௩௧- ஆம் அதிகாரம்.

புலவி.

அஃதாவது:—தலைவன் தலைவி ஆகிய இருவர் நேர்ந்தும் புணர்ச்சி விரும்பாது பிணங்க நினைத்த இடத்து ஒருவரோடொருவர் பிணங்கல்.

௧. தூதாகச் சென்ற தோழி தலைவி தூதுக்கு உடன்படுதற் பொருட்டு, அவளோடு சிரித்துச் சொல்லுதல்.

(1) அக்காதலர் அடையும் துன்ப நோயினைச் சிறிது காண்போம். நீ அவரை விரைந்து போய்த் தழுவாமல் இருந்து ஊடல் செய்வாயாக.

௨. பிணக்குத் தீர்ந்து தூதுக்கு உடன்படும் வகை தோழி தலை விக்குச் சொல்லுதல்.

(2) ஊடல் புணர்ச்சி இன்பத்துக்கு வேண்டிய அளவின தாகுதல் உப்பானது உணவுகளை இனிய சுவையாக்குதற்கு வேண்

டும் அளவுடையதாகுதல் போலும். இனி, அவ்வூடலை அளவுக்கு மிஞ்சி அதிகப்படுத்துதல் அவ்வுப்பளவு சிறிது மிகுந்தது போலும். எனவே, ஊடல அதிகப்பட்டால புணர்ச்சி, இன்பம் தராதென்பதாம்.

௩. பரத்தையிடத்திருந்து வந்த தலைவனோடு தலைவி பிணங்கிச் சொல்லுதல்.

(3) ஆடவர், தம்மை அடையாமற் பிணங்கிய மகளிரை அப்பிணக்கு நீக்கிப் புணராமல் விடுதல் முன்னமே துன்பமுற்று வருந்தினவருக்கு அதன மேலும மிகுந்த துன்ப நோய் செய்தது போலும். (பிணங்கிய மகளிர்:பரத்தையர்) (4) உம்மோடு பிணங்கிய பரத்தையரை நீர் பிணக்குத் தீர்த்துக் கூடாதிருத்தல் வாடிய கொடியை அடியிலே அறுத்தல் போலும். இதனால், யாம் உம்மோடு பிணங்குதற்கு உரிமையில்லை. எம்பிணக்குக தீர்த்தல் வேண்டா மெனபதும உமக்குரியவ ராவார் பரத்தைய ரென்பதும் பிறவுஞ் சொல்லினளாயிற்று.

௪. தலைவியைப் பிணக்குத் தீர்த்துக்கூடிய தலைவன் தன்னுள்ளேசொல்லுதல்.

(5) நற்குணங்களாலே தகுதியுடைய தலைவர்களும் அழகாவது, மலர் போலுங் கண்களையுடைய பெண்கள் மனத்திலுண்டாகின்ற பிணக்கின் மிகுதியல்லவா? (அழகாவது: இன்பப்பயனைப் பெறுதல்.) இவ்விதம் தான் அநுபவித்த இன்பத்திற்கு ஏதுவாவது பிணக்கெனபது காண்க. (6) காமமானது மிகுந்த கலாமாகிய துனியில்லாவிட்டால் உண்பார்க்குச் சுவையுடையதாகிக் கொம்பிலே பழுத்து உதிரும பருவத்துக் கனிக்குச் சமானமா யிருக்கும். குறைந்த கலாமாகிய புலவி இல்லாவிட்டால் உண்பார்க்கு உண்ணும்பருவமில்லாத கருக்காய்க்குச் சமானமாயிருக்கும். எனவே, துனி வேண்டாமையும் புலவி வேண்டுதலும் ஆகிய இவ்விரண்டும வேண்டுமெனக் கூறியவாறாயிற்று. (துனி:பெரும்பிணக்கு. புலவி: சிறுபிணக்கு. கருக்காய்: மிக இளங்காய்.) (7) புணர்ச்சியானது உண்டாக நேரஞ் செல்லுமோ செல்லாதோ? என்று நினைத்தலால்

இன்பத்திற்கு அவசியம் வேண்டும் ஊடலினிடத்தேயும் ஒரு துன்பம் உண்டாம. (அஃதாவது:பொறுத்திராமல் கூடலிலே அவசரப்படுதல்.)

ரு. நீக்க முடியாத ஊடலிலே தலைவன் தலைவியோடு ஊடிச் சொல்லுதல்.

(8) இவர் நம்பொருட்டு வருந்தினரென்று அவ்வருத்தத்தை அறிகிற அன்புடையவரில்லாத இடத்து ஒருவர் வருந்துகின்றதனாலே பயன் யாது? இதனால், தன் வருத்தம அறியாதிருக்கின்றாள் தலைவி ஆதலால், தான்வருந்துகின்றதனால் பயனில்லையென்று தலைவன் கூறினனென்பது காண்க. (9) நிழலிடத்துள்ளநீர் மிகக்குளிர்ந்த இனிமையாகும். அதுபோல, புணர்ச்சிக்கு அவசியம் வேண்டும் பிணக்கும் அன்புடையவரிடத்தே மிக இனிமையாகும். அன்பில்லாதவரிடத்து இனிமையாகாது. இதனால், அன்புடையவர் பொறுத்திருக்கமுடியாமைக்கு நோகுதலும், கூடுதலிலே ஆசையும் உடையவராதலால், இவளிடதது அவ்விரண்டும் இல்லாமையால் ஊடுதலும் துன்பம செய்கிறதென்று கூறினனென்க. (10) தான் ஊடலிலே வருந்தி நிற்கவும் தன்னைக் கைவிட்டிருக்க வல்லவரோடு என்மனம் கூடக்கடவேமென்று முயற்சி செய்தற்குக் காரணம் தன்னாசையே அன்றி வேறில்லை. இதனால், தணியாத ஊடலுடையார் கூட்டம் உண்டாகப் பெறுரென்பதாயிற்று.

கங௨-ஆம் அதிகாரம்.

புலவி நுணுக்கம்.

அஃதாவது:—தலைவனும் தலைவியும் ஒரு படுக்கையிலே கூடியிருந்த இடத்து அவனிடத்துப் பிணங்குதற்குக் காரணமில்லாதிருக்கவும், ஆசை அதிகப்படுதலால், நுட்பமாகிய ஒரு காரணமிருக்கிறதாக உட்கொண்டு, அதனை அவன் மேலேற்றி அவள் பிணங்குதல்.

க. உலாப்போய் வந்த தலைவன் படுக்கையிடத்து வந்தபோது தலைவி சொல்லுதல்.

(1) பரத்தையரிடத்துச் செல்லுதலையுடையாய்! பெண்ணியல்பினையுடையா ரெல்லாருந் தமது கண்களால் பொதுவாக

உன்னை அநுபவிப்பர். அதனால், அப்பெண்கள் எச்சிலாகிய உன்மார்பைப் பொருந்தேன். தான் நோக்கி இன்புற்றபடியே அப்பரத்தையரு நோக்கி யின்புறுவரென்று சந்தேகித்து அவள் அவரிடத்துப் பொறாமையடைதலால் புலவிநுணுக்கமாயினது காண்க.

உ. தலைவன் நீங்கியபோது சென்ற தோழிக்குத் தலைவி படுக்கை யிடத்து நடந்ததைச் சொல்லுதல்.

(2) யாம் தலைவரோடு ஊடல்செய்து பேசாதிருந்தேமாக; அவ்வூடல் நீங்கி; யாம் தம்மை நெடுங்காலம் வாழ்கவென்று சொல்லுவோமாக நினைத்து, அவர் தும்மினார். தும்மினால் வாழ்த்துதல் பழைய வழக்கமாதலால், அதுபற்றிப் பேச நேர்ந்ததென்பது கருத்து. இயல்பாக உண்டாகிய தும்மலைத் தான் பேசுதற்காகத் தும்மினாரென்று கொள்ளுதல் புலவிநுணுக்கமாம்.

ஙு. தலைவியினது ஊடற் குறிப்பைக் கண்டு நீங்கி கூடியிருக்கவும் இவ்வூடல் உண்டாவதற்குக் காரணம் யாதென்று தோழிக்குத் தலைவன் சொல்லுதல்.

(3) வளைந்த பூமாலையைச் சூடினேனாயினும், உம்மால் இச்சிக்கப்பட்ட ஒருத்திக்கு இப்பூ அலங்கரித்தலைக் காட்டுதல் வேண்டிச் சூடினீரென்று கோபியா நிற்பள். இப்படிப்பட்டவள் ஊடுதற்கு ஒரு காரணம் வேண்டுமோ? (4) காமம் அநுபவித்தற்கு உரிய இருவரா யுள்ளவர்எவரினும் நாமிகுந்த காதலையுடையேமென்பது நினைத்து, யாரினு மிகுந்த ஆசையையுடையேமென்று சொன்னேனாக. உனது தலைவி அது கருதாமல், என்னால் விரும்பப்பட்ட மாதர் பலருள்ளும் உன்னிடத்து மிகுந்த காதலையுடையேம் என்றேனாகக்கருதி எந்த எந்தப் பெண்களைப் பார்க்கினும் என்னிடத்து ஆசையுடையீரென்று சொல்லி ஊடினாள். தலைவன் அன்பு மிகுதியினாலே சொல்லியதை வேறு பொருள்படக் கருதிப் பிணங்கியது இங்கே புலவிநுணுக்கமாம். (5) ஆசை மிகுதியினாலே இப்பிறப்பிலே உன்னைப் பிரியமாட்டேனென்று சொன்னேனாக. அதனால், என்னை மறுபிறப்பிலே பிரிவேனென்கிற கருத்துடையவனாக நினைத்து அவள் கண்ணிறைந்த நீரைக்கொண்டனள். (அழுதாவது: அழுதாளென்றபடி.) (6) பிரிந்த காலத்தில் இடைவிடாமல் உன்னை நினைத்தே

னென்கிற கருத்தால் நினைத்தேனென்றேன். அவள் அதனை ஒருகால் மறந்துபின் நினைத்தேனென்று சொல்லியதாக எண்ணி அதற்கு விரோதமாக என்னை மறந்தீரென்று சொல்லி, முன்னே தழுவுதற்கு நினைந்தவள் என்னைத் தழுவாதவளாகிப் பின் பிணங்குவதற்குப்பொருந்தினாள். (7) கூடியிருக்கின்றபோது யான் தும்மினேனாக. தன்னியற்கைபற்றி வாழ்த்தினாள். அப்படி வாழ்த்திய தானே அக்கருத்தைத் தடுத்து உம்மை நினைந்து வருந்துகின்ற மாதருள் எவர் நினைத்தலால் தும்மினீரென்று சொல்லிப் பிணங்கினாள். அன்புடையார் நினைத்தபோது நினைக்கப்பட்டவருக்குத் தும்மலுண்டாகுமென்பது பெண்கள் வழக்கு. இவ்வழக்கையும் உள்ளதாக நினைத்துப் பிணங்குதல் புலவிநுணுக்கமாம். (8) எனக்குத் தும்மல் தோன்றிய இடத்து யார் நினைத்தலால் தும்மினீரென்று பிணங்குதற்குப் பயந்து அத்தும்மலை வரவொட்டாமல் அடக்கினேன். உமக்கு வேண்டியவர் உம்மை நினைத்தலை எமக்கு மறைக்கலுற்றீரோ? என்று அழுதாள். இதனால், தும்மினாலும் குற்றம், அதை அடக்கினாலும் குற்றம் என்றால், இனிச் செய்யவேண்டியது ஏது என்பதாம். (9) இவ்விதத்தாலே பிணங்கிய தலைவியை நான் வணங்கிப் பிணக்குத் தீர்க்கும்போது அவள் பிறமாதருக்கும் அவர் பிணங்கியபோது இப்படியே வணங்கிப் பிணக்குத் தீர்க்குந்தன்மையுடையீர் ஆகின்றீரென்று சொல்லிக், கோபியாநிற்பள். இதனால், எப்படித் தெளிவித்தாலும் தெளியாளென்று அக்குற்றங்களுக்கு உடன்பட்டுத் தலைவன் வணங்குதலும் பிணங்குதற்கு ஏதுவாயிற்றென்பதாம். (10) என் சொற்களும் செயல்களும் பற்றித் தலைவி கோபித்தலால், அச்செயலும் சொலலும் இல்லாமலிருந்து அவள் அவயவங்களின் ஒப்பில்லாமையை நினைந்து அவளையே பார்த்துக்கொண்டிருந்தாலும், நீர் என் அவயவமெல்லாம் எந்தப் பெண்களுடைய அவயவத்துக்கு ஒப்பென்று நினைத்துப் பார்த்தீரென்று சொல்லிக் கோபியாநிற்பள். இதனால், சும்மாயிருந்தாலுங் குற்றமாயிற்றென்பதாம்.

கந௩-ஆம் அதிகாரம்.

ஊடலுவகை.

அஃதாவது:—அப்படிப்பட்ட ஊடலால் சமகத்துக் கூடலின்பம் சிறந்த இடத்து அச்சிறப்பிற்கு ஏதுவாகிய அவ்வூடலைத் தலைவி மகிழ்தலும் தலைவன் மகிழ்தலுமாம்.

க. தலைவி காரணமில்லாமல் ஊடுகின்றமை கேட்டு அப்படி நீ ஊடுகின்றது என்னவென்று கேட்ட தோழிக்கு அவள் சொல்லுதல்.

(1) *அத் தலைவரிடத்துப் பிழைகளில்லாதிருந்தாலும் நமக்கு அவரருள் செய்கின்ற விதம், மற்ற மாதரும் அடைவரென்று பொறாமையால் ஊடுதலையுண்டாக்க வலிமையுடையதாகின்றது.*

உ. ஊடுகின்ற போதும் தலைவர் நல்லருள் பெறுதலாயிருக்க, அதை யிழந்து ஊடலால் வருந்துவது என்னேன்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(2) *ஊடுதல் காரணமாக நம்மிடத்துத் தோன்றுகின்ற சிறிய துன்பத்தால், தலைவர் செய்கிற நல்லருள் வாடுமாறாலும் பின் பெரிய இன்பத்தைக் கொடுக்கும். (3) நிலத்தினோடு நீர் கலந்தது போல ஒற்றுமையுடைய காதலரிடத்து ஊடுதல்போல நமக்கின்பம் செய்வதொரு தெய்வலோகம் உண்டோ? இல்லை. ஊடல் தெய்வலோகத்தைப் பார்க்கினும் இன்பஞ் செய்வதென்பது கருத்து.*

ங. அவ் வூடல் எதனால் நீங்குமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல்.

(4) *காதலரைத் தழுவிக்கொண்டு பின் விடாமைக்கு ஏதுவாகிய அவ்வூடலி னுள்ளே சென்ற என்னுள்ளத்தை உடைக்கும் வணக்கமும் தாழ்ந்த வார்த்தையுமாகிய ஆயுதம் அக் காதலரிடத்தே உண்டாகும். ஆகலால், ஊடல் நீங்கும் விதம் இதுவாம்.*

ச. தலைவியை ஊடல் நீக்கிக் கூடிய தலைவன் அதிக மகிழ்ச்சி அடைந்தவனாய்த் தன்னுள்ளே சொல்லுதல்.

(5) *ஊடவர் தம்மிடத்துப் பிழையில்லாதவரா யிருந்தாலும், பிழையுடையோர் போல ஊடப்பட்டுத் தம்மால் விரும்பப்படு மாதரது மெல்லிய தோள்களைக்கூடப்பெறாத அளவில், ஊடுதலால், சொல்லுதற்கு அரிய ஓரின்பமுடையவராவர். இதனால், தவறில்லாமல் உண்டாகிய ஊடலும் தனக்கு இன்பமாயிற்றென்பதாம். (6) உயிர்களுக்கு, பின் உண்ணுதலைப் பார்க்கினு முன் னுண்ணப்பட்டது சீரணித்தல் இன்பத்தைக் கொடுக்கும். அது*

போலக் காமத்துக்கு, பின் புணர்தலைப் பார்க்கிலும் முன்னுள்ள குற்றங் காரணமாக ஊடுதல் இன்பத்தைக் கொடுக்கும். இதனால், பசித்து உண்ணும் உணவு, மிக்க இன்சுவை யுடையதும் அதிகமாக உண்ணப்படுதலும் போல, ஊடிப் புணர்ந்தால் காமம் பேரின்பமும் பெரிது அநுபவிக்கப் படுதலுமாமென்பதாயிற்று.(7) காமம் அநுபவிப்பதற்கு உரிய இருவருள் ஊடலிற்றோற்றவர் வென்றோராவர் அஃது அப்பொழுதறியப் படாதாயினும், பின்னை புணர்ச்சியிலே அவராலறியப்படும். (அவரென்றது: ஊடலில் தோல்வியடைந்தவரை.) இதனால், ஊடலிலே தோற்ற யான் கூடலில் பேரின்பம் பெற்றேனென்று தலைவன் தன் அநுபவங் கூறினானாயிற்று. (8) இப்போது இவளது நெற்றி வெயர்வை யுண்டாகும்படி புணர்ச்சியிடத்து உளதாகிய இனிமை இன்னும் ஒருதரம் இவள் ஊடப் பெற்று, யாம் அடைவோமோ? இனி, அவ்வின்பங்கிடைத்த லரிது. அதனை, யானே பெற்றேனென்று பெற்ற தன் சிறப்பைத் தலைவன் சொல்லினனென்பது இதனா லறிக. (9) விளங்குகின்ற ஆபரணத்தை உடையவள் இன்னும் எம்மோடு ஊடுவாளாக. அப்படி ஊடி நிற்றற்கும், அவ்வூடலைத் தீர்த்தற்பொருட்டும் நாம் அவளை யாசித்து நிற்றற்குக் காலம் பெறும் விதம் இவ்விரவு விடியாமல் நீட்டித்து நிற்க வேண்டும். இதனாலே, கூடலினும் ஊடலே உயர்ந்த இன்பமாமென்பதாயிற்று. (10) காமம் அநுபவித்தற்கு இன்பமாவது, அதனை அநுபவித்தற்கு உரியோர் ஆராமை பற்றித் தம்முள் ஊடுதலாம். அப்படி ஊடுதற்கு இன்பமாவது அவ்வூடலை அளவறிந்து நீங்கித் தம்முள் புணர்தல் கூடுமானால், அப்புணர்ச்சியாம். இதனால், ஊடலின்பமும் கூடலின்பமும் யானே பெற்றேனென்று தலைவன் கூறினானென்பதாம். ஆராமை: அன்பு.

கற்பியல் முற்றிற்று.

காமத்துப்பால் முற்றிற்று.

திருவள்ளுவ நாயனா ரருளிச் செய்த தமிழ் வேதமாகிய திருக்குறள் 1330உம் பரிமேலழகருரையிலும் உள்ள பொருளடங்கிய வசனம்,

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்

மு. ரா. அருணாசலக்கவிராயரால் எழுதப் பெற்று,

முற்றுப் பெற்றது.

அதிகார அகராதி.

அடக்கமுடைமை	௨௩	கள்ளாமை	௫௨
அமைச்சு	௧௨௬	கள்ளுண்ணாமை	௧௮௨
அரண்	௧௪௫	கனவுநிலையுரைத்தல்	௨௪௩
அருளுடைமை	௪௩	காதற்சிறப்புரைத்தல்	௨௨௩
அலரறிவுறுத்தல்	௨௨௮	காலமறிதல்	௯௩
அவர்வயின் விதும்பல்	௨௫௨	குடிசெயல்வகை	௨௦௦
அவாவறுத்தல்	௬௮	குறிப்பறிதல்	௧௩௭
அவையஞ்சாமை	௧௪௧	குறிப்பறிதல்	௨௧௭
அவையறிதல்	௧௩௯	குறிப்பறிவுறுத்தல்	௨௫௪
அழுக்காறாமை	௨௯	குற்றங்கடிதல்	௮௨
அறன்வலியுறுத்தல்	௬	கூடாநட்பு	௧௬௧
அறிவுடைமை	௮௦	கூடாவொழுக்கம்	௪௯
அன்புடைமை	௧௪	கேள்வி	௭௯
ஆள்வினையுடைமை	௧௧௩	கொடுங்கோன்மை	௧௦௮
இகல்	௧௬௭	கொல்லாமை	௬௦
இடனறிதல்	௯௫	சான்றாண்மை	௧௯௩
இடுக்கணழியாமை	௧௨௪	சிற்றினஞ்சேராமை	௮௯
இரவச்சம்	௨௦௯	சுற்றந்தழால்	௧௦௧
இரவு	௨௦௬	சூது	௧௮௪
இல்வாழ்க்கை	௮	செங்கோன்மை	௧௦௫
இறைமாட்சி	௭௩	செய்ந்நன்றியறிதல்	௧௯
இனியவைகூறல்	௧௭	சொல்வன்மை	௧௨௫
இன்னாசெய்யாமை	௫௮	தகையணங்குறுத்தல்	௨௧௪
ஈகை	௩௮	தவம்	௪௭
உட்பகை	௧௭௩	தனிப்படர்மிகுதி	௨௩௯
உழவு	௨௦௨	தீநட்பு	௧௫௯
உறுப்புநலனழிதல்	௨௪௭	தீவினையச்சம்	௩௪
ஊக்கமுடைமை	௧௧[illegible]	துறவு	௬௪
ஊடலுவகை	௨௯௫	தூது	௧௩௩
ஊழ்	௭௦	தெரிந்துசெயல்வகை	௮௮
ஒப்புரவறிதல்	௩௬	தெரிந்துதெளிதல்	௯௭
ஒழுக்கமுடைமை	௨௪	தெரிந்துவினையாடல்	௯௯
ஒற்றாடல்	௧௧௪	நடுவுநிலைமை	௨௧
கடவுள் வாழ்த்து	௧	நட்பாராய்தல்	௧௫௫
கண்ணோட்டம்	௧௧௨	நட்பு	௧௫௩
கண்விதுப்பழிதல்	௨௩௬	நலம்புனைந்துரைத்தல்	௨௨௧
கயமை	௨௧௧	நல்குரவு	௨௦௪
கல்லாமை	௭௭	நன்றியில்செல்வம்	௧௯௬
கல்வி	௭௫	நாடு	௧௪௩

அதிகார அகராதி.

நாணுடைமை	௧௯௮
நாணுத்துறவுரைத்தல்	௨௨௬
நிலையாமை	௬௨
நிறையழிதல்	௨௫௪
நினைந்தவர் புலம்பல்	௨௪௧
நீத்தார்பெருமை	௪
நெஞ்சொடுகிளத்தல்	௨௪௯
நெஞ்சொடுபுலத்தல்	௨௫௮
பகைத்திறந்தெரிதல்	௧௭௧
பகைமாட்சி	௧௬௯
பசப்புறுபருவரல்	௨௩௭
படர்மெலிந்திரங்கல்	௨௩௩
படைச்செருக்கு	௧௫௧
படைமாட்சி	௧௪௯
பண்புடைமை	௧௯௫
பயனிலசொல்லாமை	௩௩
பழைமை	௧௫௭
பிரிவாற்றாமை	௨௩௧
பிறனில் விழையாமை	௨௬
புகழ்	௪௦
புணர்ச்சி மகிழ்தல்	௨௧௮
புணர்ச்சி விதும்பல்	௨௫௭
புதல்வரைப் பெறுதல்	௧௨
புலவி	௨௬௦
புலவி நுணுக்கம்	௨௬௨
புலால்மறுத்தல்	௪௫
புல்லறிவாண்மை	௧௬௫
புறங்கூறாமை	௩௨
பெண்வழிச்சேறல்	௧௭௮
பெரியாரைத் துணைக்கோடல்	௮௪
பெரியாரைப் பிழையாமை	௧௭௫
பெருமை	௧௯௨
பேதைமை	௧௬௩
பொச்சாவாமை	௧௦௩
பொருள் செயல்வகை	௧௪௭
பொழுதுகண்டிரங்கல்	௨௪௫
பொறையுடைமை	௨௭
மடியின்மை	௧௧௮
மருந்து	௧௮௫
மன்னரைச் சேர்ந்தொழுகல்	௧௩௫
மானம்	௧௯௦
மெய்யுணர்தல்	௬௬
வரைவின் மகளிர்	௧௮௦
வலியறிதல்	௯௧
வாய்மை	௫௪
வாழ்க்கைத் துணைநலம்	௧௦
வான்சிறப்பு	௩
விருந்தோம்பல்	௧௬
வினைசெயல்வகை	௧௩௧
வினைத்திட்பம்	௧௨௯
வினைத்தூய்மை	௧௨௭
வெகுளாமை	௫௬
வெஃகாமை	௩௦
வெருவந்தசெய்யாமை	௧௦௯

இயல் அகராதி.

அங்கவியல்	௧௨௩
அரசியல்	௭௩
இல்லறவியல்	௮
ஒழிபியல்	௧௮௮
களவியல்	௨௧௪
கற்பியல்	௨௩௧
துறவறவியல்	௪௩

பால் அகராதி.

அறத்துப்பால்	௧
காமத்துப்பால்	௨௧௪
பொருட்பால்	௭௩

விஷய அகராதி.

அஞ்சுவன செய்தலின் குற்றம். ககச

அத்தலைவரோடு கூடிய நாளைப் பினைபதனை நினைந்து வருந்துகின்றாய், அதனைமறத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைவிசொல்லுதல். உசஅ

அப்பிரிவைத் தான்பொறுத்தற் பொருட்டுத்தலைவன் தன்மையைப் பழித்த தோழிக்குத் தலைவி தலைவன்றன்மையை நயப்படுத்திச் சொல்லுதல் உஙங

அயலாகருந் தன்மை கஎஉ

அரசர்க்குப் பிழைசெய்தற் குற்றம் கஎச

அரசனது நற்குணநற்செய்கையாகிய மாட்சிமை எரு

அரசனுக்கு அங்கமாவன இவையென்பதும் இவை முழுதும் உடைமையே அவன் வெற்றிக்குக் காரணமென்பதும் ,,

அரசனுக்குத் துணையாகப்பிரிந்த தலைவன் போர் முடிவு தாமதித்த இடத்தே தலைவியை நினைந்து தன்னுள்ளே சொல்லுதல் உருஅ

அரசனுக்குப் படையானது மற்றை அங்கங்களுட் சிறந்ததென்பதும், அதனுள்ளே மூலப்படை சிறந்ததென்பதும், அதனுள்ளும் வீரன் சிறந்தவனென்பதும் கசகூ

அரசன் அஞ்சுஞ் செயலும், அது செய்தாலடைவதும் ககக

அரணின் இலக்கணம் கசரு

அரணின் சிறப்பு ,,

அரண்காப்பவர் அவசியம் வேண்டும் கசஅ

அருளாகிய துணையில்லார்க்கு வருங்குற்றம் கூஅ

அருளாகிய துணையுடையார்க்கு இம்மை மறுமை யிரண்டினுந் துன்பமில்லை ,,

அருளின் சிறப்பு சாய

அருளுண்டாவதற்கு உபாயம் சரு

அறமும், நாணமும் கெடாமல் நீ பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் உகூஅ

அறஞ்செய்யும் வழி அ

அறஞ்செய்வாரே யிம்மையின்பமும் புகழுமெய்துவர் எ

அறத்தினியல்பு அ

அறத்தினை நிலையில்லாத உடம்பு நிலைத்திருக்கிறபோதே செய்ய வேண்டும் எ

அறத்தின் மிக்க உறுதியில்லை அ

அறம் பொருளின்பம் நடத்தற்குக் காரணமும் மழையே கூ

அறம் மோக்ஷந்தரும் ய

அறிவில்லாதவர், சிரிக்கச் செய்பவர், இயல்வது செய்யாதவர் ஆகிய இம்மூவர் நட்பினது தீமை ௧௯௦
அறிவில்லானது நட்பின் குற்றம் ௪௯௫
அறிவில்லானது பொதுத்தொழில் ௪௯௬
அறிவில்லான் சபையிடத்திருக்கும் விதம் ௪௯௫
அறிவில்லான் செல்வம் அடைந்த இடத்துப் பயன் கொள்ளும் விதம் ௪௯௬
அறிவில்லான் செல்வம் படைக்கும் விதம் ,,
அறிவில்லான் மறுமைச்செயல் ,,
அறிவினது சிறப்பு ௮௦
அறிவுடைமையின் இலக்கணம் ௮௧
அறிவுடையவரது இலக்கணம் ,,
அறிவுடையவரது உடைமையும் மற்றவரது இன்மையும் ௮௨
அறிவுடையவருக்குத் துன்பம் இல்லை ,,
அறிவும் ஆண்மையும் பெருமையும் ஆகிய மூவகை வலிமையுள் பெருமையின் பகுப்பாகிய பொருள் வலியறிதல் ௪௨
அன்பால் கேடுசெய்த இடத்தும் நட்பு விடுந்தன்மையதன்று ௧௫௮
அன்பில்லாத வழி உண்டாகுங்குற்றம் ௧௫
அன்பினது உண்மை ௧௬
அன்பினது சிறப்பு ,,
ஆசையற்றவரது சிறப்பு ௬௧
ஆசையற்றவர் முத்தியின்பத்தை உடலோடு நின்றே அடைவர் ௭௦
ஆசையின் குற்றமும் அதனை வரவொட்டாமல் தடுப்பதே அறமென்பதும் ௬௧
ஆசையே துன்பத்திற்குக் காரணம் ,,
ஆசையைக் கெடுத்தலின் சிறப்பு ,,
ஆசையைக் கெடுத்தல் முத்திக்கே காரணமென்பதும் அது வரும் வழியும் ,,
ஆராய்ந்தல்லது சிநேகிக்கப்படாதவர் இவரென்பது ௧௫௬
ஆளுதற்கு உரியவனது இலக்கணம் ௯௧
ஆளுதற்கு உரியவனை ஆளுந்திறம் ௪௦௦
இடந்தலைப்பாட்டிலே சொல்லுதல் ௨௧௧
இடந்தலைப் பாட்டிலே தலைவி நீங்கும்போது தலைவன் சொல்லுதல் ௨௨௬
இடையூறுகளுக்குப் பயப்படாதிருத்தல் ௪௫௨
இம்மைப்பயனும் மறுமைப்பயனுந் தருதற்குக்காரணம் ௪௯
இம்மைப்பயன் ௪௬
இம்மைப்பயன் ௫௫

இயற்கையாகிய பொது அறிவு மனத்தாலாமென்பதும் செயற்கையாகிய சிறப்பறிவுபற்றி இவன் இன்னானென்றறிதல் இனத்தாலா மென்பதும் ௮௯

இரவுக்குறி தப்பிப்போய் மறுநாள் வந்த தலைவனை ஊரார் தூற்றும் வகைச் சொல்லைச்சொல்லி விவாகச்செய்தி விரைவிய இடத்துத் தோழிக்குத் தலைவன் சொல்லுதல் ௨௨௮

இரவுக்குறி தவறுதலால் தலைவனை கூடப்பெறாத தலைவி அத்தலைவன் காவல் செய்த இடத்தின் பக்கமாயிருக்க, தோழிக்குச் சொல்லு வாள்போலப் பழிச்சொல்லைக் கூறி விவாகச்செய்தி விரைவுதல ௨௨௬

இரவுக்குறியிலே தலைவன் சந்திரனைக்கண்டு கூறுதல் ௨௨௨

இருமைப்பயனுமொன்றாகப் பெறுதல் ௪௮

இருவகைத் துறவர்க்கும் பொது இலக்கணம் ௪௫௫

இருவகைப் பற்றுகளை விடாதவருக்கு மோக்ஷம் இல்லை ௯௦

இருவகைப்பற்றையும் விட்டவர்க்கே மோக்ஷம் உண்டு ,,

இல்லறத்தினது நிலையே பயனுடைத் தென்னுஞ் சிறப்பு ௬

இல்லறத்தின் நிலை எல்லாவுபகாரத்திற்கு முரிமையுடையது ௮

இல்லறத்தின் நிலை நின்றார் அறஞ் செய்யும் விதம் ,,

இல்லறத்தின் மறுமைப்பயன் ௧௦

இல்வாழ்க்கைக்கு வேண்டுவது மனையாளது குணமேயன்றி வேறில்லை ௧௧

இவ்விடத்தோர் அறியாமல் மறைந்தலாயினும் அவ்விடத்துச் சென்ற தலைவரறியத் தூது விடுதலாயினும் செய்யவேண்டு மென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௫௫

இறவாதவரும் இறந்தவரும் ௪௧

இனிய சொல்லுக்கிலக்கணம் ௧௭

இனிய முகத்தோடு கூடிய இன்சொல் முன்னரே விருந்தினரை வசப் படுத்துதலின் விருந்து புறப்பதன்கட் சிறந்தது ௪௮

இனியவை கூறுவார்க்கு இம்மைப்பயனெய்தும் ,,

இனியவை கூறுவார்க்கு மறுமைப் பயனெய்தும் ,,

இன்ப துன்பங்களுக்குக் காரணமாகிய ஊழின் வலிமை ௭௬

இன்று இப்படிப்பட்டவளாகின்ற நீ அன்று தலைவர் பிரிவுக்கு எப்ப டிச் சம்மதித்தா யென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௪௯

ஈகையின் இலக்கணம் ௫௮

ஈகையின் சிறப்பு ,,

ஈயாமையின் குற்றம் ௫௬

உடம்புகளுக்கு அளவு செய்யப்பட்டநாள் கழியும் விதம் ௯௨

உடம்புகளுக்கு இயல்பாகிய நோய் மூவகை என்பதும அவை துன்பஞ்
செய்தற்குக் காரணம் இருவகை யென்பதும் ௧௮௬
உடம்புகளுக்கு இறப்பும் பிறபபும் மாறிமாறி வரும் வீதம் ௬௩
உடம்புகள் உயிருக்கு உரியவையல்ல ௬௪
உடம்புகள் உயிர் நீங்கிய இடத்துக்கிடக்கும் விதம் ௬௫
உடம்புகள் ஒரு கணமாயினு மிருக்கு மென்று நம்பலாகாது ,,
உடம்புகள் ஒரே இடத்தில் பிறந்த அளவிலே இறததல் ,,
உட்பகை ஆகாது ௧௭௩
உட்பகை சிறிதென்று இகழப்படாது ௧௭௪
உட்பகையால் தனக்கு வரும் தீங்கு ,,
உண்ணப்படுவனவும் அவைகளி னளவும் காலமும் பயனும் ௧௮௪
உயர்ந்தவரது சபையிடததுச் செய்யுந்திறம் ௧௩௯
உயர்ந்தவரது சபையிடத்துத் தவறிய இடத்து உண்டாகும் குற்றம் ௧௪0
உயர்வு ஒப்பில்லாத இன்பம் மோக்ஷமென்பதும் அதற்கு நிமித்த கார
ணம் தனிப்பொருளாகிய பிரமமென்பதும் ௬௬
உலகநடை தவறாதவனுடைய பொருள் பயன் படும் ௩௭
உலகநடை தவறுமற் செய்தலால் வருங்கேடு கேடாகாது ,,
உலக நடையறிந்து செய்தலின் சிறப்பு ௩௬
உலகம் நடத்தற்குக் காரணம் மழை ௩
உலகிற்கு யாசிப்பார் வேண்டும் ௨0௮
உலாப்போய் வந்த தலைவன் படுக்கை இடத்து வந்தபோது தலைவி
சொல்லுதல் ௨௬௨
உலோபத்தின் தீமை ௮௩
உழவினது சிறப்பு ௨0௨
உழவு செய்யாத இடத்து உண்டாகுங் குற்றம் ௨0௪
உழவு செய்யும் விதம் ௨0௩
உழவு செய்வாரது சிறப்பு ௨0௨
உறுதிச்சொல்லைக் கொள்ளாமையின் குற்றம் ௧௯௭
உன்னைப்பார்க்கிலும் பொறுதவராய்த் தலைவர் விரைவிலே வருவார்.நீ
அவரோடு பேரின்பத்தை அநுபவிப்பா யென்ற தோழிக்குத்
தலைவி சொல்லுதல் ௨௪0
ஊக்கமுடையவரது உயர்ச்சி ௧௪௭
ஊக்கம் இல்லாதவரது இழிவு ,,
ஊழினாலாகிய துன்பத்துக்கு வருந்தாமை ௪௨௨.
ஊழினாலாகிய துன்பத்துக்கு வருந்தாமைக்கு உபாயம் ௪௨௮
ஊழினாலே துன்பம் வந்தாலும முயற்சிவிடத்தக்கதன்று ௪௨0

ஊனுண்ணாமையின் உயர்ச்சி சஎ
ஊனுண்டாராயினும் உயிர்களுக்கு ஒரு தீங்கு நினையாராயின் அவரை அருளானது ஆளுமென்பாரை மறுத்து ஆளாதென்பது சரு
ஊன்தின்றார் மனம் தீங்கு நினைத்தலுண்டென்று உவமானத்தாற் கூறி மேலே சொல்லியதை வற்புறுத்தல் சசு
எல்லாரியல்புகளும் அறிந்து ஒத்துநடப்பதற்குக் காரணம் கசுரு
எனதென்னும் புறப்பற்று விடுதல் சுஅ
ஒத்த அன்புடைய உனக்கு ஒரு போதும் விடாத புணர்ச்சியே இனிதாதலால், விவாகஞ் செய்துகொள்ளென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல் உஉ0
ஒத்தவர் சபையினிடத்து எவ்வழியும் பேசலாம் கசா0
ஒத்துநடக்குங் குணமுடையாரது உயர்ச்சி கசுரு
ஒத்துநடக்கும் குணமில்லாதவரது இழிவு ககசு
ஒப்பவன் செய்யுந் திறம் கஙஉ
ஒரு பட்சம் சாராத மனத்தோடு தருமமிருந்தபடி சொல்லுதல் நடுவு நிலைமை என்பதும், ஒரு பட்சஞ் சார்ந்த மனத்தோடு தருமமிருந்தபடி சொல்லுதல் நடு நிலைமை யன்றென்பதும் உஉ
ஒருவகையால் ஒழிக்கப்படுவார் க00
ஒரு வழித்தணத்தலில் தலைவன் றன்மையைத் தோழிபழிப்பாளென்று, அஞ்சி அவள் கேட்க, தலைவி தன்னுள்ளே சொல்லுதல் உஉரு
ஒரு வழித்தணந்தபோது எம்மை நினைந்தீரோ வென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல் உஉச
ஒருவனை ஆண்ட இடத்துச் செய்யத்தக்கது ச0க
ஒருவன் செய்த நன்றல்லதை மறக்கும் உபாயம் உ0
ஒழுக்கத்தின் சிறப்பு உச
ஒழுக்கமில்லாமையாற் பின் வருங் குற்றம் உரு
ஒழுக்கமுள்ள இடத்து உண்டாகுங் குணமும் அஃதில்லாத இடத்து உண்டாகுங் குற்றமும் ,,
ஒற்றரை ஆளும் விதமும் அவராலே நடந்தவை அறியும் விதமும் அறிந்தால் அவருக்குச் சிறப்புச் செய்யும் விதமும் ககரு
ஒற்றனது இலக்கணம் ககச
ஒற்றனாலாகிய பயன் ,,
ஒற்றனில்லாத இடத்து வரும் குற்றம் ,,
ஒற்றன் சிறப்பு ,,
ஒன்று சொல்லும்போது சபையறிந்தே சொல்லவேண்டும் கஙக

கடவுளடியை நினைப்பார்க்குப் பிறவி யறுதலும், அவ்வாறன்றி வேறு நினைப்பார்க்குப் பிறவி அருமையும் ஆம் ௨
கடவுளது திருவடிகளைத் தொழாதவர் படித்ததனாலே பயனில்லை ௧
கடவுளை நினைத்தலும் வாழ்த்தலும் அவன் வழி நிற்றலுஞ் செய்தார் மோக்ஷம் பெறுவர் ,,
கடவுளை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் செய்யாதவழி உண்டாகும் குற்றம் ௨
கணவனைப்பேணிய பெண்கள் தேவர்களாற் பேணப்படுவர் ௧௨
கல்லாதவரது இயற்கை யறிவின் குற்றம் ௭௭
கல்லாதவரது செல்வத்தின் குற்றம் ௭௮
கல்லாதவர் சபையிலே பேசுதற்குரியர் ஆகார் ௭௭
கல்லாதவர் சாதியுயர்ச்சியினாற் பயனில்லாமை ௭௮
கல்லாதவர் பயன்படாமை ,,
கல்லாதவர் மனிதப் பிறப்பினாலே பயன்படாமை ௭௬
கல்லாதவர் வடிவழகினாலே பயனில்லாமை ௭௮
கல்வியது சிறப்பு ௭௯
களவு செய்வார் கெடுவர் ௫௬
களவு செய்வார்க்கும் செய்யாதார்க்கும் உண்டாகும் பயன்கள் ,,
களவும் துறவறமும் இருளும் ஒளியும்போல ஒன்றுக்கொன்று பகையாதலால் கூடிநிற்பனவல்ல ௫௩
களவை நீக்குதற்குக் காரணம் ,,
களவோடு நீங்காது நிற்பது வஞ்சனை ௫௬
கள்ளுண்ணுதலை மறைக்கமுடியாது ௧௮௩
கள்ளுண்பதை நீக்குதற்குக் காரணம் ,,
கள்ளுண்பவருக்குப் பகைவர் பயப்படமாட்டாரென்பதும் புகழில்லையென்பதும் ௧௮௨
கள்ளுண்பவர் அறிவிழத்தலின் குற்றம் ,,
கள்ளுண்பவனைத் தெளிவித்தல் முடியாது ௧௮௩
கற்பின் சிறப்பு ௧௧
கற்புடையவளது தற்புகழ்ச்சி ,,
கற்புடையவள் வலிமை ,,
கற்றாரது உயர்வு ௭௬
கற்றாரது உயர்வும், கல்லாதவரது இழிவும் ,,
கற்கப்படும் நூல்களுக்குக் கருவியாவனவும், அவைகள் அவசியம் வேண்டுமென்பதும் ௭௫
காணப்படுந்துணை நன்மையினுங் கருதப்படுந் தொழில் நன்மை சிறந்தது ௧௨௭

காமக்கடலை நிறைகுணமே புணையாக நீந்தலாகுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௯௫
காமத்தினால் இன்பமடைந்தவர்க்கும் அதனாலாகிய துன்பமும் வருமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௯௬
காமத்தை, அறிவிலராகிய பெண்களைப் பார்க்கினும் அறிவுடையராகிய ஆடவரல்லவா பொறுக்க வேண்டுமென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல் ௨௨௭
காமநோயை வெளிப்படுத்துதல் உன் வெட்கத்துக்குத் தகாதென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௯௯
காமம் தீயேபோன்று தானின்ற இடத்தைச் சுடும் ஆதலால் நீ பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ”
காரணமாகிய குற்றங்களைக் கெடுத்தோர் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையால் அவருக்கு வருதற்குரிய துன்பங்களும் இல்லை ௬௮
காரணமில்லாமற் செய்ததுங் காலத்தினாற் செய்ததும் பிரயோசனங் கருதாது செய்ததுமாகிய உதவியின் பெருமை அளக்க முடியாது ௧௯
காலத்தினது சிறப்பு ௬௫
காலம் அறிதலின் பயன் ”
காலம் அறியாத இடத்தே செய்யவேண்டுவது ”
காலம் பார்த்திருக்கும் இடத்துப் பகைமை தோன்றாமலிருக்க வேண்டும் ௬௬
காலம் பார்த்து இருத்தலுக்கும் தொழில் செய்தலுக்கும் இலக்கணம் ”
காலம்வந்த இடத்து விரைந்து செய்யவேண்டும் ”
காலம் வருமளவும் ஒடுங்குதலின் சிறப்பு ”
காவற்சிறை யிருந்து காமம் பெருகிய இடத்துத் தலைவி சொல்லுதல் ௨௨௭
கீழானவன் பிறர் செல்வங் கண்டு பொறாமை யடைதல் ௨௧௫
கீழோரது அடக்கமில்லாமை ௨௧௨
கீழோரது குற்றமிகுதி ௨௧௧
கீழோர் கொடுக்கும் விதம் ௨௧௨
கீழோர் பழிபாவ முதலானவைகளுக்கு அஞ்சார் ௨௧௩
கீழோர் பிறருக்கு அடிமையாய் நிற்பர் ௨௧௫
கீழோர் மேன்மை யடையும் விதம் ௨௪௨
கீழோர் விலக்கப்படுதலில்லாமல் வேண்டியது செய்வார் ௨௧௧
கீழ்மக்கள் ஆசாரஞ் செய்தல் இயல்பன்று ௨௧௨
குடி உயரச்செய்வார் குடிசெயல் வகை செய்யுமியல்பு ௨௦௧

குடிகளுடன் அமைவில்லாத அரசன் குற்றம் கக௪
குடிகள் அஞ்சும் தொழில்களைச் செய்தவன் ஆயுளையும் வலிமையையும் செல்வத்தையும் இழந்து விடுவான் கக0
குடிகள் பயப்படுவன செய்யாமையின் இலக்கணம் க0௯
குடிசெயல்வகை செய்வாரில்லாத குடிக்கு உண்டாகுங் குற்றம் உ0௨
குடிசெய்தற்கு ஊழ்துணையாவது உ00
குடிசெய்தற்குக் காரணம் ,,
குடிசெயல் செய்வாரடையும் சிறப்பு உ0க
குடித்தன்மைக்கு வேண்டும் பொருள்கள் க௮௯
குடிப்பிறந்தவர் வறுமை வந்த இடத்தும் வேறுபடமாட்டார் ,,
குடிப்பிறந்தவர் வேறுபட்டவழி உண்டாகுங் குற்றம் ,,
குடிப்பிறந்தாரது இயல்பு க௮௮
குடிப்பிறப்பு மாத்திரத்தாலும் செல்வமாத்திரத்தாலும் பெருமையுண்டாக மாட்டாது க௯உ
குணங்குற்றங்களை அறியும் கருவி ௯௮
குணமிகுந்தவரைக் கொள்ளவேண்டுமென்பதும் குற்றமிகுந்தவரைத் தள்ளவேண்டுமென்பதும் ,,
குணமும், குற்றமும் தெரிந்து குணமுடையவரைத் தெளிதல் வேண்டும் ௯௭
குறிப்பறிதற்குச சாதனம் முகம் க௬௭
குறிப்பறிதற்கு நுண்ணிய கருவி பார்வை க௬௮
குறிப்பறியாதவர் இழிவு க௬௭
குறிப்பறிவாரது சிறப்பு ,,
குற்றங்களாவன ௮௨
குற்றமுடையவர் அருமையுடைய அரண் சேர்ந்தாலும் உய்யமாட்டார் க௭௯
கூடா ஒழுக்கத்தாரது குற்றமும் அவரை அறிந்து நீக்கவேண்டுமென்பதும் ௫0
கூடா ஒழுக்கத்தாரை அறியும் வழி ௫க
கூடா ஒழுக்கத்தினது குற்றம் ௪௯
கூடா ஒழுக்கத்தை விட்டுத் தவஞ்செய்வார்க்கு வேஷம் வேண்டாவாகிய அவரது சிறப்பு ௫க
கூடா நட்பிடத்து நடக்கும் விதம் கக௬
கூடா நட்பினது குற்றம் கக௯க
கூடா நட்புடையவரைச் செயலாலே தெளியலாகாது கக௯உ
கூடா நட்பு உடையவரைச் சொல்லாலே தெளியலாகாது ,,

கெடாத துணையாவது — எ
கெடுத்தற்கு முடியாத பிணக்கிலே தலைவன் சொல்லுதல் — உகூ0
கேடும் வகை செய்தாராயின், அதற்குக் காரணம் அவரறியாமையும் கட்புமாம் — கடுஅ
கேடும் ஆக்கமும் வருதற்குக் காரணம் — ரு0
கேடுவந்த இடத்துத் துணையாகாதவரது தீமை — ககூ0
கேடு வராமை காரணமாகவும் செல்வம் வருங் காரணமாகவும் நடுநிலைமை தவறலாகாதென்பதும், தவறுதல் கேடுவருதற்குக் காரணமென்பதும், தவறாதவன் தாழ்வு செல்வமென்பதும் — உசு
கேட்டைத்தராத நடந்ததைச் சொல்லுதலும் நன்மையைத்தரும் நடவாததைச் சொல்லுதலும் மெய்ம்மையாமென்பதும், கேட்டைத்தரும் நடந்ததைச் சொல்லுதலும் நன்மையைத் தராத நடவாததைச் சொல்லுதலும் பொய்ம்மையாமென்பதும் — ருசு
கேள்வியில்லாத இடத்து உண்டாகுங் குற்றம் — அ0
கேள்வியினாலே திடப்பட்டவருக்கு வரும் நன்மை — ,,
கேள்வியின் சிறப்பு — எக
கேள்வியுடையவரது சிறப்பு — ,,
கொடுங்கோலுடைய அரசரது நாட்டில் வாழ்வார்க்கு வருங் குற்றம் — க0க
கொடுங்கோலுடைய அரசனது நாட்டில் உண்டாகுங் குற்றம் — ,,
கொடுங்கோலுடைய அரசன் அடையுங் குற்றம் — க0அ
கொடுங்கோன்மையினது குற்றம் — ,,
கொலைசெய்தலின் குற்றம் — கூக
கொலை செய்வோர்க்கு வருந்தீங்கு — ,,
கொலைப்பாவங் கொன்றார்மேல் நிற்கும் ஆதலின், ஊனுண்பார்க்குப் பாவமில்லையென்பாரை மறுத்துப் பாவம் உண்டென்பது — சகூ
கொல்லாமையின் சிறப்பு — கூ0
கொல்லாமையை மறவாதவனது உயர்ச்சி — ,,
கொல்லாமையையுடையதே நன்மார்க்கம் — ,,
கொல்லா விரதத்தோர்க்கு வரும் நன்மை — கூக
கோபஞ் செய்தவருக்கு வருந்தீங்கு — ருஎ
கோபஞ்செய்தவர் செய்யாதவராகிய இருவர் பயன் — ,,
கோபஞ்செய்யாதவருக்கு வரும் நன்மை — ,,
கோபஞ்செய்யாதிருப்பதின் நன்மை — ,,
கோபஞ்செய்யாமல் இருக்குமிடம் — ருக
கோபத்தினது தீங்கு — ,,

சபைக்கு அஞ்சாதவரது சிறப்பு கசக
சபைக்கு அஞ்சாமையின் காரணம் ,,
சபைக்கு அஞ்சாமையின பயன் ,,
சபைக்கு அஞ்சுவோரது இழிவு கசஉ
சபை[illegible] அறிந்தார் செய்யுந்திறம் கருக
சபையறியாத நடத்துவருங் குற்றம் ,,
சிநேகிக்கப படாதவரும் சிநேகிக்கப்படுபவரும் கருஎ
சிலவேளைகளில் தமோகுணத்தினலே மன நலம் வேறுபட்டாலும் நல் லினம் அவ்வேறுபாட்டைத் திருத்தி மறுமை இன்பத்தை உண் டாக்கும் அஅ
சிறப்புடையவன் கற்கவேண்டு மென்பதும், கற்கத்தகு நூல்களும் அவைகளைக் கற்கும் விதமும், கற்றதனற் பயனும் எரு
சிறப்புவகையால் சால்புக்கு ஏற்ற குணங்கள் ககசு
சிறப்புவகையாற் பகைமாட்சி கஎ0
சிற்றினம் பெரியோர்க்கு ஆகாது அசு
சிற்றினம் பெரியோர்க்கு ஆகாதென்பதற்குக் காரணம் ,,
சுற்றத்தினது சிறப்பு க0க
சுற்றத்தைத் தழுவுதல் செல்வத்துக்கு ஏதுவும், அரணும் பயனும் ஆம் க0உ
சுற்றம் தழுவுதற்கு உபாயம் ,,
சூது சிறுமை பல செய்து அவைகளால் இருமையுங் கெடுக்கும் கஅச
சூது தரித்திரத்தை உண்டாக்குதலின் குற்றம் ,,
சூதுவிடுதற்கு அருமையும் விட்டவரது பெருமையும் கஅரு
செங்கோலினது இலக்கணம் க0சு
செங்கோலின் சிறப்பு ,,
செங்கோல் செலுத்தாதவனது கேடு க0எ
செஙகோல் செலுத்தியவன் அடையும் பயன் க0சு
செங்கோல் செலுத்தும் அரசனுக்குத் தீயவரிடத்து மூவகைத் தண்ட முஞ் செய்யவேண்டும் க0எ
செயற்கை நட்பின் சிறப்பிற்குக் காரணம் கருச
செய்யத்தகுந் தொழிலும், அத்தொழில் செய்யும் விதமும் அஅ
செய்யத்தகுந் தொழில்களுக்கு உபாயமும் அதன் உரிமையும் கூ0
செய்யத்தகுந் தொழில்களைச்செய்து விடத்தகுந் தொழில்களை விட்டு விடல் அக
செய்ந்நன்றி மறத்தலின் கொடுமை உ0
செயவதும் நீக்குவதும் இஃது இஃதென்பது எ

செல்வம் நிலையாமை யென்பதும், செல்வம் உள்ளபொழுதே அறஞ் செய்யவேண்டு மென்பதும் ௬௨
செவிலியாகிய வளர்த்ததாய்க்குத் தன் காமத்தை வெளிப்படுத்திவிட்டு தான் நிற்கும் விதங்கண்டு சிரித்த தோழியோடு ஊடல் செய்து தலைவி தன்னுள்ளே சொல்லுதல் ௨௨௮
சேனையின் காட்சிப் பொலிவில்லாமையாலும் அரசன் கொடைத்தாழ்வுகளாலும் தலைவரில்லாமையாலும் தாழ்வு உணடாகும ௧௫௦
சொல்லத்தகுவனவும் தகாதனவும் ௩௪
சொல்லமாட்டாதவரது இழிவு ௧௨௭
சொல்லானுஞ் செயலாலும் வரும் ஒழுக்கங்கள் ௨௫
சொல்லியது சொல்லுவானது இலக்கணம் ௧௩௪
சொல்லினது இலக்கணம் ௧௨௬
சொல்லுதல் வல்லாரது சிறப்பு ,,
சொல்லைச் சொல்லும் விதம் ,,
சொல்வல்லமை மந்திரிகளுக்கு அவசியம் வேண்டும் ௧௨௫
சோம்பலில்லாதவன் அடையும் பயன் ௧௧௯
சோம்பலினது குற்றம் ௧௧௮
சோம்பலினது தீமை ,,
சோர்வினாலே துன்பஞ்செய்தலை விலக்கல் ௫௮
ஞானயோக முதிர்ச்சியுடைய உயிரைப் பின்வருந் துன்பங்களை சேரமாட்டாமையாற் கெட்டுவிடும் ௬௭
தகுதிமிக்க புகழ் நீங்காமற் காவாத வழியுண்டாகுங் குற்றம் ௧௨
தக்கவரையும் தகாதவரையும் அறியும் வழி ௨௧
தந்தை கடைமை ௧௩
தந்தையைப் பார்க்கினும் அவையத்தார் மைந்தனை மகிழ்வர் ,,
தமக்குப்பிரயோசனம் பார்ப்பவரது நட்பினது தீமை ௧௫௯
தமக்கொரு பயனைக்குறித்துப் பிறருக்கு துன்பஞ் செய்தலை விலக்கல் ௫௮
தம்முடன் பழகினவரை அரசர் தண்டியாமல் கண்ணோட்டஞ் செய்ய வேண்டுவது பிறர்க்குக் குறறஞ் செய்த இடத்தல்லாமல் தமக்குக் குற்றஞ் செய்த இடத்தென்பது ௧௧௩
தம்மைக் கேளாது நட்பினர் ஒன்றைச் செய்தால், அதனைக் கைக்கொள்ள வேண்டும் ௧௫௮
தரித்திரத்தால் உலக நடை தவறலாகாது ௩௭
தரித்திரத்தின் கொடுமை ௨௦௪
தரித்திரப்பட்டவருக்குஉண்டாகுங் குற்றம் ௨௦௫

தரித்திரம் அளவுக்கு மிஞ்சிய இடத்துச் செய்யவேண்டுவது ௨௦௯

தருமத்தையும் முயன்று செய்வதல்லது யாசித்துச் செய்யலாகாது ௨௧௦

தலைவரது தன்மையைப்பழித்தலுக்குப் பயந்து அவரது அருளில்லாமையை மறைத்தால் நீ தெய்வத்தன்மை பொருந்திய கற்புடையாய் ஆதலால் கற்புடைய மாதரால் நன்கு மதிக்கப்படுவாய் என்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௪௦

தலைவரை இவ்வூரார் நிந்தியாமல் அவர்கொடுமையை மறைக்கவேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௩௭

தலைவரைமறந்து பொறுத்தல் வேண்டுமென்பது மனத்துக்குத்தோன்றத் தலைவி சொல்லுதல் ௨௫௦

தலைவர் பிரிந்து சமீபமாயிருக்கவும் நீ பொறுக்கின்றாயில்லை யென்ற தோழிக்குத் தலைவி முன்னே நிகழ்ந்தது கூறுதல் ௨௩௮

தலைவர் பிரிந்துபோகவில்லை அவரிங்கேயிருக்கின்றார்; அவரைப்பார்க்கும் வரையும் நீ பொறுத்தல்வேண்டு மென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௩௭

தலைவர்மேல் ஆசை நீங்காமல் பொறுத்தா யென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௪௦

தலைவனது தூதுவரக்காணாத தலைவி சொல்லுதல் ௨௪௧

தலைவனது தூதுவரப் பெறாமல் தான் தூதுவிட நினைத்த தலைவி தன்னெஞ்சோடு சொல்லுதல் ”

தலைவனது பிரிவைக் குறிப்பாலறிந்து தலைவி தோழிக்குச் சொல்லுதல் ௨௩௧

தலைவனது வரவு சொல்லிப் பிரிவாற்றாமையால் நிறம் வேறுபடாதே யென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௫௩

தலைவன் இடந்தலைப்பாட்டிலே சொல்லுதல் ௨௨௧

தலைவன் இயற்கைப் புணர்ச்சி முடிவிலே சொல்லுதல் ௨௪௮

தலைவன் இயற்கைப் புணர்ச்சி முடிவிலே சொல்லுதல் ௨௨௧

தலைவன் இயற்கைப் புணர்ச்சி முடிவிலே தன் விருப்பத்தை அறிவித்தல் ௨௨௩

தலைவன் காவலிடத்துக்குப் பக்கத்திலுளனாக, தோழி தலைவிக்குச் சொல்வாளாய், பழிச்சொல்லறிவித்து உடன் போதற்கு ஆசை கொள்ளச் சொல்லுதல் ௨௩௦

தலைவனிடத்துக் குற்றம் உண்டாகிய இடத்தும் பிணங்க நினையாத நெஞ்சிற்குத் தலைவி சொல்லுதல் ௨௫௯

தலைவனை நினைந்து வருந்துகின்ற தலைவி தோழிக்குச் சொல்லுதல், ௨௨௯

தலைவன் குறிப்பறிந்த தலைவி அக்குறிப்பைத் தெளிவிக்கவந்ததோழிக்குச் சொல்லுதல் ௨௫௫
தலைவன் கொடுமை நினைந்து செல்லுதற்கு உடன்படாத நெஞ்சினைத் தலைவி கோபித்துச் சொல்லுதல் ௨௫0
தலைவன் தலைவி மனக்குறிப்பை அவள் பார்வையாலறிதல் ௨௪௭
தலைவன் தலைவியது குறிப்பைப் பார்வையாலும் நாணாலும் அறிதல் ,,
தலைவன் தலைவியின் ஆபரணங்களாலாகிய வருத்தஞ் சொல்லுதல் ௨௧௬
தலைவன் தலைவியின் குறிப்பை நாணாலும் மகிழ்ச்சியாலும் அறிதல் ௨௧௭
தலைவன் தலைவியின் தனங்களாலாகிய வருத்தஞ் சொல்லுதல் ௨௧௬
தலைவன் தலைவியின் நெற்றியாலாகிய வருத்தஞ் சொல்லுதல் ,,
தலைவன் தூதுவரக்கண்ட தலைவி சொல்லுதல் ௨௬௩
தலைவன் தூதுவரக் காணாது வருந்துகின்ற தலைவியிடஞ்சொல்லுகிற தோழிக்குச் சொல்லுதல் ,,
தலைவன் நீங்கியபோது சென்ற தோழிக்குத் தலைவி படுக்கையிடத்து நடந்ததைச் சொல்லுதல் ௨௬௩
தலைவன் பாங்கற் கூட்டமுடிவிலே சொல்லுதல் ௨௧௯
தலைவன் பாங்கியிற் கூட்டமுடிவிலே சொல்லுதல் ௨௨0
தலைவன் பிரிவிலுண்டாகிய சந்தேகநிவிர்த்தி கூறுதல் ௨௨௪
தலைவன் பிரிவை அறிவித்ததை வந்து சொல்லிய தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௩௨
தலைவி அநுபவத்தை மாலைப்பொழுதின் மேலேற்றிச் சொல்லுதல் ௨௪௫
தலைவி இராத்திரியின் கொடுமை சொல்லிவருந்துதல் ௨௩௫
தலைவி காரணமில்லாமல் ஊடுகின்றமை கேட்டு அப்படி நீ ஊடுகின்றதென்னவென்று கேட்ட தோழிக்கு அவள் சொல்லுதல் ௨௬௫
தலைவி குறிப்பறிந்த தோழி அதனைத் தலைவனுக்கு அறிவித்தல் ௨௫௬
தலைவி தலைவனைக் காணுதற்கு அவசரப்படுதலாற் சொல்லுதல் ௨௫௩
தலைவி தலைவனைக்காணும் ஆசைமிகுதியால் சொல்லுதல் ௨௪௯
தலைவி பிரிவாற்றுமை நீங்கும் விதம் நாடுதல் ௨௪௯
தலைவி புணர்ச்சி விரைதலறிந்த தோழி தலைவனுக்குச் சொல்லுதல் ௨௫௮
தலைவி பொறுத்தற்பொருட்டுத் தோழி தலைவனது தன்மையைப் பழித்த இடத்துத்தலைவி தலைவனது தன்மை யுயர்ச்சி கூறுதல் ௨௩௯
தலைவி மாலைக் காலத்தோடு ஊடிச்சொல்லுதல் ௨௪௫
தலைவியர் காமக்கடலில் வீழ்வார். வீழினும், அதற்கேற்ற மரக்கலத்தால் கடப்பாரென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௩௮
தலைவியர் பலரும் பிரிவைப் பொறுத்திருப்பார். அது செய்கின்றிலையென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௯௩

தலைவியினது ஊடற் குறிப்பைக்கண்டு நீங்கள் கூடியிருக்கவும் இவ் வூடல் உண்டாவதற்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல் உசுரு.
தலைவியின் உருவு முதலானவை முன் கண்டறிந்தவை யல்லாமல் சிறந்திருக்கையால் அவளைத் தலைவன் ஐயுறல் உகரு
தலைவியின் குறிப்பு அறியவுற்ற தலைவன் சொல்லுதல் உசஅ
தலைவியை ஊடல் நீக்கிக்கூடிய தலைவன் அதிக மகிழ்ச்சி அடைந்தவனாய்த் தன்னுள்ளே சொல்லுதல் உசுரு
தலைவியைக் கூட்டிக்கொண்டுபோவென்று உடன்போக்குச் சொன்ன தோழிக்குத் தலைவன் கூட்டிப்போதலின் வருத்தஞ்சொல்லுதல்உஉங
தலைவியைச் சேர்க்கக் கருதிச செல்லும பாங்கனுக்குத் தலைவியின் இயல்பைத் தலைவன் சொல்லுதல் உஉஉ
தலைவியைப் பிணக்குத் தீர்த்துக் கூடிய தலைவன் தன்னுள்ளேசொல்லுதல் உசுக
தலைவியைப் புணர்ந்து உடன்கொண்டு போகின்ற தலைவன் தன்னுள்ளே சொல்லுதல் உஉக
தவஞ்செய்யாதவருக்கு இம்மையின்பமும் இல்லையாகிய தாழ்வு சகூ
தவஞ்செய்வாரது உயர்ச்சி சஅ
தவத்தின் இலக்கணம் சஎ
தவத்தின் சிறப்பு சஅ
தற்காத்தற் சிறப்பு கக
தன்வலிமை அறியாத இடத்து உண்டாகுங் குற்றம் கூக
தாட்சணியஞ் செய்யாத கண்ணின் குற்றம் கக௨
தாட்சணியஞ் செய்யாதவரது இழிவு ககங
தாட்சணியத்தினது சிறப்பு ,,
தாட்சணியம் செய்யும் விதம் ,,
தாம் தாழ்தற்குக் காரணமானவைகளைச் செய்தலின் குற்றம் ககூ0
தாம் தாழ்தற்குக் காரணமானவைகளைச் செய்யாமையின் சிறப்பு ,,
தாய் மைந்தனை மகிழும் விதம் கங
தாழ்ந்தவர் சபையினிடத்து ஒரு வார்த்தையும் பேசலாகாது கச0
தான் அடைந்து நின்ற பொருளினும் அதற்குக் காரணமாகியவூக்கஞ் சிறந்தது ககரு
தான் சேர்ந்த இனத்தினாலே மனமும் செயலுந்தூயனாவன் அஎ
தான் பொறுத்தற் பொருட்டுத் தலைவன் றன்மையைப்பழித்த தோழிக்குத் தலைவி சொல்லுதல் உநஅ
தான் வகுத்துச சொல்லுவானது இலக்கணம் கசங

திடஞ் சொல்லிய தோழிக்கு எதிர் மொழிகூற அறியாத தலைவி காம மிக்க அதிக துக்கத்தால் சந்திரனைப் பார்த்துச் சொல்லுதல் ௨௪௫
திரும்பிவந்து தலைவர் உனக்கு இன்பஞ் செய்வாரென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௪௨
தீமை செய்யப்போய் அதை விடவருவானும் அது செய்யாமற்போய் பின்பு நன்மை செய்ய வருவானுமாகிய சுற்றத்தாரைத் தழுவுதல் வேண்டும் ௪௦௫
தீயசொற் கூறுதலாலுண்டாகுங் குற்றம் ௧௬
தீராத ஊடலிலே தலைவன் சொல்லுதல் ௨௫௮
தீவினைக்குப் பயப்படவேண்டும் ௯௪
தீவினை செய்யாதவன் கேடில்லாதவனாவான் ௫௬
துறந்தவரது ஆணை ,, ௫
துறந்தார்க்குக் களவாவது இதுவென்பதும் அதை நீக்கவேண்டுமென்பதும் ௫௨
துறந்தார் பெருமைக்குக் காரணம் பஞ்சேந்திரியங்களைக் கெடுத்தலும் யோகப்பயிற்சியும் தத்துவவுணர்ச்சியுமாம் ,,
துறந்தார் பெருமை யெல்லாப் பெருமையினும் உயர்ந்தது ௪
தூதாகச்சென்ற தோழிகேட்கத் தலைவி சொல்லுதல் ௨௫௩
தூதாகச்சென்ற தோழி தலைவி தூதுக்கு உடன்படுதற் பொருட்டு, அவளோடு சிரித்துச் சொல்லுதல். ௨௬௦
தூதாய்ச் செல்லும் பாங்கனுக்குத் தலைவன் சொல்லுதல் ௨௪௧
தூதுவிட நினைந்த தலைவி சொல்லுதல் ௨௪௫
தூதுவிடாமை நோக்கித் தலைவி தோழியுடன் பிணங்கிச் சொல்லுதல் ௨௫௪
தூரத்தே பிரிந்து வருந்திய தலைவன் சொல்லுதல் ௨௨௬
தெளியப்படாதவர் இவரென்பதும், தெளியப்படாதவரைத் தெளிந்தால் உண்டாகுங் குற்றமும், தெளிவுக்கு அளவும் ௩௮
தொழிலை முடித்து திரும்பி வருகிற தலைவன் முன் நடந்ததை நினைத்துத் தன்னுள்ளே சொல்லுதல் ௨௪௮
தொழில் வலிமை அறியாத இடத்து உண்டாகுங் குற்றம் ௩௨
தொழில் வல்லமை யில்லாதவரது இழிவு ௧௫௧
தோழனாற்கூடிய இடத்துத் தலைவியைச் சேர்ந்த தலைவன் சொல்லுதல் ௨௨௨
தோழி தலைவன் இயலைப் பழித்தல் பொறாது தலைவி தன்னெஞ்சுக்குச் சொல்லுதல் ௨௪௮

தோழி தலைவியைத் தூரத்தில் கொண்டுபோன இடத்தே அவள் குறிப்பை யுணர்ந்த தலைவன் தன்னுள்ளே சொல்லுதல் உகஅ
தோற்றவர் மேலே ஆயுதஞ் செலுத்தாத மிகுந்த வீரம் கருக
நடுவு நிலைமையாகும் விதம் உஉ
நடுவு நிலைமையால் வந்த செல்வம் நன்மையைத் தரும், மற்றைச் செல்வந் தீமையைத் தரும் உக
நடுவு நிலைமையின் சிறப்பு ,,
நட்பாக்குதற் றன்மை களஉ
நட்பினது இலக்கணம் கருரு
நட்பினது பயன் கருச
நட்பு வகையென்னும் இருவகை யிடத்துஞ் செய்வது
நட்பை ஆராயாத இடத்து உண்டாகுங் குற்றம் கருரு
நட்பை ஆராயும் விதமும், ஆராய்ந்தால் சிநேகிக்கப் படுவா ரிவரென்பதும் கருசு
நம்மை மறந்தவரை நாமுமறந்து விடுவே மென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் உருக
நல்வினைத்தி னுடன்பாட்டினல் நன்மையும், தீவினைத்தினுடன்பாட்டினல்தீமையும் உண்டாகும் அஅ
நற்குண நற்செய்கைகளும் வரவுக்குத் தக்க செலவு செய்தலுஞ் சிறந்தன க0
நன்றி செய்தாரது நட்பை விடலாகாது உ0
நன்றி யில்லாத அச்செல்வத்தின் குற்றம் ககூஅ
நன்றியில்லாத செல்வம் சம்பாதித்தவனுக்குப் பயன்படாது ககூசு
நன்றியில்லாத செல்வம் தனக்கும் பிறர்க்கும் பயன்படாது ககூள
நன்றியில்லாத செல்வம் பிறர்க்குப் பயன்படாது ,,
நாட்டினது அவயவம் கசச
நாட்டினது இலக்கணம் கசங
நாணத்தால் தலைவி தன் நினைப்பைச் சொல்லாத இடத்துத் தலைவன் தோழிக்குச் சொல்லுதல் உருரு
நாணமுடைய உமக்குப் பனைமடற் குதிரை யேறுதல் முடியாதென்று விலக்கலுற்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல் கஉசு
நாணமும் நல்லாண்மையும் காம வெள்ளத்துக்குப் புணையாதலால், அவ்விரண்டும் நீங்குவனவல்லவென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல் உஉள
நாணமே அன்றி, நல்லாண்மையும் உடைமையால் மடலேறுதல் முடியாதென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல் உஉசு

நாணம் தடுத்தலாலே செல்லுதலில்லாத தலைவி சொல்லுதல் உ௯0
நாணில்லாதவரது இழிவு உ௦௦
நாணினது இலக்கணம் ககஅ
நாணின் சிறப்பு ககக
நாணுடையவரது சிறப்பு ,,
நாணுடையவர் செயல் ,,
நாணும் நிறையும் அழியாமல் பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் உ௯க
நிலையாதவைகளை நிலையுடையவையென்று கருதுதல் பிறவித் துன்பத்துக்குக் காரணம், ஆதலால் அது மோக்ஷம் அடைவாரகு இழுக்கு ௬உ
நின்கண்களிலே பேரழகு அழிதலால் அழாதிருவென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் உ௩ரு
நின்கண்கள் அழுது அழகையிழக்கின்ற நீ பொறுத்தல் வேண்டுமென்று மறுதரஞ் சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லுதல் உ௩சா
நீ இப்படிப் பசலை நிறமடைவது தகாதென்ற தோழியோடு தலைவி பிணங்கிச் சொல்லுதல் உ௩க
நீ இவளைக் கலியாணஞ் செய்துகொண்டு உலகத்தார் தம் வீட்டிலிருந்து தமது பங்குப்பொருளை யுண்கின்ற இல்லறத்தோடு பொருந்த வேண்டுமென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல் உஉ0
நீக்கமுடியாத ஊடலிலே தலைவன் தலைவியோடு ஊடிச்சொல்லுதல் உசாஉ
நீயும் பொறுதது உன் கண்களும் தூங்கவேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் உ௩எ
நெஞ்சினிடத்தே தோன்றிய காமம் நெஞ்சத்தால் அடக்கப்படுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் உ௯க
பகற்குறியிலே தலைவி பூவணிகண்டு தலைவன் சொல்லுதல். உஉஉ
பகற்குறியிலே தலைவியைப்புணர்ந்து நீங்கும் தலைவன் சொல்லுதல் உஉசா
பகைகளையா வழி யுண்டாகும் குற்றம் கஎ௩
பகை களையுந் தன்மை ,,
பகை களையும் பருவம் ,,
பகை மாட்சியால் ஆகிய பயன் கஎக
பகைவரது கோட்டையின் புறத்து இறங்குதற்கு ஆகும இடத்தை அறிதல் க௯
பகைவரைச சார்தலாகாத இடமும் சார்ந்த இடத்து உண்டாகுங்குற்றமும் கஅ
பகைவர் முனனே தன்வீரஞ் சொல்வது [illegible]

பகைவன் வலிமையும் அவனது துணைவலிமையும் அறியாத இடத்து உண்டாகும் குற்றம் ௯௧
பசலை பொருளென்று கவலையுற்ற தோழிக்குத் தலைவி பொறுப்பேனென்பது தோன்றச் சொல்லுதல் ௨௩௮
படையின் இலக்கணம் ௪௫0
பயனில்லாத சொற்களைச் சொல்லாமையின் குணம் ௩௪
பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றம் ௩௩
பரத்தை யிடத்திருந்து வந்த தலைவனோடு தலைவி பிணங்கிச் சொல்லுதல் ௨௯௧
பரத்தை யிடத்துப் பிரிந்து வந்த தலைவனோடு நிறையழிவினாலே கூடிய தலைவி நீ பிணங்காமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குச் சொல்லுதல் ௨௫௨
பல குணங்களாலும் நிறைந்தவரது சிறப்பு ௪௯௮
பழைமை யறிவாரடையும் பயன் ௧௫௯
பழமையால் வரும் உரிமையின் சிறப்பு ௪௫௮
பழமையானது காலஞ் சென்றதன்று இப்படிப்பட்டதென்பது ௧௫௭
பற்றறுதலாற் பிறவி யறுதலும் அறாதபொழுது பிறவி அறாமையும் காணப்படும் ௯௫
பற்று விடுதற்கு உபாயம் ,,
பாவமும் பழியுந் தருந்தொழிலைச் செய்தல் ஆகாதென்றதற்குக் காரணம் ௧௨௮
பாவமும் பழியுந்தருந் தொழிலைச் செய்யலாகாது ,,
பிணக்குத் தீர்ந்து தூதுக்கு உடன்படும் வகை தோழி தலைவிக்குச் சொல்லுதல் ௨௬0
பிரிகின்றவர் தேற்றிய சொற்களையும் அவர் நற்குணங்களையும் அறிவாயாகையால் அவர் விரைந்து வருவாரென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௩௮
பிரிதற் குறிப்புடையவனாகிய தலைவனோடு நீ பிணங்காமைக்குக் காரணம் யாதென்று பரிகாசித்துச் சிரித்த தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௫௭
பிரிந்து கூடிய தலைவன் ஆசை மிகுதியினாலே புணர்ச்சித் தொழிலைப் புதிதுபுதிதாகப் பலநாளும் பாராட்டல் கண்டு தலைவி இன்னம் பிரிவானென்று அஞ்ச, அதைத் தலைவன் குறிப்பால் அறிந்து தலைவிக்குச் சொல்லுதல் ௨௫௫
பிரிந்து விரைவில் வருவேனென்ற தலைவனுக்குத் தோழி சொல்லுதல் ௨௩௧

பிரியாமைக் குறிப்பினைத் தோழிக்குத் தலைவன் அறிவித்தல் ௨௫௯
பிரிவாற்றாமை மிகுதலால் எப்பொழுதுந் தலைவரை நினையாதே சிறிது மறக்கல் வேண்டுமென்று தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௫௩
பிரிவாற்றாமை மிகுதியால் வேறுபட்ட தலைவிக்குத் தோழி சொல்லுதல் ௨௮௭
பிரிவு பொறுக்கமாட்டாளென்று கவலையுற்ற தோழிக்குப் பொறுப்பேனென்பது தோன்றத் தலைவி கூறுதல் ௨௬௭
பிழை பொறுத்தலின் சிறப்பு ௧௫௯
பிறதேசத்தாரும் விரும்புதற்கேற்ற அழகு ௧௬௭
பிறப்பு துன்பமென்பதும் அதற்கு முதற் காரணம் விபரீத ஞானமென்பதும் ௯௯
பிறருக்குத் தீவினை செய்தவர் தாம் கெடுவர் ௩௫
பிறர் செய்யும் தீமையைப் பொறுத்தல் ௨௮
பிறர் சொல்லிய குற்றங்களைப் பொறுத்தல் ,,
பிறர் பொருளை விரும்பாமையின் குணம் ௩௧
பிறர் பொருளை விரும்புதலின் குற்றமும் விரும்பாமையின் குணமும் ,,
பிறர் பொருளை விரும்புதலின் குற்றம் ௩௦
பிறவாமைக்கு வழியென்பதும் மேலாகிய செல்வமென்பதும் வேண்டாமை யாதலால் அதன் சிறப்பு ௯௮
பிறவிக்கு ஆசை வித்து ,,
பிறன் மனையாளை விரும்பாதவனிடத்து உண்டாகுங் குணம் ௨௭
பிறன் மனையாளை விரும்புவானிடத்து உண்டாகும் குற்றம் ௨௬
புகழில்லாதவரது தாழ்வு ௪௧
புகழின் சிறப்பு ௪௦
புகழுடையவர் அடையும் மேன்மை ,,
புகழ் இழப்பதற்குக் காரணம் ௪௮
புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி ஒத்தல் என்னு மூன்றனுள் உணர்ச்சி ஒத்தலே நட்பிற்குச் சிறப்புடையது ௧௫௭
புதல்வரைப் பெறுதலின் சிறப்பு ௧௨
புல்லறிவாளர் தம்மிடத்து நல்லவை செய்தலறியாமை ௧௯௯
புல்லறிவாளர் தம்மிடத்துந் தீயவை செய்தலே யறிவர் ,,
புல்லறிவாளர் தம்மை மகிழ்தலின் குற்றம் ,,
புல்லறிவின் குற்றம் ௧௯௫
புறங்கூறாதிருத்தலின் நன்மை ௩௨
புறங்கூறுதலின் கொடுமை ,,

புறங்கூறுதலை விடுதற்கு உபாயம் ௩௩
புறங்கூறுவார்க்கு உண்டாகுங் குற்றம் ௩௨
பெரியவரிடத்துப் பிழைசெய்யாதிருத்தலின் சிறப்பு கஎ௫
பெரியாரைத் துணைக்கொள்ளாத இடத்து உண்டாகுங் குற்றம் அ௫
பெரியாரைத் துணைக்கொள்ளுதலின் சிறப்பு அ௪
பெரியாரைத் துணைக்கொள்ளுதலின் பயன் அ௫
பெரியோரது இலக்கணமும் அவரைத் துணையாகக் கொள்ளவேண்டு மென்பதும் கொள்ளும் விதமும் அ௪
பெருமையில்லார் செய்தி கக௨
பெருமையின் சிறப்பு ககக
பெருமையுடையார் செய்தி கக௨
பெருமை யுண்டாகும் வழி ,,
பேதைமையின் இலக்கணம் க௪௩
பேரின்பத்துக்கு உரிய நீ இப்படிப்பட்ட சிற்றின்பத்தில் அழுந்துதல் தகாதென்ற தோழனுக்குத் தலைவன் சொல்லுதல் உகக
பொதுப்பெண்களை உயர்ந்தோர் தொடமாட்டார் க அக
பொதுப்பெண்களைத் தீண்டுவார் இழிந்தவர் ,,
பொதுப்பெண்கள் சொல்லுஞ் செயலும் பொய் கஅ0
பொதுவகையால் அடக்குஞ் சிறப்பு உ௩
பொதுவகையால் குற்றந் தன்னிடத்து வராமற் காத்த வரிது க௩௫
பொதுவகையால் சால்புக்கு ஏற்ற குணங்கள் கக௩
பொதுவகையால் தீநட்புக் கூடாது க௫க
பொதுவகையால் துன்பஞ்செய்தலை விலக்கல் ௫க
பொதுவகையால் துன்பஞ்செய்தவருக்கு வருந் தீங்கு ,,
பொதுவகையால் தொழில்செய்யுந் திறம் க௩க
பொதுவகையால் பெரியவரிடத்துப் பிழைசெய்தற் குற்றம் கஎ௫
பொதுவகையாற் பகைமாட்சி க௪க
பொதுவகையினாலே குற்றத்தை நீக்குதல் அ௨
பொதுவினும் சிறப்பினும் பகைகொள்ளுதற் குற்றம் கஎக
பொய் மறைக்கப்படாததா யிருத்தலினால் அதைச் சொல்லலாகாது ௫௫
பொருளில்லாமையால் வந்த துன்பத்திற்கு வருந்தாமையும், அதற்கு உபாயமும் க௨௨
பொருளின் சிறப்பு க௪௭
பொருளின் பிரயோசனம் க௪அ
பொருள்களுக்குக் காரணமாகிய ஊழின் வலிமை ௭0
பொருள் சம்பாதிக்கும் வழி க௪அ

பொருள் நூல்களையுங் கருவி நூல்களையுங் கற்றோரது உயர்வும், அவைகளைக் கல்லாதவரது இழிவும் ௭௫
பொறாமை யில்லாமையினது குணம் ௨௯
பொறாமை யுடைமையினது குற்றம் ௨௯
பொறுக்கமாட்டாமையாகிய துன்பமும் மடற்குதிரையும் உமக்கு எப்படி வந்தன வென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல் ௨௨௭
பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௪௫
பொறுப்பாரென்று அரசர்களுக்கு வெறுப்புள்ளவைகளைச் செய்யலாகாது ௧௩௯
பொறையுடைமையின் சிறப்பு ௨௭
போர் செய்தற்கு ஆகும் இடம் அறிதல் ௯௫
மகளிர் காமம் மறைக்கப்படுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் ௨௫௧
மக்களைப் பெற்றோர் பெறும் மறுமைப் பயன் ௧௨
மடலூரும்போது இன்றைக்கு விட்டு நாளைக்கு ஊரென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல் ௨௨௭
மணஞ் செய்தற்குப் பொருள் சம்பாதிக்கத் தலைவன் பிரிந்தபோது பொறுதவளாகிய தலைவி அவன் வந்து காவலிடத்துக்குப் பக்கத்திலிருத்தல் அறிந்து அயலார் பழிச்சொல்லுக்குப் பயந்து சகித்துக்கொள்ள வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லுதல் ௨௩௦
மதமானங்களின் தீமை ௮௩
மந்திரிகளது சிறப்பு ௧௨௪
மந்திரிகளது செயல் ௧௨௫
மந்திரிகளுள் விடப்படுவோரது குற்றம் ,,
மந்திரிகள் அஞ்சுந் தொழிலும் அது செய்தாலடைவதும் ௧௧௯
மந்திரிகள் குணத்தன்மை ௧௨௪
மறவாததும் மறப்பதும் இன்னது இன்னதென்பது ௨௦
மறவாது செய்யவேண்டியவைகள் ௧௦௪
மறவாமைக்கு உபாயம் ௧௦௫
மறவாமையின் சிறப்பு ௧௦௪
மறவியின் குற்றம் ௧௦௩
மறவியுடையவருக்கு வருந்துன்பம் ௧௦௪
மறைக்க வேண்டாமையால் இடையிலே நீங்கலில்லாத புணர்ச்சியே இன்பப்பயனுடைத்தென்று விவாகஞ்செய்து கொள்ளென்ற தோழிக்குத் தலைவன் சொல்லுதல் ௨௨௦
மற்றைத் தருமங்கள் கொண்டிக்கப்பட்டன எல்லாம், வாய்மை தானேதரவல்லது ௫௯

மன அடக்கம் உச

மனஒற்றுமையில்லாரை நீக்கவேண்டும் கஎரு

மனநலம் முன்னை நல்வினையினாலே இயல்பாகவுடையார்க்கும் இன நலம் வேண்டும் அஎ

மனநன்மையுடையவராயினும் அரசருக்கு இனநன்மை உறுதியுடையது அஅ

மனைவிக்குப் பயப்படுதலின் குற்றம் கஎஅ

மனைவியினது சொல்வழி நடத்தலின் குற்றம் ,,

மனைவியின் ஏவல் செய்தலின் குற்றம் கஎகூ

மாலைப்பொழுதிலே இப்படிப்பட்டவளாதற்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைவி சொல்லுதல் உசாசா

மாறுபடாதவருக்கு வரும் நன்மை கசாஅ

மாறுபட்டவருக்கு வருந்தீமை கசாஅ

மாறுபட்டவருக்கு வரும் நன்மையும் தீமையும் கசாகூ

மாறுபாட்டினது குற்றம் ,,

மானங்கெடவரும் யாசகத்தை விலக்கவேண்டும் உக0

மானத்தின் பொருட்டாகிய மரணத்தின் சிறப்பு ககூக

மானுடப் பெண்ணென்று தெளிந்த தலைவன் அவள் பார்வையாலாகிய வருத்தஞ் சொல்லுதல் உகரு

முதற் கடவுளது உண்மை க

முயற்சியில்லாதவனது குற்றம் கஉ0

முயற்சியின்மைக்கும் உடைமைக்குங் காரணங்கள் ,,

முயற்சியது சிறப்பு ககக

முயற்சியுடையவனது நன்மை ,,

முழுதும் விடலாகாத காமத்தை யநுபவிக்கும் விதம் அங

முனிவர்க்குப் பிழை செய்தலின் குற்றம் கஎஎ

முனிவர்க்குப் பிழைசெய்தவர் ஒரு சார்பு பற்றியிருந்தாலும் உய்யமாட்டார் ,,

முன் செய்த உதவிபற்றி, வருவதாகிய செயற்கைநட்பின் சிறப்பு கருங

முன்னர் தலைவன் பிரிதலுக்குச சம்மதித்த தலைவி அப்பிரிவு பொறாமல் பசலை நிறம் அடைந்த இடத்துத் தன்னுள்ளே சொல்லுதல் உஙஎ

மெய்ம்மையாகிய தருமத்தின் முதன்மை ருசா

மெய்யடக்கம் உங

மெய்யுணர்வினது இலக்கணம் சாசா

மெய்யையுணர்ந்தவர்க்கே முத்தியுண்டென்பதால் அம்மெய்யின் சிறப்பு ,,

மெய்வருத்தத்தாலாகிய துன்பத்திற்கு வருந்தாமையும் அதற்கு உபாயமும ௧௨௩

மெலியவன் செய்யுந் திறம் ௧௩௨

மேலேகூறப்பட்டதைச் சிறப்பு வகையாற் கூறுதல் ௧௩௫

மேலே கூறிய இருவகை செயல்களும் ௧௯௩

மேலேகூறியதை நியாயத்தால் வற்புறுத்தியது ௪௯

மேலேகூறிய வழியலலாததை மாட்சிமையுடையார் செய்யார் ௨௦௧

மேலே கேட்டதைச் சிந்தித்தல் ௯௭

மேலே சொல்லிய இருவகை ஊழின் வல்லமையும் பொதுவாகக் கூறுதல் ௭௨

மேலேசொல்லிய மூன்றுந் தொகுத்துச் சொல்லுதல் ௧௮௦

மேற்கூறிய ஆணையுடையராயினும் உயிர்களிடத்து அருளுடையவராவர் ௫

மேற்கூறிய குற்றங்கட்குக் காரணமாகிய அவர் கொடுமை ௧௯௨

மேற்கூறிய நாள் கழிந்தால் நிலையாமையுண்டாம்; அது வருமுன் அவசரமாக அறஞ்செய்க ௯௩

மேற்கூறியபடி மணமுந்த இடத்து உண்டாகுங் குற்றம் ௧௩௭

மேற்கூறிய மாட்சிமையும் பயனும் ௭௪

மேற்கூறிய மூன்றுதவியும் அறிவுடையோர்க்குச் செய்தவழிப் பெரிதாம் ௨௦

மேற்சிந்தித்ததைத் தெளிதல் ௯௭

மேற்சொன்ன குற்றம் வந்த இடத்துத் தீர்க்கும் வழி ௧௮௭

மைந்தன் கடமை ௧௩

மோக்ஷத்துக்கு முதற்காரணமாகிய முதற்பொருளை அறிதற்கு உபாயம் மூன்று; அவற்றுள் கேட்டல் ௯௭

மோக்ஷமாவது இதுவென்பதும் அஃது ஆசையைக் கெடுத்தவருக்கு அப்போதே உண்டாமென்பதும் ௭௦

யாசகத்தின் குற்றமும் யாசகரைக்கண்டு ஒளித்தலின் குற்றமும் ௨௧௦

யாசிக்கத்தக்கவர் இயல்பு ௨௦௭

யாசித்தலின் கொடுமை ௨௦௯

யாசித்தல் தரித்திரம் நீங்குதற்கு வழி அன்று ,,

யாசிப்பவருக்கு அவசியமான ஒரு குணம் வேண்டும் ௨௦௮

யுத்தியினாலும் ஊனுண்டல் இழிந்ததென்பது ௪௭

வஞ்சர் நட்பினது தீமை ௧௬௧

வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிந்த இடத்துத் தலைவி பொறுத்திருத்தற் பொருட்டுத் தோழி தலைவன் றன்மையைப்பழித்துக் கூறியபோது தலைவி தலைவன் றன்மையை யுயர்த்திச் சொல்லுதல் ௨௨௫

வலிமை ஒப்புமை மெலிமை என நிலை மூவகைப்படு மென்பதும், அவற்றுள் வலிமையின சிறப்பும் கருஉ
வலிமையின் பகுப்பும், அதனை யறிந்து பகைமேற்செல்வோர் பெறும் பயனும் கூக
வலியவன் செய்யுந்திறம் கருஉ
வழியாலாகியது சிறிதெனினும் அவ்வின்பம் பெரிது உ0க
வறுமையால் உயிர்நீங்கும் அளவில் அவமானமில்லாத இரவு விலக்கப்படமாட்டாது உ0சு
வாக்கின் அடக்கம் உச
வாழ்க்கைத்துணைக் காவதோர் அணிகலம் கஉ
விசேட அறிவு உண்டாவதற்குக் காரணம் தான் சேர்ந்த இனம் அஎ
விடத்தகுந்த தொழிலும் விடாத இடத்து உண்டாகுங் குற்றமும் அகூ
வியாதி அடைந்தவன் தீர்த்தற்கு வேண்டுங் கருவிகள் கஅஎ
விருந்தினரைக் காப்பவருக்கு முதலாவது இனிய முகம் வேண்டும் கஎ
விருந்தினரைக் காப்பவர் இம்மைக்கண் எய்தும்பயன் கசு
விருந்தினரைக் காப்பவர் மறுமைக்கணெய்தும் பயன் ,,
விருந்தினரைக் காவாதவழி யுண்டாகுங் குற்றம் கஎ
விருந்தினரைப் பாதுகாத்தலின் சிறப்பு கசு
வினைத்திட்பத்தின் அருமை கரு0
வினைத்திட்பத்தின் சிறப்பு ,,
வினைத்திட்பத்தின் பகுப்பு கஉக
வினைத்திட்பமாவது இன்னதென்பது ,,
வினைத்திட்பம் உடையவரடையும் பயன் கரு0
வினைத்திட்பம் உடையவரை அறியும் விதம் ,,
வினைத்திட்பம் உடையவர் தொழில் செய்யும் விதம் கருக
விவாகஞ்செய்ய தாமதிப்பது பொறாத தலைவியைத் தலைவன் காவலிடத்துக்குப் பக்கத்திலிருப்பது தெரிந்த தோழி ஊரார்பழிச்சொல்லையும் தாய் சொல்லையும் நீ நோக்கிப்பொறுத்தல் வேண்டுமெனச் சொல்லிய இடத்துத் தலைவி கூறுதல் உஉக
விழித்துத் தலைவனைக் காணாத தலைவி கனவிற் புணர்ச்சி நினைந்து பிரிவைப் பொறாமல் சொல்லுதல் உசச
வினையினது இயல்பு, அறிவு, வலிமை உடையவனை விடலாகாது க00
வீரரானவர் இறத்தற்குப் பயப்படா திருத்தல் கசுஉ
வேதநடை தவறுதல் பிராயச்சித்தத்தால் நீங்குதல் போல உலகநடை தவறுதல் பிராயசித்தத்தால நீங்காது ருசு
வைரங்கொண்டு பிறர்க்குத் துன்பஞ்செய்தலை விலக்கல் கூஅ

—:0:—

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை.	திருத்தம்.
2	25	முகர்	முகனூர்
10	26	னூடமை	னூடைமை
15	2	யவனென்று	யவரென்று
18	12	நட்புவகை	நட்பு பகை
21	11	தீமைமையை	தீமையை
22	19	பெற்றால்,	பெற்றால்.
26	20	மணிவி	மனைவி
28	22	அவரை வென்று	வென்று
29	28	றால்ர் அவ	றால் அவர்
31	25	பாமையின் குற்றமுங் குணமும்	புதலின் குற்றமும் விருப்பாமையின் குணமும்
43	11	களயிரு	களாயிரு
45	2	படித்த	படுத
48	32	பத்தையம்	பத்தையுய
49	20	வதற்க்	வதற்
54	29	நடந்தை	நடந்ததை
55	18	பேசாமால்	பேசாமல்
60	18	யுடய	யுடைய
76	29	பிறபுக்	பிறப்புக்
81	13	கொள்ளகொள்ள	கொள்ளக்கொள்ள
82	21	ம்திக்க	மதிக்க
86	16	ரியல்யான	ரியல்பான
90	22	யாவன.	யாவன :
,,	24	மாவன.	மாவன :
,,	24	போல்வன, நல்ல	போல்வன. இவை உபாய மல்ல வெனபதாம். நல்ல
,,	25	இவை உபாயமல்ல வென்பதாம்	
96	19	அழிதற்குரிய	அழித்தற்கரிய
100	13	சீவக	சச்சந்த
105	7	இருத்கல்.	இருத்தல்,
120	18	திரத்தைக்	திரத்தைச்
121	8	ராப்ர்ட்	ராபர்ட்
..	19	லணடின்	லாண்டு
122	17	தடைப்ப	தடைப
,,	20	யடையும்.	யடையும்,
123	22		அங்கவியல்

பக்கம்	வரி	பிழை.	திருத்தம்.
133	28	அவகைகளை	அவைகளை
144	14	செல்லவையும்	செலவையும்
154	2	சுற்றந்தாழால்	சுற்றந்தழால்
166	9	படும்	படுத்தும்
168	29	லாவதூ	லாவது
170	5	பகைாயம்	பகையாம்
174	31	சேர்த்தல்	சேர்தல
176	6	வருதலா	வருத
,,	15	இதனல்.	இதனல்,
177	4	பட்டாலும்.	பட்டாலும்,
180	30	சலாதிகளாதிகளால்	சலாதிகளால்
194	31	யுனும்	யினும
208	16	வேண்	வேண்டி
215	7	விசேஷட	விசேட
217	29	சுறுக்கி	சுருக்கி
221	20	அனிசப்பூ	அனிசசப்பூ
229	3	உண்டாகாமால்	உண்டாகமல்
230	27		களவியல் முற்றிற்று
237	7	யானல்.	யானல,
,,	22	தாம முள்ள	தம முள்ள
239	2	வருவன.	வருவன
,,	26	காம அப்	காம் சொல்ல அப்
247	12	இதனல.	இதனல்,
,,	14	கின்ய	கின்ற
,,	15	மைமைப்ற	மைமையப்
248	21	இதனல.	இதனல்,
,,	22	தளர்கதலால்.	தளர்க்தலால்,
257	3	அமைதவது	அமைதாவது
261	19	தலைவர்க்கும்	தலைவர்கரு
263	22	சொன்னேனைக	சொன்னேணைக